151

2 MAR 1931

# கானடாவில் குடியேறினவர்கள்

# Marryat's Settlers in Canada

1151

TRANSLATED INTO TAMIL

by

T. S. Subrahmanyan B.A., B.L., L.T.

DIGITIZED

[J]anardana Printing Works,
Kumbakonam.

V72
N31
121261
121261

கானடாவில் குடியேறினவர்கள்.

1151

OFFICE OF THE ...
2 MAR 1931

# Marryat's

# Settlers in Canada.

TRANSLATED INTO TAMIL

by

**T. S. Subrahmanyan** B.A., B.L., L.T.

SRI JANARDANA PRINTING WORKS,
KUMBAKONAM.

*Copy Right.* ] **1931.** [ *Price Re. 1—10.*

மேற்குக்கானடாவில் புகுந்தாலொழிய வேறுகதியில்லை. மேற்குக் கானடாவில் நிலவளம் சிறப்புற்றிருந்தாலும் கியுபெக் (Quebec), மாண்டிரீல் (Montreal) முதலாயுள்ள நகரங்களிலிருந்து அது வெகு எட்டாக்கையிலிருந்த படியால், புதிய குடித்தனக்காரர்களுக்கு ஏற்ற சாதனங்கள் ஒன்றும் கைக்கெட்டவில்லை. அதனால் கிடைத்ததை வைத்துக்கொண்டு எப்படியாகிலும் காரியத்தை ஒப்பேற்ற வேண்டியிருந்ததோடு அவர்களுக்குக் காபந்துக்கு ஹேதுவும் இல்லாமலிருந்தது. இப்போதைய நிலைமை பெரும்பாலும் மாறியிருப்பதால் அவற்றைச் சிறிதளவு எடுத்துச் சொல்ல நேர்ந்தது.

போகட்டும், கஷ்டங்களும் அபாயங்களும் இவ்வளவு இருக்கையிலும் மேற்சொல்லப்பட்ட குடும்பத்தார்கள் வீடு வாசல்களை யெல்லாம் விட்டுவிட்டு ஏன் புறப்பட்டார்கள் என்பதை இப்போது சொல்லுவோம்.

காம்பெல் (Campbell) என்பவர் பிறந்த வம்சம் பெருமை பெற்றதாயிருந்தது. அப்படியிருந்தும்அவருடையதகப்பனார் இளையகிளையைச் சேர்ந்தவரானதால் பொருட்செல்வம் அதிகமில்லாமற்போக,குமாரர் ஏதாவதுஒருதொழிலைப் பயிலவேண்டியிருந்தது. ஸர்ஜன் வேலையை ஏற்றுக்கொண்டு அநேக ஆஸ்பத்திரிகளில் சேவகஞ் செய்தபிறகு, தாமே ஒரு டாக்டர் தொழிலைச்செய்து பொருளும் புகழும் பெற்றார். அவருக்கு வரும்படி விரைவில் மேலும் மேலும் பெருகிற்று. சுமார் முப்பது வயதில் மணம் புரிந்துகொண்டார்.

மிஸ்டர் காம்பெல்லுக்கு அப்பொழுது தாயும் இல்லை, தந்தையும் இல்லை. அவருடைய ஒரே சகோதரி அவரோடு கூடவே வசித்து வந்தாள். ஆனால், அவருக்குக் கல்யாணமான நாலைந்து வருஷத்திற்கெல்லாம் அந்த அம்மாளுக்கு விவாகம் நடந்தது. அவள் உடனே தன் சகோதரர் வீட்



டைவிட்டு மிஸ்டர் பர்ஸிவல் என்னும் தன் கணவனுடன் சென்றாள்.

பத்து வருஷங்கழித்ததும் பார்த்ததில் மிஸ்டர் காம்பெல்லுக்குத் தொழிலும், சம்பத்தும், பெயரும், பெருமையும் விருத்தியானதோடு சந்தான விபவமும் ஸம்ருத்தியாயிருந்தது. அதற்குள் நான்கு பிள்ளைகள் பிறந்தனர். கைக்குழந்தைக்கு நாலைந்துமாத காலமாயிற்று.

மிஸ்டர் காம்பெல்லுக்குத் தம்முடைய இல்வாழ்க்கையில் குறைவு ஒன்றுமில்லாமலிருந்தும் அவருக்குப் பெரிய துக்கமொன்று நேரிட்டுவிட்டது. அதாவது, அவருடைய பிராண சகோதரியின் கணவர் மிஸ்டர் பர்ஸிவல் செய்துகொண்டுவந்த கூட்டுவியாபாரத்தில் ஏராளமான திரவிய நஷ்டம் நேர்ந்து அதனால் அவருக்குச் சரீர உழைப்பும் மனக்கவலையும் தாங்கமுடியாமல் தேகத்துக்கு உபாதிவந்து அவருக்கு மரணமும் நேரிட்டு விட்டது.

இப்படிக் கை சளைத்த காலத்திலே ஒரு கைம்பெண், கையிலோ இரண்டு வயதுள்ள ஒரு பெண்குழந்தை, வயிற்றிலோ பூர்ணகர்ப்பம்—அவள் தனிமையில் என்ன செய்வாள்? ஆதலால் அவளுடைய பிராண சகோதரரான மிஸ்டர் காம்பெல் அவளைக் குழந்தையுடன் தம் வீட்டிற்குக் கூட்டி வந்து, தாமும் மகா சுசீலையாகிய தம் தர்மபத்தினியுமாகச் சேர்ந்து அப்படி அநாதர்களாய்ப் போன அவர்களை ஆசார உபசாரத்துடன் ஆதரித்து வந்தார்கள். அப்படியிருந்தும் தன் கணவனை இழந்த கடுந்துயரால் அவளுக்கு நாளுக்கு நாள் தேகம் மெலிந்துபோய் நாளடைவில் ஒருபெண் குழந்தையைப்பெற்று வைத்துவிட்டு அவளும் அறையிலேயே மாண்டாள். மிஸ்டர் காம்பெல்லுக்கும் அவருடைய மனைவிக்கும் நேர்ந்த துக்கத்தைச் சொல்ல

வேண்டுமா? அவ்விரண்டு அநாதக்குழந்தைகளையும் தங்களுடைய சொந்தக் குழந்தைக்கு மேலாகப் பாராட்டிச் சீராட்டி அன்புடன் ஆதரித்து வளர்த்து வந்தார்கள்.

மிஸ்டர் காம்பெல்லுக்குக் கல்யாணமாகிப் பத்துப் பதினொரு வருஷங்களில் இத்தகைய ஸம்பவங்கள் நேரிட்டிருக்கும்போது அதிருஷ்டவசத்தால் ஒரு ஸந்தோஷகரமான ஸம்பவமும் உண்டாயிற்று.

அப்போது கிறிஸ்துமஸ்பண்டிகை. மிஸ்டர் காம்பெல் வழக்கம்போற்சென்று வைத்தியம் பார்க்கவேண்டிய இடங்களுக்குப்போய்த் திரும்பிவந்து, சாப்பாட்டை முடித்துக் கொண்டபிறகு, தம் மனைவி மூத்தகுழந்தைகள் இவர்களுடன் ஸல்லாபம் செய்துகொண்டிருந்தார்; பிறகு கைக்குழந்தைகளுடன் சற்றுக் கொஞ்சி விளையாடக்கருதி, ஆண் குழந்தையையும் இரண்டு மருமகப்பெண்களையும் கொண்டு வரும்படி அப்போது தான் அவரால் பாற்காரிக்கு உத்தரவு அனுப்பப் பட்டிருந்தது. அச்சமயத்தில் தபாற்காரன் கதவையிடித்ததின் பேரில் தாதி ஒருத்தி பெரிய கருப்பு முத்திரை வைக்கப்பட்ட ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து நீட்டினள். மிஸ்டர் காம்பெல் வாங்கி அதை உடைத்துப் பின் வருமாறு படித்தார்:—

"ஐயா— இந்த ஒரு நல்ல செய்தியைத் தங்களுக்கு நாங்கள் தெரிவிக்கின்றோம்; வெக்ஸ்ட்டன் ஹாலைச்சேர்ந்த மிஸ்டர் ஷோல்ட்டோ காம்பெல் என்பவருக்குச் சென்ற மாதம் 19-ஆம் தேதி காலம் முடிந்துவிட்டது. அவருக்கு இருந்த ஆண்பிள்ளை கடல்யாத்திரையிலோ ஈஸ்டு இந்தியத் தீவுகளிலோ மாண்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது. ஏனென்றால் சென்ற இருபத்தைந்து வருஷமாக அவரைப் பற்றி யாதொன்றும் கேள்விப்படவில்லை. தங்களைக்காட்டிலும் நெருங்கியவார்ஸு வேறு ஒருவரும் இல்லாமையால் அவருடைய ஆஸ்திகளுக்கு அடுத்த பந்து முறைமையில் பாத்தியஸ்தர் தாங்களே. தங்களுக்குக் கிடைத்திருக்கிற பாக்கியத்தைப்பற்றி முதல் முதல் கொண்டாடுகிறவர்கள் நாங்களே. அந்த ஸொத்துக்களின் வருஷ வருமானம் 14,000 பவுன். உயில் ஒன்றும் காணோம். விசாரணை செய்ததில் அவர் உயில் ஒன்றும் எழுதிவைக்கவில்லை யென்று தெரிகிறது. ஆகையால் ஜங்கமஸொத்துக்களைக் காபந்து செய்து ஸீல் வைத்தாயிற்று. தங்கள் இஷ்டம் போல் நடக்கத்தயாராயிருக்கிறோம். நாங்கள் தெரிவித்துக் கொள்ளும் விஷயம் ஒன்றே: தங்களுக்கு விவகார விஷயங்களில் தேவையிருந்து அதற்கு வேறு ஏற்பாடு எதுவும் ஏற்கனவே செய்யப்படாமலுமிருந்தால், தங்களுக்கு நாங்கள் தாஸராக இருக்கின்றோம்."



தங்கள் விதேயர்கள்,

ஹார்வி.

பாக்ஸ்ட்டன்.

தோர்ப்பு.

"என்ன விசேஷம் என் நேசரே, என்ன விசேஷம்?" என்று மிஸ்டர் காம்பெல்லின் மனைவி பதட்டத்துடன் கேட்டாள்; ஏனென்றால் தன்னுடைய கணவன் முகத்தில் ஒரு நாளுமில்லாத கலக்கமொன்று அவளுக்குத் தென்பட்டது.

மிஸ்டர் காம்பெல் பதில் ஒன்றும் சொல்லாமல் கடிதத்தைத் தம் மனைவியிடம் கொடுத்தார். அவளும் அதை வாசித்து விட்டு மேஜையின்மேல் வைத்தாள்.

"என் நாயகியே, என்ன பார்த்தாயா?" என்று சொல்லிக்கொண்டு திடீரென நாற்காலியிலிருந்து மிஸ்டர் காம்பெல் களிப்புடன் எழுந்தார்.

"இஃது ஒரு திடுக்கிடச்செய்யும் செய்தி; பலதடவைகளில் யோசித்துப் பார்த்ததில் எனக்குத் தோன்றியதென்னவென்றால் ஆபத்து எது வந்தாலும் தாங்கிவிடலாம். ஆனால் பாக்கிய தசையை மட்டும் வகிப்பது மிக்க சிரம சாத்தியம். கடவுள் இந்தத் தசையில் நம்மைக் கைவிடமாட்டாரென்று எனக்குநம்பிக்கை பூர்ணமாக இருக்கிறது," என்று அமரிக்கையுடன் யோசித்துக் கூறினாள் மிஸிஸ் * சாம்பெல்.

மிஸ்டர் காம்பெல் மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்து தம் மனைவியைப்பார்த்து "என் கண்ணே, நீ சொல்வது சரிதான். இதுவரையில் நமக்குத் திருப்திக்கும் ஸந்தோஷத்திற்கும் குறைவே இல்லை. இனி எவ்வாறாகுமோ என்று சங்கிக்கிறேன்," என்று சொன்னார்.

"என் பிராணநாதரே, திடீரென்று வந்த இந்தச் செல்வத்தால் நமக்கு ஸௌகம் அதிகரிக்கப் போவதில்லை. ஒருகால் இதனால் நமக்கு மிகுந்த கவலைகள் உண்டாகலாம். ஆனால் இதைக்கொண்டு பிறருடைய சுகத்தை விருத்தி செய்யலாம். இவ்வாறு உணர்ந்து இந்தச்செல்வத்தை நன்றியுடன் பெற்றுக்கொள்ளுவோம்."

"எமிலி, மிகவும் நன்று; பகவான் கிருபைகூர்ந்து நம்மை வைத்திருக்கும் இந்தப்புதிய நிலைமையிலும் நமக்கு உரிய தர்மத்தை நாம் செய்யவேண்டும். இது வரையில் தொழில் முறைமையில் என்னால் ஆனவரையில் ஜனங்களுக்கு ஏதோ சிறிது உதவி செய்திருக்கிறேன். இனிமேல் என் தேக பரிசிரமத்தால் நானே அப்படிச் செய்யாவிட்டாலும் அதற்குப் பிறரை நியமிக்க என்னால் இயலும். இச்சிறந்த செல்வத்தை நமக்கு அளித்த ஆண்டவனுக்கு நாம்

* "மிஸிஸ்" என்ற பட்டத்திற்கு "பத்தினி" என்பது பொருள்.



கணக்கு ஒப்புக் கொடுக்கவேண்டுமென்றெண்ணி நாம் அதை அவருக்கு ஏற்ற கைங்கரியத்தில் உபயோகிக்க வேண்டும்."

உடனே, மிஸிஸ் காம்பெல் எழுந்து, தன் கணவனை ஆலிங்கனம் செய்துகொண்டு, "தாங்கள் பேசுவீர்களென்று நான் உணர்ந்ததுபோலவே தாங்கள் பேசிவிட்டீர்கள். தங்களைப்போல் உணர்ச்சி உள்ளவர்களுக்கு எத்துணைச் செல்வம் இருப்பினும் கெடாது," என்று சொன்னாள்.

## அத்தியாயம்—2.

அதிகமாக வளர்த்துவதில் என்ன? மிஸ்டர் காம்பெல் வெக்ஸ்ட்டன் ஹாலில் பிரவேசம்செய்து தம்முடைய புதிய அந்தஸ்துக்கு ஏற்றபடி வாழ்ந்து வந்தார். ஆனாலும் அந்தந்த ஸமயங்களில் பரோபகாரமான தர்மங்களில் ஒன்றையும் விடாமல் தாமும் தம்முடைய தர்மபத்தினியும் கருத்தொருமித்து நடத்திவந்தார்கள். ஹாலுக்குச் சுற்றுவட்டம் வெகுதூரம் வரையிலிருக்கிற ஜனங்களின் நன்மையைக் கோரி உழைப்பாளிகளுக்கு அவர்கள் செய்த ஒத்தாசையும், தீனர்களுக்கும் ஆதுரர்களுக்கும் செய்த உதவியும், கட்டுவித்த தர்மசாலைகளும், ஸ்தாபித்த கல்விச்சாலைகளும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியா. வந்து சேர்ந்த நாலைந்து வருஷங்களுக்குள் அவர்கள் தெய்வமாகக் கொண்டாடப்பட்டார்கள். மேலும் மிஸ்டர் காம்பெல்லின் கைவசம் வந்தபோது ஸ்தாவரசொத்து எல்லாம் பார்ப்பார் இன்றி மலினதசை அடைந்து இருந்தபடியால் அவைகளைத் திருத்தம் செய்வதில் ஏராளமான செலவு செய்ய வேண்டியிருந்தது. செய்யாவிடின் அவை க்ஷீணித்து விடும்போலும்.

இப்படி மிஸ்டர் காம்பெல் தம்முடைய ஏராளமான
வரும்படியைப் பயன் உள்ள வழிகளில் உபயோகிக்கலானார்.
மிஸ்டர் காம்பெல்லுக்கு மேலான தசை வரவும் அவருடைய
குழந்தைகளின் அந்தஸ்தும் மாறிவிட்டது. தந்தையது
தொழிலைப் பயிலும் பொருட்டு மூத்தகுமாரனான ஹென்றி
யானவன் முதலில் தனியான உபாத்தியாயரிடம் படிப்
பிக்கப்பட்டுப் பிறகு ஒரு காலேஜுக்கு அனுப்பப்பட்டான்.
இளையவனாகிய ஆல்பிரெட்டுக்குப் போர்க்கப்பலில் உத்தி
யோகஸ்தனாவது பிடித்திருந்தபடியால் அவன் ஒரு மேன்
மையான சண்டைக்கப்பலில் ஏறிப்போய்விட்டான். இந்த
ஐவேஜு கிடைக்கும்போது பர்ஸிவலுக்கு வயது இரண்டு.
ஜான் கைக்குழந்தை. இவ்விரண்டு ஆண் குழந்தைகளையும்
வீட்டிலேயே வைத்துக்கொண்டு அருகிலிருந்த ஒரு ஆசிரி
யரைக்கொண்டு படிப்பித்தார். மேரி, எம்மா என்னும்
இரண்டு மருமக்களையும் பயிற்றுவிக்க ஒரு பகவதி நியமிக்க
ப்பட்டாள். இவ்விரண்டு பெண்களும் நாளொருமேனியும்
பொழுதொருவண்ணமுமாக அழகிலும் புத்தியிலும் குணங்
களிலும் வளர்ச்சியடைந்து வந்தார்கள்.

இம்மாதிரி பத்துவருஷம் வாழ்ந்துவருகையில் ஒருநாள்
மிஸ்டர் ஹார்வி என்பவர் மிஸ்டர் காம்பெல்லின் வீட்டிற்கு
வந்து சேர்ந்தார். இவரே மிஸ்டர் காம்பெல்லுக்கு ஐவேஜு
கிடைத்தவுடன் முதல்முதல் அறிக்கை செய்தவர்களின்
தலைவர். மிஸ்டர் ஹார்வி சொல்ல வந்ததாவது:—ஷோல்ட்
டோ காம்பெல்லுக்கிருந்த நோர்வார்சு கப்பலுக்குப் போய்,
கடலில் இறந்தபொழுது ஓர் ஆண்பிள்ளையை வைத்து
விட்டுப் போனதாயும், அப்பிள்ளை தாமே யென்றும்
அந்த முறையில் ஐவேஜியைத்தாம் கைப்பற்றிக்கொள்ளத்
தாவா செய்யப்போவதாயும் ஒரு புதிய பாத்தியஸ்தர்



அறிக்கை செய்திருக்கிறார். என்பதேயாம். அதனோடுகூட
மிஸ்டர் ஹார்வி "இதைத் தங்களுக்குத் தெரியப்படுத்த
வேண்டியது என் கடமையென்று நான் இங்கே சொல்ல
வந்தாலும் இஃது ஒரு பெரிய விஷயம் அன்று. இது
மாதிரி ஒரு புரட்டு வழக்கைக் கிளப்பிவிட்டால் பிற்பாடு
ராஜிக்குவரும்; அப்போது ஏதாவது தட்டலாம் என்கிற
எண்ணத்துடன் யாராவது ஒரு காலி வக்கில் யுக்தி சொல்
லிக்கொடுத்துக்கிளப்பி விட்டிருக்கலாம்; ஆகையால் தாங்
கள் கவலைப்பட வேண்டாம். இதைப்பற்றி இன்னும்
ஏதாவது என் காதில் விழுந்தால் நான் உடனே தெரிவிக்
கிறேன்." என்றார். மிஸ்டர் ஹார்வியின் அபிப்பிராயத்
தைக்கேட்டுப் பயம் தெளிந்து மிஸ்டர் காம்பெல் இதைத்
தம்மனைவிக்குக்கூடச் சொல்லவில்லை.

ஆனால் மூன்று மாதங்களுக்குள் வக்கிலிடமிருந்து
தாவா நடக்கும் குறிகள் அவ்வளவு அனுகூலமாக இல்லை
யென்றும், முடிவு எப்படி இருந்தாலும் அதற்குள் எதிர்க்
கட்சிக்காரர்கள் மிஸ்டர் காம்பெல்லுக்கு ஏராளமானசெலவு
வைப்பார்களென்றும் ஒரு கடிதம் வந்தது. மேலே செய்ய
வேண்டியதைப்பற்றி மிஸ்டர் காம்பெல்லுடைய கட்டளை
யைக் கேட்பதுடன் அந்தத் தாவா தந்திரத்துடன் ஜோடிக்
கப்பட்டிருந்தாலும் அஃது ஒரு புரட்டு நடவடிக்கை என்ப
தே தம்முடைய அபிப்பிராய மென்றும் மிஸ்டர் ஹார்வி
எழுதியிருந்தார். அதற்கு மிஸ்டர் காம்பெல் வேண்டிய சாக்
ஷிகளை யெல்லாம் எடுத்துக் கொள்ளவும், அவசியமான
செலவை எல்லாம் செய்யவும், வக்கிலுக்கு அனுமதி கொடு
த்துப் பதில் எழுதினார். மிஸ்டர் காம்பெல் யோசனை
செய்து பார்த்து, கவலை தம்முடன் இருக்கட்டும், தம்மனைவி
க்கு இந்தச்சமாசாரம் ஒன்றும் தெரியப்படுத்த வேண்டா

மென்று தீர்மானம் செய்தார். ஏனென்றால் அவ்ளுக்கும் மனக்கலக்கத்தைத்தானே உண்டு பண்ணும்? ஆகையால் இப்போது அவளுக்குச் சொல்லுவானேன் என்பதேயாம்.

---

## அத்தியாயம்—3.

சில மாதங்கள் சென்றதும் மிஸ்டர் ஹார்வி மிஸ்டர் காம்பெல்லுக்கு எதிர்க்கட்சிக்காரருடைய பாத்தியம் புரட்டென்று தாம் நினைத்தது பிழையென்றும், அந்த ஆட்சேபிக்க இடமில்லாததால் தாவா பிரதிகூலமாய் முடிந்துவிடுமென்று தமக்குத்தோன்றுகின்றதென்றும் காம்பெல்லுக்கு எழுதினார்.

மிஸ்டர் ஹார்வி எழுதியதால் மிஸ்டர் காம்பெல் சொத்தை உடனே விட்டுவிடாமல் கொஞ்சகாலம் வேண்டுமானால் இழுக்கவிடலாமென்றும், என்ன செய்தாலும் கடைசியாக விட்டுவிடத்தான் வேண்டுமென்றும் தெரியவந்தது.

இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் மிஸ்டர் காம்பெல் மனைவியிடம்போய் ,சில மாதங்களாக நடந்து வந்த சமாசாரங்களைத் தெரியப்படுத்தினதோடு, மிஸ்டர் ஹார்வியிடமிருந்து முடிவான சமாசாரம் தெரிந்த பிறகு அவளுக்குச் சொல்லலாமென்று ஏன் இருந்தாரென்பதையும் விவரமாகச் சொல்லி, அந்தக் கடிதத்தையும் அவள் கையில் கொடுத்து அவளுடைய அபிப்பிராயத்தையும் அறிய விரும்பினார். மிஸிஸ் காம்பெல் கடிதத்தைப் படித்துவிட்டு, கணவனை நோக்கி, "என் அருமை நாயகரே! பிறருக்குச் சொந்தமான ஆஸ்தி நமக்குக் கொடுக்கப்பட்டு, நாமும் அதை அநேக வருஷங்களாக ஆண்டு வருவதாகத் தெரிகிறது. அதை இப்போது நாம் விட்டுவிட வேண்டியிருக்கிறது. தாங்கள் என் அபிப்பிராயத்தைக் கேட்கிறீர்களே! அதற்கு



இடமே இல்லையே. கேட்பானேன்? அவர் கொண்டாடும் பாத்தியம் நியாயந்தானென்று நமக்குத்தெரிந்த பிறகு, நமக் காக இருந்தால் பிறர் என்ன செய்யவேண்டுமென்று நாம் கருதுவோமோ அப்படியேதான் நாமும் பிறருக்குச்செய்ய வேண்டும்" என்று சொன்னாள்.

"அதாவது, என் நேசியே, இனியும் வழக்கை வளர விடாமல் உடனே அதை விட்டுவிடவேண்டும். அதே அபிப் பிராயந்தான் மிஸ்டர் ஹார்வியின் கடிதத்தைப் பார்த்தது முதல் எனக்கும் தோன்றிக்கொண்டிருக்கிறது. இருந்தா லும் பிச்சைக்காரர்களாய் விடுவது மிகவும் கொடிய துன் பம்" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"என் பிராணநாதா, கஷ்டமென்று நினைத்தால் அது கஷ்டந்தான்; ஆனாலும் அது தெய்வச்செயல். நம்முடையது என்று எண்ணி இந்த ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டோம்; நம்முடைய வசத்தில் அது இருந்த வரை யில் அதைக் கெட்டவழிகளில் செலவிடவில்லையே. இப் போது அதை நாம இழந்துவிடவேண்டுமென்பது ஆண்ட வரின் சித்தமானதால், எது எப்படியானாலும் நியாயமாயும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமலும் நாம் நடந்துகொண் டோமென்னும் திருப்தியாவது நமக்கு இருக்கட்டுமே. இனிப் பகவான் நமக்கு விட்டவழி விடுகிறார்," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"இது வரையில் பாத்தியதைப்பற்றிச் சந்தேக மிருந்தபடியால் நான் எதிர்க்கட்சிபாடினாலும், இப்போது மிஸ்டர்ஹார்வியே வாதிதான் நீதமான பாத்தியஸ்தரென்று சொல்லுகிறபடியால் இனி நடவடிக்கைகளை நிறுத்தி விட லாமென்றும் ஆஸ்தியை உடனே ஒப்புக்கொடுக்கத் தயா ராயிருக்கிறேனென்றும் நான் உடனே எழுதுகிறேன்," என்று மிஸ்டர் காம்பெல் பதில் சொன்னார்.

தன் கணவனைக் கட்டியணைத்துக்கொண்டு, "அப்படியே செய்துவிடுங்கள்; இனி நாம் ஏழைகளானாலும் சுகமாக இருப்போம் என்று நம்புகிறேன்," என்று மனையாள் சொன்னாள்.

மிஸ்டர் காம்பெல் உட்கார்ந்து வக்கீலுக்குத் தம் அபிப்பிராயங்களை ஒரு கடிதத்தில் எழுதி முத்திரையிட்டு ஒரு குதிரைக்காஸாரியிடம் போஸ்டுக்கு அனுப்பினார்.

வேலைக்காரன் கதவைமூடிக்கொண்டு வெளியே போனதும் மிஸ்டர் காம்பெல் உடனே தம் முகத்தை இரண்டு கையாலும் மூடிக்கொண்டார். மிஸிஸ் காம்பெல் உடனே தன் கணவன் கையைப்பிடித்துக்கொண்டு, "உள்ளபடியே இது ஒரு குரூரமான சோதனை தான்; ஆயினும் தங்களுடைய கடமையைச் செய்து விட்டீர்கள்," என்று சொன்னாள்.

"எனக்காக நான் கவலைப்படவில்லை; நம்முடைய குழந்தைகளைப்பற்றிச் சிந்திக்கின்றேன்," என்றார்.

"அவர்கள் உழைத்துத்தான் பிழைக்க வேண்டும்; அலுவல் ஏற்பட்டாலே சுகமல்லவா?" என்றாள்.

"வாஸ்தவம், பையன்கள் எப்படியாவது பிழைத்து விடலாம்; ஐயோ, அந்தப் பெண்களோ! இது அவர்களுக்கு என்ன கஷ்டதசை!" என்றார்.

"நாதா, அவர்களை அப்படித் தப்பு வழியில் வளர்க்கவில்லை. மனோ தைரியத்துடன் அவர்கள் படிந்து இணங்குவதுடன், நம்மிருவருடைய தேர்ச்சிக்கும் சகாயமாக இருப்பார்கள். மேலும் நமக்கு ஒன்றுமில்லாமல் துடைத்துக் கொண்டா போய்விடும்?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"அஃது அந்தக் கட்சிக்காரரையல்லவோ பொறுத்திருக்கிறது. ஒருகால் இதுவரையிலுள்ள வருஷாந்தர



ஐவேஜை அவர்கேட்கலாம். அப்படியானால் நாம் ஆண்டிகளிலும் கேடுகெட்டவராவோம். எப்படியானாலும் சரி: எல்லாம் ஈசன் செயல். நல்லது கிடைத்தால் மட்டும் மகிழ்கிறது; கெட்டது கிடைத்தால் தூறுகிறதா?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"என் நாதா, பகவான் கைவிடமாட்டார். நல்லதையே நாம் எண்ணிக் கொண்டிருப்போம்," என்று மிஸிஸ் காம்பெல் தேறுதல் கூறினாள்.

"ஆகா! மனிதர்களுடைய அறிவு என்ன அற்பம்! இந்தச் செல்வம் நமக்குக் கிடைத்தபோது நமக்கு இனி ஒரு குறைவுமில்லையென்று தோன்றிற்று. இதை நம்பி என் மருத்துவத் தொழிலையும் கைவிட்டேன். பயனென்னவென்றால், இப்போது நானும் நிர்க்கதியாய்ப்போய் நமது குழந்தைகளும் திண்டாடப் போகின்றன. என் தொழிலை நடத்தி வந்திருந்தால் ஏதாவது கொஞ்சம் சேர்த்து வைத்திருப்பேனே. நமக்கு அந்தச்சமயத்தில் மிகவும் உயர்வான பதவி வந்து விட்டது, என்று தோன்றியது. இப்போது என்ன கேவலமாக முடிந்து விட்டது பார்," என்று மிஸ்டர் காம்பெல் வெறுத்துக் கொண்டார்.

இதற்கு அந்தஅம்மாள், "விஷயங்கள் நமதற்ப புத்திக்குத் தோன்றக்கூடியன அவ்வளவுதான், என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆயினும், இந்த ஆஸ்தி நம்மை விட்டுப் போகாமலிருந்தால் நமக்கு இதையும் விட என்ன கேடு சம்பவித்திருக்குமோ? நாம் எதைக் கண்டோம்? நமக்குக் கெடுதி எதென்றும், நல்லது எதென்றும், ஈசனுக்கே தெரியும். நமக்கு நல்லது என்று அவருக்கு எது தோன்றுகிறதோ அதையே அவர் செய்வார்; அதற்கு நாம் உள்ளம் படிந்தே நடக்க வேண்டும். நாதா! தங்களுக்குக்

கூட ஏன் இவ்விதமான மனக்கலக்கம்? வாருங்கள், குளிர்ந்த காற்றில் சற்று வெளியிற் சென்று உலாவுவோம்," என்றாள்.

---

## அத்தியாயம்—4

இந்தச் சம்பாஷணை நடந்தேறி இரண்டு நாட்களுக்கெல்லாம் மிஸ்டர் ஹார்வியிடமிருந்து மிஸ்டர் காம்பெல்லுக்கு வந்த கடிதத்தில், இன்னும் எதிர்க்கட்சி ஆடாமல் ஆஸ்தியை ஒப்புக்கொடுத்துவிடுவதாக மிஸ்டர் காம்பெல் செய்த தீர்மானத்தைத் தாம் தெரிவித்ததாகவும், அந்தக் கட்சிக்காரரிடமிருந்து தமக்கு முன் வருஷங்களின் வருமானத்தைக் கேட்க உத்தேசமில்லையென்றும், இனி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளவும் சாமான் சஜ்ஜாக்களை ஒரு வழியாகப் பங்கீடு செய்யும் பொருட்டும் மூன்று மாதங்கள் வரையில் மிஸ்டர் காம்பெல்லை வெக்ஸ்ட்டன் ஹாலிலேயே குடித்தனம் செய்யும்படி வருந்திக்கேட்டுக்கொள்வதாகவும் பதில் வந்தது, என்றும் எழுதியிருந்தது.

இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் மிஸ்டர் காம்பெல்லுக்கு மனது தைரியப்பட்டது. ஏனென்றால் இப்போதுதான் தம் கையில் என்ன மிஞ்சும் என்று அவருக்குத் தெரிந்தது. அந்தப் புதிய சொந்தக்காரர் பழைய வரும்படியைக் கேட்கவில்லையென்று மிஸ்டர் காம்பெல் நன்றிபாராட்டிக்கொண்டிருந்தார். இல்லாவிட்டால் மிஸ்டர் காம்பெல் உடனே ஆண்டிபாகிவிடுவார். மிஸ்டர் ஹார்வியால் செய்யப்பட்டுள்ள செலவுகளுக்காகக் கூடிய சீக்கிரத்தில் ஈடு செய்யவேண்டுமென்று அதற்குக் கணக்கை யனுப்பும்படி மிஸ்டர் காம்பெல் உடனே எழுதினார். மூன்றுநாளில் அது வந்துவிட்டது. அதனுடன் கூடவந்த கடிதத்தில்



பாத்தியம் ஸ்தாபிக்கப்பட்டவுடன் மிஸ்டர் காம்பெல் நசுங்கல்தனம் செய்யாமல் ஆஸ்தியை ஒப்புக்கொடுத்துவிட்டார் என்பதையும், அவர் கைவசம் இருந்த பத்து வருஷகாலத்தில் அவரால் அதற்குச் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்களையும் உணர்ந்து சொந்தக்காரர் அவ்வளவு தாராள மனதுடன் நடந்துகொண்டாரென்றும், மிஸ்டர் ஹார்வி எழுதியிருந்தார். இது மிஸ்டர் காம்பெல்லுக்கு வெகு சந்தோஷத்தைத் தந்தது. ஆனால் விவகாரத்தில் பிடித்த செலவு அசாத்தியமாக இருந்தது. பதினாயிரக்கணக்காக ஆயிருந்தது. மிஸ்டர் காம்பெல் கூடுதல் தொகையை வாசித்தவுடன் ஏக்கம் பிடித்தவராய்க் காகிதக் குவியலை மேஜையின் மேல் எறிந்தார்.

"நாம் இன்னும் பாழாகவே இருக்கிறோம், என் கண்ணே" என்று துக்கத்துடன் சொன்னார்.

"நாம் அப்படி நினைக்கவேண்டாமே; எது எப்படியானாலும் இதையும்விடக் கேடு கிடையாதல்லவா? ஆகையால் அதற்காயிற்று, நமக்காயிற்று பார்த்துக்கொள்வோமே," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"என் அருமை இல்லாளே, இந்த வக்கிலுடைய பில்லுக்கே கொடுக்க ஆயிரம் பவுன் குறைவாக இருக்கிறதே," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"அஃதிருக்கலாம்; ஆனால் சாமான்கள், குதிரைகள், வண்டிகள் இவைகளெல்லாம் இருக்கின்றனவே; இவைகளையெல்லாம் விலைப்படுத்தினால் அதற்கும்கண்டு மிஞ்சவேண்டுமே," என்றாள்.

"நாம் கொடுக்கவேண்டிய கணக்கைப்பார்க்கின் இன்னும் இருக்கின்றனவே; நீ மறந்துவிட்டாயோ?" என்றார்.

"இல்லை; நான் அவைகளையெல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு வருகிறேன். அவையெல்லாம் கூடி எனக்குத் தெரிகிறவரையில் முந்நூறு பவுனுக்குமேல் ஆகவில்லை. என் ஈசரே, தைரியத்தைக் கைக்கொள்வோம்," என்றாள்.

"எமிலி, ஆனால் என்ன செய்வோமென்கிறாய்?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

அதற்கு அவள், "இனி நாம் செலவைக் கட்டிவிட வேண்டும்; நம்முடைய சிப்பந்தி ஆள்மாகாணங்களுக்கு உடனே உத்தரவு கொடுத்துவிடவேண்டும். வேலைக்காரர்கள் அனைவரையும் நாளைக் காலையில் வரவழைத்து, சம்பவித்ததையெல்லாம் சொல்லுங்கள். இன்று சாயங்காலமே இரண்டு பெண்களுக்கும் தெரிவித்து விடுகிறேன். ஆசாள் பேடர்சனையும் அழைத்து, அம்மா, இனிமேல் உன்னை வைத்துக்கொள்ள எங்களால் இயலாது, என்று சொல்லி விடுகிறேன். இனி நாம் அவசியமாக வைத்துக்கொள்ள வேண்டியவர் யாவரென்றால்—சமையற்காரி, கைவேலைக்காரி, ஒரு சாலாள், குதிரைகள் விற்று முடிவாகும்வரையில் ஒரு குதிரைக்காலாரி—இவர்கள் தாமே. ஏலம்போடுகிறவராகிய மிஸ்டர் பேட்சுக்கு, வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களையெல்லாம் ஏலம் போடும்பொருட்டு, கிட்டினதாக ஒருநாளைக் குறிப்பிட்டு விளம்பரம் செய்யும்படி எழுதுங்கள். நம்முடைய ஹென்ரிக்கும் எழுதிவிடுங்கள்; அவன் இனிமேல் காலேஜில் படிக்கமுடியாது. இனி நாம் பிழைப்பதற்கு வேண்டிய வழிகளைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய காலம் இருக்கிறது. அவையெல்லாம் நமக்கு எத்துணைப் பணம் மிஞ்சும் என்பது தெரிந்தால் தான் ஒருவிதமாகத் தீர்மானமாகும்," என்று சொன்னாள்.

இதொரு நல்ல யோசனையென்று தோன்றியதால் அவ்வாறே செய்யப்பட்டது.



இந்தச் சம்பவங்களைக் கேட்டதும் மிஸ்பேடர்ஸனுக்கு உள்ளம் எவ்வாறு நொந்திருக்குமென்பதை நாம் எளிதில் ஊகிக்கலாம். மேரியும் எம்மாவும் தங்களுடைய மாமனுக்கும் மாமிக்கும் துயரம் வந்துவிட்டதே என்று துக்கித்தார்களே அல்லாது தங்களுடைய நிலைமையைப்பற்றிக் கொஞ்சமேனும் எண்ணவேயில்லை. இச்செய்திகளைக் கேட்ட உடனே அறைக்குள் ஓடி வந்து, இருவரும் மிஸ்டர் காம்பெல்லுடைய கழுத்தை இறுகக்கட்டிக்கொண்டு "மாமா, நீங்கள் கவலைப்படாதீர்கள்; நாங்களிருவரும் இரவும் பகலுமாக எந்த ஊழியமாவது செய்து தங்களுக்கு வருத்தம் தெரியாது காக்கின்றோம்," என்றார்கள்.

மறுநாள் காலையில் மிஸ்டர் காம்பெல் ஆள்மாகாணங்கள் அனைவரையும் உண்ணும் அறைக்கு வரவழைத்துச் சம்பவங்களைச்சொல்லியதுடன் அவர்களை உடனே அனுப்பிவிடவேண்டியிருந்ததற்குக் காரணத்தையும் விவரித்தார். அவர்களுடைய சம்பளப் பாக்கிக் கணக்கு போட்டுத் தயாராய் இருந்ததால், அது அவர்கள் அறையைவிட்டுப் போவதற்கு முந்தியே ஒவ்வொருவருக்கும் கையில் கொடுத்தாய்விட்டது. ஆனால் அவர்கள் அந்த அறையை விட்டுப்போகும்போது இவ்வளவுதான் வருந்தினார்கள் என்று சொல்ல முடியாது. மிஸ் பேடர்சன் மட்டும் சிலநாள் துணைவியாயிருக்க அனுமதி கேட்டுக்கொண்டதன்மேல், அவளிடம் எல்லோருக்கும் பூர்ணவிசுவாசம் இருந்தபடியால் சரி என்று சொல்லப்பட்டது.

"அப்பா! முடிந்ததடா! கடவுளுக்கு அநேககோடி வந்தனம். பெரிய சுமை நீங்கிற்று," என்று மிஸ்டர் காம்பெல் சிப்பந்திகள் எல்லாரும் சென்றவுடன் சொன்னார்.

"மாமா, ஆல்ப்ரெட்டினிடத்திலிருந்து இதோ ஒரு கடிதம் வந்திருக்கிறது" என்று எம்மா பர்ஸிவல் அறைக்குள்

வந்துசொன்னாள். "அவன் இப்போதுதான் வந்துபோர்ட்ஸ்மத்து துறைமுகத்தில் இறங்கி இருக்கிறான். கப்பல் ஆள்களைச் சம்பளத்தைக் கொடுத்துக் கலைத்துவிடப்போகிறார்களாம். அவனுடைய காப்டினுக்கு ஐம்பதுபீரங்கிக்கப்பலில் உத்தியோகம் கிடைத்து, அவனையும்கூடவே அழைத்துக்கொண்டு போகப் போகிறாராம். அவன் சொல்வதில் இவ்விடம் வெகு சீக்கிரத்துக்குள் வந்துவிட்டு, பிறகு—"

"பிறகு என்ன, என் கண்மணியே?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"தனக்கு அதிகநாள் தங்கியிருக்க முடியாதாம்; தன்னுடன் இரண்டு தோழர்களை அழைத்துக்கொண்டுவருவதில் தங்களுக்கு ஆட்சேபணை இருக்காதென்று எண்ணுகிறானாம்," என்று முடித்தாள் எம்மா.

"ஐயோ பிள்ளை, பாவம்! இந்த ஆசை அவனுக்கு எங்கே நிறைவேறப்போகிறது? எம்மா, இங்கே நடந்த சம்பவங்களையெல்லாம் அவனுக்கு எழுதிவிடு," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"அவனுக்கு நான்தான் எழுதவேண்டுமோ, மாமா?" என்றாள் எம்மா.

"ஆம் அடி, கண்மணியே, நீதான் எழுதவேண்டும். உன் மாமாவுக்கும் எனக்கும் அலுவல் அதிகமாயிருக்கிறது," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"நீ சொல்லுகிறபடியால் நான் செய்கிறேன்," என்று கண்களில் ஜலம் ததும்பச் சொல்லிக்கொண்டு எம்மா அறைக்கு வெளியே சென்றாள்.

"ஏலம் போடுபவராகிய மிஸ்டர் பேட்ஸன் தங்களைக் காண வந்திருக்கிறார்," என்று சொல்லிக்கொண்டு காலா உள்ளே நுழைந்தான்.

"அவரை உள்ளே வரும்படி கேட்டுக்கொள்ளுகிறே



என்று சொல்லு," என்றார் மிஸ்டர் காம்பெல்.

மிஸ்டர் பேட்ஸன் உள்ளே வந்து மிஸ்டர் காம்பெல் கையில் ஒரு காகிதத்தைக் கொடுக்கவும், அவருக்கு ஒரு ஆஸனத்தைக் கொடுத்துவிட்டுப் பிறகு, அதை மிஸ்டர் காம்பெல் படித்துப் பார்த்தார். அதில் அந்த ஆஸ்திக்குப் புதுச் சொந்தக்காரர் ஆகிய மிஸ்டர் டக்ளஸ் காம்பெல் மிஸ்டர்பேட்ஸனைப்போய் விசாரிக்கச்சொல்லி வீட்டுத்தட்டுமுட்டுச் சாமான்களை ஒருவிலைவைத்துக் கொடுத்துவிட மிஸ்டர் காம்பெல்லுக்கு இஷ்டமிருக்குமானால், மிஸ்டர் பேட்ஸனை அவைகளுக்கு ஒரு தாராளமான விலையைப் போட்டுத்தொகைக்குத் தமக்கு ஒரு உண்டியல் அனுப்பும்படி எழுதியிருந்தார்.

"இது மிஸ்டர் டக்ளஸ் காம்பெல்லுடைய தயாளசீலத்துவத்தைக் காண்பிக்கிறது; என் நேசரே, தங்களுக்கு ஆட்சேபணைக்கே இடமிராதே?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"ஒன்றுமில்லை. என் வந்தனங்களை மிஸ்டர் டக்ளஸ் காம்பெல்லுக்குச்சொல்லுங்கள். மிஸ்டர் பேட்ஸன், நாளைக்காவது அல்லது அதன் மறுநாளுக்குள்ளாவது தாங்கள் விலைபோட்டுவிட்டால் அது எனக்கு மிகவும் பெரிய உபகாரமாகும்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"அப்படியே கட்டாயம் செய்துவிடுகிறேன், ஐயா," என்று சொல்லிவிட்டு மிஸ்டர் பேட்ஸன் விடைபெற்றுச் சென்றார்.

விலைபோட்டானவுடன் தங்களுக்கு மீதியாகக்கூடியது எவ்வளவு என்று மிஸ்டர் காம்பெல் ஒரு திட்டம் போட்டார். ஆயிரத்து எழுநூறு பவுனுக்குக் குறையாமலும் ஆயிரத்து எண்ணூறு பவுனுக்கு மேற்படாமலும் இருக்குமென்று தோன்றிற்று.

மிஸ்டர் காம்பெல்லுக்கு இந்தப் பெரிய ஆஸ்தி

கிடைத்துப்பத்து வருஷகாலமாக அதன் ஏராளமான வருஷாந்தர வருமானத்திலிருந்து ஒன்றும் மீத்து வைக்கவில்லையா? தாம் சம்சாரி என்ற அறிவு அவருக்கு இல்லையோ? என்னலாம். நடந்ததென்னவென்ருல், ஆதியில் அந்த நிலங்கள் காடுமேடாக இருந்தமையால் அவைகளைத் திருத்துவதிலும்,அங்கிருந்த ஏழைகள் ஆதரவின்றி இருந்தமையால் குழந்தைகளை இலவசமாய்ப் படிப்பிக்கப் பள்ளிகளையும் பரதேசி ஜனங்கள் வேலைசெய்து பிழைக்கும்படி தொழிற் சாலைகளையும்அமைப்பதிலும்,வந்த வரும்படி எல்லாம் செலவாய் விட்டது. வேறு தம் குடும்ப விஷயத்தில் ஒரு தம்படி கூட உபயோகப் படுத்தவில்லை. இச் சொத்து அவர் கையில் பத்து வருஷம் இருந்ததன் பயனாக, ஆதியில் தமது வைத்தியத் தொழிலில் சிரமப்பட்டு மீத்து வைத்திருந்த பணமும் கரைந்து போய்விட்டது.

## அத்தியாயம்—4.

சாமான்களை விலை போட்ட மறுநாள் ஹென்றி வந்து சேர்ந்தான். அவன் மிகவும் ஏக்கம் பிடித்தவனாகக் காணப்பட்டான். அவன் இவ்விதம் இருப்பானென்று அவனுடைய தாய் தந்தையர்களாவது அவனுடன் பழகியவர்களாவது நினைக்கவே இல்லை. அவனது மன ஏக்கம் தன்னைப்பற்றிய தன்று. தன் பெற்றோர்களைப் பற்றியே என்று எல்லோராலும் எண்ணப்பட்டது.

மேலே செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி மிஸ்டர் காம்பெல்லும் மிஸிஸ் காம்பெல்லும் பலவாறு யோசனை செய்தனர்.ஆனால் பண்படக்கூடிய உபாயம் எதுவும்தோன்றவில்லை. கையில் இருந்தது ஆயிரத்தறுநூறு அல்லது ஆயிரத்தெழுநூறு பவுன்தான். அதை வைத்துக்கொண்டு எங்கே போகிறது என்ன செய்கிறது? மறுபடியும்



தம்முடைய பழைய விருத்தியைத் தொடங்கலாமென்
ருல் அதைக் கொண்டு தம் குடும்பத்தைச் சம்ரக்ஷிக்க
முடியும் என்று மிஸ்டர் காம்பெல்லுக்குத் தோன்றவில்லை.
அவருடைய மூத்தகுமாரன் ஹென்றிக்கு ஏதாவது ஓர்
உத்தியோகம் கிடைக்கலாம். ஆனால் அவன் வக்கீல் வேலை
அல்லது வேதப் பிரசங்கவேலை இவ்விரண்டைத்தவிர வே
றொன்றுக்கும் ஏற்றவன் அல்லன். அப்படி யிருந்தாலும்
அவன் தொழிலில் அமர்கிறவரையில் அவனைப் போஷிப்
பது யார்? ஆல்ப்ரெட்டுக்கு மானுமியுதவி வேலையில் அம
ரும்படி புரமோஷனானது உண்மைதான்; ஆனால் அவனு
டைய சம்பளம் அவனுக்கே போதும் போதாது என்று
சொல்லும்படியா யிருந்தது. அதற்குமேல் உயர்வு கிடைப்
பதும் துர்லபமாயிருந்தது. மற்று முள்ளவர்கள் இரண்டு
பையன்களும், இரண்டு பெண்களும்: இவர்கள் நாளுக்கு
நாள் வளர்ந்து கொண்டிருந்தார்கள். எல்லாம் கூடி எட்டுப்
பேர்களடங்கிய ஒரு குடும்பம். பணத்தைச் சர்க்கார் பண்
டில் போடலாம் என்ருல், அந்தச் சிறிய தொகையிலிருந்து
கிடைக்கக்கூடிய வட்டியானது இவர்களுடைய ஜீவனத்
துக்குப் போதாது. எல்லாவிதத்திலும் பலதடவை ஆலோ
சனை செய்து பார்த்தும் பயன்படாமற் போகவே அவர்
களுக்கு நாளுக்கு நாள் இரவில் படுக்கும்போது கவலை
பெருகிக்கொண்டே வந்தது. அவர்கள் ஹாலை விட்டுப்
போகத் தயார்தான். ஆனால் அதைவிட்டு எத்திசையை
நோக்கிக் காலடியை வைப்பது என்று மட்டும் தெரியவில்லை.
இப்படித் தடுமாறிக்கொண்டு ஒரு வாரம் சென்றதும் ஆல்ப்
ரெட் திடீரென்று வந்து அவர்களைக் கூட்டிக்கொண்டான்.
கப்பல்வேலை கலைந்தவுடன் அவன் ஒரே விரைவாய் ஓடி
வந்திருக்கிருன்! வெகுகாலம் பிரிந்திருந்தவர்கள் மறுபடி
யும் சேர்ந்ததனுல் பெருகின ஆனந்தக்கடலில் முழுகி

எழுந்தவுடன், மிஸ்டர் காம்பெல், "ஆல்ப்ரெட், உன்னுடைய தோழர்களை நன்கு அழைத்து உல்லாசப்படுத்த எனக்கு இப்போது முடியவில்லையே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது" என்றார்.

"அதற்கு ஆல்ப்ரெட், என் அருமந்த தாய் தந்தையரே, நானும்சரி; அவர்களும் சரி; தங்களுக்கு நேர்ந்ததைப்பற்றி நினைத்து மிகவும் துன்புற்றோம்; ஆனால் வர வேண்டியது வந்தே தீரும்—விதியை வெல்ல யாருக்குச் சாத்தியப்படும்? ஆதலால தைரியத்தைக் கைப்பற்றி நம்மால் சாத்தியமானதைச் செய்யவேண்டியதுதான்."

ஹென்றி மேரியுடனும் எம்மாவுடனும் சிங்காரத் தோப்பில் நடந்து கொண்டிருந்தான். அவனுடைய முகத்தைப் பார்த்தால் உள்ளூற ஏதோ பெரிய கவலையுற்றவனாகத் தோன்றியது. ஆல்ப்ரெட்டும் தாய் தந்தையருக்குத் தைரியம் சொல்லிவிட்டு இவர்களுடன் வந்து கலந்து கொண்டான். ஆல்ப்ரெட் மிகவும் தீரன். கம்பீரமான சுபாவத்தையுடையவன். வானமிடிந்து விழுந்தவிட்டால் கூட ஒருகை பார்த்துக்கொள்ளுவோம் என்னக்கூடிய அவ்வளவு பயமற்ற நெஞ்சுள்ளவன். வரும்போது அவனது முகத்தினின்றும் சொட்டிக்கொண்டிருந்த தேஜஸைக் கண்டவுடன் அருக்கனைக்கண்ட செந்தாமரை மொட்டுக்கள் போல் கவலையால் குன்றியிருந்த அச்சிறுவரின் முகங்கள் உள் மகிழ்ச்சி பூண்டு மலர்ந்தன போலும். உடனே அவர்கள் இவன்மேலே விழுந்து தழுவிக் கட்டிக் கொண்டார்கள். பிறகு அவர்களோடு சற்றுநேரம் சல்லாபம் செய்துவிட்டு, தனது அண்ணனாகிய ஹென்றியின் முகத்தைப் பார்த்தபோது ஏதோ உள்ளத்தில் துக்கமுற்றவன் போல் தோன்றியதால், அவனது அந்தரங்கத்தை அறியும் வண்ணம் ஆல்ப்ரெட் அண்ணான் கையைப் பிடித்துக்



கொண்டு அப்பால் அழைத்துச் சென்றான்.

ஹென்றியோ மிக சாத்துவிக சுபாவமுள்ளவன். ஆல்ப்ரெட்டைப்போல் கம்பீரனல்லன். காலேஜில் சில தோழர்களிடத்தில் செலவுக்குப் போதாமல் 200 பவுன் போல் கடன்வாங்கி இருந்தான். ஆனால் தகப்பனார் பணம் எதேஷ்டமாக அனுப்பிக் கொண்டிருந்தமையால் அடுத்த தடவை பணம் வந்தவுடன் கொடுத்து விடலாமென்று எண்ணியிருந்தான். ஆனால் இப்போதைய துர்த்தசையில் அக்கடனை எவ்விதம் திரும்பிக் கொடுப்பேனென்று ஏங்கிப் போய் வழியையொன்றும் காணாமல், தந்தையாரிடத்திலும் இதைச் சொல்லத்துணியாமல், ஆல்ப்ரெட்டிடம் தனது துயரத்தைத் திறந்துசொன்னான். அதைக்கேட்ட ஆல்ப்ரெட்டு, "அண்ணா! பயப்படாதேயுங்கள்! இதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். எனது சம்பளத்திலிருந்தும் எனக்கு கிடைத்த பரிசுகளிலிருந்தும் மீத்து 250 பவுன் என் கைவசம் வைத்திருக்கின்றேன். அதை உங்களுடையதென்றே பாவித்துக்கொள்ளுங்கள். அதை எப்படி வேண்டுமோ அப்படி உபயோகித்துக் கொள்ளுங்கள். அந்தத் தொகையை நமது தந்தையாரிடம் கொடுப்பதாக எண்ணி இருந்தேன். அவரிடம் கொடுத்தாலும் கடனைத் தானே தீர்க்கப்போகிறார். நீங்களே கொடுத்துத் தீருங்கள். வேறொருவருக்கும்கூட இது தெரியவேண்டாம். இப்போது உங்கள் உள்ளத்தில் இருக்கும் பாரம் நீங்கிற்றா?" என்றான். ஹென்றி இதைக்கேட்டதும் தம்பியைக்கட்டிக் கொண்டு ஆனந்தபாஷ்பம் விட்டான். சற்றுநேரம் சல்லாபித்துவிட்டு அச்சிறுவரெல்லாரும் உள்ளே சென்றார்கள். ஆல்ப்ரெட்டைக் கண்டுபேசினதும் எல்லோருக்கும் மனத்தேர்ச்சி உண்டாகிவிட்டது. உடனே எல்லோரும் ஒரு சபை கூடி ஆலோசிக்கும்போது, சாதுவாகிய ஹென்றி

சொல்லக்கூடிய யோசனை யாதொன்றுமில்லை. கடைசி
யாக எல்லோரும் ஆல்ப்ரெட்சொல்லப்போவதுயாதொன்று
உற்றுப்பார்த்தார்கள்.

"நல்லது அப்பா, இதைப்பற்றி நான் நிரம்பயோசித்
துக்கொண்டு வருகிறேன்; எனக்கு ஒரு யோசனை தோன்றி
இருக்கிறது; அதைக் கேட்டவுடன் நீங்கள் திகைக்கலாம்.
ஆனால் எனக்குத் தோன்றுகிறவரையில் அந்த ஒரே வழி
தான் நமக்கு இருக்கின்றது. அதைவிடச் சிலாக்கியமானது
வேறொன்றும் இல்லை. தங்கள் கையில் மீந்திருக்கும் சிறிய
தொகையைக்கொண்டு இந்தத் தேசத்தில் ஒன்றும்செய்ய
முடியாது; வேண்டுமானால் இதை வைத்துக்கொண்டு இரண்
டொரு வருஷம் பசியாமல் சாப்பிடலாம்; வேறொரு
தேசத்திலோ வென்றால் இதை வைத்துக்கொண்டு பத்து
மடங்காகப் பெருக்கிவிடலாம்; இந்தத் தேசத்தில் குடும்பம்
பெரியதாயிருக்கிற தென்றால் செலவுக்குத்தான் ஹேது;
அந்தத் தேசத்திலோ குழந்தைகள் எவ்வளவுக்கெவ்வளவு
அதிகமாயிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அது செல்
வப் பெருக்குக்கு ஹேதுவாகும். ஆகையால் குடும்பத்தைப்
பெயர்த்துக்கொண்டு கையிலிருக்கும் திரவியத்தையும்
எடுத்துக்கொண்டு அந்தத் தேசத்துக்குப் போகத் தாங்கள்
சம்மதித்தால், தாங்கள் ஏழையாயிருப்பதற்குப் பதிலாகத்
தனவானாகி விடலாம்." என்று ஆல்பரெட் சொல்லி
முடித்தான்.

"அஃது எந்தச்சீமை அப்பா, ஆல்ப்ரெட்?" என்றார்
மிஸ்டர் காம்பெல் "அப்பா, சொல்லுகிறேன்; எங்கள் கப்ப
லின் கஜான்ஜிக்கு ஒரு சகோதரர் இருக்கிறார்; கீழக்
கானடாவைவிட்டுப் பிரஞ்சுக்காரர்களால் துரத்தப்பட்ட
அவர் அந்தச்சீமைக்குப் பிழைக்கப்போனார்; அவருக்கு இவ்
வுலகத்தில் இருந்ததெல்லாம்கூடி முந்நூறுபவுன்கள்தான்.



அவர் அங்கே போய்த்தங்கி இப்போது வருஷம்நாலுதான்
ஆகிறது. நாங்கள் போர்ட்ஸ்மத்துத் துறைமுகத்துக்கு
வந்தவுடன் எங்கள் கஜான்ஜிக்கு அவரிடமிருந்து ஒரு
கடிதம் வந்திருந்தது. அதைப்படிக்க மிகவும் ஆச்சரிய
மாக இருந்தது; அவர் அங்கே வெகு சௌக்கியமாக
இருந்துகொண்டு விரைவாகச்செல்வவானாகிக்கொண்டிருக்கி
றாராம்; அவருக்கு இப்போது ஐந்நூறு ஏகர் அடங்கிய
ஒரு பண்ணை இருக்கிறதாம்; அதில் இருநூறு ஏகர்
வரையில் திருத்தப்பட்டுச் சாகுபடிக்குக்கொண்டு வரப்பட்
டிருக்கிறதாம்; அவருக்குத்துணைசெய்ய முதிர்ந்த குழந்தை
கள் மட்டும் இருந்தால் வெகு விரைவில் செல்வம் பத்து
மடங்கு சேர்ந்துவிடுமாம்; அங்கே நிலம் வெகு மலிவாய்
ஒரு டாலருக்கு ஒரு ஏகர் வீதம் அகப்படுவதுடன், நாம்
இஷ்டப்பட்டதைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளலாமாம்;
தங்களுக்கு இருக்கும் பணத்தைக்கொண்டு ஒரு பெரிய
சொத்தை அங்கேவாங்கிவிடலாம். உங்கள் குழந்தைகளைக்
கொண்டு அதை விரைவில் விருத்தி செய்துவிடலாம். சில
வருஷங்களுக்குள், உங்களுடைய மேலானஸ்திதிக்கு அஃது
ஒரு சிறப்பானதென்று சொல்லமுடியாவிடினும், உங்களுக்
குச் சுகத்துக்கு ஒரு குறைவுமில்லாத குடித்தனம் ஏற்பட்டு
விடும்; உங்களுடைய குழந்தைகள் உங்களுக்கு நன்றாய்
உழைப்பார்கள்; உங்களுக்கும் கடைசியில் அவர்களைப் பிறர்
கையைப் பார்க்காத நிலைமையில் வைத்துவிட்டுப் போகி
றோம் என்கிற திருப்தியும் இருக்கும்," என்று ஆல்ப்ரெட்
சொன்னான்.

"என் அருமைப்பையனே, நீ சொல்லியவற்றில் ஏற்றுக்
கொள்ளக்கூடியபாகம் விசேஷமாக இருக்கிறதென்றுஒப்புக்
கொள்ளுகிறேன்; ஆயினும் அதிற்குறைகள் இருக்கின்றன,"
என்றார் மிஸ்டர் காம்பெல்.

"குறைகளா! சொல்லவேண்டுமோ? அவ்வளவு எளிதாய் நிலப்பகுதிகளைப் போய் பொறுக்கி எடுத்துவிடுவது என்று ஏற்பட்டால் இப்போது தங்களுக்குக் கிடைக்கும்படி ஏதாவது மீந்திருக்குமா? ஆனால், என் அரிய பிதாவே, நம்மால் வெல்ல முடியாத இடையூறுகள் என்ன இருக்கக்கூடும்? இந்த இடையூறுகள் எப்படியிருக்கக்கூடுமென்று இப்போது கவனிப்போமே. முதலானது கடுமையான உழைப்பு; சிலவேளைகளில் ஆகாரம் இல்லாமல் இருத்தல்; வசதியான ஒரு வீடு கட்டும்வரையில் ஒரு மரக்குச்சில் வசித்தல்; கடுங்குளிர்; இவைகளேயாம். இதுவரையில் நமக்குக் கிடைத்திருந்த சாதனங்களை, அதாவது மனோஹரமான ஒரு பெரிய அரண்மனை, சிறப்பான சாமான்கள், இனிப்பான சாப்பாடுகள், தளுக்கான சகவாசங்கள், நம்நாட்டில் அன்றாடம் நேரிடும் சம்பவங்களை அன்றாடம் ஊக்கத்துடன் அறிந்துகொள்ளுதல், ஆகிய இவைகளோடு ஒப்பிட்டால் அந்த விஷயங்கள் கொடிய கஷ்டங்களென்றே நான் ஒப்புக்கொள்ளுகிறேன்; கடுமையான உழைப்பென்றால் அதைத் தங்கள் மேல் சுமத்தாமல் நானும் ஹென்றியும் கூடியமட்டில் பார்த்துக்கொள்ளுகிறோம்; கடுங்குளிரானால் விறகுக்கு அங்கே ஒன்றும் குறைவே கிடையாது; குச்சு நட்டாமுட்டியாக இருந்தால் எங்களாலானவரையிலாவது அதைச் செம்மைப்படுத்துகிறோம்; சகவாசத்திற்கு ஜனங்கள் இல்லையென்றால் நமக்குள்ளேயே போதுமான ஆசாமிகள் இருக்கிறோமே; நமக்கு அபாயங்கள் நேரிடுமானால் நம்மைக் காத்துக்கொள்ளத் துப்பாக்கிகள் எங்கே போயின? நெஞ்சுத்துணிச்சல் எங்கே போயிற்று? உண்மையில் நாம் ஏன் மிகவும் ஸுகமாக வாழக்கூடாது? என்று எனக்குத் தோன்றுகிறது; எவ்வாறாயினும் நமக்கு ஏராளமான ஸௌக்கியமும் சுவாதீனமும் சித்திக்கும்," என்றான் ஆல்ப்ரெட்.



"ஆல்ப்ரெட், நீ எங்களுடன் வருபவன்போல் பேசுகிறாயே?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"என் அருமைத்தாயே, நீ என்ன நான் வரப்போவதில்லையென்று நினைக்கிறாயா? நீங்கள் அங்கே இருக்கையில் நானும் கூட இருப்பது உதவியாக இருக்கும் என்று தோன்றும்போது நான் இங்கேயே தங்கிவிடுவேன் என்று நீ நினைக்கிறாயோ? அப்படிச் செய்யவேமாட்டேன்; எனக்கு உத்தியோகம் செய்ய ஆசையாகத்தான் இருக்கிறது; ஆயினும் என்னுடைய கடமை இன்னதுதானென்று எனக்குத் தெரியும்; அஃதாவது என் தாய் தந்தையர்க்கு உதவிபுரிதல்; சொல்லுமிடத்து இதுதான் எனக்கு மேலானது. சுதந்திரத்தைப்பற்றி ஒரு* மாலுமியுதவிக்கு இருக்கும் நோக்கங்கள் மிக மேலானவை. எனது தாழ்ந்த உத்தியோகத்தில் இருந்துகொண்டு ஒவ்வொரு அதிகாரிக்கும், எத்தனை வருஷமோ தெரியாது, வருஷக்கணக்காகக் கையெடுத்துச்சலா செய்துகொண்டிருப்பதைவிட அமெரிக்காவின் அடவிகளில் யதேச்சையாக மிருகத்தோடு மிருகமாகத் திரிவது எனக்கு மேலானது. நீங்கள் போனால நானும் வருவேன். அதுமாத்திரம் நிச்சயம். சொல்லப்போனால், நான் வராமல் நீங்கள் மட்டும் போவதானால் நான் மிகவும் சஞ்சலப்படுவேன். எனக்கு இரவில் சரியான தூக்கமே வராமல், எங்கே ஓர் இந்தியன் மேரியைத் தூக்கிக்கொண்டு போய் விட்டானோ, அல்லது ஒரு கரடி குழந்தை எம்மாவை விழுங்கிவிட்டதோ எனக்குருட்டு ஆலோசனை செய்துகொண்டே இருப்பேன்."

"நல்லது, இந்தியன் வந்தால் நானே பார்த்துக்கொள்கிறேன்" என்றாள் மேரி.

"கரடி வந்தால் நானும் அப்படியே. வந்தாலென்ன? ஆல்ப்ரெட் ஊரிலிருந்து வந்தவுடன் என்னை இறுகக்கட்டி

* தனது உத்தியோகம்.

கொண்டாற்போல், நானே அதுவும் கட்டிக்கொள்ளணும்?" என்றாள் எம்மா.

"நல்லது எம்மா! இம்மாதிரியான உபமானங் கூறியதற்கு உனக்கு வந்தனங்கள்" என்று நகைப்புடன் ஆல்ப்ரெட் சொன்னான்.

"ஆல்ப்ரெட், நீ சொன்ன உபாயம் ஆலோசனை செய்யத்தக்க விஷயம் தான் என்று எனக்குத் தோன்றுகிறது; உன் தந்தையும் நானுமாக அவ்விஷயத்தை யோசித்துப் பார்க்கிறோம்; நாளைக்காலைக்குள் ஒருவிதமான தீர்மானத்துக்கு வந்துவிட்டாலும் விடலாம்," என்றாள் மிஸிஸ்காம்பெல். "இப்போது நாம் எல்லோரும் போய்த்தூங்குவோம்."

"சரி, இந்தியர்களைப்பற்றியே நான் கனாக்காணுவேன்" என்றாள் மேரி.

எம்மாவும், "எனக்கும் கரடியைப் பற்றியே சொப்பனமாக இருக்கும்", என்று ஆல்ப்ரெட்டைக் கடைக்கண்ணால் புன் சிரிப்புடன் பார்த்துக்கொண்டு சொன்னாள்.

இந்தக் கள்ள மொழியின் மறை பொருளை அறிந்த ஆல்ப்ரெட்டும், "எனது கனவிலும் ஒரு சிறிய பெண் எதிர் வந்து நிற்பாள்—அவளை எதோ ஒரு சமயம் போர்ட்ஸ்மத்துத் துறையில் கண்டுளேன்", என்றான்.

"போ, போ, உன் புரளிப்பேச்செல்லாம் எனக்குத் தெரியும்," என்றாள் எம்மா. இந்தப் படியாகப் பேச்சு முடிந்ததும், கடைசியில் எல்லோரும் ஒரு இடத்தில்கூடி ஆண்டவனைத் தொழுது துதிசெய்து விட்டு, அவரவர்கள் தம்தம் அறைக்கு உறங்கப் போனார்கள்.

## அத்தியாயம்—5.

மறுநாட்காலையில் வெள்ளெனவே எழுந்து அவர்கள் எல்லோரும் கூடினார்கள். வழக்கம்போல் மிஸ்டர் காம்பெல் பைபிளின் ஒருபாகத்தைப் பாராயணம் செய்து தொழுதானவுடன் காலை உணவு உட்கொள்ளத் தொடங்கினார்கள். அது முடிந்ததும், மிஸ்டர் காம்பெல் "என் அருமைக் குழந்தைகளே, நேற்றிரவு நீங்கள் போனபிறகு உங்கள் தாயாரும் நானுமாக யோசனைசெய்து பார்த்ததில், ஆல்ப்ரெட் சொன்ன உபாயத்தைத் தவிர வேறுவழி ஒன்றும் இல்லையென்று தீர்மானித்திருக்கிறோம். உங்களுடைய அபிப்பிராயமும் அப்படியே இருந்தால் கானடாவுக்குச்சென்று பிழைக்கும்மார்க்கத்தைத் தேடுவோம்". என்று சொன்னார்.



"என் அபிப்பிராயமும் தீர்மானமாய் அதுவே" என்றான் ஹென்றி. 'என் பெண்களே, உங்கள் செய்தி என்ன? என்றார் மிஸ்டர்காம்பெல்.

"இவ்வுலகில் எந்த மூலைக்கானாலும் உங்களுடன் பின் தொடர்ந்து சென்று, நீங்கள் தாய்தந்தையற்ற இரண்டு பரதேசிக் குழந்தைகளுக்குப் புரிந்திருக்கும் விசுவாசத்துக்கெல்லாம் பிரதி செய்யவேண்டும், என்பதுதான் எங்களுடைய கருத்து," என்றாள் மேரி.

இதைக் கேட்டவுடன் உள்ளம் உருகி மிஸ்டர் காம்பெல்லும் மிஸிஸ்காம்பெல்லும் தங்கள் மருமக்கள் இருவரையும் கட்டியணைத்தார்கள்.

சற்றுநேரம் கழிந்ததும் மிஸிஸ்காம்பெல், "நாம் ஒரு தீர்மானத்திற்குவந்து விட்டபடியால் வேண்டிய ஏற்பாடுகள் செய்ய உடனே ஆரம்பிக்கவேண்டும். நாம் யார்யார் என்னென்னவேலை செய்யவேண்டும், பார்ப்போம், ஆல்ப்ரெட்டும் ஹென்றியும், இங்கே வாருங்கள், அப்பா, நீங்கள் யாது செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நான் ஆக்ஸ்போர்டுக்குத் திரும்பிப்போய் புஸ்தகங்களையும் மற்றுமுள்ள சாமான்களையும் விற்றுப்போட்டு என்னுடைய சங்கதிகளை ஒழுங்குசெய்துவிட வேண்டும்", என்றான் ஹென்றி.

"அதற்கெல்லாம் வேண்டிய பணம் உனக்குக்கிடைக்கு
மோ, என் அருமைப்பையனே?" என்றார் மிஸ்டர்காம்பெல்.
"ஆம், என் அரிய பிதாவே," என்று முகம் கொஞ்சம்
கலங்கிச் சொன்னான் ஹென்றி.

"எனக்கோவென்றால் இவவிடத்தில் அலுவல் ஒன்றும்
இல்லையென்றுநினைக்கிறேன்.லிவர்பூலிலிருந்துகப்பலேறுவது
சிலாக்கியம் என்று எனக்குத் தோன்றுகிறபடியால், இன்று
சாயங்காலமே லிவர்பூலுக்குக்கோச்சில் போகிறேன். எம்மு
டைய கஜான்ஜிக்கு அவரால் முடிந்தவரையில் குடியேறும்
இடத்துச்செய்திகளை அறியச்சொல்லுவதுடன், லிவர்பூலில்
மற்றவர்களையும் என்னால் கூடியமட்டும் விசாரித்து அறிந்து
கொள்கிறேன். தெரியப்படுத்தும்படியான சமாசாரம் ஏதே
னும் கிடைத்தால் உடனே தங்களுக்கு எழுதுகிறேன்," என்
றான் ஆல்ப்ரெட்.

"ஆல்ப்ரெட், உனக்கு எழுதச்சமாசாரம் இருக்கிறதோ
இல்லையோ, நீ போய்ச் சேர்ந்த உடன் எழுதிவிடு. எவ்வாறு
ஆனாலும் நீ சாவதானமாகப் போய்ச் சேர்ந்தாய் என்பதாவது
எங்களுக்குத்தெரியட்டும்," என்றாள் மிஸிஸ்காம்பெல்.
"என் அரியதாயே! அப்படியே,"என்றான் ஆல்ப்ரெட்.
"ஆல்ப்ரெட், உன்னிடம் செலவுக்குப் பணம் இருக்
கிறதோ" என்றார் மிஸ்டர் காம்பெல்.
"ஆம், அப்பா! போதுமானது;நானென்ன நாலுகுதிரை
ச்சாரட்டில் போகப்போகிறேனோ?" என்றான் ஆல்ப்ரெட்.
"நல்லது, ஆல்ப்ரெட், நாங்கள் இங்கே மூட்டைகளைக்
கட்டுகிறோம். நாங்கள் லிவர்பூலில் வந்து சேர்ந்தவுடன்
போய்த் தங்கும்படி ஒருநடுத்தரமான ஜாகையைப்பேசிவை.
கியூபெக்குக்கப்பல் புறப்பட்டு போகும் நாள் எப்போது
என்றார் மிஸ்டர் காம்பெல்.

"இப்போதுதான் நாள், அப்பா! இது மார்ச்சு மாத



மல்லவா? இனிப் பெரும்பாலும் வாரத்துக்கொரு கப்பல்
போய்க்கொண்டிருக்கும்; நாம் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கி
ரம் புறப்படுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது; ஏனெ
னில் சீதளகாலத்துக்குள் அங்கு ஒரு சௌக்கியமான ஜாகை
யில் அமர்ந்து விடுவது உத்தமம்", என்றான் ஆல்ப்ரெட்.
சற்றுநேரத்திற்குள் ஆல்ப்ரெட்டும் ஹென்றியும் புறப்
பட்டுச் சென்றார்கள். வீட்டில் இருப்பவர்களுக்கும் சாமான்
களை ஒழித்து மூட்டை கட்டுவதே அலுவலாக இருந்தது.
ஆல்ப்ரெட்டினிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவன்
அங்கே போனதும் காலத்தை வீணாக்காமல் காரியங்களை
முடித்துக்கொண்டிருந்தான். அங்கே இருந்த சில கானடா
வர்த்தகர்களைக்கண்டு பேசி, அவர்களால் கானடாவிலேயே
குடியேறினவர்களாகிய இரண்டு மூன்று பேர்வழிகளோடு
சந்திசெய்விக்கப்பட்டு அவர்களிடமிருந்து எல்லாச் செய்தி
களையும் அறிந்து கொண்டான். அவசியமாய்க் கையோடு
கொண்டுபோக வேண்டியவைகள் எவையென்றும், போய்
இறங்கியவுடன் நடந்துகொள்ள வேண்டியது எப்படியென்
றும் அவர்கள் நன்கு போதித்தார்கள். இதற்கும் மேலாக
இந்தக் கானடாவியாபாரிகள் கியூபெக்கில் இருக்கும் இங்கி
லீஷ்க்கார வர்த்தகர்களுக்குச் சிபார்சுக் கடிதங்கள் கொடுத்
தார்கள். இவர்களால் தகுந்த நிலத்தைப் பொறுக்கி வாங்கு
வதிலும், மேலக் கானடாவுக்கு ஏறிச் செல்வதிலும் மிகுதி
யானசகாயம் கிடைக்கக்கூடும். மூன்றுவாரங்களில் புறப்படப்
போகிற ஒருமரமேற்றும் கப்பலையும்ஆல்ப்ரெட்டு பரிசோதித்
துப் பார்த்துவிட்டு, அதற்குள்ளாகத் தாங்கள் பயணப்படத்
தயாராகிவிடும் பக்ஷத்தில்,அதில் ஏறிப்போகக்கூலி இன்னது
என்பதையும் பேசி முடித்துவிட்டான். இவைகளையெல்லாம்
தன் தகப்பனாருக்கு விவரமாக எழுதி அவருடைய விருப்
பத்தை அறியும் பொருட்டு ஆல்ப்ரெட்டு காத்திருந்தான்.

ஹென்றியும் ஆக்ஸ்போர்டுக்குச்சென்று, தன்னுடைய புராண கிரந்தங்களையும், மற்றைப் புத்தகங்களையும் விற்றுவிட்டு, தன் கணக்கு வழக்குகளையெல்லாம் ஒழுங்குசெய்துவிட்டு, மீந்த பணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். அவனுக்கிருந்த ஏக்கமெல்லாம் நீங்கி மனது தைரியப்பட்டிருந்ததோடு, அவனும் தன்தாய்தந்தையருக்கு மிகவும் உதவியாக இருந்தான்.

ஆல்ப்ரெட் தான் தலையிட்டுக்கொண்ட அலுவல்களையெல்லாம் அவ்வளவு சாமர்த்தியமாய் முடித்தபடியால், அவன் தகப்பனார், தாங்கள் அவனால் குறிக்கப்பட்ட கப்பலில் பயணம்போகத் தயாராகிவிடுவார்களாதலால் அதில் வேண்டிய அறைகளுக்குக் கையடித்துவிடலாமென்றும், கையோடு கொண்டுபோக வேண்டுமென்று சொல்லப்பட்ட சாமான்களையெல்லாம் உடனே வாங்கிவிடவும், பணத்துக்குச்சற்று அவர்கள் பொறுக்கமாட்டார்களென்றால் தமக்கு ஒரு உண்டியல் எழுதியனுப்பும்படிக்கும் எழுதினார். இரண்டு வாரங்களில் அவர்கள் எல்லாரும் தயாராகிவிட்டார்கள். அதற்கு முன்னதாகவே சாமான்களெல்லாம் கட்டைவண்டிகளில் ஏற்றியனுப்பப்பட்டுவிட்டன. மிஸ்டர் டக்ளஸ்காம்பெல்லுக்கு அவரால் பாராட்டப்பட்ட தயைக்கும் விசுவாசத்துக்கும் தம்முடைய வந்தனங்களைத் தந்தும், தாங்கள் வெக்ஸ்டன்ஹாலை மறுநாள் விட்டுப் புறப்படுவதைத் தெரிவித்தும் மிஸ்டர்காம்பெல் ஒரு கடிதம் எழுதினார். அவர் செய்துகொண்ட பிரார்த்தனை ஒன்றே; அஃதாவது, ஏழைகளின் படிப்பை ஆதரிக்கவேண்டியதவசியமாதலால், அந்தக்கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் நியமிக்கப் பெற்றிருந்த உபாத்தியாயரையும் உபாத்தியாயினியையும் வைத்து நடப்பிக்கவேண்டுமென்பதே. மிஸ்டர்டக்ளஸ்காம்பெல்லுக்குச்சமீபத்தில் கல்யாணமாயிற்றென்று வர்த்தமானப் பத்திரிகைகளிலிருந்து தெரிந்துகொண்டபடியால், மிஸிஸ்காம்பெல்லும் தாமும் அந்தத் தம்பதிகளுக்கு அளிக்க பூரணமான வாழ்த்துக்களையும் எழுதியனுப்பினார்கள்.



மறுநாட்காலையில் ஹால் வாசலுக்குக் கோச்சுவந்துவிட்டது. அதன் உட்பக்கம் முழுவதையும் வாடகைக்குப் பேசியிருந்ததால், அவர்கள் எல்லாரும் வண்டிக்குள்ஏறினார்கள். அப்போது குடியானவர்கள் அனைவரும், ஏழைஜனங்களுமாக, பரியாதையுடன் தொப்பியைக் கையில் எடுத்துக்கொண்டு சூழ்ந்துகொண்டார்கள். கோச்சுப் புறப்படவும் எல்லோரும் ஏகோபித்து, "வெற்றியே ஓங்குக; மங்களமே உண்டாகுக," என்று உரத்துக்கூறி ஆரவாரித்தனர்.

வண்டி வெகுவேகமாகச் சென்றது. வீடும் மறைந்துவிட்டது; சாலையும்மறைந்துவிட்டது. எல்லோருடையதொண்டையிலும்துக்கம்அடைந்துகொண்டிருந்தபடியால், ஒருவருக்கும் பேச வார்த்தை எழும்பவில்லை. இப்போது இக்குடும்பத்தாரின் குணாகுணங்களைப்பற்றிச்சற்று விவரித்துரைப்போம்.

மிஸ்டர்காம்பெல்லைஒருதர்மப்பிரபுஎன்றேசொல்லவேண்டும். அவர் மிகவும் சாத்துவீகர். அவருக்குப் புத்திக் குறைவில்லை. ஆயினும் அவர் தம்மைப்போல்தான் உலகம் எங்கும் என்று எல்லோரையும் யோக்கியர்கள் என நம்பிவிடுவார். ஆகையால் அவரை ஏய்த்துவிடுவது சுலபம். வீட்டுயோகக்ஷேமவிஷயங்களிலும் அவரது மனைவி வைத்ததே சட்டம். பிறரைக்கடிந்து ஒரு வார்த்தை சொல்லமாட்டார். குழந்தைகளைக் கண்டிப்பதென்றால் அவருக்கு மனம்வராது. ஆயினும் அந்த அம்மாள் வெகு சாமர்த்தியசாலியாதலால் குடித்தனம் வெகு கௌரவமாகவும் சிங்காரமாகவும் நடந்துவந்தது. மிஸ்டர் காம்பெல்லுக்கு இவள்ஒருஉற்றதுணைஎன்றேசொல்லவேண்டும். குழந்தைகளை மிகவும் கெடியுடன் கொண்டுவந்திருந்தமையால், அவர்களிடம் ஆண்டவனுக்கு அடுத்

தாற்போல் தாய்தந்தையரிடத்தில் பயமும் பக்தியும் பூர்ணமாய் விருத்தியாயிருந்தன. அந்தஅம்மாளைப் பரதேவதை என்றே சொல்லவேண்டும். கணவன்என்றால்அவளுக்குத் தைவம். ஆயினும் அவளுக்கு மனோதைரியமும்சமயோசிதமான யுக்திபுத்திக்கூர்மையும் மிகுதியாகவே அமைந்திருந்தமையால், எந்தச்சமயத்தில் எந்தஆபத்துஎந்தச்சம்பத்து நேர்ந்தாலும் மதிகலங்காமல் தற்சமயத்துக்கு உற்றபடி நடக்க வல்லமையுற்றவள்.

ஹென்றிக்கு வயது இருபது. அவன் தகப்பனைப்போல் சாது. முரட்டுத்தனமான வேலையொன்றுக்கும் அவனது தேகம் வணங்காதது. ஆனால் தகப்பனைப்போலவே மிகவும் யோக்கியன். ஆல்ப்ரெட்டையோ ஒருமுரட்டாத்மாஎன்று சொல்லவேண்டும். மனத்துணிச்சல் வெகுவாக உண்டு. எந்தவேலையும் அவனுக்கு லட்சியமன்று. மிகவும் உழைப்பாளி. ஒருவேலையைத் தொட்டானேயாகில் அதை முடித்தே தீருவான். அதிபுத்திமான். அதியுக்திமான். ஆயினும் மிகவும்தயாளமனமுள்ளவன். வெளிக்குமட்டும் ஏதோ முரட்டுத்தனமாகத் தோன்றுமேயல்லாது நெருங்கிப்பழகினால் பரோபகாரத்தில் ஊக்கமும் இளகினமனதும் வேறுயாருக்கும் அவ்வளவு கிடையாவென்றே விளங்கும்.

மேரிபர்ஸிவல் ஒரு சாதுப்பெண். அதிகமாகச் சளசளவென்று பேசமாட்டாள். தன் மாமன் மாமியின்பேரில் தன் பிராணனை வைத்திருந்தாள். அவளை ஒரு தங்கக்கம்பி என்றே சொல்லவேண்டும். அவள் தங்கையாகிய எம்மாபர்ஸிவலோ வீடுநிறைந்தபெண். வயது பதினைந்துதான் ஆயினும், அசக்கலும் திருப்பலும் பண்டும் பரியாஸமும் அவளிடம் மிகவும் ஜாஸ்தி. ஆயினும் தனதுமாமன் மாமி என்றால் அவளுக்குத் தைவம்.

மிஸ்டர் காம்பெல்லின் மூன்றாவது மகன் பர்ஸிவலுக்கு



இப்போது வயது பன்னிரண்டு. ஒரு சாதுவானபையன். அவனுக்கு ஊக்கம் மிகவும் அதிகம். ஒருதடவை சொன்னால் பிடித்துக் கொண்டுவிடுவான்.

தம்பி ஜானுக்கு வயது பத்து. அவன் பிடித்தால் பிடிதான், விடமாட்டான். ஆனால் பேச்சில் மிகவும் கணக்கு. படிப்பென்றால் அவனுக்கு விஷம். ஆனால் புஸ்தகத்தைத் தவிர சில்லறை வேலைகளில் அவன் மிகவும் சமர்த்தன். பார்வைக்கு ஒரு பேதையைப்போல இருப்பான்.

இனி, அடுத்தநாள் லிவர்பூலில் ஆல்ப்ரெட்டால் அமர்த்தப்பட்டுள்ள ஜாகைக்கு வந்துசேர்ந்தார்கள். சாமான்கள் எல்லாம் கப்பலில் ஏற்றப்பட்டுவிட்டன. கப்பலையும் நீரோட்டத்தில் கொணர்ந்தாய்விட்டது. அவர்களுக்குக் கரையில் அலுவல் ஏதுமில்லாததாலும், மாலுமியும் காற்றுக்கிளம்பியவுடன் புறப்பட்டுவிடவேண்டும்என்று கருதினதாலும், அவர்கள் வந்த நாலுநாளுக்கெல்லாம் கப்பலின்மேல் ஏறிவிட்டார்கள். புறப்படுவதற்கு முன்னமே வேண்டிய சில்லறை ஏற்பாடுகளையெல்லாம் அவர்கள் ஆல்ப்ரெட் மேற்பார்க்கச் செய்துகொண்டார்கள்.

## அத்தியாயம்—6.

"லண்டன் மர்ச்சண்டு" என்னும் பெயருள்ள அந்தக் கப்பல் பாய் விரித்து அயர்லாந்தில் கார்க் என்னும் துறைமுகம் போய்ச் சேர்ந்தது. ஏனென்றால் வட அமெரிக்காவுக்குப் போகும் வர்த்தகக் கப்பல்களைக் காக்கும்பொருட்டுள்ள போர்க்கப்பல்கள் கார்க்கில்தான் வந்துசேரும். பிரான்ஸு தேசத்தில் "ரெவலூஷன்" என்று சொல்லப்பட்ட கொடிய உள்நாட்டுக்கலகம் நடந்துகொண்டிருந்ததால், இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் மறுபடி சண்டையாரம்பித்துவிட்டது. கார்க்குக்கு வந்து சேர்ந்தவுடன் முதல்முதல் கடல்யாத்திரை செய்பவர்களைப் பிடிக்கும்

கடல் வியாதி அவர்களையும் பிடித்திருந்தும், அவர்கள் தேறினார்கள். அங்கே ஏற்கனவே நூற்றுக்கு அதிகமான வியாபாரக்கப்பல்கள் நங்கூரம் போடப்பட்டிருந்தன. இந்த வர்த்தகக்கப்பல்களைக் காக்கும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒரு பெரிய ஐம்பது பீரங்கிக் கப்பலுடைய உன்னதமான பாய்மரங்களும் [illegible]றும் இரண்டு சிறிய போர்க்கப்பல்களும் அலைகளின் [illegible]த்தியில் காணப்பட்டன.

இப்போர்க் கப்பல்களைக் கண்டவுடன் ஆல்ப்ரெட்டுக்கு மனம் நிலைகொள்ளவில்லை. "ஆகா! இக்கப்பல்களில் சென்று சத்துருக்களுடன் சண்டைசெய்து கீர்த்திபெற எனக்குக் கொடுத்துவைக்க இல்லையே! என்ஜன்மம் என்ன ஜன்மம். ஆயினும் என் தாய்தந்தையருக்கு உதவிசெய்வதேஇப்போது எனது கடமை. வீணாசையால் பயன் யாது?" என்று தனது மனக்குறையைத்தானே ஆற்றிக்கொண்டான். ஆயினும் மறக்கமுடியவில்லை.

அங்கே ஒரு சிறிய படகில் இருந்த ஒருவனை நோக்கி ஆல்ப்ரெட், "ஏனடா அப்பா! அந்த ஐம்பது பீரங்கிக் கப்பலின் பெயரென்ன?" என்றான்.

அந்த ஐரிஷ்காரன், "எந்தக் கப்பலுக்கு ஐம்பது துப்பாக்கிகள், எதற்கு நூறு, இருக்கின்றன வென்பது தெரியவராது; ஆனால் அந்த மூன்றுக்குள் பெரியதாக விருப்பதைப் பற்றியானால், அதன் பெயர் போர்ட்ஸ்மத், என்றான்.

"போர்ட்ஸ்மத்தா! அது தான் காப்ட்டின்லம்லி நியமிக்கப்பட்ட கப்பல். நான் அந்தக் கப்பலுக்கு உடனே போகவேண்டும்," என்றான் ஆல்ப்ரெட்.

ஆல்ப்ரெட் அந்த வர்த்தகக்கப்பலின்காப்ட்டின் இருந்த அறைக்கு உடனே இறங்கி ஓடி, தான் போர்க்கப்பலுக்குப் போகும் வண்ணம் அந்தச் சிறிய படகை இரவல்கொடுக்



கும்படி கேட்டான். அவரும் சரி என்றார். ஆல்ப்ரெட்
உடனேபோய்ப் போர்க்கப்பலின்மேல் ஏறிவிட்டான். கப்ப
லின் மேற்றட்டின்மேல் கூடியிருந்த சில பழைய தோழர்
களால் நன்கழைக்கப்பட்டுக்கொண்டாடப்பட்டான். அவர்
கள் எல்லோருக்கும் அவனிடத்து அவ்வளவு விசுவாசம்.
சற்றுக்கெல்லாம் காப்ட்டின் லம்லிக்குத்தெரியப்படுத்தவும்,
ஆல்ப்ரெட் உடனே அவருடைய அறைக்கு அழைக்கப்
பட்டான்.

"நல்லது, *மாஸ்டர் காம்பெல், கடைசியில் எங்க
ளோடு வந்து சேர்ந்து விட்டாய் போலும். போகிறது. நாள்
சென்றாலும் வந்துசேர்ந்தாயே, அது மேலானது. நீ வந்தது
சரியான சமயம். பரீக்ஷையும் தேறி, புரமோஷனும்
கிடைக்கும் தருணத்தில் இருக்கும்போது, உத்யோகத்தை
விட்டுவிடப்போகிறதாக ஏதோஎனக்கு நீஎழுதியிருந்தாயே
அது பிதற்றல். நீ கொஞ்சம் கிறுக்குக்கொண்டு எழுதினாய்
என்று நான் எண்ணினது சரி. அந்த எண்ணத்தை உன்
மனதில் உண்டாக்கியது யாதோ?" என்று காப்ட்டின்லம்லி
கேட்டார்.

அதற்கு ஆல்ப்ரெட், "என்பெற்றோர்க்கு நான் கடமை
ப்பட்டிருப்பதைத் தவிர வேறு யாதுமன்று. அப்படிச்
செய்ய என் மனதுக்கு மிகவும் துயரமாகத்தான் இருக்கி
றது; ஆனால் நான் வேறு விதம் செய்வது உசிதமாவென்று
தங்களையே தீர்மானிக்க வேண்டுகிறேன்," என்று பதில்
சொன்னான்.

பிறகு ஆல்ப்ரெட் தன் தாய் தந்தையர் செய்த தீர்மா
னத்தையும், அப்போது புதுச்சீமைக்குப் போக மரக்கப்ப
லில் ஏறியிருக்கிறார்கள் என்பதையும், எல்லாவற்றையும்
விவரமாகக் காப்ட்டின் லம்லியிடம் சொன்னான்.

*மாஸ்டர் காம்பெல்—இங்கே ஆல்ப்ரெட்டைக் குறிக்கின்றது

ஆல்ப்ரெட் சொன்னவற்றையெல்லாம் மத்தியில் தடுக்காமல் முடியக்கேட்டுச், சற்றுஆலோசித்து, காப்ட்டின்லம்லி “ என் பையனே, நீ செய்தது நியாயம். அஃது உன்னுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. நீ போகிற சீமையில் உன்மனோதைர்யமும் சாமர்த்தியமும் பெரிய காப்பாக இருக்கும். ஆயினும் சர்க்காருக்கு நீ கிட்டாதது குறைவுதான்,” என்று சொன்னார்.

அதற்கு ஆல்ப்ரெட் “ ஐயா, உண்மையாகச் சொல்லுகிறேன். எனக்கு மிகவும் துக்கமாகவே இருக்கிறது. ஆனாலும்—” சொல்லி முடிக்குமுன் காப்ட்டின் லம்லி ஆரம்பித்து, “ஆனாலும் பரோபகாரமாக நீ உன்னைப் பலிகொடுக்கிறாய்போலும். அதை நான் அறிவேன். உன் தாய்தந்தையர் தீர்மானமும் வியக்கத்தக்கதே. இம்மாதிரி செய்ய ஒருவருக்கும் துணியாது—அதுவும் ஸ்திரீகளுக்கோ? அவர்களை வந்து நேரில் தரிசனம் பண்ணுகிறேன். இன்னும் அரைமணிக்குள் தயாராகிவிடுவேன். நீயும் என்னுடன்வந்து அவர்களோடு என்னைச் சந்திசெய்து வைப்பாயாக. அதற்குள் நீபோய் உன்னுடைய பழைய தோழர்களைப் பார்க்கலாம்,” என்று சொன்னார்.

காப்ட்டின் லம்லியினுடைய விசுவாசத்தைக் கண்டு மனங் குளிர்ந்து, ஆல்ப்ரெட் அறையை விட்டுவந்து தன்னுடைய பழைய தோழர்களுடன் உல்லாசமாய்ச் சற்று நேரம் கழித்தான். உடனே காப்ட்டினுடைய படகோட்டிகளைக் கூப்பிடும் கொம்புச்சத்தம் கேட்க, தட்டுக்குமேல்வந்து, காப்ட்டினையும் மேலே வரக்கண்டதும், தன் படகுக்குள் சென்றான். காப்ட்டினும் பின்றொடர, அவ்விருவரும் சற்று நேரத்தில் லண்டன்மர்ச்சண்டின்மேல் ஏறிவிட்டார்கள். ஆல்ப்ரெட் காப்ட்டின் லம்லியைத் தன் தாய்தந்தையருக்கு அறிமுகம் செய்தான். அரைமணிநேரம் ஸல்லாபம் செய்



ததில் பரஸ்பரம் பற்றுதல் உண்டாகி, காப்ட்டின்லம்லி, “கானடாவுக்குத் தாங்கள்போய்ச் சேர்ந்தவுடன் தங்களுடைய குமாரனுடைய உதவி தங்களுக்கு மிகுதியாய்த் தேவையாயிருப்பினும், இந்தக் கப்பலில் அவனை விட்டுப் பிரிந்திருக்கத் தடையிராதென்று நம்புகிறேன். நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் யாதென்றால், சமயம் வரும்போது அலக்ஷியம் செய்யக்கூடாது. என்னுடைய ‡ லெப்டினண்டுகளில் ஒருவர் ஏதோ தம் குடும்ப அவசர நிமித்தம் வேலையைவிட்டுப்போக வேண்டுமாம். அவர் எனக்கு மனுப்பண்ணிக்கொண்டிருந்தும், இப்போது நாங்கள் புறப்படுகிற சமயமாயிருப்பதாலும், அவருக்குப் பதிலாகவேறொருவர் திடீரென்று அகப்படுவது அசாத்தியமென்பதையும் கருதி, மாட்டேனென்று சொல்வதுதான் உசிதமென்று சொல்லிவிட்டேன். ஆனால் இப்போது தங்களுடைய குமாரனை உத்தேசித்து, அவருக்கு உத்தரவு கொடுத்துவிடுகிறேன். தங்களுக்குச் சம்மதமானால் இப்போதே ஆல்ப்ரெட்டைப் போர்ட்ஸமத்துக்கு வரச்சொல்லுங்கள்; அவனை உடனே பதில் லெப்டினண்டாக நியமித்து விடுகிறேன். பிரயாணம் போய்க்கொண்டிருக்கையிலேயே எத்தனையோ சம்பவங்கள் நேரிடுவது மிகவும் ஸகஜம். அப்படியானால் அவனுக்குப் புரமோஷன் கிடைப்பது நிச்சயம். அம்மாதிரியொன்றும் ஸம்பவிக்காமற் போனால்கூட அவனுடைய ஆக்டிங்வேலையைக் காயம்செய்து விடுகிறேன். ஆனால் கியூபெக் போய்ச்சேர்ந்ததும் அவன் கப்பலைவிட்டு உங்களுடன் போகட்டும். அவன் தாய்தந்தையர்க்குப் பட்டிருக்கும் கடமையைத் தடுப்பது என்னுடைய கருத்தேயன்று; ஆனால் லெப்டினண்டு—அந்தஸ்து அவனுக்குக் காயமாகிவிட்டால், அவனுக்கு அரைச்சம்பளமும் கிடைக்கும்; உங்

‡ லெப்டினண்ட்—கப்பல் உத்யோகஸ்தரில் காப்ட்டினுக்கு அடுத்தபடியில் உள்ளவர்,

களுடன் கானடாவில் அவன் தங்கியிருக்கும்வரையில் அதுவும் பெரிய உதவியாக இருக்கும்; அதுவுமல்லாமல் கானடாவில் குடியேறினபிறகு வேளையும் போதும் ஒத்துக்கொண்டு உங்கள் காரியங்கள் எல்லாம் கைகூடி, இரண்டொரு வருஷத்துக்கெல்லாம் அவனையும் அபேக்ஷிக்காத நிலைமைக்கு வந்து, அவனும் உத்யோகத்துக்குத்திரும்பி வருவானானால் அதுவே அவனுக்குப் பெரிய லாபகரமான வழியாக இருப்பதுடன் சீக்கிரத்தில் ஒரு கப்பலினுடைய ஆட்சியின் ஹோதாவுக்கும் வந்துவிடுவான் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. இவையெல்லாவற்றையும் ஆராய்ந்து யோசித்துப் பாருங்கள். தாங்கள் தீர்மானம் செய்யநாளைவரையில் கெடுத் தருகிறேன். ஆல்ப்ரெட் காலையில் என் கப்பலுக்குவந்து சொல்லட்டும்,'' என்று சொன்னார்.

அதைக்கேட்டு மிஸிஸ்காம்பெல், ''காப்ட்டின்லம்லி, எனக்குத்தோன்றுகிறவரை என்கணவனுக்கு ஒரு விஷயத்தில்தான் தடை இருக்கக்கூடும்—அதாவது கப்பலில் யாத்திரை செய்யும்போது என் குழந்தையை விட்டுப்பிரிய எனக்குச் சம்மதமிருக்குமா என்பதுதான். நான் இப்போதே சொல்லிவிடுகிறேன். அவனை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமெனத் தங்களுக்கு இருக்கும் கருத்தை நான் நன்றியுடன் உணராமலும், அவன் முன்னுக்கு வருவதற்கு இடையூறாகவும், எனது சௌகரியத்தையே கருதி அவனை விடமாட்டேனென்று நான் தடைசெய்வேனானால், என்னைவிடக் கேவலமான ஸ்திரீயும் இருப்பாளோ? என்னைக்கேட்டால், மிஸ்டர்காம்பெல் யோசிக்க நாளைவரையில்கூட வேண்டுவதில்லை. ஆனால் அவர் வாயாலேயே சொல்லட்டும்,'' என்று சொன்னாள்.

''காப்ட்டின்லம்லி, வாஸ்தவத்தில் எனக்கும் என்ன தோன்றுகிறதோ அதையேதான்மிஸிஸ்காம்பெல்லும் சொல்



லியது; எங்களைப்பற்றினவரை தங்களுடைய கொடையை மிகவும் நன்றியுடன் அங்கீகரிக்கின்றோம்,'' என்றார் மிஸ்டர் காம்பெல்.

''அப்படியானால் நாளைக்காலையில் ஆல்ப்ரெட் போர்ட்ஸ்மத்துக் கப்பலுக்கு வருவதுதான் தாமதம், ஆக்டிங் உத்தரவு தயாராக இருக்கும். காலஸ்திதி அனுகூலமாய் இருக்குமானால் நாளைய மறுநாள் புறப்படலாமென்று உத்தேசம். ஆகையால் அதற்குள் தங்களைச் சந்திக்க எனக்கு முடியாமல்போனால் இப்போதே தங்களிடம் நான் சொல்லிக்கொள்ளலாமே. பயணம் போகையில் தங்கள் கப்பலின்மேல் ஒருகண்ணாக இருப்பேன். எவ்வாறானாலும் ஆல்ப்ரெட் இருப்பான் என்பது என் நிச்சயம்,'' என்று காப்ட்டின்லம்லி கூறினார்.

மிஸ்டர்காம்பெல்லோடும், மிஸிஸ்காம்பெல்லோடும் கைகுலுக்கிவிட்டு, மற்றவர்களுக்கும் தலைவணங்கிவிட்டு, காப்ட்டின்லம்லி கப்பலைவிட்டுப்போனார். அவர் கப்பலிலிருந்து இறங்கும்போது ஆல்ப்ரெடைநோக்கி, ''உங்கள் குடும்பத்தில் மனத்தை இழுக்கும் பொருள்களிருப்பதைக் கவனித்தேன். மனோரம்யமான உன்னுடைய இனிய அத்தைமகளிருவரும் கானடாக்காடுகளில்போய் வீணாக மடிந்துபோவார்களே என்று நினைக்க மிகவும் துக்கமாக இருக்கிறது. போகட்டும். காலையில் ஒன்பது மணிக்கு உன்னை நான் எதிர் பார்ப்பேன். போய்வருகிறேன்,'' என்றார் காப்ட்டின் லம்லி.

மறுநாள் காலையில் ஆல்ப்ரெட் போர்க்கப்பலுக்குவந்து சேர்ந்து, யாத்திரை துவக்கப்பெற்றது. துவக்கத்தில் விசேஷம் யாதும் நேரிடவில்லை. ஆனால் கடைசியாக நியூபவுண்டுலாண்டண்டை வரும்போது ப்ரென்சுக் கப்பல்கள்வந்து இவர்களைச்சூழ்ந்து கொண்டு பயங்கரமான ஒரு யுத்தம் நடந்தது. கடைசியாகப் பிரென்சுக்காரர்கள் தோல்வியடைந்து பறந்தோடிவிட்டார்கள். இதில் ஆல்ப்ரெடின் பராக்கிரமும் சா

மர்த்தியமுமே இங்க்லீஷ்க்காரரின் வெற்றிக்கு முக்கியகாரணம். சுபாவத்திலேயே அவன் ஒரு பெரிய வீரன். அதிலும் இப்போது தன் உயிர் நேயர்களாகிய தாய் தந்தை முதலியவர்களுக்கு அபாயம் வந்திருக்கும்போது கேட்கவும் வேண்டுமோ? ஆனல் இவன்மேல் எதிரிகளின் குண்டொன்று பாய்ந்து இடது புஜத்தில் காயம் செய்துவிட்டது. இதைப்பாராட்டாமலே சண்டை செய்திருக்கிறன்.

போர் நடக்கத்தொடங்கியபோதே லண்டன் மர்ச்சேண்டுக் கப்பலானது ப்ரெஞ்சுப் போர்க்கப்பலால் பிடிக்கப்பட்டிருந்தது. சண்டை முடிவில் இங்கிலீஷ்க்காரர்கள் வெற்றியடையவும், அதுவும் மீட்கப்பட்டுத் திரும்பிப் போர்ட்ஸ்மத்துப் போர்க்கப்பலண்டை வந்துசேர்ந்துவிட்டது. ஆல்ப்ரெடுக்கு என்ன கதி யாச்சுதோ என்று லண்டன் மர்ச்சண்டிலிருந்த காம்பெல்லர்களுக்கு மிகக்கவலையாக இருந்தமையால் தூரதிருஷ்டிக் கண்ணுடியைக்கொண்டு இவர்கள் போர்ட்ஸ்மத்துக் கப்பலை வெறிக்கப் பார்த்தார்கள். ஆல்ப்ரெட் மாத்திரம் திருஷ்டிக்கு அகப்படவில்லையே! ஈசுவரா! இவர்களுள்ளம் தபிக்கிறதே!

ஆல்ப்ரெடுக்கு ரண ஜனிகண்டு படுத்த படுக்கையாகக் கிடந்தபடியால் போர்க்கப்பலின் மேற்றட்டில் அவன் காணப்படவில்லை. அவன் எழுந்திருந்து மேலே வர இரண்டு மூன்றுநாளாயின. தன் பந்துக்களும் என்ன நிலைமையில் இருக்கிறர்களோவென்று ஆல்ப்ரெடுக்கும் கவலை மிகுதியாக இருந்தது. ஆகையால் இவர்களின் கவலையை நிவர்த்தி செய்யும் வண்ணம் காப்டின் லம்லி லண்டன் மர்ச்சண்டுக் கப்பலுடன் சங்கேதம் செய்து, ஆல்ப்ரெடின் க்ஷேமம் காம்பெல்லர்களுக்கும், அவர்களின் க்ஷேமம் ஆல்ப்ரெடுக்கும் தெரிவிக்கப்பட்டன. ஆயினும் ஆல்ப்ரெடைப் போர்க்கப்பலின் மேற்றட்டில் தூரதிருஷ்டிக் கண்ணுடியால் நேரில்



பார்த்தபிறகுதான் அவர்களுக்கு உள்ளூர இருந்த கவலை தெளிந்தது. அதிலும் எம்மாவுக்கு அப்போதுதான் சித்தம் சுவாதீனத்திற்கு வந்தது.

கடல்யாத்திரையும் வேறு விசேஷ சம்பவங்களின்றி மூன்று வாரங்களில் முடிவு பெற்று, கியூபெக்கு டவுனுக்கெதிரில் நங்கூரம் பாய்ச்சப்பட்டது.

ஆல்ப்ரெடுக்குக் காயம்பட்டதும் அநேக காரியங்களுக்குச்சாதகமாக இருந்தது. அவனுடைய கீர்த்தி எங்கும் பரவிற்று. காயம் ஆறும்வரையில் ராஜாக்கிடைக்குமாதலால், அரைச் சம்பளத்தில் வேண்டிய காலத்தை உத்தியோக நிர்ப்பந்தமின்றி, தனது தாய்தந்தைமாரிடமே வசித்து, உதவி செய்துகொண்டு கழிக்கலாம். அப்போது அரைச்சம்பளம் வந்துகொண்டேயும் இருக்கும். இவ்வளவு தூரம் இவர்களுக்கு உதவி புரிந்தவர் காப்டின்லம்லி என்ற மகானுபாவர்! வந்துசேர்ந்த மறுநாள்காலையில் காப்டின்லம்லி க்யூபெக்குக் கவர்னர் துரையவர்களைக் காணச்செல்லும்போது காம்பெல்லர்களைப்பார்த்து க்ஷேமம் விசாரிப்பதற்காக லண்டன் மர்ச் சண்டுக்கு வந்து சேர்ந்த உடனே எல்லோரும் அவரை ஆதரவுடன் எதிர்கொண்டழைத்து, "தாங்கள் செய்த உபகாரத்தை மறக்கமாட்டோம்" என்று சூழ்ந்துகொண்டார்கள்.

ஆபத்துக்காலத்தில் கடவுளால் கிருபை கூர்ந்தனுப்பப்பெற்ற பந்து அல்லவோ தாங்கள் என்றுள் மிஸிஸ்காம்பெல்.

"அம்மா! இதற்கெல்லாம் காரணம் தங்களுடைய அரிய குமாரன் ஆல்ப்ரெடே," என்றுர் காப்டின் லம்லி.

கியூபெக்குக்கு வந்து நங்கூரம் பாய்ச்சிய பிறகு ஆல்ப்ரெட் உத்தரவு பெற்றுக்கொண்டு லண்டன் மர்ச்சண்டுக் கப்பலுக்கு வந்தேறவும், அப்போதுதான் முதல் முதல் அவன் சண்டையில் காயப்பட்டிருந்தான் என்று அவனுடைய பந்துக்களுக்குத் தெரிய வந்தது. அவனுடைய கை

இன்னும் * கவணில் தான் இருந்தாலும் விரைவில் ஆறிக்கொண்டு வந்தது.

அடுத்த நாள் அந்தக் குடும்பம் கப்பலிலிருந்து இறங்கி அட்மிரல் டிஹௌஸ் என்னும் கட்டிடத்தில் தங்கிற்று. மிஸ்டர் பர்குஹார் என்பவர் ஒருபெண் வேலைக்காரியை அமர்த்திக் கொடுத்தார். ஏற்கனவே வீட்டைக்காத்துக்கொண்டு ஓர் ஆளும் அவனுடைய மனைவியும் இருந்தார்கள். ஆகையால் இட்டவேலையைச் செய்ய இம்மூவரும் ஏற்பட்டார்கள். மிஸிஸ் காம்பெல் பயணக்கூலியைக் கணக்குப்பார்த்துக் காப்டின் வில்ஸனிடம் கொடுத்துவிட்டாள். ஆனால் ஆல்ப்ரெட் அந்தக்கப்பலில் யாத்திரை செய்யாததை முன்னிட்டு அவர் பெருந்தன்மையாக அவனுக்காக ஏற்பட்ட வாடகையை வாங்கிக்கொள்ளச்சம்மதிக்கவில்லை. ஆயினும், தமக்கு ஒழிந்தபோதெல்லாம் அவர்களுடைய ஜாகைக்கு வரவேண்டுமென்று அவர்களால் செய்யப்பட்ட வேண்டுகோளுக்குத் தமது சம்மதத்தைத் தந்துவிட்டு, அவர் விடைபெற்றுச் சென்றார். அவர்கள் தங்களுடைய புதுஜாகையில் தனியாகக்காலம் கழித்துவந்தனர். அட்மிரல் டிஹௌஸில் அவர்களுக்கு ஜாகை ஸௌக்கியமாக ஏற்பட்டு விட்டாலும் அவசியமாக வேண்டிய நாளுக்குமேல் அங்கே தங்கியிருக்கவேண்டுமென்று அவர்கள் எண்ணவில்லை. ஏனெனில், ஜாகை ஸௌக்கியமானாலும் கியூபெக்கில் செலவு அதிகமாய்க்கொண்டிருந்தது; மிஸ்டர் காம்பெல்லுக்குத் தம்கையில் வீசிச் செலவு செய்வதற்குப் பணமில்லையென்று நன்கு தெரியும்.

காப்டின் லம்லி இவர்கள் விஷயமாக அவ்வளவு கவலையெடுத்துக்கொண்டிருந்தமையால், கவர்னர் துரையும் அவர்களின்மேல் தயைகூர்ந்து ஆதரவு கொள்ளலானார்.

* கவண்—மார்பில் குறுக்காகத் தொங்க விடப்படும் பட்டை.



## அத்தியாயம்—7.

மறுநாள் கவர்னர்துரை தம்மை வந்து பார்க்கும்படி மிஸ்டர் காம்பெல்லுக்குச் சொல்லியனுப்பினார். அவர்கள் இருவரும் அப்படியே ஸந்திக்க, மிஸ்டர் காம்பெல்லுடைய உத்தேசப் பிரகாரம் மேலக்கானடாவில் குடியேறுவதில் மிகுந்த கஷ்டங்களும் துர்த்தசைகளும் ஏற்படும் என்பதைக் கவர்னர்துரை நன்கெடுத்துக்கூறினார். ஆனால் அவரைத் தடுத்துவிடவேண்டுமெனக் கருதி அவர் சொல்லவில்லை; ஏனெனில் அதைவிடச்சிலாக்கியமானதொன்றும் தமக்குத் தெரியவில்லை; ஆயினும் முந்தியே எச்சரிக்கை செய்தால் எல்லாவற்றிற்கும் தயாராயிருப்பார்கள் என்கிற கருத்துடன் சொல்லவந்தது.

"மிஸ்டர் காம்பெல், தங்களைப்போல் மேலாகப்பயின்று உயர்வான அந்தஸ்துடன் வாழ்ந்து, தைவ வசத்தால் தாழ்வை அடைந்த எந்த இங்கிலீஷ்க்குடும்பத்தார் விஷயத்திலும் எனக்கு ஊக்கமும் கவலையும் இயற்கையாகவே மிகுந்திருப்பதுடன், தங்கள் விஷயமாக என்னுடைய பழைய நண்பராகிய காப்டின் லம்லியும் எடுத்துக்கொண்டிருக்கிற சிரத்தையையும் கவலையையும் பார்க்கும்போது தங்களுக்காக என்னால் எவ்வளவு செய்யச் சாத்தியப்படுமோ அவ்வளவையும் செய்வதில் யாதொரு தவக்கமும் இராது. தாங்கள் கொஞ்சமேனும் சந்தேகங்கொள்ள வேண்டாம். ஸர்வேயர் ஜெனரல் க்ஷணத்துக்குள் இங்கேவருவார். வந்தவுடன் தங்களை அவரிடம் சந்தி செய்விக்கவேண்டும்; ஏனென்றால் நிலம் கிடைப்பது அவரிடமிருந்தே; எந்த இலக்குச் சிலாக்கியம் என்பதைப்பற்றி அவரும் தடையில்லாமல் தங்களுக்குச் சொல்லக்கூடும்: ஆனால் சில விஷயங்கள் உங்கள் ஞாபகத்தில் நன்கு இருக்கவேண்டியன:—அவையாவன:—இந்த மாகாணங்கள் கிரேட் பிரிட்டனுக்கு வசப்பட்டு முப்பது வரு

ஷங்களுக்குமேல் ஆகவில்லை; அதற்குமுந்தி இவைகள் ப்ரெஞ்சுக்காரரின் அனுபோகத்தில் இருந்தமையால் அவர்கள் இங்கிலீஷ்க்காரருடன் மிகவும் த்வேஷம் பாராட்டுபவராயிருக்கின்றனர்; அப்படியேதான் இந்தியர்களும்,—ஏனெனில் முந்தியும் சரி, இப்போதும்சரி, அவர்கள் பிரஞ்சுக்காரருடன் இணைபூண்டிருப்பதால் நம்மிடத்தில் வெறுப்புற்றிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பற்றிச்சிந்தித்துக்கொண்டே இருக்கிறேன். உங்களுக்கு ஏதாவது என்னால் உதவி செய்ய முடியுமென்றே நம்புகிறேன். அப்படிச்செய்ய முடியாமற்போனால், எனக்கு மனமில்லையென்று நீங்கள் நினையாதீர்கள். உங்களை உத்தேசித்து எவ்வளவு சௌகரியம் செய்து கொடுத்தாலும், கைவலிமையும் மனவலிமையும் இருந்தால் அல்லாமல் ஒன்றும் நிறைவேறாது. தங்கள் குமாரன் ஆல்ப்ரெடால் தங்களுக்குப்பெரிய உதவிதான். ஆயினும் நம்பிக்கைக்கு ஏற்ற வேறு உதவியையும் சம்பாதிக்க முயலுவோம்" என்று கவர்னர் துரை சொன்னார்.

பிறகு தமக்கும் கவர்னர் துரைக்கும் நடந்த பேச்சிலிருந்து மிஸ்டர் காம்பெல் அனேக சமாசாரங்களைத் தெரிந்துகொண்டார். அதற்குள் ஸர்வேயர் ஜனரலும் வந்து சேர, முறைப்படி சந்தி செய்விக்கப்பெற்ற பிறகு, நில விஷயமான பேச்சு மறுபடியும் தொடங்கப்பட்டது.

ஸர்வேயர் ஜனரல் சொல்லியதாவது—"ஒண்டேரியோ ஏரிக்கு இப்பால் கவர்ன்மெண்டுக்கு என்று தனிமையாக விலக்கி வைக்கப்பட்டிருக்கிற நிலத்தில் ஒரு பாகத்தைக் கொடுக்கத் தடையில்லையானால், அதைத்தான் நான்மிஸ்டர் காம்பெல்லுக்குச் சிபார்சு செய்வேன். மாண்ட்ரீலுக்கு இதையும்விடக் கிட்டின நிலங்கள் உள. ஆனால் அவற்றில் நல்லனவெல்லாம் விற்றுவிடப்பட்டன. மிஸ்டர் காம்பெல்! இது உங்களுக்கு ஏற்றதாயிருக்கும், ஏனெனில் இதில் தானே வளர்ந்த புல்லடர்ந்த ப்ரேரி என்று சொல்லப்படுகிற சில



ஏகர் நிலங்கள் இருக்கின்றன. மேலும் இதன் ஒரு பக்கமானது ஏரிகரையோடு வெகுதூரம் ஓடுவதுடன், மற்றொரு பக்கத்தில் ஒரு சிறிய ஆறு இருக்கிறது. அதோடுகூட, இதற்கும் ப்ராண்டினக் கோட்டைக்கும் வெகுசமீபம்; ஆதலால் உதவி வேண்டியிருந்தால் உடனே தருவித்துக்கொள்ளலாம்" இவ்வாறு சொல்லிவிட்டு ஸர்வேயர் ஜனரல் படத்தில்(Map)ஓர் இடத்தைத் தொட்டுக்காட்டினார். அதற்குக் கவர்னர், "நீர் சொல்வதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் ஆற்றுக்கு அக்கரையில் ஏற்கனவே ஒரு குடித்தனக்காரர் இருப்பதாகத் தெரிகிறதே," என்றார்.

அதற்கு ஸர்வேயர் ஜனரல், "ஆம் ஐயா! கவர்ன்மெண்டு உபயோகத்திற்காக மிச்சத்தை விலக்குவதற்கு முன்னமேயே அந்தத்துண்டு கொடுபட்டுப்போய் விட்டது. இந்த நிலம் பிலாக்கியமென்பதற்கு ருஜு வேண்டுமானால், இதை எடுத்துக்கொண்டது யாரென்று பார்த்தாலே விளங்கும். நான்கு வருஷங்களுக்கு முன் மலாச்சிபோன் என்ற கிழவனால் பொறுக்கி எடுக்கப்பட்டது. அதில் அவன் போய்ச்சுற்றிப்பார்க்காதவிடம் கிடையாது. ஆகையினால் அதனுடைய கிறமைகள் அவனுக்கு நன்றாய்த்தெரியும். அந்த மனிதன் யாரென்று தங்களுக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா,ஐயா கியூபெக்குக் கைவசமாகுமுன் அவன் இங்கிலீஷ்ச் சேனைக்கு த்துப்புக்காரனாக விருந்தான். ஜெனரல் உல்புக்கு அவன் பேரில் நல்ல அபிப்பிராயம் இருந்ததாலும், அவனும் மிகுதியாக உதவி செய்தபடியாலும், இந்த நாற்றைம்பது ஏகர் அடங்கிய துண்டு நிலமானது அவனுக்களிக்கப் பட்டது" என்று சொன்னார்.

"இப்போது என்ஞாபகத்துக்கு வந்துவிட்டது. ஆனால் அவன் இத்துணைவருஷங்களாக என் கண்ணில் படாததால்

நான் அவனை மறந்துவிட்டேன் போலும்,” என்றார் கவர்னர்.

கவர்னர் மிஸ்டர் காம்பெல்லை நோக்கி, “இந்த ஆள் அயலிலிருப்பது உமக்கு மிகவும் உதவியாகவிருக்கும்,” என்று சொல்லிவிட்டு, பிறகு ஸர்வேயர் ஜெனரலை நோக்கி, “நம்பிக்கைக்குப் பாத்திரமாயுள்ள யாராவது மிஸ்டர் காம்பெல்லுக்குள் வேலைபார்க்கச் சம்மதப்படக்கூடியவரை உமக்குத் தெரியுமா? ஆனால் அவருக்கு இந்தப் பிராந்தியங்களெல்லாம் நன்றாய்த்தெரிந்து, அவரால் உண்மையில் உதவியுண்டாகக் கூடிய வழியிருக்கவேண்டும்,” என்று சொன்னார்.

“ஆம், ஐயா, எனக்குத்தெரிந்த ஒரு தகுதியான பேர்வழி இருக்கிறான். அவனைத் தாங்களும் அறிவீர்கள்; ஆனால் தங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடியது அவனது கெட்ட அம்சமே: ஏனெனில், அவன் தங்கள் முன்வர நேரிட்ட போதெல்லாம் சங்கடத்திலேயே அகப்பட்டுக்கொண்டிருப்பவன்,” என்றார் ஸர்வேயர் ஜெனரல்.

“யார் அவன்?” என்றார் கவர்னர்.

“வேட்டைக்காரன் மார்டின் கூபர்.”

“அவனா? எப்போதும் சச்சரவு செய்யும்பயல் ஒருவன் இருக்கிறானே, அவன் தானே? ஒரு கலகத்தில் சம்பந்தப்பட்டு இப்போதுகூடச் சிறையிலிருப்பதாக என் ஞாபகம்; அல்லவா? என்றார் கவர்னர்.”

“அவன்தான், ஐயா! ஆனால் கியூபெக்குக்கு வந்தபோது மட்டும் சண்டை வளர்க்கிறவனே அல்லாமல், டவுனுக்கு வெளியே சென்றுவிட்டால் அவனைத் தங்கக்கட்டி என்றே சொல்லவேண்டும். மிஸ்டர் காம்பெல், என்ன இப்படி அடங்காப்பிடாரியான ஒருவனைச் சிபார்சு செய்கிறானே என நினைப்பீர்களோ? வாஸ்தவ சமாசாரத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள்: இந்த வேட்டைக்காரர்கள் மிருகங்களைத் தோலுக்காக வேட்டையாடி மாதக்கணக்காகக் காட்டுப்பிரதேசங்களில் அலைந்து திரிந்துவிட்டுத் தோல்களை மூட்டைகளாகக் கட்டிக்கொண்டு வந்து இந்த டவுனில் வர்த்தகரிடம் விற்பனை செய்வார்கள்; பணத்தைக் கையில் கண்டார்களோ இல்லையோ, உடனே தங்கு தடையின்றிப் பலவிதமான களியாட்டங்களில் தங்களுடைய சம்பாத்தியத்தை முற்றிலும் தொலைத்து அழித்துவிட்டுத்திரும்பவும் காட்டிற்குள் துணிச்சலுடன் புகுந்து வேட்டைக்குஆரம்பிப்பார்கள். மார்ட்டின் கூபரும் ஒரு வேட்டைக் காரனல்லவா? திரும்பி டவுனுக்கு வந்ததும் விளையாடவேண்டாமா? சுபாவத்திலேயே அவன் முரட்டுப்பயல்; அதிலும் குடிவெறி கொண்டால் சங்கடங்களுள் மாட்டிக்கொள்ளக்கேட்கவும் வேண்டுமா? அதனால்தான் சிலவேளையில் கலகம் செய்ததற்காகச் சிறையில் போட்டுவிடுகிறார்கள். ஆனால்நான் அவனுடைய குணம்சங்களை நன்கு அறிவேன். மாதக்கணக்காகஎன்னுடன் ஸர்வே வேலை செய்திருக்கிறான்; அலுவலில்ஏற்பட்டிருக்கும்போது அவனைக்காட்டிலும் ஒழுங்குற்றவனும்துணிச்சலுடன் வேலை பார்ப்பவனும் எனக்குத் தெரிந்தவரையிவில்லை,” என்று ஸர்வேயர் ஜெனரல் சொன்னார்.

அதைக்கேட்டுக் கவர்னர்துரை, “அவனை நீர் சிபார்சு செய்வது சரியென்று எனக்குத்தோன்றுகிறது. அவனுக்கும் ஜெயிலைவிட்டு வெளியில் வருவதில் வருத்தமொன்றும் இருக்காது.” என்று சொல்லிவிட்டுப் பிறகு மிஸ்டர் காம்பெல்லை நோக்கி, “அவன் மட்டும் சம்மதித்து உங்களுக்குள் வேலை செய்ய வந்துவிட்டால் அவனுடைய நடத்தை ஓரிரண்டு வருஷத்தில் ஒழுங்கு பட்டுவிடு மென்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. கனேடியரைப் பற்றியோ வென்றால், அவர்களால் இடைஞ்சலு மிருக்காது, உதவியும் இருக்காது. இதில் தவறுதல் உண்டுதான்: ஆயினும், பொதுவாக அவர்கள் சுறுசுறுப்புக்காவது தைரியத்துக்காவது பேர்போன

வர்கள் அல்லர். நான் முந்தியே சொன்னவாறு நெஞ்சத் துணிவுள்ள மனிதர்கள் உங்களுக்கு வேண்டியிருக்கும். அதற்கேற்றவன் மார்ட்டின் சூபர் என்பதில் சந்தேகமில்லை,' என்று சொல்லிவிட்டு, மறுபடியும் ஸர்வேயர் ஜெனரலை நோக்கி, "நீர் இதை மிஸ்டர் காம்பெல்லுக்காக ஏற்பாடுபண்ணக்கூடுமே?" என்று முடித்தார்.

ஸர்வேயர் ஜெனரலும் அப்படியே செய்வதாக வாக்களித்தார். சற்று நேரத்திற்கெல்லாம் மிஸ்டர்காம்பெல் அநேக வந்தனங்களுடன் கவர்னரிடம் விடை பெற்றுச் சென்றார்.

வந்திறங்கினநாலாவது நாள்காப்ட்டின்லம்லி புறப்பட்டுப் போகலானார். விடைபெறும் தருணத்தில் காப்ட்டின் லம்லிக்கும் காம்பெல்லர்களுக்கும் நடந்தசல்லாபம் எவ்வளவு உருக்கத்தைச் செய்யக்கூடியதாக இருந்தது என்று கூறவும் வேண்டுமோ!

## அத்தியாயம்—9.

தங்களுடைய புதிய ஸ்தலத்தை நோக்கிப் புறப்படுவதற்குமுன், கியூபெக்கிலேயே அகப்பட்ட உடுப்பு முதலியவைகளைச் சேகரம் செய்துகொண்டு, அங்கேபோய்ச் சேர்வதற்கு வாகனங்களுக்கு என்ன செய்வது என்று ஆலோசனை செய்துகொண்டிருக்கும்போது, கவர்னர் துரையிடமிருந்து ஒரு க்ஷேமசமாசாரம் வந்தது. இன்னும் பத்துத் தினங்களுக்குள் ப்ராண்டிஞக்கோட்டைக்குச் சில போர்வீரர்களைப் படகில் ஏற்றி அனுப்பப்போவதாயும், மிஸ்டர் காம்பெல் அந்தப்படகுகளிலேயே சாமான்களைப் போட்டுக்கொண்டு போகலாமென்றும் கவர்னர்துரை செய்தி சொல்லியனுப்பினர். இந்த ஏற்பாட்டால் துணைக்குத் துணையும் கிடைத்தது, செலவும் லாபமாயிற்று.

அடுத்த நாள் வேட்டைக்காரனை;மார்ட்டின் சூபரைக் கூட்டிக்கொண்டு ஸர்வேயர் ஜெனரல் வந்துசேர்ந்தார்.



"மிஸ்டர் காம்பெல், இவன்தான் எங்கள்மார்ட்டின்சூபர்; நானவனுடன் பேசியிருக்கிறேன்; அவனும் இப்போது ஒரு வருஷத்திற்குத் தங்களுக்குள் இருப்பதாகவும், பிறகு பிடித்திருந்தால் தொடர்ந்திருப்பதாகவும் சம்மதித்திருக்கிறான். நான் இந்தப் பக்கங்களிலெல்லாம் சுற்றும்போது அவன் எனக்குதவி புரிந்ததுபோல உங்களுக்கும் உதவியாயிருப்பானானால், அவன் உங்களுக்கு ஓர் அரிய வேலைக்காரனாகவிருப்பான் என்பதில் எனக்குச்சந்தேகமே இல்லை,'' என்று சொன்னார் ஸர்வேயர் ஜெனரல்.

மார்ட்டின் சூபர் பார்வைக்கு நெடியவனாகவும் தீர்க்காங்களுள்ளவனாகவும் தோன்றினான். சுறுசுறுப்புக்கும் வலிமைக்கும் குறைவில்லாதவன். அவனுடைய தலை சாதாரணமாக இல்லாமல் சிறியதாயிருந்ததால், அவனுடைய உடம்பு பதர் போல் விரைவாகப் பறக்கும்போலும். அவனுடைய முகம் பிரசன்னமாகவே இருந்ததால், அவன் எப்போதும் கடுகடுக்கவேமாட்டான் போலும். வாஸ்தவமாகவே அவனுக்கு முஞ்சியைத் தூக்கவே தெரியாது. அவன் தரித்திருந்த உடுப்புக்களோ—மான்தோலில் சட்டையும், நீலத்துணியில் ஒரு காற்சராயும், கீரிப்பிள்ளைத் தோலில் குல்லாயும் இடையைச்சுற்றி அகலமான பெல்டும் தான். இதில் அவனுடைய வேட்டைக்கத்தி சொருகப்பட்டிருந்தது.

"இதோபார், மார்ட்டின்சூபர்; உனக்கும் மிஸ்டர் காம்பெல்லுக்கும் ஏற்படப்போகிற உடன்படிக்கையை வாசிக்கிறேன். உற்றுக்கேட்டு எல்லாம் உன்னிஷ்டம் போலிருக்கின்றனவாவென்று கவனி;'' என்று சொல்லிக்கொண்டு, ஸர்வேயர் ஜெனரல் பத்திரத்தைப் படிக்கவும், மார்ட்டின்சூபரும் அங்கீகரித்ததற்கு அடையாளமாகத் தலையை யசைத்தான்.

மிஸ்டர் காம்பெல்லை நோக்கி, "தங்களுக்கும் திருப்தியானால் தாங்கள் கையெழுத்துப் போடலாம்; மார்ட்டினும்

அப்படியே செய்வான்," என்று ஸர்வேயர் ஜெனரல் சொன்னார்.

மிஸ்டர் காம்பெல்கையெழுத்தைப்போட்டுப் பேனாவை மார்ட்டின்சூபர்கையில் கொடுக்கவும், அவன் அப்போதுதான் முதல்முதல் வாயைத்திறந்து, "ஸர்வேயரே! என் பெயருக்கு எப்படி எழுத்துக் கூட்டுவதென்று தெரியாது. அப்படித் தெரிந்தாலும் அதை எழுதவும் தெரியாது. ஆகையால் இந்தியர் வழக்கப்படி என்னுடைய † டோடத்தைப் போடலாமா?" என்றான்.

"இந்தியர்களுக்குள் உன்பெயர்க்குறி யாது?" என்றார் ஸர்வேயர் ஜெனரல்.

"பெய்ண்டர்," என்று சொல்லிக்கொண்டு மிஸ்டர் காம்பெல்லின் கையெழுத்தின்கீழே இதைப் போன்ற உருவமொன்றை எழுதிவிட்டு,



"அதுதான் என் பெயர். எனக்குத்தெரிந்தவரையில் போட்டிருக்கிறேன்," என்றான் மார்ட்டின்.

"மிகவும் நல்லது, மிஸ்டர் காம்பெல்; பத்திரம் ஒழுங்காய்ப் பூர்த்தியாகிவிட்டது. பெருமாட்டிகளே! நானிதோ ஓடவேண்டும். ஏனெனில் அவசரமான வேலையொன்றிருக்கிறது. மிஸ்டர் காம்பெல், மார்ட்டின் சூபரை விட்டுவிட்டுப் போகிறேன். ஏனெனில் நீங்களிருவரும் சேர்ந்து கொஞ்சம் சம்பாஷணை செய்ய விரும்பலாம்," என்று சொல்லிவிட்டு ஸர்வேயர் ஜெனரல் விடைபெற்றுச் செல்லவும், மார்ட்டின் சூபர் மட்டும் தங்கியிருந்தான்.

மிஸிஸ் காம்பெல் முதலில் பேசத்தொடங்கி, "சூபர்! நாமெல்லோரும் ஸ்நேஹத்துடன் வாழ்வோமென்று நினைக்கி

† டோடம்—அமெரிக்காவிலிருந்த இந்தியர்கள் தம்முள் ஒருவரை ஒருவர் சுலபமாய் அழைக்க ஏற்படுத்திக்கொண்ட குறியீடு



றேன். நீ என்னவோ சொன்னாயே-டோடம் என்று என்காதில் விழுந்தது; அப்படியென்றால் என்ன அர்த்தம்?' என்றாள்.

"அதுவா? டோடம் என்பது ஓர் இந்தியனுடைய பெயர்க்குறி. நானும் அநேகமாய் ஓர் இந்தியனாகவே ஆய்விட்டேனல்லவா? ஒவ்வொரு இந்தியத்தலைவருக்கும் டோடமுண்டு. ஒருவனுக்குப்பெயர் "பெரியகரடி", மற்றொருவனுக்குப் "பாம்பு", என்று பெயர்; இம்மாதிரியேதான்; ஆகையினால் அவரவர் போடும்கையெழுத்து அவரவருடைய பெயர்களைக் காட்டும் பிராணியின் உருவம். இப்படி இருக்க, அவர்களுடன் திரிகிற என்னைப்போன்ற வேட்டைக்காரர்களுக்கும் பலவிதமான பெயர்கள் இடப்பட்டன. எனக்குப் பெய்ண்டர் எனப்பெயர் இடப்பட்டிருக்கிறது," என்றான் மார்ட்டின்.

"உனக்கு ஏன் பெய்ண்டர் என்கிற பெயரிட்டிருக்கிறார்கள்?"

"ஏனென்றால் ஒரேநாளில் நான் இரண்டு பெய்ண்டர்களைக்கொன்றேன்".

"இரண்டு பெய்ண்டர்களைக் * கொன்றாயா!" என்று பெண்களும் திகைப்புடன் கூறினார்கள்.

"ஆம், அம்மணி: அவை இரண்டையும் என் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டேன்" என்றான்.

"ஆனால் அந்த மனிதர்களை ஏன் கொல்லவேண்டும்? போர்க்களத்திலா கொன்றாய்?" என்றாள் எம்மா.

"மனிதர்களைக் கொல்வதா? அம்மணி, நான் மனிதர்களைப்பற்றி யாதும் சொல்லவில்லையே! நான் இரண்டு பெய்ண்டர்களைக் கொன்றதாகச் சொன்னேன்," என்று சொல்லிக்கொண்டு மார்ட்டின் நகைத்தான்: சிரிக்கும்போது வெளிப்பட்ட தந்தம்போன்ற பற்களின் வரிசை என்ன அழகாயிருந்தது!

* இங்கிலீஷில் பெய்ண்டர் என்றால் சித்திர வேலைக்காரன்.

"அப்போது, பெய்ண்டர் என்றால் என்ன பொருள், கூபர்?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"தெரியாதா? அது ஒரு பிராணி, சில வேளைகளில் கொடிய தொந்தரவைக் கொடுக்கக் கூடியதென்றே நான் சொல்வேன்," என்றான் கூபர்.

"இந்த உருவப்படம் ஒரு பாந்தரை (Panther)ப் போலிருக்கிறது, அம்மா!" என்றாள் மேரி.

"நல்லது அம்மணி, அது ஒரு பாந்தராக இருக்கலாம். ஆனால் மற்றொரு பெயரைச் சொன்னால்தான் எங்களுக்கு விளங்கும்", என்றான் கூபர்.

மிஸ்டர் பர்குஹார் அப்போது வந்துசேரவும், இந்தத் தர்க்கத்தை அவரிடம் ஒப்புவித்தனர். அவர் நகைத்துக் கொண்டு, "பெய்ண்டர் என்பது ஒரு வகைப் பாந்தர், (வேங்கை); தோல் செங்கல்லைப் போல் மங்கல் வர்ணமாயிருக்கும், ஆனால் புள்ளியிராது. அது சில வேளைகளில் மிகவும் அபாயகரமானது," என்று சொன்னார்.

ஹென்றி, கூபரை நோக்கி, "நாம் போகப்போகிறோமே அந்தப் பிராந்தியம் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"ஆம், அந்த விடத்தில் மாதக்கணக்காக நான் பொறி வைத்ததுண்டு; ஆனால் இப்போது அங்கே நீர்நாய்கள் அரிதாய்ப் போய்விட்டன."

"அங்கே வேறே ஏதாவது பிராணிகளுண்டா?"

"ஆம், அவைகளைச் சில்லரை வேட்டம் என நாங்கள் சொல்வது," என்றான் மார்ட்டின்.

"அவை எவ்வகையானவை?"

"அவை தாமே? வேங்கை, கரடி, மலைப்பூனை—இவைகளெல்லாம் உண்டு"

"என்சாமி! அவைதாமா உங்களுக்குச் சில்லரை வேட்டம்? அப்படியானால் பெரிய வேட்டம் எப்படியிருக்குமோ?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.



"தாயே! காட்டெருமைகள்தான் எங்களுக்குப்பெரிய வேட்டம்."

"கூபர், ஆனால் நீ சொல்லுகிற பிராணிகள் சாப்பிடுவதற்கு லாயக்கல்லவே. நாம் சாப்பிடக்கூடிய வேட்டை மிருகம் கிடையாதோ?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"ஓ! இருக்கிறது. மானும் காட்டுக்கோழியும் யதேஷ்டமாக இருக்கின்றன. கரடியும் தின்ன நன்றாயிருக்குமென்று நான் எண்ணுகிறேன்."

"ஆ! இது சற்று ஏற்கத் தக்கதாயிருக்கிறது."

சற்றுச்செல்லாம் மார்ட்டின் விடைகொடுத்தனுப்பப்பட்டான். எல்லாருக்கும் அவன்மேல் திருப்தி வந்து விட்டது.

வேலையில் அமர்ந்த சிலநாள்களுக்குள் ஆல்ப்ரெடுக்கு மார்ட்டின் கூபரின் பேரில் அபிமானம் ஏற்பட்டு விட்டது. அவ்விருவர்களும் ஒருநாள் அலுவலாயிருக்கும்போது, மிஸ்டர் காம்பெல் மார்ட்டின் கூபரைத்தருவித்து, தங்களிடத்தில் இருக்கும் சாமான்களை ஜாப்தாவிலிருந்து படித்துக்காட்டி, இவைகளைத் தவிர வேறு யாதாவது அவசியமாகவோ, அல்லது சவுகரியத்தை முன்னிட்டோ கொண்டுபோகவேண்டியதுண்டா? என்று கேட்டார்.

"துப்பாக்கிகளைப்பற்றி ஏதோ சொன்னீர்களே." அவை எவ்வகையின? என்று மார்ட்டின் சொன்னான்.

"நம்மிடத்தில் இருப்பவை கைத்துப்பாக்கிகளைத்தவிர, குருவித் துப்பாக்கிகள் மூன்று. சாதாரணத் துப்பாக்கிகள் மூன்று."

"குருவித் துப்பாக்கிகள் உபயோகமே இல்லை. சாதாரணத் துப்பாக்கிகள் போர்வீரரின் கருவிகள்—உபயோகமில்லை; கைத்துப்பாக்கிகளோ பாவட்டங்குழாய்கள்—அதை

விட யோக்கியதை இல்லை. முறுக்குக்குழற்றுப்பாக்கிகள் (rifles) உங்களிடம் இல்லையே? அவைகளின்றிக் காட்டிற்குள் நுழையலாகாது. எனக்கொன்றிருக்கிறது; ஆனால் உங்களுக்கும் சில வேண்டியிருக்கும்."

"நல்லது, மார்ட்டின், நீ சொல்வது சரிதான் என்று நான் நினைக்கிறேன். எனக்கு இதுவரையில் தோன்றவில்லை. நமக்கு எத்தனை தேவையிருக்கும்?"

"அதுவா? நீங்கள் உங்கள் குடும்பத்தில் எத்தனை பேர்கள்?"

"நாங்கள் ஆண்பால் ஐவர், பெண்பால் மூவர்"

"சரி, அப்போது. வேண்டியது பத்து. அதுவே போதுமானது. ஏதாவது பழுது வந்தாலும் இரண்டு கைவசமிருக்கட்டும்," என்றான் மார்ட்டின்.

"ஐயோ! மார்ட்டின், நீ சொல்வதைப் பார்த்தால், நான், இந்தச் சிறு குழந்தைகள், இந்த சிறிய பெண்கள்—எல்லாரும் கூடத் துப்பாக்கியால் சுடவேண்டி வரும்போலிருக்கிறதே!" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"தாயே! நான் சொல்வதென்னவென்றால், இம்மட்டும் (ஜானை சுட்டிக் காட்டிக்கொண்டு) பையனாவதற்கு முன்னமேயே நான் ஒரு குறியை வைத்துச் செம்மையாகச் சுடுவேன். பெண் பிள்ளையாயினும், துப்பாக்கியைச் சுடாமற் போனால் கூட, மருந்து அடைத்துக் குண்டு போட்டுக் கெட்டிக்கவாவது தெரிந்திருக்கவேண்டும் தாயே! இந்த ஆயுதம் வெகு சூரத்தனமானது. ஆண்டவன் படைப்பில் இதை யமனுருவமென்றே சொல்லலாம். ஏனென்றால் ஒரு சிசு இதன் தரிப்பைப் பிடித்திழுத்தாற்கூட எவ்வளவு குண்டனாக விருந்தாலும் அவனை வேலை தீர்த்துவிடும். இப்படி இவைகளை உபயோகப் படுத்தச் சமயம் நேரிடுமென்று சொல்லவில்லை. ஆயினும் சமயம் வந்தால் அவைகள் கை



யண்டை இருப்பதும், அதோடு கூட நம்மிடத்திலிருக்கிற தென்றும் மருந்து போட்டுக் கெட்டித்திருக்கிறதென்றும் பிறருக்குத் தெரிந்திருப்பதும் எப்போதும் மேலல்லவா?" என்றான் மார்ட்டின்.

"நல்லது, மார்ட்டின்! நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். சேகரம் செய்து தயாரித்து வைத்திருப்பது மேலானதே. வாங்கக் கட்டுமானால் பத்து முறுக்குக் குழாய்த் துப்பாக்கிகளையும் வாங்கிவிடுவோம். அவைகளின் கிரயம் என்னவாகும்?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"பதினாறு டாலருக்கு ஒரு நேர்த்தியான துப்பாக்கி வாங்கலாம், ஐயா! ஆனால் வாங்குவதற்கு முன்னமே நான் போய் சோதித்து ஒவ்வொன்றையும் சுட்டுப்பரீக்ஷை பார்ப்பது நலமென்று தோன்றுகிறது."

"அப்போது, அப்படியே செய், சூபர்! ஆல்பரெட் வந்ததும் உன்னுடன் அனுப்புகிறேன். நீயும் அவனும் இந்த விஷயத்தைத் தீர்மானம் செய்யலாம்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"என்ன, சூபர்! அவ்வளவு துப்பாக்கிகள் வாங்க வேண்டியிருக்கும் விஷயத்தைச் சொல்லி ஸ்திரீகள் எங்கள் எல்லாரையும் நடுங்கச் செய்து விட்டாயே!" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"தாயே! * பாண்டியாக் உயிருடன் இருக்கும் பட்சத்தில் அவையெல்லாமே வேண்டியிருக்கும்; ஆனால் அவனிறந்துவிட்டான். இன்னும் அனேக இந்தியர்கள் பதுங்கிக்கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் மிகவும் கொடியவர்களாதலால், அண்டையில் மருந்து கெட்டிக்கப்பட்ட துப்பாக்கி இருந்தாலொழிய என் மனது திகிற்பட்டுக்கொண்டே

* பாண்டியாக்—இங்கிலீஷ்க்காரர்களை எதிர்த்த இந்தியர்களின் தலைவர்களில் முக்கியமான ஒருவன்.

தானிருக்கும். அதே போகட்டும், தாயே! ஆண்பிள்ளைகளெல்லாரும் காட்டிற்குப் போயிருக்கும் சமயத்தில் ஒரு கரடி வந்ததாக வைத்துக்கொள்ளுங்கள்: அப்போது மருந்து கெட்டித்த துப்பாக்கி பக்கத்திலிருப்பது சிலாக்கியமல்லவா? உங்களுக்கும் சின்ன அம்மாள்களுக்கும், அதின் கொடிய கைக்கட்டில் அகப்படுவதைவிடத் துப்பாக்கி இருந்தால் சுட்டுவிடலாமே, என்று உங்களுக்குத் தோன்றுதா?" என்றான் மார்ட்டின் கூபர்.

"மார்ட்டின் கூபர்! நீ சொல்வது செம்மையாக என் மனதில் தைத்துவிட்டது. நான் துப்பாக்கியை மருந்து போட்டுக் கெட்டிப்பது மட்டுமல்ல, சுடவும் கற்றுக் கொள்கிறேன்," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"நானும் பையன்களுக்கு அவைகளை உபயோகிக்கும் வழியைக் கற்றுக்கொடுக்கிறேன். அதனால் உங்களுடைய காப்பு இன்னும் பலப்படும்."

"நல்லது, மார்ட்டின்; நீ அப்படியே செய்; நீ சொல்லுவது ஸரிதான் என்று நான் நன்கறிந்துகொண்டேன்," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

கூபர் சென்றவுடன், அவனது பேச்சைக்கேட்டு யாதேனும் தம் பேதைகள் கிலிகொண்டிருப்பார்களோ என்று சங்கித்து, மிஸ்டர் காம்பெல். "என்னருமை நாயகியே, மார்ட்டின் சொன்ன வார்த்தையிலிருந்து நீயாவது பெண்களாவது நடுக்கங்கொண்டிருக்க மாட்டீர்களென்று நம்புகிறேன். நாம் தனிமையாகக் காட்டு நடுவில் வசிப்போமாதலால் எதற்கும் தயாராக இருப்பது நலமல்லவா? ஆனால் தயாராக இருக்கவேண்டிய தவசியமே யல்லாது, ஆபத்து நேரிடவேண்டியதென்பது அவசியமன்று," என்று சொல்லித் தைரியப்படுத்தினார்.

"என்னைப்பற்றிய வரையில் நான் பார்த்துக்கொள்ளு



வேன்," என்றாள் மிஸிஸ் காம்பெல்; "மார்ட்டின் கூபர் சொல்வது போலவே, ஸ்திரீயாக இருந்தாலும், கையில் முழுக்குக் குழாய்த் துப்பாக்கி மட்டும் இருக்குமானால் ஒரு வல்லவனைக்கூட எதிர்க்கலாம்."

"எனது அரிய மாமா! ஆண்டவனது கிருபையை முன்னிட்டு, எனக்கும் சமயம் நேரிட்டால் எவ்விதம் நடக்க வேண்டியதென்று தெரியும்; அஞ்சாதீர்கள்," என்றாள் மேரி.

"நான் மாத்திரம் சப்பையோ?" என்றாள் எம்மா; "ஓர் இந்தியன் கையிலாவது ஒரு கரடியின் கையிலாவது அகப்படுவது நலமா, அல்லது துப்பாக்கியை எடுத்துச் சுடுவது நலமா என்று நானும் நன்கறிவேன், மாமா; கவலைப்படவேண்டாம்."

"அப்பா! மார்ட்டின் இந்த விஷயமாக முந்தியே சொல்லியது எவ்வளவு நல்லதாக இருக்கிறது! எக்கேட்டுக்கும் நாம் முந்தியே நம்மால் இயன்ற மட்டில் வேண்டிய ஜாக்கிரதை யெடுத்துக் கொண்டிருந்தோமேயாயின், ஆபத்து நேரும்போது பகவான் நம்மைக் கைவிடார்."

கடைசியில் வாங்கவேண்டியவைகளெல்லாம் வாங்கப்பட்டு மூட்டையாகக்கட்டப் பெற்றவுடன் படகில் ஏற்றத் தயாராயின. கவர்னர் துரையிடமிருந்து மற்றொரு செய்தி வந்தது. அஃதாவது "மூன்று நாளில் துருப்புகள் மேலே செல்ல படகில் ஏறத்தயாராகி விடுவார்கள்; மிஸ்டர் காம்பெல் மாடுகள், குதிரைகள், இவைகளை ஏற்கனவே வாங்கிவிடாவிட்டால் ப்ராண்டினுக் கோட்டையில் மிகுதியாயிருக்கும் கால் நடைகளிலிருந்து அங்கேயே வாங்கிக் கொள்ளலாம். இங்கேயிருந்து மேலே அவ்வளவு தூரம் கொண்டு போவதைவிட அங்கேயே வாங்கிக்கொள்வது நலமாயிருக்கும்;" என்பது.

அவருக்கே தெரியும். அதுவரையில் ஆண்டவன்மேல் பாரத்தைப் போட்டுப் பொறுமையுடன் சகித்துக்கொண்டு தைரியத்தைக் கைவிடாது, ஆண்டவனது கருணையில் பூர்ணமாக நம்பிக்கை வைத்து, காரியங்களை ஒழுங்காகச் செய்து வருவதே நமது கடமை.”

## அத்தியாயம் 11.

மறுபடியும் நல்ல படுக்கைகள் அகப்பட்டபடியால் அவர்களுக்கு நல்ல தூக்கம் வந்து, கலகலப்புடன் அதிகாலையில் எழுந்து ஆடைகளைத் தரித்துக்கொண்டு, ஏழுமணியானதும் கோட்டையின் மதிலில் எல்லோரும் கூடிச் சுற்றியிருக்கும் நிலக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அது பார்வைக்கு வெகு குளிர்ச்சியாகவும் ஆநந்தமாயும் இருந்தது. எதிரில் இடது பக்கத்தில் கண்ணுக்கெட்டிய வரையில் கரை தென்படாத, உள்நாட்டுச்சமுத்திரமென்றே சொல்லவேண்டிய ஒரு விசாலமான ஏரி பரந்து இருந்தது. அதன் ஜலம் இப்போது அசையாமல் அமர்ந்திருந்தது. தீரத்தின் ஓரத்தில் பசிய தழை யடர்ந்த சிறிய தீவுகள் பச்சையிழைத்த பதக்கங்களைப் போல் அங்குமிங்கும் சுட்டி சுட்டியாகப்படர்ந்திருந்தன. ஜலமோ படிகம்போல் தெளிவாயிருந்தது. அதற்கு மேற்குப் புறத்தில், நேரெதிரில், கோட்டையைச்சார்ந்த காடழித்த சமபூமியானது அதற்குப் பின்புறத்திலிருந்த காட்டு வெளியின் மேல் சாய்ந்து கொண்டிருந்தாற்போல் பரந்திருந்தது. இந்தக்காடழித்த நிலத்தில் ஒரு பாகத்தில் ஒரு மந்தை கால்நடைகள் மேய்ந்துகொண்டிருந்தன. மற்றொரு பாகத்தில் “பாம்பு வேலி” என்னப்பட்ட வேலியாலடைக்கப்பட்டு சாகுபடி நடந்துகொண்டிருந்தது. மாரிகாலத்தில் கால்நடைகளை அடைப்பதற்காக மரத்தால் அமைக்கப்பட்ட கொட்டகைகள் திசைக்கொன்றாய் இருந்தன. அதற்கு அரைமைல் தூரத்தில்



மரக்கிராதியால் சூழப்பட்ட ஒரு சிறு கோட்டையிருந்தது. திடீரென்று ஏதாவது ஆபத்தாவது எதிரிகளாவது வந்தால் கால்நடைகளைக் காப்பவர்கள் இதற்குள் நுழைந்து தங்களைக் காத்துக்கொள்ளலாம். கோட்டைக்கு அருகில் விரைவாக ஓடும் ஒரு வாய்க்காலிருந்தது. இப்போது மழைபெய்திருந்ததால், புதிய வெள்ளம்கரைபுரண்டு ஓரத்திலிருக்கும் மரங்களின் குறுக்கே விழுந்து ஏரியில் வழிந்து கொண்டிருந்தது. சூரியன் நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மரங்கொத்திக்குருவிகள் மரத்திற்கு மரம் தாவிக்கொண்டும், வேலியின் கம்பிகளில் கொத்திக்கொண்டும் இருந்தன. மீன்கொத்திப் புட்கள் அம்புபோல் வாய்க்காலில் குதிப்பதும் கிளம்புவதுமாயிருந்தன. பலவகைப் பட்சிகளின் கீச்சல்களும் அலறல் ஓசையும்நாற்பக்கங்களிலிருந்தும் செவியில்வந்து விழுந்தன.

“ஆஹா! எவ்வளவு நேர்த்தியாகவிருக்கிறது, அல்லவா?” என்றாள் மிஸிஸ் காம்பெல். “இம்மாதிரியான விடத்தில் வசிப்பது அவ்வளவு கஷ்டமென்றே தோன்றவில்லை,” என்றாள். இப்போது கர்னல் பார்ஸ்டரும் வந்து சேர்ந்து விட்டார்.

“இப்படியே எப்போதும் இருக்குமானால் நீங்கள் சொல்வது ஒருகால் வாஸ்தவமாக இருக்கலாம், அம்மா! ஆனால் ஜூன் மாதத்திலிருக்கும் கானடா வேறு, ஜனவரி மாதத்திலிருக்கும் கானடா வேறு.

“மிஸ்டர் காம்பல்! நான் காப்டின் ஸிங்க்ளேரோடு தங்களைப்பற்றிப் பேசித் தெரிந்துகொண்டதில் நீங்கள் சீதகாலம் வருமுன் செய்யவேண்டியது மிகுதியாகவே இருக்கிறது. இப்போதிருக்கும் உஷ்ணகாலம் நீடித்திருக்காது. உங்களுக்கு இப்போது இருக்கும் சாதனங்கள் மட்டும் போதா. நல்ல வேளையாய்க் கவர்னரிடமிருந்து தங்கள் விஷயமாக எனக்கு வந்திருக்கும் உத்திரவின் பலத்தை

பற்றிய விருத்தாந்தங்களை விவரமாகச் சொன்னார். இந்தியர்கள் ஐரோப்பிய நாகரீகமற்றவர்களாயினும் அலட்சியம் செய்யத்தக்க இழிவான மனிதர்களல்லர். மனோதைரியத்தில் அவர்கள் வேறுயாவருக்கும் தாழ்ந்தவர்களல்லர். தேக திடத்தைப் பற்றிச் சொல்லவேண்டாம். யுத்ததந்திரத்திற்குப்பேர்போனவர்கள். ஐரோப்பியர்களுக்கிருந்த சாதனங்களும் கருவிகளும் அவர்களுக்கும் கிடைத்திருந்தால் அமெரிக்காவில் ஐரோப்பியர்களுக்கு இடம் கிடைத்திராது. அவர்களுள் பல ஜாதிகள் உண்டு. ஒரு ஜாதியாருக்கும் மற்றொரு ஜாதியாருக்கும் ஏதாவதுசண்டை சதாசர்வகாலம்நடந்துகொண்டே இருக்கும். இம்மாதிரியான ஒற்றுமை இன்மையைத்தெரிந்துகொண்ட ஐரோப்பியருக்கு இவர்களை ஒழித்துவிட இடம் எளிதில் கிடைத்தது.

இந்தியத் தலைவர்களுள் அனேகர் பிரசித்தி பெற்றவர்கள். அதிலும் பாண்டியாக் என்பவர் மிகவும் ச்ரேஷ்டர். இங்கிலீஷ்க்காரர்களை எதிர்த்தவர்களுக்குள் இவர் அதிமுக்கியமானவர். இங்கிலீஷ்க்காரர்களுக்கு இருந்த கோட்டை பதின்மூன்றில் பத்துக் கோட்டைகளைப் பிடித்துவிட்டார். டிட்ராயிட் என்னும் கோட்டையைப் பிடிக்கத் தந்திரமாக வரும்போது, ஐயம் கிட்டத்தட்ட கைகூடி வரும் தருணத்தில் ஒரு இந்தியஸ்திரீ ஏமாந்துபோய் உளவைச் சொல்லிவிட இங்கிலீஷ்க்காரர்கள் உஷாராய்விட்டபடியால் பாண்டியாக்குக்கு யாதும் பலிக்கவில்லை. அதுமுதல் இங்கிலீஷ்காரரின் கை மேலோங்கலாயிற்று. ஓர் இந்தியரின் கையால் பாண்டியாக் மரணத்தையும் அடைந்தார்.

இவ்விதமான விருத்தாந்தங்களையும் கதைகளையும் காப்ட்டின் ஸிங்க்ளேர் சொல்லிக்கொண்டு வந்தமையால் வழிதொ

---

துணைக்காக அனுப்பப்பட்ட துருப்புக்களுக்கு அதிபதியான ராணுவ உத்தியோகஸ்தர்.



லைந்து தெரியாமலே கடக்கப்பட்டது.

வெயில் விழுந்ததும் இரவில் தங்குமிடத்தில் வந்து
சேர்ந்து, கரையில் எல்லாரும் இறங்கவும் சில போர் வீரர்
கள் ஒரு வறண்ட தரையில் கூடாரம் போட்டுக்கொண்டிரு
க்க, மற்றவர்கள் நெருப்பு மூட்டக் காய்ந்த விறகு பொறுக்
கப்போனார்கள். மார்ட்டின் சூபர் படுக்கைச்சாமான்களைக்
கரையிலிறக்கி, ஆல்பிரட்டையும் ஹென்றியையும் உதவி
யாக வைத்துக்கொண்டு கூடாரத்திற்குள் கொண்டு போய்ச்
சேர்த்தான். காப்ட்டின் ஸிங்ளேருடைய கட்டுப்பெட்டியி
லிருந்த சாமான்களை வைத்துக்கொண்டு சிற்றுண்டிகள் தயா
ரிக்கப்பட்டு, இவைகளையும் கியூபெக்கிலிருந்து கொண்டுவந்
திருந்த உண்டிகளையும் போஜனம் செய்தானவுடன், பெரு
மாட்டிகள் எல்லோரும் தூங்கப்போய் விட்டார்கள். இர
வில் பந்தோபஸ்துக்காகச் சில சேவகர்களைக் காவல்போட்டு
விட்டு,மற்றுமுள்ள துருப்புகளுடன் காப்ட்டின் ஸிங்க்ளேர்
நெருப்பண்டை காலை நீட்டிக்கொண்டு தூங்கப்போய் விட்
டார். அந்த நெருப்பு இரண்டுமூன்று அடிமரங்கள் சேர்ந்
தெரிந்துகொண்டிருந்தமையால் அதன் ஜ்வாலை தென்னை
மரப்பிரமாணம் எழும்பி யெரிந்தது. சற்று நேரத்திற்குள்
எல்லாமடங்கி, காவல் சேவகர்களைத் தவிர மற்ற எல்லாரும்
அயர்ந்து விட்டார்கள். ஸார்ஜண்டு, கார்போரல், காப்ட்டின்
ஸிங்க்ளேர் இவர்கள் மட்டும் ஒருவர் மாற்றி ஒருவர் விழி
த்துக்கொண்டு ஜாக்கிரதையுடனிருந்தார்கள்.

இடையூறுகளின்றி இரவு கழிய, மறுநாட்காலையில்
படகேறிப் பயணப்பட்டார்கள். சூரியன் மறையும்முன்
மாண்ட்ரீலுக்கு வந்து சேர்ந்தனர். அவ்விடத்தில் ஒருநாள்
தங்கும்படி ஏற்கனவே ஏற்பாடாயிருந்தது. அவ்விடத்தில்
வாங்கவேண்டிய சில சாமான்களை மிஸ்டர் காம்பெல் வாங்கி
முடித்தார். கூடியசீக்கிரத்தில் ஊர்போய்ச் சேரவேண்டு

மென்று கவலை இருந்ததுபற்றி, மறுநாள் காலையிலேயே புறப்பட்டு விட்டார்கள். அவர்கள் இன்னும் செல்லவேண்டியது முந்நூற்றறுபது மைல்களிருந்தன. அதில் ஆற்றோட்டத்தை எதிர்த்துச்செல்லவேண்டியிருந்ததுடன் நடுவில் நடுவில் அநேக சுழல்களும் அளவிடற்கரிய வேகம் பொருந்திய நீரோட்டங்களுமிருந்தன. ஆற்றை எதிர்த்துச் செல்லும்போது, அவர்கள் சிலவேளைகளில் கரையிலிறங்கிச்சாமான்களைத்தூக்கிப்போகவேண்டியிருந்ததென்ன, இரண்டொரு படகுகள் கவிழ்ந்துபோய்ப் பண்டங்களை இழந்ததென்ன, பயணத்தின்போது அவர்கள்பட்ட துர்த்தசைகள் நாளுக்கு நாள் மிகுதியாய்க்கொண்டிருந்ததென்ன, இவைகளைப் போன்ற சம்பவங்களையெல்லாம் சொல்வதென்றால் சாவகாசம் போதாது. ஆதலால் சுருக்கமாய்ச் சொல்லுவோம். வழியில் பல அபாயங்களைக் கடந்து, மிகுதியான சோர்வையடைந்து இரவில் மேகம்போல் திரண்டு அடர்ந்து வந்து மொய்த்த கொசுக்களால் எண்ணமுடியாத துன்பங்களையனுபவித்துக்கொண்டு, பதினாறாவது நாள் பிராண்டினுக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக்கோட்டை அதிகாரிக்குக் கியூபெக் கவர்னர் முன்னதாகவே வேண்டிய ஏற்பாடுகள்செய்துகொடுக்க வேண்டுமென உத்திரவு அனுப்பியிருந்தபடியால், அவர்கள் வந்து கரைசேர்ந்ததும் உபசாரத்துடன் அழைக்கப்பட்டார்கள். அந்த அதிகாரியின் பெயர் கர்னல் பார்ஸ்டர். அவர்களுக்காகவே முன்னமே வசதியான அறைகள் தயாரிக்கப்பட்டிருந்தபடியால், காணாததைக்கண்டதுபோல் அவைகளுக்குள் நுழைந்து வேற்று மனிதர் கண்ணுக் கெட்டாமல் விசிராந்தியடைந்தனர்.

அப்போது மிஸ்டர் காம்பெல்லுடைய உள்ளம் பூரித்திருந்தது. வீடுவாசல் பந்து மனை இவைகளை இழந்து, தேசம் விட்டுத் தேசம் வரச் சம்பவித்தாலும், தங்களுக்கு மார்க்



கத்தில் கிடைத்த மனிதசகாயமானது தைவசகாயம் என்றே அவர் உள்ளத்தில் உணர்ந்து, எல்லோர்மத்தியிலும்தாம் கைகூப்பி நின்றுகொண்டு, பகவானைத் துதிசெய்துவிட்டுப் பின்வருமாறு கூறினார்—"என் பிராணநாயகியே, என் அருமைக் குழந்தைகளே, இதுவரையில்நமக்கு அளவில்லாத கஷ்டங்களும் விபத்துகளும் நேர்ந்தன. அவைகளையெல்லாம் கடந்து நாம் இதுவரையில் சவுக்கியமாகவந்து சேர்ந்ததற்குக்காரணம் பகவானுடைய கருணையும் அதனால் தூண்டப்பட்ட மனித சகாயமுமே ஒழிய வேறல்ல. இப்போதுநமது யாத்திரை முடிவுக்கு வந்துவிட்டது என்றே சொல்லலாம். ஆனால்இனி நாம் கவலையற்று இருக்கலாமே என்றால், நான்சொல்லுகிறேனென்று ஏக்கத்தை அடையாதீர்கள்:—இனிமேல் தான் நமக்குஉண்மையில் சிந்தைக்கும், கவலைக்கும், பயத்திற்கும் இடமுண்டு. பட்டினி எத்தனையோ! பசி எத்தனையோ! காய்ச்சலுக்கும் பேய்ச்சலுக்கும், பனிக்கும், குந்தக்குச்சில்லாமல், தங்கஇடமில்லாமல் நாம் திண்டாட வேண்டியதெத்தனையோ! காட்டுமிருகங்களாலும் காட்டு மனிதர்களாலும் நமக்கு நேரிடும் துன்பங்கள் யாவோ! ஆயினும், இதுவரையில் நம்மைக் கைவிடாத ஆண்டவன் இனியும் நம்மை ரக்ஷிப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாமும் முயன்றால் தான் தைவமும் சகாயம் செய்யும். நமது இல்லற வாழ்க்கை ஒரு யாத்திரைபோலும். அதன் நடுவில் நமக்கு எத்தனையோ கஷ்டங்கள், நஷ்டங்கள், துர்த்தசைகள் ஏற்படும். ஆனால் அவை எல்லாம் பகவானுடைய சங்கல்பத்தாலன்றி நேரிட முடியா. அவைநமது உள்ளத்தைச் சோதிப்பதற்காக ஆண்டவனால் தூண்டப்பட்டனவே யல்லாமல் வெறல்ல. அவை எல்லாம் நமது நெடுங்கால க்ஷேமத்திற்கே. நம்மை சிருங்கலையில் மாட்டிவிடும் பெருமானுக்கு நம்மை மீட்டுவிடுவது பிரயாசமோ? ஆனால் அதற்குச்சமயம் எப்போதென்று

அவருக்கே தெரியும். அதுவரையில் ஆண்டவன்மேல் பாரத்தைப் போட்டுப் பொறுமையுடன் சகித்துக்கொண்டு தைரியத்தைக் கைவிடாது, ஆண்டவனது கருணையில் பூர்ணமாக நம்பிக்கை வைத்து, காரியங்களை ஒழுங்காகச் செய்து வருவதே நமது கடமை.''

## அத்தியாயம் 11.

மறுபடியும் நல்ல படுக்கைகள் அகப்பட்டபடியால் அவர்களுக்கு நல்ல தூக்கம் வந்து, கலகலப்புடன் அதிகாலையில் எழுந்து ஆடைகளைத் தரித்துக்கொண்டு, எழுமணியானதும் கோட்டையின் மதிலில் எல்லோரும் கூடிச் சுற்றியிருக்கும் நிலக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அது பார்வைக்கு வெகு குளிர்ச்சியாகவும் ஆநந்தமாயும் இருந்தது. எதிரில் இடது பக்கத்தில் கண்ணுக்கெட்டிய வரையில் கரை தென்படாத, உள்நாட்டுச்சமுத்திரமென்றே சொல்லவேண்டிய ஒரு விசாலமான ஏரி பரந்து இருந்தது. அதன் ஜலம் இப்போது அசையாமல் அமர்ந்திருந்தது. தீரத்தின் ஓரத்தில் பசிய தழை யடர்ந்த சிறிய தீவுகள் பச்சையிழைத்த பதக்கங்களைப் போல் அங்குமிங்கும் சுட்டிசுட்டியாகப்படர்ந்திருந்தன. ஜலமோ படிகம்போல் தெளிவாயிருந்தது. அதற்கு மேற்குப் புறத்தில், நேரெதிரில், கோட்டையைச்சார்ந்த காடழித்த சமபூமியானது அதற்குப் பின்புறத்திலிருந்த காட்டு வெளியின் மேல் சாய்ந்துகொண்டிருந்தாற்போல் பரந்திருந்தது. இந்தக்காடழித்த நிலத்தில் ஒரு பாகத்தில் ஒரு மந்தை கால்நடைகள் மேய்ந்துகொண்டிருந்தன. மற்றொரு பாகத்தில் "பாம்பு வேலி" என்னப்பட்ட வேலியாலடைக்கப்பட்டு சாகுபடி நடந்துகொண்டிருந்தது. மாரிகாலத்தில் கால்நடைகளை அடைப்பதற்காக மரத்தால் அமைக்கப்பட்ட கொட்டகைகள் திசைக்கொன்றாய் இருந்தன. அதற்கு அரைமைல் தூரத்தில்



ரக்கிராதியால் சூழப்பட்ட ஒரு சிறு கோட்டையிருந்தது. திடீரென்று ஏதாவது ஆபத்தாவது எதிரிகளாவது வந்தால் கால்நடைகளைக் காப்பவர்கள் இதற்குள் நுழைந்து தங்களைக் காத்துக்கொள்ளலாம். கோட்டைக்கு அருகில் விரைவாக ஓடும் ஒரு வாய்க்காலிருந்தது. இப்போது மழைபெய்திருந்ததால், புதிய வெள்ளம்கரைபுரண்டு ஓரத்திலிருக்கும் மரங்களின் குறுக்கே விழுந்து ஏரியில் வழிந்து கொண்டிருந்தது. சூரியன் நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மரங்கொத்திக்குருவிகள் மரத்திற்கு மரம் தாவிக்கொண்டும், வேலியின் கம்பிகளில் கொத்திக்கொண்டும் இருந்தன. மீன்கொத்திப் புட்கள் அம்புபோல் வாய்க்காலில் குதிப்பதும் கிளம்புவதுமாய்இருந்தன. பலவகைப் பட்சிகளின் கீச்சல்களும் அலறல் ஓசையும்நாற்பக்கங்களிலிருந்தும் செவியில்வந்து விழுந்தன.

"ஆஹா! எவ்வளவு நேர்த்தியாகவிருக்கிறது, அல்லவா?" என்றாள் மிஸிஸ் காம்பெல். "இம்மாதிரியானவிடத்தில் வசிப்பது அவ்வளவு கஷ்டமென்றே தோன்றவில்லை," என்றாள். இப்போது கர்னல் பார்ஸ்டரும் வந்து சேர்ந்து விட்டார்.

"இப்படியே எப்போதும் இருக்குமானால் நீங்கள் சொல்வது ஒருகால் வாஸ்தவமாக இருக்கலாம், அம்மா! ஆனால் ஜூன் மாதத்திலிருக்கும் கானடா வேறு, ஜனவரி மாதத்திலிருக்கும் கானடா வேறு.

"மிஸ்டர் காம்பல்! நான் காப்டின் விங்க்ளேயோடு தங்களைப்பற்றிப் பேசித் தெரிந்துகொண்டதில் நீங்கள் சீதகாலம் வருமுன் செப்பவேண்டியது மிகுதியாகவே இருக்கிறது. இப்போதிருக்கும் உஷ்ணகாலம் நீடித்திருக்காது. உங்களுக்கு இப்போது இருக்கும் சாதனங்கள் மட்டும் போதா. நல்ல வேளைபாய்க் கவர்னரிடமிருந்து தங்கள் விஷயமாக எனக்கு வந்திருக்கும் உத்திரவின் பலத்தை

முன்னிட்டு, நான் தங்களுக்கு வேண்டிய உதவியை எல்லாம் செய்ய இடங்கொடுக்கும். நான் இப்போது தங்களுக்குச் சொல்வது என்னவென்றால், பெருமாட்டிகள் தற்காலம் இவ்விடமே இருக்கட்டும். நீங்களோ நான் கொடுக்கும் ஆள்களை இட்டுக்கொண்டு உங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட ஸ்தலத்திற்குப்போய் உங்களுடைய குடித்தனத்துக்கு வசதியான ஜாகையை ஏற்பாடு செய்யுங்கள்."

அதற்கு மிஸிஸ் காம்பெல் மிகவும் நன்றி பாராட்டிக்கொண்டு, "கர்னல்! தங்களுடைய அன்புக்கு அனேக வந்தனங்கள்: ஆனால்முடியாது,மன்னிக்கவும்;நாங்களெல்லோரும் சேர்ந்தே போவோம். நாங்களும்ஏதாவதுஉதவிசெய்வோம். வீடு கட்டி முடிகிறவரை கூடாரங்களில் இருப்போம். தாங்கள் இனி வருந்திச் சொல்லாதீர்கள்: இது எங்கள் தீர்மானம். ஆயினும் தங்களுடைய அன்புடைமைக்கு அனேக கோடி வந்தனங்கள்," என்று கூறினாள்.

"அப்படியானால், நான் சொல்வது இதுதான்: நான் பன்னிரண்டு பேர்களை ஒரு ஜமாவாகச் சேர்த்து அனுப்புகிறேன். இரண்டொரு மாதத்திற்கு அவர்களில்லாமல் நான் இங்கே பார்த்துக் கொள்கிறேன். அவர்களை வைத்துக்கொண்டு நீங்கள் அவஸரமான அலுவல்களை முடித்துக்கொள்ளலாம். அவர்களுடைய கூலி விஷயமாக உங்களுக்குச் செலவு மிகுதியாகாது. காப்டின் ஸிங்க்ளேர் அவர்களுக்குத் தலைவராக வருகிறேனென்கிறார்," என்றார் கர்னல்பார்ஸ்டர்.

அதற்கு மிஸ்டர் காம்பெல், "ஐயா! இதற்காகத் தங்களுக்கு அநேக வந்தனங்கள்: எங்களுக்கு வீணாக்கப் போது இல்லையென்று தாங்களே சொல்கிறபடியால், தங்களுடைய அநுமதியின்பேரில் நாளைக்காலையிலேயே புறப்படுகிறோமே," என்றார்.

**இதைக் கேட்டவுடன் கொஞ்சம் மனத்தாங்கலுடன்**



கோட்டையதிகாரி, "இன்னும் கொஞ்சகாலம் தங்களுடைய அருமையான சங்கத்தைப் பெறலாமென்று எண்ணியிருந்தேன். ஆனாலும் நான் தங்களைத் தடுக்கவில்லை, எங்களுடைய கால் நடை மந்தைகளிலிருந்து நியாயமாக விலைபோட்டு உங்களுக்கு வேண்டியவைகளைக் கொடுக்கும்படி கவர்னரிடமிருந்து எனக்கு உத்திரவு வந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே. தங்களுக்கு வேண்டியவைகளைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளலாம் என்று நான் சொல்லவேண்டியதனாவசியம்," என்று சொன்னார்.

இதுவரை மேரி பர்ஸிவலுடன் * சம்பாஷணை செய்துகொண்டிருந்த காப்டின் ஸிங்க்ளேர் இப்போது இவ்விருவர்களுடன் கலந்துகொண்டு மிஸ்டர்காம்பெல்லை நோக்கி,"என்னுடைய சகா உத்தியோகஸ்தர்களிடமிருந்து நானும் தங்களுக்காகவே வேறுவகைப் பொருள்களை வாங்கிச் சேர்த்துக்கொண்டிருக்கிறேன். அவை யாவை என்றால் ஒவ்வொரு திணுசும் அடங்கிய நாய்களின் கூட்டம்; இங்கிலாந்தில் நீங்கள் தடவிக் கொடுத்து வளர்க்கும் நாய்களைப்போல் அவ்வளவு அழகாயில்லாமற் போனாலும், இந்தக் காடுகளைப்பற்றி அவைகளுக்கு நன்றாய்த் தெரிந்திருப்பதுடன், தன் தன் வேலைகளை அவைகள் செம்மையாகச்செய்யும். என்னிடத்தில் ஒரு பாயிண்டர், ஒரு புல்டாக், இரண்டு டெறியர்கள், ஒரு செந்நாய் இவைகளிருக்கின்றன. இவைகள் மிகத்துணிச்சலுடன் சிறுத்தை, ஓநாய், காட்டுப்பூனை, சிலவேளை கரடி, இவைகளை எதிர்க்கும்," என்றார் காப்டின் ஸிங்க்ளேர்.

"இஃது உண்மையாகவே ஒருவிலையுயர்ந்த நன்கொடை. எங்களுடைய மனப்பூர்த்தியான வந்தனத்தைத் தங்களுக்களிக்கிறோம்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"நீங்கள் புறப்படுவதற்கு முன்னாகவே பசுக்களைப்பொ

* மேரி பிறந்த குடும்பப் பெயர்.

றுக்கி விடுவது மேல்; இல்லையோ என்னைச் செய்யச் சொன்னாலும் நானே செய்கிறேன். ஓரிரண்டு நாளுக்குள்ளாகவே அவைகளை ஓட்டி அனுப்பிவிடவேண்டும். ஏனெனில் பெருமாட்டிகளுக்குப் பால் வேண்டியிருக்கும்.

காலையுணவருந்தும் நேரம் என்னும் செய்திவர, பேச்சு நிறுத்தப்பட்டது. அன்றைத் தினம் பகல் முழுதும், ஹென்றியும் ஆல்ப்ரெட்டுமாக, காப்ட்டின் ஸிங்க்ளேர் மார்ட்டின் சூபர் இவ்விருவருடைய உதவியைக்கொண்டு பண்டங்கள், கூடாரங்கள், தங்களுடன் கொணர்ந்திருந்த துணிமணி முதலியவை அடங்கிய பெட்டி பேழைகள் இவைகளை இரண்டு படகுகளில் ஏற்றுவதே அலுவலாகக் கொண்டிருந்தனர். மிஸ்டர் காம்பெல்லும் மிஸிஸ்காம்பெல்லும், பெண்களையுதவியாக வைத்துக்கொண்டு, தங்களுடைய புதிய ஸ்தலத்துக்குப் போனவுடன் வேண்டியிருக்கும் சாமான்களைப் பிரித்துத் தனியாகக் கட்டுவதே அலுவலாகவிருந்தனர். ஆனது பற்றி இவர்கள் மிகவும் களைப்புற்று இருந்தமையால் சீக்கிரமாகவே படுக்கப்போனார்கள். மறுநாள் காலையில் உணவு முடிந்ததும் மிகவும் அன்பு பாராட்டியிருந்த கோட்டையதிகாரியிடத்திலும் மற்றும் உள்ள உத்தியோகஸ்தர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு, ஏரியின் ஓரத்துக்குச்சென்று ஏற்கனவே அவர்களுக்காக வசதியாகத் தயாரிக்கப்பட்டிருந்த தலையதிகாரியின் படகில் காப்ட்டின் ஸிங்களேருடன் ஏறிக் கொண்டார்கள். மார்ட்டின் சூபரும், ஆல்ப்ரெடும் ஹென்றியும் அந்த ஐந்து நாய்களையும் பிடித்துக்கொண்டு இரண்டு படகுகளிலும் ஏறிக்கொண்டனர். இவைகளில் ஏற்கனவே கோட்டைத் தலைவரால் மிஸ்டர் காம்பெல்லுக்கு இரவல் கொடுக்கப்பட்ட பன்னிரண்டு போர்ச்சேவகர்களும் அவர்களுக்கு மேலதிகாரியான ஒரு கார்ப்போரலும் ஏறியிருந்தார்கள். காலசுபாவமும் வெகு சேர்த்தியாக இருக்க,



வெகு உத்ஸாகத்துடன் அவர்கள் கிளம்பினார்கள். கரை மார்க்கமானால் ஐந்து மைலிருந்தாலும் ஜலத்தில் குறுக்கே போவது மூன்று மைலுக்குமேல் இல்லை. அரைமணிக்குள் ஒப்படைப்பு ஸ்தலத்தின் அருகிலிருந்த கோடிக்குப்போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

காப்ட்டின் ஸிங்க்ளேர் கையால்சுட்டிக்காட்டிக்கொண்டு மிஸிஸ் காம்பெல்லை நோக்கி, "அம்மா! நீங்களெல்லோரும் இனி இருக்கப் போகுமிடம் அதோ தெரிகிறதே, அதுதான்; அதோ வாய்க்கால் ஏரிக்குள் போய் விழுகிறது பாருங்கள், அதுதான் கீழ்எல்லை; அக்கரையில் இருக்கும் நிலங்கள் நாம் பேசிக்கொண்டிருந்தோமே, அந்த இந்தியக் கிழவேட்டைக் காரருக்குச்சொந்தம். அதோ அவருடைய சிறியதான மரக் குச்சைப் பாருங்கள். அஃது இந்தியருடையகுடிசையைவிட மிகப் பெரியதாயிராது. அதோ வேலிக்குள் சோளவிதை போட்டு முளைத்திருக்கும் பட்டத்தைப் பாருங்கள். இந்தப் பாகம் அவருக்குத் தேவையில்லைபோலும், ஏனென்றால் அவருக்கு ஒருவகைக் கால் நடையும் கிடையாது. ஒருகால் அவைகள் காட்டிற்குள் மேய்ச்சலுக்குப் போயிருக்குமோ என்னவோ? ஆனால் அவர் வேட்டையாடியே ஜீவனம் செய்கிறார் என்றும் அவருக்கு ஓர் இந்தியப் பெண்டாட்டி இருக்கிறாளென்றும் எங்கள் ஆள்களில் சிலர் சொல்லக்கேள்வி," என்றார்.

அதைக்கேட்டு எம்மாபர்ஸிவல்நகைத்துக்கொண்டு, "நல்லது; பெண்பிள்ளைச் சகவாசம் கிடைக்குமென்று நாங்கள் எண்ணினதேயில்லை. ஆண்பிள்ளையின் பெயர் யாது?" என்று கேட்டாள்.

"மலாச்சிபோன் என்னப்படுகிறார்; மிஸிஸ்போன் முதலில் உங்களை வந்து பார்க்கவேண்டும் என்பது தானே உம்முடைய கருத்து ?" என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்.

"அவள் நற்சகவாசத்தின் ஒழுங்குகளை அறிந்தவளாயிருந்தால் அப்படித்தான் செய்யவேண்டும். அவளுக்கு அவை தெரியாவானால் இந்த ஒழுங்குகளை யெல்லாம் தூரக்கட்டி வைத்துவிட்டு, நானேமுதலில்போய் அவளைப் பார்க்கிறேன். இந்தியப் பெண்ணுடன் ஸ்நேஹம் செய்வதற்கு எனக்கு மிகவும் ஆவலாயிருக்கிறது," என்றாள் எம்மா.

"நான் சொல்வது உமக்குத் திகைப்பாயிருக்கலாம்; ஆனால் நான் அவர்களை நேரில் ஒருவரையும் பார்த்திராவிடினும் அவள் ஒரு நல்ல பழக்கம் ஒழுக்கமுள்ளவளென்றே சொல்லும்படியாயிருப்பாள் என்று நான் நிச்சயம் சொல்வேன். அப்படியேதான் எல்லா இந்திய ஸ்திரீகளும் இருப்பார்கள்," என்று காப்டின் ஸிங்க்ளேர் சொல்லி விட்டுப் பிறகு படகோட்டியைப் பார்த்து, அடே செல்பி, * படகின் தலையைச் சற்று வலது பக்கமாய்க் காட்டு அதோ தெரிகிற மேட்டில் இறங்குவோம்," என்றார்.

கோட்டைத் தலைவருடைய படகு மிகவும் விரைவாகச் சென்றபடியால், மூட்டைப்படகுகள் வெகுதூரம் பிந்திவிட்டன. சில நிமிஷங்களுக்குள் அவர்கள் இறங்கி மேட்டின் மேல் நின்றுகொண்டு அவர்களுடைய புதிய ஆஸ்தியைக் கண்ணுற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். அஃது இபற்கைப் புற்றரை. ஏரியோரமாகக் கிடந்த சுமார் முப்பது ஏகர் நிலங்களில் நேர்த்தியான குட்டைப்புல் முளைத்திருந்தது. அதற்கு அடுத்த பின்னால் சுமார் முந்நூறு கஜதூரத்திற் குச்சிப்புல் மண்டியிருந்தது. அதற்கும் பின்னால் உந்நதமாய் வளர்ந்த விருட்சங்கள் அடர்ந்திருந்தபடியால் நிலக்காட்சியைத் தடுத்துவிட்டது. வாய்க்காலுக்கு அக்கரையிலிருந்த கிழவேட்டைக்காரனுக்குச் சொந்தமான ஒப்படைப்பிலும் அதேவிகிதம் புல்தரை இருந்தது.

* அவன் பெயர்.



மற்றைப்பாபத்துக்களிலும் மிஸ்டர் காம்பெல்லுடைய
பாகத்தின்தொடர்ச்சியென்றே சொல்ல வேண்டும்.

இதற்குள் மூட்டைப்படகுகள் வந்துசேரவும் மார்ட்டின் குபரும் இறங்கி இவர்கள் நின்றுகொண்டிருந்த மேட்டிற்கு வந்து சேர்ந்து மிஸ்டர் காம்பெல்லை நோக்கி, "மிஸ்டர் காம்பெல், இந்தப் புல்தரை அகப்பட்டது உங்களுக்குப் பெரிய அதிர்ஷ்டம் என்று எண்ணுகிறேன். நமக்குப் பின் பாகத்திலிருக்கும் காட்டைப்போன்ற பிரதேசத்தை இம்மாதிரியாக்குவதென்றால் எவ்வளவு ஏறிகள் என்ன வேலை செய்திருக்க வேண்டும்! புதிதாய் வந்து குடியேறுபவர்க்கு இது ஒரு பாக்கியமென்றே சொல்ல வேண்டும்," என்றான்.

"அப்படியே நானும் நினைக்கிறேன்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"நல்லது, ஐயா; தங்களுக்கு ஆட்சேபணை யொன்றும் இல்லாவிடின் உடனே வேலை ஆரம்பிக்கப்படவேண்டும். ஏனெனில் ஒரு நாளென்றால் ஒருநாள்தான். ஏறி வேலை செய்யக்கூடும் ஐந்து ஆறு ஆள்களை இட்டுக்கொண்டு காட்டிற்குள் சென்று வேலை ஆரம்பிக்கிறோம். நீங்களும் காப்டினுமாகச் சேர்ந்து வீடுகட்ட இடம் ஒன்று அதற்குள் தீர்மானித்து வையுங்கள். மற்றைச் சேவகர்கள் இன்றிரவைக் கழிப்பதற்காகக் கூடாரங்களை அடிக்கட்டும். ஏனென்றால் உங்களுக்கெல்லாம் குடியிருக்கத் தகுந்த வீடு அடுத்த பௌர்ணமிக்குள் கட்டி முடிந்துவிடுமென்று நினைக்கக்கூடாது.

கால்மணி நேரத்திற்குள் எல்லாரும் போக ஆரம்பித்தனர். ஹென்றியும் ஆல்ப்ரெடும் தங்களுடைய கோடரிகளை எடுத்துச் சென்றார்கள். மார்ட்டினும் சேவகரில் ஆறுபேரும் பின்றொடர்ந்து சென்றனர். மற்றவர்கள் சாமான்களை இறக்குவதும் கூடாரங்களை யடிப்பதுமாயிருந்தனர். காப்டின் ஸிங்க்ளேரும் மிஸ்டர் காம்பெல்லுமாக வீடுகட்டுவதற்கேற்ற

விடத்தைப் பொறுக்கி எடுக்க நிலத்தைச் சோதனை செய்து கொண்டிருந்தனர். மிஸிஸ் காம்பெல் மேட்டில் உட்கார்ந்து மூட்டைகள் இறக்குவதை மேற்பார்வை பார்த்துக்கொண்டிருந்தாள். பர்ஸிவல் அவள் சொல்வதற் கிணங்கி உடனே உபயோகத்திற்கு வேண்டியிருக்கும் சாமான்களைக்கொண்டு வந்து சேர்த்துக்கொண்டிருந்தான். மேரிக்கும் எம்மாவுக்கும் அலுவல் ஒன்றுமிராமல் ஜான் பின்றொடர வாய்க்காலின் கரையோரமாக மேலே காட்டை நோக்கிச் சென்றார்கள்.

நீரோட்டத்தைப் பார்த்தவுடன் ஜான், "என் பெட்டியிருந்தால் நன்றாயிருக்குமே!" என்றான்.

"ஜான்! எதற்காகப் பெட்டி வேண்டுமென்கிறாய்?" என்றாள் மேரி.

"ஏனெனில் என் தூண்டில்முள் அதிலிருக்கிறது."

"ஏன்? இந்தச் சிறிய கால்வாயில்கூட ஏதாவது மீனைக் காண்கிறாயா வென்ன?" என்றாள் எம்மா.

"ஆம்," என்று சொல்லிக்கொண்டு ஜான் மேலே நடந்து சென்றான்.

மேரியும் எம்மாவும் அப்போதைக்கப்போது தாங்கள் அதுவரையில் அறியாத புஷ்பங்களை எடுத்துக்கொண்டு பின்றொடர்ந்துசென்று ஜானைப்போய்ப் பிடித்ததும், வாய்க்காலுக்கு அக்கரையில் அசையாமல் நின்றுகொண்டிருந்த ஓர் உருவத்தைக் கண்டு சுட்டிக் காட்டிக் கொண்டு அவனும் நிலையாகவே நின்றுகொண்டிருந்தான். மான்தோலையுடுத்திக்கொண்டு, துப்பாக்கியை யூன்றியபடி, தங்களையேவெறித்துப் பார்த்துக்கொண்டு நின்ற உயர்ந்த மெலிந்த ஓர் ஆளைக்கண்டவுடன் இரண்டு பெண்களும் திடுக்கிட்டுப்பின்வாங்கினார்கள். அவனுடைய முகம் வெயில் மழையில் அடிபட்டுப் பழுப்புற்றிருந்தது. ஒருகால் அவன் இந்தியனோ அல்லனோஎன்று சொல்லும்படியாகக்கூட அவ்வளவு கறுப்பாய் இருந்தான்.



"எம்மா! இவன்தான் அந்த வேட்டைக்காரனாயிருக்க வேண்டும். நாம் கியூபெக்கில் கண்ட இந்தியர்களைப்போல் இவனுடைய உடுப்புகள் இல்லை," என்றாள் மேரி.

"அப்படித்தானிருக்கவேண்டும்; இவன் பேசமாட்டானோ"? என்றாள் எம்மா.

"சற்றுப் பொறுத்துப் பார்ப்போம்," என்றாள் மேரி.

ஒரு நிமிஷத்துக்குமேல் பொறுத்தும் அந்த ஆள் பேசவுமில்லை, இடத்தைவிட்டு நகரவுமில்லை.

எம்மா கடைசியில், "மேரி, நான் அவனுடன்பேசிப்பார்க்கிறேன்," என்று சொல்லிவிட்டு, அவனைநோக்கி, "ஏண்டா அப்பா! நீதானே மலாச்சிபோன்? அல்லவோ?" என்றாள்.

அவன் ஆழ்ந்த குரலுடன், "அதுதான் என் பெயர். அதிருக்கட்டும். நீங்கள் யாவர்? இங்கே என்ன அலுவல்? இம்மாதிரி இங்கே வந்திருப்பது ஏன்? இம்மாதிரி கலகம் செய்வதெதனால்? என்ன? கோட்டையிலிருந்து ஒரு விஷமச் சேஷ்டையோ?" என்று கேட்டான்.

"கலகமா! நாங்கள் அவ்வளவு சத்தம் போடுகிறோமா? அல்ல; இதொரு விஷமச் சேஷ்டையல்ல; நாங்கள் இங்கே குடியேற வந்திருக்கிறோம். நாங்கள் உனக்கு அயலார்கள்."

"இங்கே குடியேறவா! என்ன பெண்ணே! கேலிபண்ணுகிறாய்போலும்! நீயாவது இங்கே குடியேறவாவது!"

"ஆம், உள்ளபடியே நாங்கள் செய்யப்போகிறோம். வேட்டைக்கார மார்ட்டின் சூபரை உனக்குத் தெரியாது? அவன் எங்களுடன் வந்திருக்கிறான். நீங்கள் வீடு என்று சொல்லுவதைக் கட்டுவதற்காக மரம் வெட்ட இப்போது காட்டிற்குப் போயிருக்கிறான்," என்று சொல்லிவிட்டு மேரியை நோக்கித் தாழ்ந்த குரலோடு, "மேரி! மேலுக்குமட்டும் தைரியமாகப் பேசுவதுபோல் நடிக்கிறேனேயல்லாமல், உள்ளபடி அவனிடத்தில் எனக்குத் திகில் தான்," என்றாள்.

"மார்ட்டின் சூபரா? ஆம், அவனை நானறிவேன்," என்று சொல்லிவிட்டு, துப்பாக்கியை அக்குளில் அடக்கிக்கொண்டு சக்கரித்துத் திரும்பி உபசாரவார்த்தை ஒன்றேனும் சொல்லாமல் தன்னுடையகுடிசையை நோக்கிச்சென்றுவிட்டான்.

சற்று நேரம் அவன் கண்ணுக்கு மறைகிறவரையில் அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பிறகு தன் சகோதரியைப்பார்த்து, "நல்லது, எம்மா! இந்தக்கிழ மஹானுபாவருக்கு மட்டு மரியாதையென்பது அதிகமாகத் தெரியாதுபோலும். நாம் திரும்பிப்போய் நமக்கு முதல் முதலில் நடந்த சம்பவத்தைத் தெரிவிப்போமே," என்றாள் மேரி.

"ஆல்ப்ரெட்டும் மார்ட்டின்சூபரும் வேலை செய்யும் இடத்திற்குப் போய்ச்சொல்லலாமே," என்றாள் எம்மா.

அப்படியே இரண்டு பேர்களும் ஆள்கள் மரம் வெட்டிக்கொண்டிருந்த விடத்திற்குச்சென்று ஆல்ப்ரெடுக்கும் மார்ட்டினுக்கும் நடந்ததையெல்லாம் சொன்னார்கள்.

"ஸரி; நாம்இவ்விடம் வசிக்கவந்ததில் அவனுக்குக்கோபந்தான் என்று விளங்குகிறது," என்றான் மார்ட்டின். "வனவாசிகளான இந்தியருக்கு அந்நிய மனிதர்களுடன் சகவாசம் செய்வதென்றால் கசப்புத்தான். அவர்கள் வாழ்நாள் முழுவதும் அவர்களுக்குத் தோழர்கள் வனாந்தரத்திலிருக்கும் விருட்சங்கள்; அவர்களுக்குத்துணை காட்டில்திரியும் மிருகங்கள்; இப்படி நடுக்காட்டில் மிருகங்களையும் கனவிலும் மிருகங்களையுமே கண்டு கொண்டு மனிதரின் சகவாசமே அற்றுப்போயிருந்தவர்கள் என்றால், வேறுமனிதருடன் கலந்திருக்க எப்படி இயலும்? எல்லாவற்றுக்கும் வழக்கம்தானே காரணம். நானும் ஒருசமயம் இங்கிலையிலிருந்ததுண்டு. அவனிடம் போய் நான் பேசிவருகிறேன். அவனுக்கு இஷ்டமில்லை என்றால் அவன் இவ்விடம் விட்டுக் கிளம்பவேண்டியதுதான்."



"அவனுடன் தான் அவனுடைய மனைவி ஒருத்தி இரு
க்கிறாளே. பேசும் வழக்கம் அவளுக்கு இல்லை என்கிறாயே?
எனக்கு விளங்கவில்லை," என்றான் ஆல்ப்ரெட்.
"ஐயா! இந்தியப்பெண்கள் வலுவிலேயே பேசாது.
கேட்டகேள்விக்குத்தான் பதில் சொல்லும்," என்றான் மா
ர்ட்டின்.
"ஆகா! என்ன நலம்!" என்றான் ஆல்ப்ரெட் சிரித்
துக்கொண்டே; "எம்மா! எனக்கும் ஓர் இந்தியப்பெண்
கிடைக்கமாட்டாளா என்று நான் இனி கவனிக்கிறேன்."
"ஆகட்டும், ஐயா, அப்படியே செய்யுங்கள்," என்றாள்
எம்மா; "ஆனால் தமக்கு வாய் அரை நாழிகூட சும்மா
இருக்காதே? ஆனால் தாமே பேசிக்கொள்வீர்கள்," என்று
விஷமப்பார்வையுடன் சொல்லிவிட்டு, "நாம்செல்வோம், வா,
மேரி, நமது அம்மான்சேய் இந்தியப்பெண் மேல் கொண்டி
ருக்கும் தியானத்தை நாம் கலைக்கவேண்டாம்."
கோட்டைத் தலைவர் பொறுக்கி யனுப்பின ஆள்கள்
எறி வேலையில் நன்கு பழகினவர்கள். இருட்டுவதற்கு முன்
அநேக மரங்கள் வெட்டப்பட்டுச்சதுரித்து, வாளறுப்புக்குத்
தயாராகிவிட்டன. கூடாரங்களெல்லாம் அடித்தாய்விட்டன.
அவை காம்பெல்லுக்காக நாம் ஏற்கனவே சொல்லியிருந்த
திடலிலும், அதிலிருந்து சுமார் நூறு கஜத்துக்கப்பால் காப்
ட்டின் ஸிங்க்ளேருக்கும் போர்ச்சேவகர்களுக்குமாக. அடிக்
கப்பட்டிருந்தன. தீக்கள் மூட்டப்பட்டன. பகலில் செய்த
உணவு சீதளமானதாயிருந்ததால் இப்போது இரவில் செய்
யும் போஜனத்திற்காக மார்ட்டினும் மிஸிஸ் காம்பெல்லு
மாகச்சேர்ந்து பெண்களையும் சிறிய பையன்களையும் உதவி
யாகவைத்துக் கொண்டு சுடச்சுடச் சமயல் செய்து வைத்தி
ருந்தனர். உணவுகழிந்ததும் சீக்கிரமாகவே படுக்கப்போனார்
கள். அபாயம் வந்தால் குலைத்துதவி செய்யுமென்று கருதி

நாய்களைப் பல திக்குகளில் கட்டியும், காவலுக்கு ஒரு சேவகனையும் போட்டுக் காப்டின் ஸிங்க்ளேர் ஏற்பாடுகள் செய்தார். ஆனால் அபாயத்துக்கு ஹேது இருக்குமோ என்பது சந்தேகம் தான்: ஏனெனில் கொஞ்சநாளாக ப்ராண்டினுக் கோட்டைக்குச் சுற்றுவட்டத்தில் இந்தியர்கள் பெரும்பாலும் அடங்கியிருந்தனர்போலும்.

## அத்தியாயம் 12.

மறுநாள்காலையில் எல்லோரும் எழுந்துகைகால் கழுவிவிட்டு, எல்லோரும் சேர்ந்து ஆண்டவனை வழக்கம்போல் துதி செய்துவிட்டு, காலையுணவு அருந்தினார்கள். பிறகு, மார்ட்டின் ரூபர் மலாச்சிபோனிடம் சென்றுபேசி அறிந்துகொண்டுவந்த விஷயங்களைச் சொன்னான். இவர்கள் வந்ததில் அவனுக்கு மிக்க அதிருப்திதான். இவர்கள் இங்கேயே நெடுநாள் தங்கியிருக்க வந்திருந்தார்களேயானால், அவன் தனது குடிசையைப் பேர்த்துக்கொண்டு வேறு இடம் தேடிப்போவதாகத் தீர்மானம் செய்துவிட்டான். வேறொரு இந்தியனாக இருந்தால், இவர்களுக்கு உபத்திரவம் செய்யும் வண்ணம் தனதினத்தாரைக்கொணர்ந்து விட்டுக் கொண்டு ஜோராவரி செய்ய யத்தினம் செய்வான். ஆனால்இவனோ அப்படிப்பட்ட துஷ்டப் பிரகிருதி அல்ல. மிஸிஸ் காம்பெல் இளகிய நெஞ்சமுள்ளவள் ஆதலால், “நமக்கு இவ்விடம்தங்கிஇருக்க பாத்தியம் ஜாஸ்தி, அவனுக்குக் குறைச்சலோ? நமக்கிடம் கொடுக்க அவன் கிளம்பிப் போகவாவது? நாமிருவரும் ஒருவரோடு ஒருவர் ஸ்நேஹமாக அண்டையில் வாஸம் செய்து வாழக்கூடாதோ?” என்றாள்.

“அவனுக்குக் கூட்டமென்றால் உதவாதாம்,” என்றான் மார்ட்டின்.

“மத்தியில் தான் ஆறு ஓடுகிறதே?”

“அதென்னவோ,” என்றான் மார்ட்டின்; “அவனுக்குத்



தோன்றுவதப்படி. அவனது பிடிவாதத்தைக்கண்டு, ஒரு
சமயம் மிஸ்டர் காம்பெல்லே உன்னுடைய நிலத்தை கிரயத்
திற்கு வாங்கினாலும் வாங்கிக்கொள்வார்,’ என்றுகூடச் சொ
ல்லிவிட்டேன்; அவனும் அதற்குச் சம்மதமாகவே இருக்
கிறான்.

அதைக்கேட்டவுடன், இந்த நிலத்தை வாங்கினால் பிந்தி
மிகவும் சவுகரியங்கள் ஏற்படும் என்று காப்டின்ஸிங்க்ளேர்
அவனுடன் சிபார்சு செய்யவே, அப்படியே தீர்மானித்து
மார்ட்டின்ரூபர் மூலமாகவே கிரயசாஸனம் பெறுவதற்கு
வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துமுடிக்க மிஸ்டர் காம்பெல்
அனுமதி கொடுத்தார்.

முதல் நாளைப்போல் வீடுகட்டச்சாமான் சேகரம்செய்
யும் அலுவலிலேயே இரண்டாவதுநாளும் கழிக்கப்பட்டது.
எதிர்பாராத உதவி கிடைத்தபடியால் வீடுகட்ட ஏற்கனவே
இருந்த உத்தேசத்தைவிட மிகப்பெரிதாக காப்டின் ஸிங்க்
ளேரின் சொல்லுக்கிணங்கித்திட்டம் போடப்பட்டது.போர்
ச்சேவகர்களுக்குக்கூலியாக மிஸ்டர்காம்பெல் அன்றையன்
றைக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தும் வந்தபடியால், ஜாஸ்
திநாள் அவர்களை வைத்துக்கொள்வதிற்கூட பாதகம் இருக்
காதென்று எண்ணினார். அவர்களில் இருவர் நல்ல தச்சுவே
லைக்காரர்கள். ஆகையால் கதவுகளையும் மிஸ்டர் காம்பெல்
தம்முடன் கொண்டுவந்திருந்த பலகணிச் சட்டங்களையும்
கோக்க வேண்டிய கட்டுச்சட்டங்களை அறுக்கும் பொருட்டு
ஒரு வாள் குழி வெட்டப்பட்டது. மூன்றாவது தினத்தில்
கோட்டைத் தலைவரிடமிருந்து நன்கொடையாக இரண்டு
மான்களும், போர்ச்சேவகர்களுக்குச் சாப்பாட்டுச் சாமான்
களும் படகில் வந்துசேர்ந்தன. காப்டின் ஸிங்க்ளேர் சில
சாமான்களைக் கொண்டுவர அபேட்சித்துஅந்தப் படகிலே
டுபோய் அன்று சாயங்காலமே திரும்பிவிட்டார். கால

சுபாவம் நேர்த்தியாகவே இருந்தவர ஒரு வாரத்திற்குள் ஏராளமாக மரங்கள் வெட்டப்பட்டு, சதுரிக்கப்பட்டன. இதற்கிடையில் மார்ட்டினுக்கும் கிழ வேட்டைக் காரனுக்கும் பேச்சு நடந்துவந்து, அவனுடைய நிலத்தையும் மிஸ்டர் காம்பெல்லுக்கு விற்றுவிடுவதாகத் தீர்மானம் செய்தாய்விட்டது. பணத்தின்மேல் கிழவன் ஆசைகொண்டவனாகத் தெரியவில்லை. சொல்லப்போனால் பணம் அவனுக்கு உதவியற்றதாகவே இருந்தது. அவனுக்குத் தேவையுள்ளவை வெடிமருந்து, ஈயக் குண்டு, சிக்கிமுக்கிக் கல்லு, கம்பளப் போர்வைகள், புகையிலை, இவைகளேயாம். ஆனால் ஒவ்வொன்றிலும் எத்தனை யென்றுமட்டும் தீர்மானிக்கவில்லை.

கிழவேட்டைக்காரனுக்கும் ஜானுக்கும்மாத்திரம் ஒருவித அந்தரங்கமான சேர்க்கை உண்டாகிவிட்டது. அது எவ்விதத்தாலென்று மட்டும் புலப்படவில்லை. ஏனெனில் இவனும் சரி, அவனும் சரி, பேச்சு விஷயத்தில் வெகுகட்டு. ஜான் எப்படியோ வாய்க்காலைத் தாண்டிப்போய்விடுவான். சாப்பாடு வேளையில்கூட அவனைக் காணுவது அரிதாய்விட்டது. மார்ட்டின் சொன்னதில் அவன் கிழவேட்டைக்காரனுடைய குடிசையில் இருந்தானென்றும், ஆகையினால் அவனுக்கு தீங்கு யாதும் வராதென்றும் தெரியவந்தது. அதற்குப் பிறகு மிஸிஸ் காம்பெல்லுக்குக் கவலை நீங்கிற்று.

ஒரு நாள் அந்திச் சாப்பாடானவுடன் சுத்தி செய்து கொண்டு இருக்கும்போது மிஸிஸ் காம்பெல் மார்ட்டினை நோக்கி, "ஆனால் அவன் அங்கே என்ன செய்கிறான், மார்ட்டின்?" என்றான்.

"ஒன்றுமில்லை: இந்தியப் பெண்ணையாவது, அல்லது மலாச்சி துப்பாக்கியைத்துடைப்பதையாவது, அல்லதுஎன்ன கண்ணுக்குத் தென்படுமோ அதையாவது பார்த்துக்கொண்டிருப்பதுதான். நான்பார்த்தவரையில் அவன்வாயைத்திறந்து



பேசினதேயில்லை. ஆகையால்தான் மலாச்சிக்கிழவனுக்கு அவனைக்கண்டால் அவ்வளவு பிடித்தம்."

"இன்றுதினம் அந்தியில் ஒருகூடை நிறைய டிரௌட் மீன் கொணர்ந்திருக்கும்போது அவன் காலத்தை முற்றிலும் வீணாகச் செலவழிக்கவில்லை போலும்." என்றாள் மேரி.

"இல்லை, அம்மணி! அவன் பகலில் மீன் பிடித்துப்பாதியைக் கிழப்போனுக்குக் கொடுத்துவிட்டு, மற்றொருபாதியை வீட்டிற்குக் கொண்டு வருகிறான். கிழமலாச்சி சொல்வதைப் பார்த்தால் அவன் சிலநாள்களுக்குள் ஒரு வேடனாய்விடுவான் போலும். இப்போதே ஒரு கைக்காரனைப்போல் கிழவன் துப்பாக்கியில் உண்டை இழுப்பானே!" என்றான் மார்ட்டின்.

"நீ சொல்வதெப்படி?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"அம்மா நான் சொல்வதென்னவென்றால், கிழவனுடைய துப்பாக்கி தூக்கப்பளுவானதாயினும் அதைத்தூக்கி, வைத்த குறியைக் கணக்காய்ச் சுடுவானே, என்பதுதான். அவனுக்கு இன்னும் கொஞ்சம் சிறியதாயிருந்தால் நலமாகும்"

"ஆனாலவ்வளவு சிறுவயதில் அவன் கையில் துப்பாக்கியைக் கொடுக்கலாமா, மாமா?" என்றாள் மேரி.

அதற்குள் மார்ட்டின், "இல்லை அம்மணி! இவ்விடத்தில் இருக்கும் ஒருவருக்கும் அதிபாலியம் என்கிற சாக்கே இருக்கக்கூடாது. எவ்வளவு சீக்கிரத்தில் ஒருபையன் உதவிசெய்ய லாயக்காகிறானோ அவ்வளவும் நல்லது. ஒரு பையன்கையில் துப்பாக்கியிருந்தால் அவன் ஒரு ஆளுக்குச் சமமாவான். ஏனெனில் ஒரு துப்பாக்கி யாருடைய கையிலிருந்தாலும் குறிதப்பாமல் சுட்டால் கொன்றேவிடும். குழந்தை பர்ஸிவலுக்கும் எனக்குச் சற்றுநேரம் ஒழிவு கொடுத்தவுடன் துப்பாக்கிப் பழக்கத்தைக் கற்பித்து விடுவேன்," என்றான்.

“மார்ட்டின்! உனக்கு இப்போது அவகாசம் இருக்கக் கூடாதா?” என்று கூவினான் பர்ஸிவல்.

“அத்தை! நீங்களே துப்பாக்கியை மருந்து கெட்டித்துச்சுடக் கற்றுக் கொள்வதாகப் பிரதிக்ஞை செய்தீர்களே, மறந்து விட்டீர்களோ?” என்றாள் மேரி.

“இல்லவே இல்லை; பொழுது இடங்கொடுத்தவுடன் நிறைவேற்றப் போகிறேன்; ஆனால் ஜான் அவ்வளவு சிறியவனாயிற்றே?” என்றாள் மிஸிஸ் காம்பெல்.

“நல்லது மேரி, நாமும் பெயர்களைத் தாக்கல் செய்ய வேண்டும்போல் தோற்றுகிறது,” என்றாள் எம்மா.

“ஆம், நாம் ஒரு பெண் துப்பாக்கிப் படையாவோம்,” என்று மேரி நகைத்துக்கொண்டு கூறினாள்.

“பேஷ்! எனக்கும் அது பிடித்திருக்கிறது,” என்று எம்மா சொல்லிக்கொண்டு, ஆல்ப்ரெடைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு, “இனிஜாக்கிரதை, ஆல்ப்ரெட்; இடவெட்டாக யாராவது பேசினால் என்னிடம் துப்பாக்கி இருக்கிறது, ஞாபகம் இருக்கட்டும்,” என்றாள்.

ஆல்ப்ரெட் சற்று நகைத்துக்கொண்டு, “உன் துப்பாக்கியின் யோக்கியதை என்னவோ, இருக்கட்டும்; உன் கண்கள் கொலைசெய்யும் என்பது திண்ணம்,” என்றான்.

“அது ஒரு கடாப்புலி ஆனால் ஒன்றுக்கும் அசையாதே என்னசெய்கிறது,” என்றாள் எம்மா”. மாமா! மாமா! அதோ பாருங்கள்! மலாச்சிக்கிழவன் தடதடவென்று வருகிறானே! பின்னால் ஜானும் குடுகுடு என்று ஓடிவருவதைப்பாருங்கள்! எனக்கு அப்போதேதெரியும். அந்த வேடன்வராது இருக்க மாட்டான். எங்களைக்கண்டுவிட்டானல்லவா?

அவள் இப்படிச் சொல்லி முடித்ததும் கிழ மலாச்சி போன் வந்து வாயைத்திறவாமல், துப்பாக்கியை முழங்கால்களுக்குள் இடுக்கிக்கொண்டு, தானாகவே உட்கார்ந்தான்.



“தங்கள் அடிமைக்காரன், ஐயா! வரவேண்டும். ஸௌக்கியம் தானே?” என்றார் மிஸ்டர் காம்பெல்.

போன் தன்னைச் சுற்றிநோக்கி, “உங்களுக்கு இங்கே வரவேண்டுமென்று என் தலைவிதியா? நீங்கள் இந்தக்காற்று வெளிக்கேற்றவர்கள் அல்லர்! சீதகாலம்சீக்கிரம்வந்துவிடும். அப்போது நீங்கள் திரும்பிப்போய்விடுவீர்களென்று நானெண்ணுகிறேன்,” என்றான்.

“அன்று; எங்களுக்கு அந்தஉத்தேசமில்லை. ஏனெனில், எங்களுக்குப்போகவிடமொன்றும் கிடையாது. அதுவுமன்றி நாங்கள் விட்டுவந்த விடம் மிகவும் நெருக்கடியாக இடமடைந்தது. இங்கே அதிகம் இடம் கிடைக்குமென்றேவந்திருக்கிறோம்” என்றான் ஆல்ப்ரெட்.

“நீங்கள் இங்கே இருப்பது எனக்கு இடைஞ்சலாக இருக்கும்; ஆகையால் நான் இன்னும் எட்டாக்கைக்குப் போகிறேன்,” என்றான் வேடன்.

“நல்லது, மலாச்சி, உன்னுடைய நிலத்துக்குள்ள கிரயத்தை இவர் கொடுத்து விடுவார். நான்தான் உனக்கப்படியே சொன்னேனே,” என்றான் மார்ட்டின்.

“ஆம், நீ சொன்னாய்; ஆனால் அவர்களுடைய சாமான்களும் என்னுடையகண்ணில் படாதிருந்தால் நலமாயிருக்கும்.”

“சாமான்களென்றால் என்ன பொருள்? இங்கேயிருக்கும் எங்களைப்போலொத்தவர்களோ?” என்றாள் எம்மா.

“பெண்ணே: அன்று; நான் எண்ணியது வெடிமருந்தும் அதைப்போன்றவைகளும்.”

“எம்மா: கடைசியில் சொல்லப்பட்டபதத்தில் நீ அடங்கியிருக்கிறாய்போலும்,” என்றான் ஆல்ப்ரெட். “அம்மட்டுப் பெருமைகூட உனக்குக் கிடையாதே? ஏனெனில் ஈயக்குண்டைப்பற்றி அவன் ஒன்றும் பிரஸ்தாபிக்கவே இல்லையே!” என்று திருப்பி விட்டாள் எம்மா.

"மார்ட்டின் சூபர்! உடன்படிக்கைப் பத்திரத்தில் ஈயக் குண்டைப்பற்றிக் குறித்துச் சொல்லியிருக்கிறேனே, உனக்கும் தெரியுமே?" என்றான் மலாச்சிபோன்.

"ஆம்! தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள்; தங்களுக்குச் சட்டாயம் கிடைக்கும். தங்களுடைய நிபந்தனைகளை இப்போதே சொல்லி விடுங்கள்; நான் முடித்து விடுகிறேன்," என்று கூறினார் மிஸ்டர் காம்பெல்.

"பரதேசத்தாரே! நல்லது, அந்த விஷயத்தை மார்ட்டினுக்கும் உபக்கும் ஒப்புக்சட்டியிருக்கிறேன். நான் தொலைகிறேன் நாளைத்தினமே."

"நாளைக்கா? எங்கேபோகப்போகிறீர்கள்?"

மேற்றிசையைக் காட்டிச் சற்றுக்கெல்லாம் அந்தக்கிழவேடன், "என் துப்பாக்கிச் சத்தம் உங்கள் காதில் விழாது; ஆனால் எனக்குத் தோன்றுகிறதில் நீங்கள் இங்கே தரிக்கவே மாட்டீர்கள். இந்தியருடைய திண்டாட்ட வாழ்வு உங்களுக்குத் தெரியாத விஷயம். உங்களைப் போன்றவர்களுக்கு அது ஒத்துக் கொள்ளவே கொள்ளாது," என்று சொல்லிவிட்டு, ஜான்தலையின்மீது கையை வைத்துக்கொண்டு, "இந்தப்பையன் ஒருவன் நீங்கலாக உங்களில் எவரும் காட்டுப் பிழைப்புக்கு ஏற்றவர்கள் அல்லர். இவன் என்னுடன்கூட வரட்டும். நான் அவனை ஒருகைதேர்ந்த வேட்டைக்காரனாக்கி விடுவேன்; மாட்டேனா மார்ட்டின்?" என்று சொன்னான்.

"ஆம், செய்து விடுவாய்! ஆனால் அவனை விட அவர்கள் சம்மதித்தா லல்லவோ?"

"அவனை விட்டு முற்றிலும் பிரிந்திரோம். ஆனால் தங்களுக்கு வேண்டுமென்றால் அவன் அடிக்கடி தங்களை வந்து பார்க்கட்டும்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"நல்லது, அது பேச்சுத்தானா? சரி! நான் முன்பு உத்தேசித்தாற்போல் அவ்வளவு எட்டப்போகவில்லை. அவன்



நன்றாய்க் குறிவைத்தடிக்கிறான். அவனை யழைத்துப்போகப்
பிற்பாடு நானேவருகிறேன்," என்றுசொல்லிமுடித்துவிட்டு,
அக்கிழவன் எழுந்து சென்றான் ஜானும் பின்னேசென்றான்.
ஒருவரோடும் ஒரு வார்த்தைக் கூடக் கிடையாது.
ஜானைப்பற்றி என்ன செய்கிறதென்று எல்லோருக்கும்
கவலையாகவிருந்தது. அவனுடையபோக்கே ஒரு தினுஸாகக்
காணப்பட்டது. மலாச்சியுடன் எப்போதும் ஒட்டிக்கொண்
டிருந்தான். ஜானுடைய பிடிவாதகுணம்எல்லோருக்கும்தெரி
ந்த விஷயம். இந்த விஷயமாகக் கட்டுப்பாடுசெய்வதென்றால்
ஜான் அதற்குத் தனக்கிஷ்டமிருந்தாலொழிய இணங்கான்.
பின் செய்வதென்ன? மார்ட்டின் சொன்ன யோசனை
மிகவும் நல்லதாக இருந்தது. புஸ்தகப்படிப்பென்றால் ஜானு
க்கு விஷம்போலும். வனவாஸ வித்தைகளில்அவனுக்கு இய
ற்கையாகவே இன்றியமையாத ஊக்கமிருந்தமையால், இவை
களை அவன் நன்றாகக் கற்றுக்கொள்ளட்டுமே. இக்குடும்பத்
தார் இனி இந்த வனாந்தரங்களிலேயே வாஸம் செய்யவேண்
டியவர்களாதலால், அதற்குரிய வித்தைகளில் அவர்களுள்
ஒருவன் தேர்ச்சியடைவதும் நலம்தானே. மேலும், மலாச்
சிக்கிழவனுக்கும் இந்தப்பையனிடத்தில் ஒரு பிடிப்பு ஏற்பட்
டுப்போய்விட்டது. இவனைத்தனது சொந்த பிள்ளைபோலவே
பாவித்துப் பாராட்டி வந்தான். ஆதலால் இவனைப்பற்றி
யாகவாவது இக்குடும்பத்தார் பேரில் அவ்விந்தியன் கொண்
டிருந்தது வேஷம் விலகி, இவர்களுக்கு அவ்வனாந்தரத்தில் ஆப
த்து வருங்காலத்தில் மலாச்சி உதவிபுரியானா? மலாச்சி இனி,
தனது ஜாகை ஏற்படுத்திக்கொள்ளப் போவது இந்தியர்களு
க்கும் மேற்றிசையில். ஆகையால் மேற்றிசை இந்தியர்களுக்
கும் தங்களுக்கும் நடுப்பிரதேசத்தில் மலாச்சியைப் போன்ற
ஒரு நண்பனமைவது எல்லாவற்றிற்கும் நல்லதல்லவா? எல்
லாவற்றையும் யோசித்து, காப்டின் ஸிங்க்ளேருடைய நேர

ச்சமும் அதற்கிணங்கியிருந்தமையால் தற்காலம் இப்போது போல ஜான் மலாச்சியுடன் போய் வந்து கொண்டிருக்கட்டும். அதைத் தடுக்கவேண்டாம்; என்று யோசனை செய்து முடிக்கப்பெற்றது.

## அத்தியாயம்—13.

இதற்குமேல் ஆறுவாரங்கள் சென்றதாக நாம் வைத்துக்கொள்ளவேண்டும். அதற்குள்ளாக வேலை நிற்காமல் நடந்து கட்டைகள் நன்றாய்ச்சதுரித்துப் பொருத்தப்பட்டு ஒரு வீடு கட்டியாய்விட்டது. கதவுகளும் ஜன்னல்களும் பூட்டப் பட்டுவிட்டன. கூறைக்குக்கைமரங்களை யடித்து அதன்மேல் பர்ச்சு (Birch) மரப்பட்டைகளை தைத்துமாய்விட்டது. இந்த வீட்டில் அடங்கியவை எவையென்றால் — உணவுச் சாலையாகிய ஒரு பெரிய அறை, களிமண்ணால் கெட்டிக்கப் பட்ட தரையுள்ள ஒரு பாகசாலை, உட்காருவதற்கு ஒரு சிறிய அறை, மூன்று படுக்கையறைகள்— இவைகளேயாம். இவைகளுக்குப் பலகையால் தளம் போடப் பட்டிருந்தது. இவைகளுள் பெரியதான அறையில் கப்பலில் இருப்பது போல் சுவரில் சுற்றிலும் மஞ்சப் பலகைகள் தைக்கப்பட்டுள்ளன. நான்கு பையன்களுக்குமிந்த அறைதான். அதில் கணக்குக்கு மேல் இரண்டு மஞ்சப் பலகைகளுமிருந்தன. மற்றொன்று இரண்டு பெண்களுக்கும், மூன்றாவது மிஸ்டர், மிஸிஸ் காம்பெல் இவ்விருவருக்கும் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் சிறியவைதாம். ஆனால் வீடு பாதி கட்டியாவதற்கு முந்தியே மிஸ்டர் காம்பெல் கொணர்ந்திருந்த பண்டங்களை யடக்கம் செய்யப் பண்டகசாலை ஒன்று கட்டி முடித்தாய்விட்டது. அதற்குமேல் மச்சில் ஒரு களஞ்சியமும் அமைக்கப்பட்டுள்ளது. கூடாரத்தில் தூங்குவதில் கொசுக்களால் உபத்திரவம் மிகுதியாயிருந்தபடியால் புதிய வீட்டிற்குள்ளேயே ஏற்கைக்குறைவாயிருந்தாலும் படுக்கலாமெ



ன்று தட்டுமுட்டுச் சாமான்களெல்லாம் உள்ளே கொணர்ந்தாய்விட்டது. ஆனாலும், அவைகள் இன்னும் தம்தம் மிடங்களில் சரியாய்ப்பொருத்தப்படவில்லை. ஆனால் பண்டங்களுக்கும் மழைவெயிலிலிருந்து காப்புண்டாய்விட்டது. அவர்களுக்கும் தலைக்குமேல் கூறை போட்டாய்விட்டது. இதைவிடப் பெரிய காரியம் யாதிருக்கிறது? குடித்தனத்திற்கு வேண்டிய சாமான்களைக் கோர்ப்பதில் தச்சர்களுக்குப் பூராவாக அலுவலிருந்தது. மற்றவர்களும் வேலிகட்டச் சட்டமறுப்பதும், ஜாகையைச்சுற்றி அடைக்க மரத்துண்டுகளை அருவாக்குவதுமாகஇருந்தனர். மார்ட்டினும் சும்மாவில்லை. வீடு கட்டினவிடம் புல்தரையும் குச்சிப்புற்காடும் சந்திக்குமிடமானதால், புற்கட்டைகளை வெட்டிச்சுத்தம்செய்துகொண்டும், சீதகாலத்திற்காக விறகும்வளாறும் சேகரித்துக்கொண்டும் இருந்தான். வாய்க்காலுச்கு அக்கரையில் மலாச்சிபோனுக்குச் சொந்தமாயிருந்த சிறிய குடிசையில் கோட்டையிலிருந்து ஓட்டிக்கொண்டுவரப்பட்ட நான்கு பசுக்களையும் அடைத்துவைக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஏனென்றால் அதைச் சுற்றிலும் உன்னதமானவேலியிருந்ததுடன் இன்னம் கூடக்கொள்ளும் படியான அவ்வளவு விசாலமாகவுமிருந்தது. கோட்டைத் தலைவர் வெகு விசுவாசத்துடன் மிகவும் சாதுவான பசுக்களைப் பொறுக்கி அனுப்பி யிருந்தபடியால், மேரியும் எம்மாவும் அவைகளைச் சேர்ந்த பொறுப்பில் தலைப்பட்டு விட்டார்கள்.

பாற்சாலையொன்றுபிரத்யேகமாக ஏற்படுத்தும் வரையில், பால் பண்டகசாலையிலேயே வைக்கப்பட்டது. வாய்க்காலுக்குக் குறுக்கே மரப்பாலமொன்று நன்கமைக்கப்பட்டு, ஒவ்வொருநாள் காலையிலும் ஹென்றியையாவது ஆல்பிரெடையாவது, அல்லது காப்டின் ஸிங்கிளேரையாவது துணைக்கு அழைத்துக்கொண்டு இரண்டுபெண்களும் போய்வந்து கொ

ண்டிருந்தார்கள். சில நாட்களுக்குள் கைதேர்ந்த இடைச்சியராய் விட்டார்கள்! எல்லாவற்றையும் பார்த்தால் தேர்ச்சியையடையும் தோற்றமிருந்தது. ஆல்ப்ரெடும் மார்ட்டினும் காடுவெட்ட, ஹென்றியும் மிஸ்டர் காம்பெல்லுமாக பூமியைக்கொத்திவெட்டி, அக்காலத்துக்கேற்ற பலத்தைத் தோட்டத்தில் ஏற்றி விட்டனர். பன்றிகளுக்குக் கொட்டில் கட்டியானவுடன் கோட்டைத்தலைவர் சிலபன்றிகளைப் பொறுக்கியனுப்பியதுடன், நடைபெறும் வேலைகள் எந்தப் பருவத்திலிருந்தன வென்பதைத் தெரிந்துகொள்ளும் பொருட்டும், பயன்படக்கூடிய தமக்குத்தெரிந்தயுக்திபுத்திகளைச் சொல்லவும், தாமே நேரில் படகேறி அடிக்கடி வந்துபோய்க்கொண்டிருந்தார்.

மலாச்சிபோனையும் நாம் மறக்கலாகாது. போன் மிஸ்டர் காம்பெல்லுடன் வந்து பேசிப்போன மறுநாளே, துப்பாக்கியை யெடுத்துக்கொண்டு அவன் காட்டிற்குள் நுழைந்துவிட்டதையும் தன் மாமன் மகன் ஜான் பின்றொடர்ந்ததையும் எம்மா பார்த்தாள். அவனுடைய இந்திய மனைவியைப் பார்க்க மிகவும் ஆவல்கொண்டிருந்தமையால், தானும் மேரியுமாக, ஆல்ப்ரெடையும் காப்ட்டின் ஸிங்க்ளேரையும் நல்ல வார்த்தைசொல்லித் துணைக்கழைத்துக்கொண்டு வாய்க்காலைத்தாண்டிச்செல்ல முயன்றார்கள். தாண்டக்கூடிய விடம் எங்கே யிருந்ததென்று கண்டுபிடிப்பது பெரிய காரியமாயிருந்தது. ஆனால்ஜான் தாண்டிச் சென்றிருந்தபடியால் ஓர் இடம் எங்கேயாவது இருக்கத்தான் வேண்டும் என்றெண்ணி, அதைகண்டுபிடிக்கக்கிளம்பினார்கள். வாய்க்காலுக்குச்சுமார் அரை மைல் மேலே காடாயிருக்க, பெரிய மரமொன்று காற்றால் தள்ளப்பட்டு வாய்க்காலுக்குக் குறுக்கே பாலம்போல் கிடந்தது. அந்தச் சிறுவர்களுடைய உதவியைக்கொண்டுமேரியும் எம்மாவும் அதிகக்கஷ்டப்படாமல் தாண்டிவிட்டார்



கள். பிற்பாடு மறுபடியும் திரும்பிக் கரைபோரமாகச் சென்று மலாச்சிக்கிழவனது குடிசைக்கு வந்து சேர்ந்து பார்த்ததில் அங்கே ஒன்றும் கவனம் இல்லாமலிருந்தது. இந்திய ஜாதி நாய் மட்டும் அங்கே குலைத்துக் கொண்டிருந்தது. அப்போது ஒருவரையும் காணாமல் வாசலண்டை நாய் குலைத்துக் கொண்டிருந்தவிடத்திற்கு வந்துபார்க்கவும் தாங்கள் காணவந்த இந்தியப் பெண் தரையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள். அவள்வெகு ஊக்கத்துடன் காலுறை தைத்துக்கொண்டிருந்தாள். அவள் முதலில் ஆல்ப்ரெடை மட்டும்காணவும் திடுக்கிட்டாள் போலும்; ஆனால்கூட இரண்டு சிறிய பெருமாட்டிகள் இருந்ததைக் கண்டவுடன் அவளுக்குப் பயம் தெளிந்துவிட்டது. தன்தலையைச் சற்று வணங்கிவிட்டுத் தன் அலுவலையே தொடர்ந்துசெய்தாள்.

அவள் அதிபாலையாக இருந்தாள். வயது பதினாறுதான் இருக்கும்போல் தோன்றியது. அவளது முகமலர்ச்சியையும், வணக்கவொடுக்கத்தையும் பார்க்க எல்லோருக்கும் இனிமையைத் தந்தன. அவளுடன் சம்பாஷணை செய்ய எம்மாவுக்குவெகு ஆசையாயிருந்தது. ஆயினும் அவளுக்கு இங்கிலீஷ்பாஷை தெரியாது. காப்ட்டின் ஸிங்க்ளேருக்கு இந்தியர்பேசும் பாஷை தெரியும்.

காப்ட்டின் ஸிங்க்ளேர் இந்திய பாஷையில் அவளைப் பார்த்துப் பேசவும், அவள் இனிய தாழ்ந்த குரலுடன் மறுமொழி கூறினாள்.

“தன் கணவன் மான்வேட்டையாடப்போயிருப்பதாகச் சொல்லுகிறாள்.”

“நாம் இங்கே வசிப்பதற்காக வந்திருக்கிறோம் என்றும், அவளுக்கு வேண்டியதைக் கொடுப்போம் என்றும் சொல்லுங்கள்.”

காப்ட்டின் ஸிங்க்ளேர் மறுபடியும் அவளைநோக்கிப்

பேசியதற்குப் பதில்வந்தது. "நீங்கள் அழகிய புஷ்பமென்றும் ஆனாலிந்த வனாந்தரத்துக்கேற்ற காட்டுப்பூ அல்லாததால் சீதளம் உங்களைக்கொன்றுவிடுமென்றும் சொல்லுகிறாள்."

"அடுத்த வஸந்தகாலத்தில் பார்த்தால் நாமெல்லாரும் உயிருடனிருப்பதைக் காணலாமென்று சொல்லுங்கள்," என்று எம்மா சொல்லிவிட்டு, "காப்ட்டின் ஸிங்க்ளேர்! என்னுடைய இந்தப் பதக்கமாட்டலை அவளுக்கு நன்கொடையாகக் கொடுக்கிறேன். எனக்காக அதைப்பூட்டிக்கொள்ளும்படி சொல்லுங்கள்," என்றாள்.

காப்ட்டின் ஸிங்க்ளேர் அந்த ஆபரணத்தை உபசார வார்த்தையுடன் கொடுக்கவும், அவள் நிமிர்ந்து எம்மாவை ஏறிட்டுப்பார்த்துப் புன்னகைப்புடன், 'இந்தச்சிறியபிரப்பம் பழச்செடிக்கு இவ்வளவு விசுவாசத்தைக் காண்பித்த அந்தச் சிங்காரமான அல்லிப்பூவை ஒருபோதும் மறவேன் என்று சொல்லுங்கள்," என்றாள்.

"ஆஹா! அவளுடைய பேச்சு எவ்வளவு அழகாகவும் இனியதாகவுமிருக்கிறது! அவளுக்குக்கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லையே. ஓ! சரி, இருக்கிறது; தந்தத்தால் செய்யப் பட்டுள்ள ஊசிப்பெட்டி ஒன்றிருக்கிறது. அதில் சில ஊசிகளும் இருக்கின்றன. அவளுக்கு அவை உபயோகப்படும் என்று சொல்லி, அதைத் திறந்து உள்ளே யிருப்பதையும் காண்பியுங்கள்," என்றாள் மேரி.

"அவள் இவைகளைக் கொண்டு செம்மையாகவும் மிகவும்விரைவாகவும் வேலைசெய்யலாமென்பதுடன், உன்காலைப் பார்க்கவேண்டு மென்றாள். ஏனெனில் தனது நன்றியைக் காட்டவேண்டுமாம். ஆகையால், மிஸ் பர்ஸிவல்! உன் காலை வெளியில் நீட்டு"

மேரி அப்படியே செய்யவும், இந்தியப்பெண் அதைஉற்றுப் பார்த்து விட்டு, புன்னகையுடன் தன்தலையை ஆட்டினாள்.



"ஓ! காப்ட்டின் ஸிங்க்ளேர்! அவள் கணவனுடன் பின்றொடர்ந்து சென்றிருக்கும் சிறியபையன் எங்களுடைய மாமன் மகன் என்று சொல்லுங்கள்."

"அவன் சிலநாட்களுக்குள் பெரியவேடனாகி யதேஷ்டமாக மிருகங்களைப்பிடித்து வீட்டிற்குக்கொண்டுவருவான்," என்கிற மறுமொழியைக் காப்ட்டின் ஸிங்க்ளேர்கூறினார்.

"நல்லது, அவள் எப்போது வந்தாலும் அவளைப்பார்க்க எங்களுக்கு ஆவலிருக்குமென்று சொல்லிவிட்டு, அவள்பெயரைக்கேட்டுக்கொண்டு, எங்களுடைய பெயர்களையும் அவளுக்குச் சொல்லுங்கள்."

காப்ட்டின் ஸிங்க்ளேர் இதைமொழிபெயர்க்கும்போது அந்த இந்தியப்பெண் மேரி, எம்மா, என்ற பெயர்களை அவர் பின்னோடு சொல்லிப் பாடம் பண்ணிக்கொண்டு தெளிவாயும் உச்சரித்தாள்.

"பார்த்தீர்களா! உங்களுடைய பெயர்கள் அவளுக்கு வந்துவிட்டன. அவளுடையதோ வென்றால் இங்கிலீஷில் மொழிபெயர்த்தால் ஸ்ட்ராபெர்ரிச்செடி என்று ஆகும்."

போய்வருகிறோம் என்று பொருள்படும்படியாகத் தங்கள் தலைகளை இந்தியப்பெண்ணை நோக்கி ஆட்டிவிட்டுத் திரும்பி அவர்கள் வீடு சென்றார்கள்.

இவளைப்பார்த்துவிட்டுப்போன மறுநாள் சாயங்காலம் சாப்பாடு நடந்துகொண்டிருக்கும்போது, வேடனைப்பற்றியும் அவனது இளைய இந்திய மனைவியைப் பற்றியும் பேச்சு ஆரம்பிக்கபட்டவுடன், எப்போதும்போல் மௌனமாகவிருந்துகொண்டிருந்த ஜான் திடீரென்று, "நாளைக்குப்போகிறாள்," என்று குறுக்கிட்டுச் சொன்னான்.

"அவர்கள் நாளையதினமா போகிறார்கள்? ஜான், எவ்விடத்திற்குப் போகிறார்கள்?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"அடவி," என்றான் ஜான்.

ஜான் சொல்லியதன்மையே. மறுநாள் அதிகாலையில் மலாச்சிபோன் தோளில் துப்பாக்கியும் கையில் எறியுமாக மிஸ்டர் காம்பெல்லுக்குச் சொந்தமான புல்தரை பூமியைக் கடந்து போவதைக் கண்டார்கள். அவன் பின்னோடு அவன் மனைவி அவனுக்குச் சொந்தமான சாமான்களை யெல்லாம் கம்பளி மூட்டைகளில் கட்டி, மூட்டைகளை முதுகிலேற்றிக்கொண்டு, பாரந்தாங்கமாட்டாமல் தரையோடு தரையாய்க் கூனிப்போய், சென்று கொண்டிருந்தாள். அதற்கு முந்தினநாளிரவே, தான் போய் ஒரு ஜாகையை ஏற்படுத்திக் கொண்டபிறகு, மிஸ்டர் காம்பெல்லுக்கு விற்கப்பட்ட நிலத்தின் கிரய விஷயமாக அவருடன் பேசிமுடிவு கட்டுவதற்காகத் திரும்பிவருவதாகக் கிழவன் மார்ட்டினிடம் சொல்லியிருந்தான். இது நடந்தது காலையுணவுசமயம். அப்போது பார்த்தால் ஜானை எங்கேயும் காணோம்.

"தொழுவதற்குச் சற்று முந்திக்கூட இருந்தானே! வேடக்கிழவனுக்குப்பின்னால் அவனும் நழுவியிருக்கவேண்டும்," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"அது தான்; சந்தேகமேயில்லை. அம்மா! அவனோடு கூடவே போய், புதுக் குடிசையை எங்கே யடிக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டு பிற்பாடு தங்களண்டை திரும்பி வந்து விடுவான். ஆகையால், அவனைத் திருப்பி யழைத்து வர யாரையும் அனுப்புவதில் பயனில்லை. சொல்லப்போனால் எத்திசையை நோக்கி ஆளனுப்புவது? என்றே தெரியவில்லை," என்றான் மார்ட்டின்.

மார்ட்டின் சொன்னதே சரி. இரண்டு நாளுக்கெல்லாம் ஜான் திரும்பிவந்து,அந்த வாரம் முழுவதும் வீட்டிலே சாதுவாக விருந்தான். மீனாவது பிடிப்பான், அல்லது மலாச்சிபோன் தந்த அம்பையும் வில்லையும் வைத்துக்கொண்டு பழகிக் கொண்டிருப்பான். ஆனால் அவனைப்பார்த்தால் மௌன



மாயும் தனியாயும் இருப்பதில் முன்னிலும் ஜாஸ்தியான விருப்பமுள்ளவன்போல் தோன்றும்; ஆயினும் தாயாரிடத்தில் வணக்கமாயும், அத்தை மகளிடத்தில் விசுவாசமாயும், தம்பி பார்ஸிவலை வாய்க்காலுக்கு மீன்பிடிக்கப் போகும்போதுகூட இட்டுக்கொண்டு போக ஆசை உள்ளவனாயும் இருந்தான்.

அவனுடைய குடிசையில் பசுக்களைக்கட்டியதும், அதற்கு எதிரிலிருந்த புல்தரையில் மாடுகளைவிட்டதும் கிழவன் புறப்பட்டு போனபிற்பாடுதான்.

இடைக்கிடையில் கோட்டையிலிருந்து இவர்களின் உணவிற்காக இறைச்சி வந்துகொண்டிருந்தது, மார்ட்டினும் ஆல்ப்ரெடும் ஹென்றியும் அப்போதுக்கப்போது காட்டிலகப்பட்டதைச் சுட்டுக் கொணர்ந்தார்கள். ஆகையால் ஏற்கனவே பத்திரம்செய்து வைத்திருந்த உப்பிட்டபன்றி இறைச்சிக்கு அதிகச் செலவில்லாமலே காலங்கழிக்கப்பட்டது.

வேலைகளும் அநேகமாக முடிவுக்கு வந்துகொண்டிருந்தன. தோட்ட வேலையும் முடிந்துவிட்டது. ஆனால் தானியம் விதைக்க நிலங்கள் செய்காலுக்கு வரவில்லை. அதற்காக ஏராளமாகக் காடு வெட்டி அழித்துத் திருத்தவேண்டும். கோட்டைப் பட்டாளம் இன்னும் சில நாட்கள் தங்கி இருந்தால் நலம்தான். ஆனால் இதுவரையில் அவர்கள் தங்கி இருந்ததே கோட்டையதிகாரி கொடுத்த இடத்தினாற்றான். இனி இந்த விஷயமாக பேராசைப் படுவது அதர்மம்.

ஆகஸ்டு மாதம் முடிவுக்கு வந்துவிட்டது. கோட்டையிலிருந்து வந்த ஆள்களும் திரும்பிப்போக நாள் கிட்டிவிட்டது. வீடுகளும்கட்டிமுடிந்துவிட்டன. வீட்டையும் பண்டகசாலையையும் சுற்றிக் கட்டைகளைநாட்டி அடைப்பும்அடைத்தாய்விட்டது. கோட்டையிலும் ஆள்கள் தேவையிருந்தது. காப்ட்டின் ஸிங்க்ளேர் துரிதப்படுத்த வேண்டுமென்றும், இன்னும் சிலநாளிருந்தால்போதுமென்பது தம்முடையநோ

க்கமென்றும் கோட்டைத்தலைவர் பலவாறு ஜாடையாக அவருக்குச் சொல்லியனுப்பினார். காப்ட்டின் ஸிங்க்ளேர் இவ்விரிய சங்கத்தில் வாசம்செய்து ருசிகண்டு விட்டபடியாலும், இங்கேயே இன்னுமிருப்பதில்தான் ஆசைகொண்டிருந்தார். ஆயினும் அதற்கு ஒன்றும் சாக்கு அகப்படாமல் செப்டம்பர் மாதம் முதல் தேதி திரும்பிவரத் தயாராகவிருப்பதாக அர்ஜியனுப்பினார். அன்றைத்தினம் காலையில் ஏற்கனவே அனுப்புவதாகச்சொல்லப்பட்ட பன்றிகளையும், கோழிகளையும் ஏற்றிக் கொண்டுவந்துவிட்டுப் போர்ச் சேவகர்களையும் திரும்பஅழைத்துக்கொண்டு போகும்பொருட்டுத் தயாராகப்படகுகள் வந்துவிட்டன. மிஸ்டர் காம்பெல் போர்ச் சேவகர்களுடைய சம்பளத்தையும், பசுக்கள் பன்றிகள் இவற்றின் விலையையும் கணக்குப்பார்த்து கியூபெக் பாங்குக்கு ஓர் உண்டியலை எழுதிக் காப்ட்டின் கையில் கொடுத்தார். காப்ட்டினை விட்டுப்பிரிவதில் பரஸ்பரம்வருத்தமாயிருந்தாலும், கடைசியாகப்போய்வருகிறேனென்று சொல்லிக்கொண்டு தம்முடைய நேயர்களுடன் விடைபெற்றுக்கொண்டு அந்தக் குடும்பத்தினர் எல்லோரும் வழிகொண்டுவிட ஏரிகரைவரை வந்து காப்ட்டின் ஸிங்க்ளேர் தம்முடைய ஆள்களனைவருடன் படகுகளில் ஏறிக்கொண்டு கோட்டைக்குச் சென்றார்.

## அத்தியாயம் 14.

படகுகள் மூலையை திரும்பிக்கண்ணுக்கு மறையும்வரையில் கரையில் நின்று கண்ணுற்றுப்பார்த்துவிட்டு, காம்பெல்கள் வீட்டைநோக்கித்திரும்பினார்கள். ஆனால் திரும்பிச் செல்லுகையில் ஒருவருக்கும் பேச்சு எழும்பவில்லை. ஏனெனில் தங்கள் தேசத்தார் அவ்வளவுபேர்களும் தங்களைத்தனிமையாக விட்டுவிட்டுப்போய்விட்டார்களே என்கிற ஏக்கத்தினால் துக்கம் தொண்டையை யடைத்து விட்டதுபோலும். காப்ட்டின் ஸிங்க்ளேர் நீங்கலாக மற்றவர்களைத்தோழர்களா



க்குக் கணக்கிட முடியாவிடினும், போர்ச் சேவகர்களை வேலை செய்யும்போது பார்த்திருந்து இத்தனை நாள் வழக்கமாய்ப் போய்விட்டபடியால், அவர்கள் போனதும் அந்தவிடம் நிர் ஜனமாய்ப் போய்விட்டதுபோலும். மார்ட்டினுமில்லை, ஜானுமில்லை. பிற்சொல்லியவன் இரண்டு நாள் சேர்ந்தாற்போல் வீடு வராமலிருந்தான். அடிக்கடி ஓடிப்போவதுமன்றி ஒவ்வொரு தடவையும் நீண்டகாலம் வீட்டிற்கு வராமலே தங்கிவிடுவது வழக்கமாய்ப்போய்விட்டது. மிஸ்டர் காம்பெல்லுக்கு இது சம்மதமாகவில்லையென்பதையும் தெரியப்படுத்தும்படி மார்ட்டினானவன் மலாச்சிபோன் குடிசை போட்டிருக்கும் இடத்தைத்தேடிப்போக அனுப்பப்பட்டான்.

எல்லோருக்கும் மனதிலிருந்த ஒருவிதமான ஏக்கத்தைக் கண்டு, மிஸ்டர் காம்பெல் பின் வருமாறு சம்பாஷணை ஆரம்பித்தார்.

"என தன்புற்ற நாயகியே! நாம் தைரியத்தைக் கைக்கொள்ளவேண்டும். நமது தேசத்தாராகிய பட்டாளங்கள் போய்விட்டார்களே! நாம் இனி தனியாகத்தானே இருக்கவேண்டும், என்கிறாயோ? மார்க்கத்தில் நமக்கு இதுவரையில் கிடைத்த சகாயமெல்லாம் கிட்டினது யாராலே? அதற்கு எல்லாம் காரணமான கருணைக்கடல் வற்றிப்போய்விடுமா? ஆனால் நாம்மட்டும் வாயால்மாத்திரம் இப்படிச் சொல்லிக்கொண்டு நமது முயற்சியை தளர்த்தக்கூடாது. பூர்ணநம்பிக்கையுடன் நாம் செய்யக்கூடியதைச் செய்தால் தெய்வசகாயம் கிடைக்கும்."

"என் நாதா! தாங்கள் சொல்வன முற்றிலும் உண்மையே. நமக்கு வரும் ஆபத்தெல்லாம் நமதுள்ளத்தைச் சோதிப்பதற்காகத்தான். இதுவரையில் நமக்கு ஆபத்தை அனுப்பிய ஆண்டவன் தத்தச்சமயத்துக்குரிய சகாயங்களையும் அனுப்பவில்லையோ? அதற்கு நமது நன்றியை நாம்

எப்படிக் காட்டுகிறது? இனிமேல்தான் நமக்குப் பலவிதமான ஆபத்துகளும் நெருக்கடிகளும் நேரிடும். இதுவரையில் நமக்கு ஆபத்பாந்தவராயிருக்கிற பகவானிடத்தில் திருடமான பக்தியைச் செலுத்தி, உள்ளம் படிந்து இனியும் நம்மைக் கைவிடாரென்ற ஒரே மனதுடன், நாம் செய்யவேண்டிய பாகத்தைச் செய்யவேண்டியதுதான்."

"ஆம், என் கண்ணே! இப்போது நாம் தனியாக விருப்பதும் நம்முடைய உபகாரத்திற்காகத் தான். நமது நாட்டிலேயே, நமது வீட்டிலேயே நாம் இருக்கும்போது வருகிற ஆபத்துக்களுக்கும், இதைப்போன்ற வனாந்தரத்தில் தனிமையாக இருக்கும்போது நமக்கு வரும் ஆபத்துக்களுக்கும் வித்தியாசம் யாதெனில், வீட்டிலிருக்கும்போது நமக்குக் கொழுப்பேறி இருக்குமாதலால், நமது சுகத்திற்குக் காரணம் நாம் தான் என்று தோன்றும். இங்கேயோ பகவான் தான் எதற்கும் காரணம் என்கிற புத்தி அடிக்கடி உண்டாகும். ஆதலால் நமது அகம்பாவம் இறங்கும். ஆண்டவரின் அளவில்லாக் கருணை ஓங்கிக்காட்டும். இதையும்விட மேன்மையான உபகாரம் உலகவாழ்விலுண்டோ?"

இச்சம்பாஷணையைக் கேட்டவுடன் யாருக்கும் மனம் தெளிந்துவிட்டது. எல்லோருக்கும் அன்றிரவு தூக்கம்வரும் போல் இருந்தது. பிறகு சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பரிபாஸமான ஸல்லாபம் சிறிது நேர்ந்துகொண்டிருந்தது.

ஜானைப்பற்றி இன்னது செய்கிறதென்று தெரியாமல் குழப்பமாகவே இருந்தது. ஜான் வீட்டில் இருக்கும் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் காட்டுக்குள் சென்று தனிமையாகவே வேட்டையாடி வந்துகொண்டிருந்தான். அது விஷயமாகக் கண்டிக்க விரும்பி மிஸ்டர் காம்பெல் அவனை விசாரித்ததில் அவன் தனக்கு ஒரு துப்பாக்கி இல்லாமல் முடியாது என்று ஒரே பிடியாய் பிடித்



தான். இதைக்கண்டு மிஸ்டர் காம்பெல்லுக்கும் மற்றவர்களுக்கும் அவன் போகிற வழியே விடாமல் சாத்தியப்படாது என்றுதோன்றியதால் அப்படியேவிட்டுவிட்டார்கள். ஆனால் அப்போது அவனிடம் இருந்து ஒரு சத்தியம் மட்டும் வாங்கிக் கொண்டார்கள். அதாவது அவன் மலைச்சியண்டைபோகும் போதெல்லாம் தாயாருடைய அனுமதியைப் பெற்றுப்போக வேண்டியது. எட்டிலே, பத்திலே வீடுவந்து ஒருநாள் தங்கி விட்டுப் போகவேண்டியது. இந்த ஏற்பாடு முடிந்தவுடன் எல்லோரும் அன்றிரவு தூங்கப்போய் விட்டார்கள்.

## அத்தியாயம்—15

அடுத்தநாள் காலையில் மேரியும் எம்மாவும் மாடுகளைக் கறந்துகொண்டுவரப் புறப்பட்டுப்போனார்கள். ஆனால் முன் போல் இவர்களுடன் துணைக்குப்போகச் சிறுவர்களில்லை. வனே னில் ஹென்றியும் ஆல்பிரெடும் அலுவலாகவிருந்தனர். காப் ட்டின் ஸிங்க்ளேரும் போய்விட்டார்.

இவ்விருவரும் தனியாக மரப்பாலத்தைத் தாண்டிக்கொண்டிருக்கையில், தங்கம் உள்ளத்தின் இங்கிதத்தைப் பின் வரும் சம்பாஷணை மூலமாய் வெளியிடலானார்கள்.

"எம்மா, நம்மிருவருக்கும் பால் கறக்கப்போய் வருகையில் இனி ஆண் துணை கிடையாதல்லவா?" என்றாள் மேரி.

"ஆம், அக்கா நமது இடைச்சித் தொழிலுக்கு இதுவரையில் பயமே இருந்தது ; இனி ஏது?" என்றாள் எம்மா.

"ஆல்பிரெடும் ஹென்றியும் மார்ட்டினுடன் மீன்பிடிக்கும் படகு செய்வதில் அமர்ந்து விடுகிறார்கள்," என்றாள் மேரி.

மேரி, உள்ளபடி பேசு உனது அம்மான் சேய்களைக் குறிக்கிறது மேலுக்குத்தானே? உண்மையிலே உனது சிந்தை காப்டின் ஸிங்க்ளேரைப் பற்றித்தானே?' என்றாள் எம்மா.

"அது நிஜமே; என்மனதில் உள்ளவர் அவர்தான்," என்று மேரி பதில் சொன்னாள். "அவர் இல்லாதது எனக்கு எவ்வ

ளவு வெறுப்பாக இருக்கிறதென்று உனக்குத்தெரியாது?"

"ஆயினும் நான் அதை ஊகத்தால் பார்க்கக்கூடும், என் கண்ணே!" என்றாள் எம்மா. "அவரை நாம் சீக்கிரம் திரும்பவும் இங்கே பார்க்க ஹேது உண்டோ."

"அது என்னவோ; ஆனால் ஒரு மாதத்திற்குள் அது நேரிடாது என்பது நிச்சயம். கோட்டையில் இப்போதுபுல் வெட்டிக்காயப்போட்டுச் சேகரம் செய்யும் சமயம். ஆதலால் ஒருவருக்காவதுஇத்தருணம் ஒழிவிருக்காது. இதெப்படியும் ஒரு மாதத்திற்குக் குறையாமல் பிடிக்கும்," என்றாள் மேரி.

"மேரி, அவர்கள் எவ்விடம் சென்று புல் வெட்டிக் காயப்போடுகிறார்கள்?" என்றாள் எம்மா.

"கோட்டையைச் சுற்றி இருக்கும் புல் கோடையில் மேய்ச்சலுக்குத்தான் காணும். பனிக்காலத்தில் கால் நடைகளின் ஜீவனம் எப்படி ஆகும்? அதற்காக நதிக்கரையோடும் ஏரிகரையோடும், எட்டினவரையில் படகில் சென்று, கூடாரம் போட்டுக்கொண்டு, கரையோரங்களிலிருக்கும் புல்லை அறுத்து உலர்த்திக் கட்டுக்கட்டாகப் படகுகளின்மேல் ஏற்றிக் கொணர்ந்து பனிக்காலத்தில் கால்நடைகளுக்கூட்டுவார்கள்" "ஓ,ஸரி;நமக்கும்புற்கட்டு அனுப்புவதாகக்கர்னல் பார்ஸ்டர் வாக்களித்திருப்பதால், அதை அனுப்பும்போது காப்டின்ஸிங்க்ளேரையும்கூட அனுப்புவார்கள். அதுநிச்சயம்நடக்கப்போகிறது, மேரி, அப்போது பார்த்துக்கொள்வோம். அதுவரையில் மாடுகளைக் கட்டவும் விடவும் நாமேதான். இதென்ன அக்கிரமம்! ஆல்ப்ரெடுக்காவது உணர்ச்சியிருந்தால் நம்முடைய கதி இவ்விதமாகுமா?" என்றாள் எம்மா. மேரி சற்று நகைப்புடன், அது என் "ஹென்றியாக இருக்கக்கூடாதோ?" என்றாள். "அதென்னவோ, அம்மா!எனக்கு மனதில் தோன்றியவன் ஆல்ப்ரெட்தான்," என்றாள் எம்மா. "ஸரி, ஸரி, போகட்டும், எம்மா! இப்போது உனக்குமென்ன



க்கும் ஸரிக்குத்து. காலம் செல்லுகிறது; மாடுகளைக்கறந்து கொண்டு செல்வோம், வா."

அவர்கள் திரும்பி வீட்டிற்கு வந்தபோது, வேடக்கிழவனையும் அவனுக்கு எதிரில் கிடந்த நேர்த்தியான ஒருமானையும் கண்டார்கள். புதிதாகச் செய்யப்பட்ட ஓடத்தின் பரிமாணம் போதுமாவென்று வந்துபார்த்துச் சொல்லும்படி மார்ட்டினும் பையன்களாலும் விரும்பப்பட்டு, மிஸ்டர் காம்பெல் அவர்களுடன் வெளியே சென்றிருந்தார்.

"மிஸ்டர்போன்! சவுக்கியமா? ஜானா அந்த மானையடித்தான்?" என்றாள் மேரி.

"ஆம்! துப்பாக்கியைத் தூக்கக்கூடச் சீவனில்லாத அந்தக் குழந்தை ஒரு கைதேர்ந்த வேடனைப் போல் சுட்டான்! உங்களுள் யாருடைய பெயர் மேரி?"

"நான்தான்," என்றாள் மேரி.

"அப்படியானால் உனக்குக்கொடுக்க ஒன்றுஇருக்கிறது," என்று சொல்லிக்கொண்டு தன் உட்சட்டையிலிருந்து மெல்லிய மரப்பட்டையால் கட்டப்பட்ட ஒரு சிறிய சிப்பத்தை வெளியில் எடுத்து அவள் கையில் கொடுத்து, "இது ஸ்ட்ராபெர்ரியால்நன்கொடையாகக்கொடுக்கப்பட்டது."என்றான்.

மேரி அதை அவிழ்க்கவும், சாய மேற்றப்பட்ட பன்றிமுள்ளால் மிகவேலைப்பாடாய் அமைக்கப்பட்டுள்ள ஒருஜதை காலுறைகளைக் கண்டாள்.

"ஆஹா! எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது! என்ன விசுவாசம் அவளுக்கு! நான் அவளுக்குவந்தனம் செய்கிறேனென்றும் அவள்மேல் மிகவும் அன்பு கொண்டிருக்கிறேனென்றும் சொல்லுங்கள்."

"சரி, சொல்லுகிறேன்; பையன் எங்கே?"

"யார்? ஜானா? வாய்க்காலுக்கு மீன்பிடிக்கப்போயிருப்பான். காலை யுணவுக்கு வந்து விடுவான் இதுசமயம்தான். எம்மா!

வா, நாம் பாலை எடுத்துக்கொண்டு உள்ளே செல்வோம்.”

சற்று நேரத்திற்கெல்லாம் மிஸ்டர் காம்பெல்லும் அவரோடு போயிருந்தவர்களும் திரும்பி வந்தார்கள்.

அப்போது மலாச்சிபோன் ஜான் கொன்ற மானைக் கொண்டு வந்திருக்கிறேன் என்றும், இப்போது சவுகரியப்பட்டால் ஒருபீப்பாய் வெடிமருந்தையும் கொஞ்சம் ஈயரவைகளையும் தன்னுடன் கூடக்கொண்டு போவேனென்றும், விற்கப்பட்ட நிலத்துக்கு மிஸ்டர் காம்பெல்லையே அவருக்குத் தோன்றினபிரகாரம் கணக்குப் போடும் படிக்கும், கூடுதலாகும்தொகைக்குப்பதிலாகச் சாமான்களாகத்தனக்கு வேண்டிய பொழுதெல்லாம் வந்தெடுத்துக்கொண்டு போவேனென்றும் சொன்னான்.

“மலாச்சி! நீங்கள் என்உங்களுக்கு இஷ்டமான கிரயத்தைச் சொல்லமாட்டேன் என்கிறீர்கள்?” என்றார் மிஸ்டர் காம்பெல்.

“ நான் என்ன கிரயத்தைச்சொல்லுவேன்? அது எனக்கு இனாமாகக் கிடைத்ததேயன்றி அதற்கு நான் ஒன்றும் விலைகொடுக்கவில்லையே. அதுவிஷயத்தை உங்களுக்கும் மார்ட்டினுக்கும், ஒப்புக்கட்டியிருக்கிறேன். நான்தான் முன்னமேயே சொல்லியிருக்கிறேன்.”

“ நீங்கள் என்னிடத்தில் மிக்க நம்பிக்கை வைக்கிறீர்களென்றேநான்சொல்லவேண்டும். நல்லது, போன், உங்களுக்கு நான் துரோகம் செய்யேன். ஆனால் கிரயத்துக்குப்பதிலாக எனதுபண்டகசாலையிலிருக்கும் சாமான்களிலிருந்துசாமான்களாகஎடுத்துக் கொள்வீர்களென்றால் உங்களுக்குக் கொடுத்துமுடிய வெகுகாலம் ஆகுமே என்று நான் அஞ்சுகிறேன்,”

“நிரம்ப உத்தமம், ஐயா! நான்சாகும்வரையில் அவை காணுமல்லவா? மிச்சமிருப்பது இதோ இருக்கும் பையனுக்குப் போதும், என்று சொல்லிக்கொண்டு அந்தவேடக்கிழவன்



தன் கையை ஜான் தலைமீது வைத்தான்.

“போன்! அப்போதைக்கப்போது ஜான் உங்களுடன்
போவதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆனால்
எப்போதும் விலகி இருக்க நான் சம்மதியேன். உங்களைப்
பார்க்க அவன் போனால் மறுதினமே திரும்பி வந்துசேரவே
ண்டும்.”

“ ஐயா! நீங்கள் சொல்வது ஒப்பத்தக்கதாயில்லையே!
நாங்களோ மிருகங்களைத்தேடி வேட்டையாடப் போவோம்.
அவைகள் எங்கிருக்குமோ, அவைகளைத்தேட எவ்வளவுகால
மாகுமோ, அவைகள் எங்களை எவ்வளவு தூரம் இழுக்கடிக்
குமோ? யாருக்குத்தெரியும்? மிருகத்தைக்கண்டு தொடர்ந்
தோம், பிடிக்கும் சமயம் நெருங்கிவிட்டது, என்று வைத்
துக்கொள்வோம். அத்தருணத்தில் குறிப்பிட்ட காலம் முடி
ந்துபோய்விட்டதென்று விட்டுவிட்டுத் திரும்பி விடுகிறதா?
அது நடக்காத விஷயம். நான் இந்தப் பையனை ஒரு வேட்
டைக்காரனாக்கக்கருதுகிறேன். அப்படியென்றால் இரவில்
வெளியிற் படுக்கவும் மற்றும் எதையும் ஒரு வேட்டைக்கா
ரன் செய்வானோ அதையெல்லாம் செய்யப் பழகிக்கொள்ள
வும்வேண்டும். நீங்கள் அவனை என்னுடன் நீண்டகாலம் இரு
க்கும்படிதான் விடவேண்டும்.. அப்படி உங்களுக்கு இஷ்ட
மிருந்தால் அவன் உங்களுடைய வீட்டிற்குத் திரும்பி வந்த
போது நீண்டகாலம் அவனைவைத்துக்கொள்ளுங்கள். ஆனால்
அவன் ஒரு ஆளாகவேண்டுமென்று உங்களுக்கு எண்ணமி
ருந்தால் எவ்வளவுக்கெவ்வளவு நீண்டகாலம் அவன் என்னு
டன் தங்கியிருப்பானோ அவ்வளவுக்கவ்வளவு மேலாகவிருக்
கும். அவன் இந்தியரின் தந்திரங்களில் தேர்ச்சியடைவானெ
ன்றும், இதற்கடுத்த சீதகாலத்தில்நீர்நாய்களை அவனேபிடி
த்துத்தோல்களை உங்களிடம் கொண்டுவந்து கொடுப்பானென்
றும் நான் உறுதியாகச் சொல்வேன்.”

ஐயா! இந்தக்கிழவன் சொல்வனவெல்லாம் ஒப்பத்தக்கனவாகவே இருக்கின்றனவென்று எனக்குத் தோன்றுகின்றன," என்றான் மார்ட்டின்.

"எனக்கும் அப்படியேதான். இவையெல்லாம் கூடி ஜானைப் பள்ளிக்கு அனுப்புவது போலத்தானே. அவன் இப்போது செல்லட்டும்; விடுமுறை நாளில் வீட்டிற்குத் திரும்பி வரட்டுமே," என்றான் ஆல்ப்ரெட்.

"எனக்கு முடிந்த போதெல்லாம் உங்களண்டைவந்துவிடுகிறேன்," என்றான் ஜான்.

"ஜான் அப்படிச் சொல்வதைக்கேட்க எனக்கிருக்கும் திருப்தி இவ்வளவென்று உங்களுக்குத்தெரியாது." என்றாள் மிஸிஸ் காம்பெல். ஜான் சொல்லுறுதியுள்ளவன். எண்ணத்தில் இல்லாததை அவன் சொல்லவே மாட்டான்.

"என் நேசியே! நல்லது, உனக்குத்தடையொன்றும்இல்லையென்றால் நான் இனிக் குறுக்கே நில்லேன்,"

"என்னருமைக் கணவரே! நல்லது. ஜானை வற்புறுத்துவதைவிட அவனுடைய விசுவாசத்தைச் சம்பாதித்தால் மிகுதியாகப் பயன்படுமென்று நான் நினைக்கிறேன். தனக்கு முடியும்போதெல்லாம் தானே வருவேனென்று அவன் சொல்லுகிறபடியால், எனக்கு நம்பிக்கைதான். ஆதலால் அவன் மலாச்சிபோனிடம் இருக்க எனக்குயாதொருதடையுமில்லை. ஒருதட்வைக்கு ஒருவாரம் என்போமே.

"அப்படியானால் குழந்தையின் படிப்பு எப்படியாகும்?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"நாதா, சற்று யோசித்துப் பாருங்கள். இப்போதுஜானுக்குக்காட்டுப்பித்துப்பிடித்திருக்கும்நிலைமையில் நீங்கள்சொல்லுகிறபடிப்பு ஏறுது. மேலும், நாமோ இனிவாஸம் செய்ய வேண்டியது இந்தக்காடு. இங்கே உபயோகப்படக்கூடிய வித்தை எது என்றால் வேட்டையாடும் வித்தைதான்,"



"என்கண்ணே! நீ சொல்வது யுக்தமே. நல்லது, ஜான், நீ மலாச்சிபோனுடன்சென்று குருகுலவாஸம் செய்து, வனவித்தை முற்றிலும் பழகிக்கொண்டு, ஒரு தேர்ந்த வேடனாக ஆவாய்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

இந்தப்பேச்சு முடிந்ததும் மலாச்சிபோன் பிரமை கொண்டவன்போல் விழித்தான். அதைக்கண்டவுடன் ஆல்ப்ரெட் கொல்லென்று சிரித்துவிட்டு மலாச்சியை நோக்கி, "இதற்கெல்லாம் முடிவான தீர்மானம் என்னவென்றால் என்னுடைய தம்பி ஜான் உங்களுடன் செல்வதற்கு என் தந்தை சம்மதிக்கிறாரென்பதும் நீர் அவனை ஒரு ஆளாக்கிவிடவேண்டுமென்பதுமேயாம்," என்றான்.

அதற்குப் போன், "அவனைப் படைத்தவரல்லவோ அவனை ஆளாக்கவேண்டும். என்னால் ஆகக்கூடியது அவனை ஒரு வேட்டைக்காரனாகச் செய்வதே. அவனும் நானும் உயிரோடுமட்டும் இருந்தால், நான் அப்படிச்செய்தேதீருவேன். நல்லது, ஐயா! மார்ட்டின் எனக்கு மருந்தையும் ரவையையும் கொடுப்பானானால், போய்விடுவேன். பையனும் வருகிறானா?"

உமக்கிஷ்டமானால் அப்படியே; வாடா, அப்பா! ஜான்! என்னிடத்தில் விடை பெற்றுக்கொள். நீ சொன்ன வார்த்தையை மறவாதே," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

ஜான் அந்த ஸமாஜத்திலிருந்த அனைவரையும் வணங்கிவிட்டுத்தனது குருவின்பின்னோடு குடுகுடுவென்று ஓடினான்.

## அத்தியாயம் 16.

போர்ச்சேவகர்கள் இருந்தவரையில் அவ்வளவு சாத்தியப்படவில்லையென்றாலும், அவர்கள் சென்றபிறகுகாரியங்களெல்லாம் சீர்பட்டு ஒரு கண்டிப்புக்கும் ஒழுங்குக்கும்வந்து அந்தக் குடும்பத்தாருக்கும் சுகம் பெருகிற்று.

காலையில் ஐந்தரை மணிக்கு எல்லோரும் எழுந்து கைகால் கழுவிக்கொண்டு, எழரை மணிக்கு ஒரு பொதுக் கூட்

டம் கூடித் தொழுவார்கள். பிறகு சிற்றுணவு கொஞ்சம்
தின்றுவிட்டு அவர் அவர்கள் தத்தம் அலுவல்களுக்குப் போ
ய்வருவார்கள். மிஸிஸ் காம்பெல்லும் பார்ஸிவலும் வீட்டு
வேலை செய்வார்கள். ஹென்றி, மார்ட்டின், ஆல்ப்ரெட்
இம் மூவரும் பகல் முழுவதும் காடழிப்பதும் நிலம் திருத்து
வதுமாக இருப்பார்கள். மிஸ்டர் காம்பெல்லுக்கு வயது
முதிர்ந்திருந்தாலும் அவரால் இயன்றமட்டில் தோட்டத்தில்
வேலை செய்துகொண்டிருப்பார். பார்ஸிவலுக்கு ஒழிந்த
வேளையில் படிப்பும் சொல்லிக்கொடுப்பார். பார்ஸிவலும் தா
யாருக்கு உதவியாக இருந்த சமயந்தவிர மற்ற வேளைகளில்
தகப்பனுருக்கு உதவியாகத் தோட்டத்தில் வேலைசெய்வான்.

உச்சிப் போது வந்தவுடன் உணவருந்தும் காலத்தில்
ஒருமணிநேரம்வேலையொழிவு. பிறகு அந்தியில் மணிஏழுக்கு
எல்லோருமாகக்கூடி போஜனம் செய்துவிட்டு, சற்று நேரம்
சல்லாபம் செய்துவிட்டு, ஆண்டவனைத்தொழுதுபின்பு மணி
ஒன்பதானவுடன் படுத்துறங்குவார்கள்.

இம்மாதிரி ஒரு நாளைப்போலவே மற்றொரு நாளும்
கழிந்துவந்து குளிர்காலமும் நெருங்கிவிட்டது. அதைக்கண்
டவுடன் இவர்களுக்கு மனதில் கொஞ்சம் கம்பம் கண்டதெ
ன்றே சொல்லவேண்டும், ஏனெனில் அவர்களுக்குக் கான
டாக்குளிர்ச்சி புதிதல்லவா ?

ஜான் தான் சொன்ன சொல்லின் வரை மீறாமல் நிறை
வேற்றிக்கொண்டே வந்தான். எப்போதாகிலும் ஒரு தட
வையில் மூன்று நான்கு நாள் வாமலிருந்து விடுவான்.
ஆனால் முறைதப்பாமல் வீட்டிற்குவந்து ஓரிரண்டுநாள் வீட்
டிலேயே தங்கியிருப்பான். ஆல்ப்ரெடும் மார்ட்டினும் முந்
தியே மீன்பிடிக்கும் ஓடத்தைச் செய்து முடித்துவிட்டார்
கள். இலேசாகவும் தள்ளச்சுலபமாகவும் இருந்ததால் ஹெ
ன்றியும் பார்ஸிவலும் அதிலேறிப்போவார்கள். ஜானும் பார்



ஸிவலும் அதைத்தள்ளிக்கொண்டு ஏரிக்குள் அரைமைல்தூர
ம்சென்று, சற்றுநேரத்திற்குள் பெரிய மீன்களைக்கொண்டு
வந்துநிறைத்துவிடுவார்கள். இப்படியும்அப்படியுமாய்மிஸிஸ்
காம்பெல் மீனைஉப்பிட்டுச்சீதகாலத்திற்கு வேண்டியவற்றை
ஒரு பீப்பாய் நிரம்ப அடைத்து வைத்துக்கொண்டாள்.

இப்படியிருக்க ஒரு நாள் இவர்களுக்கு இனிய வியப்பு
க்கு ஏதுவாய்க்காப்டின்ஸிங்க்ளேர் கரைமார்க்கமாய்க்கோ
ட்டையிலிருந்து வந்து சேர்ந்தார். அவர் வந்தது, புல்லறுத்
துக்காய்ந்து விட்டபடியால் ஓர் இரண்டு நாளில் அனுப்பப்
படும் என்பதையும், கோட்டைத்தலைவரிடம் மிச்சப்பட்டிரு
க்கும் காளைக்கன்று ஒன்று சீதகால உணவுக்குத் தேவை
யாயிருக்குமானால் அனுப்பப்படும் என்பதையும் மிஸ்டர்காம்
பெல்லுக்குத் தெரியப்படுத்துவதற்குத்தான். இந்த நன்கொ
டை சந்தோஷத்துடன் அங்கீகரிக்கப்பட்டது. காப்டின்
ஸிங்க்ளேர் போஜனம் செய்தவுடன் கோட்டைக்குத்திரும்பி
ப்போகவேண்டியிருந்தது. ஏனெனில் அன்றிரவு பாரா
அலுவல் அவரது முறைக்கு வந்திருந்தது. அவர் திரும்பிப்
போவதற்கு முன்னம் ஒருவருக்கும் தெரியாது. மார்ட்டின்
ரூபருடன் தனித்துக்கொஞ்சம் பேசிக் கொண்டிருந்தார்.
பிற்பாடு அவர் ஆல்ப்ரெடைத் தம்முடன் கோட்டைக்கு
நடந்து வரவேண்டுமென்றும் மறுநாள்காலையில் திரும்பவும்
வீட்டிற்கு வந்துவிடலாமென்றும் அழைத்தார். ஆல்ப்ரெட்
அதற்குச்சம்மதிக்கவும், இருட்ட இரண்டுமணிநேரம் இரு
க்கப்புறப்பட்டார்கள். அவர்கள் வாய்க்காலைத் தாண்டின
வுடன் மார்ட்டினும் போய்ச்சேர்ந்துகொண்டான்.

“உன்னை என்னுடன் திரும்பிவரும்படி சொன்னதற்கு
இரண்டு காரணங்கள் உள” என்று காப்டின் ஸிங்க்ளேர்
ஆல்ப்ரெடை நோக்கிப் பேச ஆரம்பித்தார். “முதலாவது
சீதகாலத்தில் தேவையிருந்தால் கோட்டைக்குச் செல்லும்

வழியை உனக்குக்காண்பிக்கவேண்டுமென்பது என்கருத்து; இரண்டாவது இந்தியர்களைப்பற்றி எங்களுக்கு எட்டியிருக்கும் சமாசாரம் விஷயமாக உன்னுடனும் மார்ட்டினுடனும் பேச வேண்டுமென்பது. முந்தி உன்தாயாரும் அத்தைமகளும் இருக்கும்போது இச்சமாசாரத்தைப் பகிரங்கமாகநான் ஏன் சொல்லவில்லையென்றால் அது அவர்களுக்குப் பீதியையும் பதட்டத்தையும் உண்டாக்கிக் கவலையும் ஏக்கமும் மேலிடச்செய்யுமேதவிர வேறுபயன்தராது என்பதனாலேயே. இப்போது தனிமையில் நான் தாராளமாகப்பேசலாம். விஷயம் என்னவென்றால் இந்தியர்கள் அடிக்கடி கூட்டங்கூடி ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்களென்று சிலநாளாய் எங்கள்காதில் விழுந்துகொண்டிருக்கிறது. அவர்கள் ஒன்றும் முடிவுக்குவந்ததாய்த்தெரியவராமற்போனாலும், கோட்டைக் கருகில் பெரிய கூட்டங்களாகக் கூடியிருக்கிறார்களென்பதில்சந்தேகமேயில்லை. பிரெஞ்சுக்காரர்கள் நம்மைஎதிர்க்கும்படி அவர்களைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதிலும் சந்தேகமேயில்லை. எங்களுக்குத்தெரியவந்திருக்கிறவரையில் அவர்களுக்குள்ளேயே ஒற்றுமையில்லைபோலும். ஆதலால் விசேஷமாக, அடுத்தவ்ருஷம்வரையில்யாதொன்றும் நடக்காமலிருக்கலாம். ஏனெனில் இலையுதிர்காலத்தில்தான் போர்ச்சங்கங்களை அவர்கள் சுற்றிலும் அனுப்புவது வழக்கம். ஆயினும்அபாயத்திற்குஇடமில்லைஎன்றுசொல்வதற்கில்லை;ஏனெனில் நம்மை எதிர்ப்பதற்கென்றால் எல்லா இந்திய வகுப்பினரும்எளிதாய் ஒன்றுசேர்ந்து விடுவார்கள். நமதுஎதிரிகள் மிகவும்மோசக்காரர்களாதலால் நாம் உஷாராகவே இருக்கவேண்டியது. இப்போது இந்த விஷயம் உங்களைஎவ்விதம் பாதிக்க்கூடும்என்பதைக் கவனிப்போம்.

"நாம் அவர்களோடு செய்திருக்கும் உடன்படிக்கைகளையும் மீறி, அவர்கள் கோட்டையை எதிர்த்தால், அப்போது



நீங்கள் இருக்குமிடத்தே இருப்பது உங்களுக்கு அபாயத்திற்கு ஹேதுவாகும்; என்பதில் சந்தேகமில்லை. எங்களைத் தொந்தரவு செய்யாமற்போனால்கூட; ஐயோ! அப்போதும் உங்களுக்குத்தீங்கு வராது என்பதற்கிடமில்லையே! ஏனெனில் இந்தியர்கள் கூட்டங்கூடிவிட்டால், பெரும்பான்மையார் யாதொரு தீர்மானத்திற்கு வராமற்போனால் கூட, அவர்களுள் சிலர் வீட்டிலிருந்து புறப்படும்போதே கொள்ளையடிக்காமல் திரும்புவதில்லை என்று பிரதிக்ஞைசெய்து வந்திருப்பார்கள். அவர்கள் சரியானபோர்வீரர்களல்லர். அப்படியிருந்தாலும் மற்றஇந்தியர்களால் மதிக்கப்பெற்றவர்களுமல்லர். உண்மை யாதென்றால் இந்தியர்களுள் அவர்கள் அதமமான வகுப்பைச் சேர்ந்தவர்கள். கொள்ளையடிப்பதும் வழியிற்பறிப்பதுமே அவர்கள் தொழில். ஆதலால் நீங்கள் இம்மாதிரி-ஜனங்கள் எப்போதுவருவார்களோ என்று சதாகாலம் உஷாராக இருக்கவேண்டும். கிழப்போன் குடிசையைப்பெயர்த்துக் கொண்டு மேற்கே வெகு தூரத்திற்கப்பால் போய்வசிக்கிறான் என்பதும், அவனோடு நீங்கள் அவ்வளவு சவுஜனியமாக விருக்கிறீர்களென்பதும் நல்லகாலத்திற்கடையாளமே. ஏனெனில் உங்களை எதிர்க்க எந்த இந்தியச் சங்கமாவது வந்தால் அவன் வெளியில் போய்த்திரியும்போது அவர்களையாவது அவர்கள் வந்த சுவடுகளையாவது அறிந்து கொள்ளாமல் இருக்கமாட்டான்" என்று சொல்லிமுடித்தார்.

"காப்ட்டின்! அஃது உண்மைதான். நானே சென்று அவனை உஷார்ப்படுத்துகிறேன்," என்றான் மார்ட்டின்.

"ஆனால் அவர்கள் எங்களை எதிர்ப்பதற்குமுன் அவனை எதிர்க்க மாட்டார்களோ?" என்றான் ஆல்ப்ரெட்.

"அவர்கள் ஏனப்படிச்செய்யவேண்டும்? அவனும் அவர்களைப்போலவே ஓர் இந்தியன் தானே? மேலும் அவன் அவர்களுள்விசேஷமாக எல்லோருக்கும் தெரிந்தவன். அது

வுமன்றி, அவனை எதிர்ப்பதில் அவர்களுக்கு என்னலாபம் ?
உங்களை எதிர்க்க வரக்கூடியவர்கள் யாவரென்றால் வெறுங்
காலி அசாமிகளே. அவர்களுடைய நோக்கம் கொள்ளையடிப்
பதுதான். அவனது குடிசையில் கிடைக்கக்கூடியது யாது?
கொஞ்சம் உரோமங்கள். அவனிடத்தில் இருக்கும் சுற்றுக்
குழாய்த் துப்பாக்கியைக் கண்டால் திகில் அடைவார்கள்.
அதேபோகட்டும்; அவனிடம் திருடக்கூடியதுஒன்றும்இல்லை
யே! ஆதலால் கிட்டக்கூடநெருங்கார்கள். ஆல்ப்ரெட்! இவை
யெல்லாம் உன்னிடம் நான் சொல்லக்காரணம் யாதென்றால்
நீகூர்மையுடன் உஷாராகவிருக்கவேண்டும்என்பதே. இம்மா
திரி ஒன்றும் நடவாமலே இருந்துவிடலாமென்பதற்கும் அ
நேககுறிகள் இருக்கின்றன. ஒருவிதமான தீங்குமின்றியே
சீதகாலம் முற்றிலும்கழிந்து விடலாம். உன்னுடையகுடும்ப
த்தில் மற்றவர்களை, அதுவும் பெண்பாலர்களை இதைச்சொல்
லித்திகிலடையும்படி செய்யப்போதுமான குறிகள் இல்லையெ
ன்றே நான் உன்னிடமும் மார்ட்டினிடமும் தனித்து இந்த
விஷயத்தைத்தெரிவிக்கலானேன். இப்போது நடந்ததில்எவ்
வளவுதூரம் உன்னுடைய தகப்பனுருக்கும், ஹென்றிக்கும்,
தெரிவிப்பது உசிதமாகும்என்பதை நீயேதீர்மானித்துக்கொ
ள்ளவேண்டியது. நான் ஏற்கனவேசொல்லியதுபோல் எல்லா
ரும் ஒருங்கு சேர்ந்து உங்களை எதிர்ப்பார்களென்று எனக்
குத்தோன்றவில்லை. அதற்குவேண்டியகாலம் போதாமலி
ருப்பதுடன், அதைப்பற்றி ஒருவிதமான தீர்மானத்திற்கும்
வாாமலே அவர்களுடைய ஆலோசனைச் சங்கங்கள் கலைந்து
விட்டனவென்று எங்களுக்குத்தெரியும். நீங்கள் அஞ்சவே
ண்டியது கொள்ளைக்காரர்களின் விடுதிக்கூட்டங்களுக்கே.
நீங்கள் அயர்ந்திருக்கும்போது நேரிட்டாலொழிய, உங்களை
யும் கணக்கிட்டு உங்கள் ஜாகையைச் சுற்றியிருக்கும் காவலை
யும் பார்த்தால் நீங்களே அவர்களை எளிதில் தடுத்துவிடலா



மென்றே எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் அஞ்சவேண்
டியது இம்மட்டில் தான். இப்போது உங்களுக்கு எச்சரிக்
கை ஏற்பட்டுவிட்டதில் பாதி அபாயம் ஒழிந்துவிட்டது ”
என்றார் ஸிங்க்ளேர்.
“ நல்லது, காப்ட்டின்! நான் நிற்கிறேன். இன்றிரவே
கிழமலாச்சியிடம்போகிறேன்; ஏனெனில் எனக்குத்தோன்
றுகிறவரையில் அவர்கள் இலையுதிர்காலத்திற்கும் பனிவிழுங்
காலத்திற்கும் மத்தியில் தான் எதிர்ப்பார்களே யல்லாமல்
பிறகு மாட்டார்கள். ஆதலின் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிர
மாகமலாச்சியையுஷார் செய்கிறேனே அவ்வளவுக்கவ்வளவு
மேலாகும். போய்வருகிறேன், ஐயா!” என்றான் மார்ட்டின்.
காப்ட்டின் ஸிங்க்ளேரும் ஆல்ப்ரெடும் கோட்டை வழி
யே செல்லத் தொடங்கினார்கள். அவ்விருவர்க்கும் பலமான
ஸ்நேகம் உண்டாகி, ஒருவர்க்கொருவர் தம்தம் அந்தரங்கக்
கருத்துக்களைக்கூடச் சொல்லிக்கொள்ளலானார்கள்.
மிஸ்டர்காம்பெல் கானடாக்காட்டுவெளியினது ஸ்திதி
யையறியாமல் பெண்பிள்ளைகளைக்கூட அழைத்து வந்து விட்
டாரே; அவர்கள் எப்படி அங்கேயிருந்துபெயர் சொல்லுவா
ர்களோ? என்றுகாப்ட்டின் ஸிங்க்ளேருக்கு அகோராத்திரம்
மிகவும் கவலையாக இருந்தது. ஆயினும்ஆல்ப்ரெட் நெஞ்சத்
துணிச்சற்காரனானதால், “பயப்படாதீர்கள்; அப்படி ஏதா
வது இந்தியர்களால் அபாயம் நேரிடும்போலிருந்தால்பெண்
பேதைகளைக்கோட்டைக்கு அனுப்பிவிட்டு, நாங்கள் ஆண்பி
ள்ளைகள் அனைவரும்கூடி எங்கள் பண்ணையைக் காப்போம்.
நீங்கள்கவலையைவிட்டுவிடுங்கள்,” என்றுசொல்லிக்காப்ட்டின்
ஸிங்க்ளேரைத் தைரியப்படுத்தினான். இம்மாதிரியாகப் பேசிக்
கொண்டே கோட்டைக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.
ஆல்ப்ரெட் கோட்டைக்குள் உபசாரத்துடன் அழைக்
கப்பட்டான். அவன்மீது கர்னல்பார்ஸ்ட்டர் மிகவும்அன்பா

யிருந்தார்.மிஸ்டர்காம்பெல்லும் அவருடையகுடும்பத்தாரும் அபாயகரமான நிலைமையிலேயே இருந்தார்களென்கிற அபிப் பிராயத்தைக்கர்னல்வெளியிடாமலிருக்க முடியவில்லை. அது வும்பெண்பாலர்கள் எப்படியிருக்கவேண்டியவர்கள் இப்போ துஎவ்விதமானகதிக்கு வந்துவிட்டார்கள்என்பதைநினைத்து அவர்மிகவும் துயாமுற்றிருந்தார். மிஸிஸ் காம்பெல்லும் இர ண்டுபர்ஸிவல்பெண்களும் சீதகாலத்தைக்கோட்டையில் கழி க்கச்சம்மதிப்பார்களேயானல் அதற்குவேண்டிய சவுகரியங் களைச்செய்துகொடுப்பதாகக்கூட ஜாடையாகச்சொல்லிப்பா ர்த்தார். ஆனல் ஆல்ப்ரெட் உடனே என்ன சம்பவித்தாலும் தன் தாயாராவது, அத்தைபெண்களாவது தன் தந்தையரை விட்டுப்பிரிவதற்குச்சம்மதியார்என்பது தன்னுடைய உறுதி யான நம்பிக்கைஎன்று மறுமொழிசொன்னன். அவருடைய சம்பத்தைச்சேர்ந்தனுபவித்தவர்கள் இப்போதுஅவரது ஆப த்துக்காலத்தில் இணைபிரியார்; இவ்விடம்வரப்புறப்படுவதற் குமுன்னமேஎக்கதிக்கும் தயாராகவிருக்கவேண்டுமென்று உணர்ந்தவர்களே. அன்னியருடையகையுதவியை அபேக்ஷிப் பதைவிட அபாயத்திற்கிடமிருந்தாலும் பராதீனமின்றிமான மாகக்காலட்சேபம்செய்வதையே தன்தந்தையார் மேலாகக்க ருதினவர் என்றான்.

“ஆயினும் பெருமாட்டிகள் அவ்விடமேயிருந்து ஆபத்தில் மாட்டிக்கொள்ளுவதற்குக்காரணம் யாதோவென்றெனக்கு த்தெரியவில்லையே.”

“நாங்கள் சங்கியையில் மிகுதியாக விருந்தால் ஆபத்தைத் தடுப்பதற்குச் சாதனங்களும் மிகுதியாகும் அல்லவா?” என் றான் ஆல்ப்ரெட்.

“ஆனல்ஸ்திரீகள் இருந்தால் இடையூறுகளுக்கே யல்லா மல் வேறுயாதுக்காவார்கள்?”

“நான்வேறுவிதமாய் எண்ணுகிறேன். எனது அத்தைமக



ளிர்கள் அபலைகளாயினும்வயதில்இளையோராயினும், தங்களா ல்ஆகவேண்டியபணிகளிருந்தால்பின்தங்கார்கள். அப்படியே தான்என்தாயாரும். இப்போது அவர்களெல்லோருக்குப்மு றுக்குக்குழாய்த் துப்பாக்கிகளைக்கையாளத்தெரியும். அதோ டுகூடவீட்டைக்காப்பது என்றால் ஒருஸ்திரீக்கு உறுதிமட்டு ம் இருந்தால்ஆண்பிள்ளைக்குச் சளைக்கமாட்டாள். நீங்கள்நிச் சயமாக இருக்கலாம். அவசியம் நேரிட்டுவிட்டால் அவர்கள் அப்படியே செய்வார்கள்,” என்றுஆல்ப்ரெட்சொல்லிவிட்டு, பிற்பாடு நகைத்துக்கொண்டு, ஆதலால் கர்னல், தாங்களே பாருங்கள்! நாங்கள் பெருமாட்டிகளை எடுத்துவிட்டால் எங் களுடைய ஆள்கட்டுச்சோர்வடைந்துவிடும்.” என்றான்.

“நல்லது என்னருமைப் பையா! நான் இனி வற்புறு த்துவதில்லை. தேவையிருந்தால் வேண்டிய போதெல்லாம் உங்களுக்குச்சகாயம் செய்யத்தயாராக இருக்கிறேன் என்று மட்டில் உனக்கு ஞாபகம் இருக்கட்டும்.”

“கர்னல் பார்ஸ்டர்! இப்போது குதிரைகள் எங்கள் கைவசத்தில் இல்லாமையால் தங்களிடம் ஆகாச வாணங்கள் ஏதேனுமிருந்தால் உதவுமேயென்று ஆலோசித்துக்கொண் டிருக்கிறேன். நாங்களிருப்பது சமீபமே யாதலின் இரவில் ஒரு பாணத்தைவிட்டால் உடனேஉங்களுக்குத்தெரியவரும் அத்தியாவசியம்நேரிட்டாலொழிய அதைஉபயோகப்படுத்து வதில்லையென்று நான்வாக்குத்தத்தம் செய்கிறேன்.”

“ஆல்ப்ரெட்! நீ அவைகளைப்பற்றிப் பேசினதில் எனக் குச் சந்தோஷம். நீ ஒரு டஜன் எடுத்துக்கொண்டு போக லாம். நீ காலையில் காய்ந்த புல்லை ஏற்றிக்கொண்டுப்போகும் படகுகளோடு திரும்பிப் போகிறாயல்லவா?

“ஆம்; அதைச் சாக்கிட்டாவது எனதுஜோடுகள் தேய் வதை மட்டுக்கட்டிக்கொள்கிறேன். எங்களுக்கருகில் சக்கி லியர்கள் இருக்கவில்லை; இந்தக்காலத்தில் படகுகள் செல்லக்

கூடியது இதுவே கடைசித் தடவையாயிருக்குமென்றுகரு
துகிறேன்."

"ஆம்; உறைபனி சீக்கிரத்தில் ஆரம்பித்துவிடும். இன்
னும் ஒரு பட்சத்திற்குள் உறைபனி கனமாகப்பெய்து அடு
த்த வசந்தகாலம்வரையில் பூமி எங்கும் மூடப்பட்டுப்போய்
விடும். ஆனால் அடிக்கடி நீ வரவாவது அல்லது சமாசாரங்
களைச்சொல்லி யனுப்பவாவது முயல்வாயல்லவா?"

"ஆம்; உறைபனிக்காற் கட்டையில் நகரத்தொடங்
கினவுடன் தங்களைவந்து தரிசிக்கிறேன். ஆனால் அந்தவித்
தையை நான் இன்னும் கற்றேன் அல்லன்".

அடுத்த நாள் வானம் வெளிவாங்கிப் பகல் பிரகாசமா
யிருந்தது. ஓக்மரங்களின் கருஞ்சிவப்புற்ற தழைகள் மேலே
யும் மேபிள் மரத்தின் மேலிருந்த தெளிவான மஞ்சள் இதழ்
கள் வழியாகவும் சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தான்.
சுமார் ஒரு மாதத்திற்கு முந்தி இரண்டு மூன்று நாள் காலே
யில் உறைபனி இலேசாக விருந்து கொண்டிருந்தது. இப்
போது இந்தியக்கோடையென்று சொல்லப்படும் ஒருவித
மான காலஸ்திதியை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.
அஃதாவது சீதகாலம் ஊன்றுவதற்குச்சற்றுமுன் திரு
ம்பிவந்து அற்பகாலமிருக்கும் மப்புமந்தார மில்லாத நாள்.

போர்வீரர்களால் காய்ந்தபுல் படகுகளில் ஏற்றப்பட்டு
உச்சிக்காலத்தில்கர்னல்பார்ஸ்டரிடத்தும் மற்றுமுள்ள கோ
ட்டை உத்தியோகஸ்தர்களிடத்தும் விடைபெற்று, ஆல்ப்
ரெட் படகேறச் சென்றான். காப்டின் ஸிங்க்ளேரும் வழி
கொண்டு விடுவதற்காகக் கூடச்செல்ல,ஆல்ப்ரெட் படகேறி
னான். காப்ட்டின் ஸிங்க்ளேருக்கு அன்று முறை ஏற்பட்டி
ருந்தமையால் கூடச்செல்ல முடியவில்லை.

"வாணங்களைப்பற்றி மறவாமல் இங்கிருக்கும் காவல்
காரர்களுக்குச்சொல்லி வைக்கிறேன்; நீயும் உன்தாயாருக்



கும் அத்தைமகளிருக்கும்சொல்லிவை. துப்பாக்கிக்குழாயிலி
ருந்து அதைச்சுடும் வழியை அவர்களுக்குக்கற்பிக்க மறவா
தே. போய் வா. அப்பா, என்னருமைப்பையா! ஆண்டவன்
உங்களைக்காக்கட்டும்!" என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்.

படகுகள் கரையிலிருந்து தள்ளப்படவும், "போய்வரு
கிறேன்," என்றான் ஆல்ப்ரெட்.

## அத்தியாயம் 17.

ஆல்ப்ரெட் கோட்டையிலிருந்துதிரும்பிவந்த பிறகுசில
நாள்யாதொரு விசேஷமின்றியே கழிந்தன. மார்ட்டின் மலா
ச்சிபோனிடம் போய்ப்பேசிவந்துவிட்டான். மலாச்சிபோன்
நான் உஷாருடன் இருப்பேனென்றும், இந்தியர்கள் யாதே
னும்இடைஞ்சல் செய்வதாகத்தெரியவந்தால் உடனே வந்து
தெரிவிப்பதோடு வேண்டியஉதவியையும்செய்வேனென்றும்
சொல்லியனுப்பிவிட்டான். தான் போய்ச்சிலநாள்களுக்குள்
நடந்ததென்ன, நடக்கப்போவதென்ன, என்பதை யறிந்து
கொண்டு வருவதாகவும் மார்ட்டினிடம் சொன்னான். மார்ட்
டின் இந்தச் செய்தியைச் சொல்லவும் ஆல்ப்ரெட் திருப்திய
டைந்து, காப்ட்டின் ஸிங்க்ளேர் மூலமாய்க்கிடைத்த சமா
சாரத்தைத் தன் சகோதரன் ஹென்றியைத்தவிர வேறுயா
ருக்கும் தெரியப்படுத்தவில்லை.

இப்படி ஒவ்வொரு நாளும் தள்ளப்பட்டுக்கொண்டிருக்
கையில், ஒருநாள் கோட்டையிலிருந்து கடிதங்களைத்தூக்கிக்
கொண்டு ஒருகார்ப்பொரல் வந்தான். இவர்கள் இங்கே குடி
யேறினபிற்பாடு இவையே முதலில்வந்த கடிதங்கள். கடிதங்
கள்! ஆம், கடிதங்கள்!! கியூபெக்கிலிருந்து மட்டுமன்று. இங்கி
லாந்திலிருந்துகூட!!! என்ன கொண்டாட்டம்! வீடுமுழுவ
தும் ஒரே குழப்பமாக விருந்தது. மிஸ்டர் காம்பெல் முத்
திரையையுடைத்து மூட்டையையவிழ்க்குமுன் எல்லோரும்
அவரைச் சுற்றி வளைத்துக்கொண்டுவிட்டார்கள். முதலில்

கியூபெக் கவர்னர் அனுப்பிய சமாசாரப்பத்திரிகைக்கட்டு—
அது அப்பால் வைக்கப்பட்டது. மிஸ்டர் காம்பெல்லால் கியூ
பெக்கில் நியமிக்கப்பெற்ற ஏஜண்டிடமிருந்து ஒரு கடிதம்—
அது வியவகாரச் சம்பந்தமானதால் பொறுத்துப் பார்த்துக்
கொள்ளப்படலாம். பிற்பாடு இங்கிலாந்திலிருந்துவந்தகடிதங்
கள்—மிஸ் பேட்டர்ஸனுல் மேரிக்கு ஒன்று, எம்மாவுக்கு,
ஒன்று, வரிமேல் வரியாய் நெருக்கமாகஎழுதப்பட்டஇரண்டு
கடிதங்கள். மற்றொன்று இங்கிலாந்தில் மிஸ்டர்காம்பெல்லின்
ஏஜண்டிடமிருந்து, மிஸ்டர்ஆல்ப்ரெட் காம்பெல் மேல்விலா
சத்திற்கு கவர்ன்மெண்ட் முத்திரையிடப்பட்ட ஒருநீண்
டகவர். அவரவர்தத்தம்முடையகடிதத்தைப்பிடுங்கிக்கொண்
டுஒவ்வொரு மூலைக்கு ஓடிப்போனார்கள். கடிதம்வரப்பெறாத
வள் மிஸிஸ்காம்பெல் ஒருத்தியே. அவள் ஆல்ப்ரெட் தன்கடி
தத்தை வாசித்துக்கொண்டிருக்கையில் அவனது முகத்தை
உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் பரபரப்புடன் கா
கிதத்தின்மேல் கண்களை ஓட்டித்தாயாரைநோக்கி, "என்னரு
மைத் தாயே! எனக்கு உத்தியோகம் காயமாய் விட்டது.
மஹாராஜாவின் ஊழியத்தில்இப்போது நானொரு † லெப்டி
னண்டு; ஹுரே! இதோஒருகடிதம்அடக்கிவைக்கப்பட்டிருக்
கிறது! அதுகாப்ட்டின் லம்லியிடமிருந்துவந்துளது. அவரது
கையெழுத்தை நான்நன்கு அறிவேன்," என்றுகூறினான். உட
னே ஆல்ப்ரெட்மேல் அங்கிருப்பவர்யாவரும்சோபநோபசா
ரங்களைப்பொழிந்தார்கள். ஸர்க்கார்க்காகிதத்தைத் தன்தாயி
ன்கையில் கொடுத்துவிட்டு, ஆல்ப்ரெட் காப்ட்டின் லம்லியின்
காகிதத்தைப்படிக்க ஆரம்பித்தான். பிறகுசற்றுநேரம் வரை
யில் அவரவர் தத்தம் கடிதத்தைப் பார்த்துக்கொண்டிருக்க,
மிஸ்டர்காம்பெல்," நானும் ஒருக்ஷேமசமாசாரம்வந்திருப்ப
தைக் கூறுகிறேன். மிஸ்டர் ஹார்வி எழுதியிருக்கிற கடி

† காப்ட்டினுக்கு அடுத்த கீழ் உத்தியோகஸ்தர்.



தத்தில், மிஸ்டர் டக்ளஸ் காம்பெல் * கிரீன்—ஹௌஸ்களி
லும், ஹாட்ஹௌஸ்களிலும் நிரப்பவும் செம்மையாகவும்
செடி கொடிகள் அடைக்கப்பெற்றிருந்ததைக்கண்டு, அதற்
காகக் கிரயம் கொடுக்கவேண்டியது தம்கடமை என்று உண
ர்ந்து, அவைகளுக்குப்பெறுமானத்தைப்போடச் சொல்லிக்
கூடுதலானதொகை எழுநூறுபவுன்களை உடனே எனக்கா
கத்தம்முடையகையில் கொடுத்துவிட்டாரென்று எழுதியிருக்
கிறார். மிஸ்டர்டக்ளஸ் காம்பெல்லின் இந்தச்செய்கையானது
மிகவும் உதாரமானது. நான் அந்தஆஸ்தியைக்கைவசப்படு
த்திக்கொள்ளும்போதும் செடிகள் அங்கேயிருந்ததால்இதை
நானெதிர்பார்க்கவேயில்லை. ஆயினும் இப்போது நான்ஏழை
யாய்விட்டபடியால் அதையங்கீகரிப்பதில் சங்கோசம் அடை
யக்கூடாது. ஆதலின் அவருக்கு நான்எழுதி அவர்செய்த தர்
மத்திற்காக எனதுவந்தனங்களை அனுப்புகிறேன்," என்றார்.
காப்ட்டின் லம்லி எழுதினகடிதத்தை ஆல்ப்ரெடு படித்தவு
டன் ஆழ்ந்த ஆலோசனையுற்றிருந்தான். உண்மையாதெ
னில்தனக்குக்கிடைத்த பிரமோஷனையும் அறிந்து, காப்ட்டின்
லம்லியின் குறிப்புகளையும்படிக்கவும் ஆல்ப்ரெடுக்குப்பழைய
ஞாபகங்களெல்லாம் திரும்பிவந்து, வேலையைவிட்டுவந்துவிட்
டோமே என்ற மனக்குறை மறுபடியும் மேலாடி, அவனது
முகம் வாட்டமுற்றது போலிருந்தது. ஆனாலும் தனது அத்
தை மகளிர்கள் தம் கடிதங்களை உரக்கப்படித்துக்கேட்கும்
போது வரவர அவனதுமனக்கலக்கம் தெளிந்து முகமும்பிர
சன்னப்பட்டது.

கடைசியில் கடிதங்களெல்லாம் படித்து முடிந்து சமா
சாரப் பத்திரிகைகளும் பிரித்துக்கொடுக்கப்பட்டன. அன்று

* சீதள தேசங்களில் செடிகொடிகள் வளர்வதற்கேற்ற
உஷ்ணத்தை விடாமலும் வெளிச்சத்தைத் தடுக்காமலும் இருக்கு
மாறு கண்ணாடியால் கட்டப்படும் பெரிய செடிக்கூடுகள்,

முழுவதும் வேலையொன்றும் நடைபெறவில்லை. சாயங்காலத்தில் அடுப்பைச் சுற்றி எல்லாரும் உட்கார்ந்துகொண்டு தங்களுக்குவந்த சமாசாரங்களைப் பற்றியே வழக்கமாய்ப் படித்துக்கொள்ளும் நேரத்துக்கப்பாலும் கூடப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அடுத்த நாள் தூங்கும் அறையைவிட்டு வெளியே வருமுன் மிஸ்டர் காம்பெல் மனைவியை நோக்கி, "ஆஹா இந்தப் பணம் கிடைத்தது என்ன நல்ல சமயம்! என்னருமையான எமிலி! இதையே நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். கியூபெக்கிலிருக்கும்என் துஏஜெண்டிடமிருந்துவந்தகடிதத்தைப் பார்த்தால் உனக்கே தெரியும். கையிலிருந்த பணம் சற்றேறக்குறைய முழுவதும் செலவழிந்து போயிருப்பதுடன் நமக்கு வாங்கவேண்டிய சாமான்கள் இன்னும்அதிகமாக இருக்கின்றன. அடுத்த வருஷம் நாம் குதிரைகளை வாங்கவேண்டியதுடன் பண்டங்களையும் அதிகப்படுத்தவேண்டும். சொல்லப்போனல் இன்னும்கூட ஓர்இரண்டு ஆள்கிடைத்தால் மிகவும் உதவியாயிருக்கும். ஏனெனில் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாகக்காடு வெட்டி முடிகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரமாக நமதுபராதீன நிலைமை ஒழியும்," என்றார்.

"காம்பெல்! நீங்கள் சொல்வதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். மேலும் ஆல்ப்ரெடுக்கு, ஐயோ பாவம்! இனி அரைச் சம்பளமாவதுண்டல்லவா? அதுவும் நமக்குப் பேருதவியாயிருக்கும். இன்றிரவு வேறொன்றையும்பற்றியல்லாது அவனைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அவன் காப்டின் லம்லியின் கடிதத்தைப்படிக்கும்போது உற்றுப் பார்த்திருந்த நான், பிற்பாடு அவனுக்கிருந்த மனவியாகூலத்தை நன்குணர்ந்தேன். அவனை இப்போது உத்தியோகத்திற்குத்திரும்பிப்போகும்படி விட்டுவிடலாமென்று கூட நினைக்கிறேன். அவனைவிட்டுப் பிரிவதென்றால் மிகவும் துக்கமா



கத்தானிருக்கும். ஆனல் அவன் நம்மை உத்தேசித்து விசேஷித்த தியாகத்தைச் செய்யும்படி வருகிறதே."

அதற்கு மிஸ்டர் காம்பெல், "ஆயினும் அது அவனது கடைமையே. மேலும் இந்தத் தருணத்தில் அவன் நம்முடன் இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். நாம் இன்னும் பலமாக இங்கே ஊன்றி, பிறரின் கையை எதிர்பார்க்காத நிலைமைக்கு வந்துவிட்டால் அப்போது இதைப்பற்றி ஆலோசிப்போம்," என்றார்.

இவ்விருவருள் இச்சம்பாஷணை நடந்துகொண்டிருக்கையில் மேரியும் எம்மாவும் யாது செய்துகொண்டிருந்தார்கள்? வழக்கம்போல மாடுகறக்கக் கொட்டகைக்குச்சென்று மாட்டைக்கறந்தானபின் வாளியைத்தரையில் வைத்துவிட்டு, காலை வெளிவாங்கி ஆனந்தமாக இருந்தமையால்; இளம்வெயில் காயும் பொருட்டு இவ்விருவரும் ஓர் அடிமரத்தில் உட்கார்ந்துகொண்டு சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

"மேரி! சொன்னல் நம்புவாயோ?" என்றாள் எம்மா; "மிஸ்பேட்டர்ஸனிடமிருந்து எனக்கு வந்த கடிதம் என்னுள்ளத்தைக் கலக்கிவிட்டது."

"எனதினிய எம்மா, அப்படியா?" என்றாள் மேரி.

"ஆம், அப்படித்தான். இரவுமுழுவதும் வெகஸ்ட்டன்ஹாலில் நமதுமாளிகையில் பழையகாலத்திற்போல் சம்பரமங்களையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருப்பதாகக் கனாக் கண்டுகொண்டிருந்தேன்," என்றாள் எம்மா.

"நானும் அப்படியேதான்," என்றாள் மேரி; "ஆனல் நான் எழுந்தவுடன் பழையஞாபகங்களை எல்லாம் என்னால் கூடியவரையில் முண்டி உதறிவிட்டு, எனதுள்ளத்தைக்கலக்கவொட்டாமல் செய்தேன். வீணசைக் கிடங்கொடுத்து மனத்தைப்புண்ணாக்கிக்கொள்வதிற் பயனென்ன?"

"நானும் மனத்தைப் புண்ணாக்கிக் கொள்ளவில்லை; ஆயி

னும் அப்படியும் ஒருகாலம் இருந்தோம், என்பதைமறப்பது என்னால் சாத்தியப்படவில்லை," என்றாள் மேரி.

"அப்படி இருந்தால் என்ன? இப்போது நமக்கு யாது பிரமாதமாகச் சம்பவித்து விட்டது? நம்மையும்விடப் பறி கொடுத்தவர்கள் இல்லையா?நமது மாமனும் மாமியும் யாவர்? நாமென்றாலும் வெகுகாலம் சுகம் அனுபவித்தவர்களல்லர்; அவர்கள் எவ்வளவு வருஷக்கணக்காகச் சுகத்தைஅனுபவித்தவர்கள்?அதைவிட நமக்குவந்திருப்பது அதிசயமா?எம்மா, எனக்குத் தோன்றுவதென்ன வென்றால், நம்மைப்பற்றிக்குறைப்பட்டுக் கொண்டிருக்காமல், நம்மைக்கண்ணிற்குக்கண்ணாகவைத்துப் பரிபாலிக்கின்ற நமதரிய மாமன்மாமியாருக்குச்சிரமம் குறையும்படி நாம் நடந்துகொள்ளுவதே நமது கடமை," என்றாள் மேரி.

"சரி, அம்மா,மேரி;நீசொல்வனவெல்லாம்யுக்தம்தான். ஆயினும் உன்னைப்போல நான்ஒருஞானியல்ல. ஆனதுபற்றி எனதுள்ளம் கட்டுக்குள் அகப்படமாட்டேன் என்கிறது. ஆயினும் நாளடைவிலே மிஸ் பேட்டர்ஸன் கடிதத்தை மறந்துவிடமுயலுகிறேன். போவோம்,வா; காலம்செல்லுகிறது" என்று சொல்லிவிட்டு அக்காளை அழைத்துக்கொண்டு பால்வாளியுடன் வீடுபோய்ச்சேர்ந்தாள்.

அடுத்த இரண்டு நாள்களிலும் அந்தக்குடும்பத்தில் குழப்பம்மேலிட்டிருந்தது. சமாசாரப்பத்திரிகைகளில் அத்தனை சமாசாரங்கள் இருந்தன. அவைகளைப்படித்ததாலுண்டான பழையஞாபகங்கள் அத்தனையிருந்தன; பேசியாராய்ச்சிசெய்யவேண்டியது அவ்வளவுஇருந்தது.ஆதலால்வேலையொன்றும்ஓடவில்லை.காலஸ்திதியோவரவரக்குளிர்ச்சிமிகுந்துகொண்டிருந்தது; இரண்டுநாளாகச் சூரியன் கண்ணிற்படவில்லை. வானமெங்கும்ஒருங்கடர்ந்து நரைவர்ணமுற்று ஓரேமூட்டமாயிருந்தது; இவையெல்லாம் சீதகாலம் கிட்டியதற்குச்சூச



கமாயிருந்தன. மார்ட்டின் வேட்டையாடிக்கொண்டிருந்து வீடு திரும்பிவந்ததும், காலஸ்திதி மாறப்போகிறது, தயாராகிவிடுங்கள்,என்று சொல்லியவாறே சம்பவித்துவிட்டது.

## அத்தியாயம்—18.

ஒரு சனிக்கிழமை சாயங்காலம்,முந்தியிருந்ததைவிடக் குளிர் மிகுதியாயிருந்தமையால், அவர்களெல்லாரும் நெருப்பைச்சுற்றிக்குளிர் காய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அப்போது காட்டிலிருந்த மரங்களுள் காற்றினது அலறல் காதில்விழுந்தவுடன் வடதிசையிலிருந்து கடுங்காற்றடித்தது தெரியவந்தது.

"ஆஹா! வந்துவிட்டது! சீதகாலம் வருமுன்கடுங்காற்றே பெரும்பாலும் வரும்," என்றான் மார்ட்டின்.

"ஆம் இதைப்பார்த்தால் மிகவும் கடுமையுடன் அடிக்கும்போல் தோன்றுகிறது. கவனி! மரங்களின் கிளைகள் எப்படி ஒன்றோடொன்று கர்கர் என்று உறைந்து முறிகின்றன, பார்!" என்றான் ஆல்ப்ரெட்.

"ஜான்! பண்டகசாலையிலிருந்து உறைபனிக்கால்கட்டைகளை(snow-shows)எடுத்துவரலாமென்று எண்ணுகிறேன்.நீ வேட்டையாட வெளியிற்செல்லும்போது அவைகளை மாட்டிக்கொண்டு எப்படி நடப்பாயென்று பார்ப்போமே. நீ இன்னும் ஒரு * மூஸைச்சுட்டவனல்லன்." என்றான்மார்ட்டின்.

"மார்ட்டின்! ‡ எல்குத்தானோ மூஸென்பது?" என்றான் ஹென்றி.

"அல்லவென்று நான் கருதுகிறேன், ஐயா! ஆயினும் இவ்விரண்டு பெயர்களையும் அதற்கிட்டுநான் கேள்விப்பட்டிருக்கிறேன்."

"நீயொன்றை எப்போதாவது சுட்டதுண்டோ?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

* மூஸ்((Moose)-ஒருவகை மான். ‡ எல்க்(ELK)-காட்டுப்பசு.

"ஆம், தாயே! அநேகம் அவை விசித்திரமானபிராணிகள். மற்ற மான்கள் ஓடுவதுபோல் இவைகளுக்கு ஓடத்தெரியாதாயினும், அவைகளைப்போலவே இவைகளும் குலுக்கி நடக்கும். ஆதலின் எல்லாம் ஒன்றே. அவை மிகவும் மருள்கிற பிராணியாதலால் அவற்றின் சமீபத்திற்செல்வது சிரமசாத்தியம். ஆயினும், உறைபனிக்காலத்தில் அவைகளை எளிதில் பிடித்துவிடலாம். ஏனெனில் இலேசான மானைப்போல அவைகள் விரைவாக ஓடமுடியாமல் அவைகளின் கனமுற்ற உடம்பின் பளுவே அவைகளைப்பனியில் தோள்பட்டை வரை இருத்த, அவைகள் தத்தளித்துக்கொண்டிருக்கும்போது பிடித்து விடலாம். மாஸ்டர் பர்ஸிவல்! நீயே பார்! நமக்கிருப்பதுபோல் அவைகளுக்குக் காலில் தரித்துக்கொள்ள உறைபனிக்கால் கட்டை இல்லையல்லவா? அதனால்தான் அது நமக்கு வசப்படுவது."

"மார்ட்டின்! அவை துஷ்டப்பிராணிகளோ?" என்றாள் மேரி பர்ஸிவல்.

"அம்மணி! எந்தப்பெரிய பிராணியும் எதிரிட்டுக்கொண்டு வந்தால் தொந்தரவுதான். மூஸின் கிளைக்கொம்புகள் சிலவேளையில் ஐம்பதுராத்தல் நிறையிருக்கும். அதுவுமன்றி அது ஒரு பலமுள்ளபிராணி, ஆயினும் ஆழ்ந்த உறைபனியில் அது செய்யக்கூடியதொன்றுமில்லை. அதெப்படியிருந்தாலும் நாங்கள் ஒன்றைக்கொண்டு வந்தவுடன் கறியாக்கித் தின்பதற்கு வெகு நன்றாகவிருக்கிறது என்று நீங்கள்சொல்லுவீர்கள்."

தனது முறைக்குக்குழாய்த் துப்பாக்கியைத்துடைத்துக் கொண்டிருந்த ஜான், "நான் ஒன்றுகொண்டு வருவேன்," என்றான்.

"உறைபனிக்காற்கட்டையைப்போட்டுக்கொண்டு நடக்க உனக்குத்தெரிந்தவுடன் உனக்கு முடியுமொன்று நான்



ஒப்புக்கொள்கிறேன்," என்றான் மார்ட்டின். "காற்றுவரவர
ஓங்குகிறது;மாஸ்டர் ஜான்! நாளைக்காலையில் மலாச்சிபோன்
குடிசைக்குப்போவதாக நீ உத்தேசித்துக் கொண்டிருந்தபடி
போகமாட்டாயென்று நான் ஊகிக்கிறேன்."

"ஓ அப்பா! இராத்திரி என்ன பயங்கரமாயிருக்கிறது!
குளிரும் மிகுதியாயிருக்கிறது," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"ஆம்,தாயே! ஆனால்பனி விழுந்தானவுடன் கொஞ்சம்
உஷ்ணம் கொடுக்கும்."

"படுக்கப்போக நேரமாய்விட்டது. அலுவலையெல்லாம்
நிறுத்திவிடுங்கள். ஹென்றி,பைபிளைப்போய்க்கொண்டுவா,"
என்றார் மிஸ்டர் காம்பெல்.

அன்றிரவுகடுங்காற்றாயிருந்தது புயலாகமாறிவிட்டது.
வனத்திலிருந்தமரங்கள்ஒன்றோடொன்றுமுட்டிக்கொண்டும்
மோதிக்கொண்டும், அலறிக்கொண்டும், முறிந்துகொண்டும்
இருந்ததினால் உண்டாகிய இந்தச்சத்தத்தைக் கேட்டுப் பழ
க்கம் இல்லாதவர்களாதலால் அவர்கள்நடுக்கமுற்றிருந்தனர்.
கிராதியடைப்புச்(Paliasdes) சுற்றிலும் காற்று உருமி ஊளை
யிட்டுக்கொண்டும், கூறையின்மீதுள்ள மரப்பட்டைகள் காற்
றில் படபடவென்று அடித்துக்கொண்டும் இருந்ததால்,இந்த
இரைச்சலில் தூக்கம் வராமல் குளிரும் மிகுதிப்பட்டு அவஸ்
தைப்பட்டார்கள். மேலும் இந்தப்புதிய வீட்டிற்குப் பெருங்
காற்றடிக்கையில் சோதனையேற்பட்டது,இதேமுதல்தடவை
யாதலால் முடிவெப்படியிருக்குமோவென்று விழித்திருந்தவ
ரில் சிலர்கவலையுடன் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.காலைப்
பொழுது நெருங்கவும் புயல் ஓய்ந்துவிட்டது. எல்லாம் மறு
படியும் அமரிக்கையாயின. இரவில் நல்லதூக்கமின்றி அவர்
கள் எழுந்திருக்க நேரமாயிற்று. எம்மாவும் மேரியும் அறை
யைவிட்டு வெளியில் வரவும் மார்ட்டினும் ஆல்ப்ரெடும் சுளு
குப்பாரையை எடுத்துக்கொண்டுபரபரப்புடன்வேலைசெய்து

கொண்டிருந்ததைக் கண்டார்கள். ஆஹா ! என்ன ஆச்சரியத்தைச்சொல்வார்கள்! பனியானது தரைக்குமேல் குறைந்தது ஒருகஜ உயரம்? உறைந்திருந்தது! சிலவிடங்களில் தங்கள் தலைக்குமேல் உயரமாகக் குவிந்திருந்தது!.

"ஏனடா அப்பா! ஆல்ப்ரெட்! இன்றுகாலை பசுக்களண்டைஎப்படிப் போவது ? இதென்ன இவ்வளவு திடீரென்று சீதகாலம் வந்துவிட்டதே"! என்றாள் எம்மா.

"இன்னும்பனிகொட்டுகிறதே; அவ்வளவாகஜாஸ்தியில்லை; ஆயினும்வானமெங்கும் கருத்திருக்கிறதே!" என்றாள்மேரி.

"ஆம், அம்மணி! இதைப்போல இன்னும் இருக்கிறது; மிஸ்டர் காம்பெல்லும் ஹென்றியும் இன்னும் சுளுகுப்பாரை கொண்டுவரப்பண்டகசாலைக்குச்சென்றிருக்கிறார்கள். ஏனெனில் நாம்கடுமையாக வேலைசெய்தால்தான் ஒரு ஒற்றையடிப் பாதையை யொதுக்கிப்பனியையும் கிராதிக்கம்பங்களண்டையில் குவிக்கலாம்," என்றான் மார்ட்டின்.

"இஃதென்ன! திடீரென்று மாறிவிட்டதே! வானம்வெளியாகவேண்டுமே; அப்போது எனக்குக்கவலையேயிராது," என்றாள் எம்மா.

"மிஸ் எம்மா! நாளைக்கு அப்படியே ஆய்விடும், நான் சொல்லுகிறேன் பார் ! ஆனல், பனி அதற்குள் அடங்கிவிடவேண்டும்."

மார்ட்டினுக்கும் ஆல்ப்ரெடுக்கும் பண்டகசாலைக்குமட்டுமே ஒரு வழியை யொதுக்கமுடிந்தது. மிஸ்டர் காம்பெல்லும் ஹென்றியும் இன்னும் சுளுகுப்பாரையைக்கொண்டு வந்தார்கள்; காலையுணவு அருந்தியதும் வேலையை ஆரம்பித்துக்கொண்டார்கள். மேரியும் எம்மாவும் பசுக்களைக் கறக்கப் போவது சாத்தியப்படவில்லை. வேட்டைக்காரன் குடிசையிலன்றோ மாடுகளடைக்கப்பட்டிருந்தன. ஆதலின் அதற்கு ஒரு வழி யொதுக்கியாகிறவரையில் அந்த அலுவலை மார்ட்



டின் ஏற்றுக்கொண்டான்.

மார்ட்டின் சொன்னதற்கிணங்கி, கிராதிக்குட்புறத்திலுள்ள பனியைக் கிராதியோரமாகவே ஒட்டியணைத்து, கைக்கெட்டினவரையிலுயர்ந்துசுவராகக்கட்டிவிட்டனர்போலும். இப்படிச்செய்ததால் வீட்டைச்சுற்றியிருந்த பனியையொழித்ததோடும்கூட இதற்குமேல் எதிர்பார்க்கவேண்டிய பனிச்சாரல் காற்றுக்கும் அதுஒரு தடைமறைவாகும். அனைவரும் கடுமையாக வேலை செய்தனர். பர்ஸிவலும் ஜானும் மிகவும் உதவி புரிந்தார்கள். மிஸிஸ்காம்பெல்லும் பெண்களும் கூட மிச்சப்பட்ட பனியைக்கூட்டிச்சேர்ப்பதிலும், ஜன்னல் படிச் சட்டங்களிலிருந்தும் மற்றப்பாகங்களிலிருந்தும் அதைச்சுரண்டியெடுப்பதிலும் உதவியாயிருந்தார்கள். உச்சிக்காலம் வந்ததும் பனிவீழ்வது நின்று வானம் வெளிவாங்கி, சூரியனும் பிரகாசித்தது. ஆயினும் உஷ்ணம் அதிகமாகச் சுடவில்லை.

மத்தியானச்சாப்பாடுமுடிந்ததும், மறுபடியும்வேலையைப் பிடித்துக்கொண்டு, பசுக்களையடைத்திருந்த குடிசைக்குஒரு பாதையை யொதுக்கிவிட முயன்று, இரவு கருக்குமுன்வாய்க்காலுக்குக்குறுக்கிட்டிருந்த பாலம் வரை வேலை தீர்ந்துபோய்விட்டது. அதாவது பாதி வழி. பிறகு எல்லோரும் படுக்கப் போனார்கள், இப்போது குளிர் கடுமையாயிருந்தமையாலும் † உஷ்ணமானிக்குழாய் உறையும் புள்ளிக்கு வெகுதூரம் கீழே இருந்தமையாலும், மிஸிஸ் காம்பெல்லும் பெண்களும் தங்கள் படுக்கைகளின்மேல் மிகுந்த கம்பளங்களையும் தோல்களையும் போட்டுக் கொண்டார்கள்.

மறுநாட்காலையில் வேலையை ஆரம்பித்தார்கள். வானம் இன்னும் வெளியாகியே யிருந்து; சூரியனும் தெளிவாயும் பிரகாசமாயும் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. உச்சிக்கால உணவுக்குமுன் மாட்டுக்கொட்டகைக்கு ஒருபாதை முடித்தாய்

† Thermometer.

விட்டது. பிறகு ஆண்பிள்ளைகளெல்லோரும் இருட்டுக்குமுன் கிராதிக்குள் தங்களாலியன்றமட்டும் விறகுக் கட்டைகளைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதாயிருந்தார்கள்.

"சரி! இனி வீட்டிற்குள் காரியங்கள் எப்போதும்போல் நடக்கலாம். மார்ட்டின், வெளியே நாம் செய்யவேண்டியதென்ன?" என்றான் ஆல்ப்ரெட்.

"முதல்முதல் உறைபனிக்காற் கட்டையில் ஏறிநடக்கக் கற்றுக்கொள். இல்லாவிடில் இந்தப் பெருமாட்டிகளைப் போலவே நீயும் சிறைச்சாலையில் அகப்பட்டவன்போலாய் விடுவாய். உன் செய்தி என்ன, ஜான்! நீ மலாச்சியின் குடிசையில் இல்லையே!" என்றான் மார்ட்டின்.

"நாளைக்குப் போவது" என்றான் ஜான்.

"அன்று, நாளைக்கன்று, ஏனெனில் நானும் உன்னுடன் வரவேண்டும். உன்னைத் தனியாக வழியைக் கண்டுபிடித்துச் செல்லும்படி நான் நம்பிவிடமாட்டேன். நானும் நாளைக்காவது நாளைமறுநாளாவது போக முடியாது. நாளைக்கு அடிக்கக்கூடிய மாடுகளை அடித்துக் கறியைச் சேகரித்து வைக்கவேண்டும். இனிப் பனிக்காலத்தில் அது கெடாது. மேலும் புல்லும் மிச்சப்படும்," என்றான் மார்ட்டின்.

"எனது பன்றியிறைச்சிப் பாண்டமும் காலியாயிருக்கிறது," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"அம்மா, கவலை வேண்டாம். வெகுசீக்கிரத்தில் அதில் சரக்கு வந்து விழும். நமது மாட்டிறைச்சியையும் கொஞ்சம் மிச்சப் படுத்திக்கொள்ளலாம். ஒருவாரத்திற்குள் அதை நிறைத்துவிடுவேன், பாருங்கள்," என்றான்மார்ட்டின்.

"ஜான்! மார்ட்டின்கூடவராமல் நீ போகக் கூடாதென்பது ஞாபகமிருக்கட்டும்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"நான் செய்யேன்," என்றான் ஜான்.

பன்றியிறைச்சிப் பரணிலிருந்தவையெல்லாம் ஒழிந்து



விட்டபடியால், புதிதாகப்பன்றி யிறைச்சியையும், ஏற்கனவே சரக்குச்செய்யப்பட்ட மீனையும் உப்பிடத் தலைப்பட்டார்கள். பிந்தியதை மிகவும் சிலாக்கியமாக விருக்கிறதென்று கொண்டாடினார்கள்.

"இந்த மீனுடைய பெயர் யாது, மார்ட்டின்?

"அதன் பெயர் வெள்ளை மீன். பழைய தேசத்திலிருந்து வந்த பிரபுக்கள், இதற்குச் சமானமானது வேறுயாதிருக்குமோ, என்னவோ? இதற்குமேலானது வேறொன்றும் கிடையாது, என்று சொல்ல நான் கேட்டிருக்கிறேன்," என்றான் மார்ட்டின்.

இஃது அத்யந்தம் சிலாக்கியமானதென்பது நிச்சயம். ஆண்டவனருளால் நாம் பிழைத்திருந்தால் அடுத்த சீதகாலத்திற்கு இதை நிரம்பச் சேகரித்து வைத்துக் கொள்வோம்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

## அத்தியாயம் 19.

பிறகு எல்லோரும் அந்தியில் வழக்கம்போல் கணப்பைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு சல்லாபம்செய்துகொண்டு இருக்கையில் மார்ட்டினது விருத்தாந்தத்தைக் கேட்கும்போது, அவன் பின் வருமாறு தன் கதையைச் சொன்னான்.

அவன் கியூபெக்கில் ஒருஇங்கிலீஷ்க்காரிக்கும் ஒரு இங்க்லீஷ்ச் சம்பந்தமுள்ள வெள்ளைக்காரனுக்கும் பிறந்தவன். அவன் தாய் அவனுக்கு நான்கு வயதில் இறந்தாள். அவனுடைய தகப்பன் இங்கிலீஷ் ராணுவத்தில்* கார்ப்பொரல் உத்தியோகம் பெற்றிருந்தமையால், அவனையும் பதினைன்காவது வயதில் ராணுவத்தில் தமுக்கடிக்கும் உத்தியோகத்தில் அமர்த்திவைக்க முயன்றான். அவனுக்கு அது பிடிக்காததால் மாட்டேன் என்று சொல்லிவிட்டான். ஸரி, பையா, அப்படியானால் உனக்குஇஷ்டமான விருத்தியை நீதேடிப்பிழைக்கப்

* கார்ப்பொரல் (corporal) என்றால் ராணுவத்தில் ஒரு கீழ்த்தர உத்தியோகஸ்தர்.

போகலாம், என்றான் தந்தை. அதற்குஅவன், அப்பா,இதோ புறப்பட்டுவிட்டேன் காட்டுக்கு என்றான்.

இரண்டு மூன்று மாதம் காட்டில் அலைந்துதிரிந்து பறை வைத்து வேட்டையாடி, கம்பளித்தூளி இரண்டு மூட்டை சேகரம்செய்து சந்தையில் விற்றுப் பணப்பையைவீட்டுக்குக் கொண்டுவந்து தந்தைக்குமுன் வைக்கவே,அவனுக்கும் நாக்கில் ஜலம் ஊறலாயிற்று. குழந்தாய்! நானும் ராணுவத்தை விட்டுக் கம்பளி வேட்டைக்கு உன்னுடன் வருகிறேன் என்றான் தகப்பன்.

அதற்கு அவன், அப்பா! தங்கள் நொண்டிக்காலுடன் வேட்டை ஆடுவது அசாத்தியமான காரியம், என்றான்.

ஆயினும் மார்ட்டின் தான்வேட்டையாடி, கம்பளிமூட்டைகளை விற்று விற்றுப் பணத்தைக்கொணர்ந்து வீட்டில் வந்துதங்கி கிழவனும் தானும் அந்தப் பணத்தை எல்லாம் குடித்தழித்த பிறகு மறுபடியும் அவன் காட்டுக்குப்போவதும் கம்பளம் கொண்டுவருவதும் விற்பதும் குடிப்பதும் வழக்கமாயிருந்தன—இம்மாதிரி காலம் கழிய, கொஞ்ச நாளில் தகப்பனும் இறந்தான்.

“இப்படித்துர்மார்க்கத்தில் செலவிடாமல் சம்பாதித்த பணத்தை மீத்துவைத்துக் குடியும் குடித்தனமுமாக நல்வழியிலிருப்போமென்ற எண்ணம் உனக்குத் தோன்றவே இல்லையா?” என்றார் மிஸ்டர் காம்பெல்.

“அய்யா! என்னைப் போன்ற ப்றையாளிகளுக்குப் பணமென்றால் சத்துரு. அது கையிலிருக்கிற வரையில் புத்தி கெட்டுப்போய்விடும். அது ஒரு வழியாக அழிந்த பிறகுதான் தேகம் பாட்டில் போடும்,” என்றான் மார்ட்டின்.

“மார்ட்டின் சொல்வதில் கொஞ்சம்தத்துவமிருக்கிறது. மிதமிஞ்சிப் பணமிருந்தால் புத்தி திமிரைத்தான் அடையும். ஏழைகள் படும் கஷ்டத்தைப் பார்த்து அனுதாபம் உண்டா



காது. பிறருக்கு இடைஞ்சல் செய்கிறதிலேயே புத்தி செல்லும். ஆனதால் கஷ்ட தசையை அடைவதும் ஆண்டவனது அருள்தான். இப்படி நமக்கு ஆண்டவனிடத்தில் ஊன்றின பக்தி வந்துவிட்டால், கஷ்டங்களைக் கொடுப்பவர் நிவர்த்தி செய்யவும் வல்லரே,” என்றார் மிஸ்டர் காம்பெல்.

இந்தப்பேச்சு முடியுங்கால்,வெளியில் ஒரு ஓநாய் ஊளையிட, பெண்பேதைகளுக்குத் திகில் கண்டது.

“மனிதர்களை ஓனாய் சீண்டுமோ?” என்று நடுநடுங்கிக் கொண்டு எம்மா கேட்டாள்.

“அவையெல்லாம் சமயத்தைப் பொறுத்திருக்கும். நிரம்ப பசியால் வருந்தி யிருந்தால் ஒரு சமயம் எப்படி யிருக்குமோ. ஆனால் பெரும்பாலும் மனிதரின் இறைச்சியில் அது அவ்வளவு ருசி கொண்டிருப்பதில்லை. ஆடுகள் வெளியில் அகப்பட்டுக் கொண்டால் அவைகள் பிழைப்பதரிது தான்,” என்றான் மார்ட்டின்.

ஒரு ஓனாய் ஊளையைக் கேட்டு இங்கே ஒன்று அங்கே ஒன்றாக மற்றவைகளும்சேர்ந்து ஊளையிடவே, ஜான் திடீரென்று எழுந்து துப்பாக்கியைத் தோளில் வைத்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் வெளியில் புறப்பட்டுப் போகும் பாவனையாக நின்றான்.

“உட்காரு, ஜான்; இவைகளைச் சுடுவதில் பயன் ஒன்றுமில்லை. தோலும் கெட்டுப் போகும், இவைகளின் இறைச்சியும் தின்ன உதவாது,” என்றான் மார்ட்டின்.

பெண்பிள்ளைகளுக்குப் பயம் மிகுதிப் பட்டுக் கொண்டுவர, “எல்லாருடைய துப்பாக்கிகளையும் கெட்டித்து வைத்தால் நலமில்லையா?” என்றாள் மேரி.

அது அப்படியே செய்யப்பட்டது. எல்லோருக்கும் கொஞ்சம் தைரியம் வந்தாற்போல் தோன்றிற்று. ஆயினும், இது வெளிக்கு மாத்திரமே யன்றி, அன்று இரவு படுக்கை

யில் படுத்திருக்கும்போது ஓனாயின் ஊளையைக் கேட்டபோதெல்லாம் அக்காவும் தங்கையும் ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிக் கொண்டார்கள். இப்படி வெகுநேரம் தூக்கம் வராமல் அவஸ்தைப் பட்டுக்கொண்டு, பின்மாலையில் தான் கண்ணசைந்தார்கள்.

மறுநாள் காலையில் சூரியன் உதயமாகுங்கால், இரவில் பனி பேய்ந்து ஓய்ந்திருந்தமையால், ஆகாயம் பூமி எங்கும் சுத்த ஸ்படிகம்போல் நிர்மலமாகவும் நிச்சப்தமாகவும் இருந்தது. இரண்டு பெண்களும் வழக்கம்போல் பால்வாளியைத் தூக்கிக்கொண்டு மாட்டுக் கொட்டகைக்குப் போவதற்காக வெளியே புறப்பட்டார்கள்.

ஆல்ப்ரெடும் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு முன் சென்று கொண்டே, "எம்மா, ஓனாய் இங்கே எங்கேயாவது பதுங்கி இருக்குமோ, என்ற பயம் வேண்டாம்," என்று சொன்னான்.

" ஆனாலும் அம்மாள்சேய், நீங்கள் கூட இருந்தால் தைரியம்தான். இருக்கட்டும். மாட்டுக்கொட்டகை இவ்வளவு தூரத்தில் இருப்பதைவிட நமது வீட்டுக் கருகில் இருப்பது நலமல்லவா? என்றாள் எம்மா.

"உண்மைதான். அடுத்தவருஷம் குதிரைகளையும் ஆடுகளையும் எனது தந்தை வாங்கப்போகிறாராம். அவைகளுக்கும் மாடுகளுக்கும் கொட்டகைகளும் பட்டிகளும் வீட்டண்டையிலேயே அமைக்கப்போகிறாராம்."

"அதுவரையில் ஓநாய்களும் நம்மை விழுங்காமல் இருக்கவேண்டும்," என்று எம்மா குறும்பாகச் சொன்னாள்.

இவ்விதம் விளையாட்டாகப் பேசிக்கொண்டு, மாடுகளைக் கறந்தபின்னர் அவைகளுக்குத் தண்ணீர்காட்டித் தீனி வைத்து விட்டுத் தொழுவத்தை இறுக மூடிவிட்டுத் திரும்பி வீடு வந்து சேர்ந்தார்கள். சாங்கோவும் தங்களுடனே மற்ற நாய்களுடன்வீட்டில்இருக்கட்டும் என்று வீடுகொணர்ந்தார்கள்.



பகல் வந்தவுடன் பயங்கள் தெளிந்து விட்டன. ஆயினும் ஸ்திரீகணங்களை வீட்டிலேயே வைத்துவிட்டு ஆண்பிள்ளைகள் மட்டும் வெளியே சென்று உறைபனிக் காற்கட்டை ஏறி நடப்பதில் அப்பியாசம் செய்துகொண்டிருந்தார்கள். அந்த வாரம் இப்படிக் கழிந்தது. சனிக்கிழமைதினம் மலாச்சிபோன் கட்டாயம் வருவான் என்று நம்பி இருந்தும், வாராமையால் கொஞ்சம் கவலைக்குஇடமாகஇருந்தது. ஜானே துடித்துக் கொண்டிருந்தான். ஆல்ப்ரெடுக்கும் மார்ட்டினுக்கும் கொஞ்சம் உதைப்பாக விருந்தது; ஏனெனில் மேற்றிசை யிந்தியர்களைப் பற்றிய சமாசாரம் கொண்டுவருவானென்றுஆவலாக இருந்தார்கள்.

மறு தினம் ஞாயிற்றுக்கிழமையன்று வழக்கம்போல் ஓய்வு நாள். வழக்கம்போல் ஈசனைக் குறித்துத் தியானத்திலும் சற்காலட்சேபத்திலும் அது கழிக்கப்பட்டது.

எப்போதும் பிரசன்னமான முக விலாசமுள்ள மிஸ்டர் காம்பெல்லுடையமுகத்தில் அன்றுமாலை கொஞ்சங்கூட ஈயாடவில்லை. இது வரையில் தமது பழைய நிலைமையைப் பற்றி அவர் ஸ்மரித்ததே இல்லை அன்று பலதடவைகள் அதைப் பற்றிக் குறிக்கலானார். இது எல்லோருக்கும் ஒரு ஏக்கத்தை விருத்திசெய்து கொண்டிருந்ததைக்கண்டு மிஸிஸ் காம்பெல் இதை நிவர்த்தி செய்யப் பலவாறு முயன்றாள். கடைசியாக மிஸ்டர் காம்பெல் பின் வருமாறு பேசலானார்.

"எனதருமைக் குழந்தைகாள்! நம்மை இந்த வனாந்தரத்தில் கொண்டுவந்து விட்டதும் ஆண்டவனது அருள் என்றே கருதவேண்டும். நன்னாட்டில் நமக்குக் கிட்டின சுகானுபவங்களையும் நாகரீகங்களையும் இழந்து விட்டு நாம் இந்தக் குளிரில் பிராணாவஸ்தைப் பட்டுக்கொண்டு நடுக் காட்டில் மிருகங்களோடு சமதையாக வசிக்கிறோமே, என்பீர்களோ?

ஆனால் அங்குள்ள நமது மனத்தைக் கவரக்கூடிய பாபங்கள் இங்கே இராதது அவைகளுக்கு ஈடாகாதா ?"

"இருந்தாலும், அப்பா! நாம் இங்கிலாந்துக்குத் திரும்பிப் போகும்படி சமயம் வாய்த்ததானால் உங்களுக்கது மிகவும்சந்தோஷமாக இருக்காதா?" என்று பர்ஸிவல் கேட்டான்.

"ஆம், என் குழந்தாய், இருக்கும். வெகுகாலம் இங்கேயே வாசம் செய்து, இவ்விடத்தில் ஒரு ருசிகண்டிருந்தால் கூட, அப்போதும் இங்கிலாந்துக்குப் போகும்படி சாதனங்கள் கிட்டுமானால் திரும்பிப் போக எனக்கு ஆசையாகத்தானிருக்கும். ஆனால் அது ஏற்படுகிற வரையில் நமது கடமையாதென்றால், நன்னிலைமையிலுள்ள கஷ்டங்களையும் துக்கங்களையும் தைவசங்கல்பமென்று மனம் வணங்கி ஏற்றுக் கொண்டு, காலம் வந்தவுடன் ஆண்டவனது அருளால் நிவர்த்தி வந்து விடும் என்று பூர்ணமான நம்பிக்கையுடன். தச்சமயத்திற்கேற்றபடி நாம் செய்யவேண்டியவைகளை மனச் சோர்வடையாமல் செய்து வரவேண்டியது".

"ஆனால், அப்பா, நமக்கு இப்போது திரும்பிப் போக முடிந்தால் கூட நாம் முந்தி இருந்தாற் போலிருக்க முடியாதே?" என்றான் பர்ஸிவல்.

"எனதருமைக் குழந்தாய், அது எங்கே முடியும்? ஆயினும் பின்வருவது நமக்கு என்னதெரியும்? நம்மில் யார்திரும்பிப் போனாலும், முன்னிலும் தாழ்ந்த பதவியில்தான் காலங்கழிக்கவேண்டியிருக்கும்; என்னைப்பற்றினவரையில் அப்படியிருப்பதுதான் நலம் என்பேன்; முந்தி செல்வம் மிகுதியாக இருந்தபோது அதை அதிக அக்கிரமமாக நான் செலவிடவில்லை யென்றாலும், அது மிகுதியாகக் குறைவடைந்தால் எனக்கு வருத்தமாக இராது. அவ்வளவுக்கவ்வளவு பளுப் பொறுப்பும் குறையுமல்லவா ?"

"எனதினியகாம்பெல், நம்மிடத்தில் எத்துணையோகுற



றம் குறை யுண்டானாலும், அச்செல்வத்தைத்தம்மைவிட வேறுயாரும் ஒழுங்காகக் கையாண்டிருக்க மாட்டார்களென் பதுநிச்சயம்," என்றாள் மனையாள்.

" என்கண்ணே, நானும் அப்போது அப்படியே தான் எண்ணியிருந்தேன். ஆனால் அதை நான் இழந்துவிட்டதால் அதை இன்னும் நல்லவழியில் உபயோகித்திருக்கலாமோ வென்று எண்ணலானேன். என் அருமைக் குழந்தைகாள், இதன்தத்துவம்—யாதெனில்மிகுதியானசெல்வத்தைப்போல் அபாயகரமானதுவேறில்லை;சுயநல சம்போகத்திற்குத்தடை யின்றி அது இடங்கொடுக்குமாதலால், மனிதனுடையநெஞ் சம் கல்லைப்போலாய்விடும்; அகம்பாவம்முற்றிப்போய்,தான் செய்வதெல்லாம் ஒழுங்கென்றும் அதில் குற்றம் குறையே இருக்க முடியாது என்றும் தோன்றும். நமது வேதத்தில் பிரார்த்தனைப் பிரகரணத்தில் நான் இன்றுகாலையில் வாசித் ததுஞாபகம் இருக்குமே;செல்வத்தின் அபாயங்களிலிருந்து நம்மைக்காக்கும் வேண்டுகோளைப் வைத்திருப்பது எவ்வ ளவு பொருத்தமாயிருக்கிறது, பாருங்கள்:

"நாங்கள் நெருக்கடியால் வருந்தும் காலத்திலும், எங் களுக்குச் செல்வம் அதிகரிக்கும் காலத்திலும், நாங்கள் அந் திம தசையில் இருக்கும்போதும், இறந்தபிறகு சோதனைச் சாலையிலும், கருணா நிதியே! எங்களைக் காத்தருளுங்கள்."

"குழந்தைகாள் ! இதைச் செம்மையாய் உள்ளத்தில் சர்ச்சை செய்துபாருங்கள். வறுமையைவிடச் செல்வத்தில் தான் அபாயங்கள் மிகுதியாயுண்டென்றும் அதை மிஞ்சி னதுசாவொன்றுதான் என்றும், அது போடப்பட்டிருக்கிற கட்டத்திலிருந்து நன்றாக வெளிச்சமாக வில்லையா?"

என்று சொல்லி மிஸ்டர்காம்பெல் நிறுத்தினதும் எங் கும்அமைதி ஏற்பட்டிருந்தது. கடைசியில் மேரி மிருதுவான குரலுடன், " அப்படியென்றால், எனது அரிய அம்மானே,

வாழ்க்கையில் எவ்விதம்இருப்பது சிலாக்யமாகும்” என்றாள்.

“பிறர் கையைப் பார்க்காமல் காலத்தைக் கழிக்கப் போதுமான செல்வமே சிலாக்கியமென்பது என்கருத்து; ஆனால் வியாபாரத்தில் உழல்வது விலக்கத்தக்கது, ஏனெனில்,கொள்வனை கொடுப்பனை செய்யும் வேகத்தில் வஞ்சனைமுறைகளைக் கையாடச்சொல்லும். எனக்குப்பிடித்ததென்னவென்றால், ஒரு குக்கிராமத்தில், போதுமான நிலபலங்களை வைத்துக் கொண்டு, அவை நடுவிலேயே வாஸம்செய்துகொண்டு, குடிபடைகளை ஆதரித்துக்கொண்டு, சுற்றியிருக்கும் ஏழைஜனங்களுக்கும் ஜீவனோபாயத்தைத் தந்துகொண்டு, இருப்பது தான். இப்பதவியில் அக்கிரமமான நடத்தைக்கு இடம் ஜாஸ்தியாகக் கிடையாது; பிறருக்கு நன்மை செய்ய விசேஷமாகப் பிரமேயம் ஏற்படும்.”

“என்தரியவரே, என் மனதிற்கேற்றதும் இவ்விதமானதுதான்,” என்றாள் மனையாள். “ஆயினும் இதிற்கூடத் திருப்தி யடையாதவர் எத்தனை!”

“ஏனெனில் காசாசை யென்பது அவ்வளவு வலியது; நமக்கு இருப்பது போதும், இனி வேண்டாம், என்று திருப்தி யடைவது மிக அரிது. பணப் பிசாசு பிடித்தவர்கள் இருவகை யாவர். சிலர் இன்னதற்கென்றே நினையாமல் குவியல் குவியலாகப் பணம் சேர்ப்பார்கள். மற்றும் சிலர் தங்களுக்குத் தங்குதடையின்றிச் செலவிடவேண்டு மென்று விழுந்து விழுந்து பணத்தைக் குவிப்பார்கள். முதல்வரைப் போல இவர்கள் அவ்வளவு மூடர்களல்ல வென்பீர்களோ? நமது வேதத்தில் சொல்லியிருக்கும் திருஷ்டாந்தத்தைச் சற்றுக் கேளுங்கள்,” என்று சொல்லிவிட்டுத், தமக்கு எதிரில் இருந்த புஸ்தகத்தைப் பிரித்துப் பின் வருவதைப் படித்தார்:—

“ஒருவனுக்கு நிலபலம் ஏராளமாகச் சேர்ந்து, அளவில்லாப் பலனைத்தந்தது. நான் என்செய்வேன்,அறுவடைசெய்



தைப் பத்திரம் செய்து வைக்க இடம் பற்றாதே? என்றான். பிறகு,சரி; இப்போதிருக்கப்பட்ட களஞ்சியத்தை இடித்துவிட்டுப்பெரியதாக ஒன்று கட்டுவேன். அதற்குள் பலன்களைக் குவித்து வைத்து, ‘எனது ஆத்மாவே, நீ இனிக் கவலையற்று இருக்கலாம்; நான்இப்போது சேர்த்து வைத்திருக்கும்பண்டங்களே எத்தனையோ வருஷங்களுக்குக் காணும். இனி நிச்சிந்தையாகத் தின்று குடித்துக்குஷியுடன்காலத்தைக் கழிக்கலாம் என்பேன்’ என்றான்; அஹங்காரம் கொண்ட கோமாளி. அன்றிரவே அவனதாத்மா பரலோகம் சென்றது.”

எல்லோருக்கும் சற்றமைதி வந்தது. பிறகு மிஸிஸ்காம்பெல் சொன்னதாவது, “நான் பலதடவை யோசித்துப் பார்த்தேன். இங்கிலாந்திலே இருந்திருந்தோமேயாகில் நமது ஸ்திதி இப்போது எம்மாதிரி இருந்திருக்கும்? ஒரு வயிறு சோறுகூட முழுச்சோறாக அகப்படாமல் அவ்வளவு வறுமை அடைந்திருப்போம். நமக்கு இப்போது இங்கே உணவுக்குக் குறைவே இல்லை. நம்மைப் போன்றவர்கள் ஆயிரக்கணக்காக இப்போது இங்கிலாந்திலே சோற்றுக்குப் பறந்து கொண்டிருப்பார்களே — அவர்களை விட நாம் எவ்வளவு நல்லஸ்திதியில் இருக்கிறோம்? நமக்கு ஊரைவிட்டுப் புறப்பட்டு இம்மாதிரியான விடத்திற்கு வரும்படி புத்தியையும் தந்து, அதற்கு வேண்டிய உதவிகளையும் அருள்செய்த ஆண்டவனுடைய கருணை பாராட்டத்தக்கதல்லவா? வனாந்தரத்தில் வந்து அகப்பட்டுக் கொண்டுவிட்டோமே என்பீர்களோ? வீட்டிலிருந்தால் நம்மைக் காப்பவர் காட்டிலிருப்பின் கைவிடுவாரோ?”

இதைக் கேட்ட அனைவருக்கும் உள்ளம் அமைதி பெறக் கடவுளை வாழ்த்திக் கொண்டு எல்லோரும் படுக்கச் சென்றார்கள்.

## அத்தியாயம்—20.

திங்கட்கிழமை காலையில், ஆல்ப்ரெடும் மார்ட்டினும் மாட்டுக் கொட்டிலுக்குப் போய்க் கோட்டைத் தலைவரிடமிருந்துகிடைத்த காளைமாட்டைக்கொன்றார்கள். அதைத்தோலுரித்துத் துண்டு போட்டுப், பண்டகசாலையில் பனிக்காலத்திற்குதவும்பொருட்டுக் கட்டித்தொங்கவிட்டார்கள்.

அவர்கள் மத்தியானத்தில் போஜனம்செய்யஉட்காரும்போது காப்ட்டின் ஸிங்க்ளேரும் கோட்டையிலிருந்து ஒரு சிறுவரான * லெப்டினண்டும் வந்து சேர்ந்தார்கள். அந்தக் குடும்பத்தார் எல்லாரும் அவர்களைக்காணச் சந்தோஷமடைந்தார்கள் என்று சொல்லவேண்டியதில்லை. அவர்கள்உறைப்பனிக் காற்கட்டையைத் தரித்துக்கொண்டு கரை மார்க்கமாய் வருகையில் தங்களால் சுடப்பட்ட சில கவுதாரிகளையும்கொண்டுவந்தனர். காம்பெல்லர்கள் எப்படி இருந்துகொண்டிருந்தனர் என்று வந்துபார்க்கும்படி காப்ட்டின்ஸிங்க்ளேர் தலைவரிடமிருந்து விடைபெற்றிருந்தார். கோட்டையில்எல்லோரும்க்ஷேமமே. கர்னல்பார்ஸ்டர் உபசார விசாரணைகளைச் சொல்லியனுப்பியதோடு, தம்மால் செய்யக்கூடிய உதவியாதேனும் இருந்தால் அதைத்தெரியப்படுத்த வேண்டுமென்று பிரார்த்தனைசெய்தனர். காப்ட்டின்ஸிங்க்ளேரும்அவருடைய தோழரும் போஜனம் செய்ய உட்கார்ந்து, சாப்பாட்டைக் கூடக் கவனிக்காமல் கேள்விக்குமேல் கேள்வியாக ஒவ்வொன்றையும் பற்றிக்கேட்டுக்கொண்டிருந்தனர்.

“மிஸ்டர் காம்பெல், ஒருசந்தேகம். பன்றிகளுக்காக எங்கே கொட்டகை போட்டிருக்கிறீர்கள்?”

“கிராதியடைப்புக்குட்புறம், கோழிக்கூண்டுக்குப்பக்கத்தில்.”

“அது தான் சரி! இல்லாவிடில் ஓநாய்கள் தொந்தரவு

* ராணுவத்தில் காப்ட்டினுக்கடுத்த கீழ் உத்தியோகம்.



செய்யலாம். அவைகளுக்குப்பன்றியிறைச்சி யென்றால் அவ்வளவுவாஞ்சை,” என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்.

“அவைகளின் உபத்திரவம் அதிகமாகவே இருக்கிறது; அவைகள் இரவில் ஊளையிடுகின்றனவே, அதைச் சொல்லுங்கள்; நானிரவில் விழித்துக்கொண்டு படுத்திருக்கும்போது எனக்கு நடுக்கத்தை உண்டுபண்ணுகின்றனவே!” என்றாள் எம்மா.

“மிஸ்எம்மா! அவைகளின் ஊளையைலட்சியம்செய்யாதே. கோட்டையைச் சுற்றிலும் அவை யதேஷ்டமாக விருக்கின்றன. அவைகளை நாம் தீண்டினாலொழிய அவை நம்மைத் தீண்டிவருத்தமாட்டா.”

“இன்றிரவு உங்களுக்கு இங்கேதானே நித்திரை.”

“ஆம், அப்படித்தான் எங்களுக்கு உத்தேசம். ஒருகாடிக் தோலாவது அல்லது எருமைத் தோலாவது எங்களுக்கு மிகுத்துக் கொடுக்க முடியுமல்லவா?” என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்.

“சந்தேகமில்லாமல்முடியும்,” என்றார் மிஸ்டர்காம்பெல்.

எம்மாவும் ஒருவிஷமப் பார்வையுடன், “காப்ட்டின்ஸிங்க்ளேர் நீங்கள் சொல்வதைப் பார்த்தால் ஓநாய்கள் அபாயமற்ற ஜந்துக்களே. ஆதலின் இன்றிரவு சிலவற்றை நீங்கள் பிடித்துத் தோல்களைக்கொண்டு வாருங்களேன். இந்தவிஷயத்தில் கவலையேபிற்பாடு இருக்காதே” என்றாள்.

இதுஎம்மாவின் ஒரு குறும்புத்தனம். ஆயினும் இதுயதார்த்தமென்று பேதையான மேரி எண்ணினமையால், வந்திருக்கும் விருந்தாளியைப்பார்த்து இவ்விதம் சொல்லலாமா? என்று எம்மாவைக்கண்டிக்கவே ஆல்ப்ரெட், வேண்டுமானால் நானும்போகிறேனே என்றான். உடனேமிஸ்டர் காம்பெல், “போதுமடா, அப்பா! இப்போது நமக்கிருக்கும்அபாயங்கள் போதாவா? வலுவிலேயும் போய் அவைகளைச் சீண்டவேண்

டுமா? நாளைக்காலையில் மீன்படகை ஏரியைவிட்டுப் பனியுறையும் முந்தியே கரை ஏற்றி விடவேண்டும். அதற்கு நீங்கள் உதவிசெய்தால் போதும்,'' என்று சொன்னார்.

பொழுதுபுலர்ந்ததும் காப்ட்டின் ஸிங்க்ளேர் ஆல்ப்ரெடை ஓர்புறமாக இட்டுக்கொண்டுபோய், கிழவேட்டைக்காரன் இந்தியர்கள் சம்பந்தமாக ஏதேனும் சமாசாரம் அறிந்து வந்தானா என்றுகேட்டார்.

“மலாச்சிபோன் நாளைக் காலையில் இங்கே வந்தாலும் வருவான். அவன்போய் வெகுநாளாயிற்று. ஜானும் அவனுடன்போய்ச்சேரத் துடித்துக்கொண்டிருக்கிறான். அவனும் ஜானை யழைத்துப்போக ஆவலுடன் இருப்பான் என்பதில் சந்தேகமில்லை,” என்றான் ஆல்ப்ரெட்.

“சரி, அவன் அப்படியே செய்யட்டும், நல்லது தான். அப்படியென்றால் கர்னலுக்குப்போய்த்தெரிவிக்க எனக்கும் ஏதாவது சமாசாரம் அகப்படும். இதைச்சாக்கிட்டுத்தான் எனக்கும் விடை கிடைத்தது. அப்படி இங்கேவர எனக்கு ஏதாவது சாக்கு அகப்படுவதில் அவருக்கும் பாதி சம்மதந்தான். ஏனெனில் உங்களின் குடும்ப விஷயமாக அவர் நான் எதிர்பார்த்திருந்ததைவிடமிகுதியாகவே கவலைகொண்டிருக்கிறார். உன் அத்தைமகள் மேரி எவ்வளவு ரூபவதியாயிருக்கிறாள்?”

“ஆம்; அப்படியே தான் எம்மாவும் என்று நான்கருதுகிறேன். அவள் இங்கிலாந்தைவிட்டு வந்தபிறகுஒருஒட்டை உயரம் வளர்ந்திருக்கிறாள். இதொருசமாசாரம்! எனக்கு உத்தியோகத்தில் லெப்டினண்டு அந்தஸ்து கிடைத்திருப்பதால் நீ எனக்குச்சோபனோபசாரம் செய்யவேண்டும்.”

“என்னருமைப்பையனே! அப்படியே நான் மனப்பூர்வமாய்ச் செய்கிறேன்,” என்றார் காப்ட்டின்ஸிங்க்ளேர். “கோட்டையில் இதைக்கேட்டால் மிகவும் சந்தோஷப் படுவார்கள். நீ எப்பொழுது அங்கே வரப்போகிறாய்?”



“உறைபனிக் காற்கட்டையில் ஏறி இன்னும் விரைவாகத்தடதடவென்று செல்லமுடிந்தவுடன் தான். ஆயினும் கிழவேட்டைக்காரன் நாளைக்குள் வராவிட்டால், அவன்பிற்பாடு எப்போது சமாசாரம்கொண்டு வருகிறானோ அப்போதே வருகிறேன்.”

புது மனிதர்கள் வந்திருந்ததால் அன்று முன்னிரவு வெகுதமாஷாகக் கழிக்கப்பட்டது. இரவில் படுக்கக் காப்ட்டின்ஸிங்க்ளேரும் மிஸ்டர் க்வைனும் ஆண்சிறுவர்கள் தூங்குவதற்காக அமைக்கப்பெற்ற பெரிய அறையில் கொண்டுபோய் விடப்பட்டார்கள். முன் சொல்லப்பட்டபடி அந்த அறையில் இரண்டு விடுதி படுக்கையிடங்கள் இருந்தன.

மறுநாட்காலையில் சிறுமியர் பால்கறக்கத் துணைக்குப் போகக் காப்ட்டின் ஸிங்க்ளேர் மிகவும் முனையாயிருந்தார். ஆயினும் மீன்பிடிக்கும் ஓடத்தைக்கரையேற்ற அவருடைய உதவி தேவையாயிருந்தமையால் மற்றஆள்களுடன் தாமும் போகவேண்டியிருந்தது. மிஸிஸ் காம்பெல்லுடன் வீட்டில் தங்கியிருந்தவர்கள் பர்ஸிவலும் ஜானுமே. சற்று நேரத்திற்கெல்லாம், ஜான் வழக்கம்போல சுருள்குழாய்த் துப்பாக்கியைத்துடைத்துத் தோளில் சார்த்திக்கொண்டு, திசைக்கொன்றாய்க் கிடந்த நாய்களைக் கூட்டிக்கொண்டு, கிழச் சாங்கோவைத்தவிர மற்ற நாய்களால் பின்றொடரப்பட்டு நடந்துபோய்வரலா மென்றுவெளியே புறப்பட்டான். அது மட்டும் வழக்கத்தை விடாமல் பெண்களுடன் துணையாக மாட்டுக்கொட்டகைக்குச் சென்றது.

மேரியும் எம்மாவும் பால்வாளியைக்கையில் எடுத்துக்கொண்டு, புதிதாய்க் காலடிபட்ட பனிப்பாதை வழியாய்ச் சிரிப்பு விளையாட்டுடன் மாட்டுக் கொட்டகையை நோக்கிச் சென்றார்கள். தங்களுடன்கூட வரமுடியாததால் காப்ட்டின் ஸிங்க்ளேருக்கு உண்டான ஏமாற்றத்தைப் பற்றி நினைத்து

நினைத்துச் சிரித்தார்கள். அவர்கள் மாட்டுக்கொட்டகைக்கு வந்து சேர்ந்தார்களோ இல்லையோ, கிழச் சாங்கோவானது உக்கிரமாய்க்குலைத்துக்கொண்டு, கட்டிடத்துக்குப்பின்புறத்தில் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தது. ஒரு க்ஷணத்திற் கெல்லாம் அது பாய்ந்த பனிக்குவியலினின்றும்ஒருபெரியகருப்பு ஓநாயும் இதுவும் ஒன்றை யொன்று கௌவிக்கொண்டு இறுகக்கட்டிப் புரண்டுருண்டு கொண்டு கீழேவந்தன! அவைகளின் போராட்டம் வெகுகாலம் நீடித்திருக்க வில்லை. அது நடந்து கொண்டிருக்கையில் அந்தப் பெண்கள் கிலியால் பிரமித்துப்போய், அந்தப் பிராணிகளுக்கு இரண்டு தப்படிகளுக்குள்ளாகவே கல்லைப்போல் அசையாமல் நின்றுகொண்டிருந்தனர். ஓநாய் வெடுக்கு வெடுக்கெனப் பிடுங்கினதைப் பொறுக்க முடியாமல் அந்தக் கிழநாய் வரவரக் களைப்புற்று, இருந்தாலும் விடாமல் கம்பீரமாய்ப் போராடிக்கடைசியாக நாக்குத் தொங்கிபோய் தேகம் முழுவதும் ரத்த விளாறுகி உயிர் மாண்டு சுருண்டு ஓநாயின் காலடியில் விழுந்தது! எதிராளி வெல்லப்பட்டதும், உக்கிரம் கொண்ட அந்தப்பிராணி தன் கால்களை நாயின் உடல்மேல் நட்டுக் கொண்டும், உரோமங்களைச் சிலிர்த்துக்கொண்டும் கொடும் பற்களைக் காட்டிக் கொண்டும் அந்தச் சிறுமிகளின் மேல் பாயும் தருணத்திலிருந்தது. அப்போது எம்மா மேரியின் இடையைச் சுற்றித் தன்கைகளால் கட்டிக்கொண்டு, தன்சகோதரியைக் காக்கும் வண்ணம் தனது உடலை முன்னிட்டுக் கொண்டும், மேரியும் அதே பிரகாரம் தனது சகோதரியான எம்மாவைக் காக்க எத்தனித்துக் கொண்டும், இருவரும் அந்தப்பிராணி பாயப் போவதைத் திகிலுடன் எதிர்பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது மற்றநாய்கள் ஜானால் தூண்டிவிடப்பெற்று, அதிவிரைவாக ஓடிவந்து அந்தப் பிராணியின் மேல் பாய்ந்தன. அவைகளால் தரையில் கரகரவென்று



இழுத்துத் தள்ளப் பட்டதும், ஜானும் வந்துசேர்ந்து, அந்த ஓநாய் தன் எதிரிகளுடன் மன்றாடிக் கொண்டிருக்கையில், துப்பாக்கி நுனியை அதன்தலையில் காட்டி அதைச் சுட்டுக் கொன்று விட்டான்.

இந்தப் பயங்கரமான போராட்டம் நடந்துகொண்டிருக்கும்போதெல்லாம் அவ்விரண்டு சகோதரிகளும் விடாது நின்றுகொண்டிருந்தாலும், ஓநாய்ச்சத்தத்தையும் தங்களுக்கு வந்த ஆபத்து நீங்கினதையும் அறிந்தவுடன் மேரிக்குக் கால்நடுக்கமுற்று, மூர்ச்சித்திருந்த தனது சகோதரியை மடியிலேந்திக் கொண்டு முட்டிப் போட்டுக் கீழே விழுந்தனள்.

ஓநாயைக்கொல்வதில் ஜான் தனது வீரியத்தைக்காட்டினனேஒழியத் தன்னுடைய அத்தைமகளிர் விஷயத்தில் சிறிதேனும் ஸ்திரீ உபசரணை செய்யவில்லை. ஓநாயின்சவத்தினைப் பார்த்து மேரியைநோக்கி, "அது மாண்டு விட்டது," என்று சொல்லிப்போட்டுத் துப்பாக்கியைத் தோளிலேற்றிக் கொண்டு சக்கரித்துத் திரும்பி வீட்டை நோக்கிச் சென்றான்.

அவன்வீடுவந்துசேர்ந்ததும், ஓடத்தைக்கரையேற்றப் போனவர்கள் திரும்பி வந்து காலை யுணவருந்துவதற்காகச் சிறுமிகளின் வரவை எதிர் பார்த்திருந்ததைக் கண்டான்.

"இப்போது சுட்டது நீ தானா, ஜான்?" என்றான் மார்ட்டின்.

"ஆம்," என்றான் ஜான்.

"நீ எதைப் பார்த்துச் சுட்டாய்?" என்றான் ஆல்ப்ரெட்.

"ஓநாய்," என்றான், ஜான்.

"ஓநாயா? எங்கே?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"மாட்டுக் கொட்டகையில்," என்றான் ஜான்.

"மாட்டுக் கொட்டகை!" என்று திகைத்தார் தந்தை.

"ஆம், சாங்கோவைக் கொன்றது."

"சாங்கோவைக் கொன்றதா! என்ன! சாங்கோ உன்

தை மகளிருடனல்லவோ இருந்தது!"

"ஆம்," என்றான் ஜான்.

"அப்படியானால் அவர்களை நீ எங்கே விட்டாய்?"

"ஓநாயுடன்," என்று ஜான் சொல்லிக் கொண்டு நட்பின்றித் துப்பாக்கியைத் துடைத்தான்.

"அருள்செய் ஆண்டவா!" என்று மிஸ்டர் காம்பெல் கதறினார்; மிஸிஸ் காம்பெல்லின் முகம்மங்கிற்று; ஆல்ப்ரெட், காப்டின் ஸிங்க்ளேர், மார்ட்டின், ஹென்றி—எல்லோரும் தங்கள் துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு, தங்கள் வீட்டை விட்டு ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அம்புபோல் விரைவாக மாட்டுக் கொட்டகையை நோக்கிப் பறந்து சென்றனர்.

"ஐயோ! என் பெண்கள் பாவமே!" என்று கதறினார் மிஸ்டர் காம்பெல்.

"ஓநாய் மாண்டுவிட்டது, அப்பா!" என்றான் ஜான்.

"மாண்டது! நீயேன் அப்போதே சொல்லவில்லை, துஷ்டப் பையா?" என்று கதறினாள் மிஸிஸ் காம்பெல்.

"என்னைக் கேட்கவில்லை," என்றான் ஜான்.

இதற்கிடையில் அந்த ஜமா மாட்டுக் கொட்டகைக்குப் போய்ச்சேர்ந்துவிட்டார்கள். ஓ! அவர்கள் அடிவயிற்றில் நடுக்கமுற ஓநாயும் நாயும் செத்துக் கிடந்ததையும், அவ்விரண்டு சிறுமிகளும் பனியில் அந்தப் பிராணிகளுக்குச் சமீபமாகக் கிடந்ததையும், கண்டார்கள்; ஏனென்றால் ஜான் புறப்பட்டுப் போனதும் மேரியும் மூர்ச்சித்து விழுந்து விட்டாள். அவர்கள் பாய்ந்துபோய் அச்சவங்களைப் பார்த்தவுடன் தீங்கற்றிருந்ததாகக் கண்டார்கள். விரைவாக அவர்களைத் தெளிவித்து, அச் சிறுவர்கள் அவர்களைத் தாங்கிக் கொண்டு வீடு கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

அவர்கள் வந்து சேர்ந்தவுடன் மிஸிஸ் காம்பெல் அறைக்குள் அழைத்துக் கொண்டுபோய் உட்கார்த்தி ஆசுவாசம்



செய்யவே அவர்களுக்கு மயக்கம்தெளிந்து அமைதிவந்தது. வெளியிலிருப்பவர்களும் கவலையுற்றிருந்தமையால், மிஸிஸ் காம்பெல் வெளிவந்து இந்த க்ஷேம சமாசாரத்தைத் தெரிவித்தாள்.

குழந்தை ஜானுடைய வேலைத்தனம் அம்மாதர்கள் சொல்லத்தான் அவர்களுக் கெல்லாம் தெரிய வந்தது. துப்பாக்கியைச் சுடுவதென்றால் அதற்கெவ்வளவு அமைதியும் நெஞ்சுத்துணிச்சலும் வேண்டும்!

"கோட்டையிலுள்ள உத்தியோகஸ்தர்களிடம் உன்னுடைய வீரத்தனத்தைஎல்லாம் சொல்லுகிறேன், ஜான்," என்றார் காப்டின் ஸிங்க்ளேர். "அதோடுகூட, என்னிடம் ஒரு உயர்ந்த ஜாதிநாய் ஒன்று இருக்கிறது. அது மிகவலியது— ஒரு ஓநாய் என்றால் அதற்கு ஒரு பொருள் அல்ல. அது உன் கழுத்தத்தனை உயர மிருக்கும். அதைக்கொண்டுவந்து உனக்கே கொடுக்கிறேன்."

"நானே உங்களுடன் கோட்டைக்கு வந்து அதைக் கொண்டுவருகிறேனே?"

யஜமானன் யஜமானி இருவரும் ஜான் பிரியப்பட்டால் போகட்டும் எனவே ஜானுக்குக் குஷிபிறந்து, "நாயின்பெயர் என்ன?" என்று கேட்டான்.

"ஆஸ்கார் என்று அதன்பெயர். உனது அத்தைமகளிர்கள் வெளியே சஞ்சாரம் செய்யும்போது அதைக் கூடப் போகும்படி நீ விடுவாயானால், ஓநாயின் பீதி இருக்கவேண்டியதில்லை எளிய சாங்கோவைப் போல இது ஓநாயை மிஞ்ச விடாது."

"சில வேளைகளில் இரவல் கொடுப்பேன்," என்றான் ஜான்.

"அப்படி அல்ல; உனக்கு வேண்டாத போதெல்லாம் ஏன் கொடுக்கக் கூடாது?"

"சரி, ஆகட்டும்," என்று சொல்லிக்கொண்டே ஜான் புறப்பட்டுவிட்டான்.

"என் கண்ணே, எங்கே புறப்பாடு?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"ஓநாயைத் தோலுரிக்க," என்று பேசிக்கொண்டே ஜான் விரைவாகச் சென்றான்.

"பேஷ்! மலாச்சிபோன் ஒரு நல்ல சிட்சகன்தான்; ஜானும் ஒரு கைதீர்ந்த வேடனாகி விட்டான்," என்றுசொல் விட்டு மார்ட்டினும் ஜானைத் தொடர்ந்தான்.

பிறகு காட்டில் வெகு துஷ்டமிருகங்களைப் பற்றிபேச்சு நடந்து கொண்டிருக்கையில், பர்ஸிவல் சிறுமிகள் வெளியில் வந்தார்கள். எம்மா குஷியாகவிருந்தாள். ஆனால் மேரியின் முகம் வாடியிருந்தது. காப்ட்டின் ஸிங்க்ளேர் எழுந்து அவ்விருவருடனும் கை குலுக்கி விட்டு, "எம்மா, உனதக்காவை விடச்சடிதியில் உனக்குத் தெளிவு வந்துவிட்டதுபோலும்," என்று சொன்னார்.

"ஆமாம்" என்றாள் எம்மா; "ஓநாய் எதிர்த்தபோது யாருக்கு மிகுதியான அவஸ்தை தெரியுமா? உடனே நான் சோகம்போட்டு விழுந்துவிட்டேன். ஜான் வரும் வரையில் என்னைத்தாங்கிக்கொண்டு மனவுறுதியுடன் நின்றவள் மேரி. ஆதலால் அவஸ்தை முழுவதும் அவளுக்கே. அவ்வளவு சீக்கிரம் தெளிந்துவிடுமா? உண்மை யாதென்றால்,அபாயம் எதிரிடும்போது மேரிதான் தைரியசாலி. நான் என்றால் அபாயமில்லாதபோது தான் முழங்குவேன்."

"அப்படி அல்ல, என்கண்ணே!" என்றாள் மேரி. "உன்னைப் போலவே அவ்வளவு பயம் நானும் கொண்டிருந்தேன். இருக்கட்டும். நாம் செல்வோம் வா, அம்மாமி ஒண்டியாகச் சமைக்கின்றாள்."

சற்று நேரத்திற்குள் சமையலும்முடிந்து சாப்பாடும் நடந்தது.



## அத்தியாயம்—21

சாப்பாடு ஆரம்பித்துக் கால்மணிக்கெல்லாம், "மார்ட்டினும் ஜானும்வந்துவிட்டார்களே!" என்றார் மிஸ்டர்காம்பெல்.

ஆனால் அவர் சொன்னது போலில்லை. மார்ட்டினுக்கும் ஜானுக்கும் பதிலாக மலாச்சிபோனும் அவன் மனைவி ஸ்ட்ராபெர்ரிச் செடியும் வந்துசேர்ந்தனர்.

இவர்களை நல்கழைப்பதற்காக ஒவ்வொருவரும் எழுந்தார்கள். பர்ஸிவல்சிறுமிகளும் * தங்களுடைய புதியதோழியண்டை சென்று ஆனமட்டில் தங்களோடு உட்காரும்படிவருந்தியும், அவள் சம்மதியாது அடுப்பண்டைபோய்த் தரையில் உட்கார்ந்தாள்.

"அவள் நாற்காலிகளுக்கும் ஸ்டூல்களுக்கும் பழக்கப்பட்டவள் அல்லள். அவளிருக்கிறஇடத்திலேயேஇருக்கட்டும்," என்றான் போன் கிழவன்; "அவளுக்கு அங்கேதான் சுகம் மிகுதியாயிருக்கும்:நீங்கள்கருதுவதும்அதேயல்லவா? அவளை நான் கூட அழைத்து வந்த காரணம் இரண்டு: இறைச்சியை முழுவதும் நானே தனிமையாகக் கொண்டு வருவது சாத்தியமாயில்லை: மேலும், இரவில் சமாசாரம்சொல்லியனுப்பும்படி அவஸரம் நேர்ந்தால் வீட்டிற்குள்ளே போவதெப்படி, வெளியே வருவதெப்படி என்றும்,கதவைத்திறந்து சாத்துவதெப்படியென்றும் அவள் அறிந்துகொள்ளவேண்டும்."

"இரவில் சமாசாரம் சொல்லியனுப்புவதா? ஐயோ! அதென்ன? அதற்கு அவஸரம் யாது? யாது நேரிடக்கூடியது?" என்று திகைப்புடன் மிஸிஸ் காம்பெல் கேட்டாள்.

காப்ட்டின் ஸிங்க்ளேருக்கும் ஆல்ப்ரெடுக்கும் ஒன்றுந் தோன்றவில்லை. கிழவேட்டைக்காரன்சொல்லக்கூடாததைச் சொல்லி விட்டான். அன்று காலையில் நேர்ந்த சம்பவமே போதாதோ? அதோடுங்கூட மிஸிஸ்காம்பெல்லுக்கும் சிறுமி

* மேரியும் எம்மாவும்.

களுக்கும் இந்தியர்களைப் பற்றி உள்ள திகிலையும் மூட்டவேண்டுமா ! எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துக் கடைசியில் ஆல்ப்ரெட், "என்னரிய தாயே! வாஸ்தவம் என்னவென்றால் முன்னதாகவே எதற்கும் தயாராக விருப்பது மேலானதல்லவா? ஆதலால் மார்ட்டினை மலாச்சிபோனிடம்போய் இந்தியர்களைப்பற்றி ஏதேனும் சமாசாரம் கேள்விப்பட்டால் உடனே நமக்குத் தெரிவிக்கும்படி சொல்லிவரச் சொன்னேன்."

"ஆம்! அம்மா! அதுதான் நடந்தது. காட்டிலிருக்கும் போது எப்போதும் துப்பாக்கியைக் கெட்டித்துத் தயாராக வைத்திருப்பதே மேலானது," என்றான் மலாச்சிபோன்.

மலாச்சிபோன் சொன்ன இரண்டொரு வார்த்தைகளிலிருந்து மிஸிஸ்காம்பெல்லுக்குச் சந்தேகமுண்டாகிக் கிண்டிக் கிண்டிக் கேட்க ஆரம்பித்தாள். ஆனால் ஆல்ப்ரெட் கிழவனுக்கு ஜாடைசெய்யவே, அவன் பேச்சை மாற்றிவிட்டான்.

ஆயினும் இவையெல்லாம் கூடி மிஸிஸ் காம்பெல்லுடைய சந்தேகங்களை இன்னும் தூண்டித் தான்விட்டது.

"நல்லது, ஆனால் இந்தியர்களைப் பற்றியோ?" என்றாள் மிஸிஸ் காம்பெல் காப்டின் ஸிங்க்ளேரை நோக்கி; "நீங்கள் முழுச் சமாசாரத்தையும் சொல்லவில்லையென்பது நிச்சயம்; ஏதோகொஞ்சம் மறைத்துவைக்கப்பட்டிருக்கிறதென்பதே எனக்கும் இச்சிறுமிகளுக்கும் மனக்குழப்பத்தை உண்டுபண்ணும்; எங்களையும் அறிவுள்ளவர்களென்று பாவித்து ஒன்றையும் ஒளியாமல் சொல்லுங்கள். வரும்அபாயத்தில் எங்களுக்கும் ஒருபாகமுண்டல்லவா? ஆகையால் அஃதென்னவென்று எங்களுக்கும் தெரியட்டும்."

மிஸிஸ் காம்பெல் ! அபாயத்திற்கு ஹேது இருப்பதாக எனக்குத் தெரியவில்லை— அதாவது மலாச்சிபோனுக்குப் புதியசமாசாரம் எட்டியிருந்தாலொழிய; ஆயினும்எங்களுக்குத் தெரிந்த வரையில் உங்களுக்கும் தெரிய வேண்டியது



மென்று நான் தடையின்றி ஒப்புக்கொள்கிறேன். அதோரற்ப விஷயமாயினும் நான் அதைப்பற்றிப்பேசத் தயாராகவிருக்கிறேன்," என்றார் காப்டின் ஸிங்க்ளேர்.

"என்நேசியே! அதோர் அற்பவிஷயமாகவிருக்கவேண்டுமென்று நானும் கருதுகிறேன். ஏனெனில் நானே அதைப்பற்றி ஒன்றும் அறியேன். காப்டின் ஸிங்க்ளேர் ! தயைசெய்து நாங்கள்செய்யவேண்டியதைச்சொல்லுங்கள்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

காப்டின் ஸிங்க்ளேர் ஏற்கனவே ஆல்ப்ரெடுக்குச்சொன்ன விஷயத்தைத்திரும்பவும் இவர்களுக்குச் சொல்லி, அபாயத்திற்குஹேதுவில்லையென்பதையும் எடுத்துக்காட்டிவிட்டு மலாச்சிபோனை இதைத்தவிர்த்து வேறு சமாசாரம் தெரியுமானால் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்.

"நீங்கள் சொல்லியவாறே இந்தியர்கள் கூட்டங்கூடினதுண்டு. ஆனாலவர்கள் ஏகோபித்து ஒரு முடிவுக்கும் வர முடியாமல் கலைந்துபோய் விட்டார்கள். ஆனாலும் ஒரு விஷயத்தைப்பற்றித்தான் நான்கொஞ்சம் வேதனைப்படுகிறேன்: அதாவது—அந்தக் கூட்டத்தில் "ஆங்கிரீஸ்நேக்" என்று அழைக்கப்பட்ட கொடும்பாவி ஒருவன் இங்கிலீஷ்க்காரரின் மேல் மிகுந்தகோபத்துடன் பேசியவன். அவன் பனிக்காலத்தைக் கழிக்க இங்கெங்கேயோ சமீபத்தில் ஒன்றிக்கொண்டிருக்கிறான், என்பது" என்றான் மலாச்சிபோன்.

"ஆங்கிரீஸ்நேக்கா? அவன்தானே பிரஞ்சுக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு சண்டைசெய்த இந்தியத்தலைவன்? அல்ல? மெடல்கூட ஒன்றுதரித்திருக்கிறானல்லவா?" என்றார் காப்டின் ஸிங்க்ளேர்.

"அவன்தான், ஐயா! ஆனாலவன் ஒரு தலைவனல்லன். அவனுடைய நாளில் அவனொரு பெயர்பெற்ற போர்வீரன் ; பிரஞ்சுக்காரர்களுக்கு அவன் அவ்வளவு உபகாரம் செய்த

மையால் அவன்மீது அவர்கள் மிகவும் ப்ரீதிகொண்டிருந்தனர். பிரஞ்சுக்காரர்கள் அவனை அவ்வளவு கொண்டாடினதால் மட்டும் அவனுக்குத் தலைவனுக்குள்ள மரியாதையெல்லாம் நடந்ததேயன்றி அவன் உள்ளபடியே ஒரு தலைவனல்லன். அவனுக்கு இப்போது கிழத்தனம் வந்தும் மனதில் ஆக்கிரகம்மட்டும் தணியவில்லை. சண்டை நடந்தபோது எத்தனை இங்கிலீஷ்க்காரரை மரத்தில் கட்டிக் கொளுத்தியிருப்பான். சித்திரவதையும் செய்திருப்பான்! அவனுக்கு நம்மவர்கள் என்றால் விஷந்தான். நம்மோடு சண்டை செய்யும்படி இந்தியர்களை எப்போதும் தூண்டிவிட்டுக்கொண்டேயிருப்பான்! ஆனால் அவனுடைய நாளெல்லாம் சென்றுவிட்டன. இப்போது ஆலோசனைச் சபையில் அவன் சொல்வதைக் கேட்பவர் யாருமில்லை," என்றான் மலாச்சிபோன்.

"அப்படியானால் அவனைப்பற்றி நீரேன் சஞ்சலப்படுகிறீர்?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"ஏனென்றால் நாமிருக்கும் இடத்திற்குச்சமீபமாகவே பனிக்காலவேட்டைக்காக ஆறேழு சிறிய போராளிகளுடன் ஒளிந்து வசிக்கிறான். அவர்களுக்கு இவன் ஒரு குருபோலும். அவனோ ஒரு பெரிய துஷ்டனாயிற்றே! இந்தியக்கூட்டத்தார் சண்டை செய்யவேண்டாமென்று போய்விட்டது உண்மைதான். ஆனால் இவன் தன்னுடைய சொந்தக்கணக்கில்தனக்கு ஆகக்கூடியதைப் பார்க்காமல் போகானே. அவனுக்குப் பெயர் ‡ ஒத்ததாகவே அமைந்திருக்கிறதென்பேன்."

"அவன் உம்மையும் எதிர்ப்பானோ?"

"என்னையா! மாட்டவேமாட்டான். அவன் அவ்வளவு மூடனல்ல. எனது துப்பாக்கியை அவன் நன்கறிவான். அவனது உடம்பில் முத்திரையும் இருக்கிறது. அவனால் கூடுமானால்செய்யமாட்டானென்பது இல்லை. ஆனால் நானும் ஒரு இந்தியனாதலால் இந்தியரின் தந்திரங்கள் எனக்குத்தெரியுமல்லவா? மேலும் இவர்களுக்கு வினோதமான எண்ணங்கள் உண்டு. பெரிய யுத்தம் நடந்தபோதெல்லாம் ஒரு தடவைகூட அவர்கள் என்னைத் துப்பாக்கியால்கூட அடிக்க முடியவில்லை. ஆதலால் என் உடல் ஏதோ மந்திரத்தால் காக்கப்பட்டிருக்கிறதென்று அவர்களின் தோற்றம். அதுவுமல்லாமல் எனது துப்பாக்கியும் ஏதோ மாயக்குழாய்—அது வைத்த குறி தவறாது-என்கிற திகிலும் உண்டு. வாஸ்தவத்தில் ஏதோ நூற்றில் ஒரு தடவைகூடத் தப்புவது அரிதுதான். ஆனது பற்றி இப்படியும் அப்படியுமாக நான் ஏதோ ஒரு மாயாவி என்று அவர்கள் அச்சங்கொண்டிருக்கிறார்கள். ஆனால் உங்களுடைய விஷயம் அதுபோல் அன்று. அந்த ஸ்நேக்கு இந்த வீட்டின் மரக்கிராதிக்குள் நுழைந்துவிடுமானால் மோசம் வந்து விடும்."

‡ஆங்கிரீ ஸ்நேக் என்றால் உக்கிரம்கொண்ட சர்ப்பம் என்று பொருள்.



"ஆனால் இப்படி எதிர்ப்பது சண்டைக்கு ஆரம்பம் என்றும்,நாங்கள் பதிலுக்குப் பழிவாங்குவோமே என்றும் அக்கூட்டத்தாருக்கு நன்றாய்த்தெரியுமே?" என்றார் காப்டின் ஸிங்க்ளேர்.

"ஆம், ஆனால் அவன் இவ்விடத்தண்டையிருக்கும் ஜாதியார்களைச்சேர்ந்தவனல்லன்,உங்களுக்கே தெரியுமே. அவன் கூட்டத்தார் இருப்பது வெகுதூரத்திற்கப்பால்— புகாரைக்கொண்டுபோக எட்டாததூரத்தில் இருக்கிறார்கள். இங்கிருக்கும் ஜாதிக்காரர்கள் அவன் இங்கிலீஷ்க்காரர்களை எதிர்த்துச் சண்டைசெய்த ஒருபண்டைக்காலத்து யுத்தவீரனென்றும், வயதில் விருத்தனென்றும் அவனை மதித்துத்தங்கள் ஆலோசனைச்சபையில் சேர்த்துக்கொண்டாலும், அவனையாவது அவனுடைய செய்கைகளையாவது ஏற்றுக்கொள்ளார்கள். அவைகளை அவர்கள் உடனே மனப்பூர்த்தியாய் மறுத்துவிடுவார்

கள். ஆனால் அவனது விஷயங்களைத்தடுக்க வல்லவரல்லர்.”

“ஆனால் அவன் ஏதாவது விஷமம் செய்தால் அதற்கு என்னதான் பரிகாரம்?” என்றான் ஹென்றி.

“ஏன்! அவனாகட்டும், அல்லது அவன் கூட்டத்தாராகட்டும், உங்கள் கண்ணில் மட்டும் அவர்கள் அகப்படவேண்டும். அவர்களை நீங்கள்சமூலமாய் ஒழித்துவிட்டால்கூட உங்களை ஏனென்று கேட்பார் யாருமில்லை; புகார் செய்பவரும் யாருமில்லை. செய்யக்கூடிய தெல்லாம் அவ்வளவே; அதை நான் செய்யவும் போகிறேன். அவனை நேரிற்கண்டால் அப்படியே நான் சொல்லப் போகிறேன். அவனுக்கும் சரி, அவனது ஆட்களுக்கும் சரி, நானென்றால் சிம்ம சொப்பனம். நான் அவர்களுக்கு மருந்து போனும்,”

“மருந்து! அப்படியென்றால்என்ன?” என்றான்ஹென்றி.

“அதற்கு மந்திரவாதி யென்று பொருள்,” என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்; இந்தியர்கள் மிகவும் மூடபக்தியுள்ளவர்கள்.

“ஆம்; அவர்கள் அப்படித்தான்; நானும் அப்படியே மருந்துதானென்று ரூபித்தாலென்ன? என் துப்பாக்கியிலிருந்து இரண்டொருகுண்டு மாத்திரை கொடுக்கின்றேன்பார்!” என்றான் மலாச்சி குரூரமாக நகைத்துக்கொண்டு; “இதெல்லாம் நிற்கட்டும். அவர்களைப்பற்றி இன்னும் விசாரித்துப் பார்க்கிறேன். ஏதாவது விசேஷமிருந்தால் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்கள்மட்டும் தவறாமல் இரவுதோறும் கிராதி வேலிக்கதவைக்கெட்டிசெய்து நாய்களையும் உட்புறம் வைத்துக் கொண்டிருங்கள். எச்சமயமானபோதிலும் நான்உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். நான் அவர்களைத் தொடர்ந்து சென்றால் ஸ்ட்ராபெர்ரி வருவாள். அதற்காகவே அவளை இப்போது நான் இவ்விடம் அழைத்துவந்தது. இரவில் எச்சமயத்திலாவது கிராதி வேலிக்கு வெளிப்புறத்தில்



மூன்றுதடவை கதவு இடிப்பைக்கேட்டால் அவளாகத்தானிருக்கும். ஆகையால் அவளை உள்ளே வரவிடுங்கள்.

“நல்லது,” என்றாள் மிஸிஸ் காம்பெல்; “இவை யெல்லாவற்றையும் எனக்குத் தெரியப்படுத்தினது பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம். நாம் எதிர்பார்க்கவேண்டியது யாதென்று எனக்கு இப்போது தெரியவந்துவிட்டபடியால் நான் இனிமேல் தைரியத்தோடு இருப்பதோடு உஷாராகவும் இருப்பேன்.”

“எங்களுக்குத் தெரிந்தவற்றையெல்லாம் உங்களுக்கும் தெரிவித்தது நல்லதென்று தோன்றுகிறது,” என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்.

“வெயில் சாயுமுன் நான் கோட்டையில் இருக்கவேண்டுமாதலால் நான் சீக்கிரமாகவே விடைபெற்றுக் கொள்ள வேண்டும். மார்ட்டினும் ஜானும் என்னுடன் வந்து நாயைக் கொண்டுவரட்டும்.”

“ஆனால் பையன் என்னுடன்கூட வரவில்லையோ?” என்றான் மலாச்சி.

“இல்லை; நாளைக்காலையில் தான் அவன் போகலாம்—கோட்டையிலிருந்து திரும்பிவர அவ்வேளையாய் விடும்.”

“சரியப்போ! நான் இங்கேயே தங்குகிறேன்,” என்றான் மலாச்சி; அவன் எங்கே இருக்கிறான்?”

“அவன் இன்றுகாலையில் ஒரு ஓநாயைச் சுட்டுக் கொன்றான்; அதைத்தோலுரிக்க இப்போது போயிருக்கிறான்,” என்றான் ஆல்ப்ரெட். “சீக்கிரம் இவ்விடம் வந்து விடுவான்.”

மிஸிஸ் காம்பெல் ஓநாய் சமாசாரத்தைச் சுருக்கமாகச் சொன்னாள். கிழ வேட்டைக் காரன் அசையாமல் உற்றுக் கேட்டு, கடைசியில் ஆமோதித்துச் சிரக்கம்பம் செய்தான்.

“எனக்குத் தோன்றுகிறது—இப்பனிக்காலம் முடியுமுன் இன்னும் மிகுதியாகத் தோல்களைக் கொண்டு வருவான்,”

என்றான்.

பிறகு எல்லோரும் அவர் அவருடைய அலுவலின்மேல் சென்றார்கள். காப்ட்டின் ஸிங்க்ளேர் மாத்திரம் பர்ஸிவல் சிறுமிகளுடன் பேசிக் கொண்டிருந்தார். மார்ட்டினும் ஜானும் புறப்படத் தயாராக வந்தவுடன், மூன்று பேர்களும் சேர்ந்து விடைபெற்றுக் கோட்டைக்குப் புறப்பட்டார்கள்.

## அத்தியாயம்—22.

அடுத்தநாட்காலையில் பொழுது விடிந்தவுடன் மார்ட்டினும் ஜானும் வந்துசேர்ந்தார்கள். அவர்களோடு காப்ட்டின் ஸிங்க்ளேரால் ஜானுக்குக் கொடுக்கப்பட்ட கம்பீரப் பார்வையுள்ள ஒரு நாயும் வந்தது. விசேஷமாய்ப் பெரிய நாய்களைப் போலவே ஆஸ்காரும் பெருந் தன்மை பொருந்தியதாகக் காணப்பட்டது மற்றைச்சில்லரை நாய்களுடைய உறுமல்களையும் கொடிய பார்வைகளையும் கொஞ்சமேனும் லட்சியம் செய்யவில்லை.

"இஃது உண்மையாகவே ஒரு மேலான குணம் பொருந்திய பிராணி," என்றார் மிஸ்டர் காம்பெல். அதன் தலையைத்தட்டிக்கொண்டு, "இது ஒரு நேர்த்தியான ஜந்து," என்றான் மலாச்சி.

"ஓநாய் இதற்கெதிரிலேயே நிற்காது; காடிக்கும் இதனண்டையில் வந்தால் சமாளிப்பது சிரமமாகத் தானிருக்கும்; ஆயினும் இங்கே வாடா, குழந்தாய்!" என்று சொல்லிவிட்டு ஜானையழைத்துக் கொண்டு வெளியே சென்றான்.

"ஜான்! நீ நாயை இவ்விடமே விட்டுவிடு," என்றான் மலாச்சி. "இந்தப் பிராணி இங்கிருந்தால் உதவியாக விருக்கும், நமக்கோ இதனாலாகக்கூடியதொன்றும் கிடையாது."

ஜான் வாயைத் திறக்கவே யில்லை. அதைப்பார்த்து வேட்டைக்காரன், "இங்கே அது உதவியாக இருக்குமென்று ஏன் சொல்லுகிறேனென்றால், பெண்கள் இன்னுமொரு



ஓநாயைச் சந்திக்கலாம், அல்லது இந்த வீட்டையே யாராவது எதிர்க்க வந்தாலும் வரலாம்; நல்ல வேட்டைக்காரர்களுக்கோ நாய்களே தேவையில்லை. நமக்காக அது விழித்துக் கொண்டிருந்து, வருமபாயத்திற்கு எச்சரிக்கையா செய்ய வேண்டும்? அது நம்முடைய வேலையல்லவா? நமக்குச்சகாயம் நாமே; ஒரு பிராணியை நாம் நம்பியிருக்கக் கூடாது. போகட்டும்; நமக்காக அது வேட்டையாடப் போகிறதோ? ஒரு மானைப் பிடிப்பதானால் நம்முடைய துப்பாக்கியைக் காட்டிலும் நாயா உதவப்போகிறது? பார்க்கப்போனால் நாயால் நமக்கு இடைஞ்சல்கள் ஏற்படும். நாம் மறைந்திருக்கவேண்டிய சமயத்தில் அது நம்மைக் காட்டிக்கொடுக்க ஹேதுவாகும்; நம்முடைய காலடியை மட்டும் என்றால் நாம் மறைக்கலாம்—நாயின் காலடியும் கூடச்சேர்ந்தால் கட்டாயம் நம்மைக் காட்டிக்கொடுத்துவிடும். ஒரு வழியிலும் இந்தப்பிராணியால் நமக்குச் சகாயமே யிருக்காது. இ[illegible]டலாம்—அதுவும் இப்போது தரையில் ப[illegible] வேனிற் காலத்தில் அதைக் கொண்டு வ[illegible]து ஒரு வேட்டைக்காரனுடைய நாய்க்குப் பழக்கவே[illegible]டியவெல்லாம் பழக்கிவை; ஆனால் நாம் இப்போது அதை[illegible]விட்டு உடனே கிளம்பிப் போவோம்," என்றான்.

ஜானும் சம்மதமாய்ச்சிரக்கம்ப[illegible]துவிட்டு, உள்ளே நுழைந்து, தனது தாயாரும் அத்தை[illegible]ருமிருந்தவிடத்திற்குப்போய்; "போய் வருகிறேன்—உ[illegible] நாயைக் கொண்டு போகவில்லை," என்றான்.

"நாயைக் கொண்டு போகவில்லை; நல்லது, ஜான்! இது நீ செய்கிற பெரிய உபகாரம்," என்றாள் மேரி, "ஏனெனில் எங்களைக்காப்பதற்கு அதை வைத்துக்கொள்ள ஆவலாயிருந்தோம்."

ஜான் துப்பாக்கியைத்தோளில் சார்த்திக்கொண்டு ஸ்

ராபெர்ரி ப்ரைரண்டேக்கு ஒரு சமிக்ஞை செய்யவும், அவள் எழுந்து மிஸிஸ் காம்பெல்லையும் பெண்களையும் அன்புடன் கண்ணுற்றுவிட்டு, வாயைத்திறவாமல் ஜானுடன் வீட்டிற்கு வெளியே சென்றாள். மலாச்சிக்கும் மரியாதையே தெரியாதோ? விடைபெற்றுக் கொள்ளாமலே ஜானுடனும் பெண்டாட்டியுடனும் திரும்பக்கூடப்பார்க்காமல் நடந்துவிட்டான். ஆனால் இதையும் சொல்லவேண்டுமல்லவா— வழிகொண்டு விடப் போன மார்ட்டினோடு ஊக்கத்துடன் அப்போது பேசிக்கொண்டுபோனான்.

## அத்தியாயம்—23.

பனிக்காலம் வரவரக்கடுமையாய் விட்டது. உஷ்ணமானிக்குழாயும் உறைபனிக்கோட்டின்கீழ் இருபது டிகிரி இருந்தது. குளிரும் அவ்வளவு கொடியதாக இருந்ததால் அதற்காகவேண்டிய பரிகாரங்களை யெல்லாம் அமைத்து வைத்தார்கள். பர்ஸிவல் அடிக்கடி விறகு கொண்டுவரப்போவதும் வருவதுமாக இருந்தமையால், அவன்கால் பனி வெடிப்பால் நொந்திருந்தது. ஆயினும் மிஸிஸ் காம்பெல் விழிப்பாய் இருந்தமையால் உடனுக்குடனே உறை பனியைக் கொண்டு சிகித்ஸை செய்து வந்தாள். இரவில் ஓநாய்களின் ஊளை வரவர அதிகரித்தது. ஆயினும் வரவர அதுவும் பழகிப்போய் விட்டது. ஆஸ்கார் அந்தப் பெண்களை விட்டுப்பிரியாமல், அவர்களுக்கு உற்ற துணையாகிவிட்டது. ஆல்ப்ரெட், மார்ட்டின், ஹென்றி—இம்மூவரும் ஒவ்வொரு நாளும் வேட்டைக்குப் போனார்கள். பண்டகசாலையும் காலியாய்ப்போய் விட்டபடியால் அவர்கள் செய்யவேண்டியது இதைவிட முக்கியமானது வேறொன்றுமில்லை.

பனி முடக்க காலத்தில் கானடாக் குடியானவர்கள் அறுத்துப் போராக வைக்கப்பட்ட தானியக் கட்டுகளை அடித்து அறுவாக்கிக் காலங்கழிப்பார்கள். மிஸ்டர் காம்பெல் புதிய



குடியாதலால், இவ்வகையான வேலையாதும் இல்லை. ஆதலால் வீட்டிற்குள்ளேயே முடங்கி இருந்து ஒருநாழி ஒரு யுகமாகத் தள்ளிவந்தார்.

ஆண்பிள்ளைகளும் மார்ட்டினும் வெளியிற்சென்று அகப்பட்டதை வேட்டையாடிவருவார்கள். ஆயினும் மானைத்தவிர வேறு மிருகம் அகப்படாது. பிரதிதினமும் அதையே திருப்பித்திருப்பித் தின்பவர்களுக்கு அதுவும் அலுத்துப் போய் விட்டது. அவர்களுக்கும் வேட்டையில் ருசி கொடுக்கவில்லை.

எம்மாவுக்குத்தான் போது போகாமல் மிகவும் கஷ்டமாக இருந்தது. மிஸிஸ் காம்பெல் வீட்டுவேலையை வேறொருவருக்கும் காட்டமாட்டேன் என்றுவிட்டாள். மேரி அம்மாளோடு பேசிக்கொண்டு தையல் தைப்பதிலும், பூநூல் போடுவதிலும் காலத்தைத்தள்ளினாள். எம்மாவின் அவஸ்தைகளைக்கவனிப்போம். அவள் ஒரு துருதுருத்த சிறுமி ஆனதால், அரை நாழிகை நூல் போடுவாள்; உடனே எழுந்து சற்று அங்கும் இங்கும் நடப்பாள்; மறுபடி தையலில் அமருவாள்; உடனே எழுந்திருப்பாள், உட்காருவாள்—கொட்டாவிவிடுவாள், தேகத்தை முறித்துக்கொள்ளுவாள்—மூஞ்சியைக் கசக்கிக்கொள்ளுவாள். கடைசியில், அவளால் சகிக்க முடியாமல், பர்ஸிவலுடன் வெளியிற் சென்று துப்பாக்கிப் பழக்கத்தை மேற்கொண்டாள். கொஞ்ச நாள்களில் தேர்ச்சியை அடைந்து, அடிக்கடி ஆண் பிள்ளைகளுடன் பந்தயம் போட்டு ஜயிக்கலானாள். கிடக்கிறது, குழந்தைக்குப் போது போக இதாவது கிடைத்ததே, என்று மாமன், மாமியார் சிரித்துக்கொண்டு இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அந்தியில் வேட்டைக்குப்போனவர்கள்வெகு நேரமாகியும் திரும்பிவரவல்லை. களங்கமற்ற நிலா எங்கும் காய்ந்துகொண்டிருந்தது. ஆனால் மணி எட்டாகியும் அவர்

களைக்காணோம். மரக்கிராதி வேலிக்குட்புறத்தில் குவித்திருந்த விறகுக்கட்டைகளைக் கொஞ்சம்கொண்டுவருவதற்காகப் பார்ஸிவல் கதவைத்திறந்து வெளியிற் சென்றான். கிராதிவேலிக்கதவை மூடும் நேரமாய் விட்டபடியால் அதையும் மூடிவிட்டு வரும்படி மிஸ்டர் காம்பெல் கட்டளையிட்டிருந்தார். எம்மாவும் இரவுஇருந்த ஆனந்தத்தைப்பார்த்தபடியே வாயிற்படியில் வந்து நின்று கொண்டிருந்தாள். அப்போது அருகில் ஓநாயின் குலைப்பு ஓசை காதில் விழுந்தது. நாய்களோ இதற்குப்பழக்கப்பட்டுப் போனபடியினால் கிளம்பி எழுந்து நிற்கமாத்திரம் நின்றனவே யல்லாமல் கணப்பண்டையை விட்டு வெளிப்படவில்லை. எம்மா வெளியே சென்று அந்தப் பிராணி கண்ணுக்குப் புலப்படுகிறதோவென்று கிராதியின் இடுக்குவழியாய்ப் பார்த்தாள். ட்ரிம் என்ற அச்சுநாயும்கூடப்போய் நின்றது. ட்ரிம் இடுக்குவழியாய் நுழைந்துபோகும் படியவ்வளவு சிறியதானதால், இடுக்கு வழியாயந்த மிருகத்தைக்காணவும் உடனே நுழைந்து வெளியே ஓடிப்போய்க் குலைத்துக்கொண்டு அதன்மேற்பாய்ந்தது. இக்கடுகனையபிராணிக்கு என்ன துணிச்சல்! எம்மா உடனே உள்ளே ஓடித் தன் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு விரைவாக வெளியே ஓடிவந்தாள். ஏனெனில் அச்சிறிய ஜந்துவை அவ்வோநாய் விழுங்கிவிடுமென்று அவள் நன்குணர்ந்தாள். அவளெண்ணினது சரி—ஏனென்றால் அந்த ஓநாய் பின்வாங்காமல் அந்த நாய்க்குட்டியண்டை நெருங்கி யதைக்கவ்விக்கொண்டது.

அந்த மிருகம் நாற்பது கஜத்துக்குள் இருந்ததை எம்மா நன்றாய்க் கண்டுகொண்டு, குறிவைத்துச் சுட்டதும் அந்த எளிய நாய்க்குட்டி கடைசியாகஒரே குலைகுலைத்ததும் மாண்டதும் சரியாக விருந்தன. அவள் வைத்த குறிதப்பாமல் ஓநாயும்நாயும்கிட்டக்கிட்டக்கிடந்தன. மிஸ்டரும்மிஸிஸ்காம்பெல்லும் மேரியும் துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டவுடன்



வெளியே ஓடிவந்து பார்த்ததும் எம்மாவும் பார்ஸிவலும்வீட்டுக்குப் பின்புறத்தில் கிராதி வேலியில் நின்று கொண்டிருந்தார்கள்.

"அம்மாமி! அதைக் கொன்றுவிட்டேன். ஆனால் அது எளிய ட்ரிம்மைக்கொன்று விட்டதுபோலிருக்கிறது. வாருங்கள்—நாம் வெளியேபோய்ப் பார்ப்போம்!" என்றாள்எம்மா.

"என் அரிய எம்மாவே! அது கூடாது; உன் அத்தான்மார்கள் சீக்கிரம் வந்து விடுவார்கள்; வந்ததுமெல்லா விஷயங்களையும் நாம் அறிந்து கொள்ளலாம்; இப்போது நாம் போவதென்றால் அது வெகு சாகசமான காரியம்."

"இதோ வந்து விட்டார்களே! என்ன ஓட்டமாய் ஓடி வருகிறார்கள் !" என்றான் பார்ஸிவல்.

வேட்டைக்காரர்கள் கிராதித்தட்டிக் கதவண்டை வரவும் உள்ளே விடப்பட்டார்கள்; ஆனால் இறைச்சி ஒன்றும் அவர்கள் கொண்டு வரவில்லை. வெறுங்கையாக வந்ததைக் கண்டு எம்மா புரளி செய்தாள்.

"அப்படியல்ல!அடி, அம்மா! அத்தைமகளே! துப்பாக்கிச் சத்தத்தைக்கேட்டவுடன் அதை எறிந்துவிட்டு வந்தால் வேகமாக ஓடிவரலாமென்று கருதி அதை யெறிந்து விட்டு உங்களுக்கு வேண்டிய ஒத்தாசையைச் செய்யஓடிவந்தோம். என்ன விசேஷம்? " என்றான் ஆல்ப்ரெட்.

"வேறொன்றுமில்லை—நான் ஒரு ஓநாயைக்கொன்றேன். அதைக் கொண்டுவரத்தான் விடமாட்டோமென்கிறார்கள்," என்றாள் எம்மா.

அவர்கள் அந்தவிடத்திற்குப்போனதும் ஓநாய் செத்துக்கிடந்ததையும், எளிய ட்ரிம்மும் அதனருகில் செத்துக்கிடந்ததையும் கண்டார்கள். அச்சிறிய நாயின்சவத்தை மட்டும் உள்ளே எடுத்துகொண்டு போனார்கள்.

ஓநாய்ச் சவத்தையோ வென்றால் வெளியிலேயே

போட்டுவிட்டுக் காலையில் மார்ட்டின் தோலையுரிப்பதாகச் சொன்னதின்பேரில் வந்து விட்டார்கள்.

"நானும் அதைக்கொண்டு ஒரு கால்மிதி மெத்தையாக ஆக்கிவிடுகிறேன்," என்றாள் எம்மா: மற்றொரு ஓநாய் அன்றையதினம் என்னை நடுங்கச் செய்ததற்காக இதன் பேரில் இம்மாதிரிதான் பழி வாங்கப்போகிறேன்; வா அப்பா! ஆஸ்கார்! நீ ஒரு நல்லநாய்! நீயும் நானும் ஓநாய் வேட்டைக்குப் போவோம். ஓ அப்பா! நானும் என் ஜன்மத்தில் ஒரு ஓநாயைக்கொல்லுவேனென்று யாராவது நினைத் திருப்பார்களோ! ஐயோ, பாவம்! ட்ரிம்!"

வேட்டையாடிக்கொண்டுவந்தஇறைச்சியைஏற்கனவே ஓநாய்கள் தின்று இருக்குமென்றும், ஆதலின், அதற்காகத்திரும்பிப்போவது பயனற்றதென்றும் மார்ட்டின் சொன்னதின்பேரில் அவர்களனைவரும் கிராதிக் கதவைப் பூட்டிக்கொண்டு வீட்டினுள்ளே சென்றார்கள்.

அன்று சாயங்காலம் முழுதும் எம்மா செய்தவேலையைப்பற்றித்தான் பேச்சு. மார்ட்டின்கூட மிகவும்புகழ்ந்துபேசி, அதுவரையில் ஓநாயைச்சுட்ட பெண்பிள்ளை அவனுக்குத் தெரிந்தமட்டில் வேறொருவருமில்லை என்றான். இந்தக்கதையை மார்ட்டினுக்குச் சொன்னது மலாச்சி யென்று அவன் சொன்னதின்பேரில், பிறகு மலாச்சியினது பூர்வ விருத்தாந்தத்தை மார்ட்டின் சொன்னான். அவனுக்கு அப்போது அறுபது வயதிற்குமேல் இருக்கும். துப்பாக்கி வித்தையில் அவனுக்கு நிகர் யாரும் கிடையாது. மற்ற இந்தியருக்கு அவனைக்கண்டால் நடுக்கம். எத்தனைத் துப்பாக்கிகள் அவன் மேல் குறிவைத்துச்சுட்டாலும் அவன்மேல் குண்டு படுவதில்லையாம். அவன் மட்டும் வைத்த குறி தப்புவதில்லையாம். மேலும் அவனதுதலை நாணல் பூவாக இருபது வயதிலேயே நரைத்திருந்தமையால், அவனுடைய வயதைப்பற்றி ஒருபிர



மம் இருந்தது. பல இந்தியர்கள் இவனுக்கு நூற்றைம்பது வயதும் ஆயிருக்கும் என்று எண்ணினார்கள். ஆகக்கூடி இவனை ஏதோஒரு மந்திரவாதி என்று மற்ற இந்தியர்களெல்லாம் நினைக்கலாகி, அவனைக் கண்டால் திகில் கொண்டிருந்தார்கள்.

"மலாச்சிக்குக் காலம் சுகமாகக் கழிகிறதா?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"அம்மா, அதில் என்ன சந்தேகம்? அவன் இடம் இருக்கும்பெண் அவனது மனம் அறிந்து அவனுக்குக் காரியங்களைச்செய்வாள். அவளைஅவன்வளர்த்தெடுத்தவனாதலால் தனது தகப்பனைப்போல் அவள் அவனைப் பாராட்டிவருகிறாள். உணவுக்கு வேண்டிய இறைச்சி எப்போதும் அவனது குச்சு நிறைய இருக்கும். மேலே வேண்டுமென்றால் கையில் துப்பாக்கியும் வேண்டிய மருந்தும் இருப்பின் அவனுக்கு என்ன குறைச்சல்? அவன் குடிப்பதில்லை. அவனுக்கு வேண்டியது புகையிலை. அவனைப்போல் சுகசாலி யாருமில்லை."

"இம்மாதிரி ஆசையைக் கட்டினவர்களல்லவோ சுகசாலிகள்," என்றார் மிஸ்டர் காம்பெல். "எந்த நிலைமையில் இருந்தாலென்ன? ஒருவனுக்குத் திருப்தி என்பது மட்டும் இருந்தால் அவன்தான் ராஜா."

## அத்தியாயம்—24.

எம்மா கொன்ற ஓநாயை ஆல்ப்ரெடும், மார்ட்டினும், உள்ளே கொண்டுவந்தார்கள்; ஆனால் அது மிகவும் கெட்டியாக உறைந்துபோய் விட்டபடியால் அதைச் சிரமப்பட்டுத் தோலுரிக்க வேண்டி இருந்தது.

மறுநாட்காலையில் அந்தவேட்டைக்காரர்கள் வெளியே புறப்படும்போது எப்படியாவது அன்றையதினம் ஒரு காட்டுக்கோழியைக் கொண்டுவரும்படி விரும்பிக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஏனெனில் அடுத்த நாள் தான்

கிறிஸ்து பிறந்த நாள்.

அவர்கள் புறப்பட்டுப் போனதும், "ஏது ! அவர்களுக்கு ஒரு கோழி அகப்படுமோ என்பது எனக்குச் சந்தேகந்தான்," என்றாள் எம்மா.

"அது சிரமசாத்தியம் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன்," என்றாள் மிஸிஸ் காம்பெல், "ஆனால் அவர்களால் இயன்றமட்டில் முயல்வார்கள். ஆஸ்காரும் கூடப் போயிருக்கிறதல்லவா ?"

"அப்படியே செய்வார்களென்று நானும் வேண்டுகிறேன்: ஏனெனில் கோழியில்லாத கிறிஸ்துமஸ் தினம் இங்கிலீஷ்க்காரர்கட்கு மகிழ்ச்சியைத்தராது."

"என் கண்ணே, எம்மா, நாம் இருப்பது இங்கிலாந்தா? நினைத்தவுடன் காசு கொடுத்தால்கூடக் கிடைக்காதே?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"என் அருமை மாமாவே, எனக்கு அது தெரிந்ததுதான். ஆயினும் கிறிஸ்துமஸ் பண்டிகை என்றவுடன் ஊர் நினைப்பு வந்துவிட்டது. தங்களை உத்தேசித்து நான் வருந்தியதே யல்லாமல் எனக்காக அல்ல," என்று எம்மா கண்ணும் கண்ணீருமாகச் சொன்னாள்.

வெகுநேரம் வரை வேட்டைக்குப்போனவர்கள் திரும்பி வராமல், கடைசியில் கண்ணுக்கு எட்டினவுடனே அதைப் பார்த்துவந்த பர்ஸிவல் ஓட்டமாய் ஓடிவந்து அவர்கள் ஒரு பெரிய சுமையை ஒரு கோலில் காவடிகட்டிக் கொண்டுவருவதாகச் சொன்னான்.

மேரியும் எம்மாவும் தங்கள் அம்மான் சேய்களை யெதிர்கொண்டழைப்பதற்காக வாசலுக்கு வெளியே சென்றார்கள். மார்ட்டினும் ஆல்ப்ரெடும் சேர்ந்து ஒருகாவடியில் பெரிய சுமையைக்கொண்டு வந்தார்களென்பது மட்டும் தெரிந்தது—ஆனால் அதிலென்ன விருக்கக்கூடுமென்று சொல்ல



முடியவில்லை. கிட்ட வந்ததும் அது இறைச்சியன்றென்றும், கிளைகளாலமைக்கப்பட்ட ஒருவித தூளியில் ஏற்றிவரப்பட்ட ஒரு மனிதப் பிராணி யென்றும் தெரியவந்தது.

ஆல்ப்ரெட்! அதென்ன?" என்றாள் மேரி.

கதவண்டை வந்து சேர்ந்ததும் ஆல்ப்ரெட், "என் திணறல் கொஞ்ச மடங்கட்டும், சொல்லுகிறேன்—அல்லது ஹென்றியைகேள்—எனக்கு மிகவும் தள்ளாமையாயிருக்கிறது," என்றான்.

ஹென்றி பிறகு தன் அத்தைமகளிர்களை உள்ளே யழைத்துச்சென்று நடந்ததை எல்லாம் சொன்னான். அவர்கள் காட்டுக்கோழிகளைத் துரத்திச் சென்று கொண்டிருக்கையில் ஒரு கொத்துச்செடிப்புதரில் ஓர் எளிய இந்தியஸ்திரீ குற்றுயிராய் விறைத்துக் கிடந்தாள். அவள் பாதம் அடிபட்டுப் பூட்டுவிட்டுப்போய்க் காலைப்பார்த்தால் பயங்கரமாக வீங்கிப்போய் நகரவே முடியாமல் கிடந்தாள். மார்ட்டின் அவளுடன் இந்தியபாஷையிற் பேசினான். அவள் மிகவும் களைப்புற்றிருந்தமையால் அதிகமாகப் பேச முடியவில்லை. அவள் சொல்ல முடிந்த பதிலிலிருந்து தெரிய வந்ததென்னவெனின்—அவள் ஒரு சிறிய இந்தியக் கூட்டத்தைச் சேர்ந்தவள். அவர்கள் பனிக்காலத்திற் றங்குமிடம் வெகு தூரத்திற்கப்பாலமைக்கப்பட்டு வேட்டைக்காகஇப்புறம்வந்தவர்கள். அவள் சுமந்துபோன பாரத்தைத் தாங்கமுடியாமல் கீழே விழுந்துவிட்டாள்—அவளுடைய கால் அவ்வளவு நொந்திருந்தபடியால் ஒரு அடி கூட நகரமுடியவில்லை; அவள் தூக்கின சுமையை மாத்திரம் அவர்கள் கைப்பற்றிக்கொண்டு "உனக்கு முடிந்தபோது எழுந்து நடந்துவா" என்று சொல்லிவிட்டுச் சென்றனர்.

"ஆம் ; ஆகாரமில்லாமல் இந்த எளிய பிராணியைப் பனியில் விறைத்து மாண்டு போகும்படி விட்டுவிட்டுப் போ

ளூர்கள். இன்னும் ஒரு நாள் மட்டும் இப்படியே இருந்திருந்
தால் இவள் இறப்பது திண்ணமே. சென்ற இரண்டிரவில்
எப்படித்தான் உயிரோடிருந்தாளோ ! வெகு ஆச்சரியம்! ”
என்றுன் ஆல்ப்ரெட்; “ ஆனல் இந்தியர் இப்படித்தான் தங்
களுடைய ஸ்திரீ யாருக்காவது அபாயம் நேரிட்டுப் போய்
விட்டால் பிழைத்தாற் பிழைக்கட்டும், செத்தால் சாகட்டும்
என்று விட்டுவிட்டுப் போய்விடுவது வழக்கம் என்று மார்ட்
டின் சொல்லுகிறுன்.”

“ அதெல்லாம் பிற்பாடு பேசிக்கொள்வோம்,” என்றுர்
மிஸ்டர் காம்பெல். “அவளை உடனே கொண்டுபோவோம்.
முதலில் எனக்குத் தெரிந்த ரணசிகித்ஸா ஞானம் ஏதாவது
உதவுமா பார்ப்போம். பிறகு அவளுக்கு என்ன செய்யவே
ண்டுமோ அதையெல்லாம் செய்வோம். இங்கிருந்து எவ்வ
ளவு தூரத்திற்கப்பாலவளைக் கண்டெடுத்தீர்கள் ? ”

“ சுமார் எட்டு மைல், ” என்றுன் ஹென்றி ; “ ஆல்ப்
ரெட் தான் சற்று ஏறக்குறைய முழுதூரமும் தூக்கிவந்
தது;மார்ட்டினும் நானும் மாற்றிமாற்றித்தூக்கிஞேம். ஆல்ப்
ரெடோடு நான் மாற்றியது ஒரேதடவைதான்.”

எம்மா ! பார்த்தாயோ ? காட்டுக்கோழி கேட்டதிற்கு
ஓர் இந்தியப் பெண்ணைக் கொண்டு வந்திருக்கிறேன், ” என்
றுன் ஆல்ப்ரெட்.

“ஆல்ப்ரெட்! உன்னுடைய ஜீவகாருண்யத்தைப் பார்க்
குந்தோறும், நீ ஒரு வண்டிச்சுமை காட்டுக்கோழி கொண்
டுவந்திருந்தால் எனக்கு உன்மீது எவ்வளவு விசுவாசமுண்
டாகுமோ, அதைக்காட்டிலும் மிகுதியான விசுவாசமுண்
டாகிறது,” என்றுள் எம்மா.

இதனிடையில் மார்ட்டினும் ஹென்றியும் அந்த எளிய
இந்தியப் பெண்ணைக்கொண்டுவந்து அடுப்பண்டையில் அதி
கம் கிட்டாமலும் வைத்தார்கள். ஏனெனில் அவள் குளிரில்



சவத்தைப்போல் விறைத்துப் போயிருந்ததால் திடீரென்று
நெருப்புக்குச் சமீபமாக வைக்கப்பட்டாலும் உயிருக்கு மோ
சம் வந்திருக்கும். மிஸ்டர் காம்பெல் பாதக்கணுவைப் பரி
சோதித்துப் பார்த்து, கொஞ்சம் வெளியுதவியைக்கொண்டு
மறுபடியும் சரியாகத் திருப்பிவைத்தார்.

அவர் பிற்பாடு அவளுடைய காலைக் கட்டிவிட்டு, சுட
வைத்த காடியைக்கொண்டு ஒத்தடம் கொடுத்தார். மிஸிஸ்
காம்பெல்லும் இரண்டு பெண்களும் அந்த எளிய பிராணி
யின் அங்கங்களைத் தேய்த்துக் கொடுக்கவும், அவளுக்குக்
கொஞ்சம் உணர்வு திரும்பிவந்தது. சுடச்சுடக் கொஞ்சம்
குடிப்பதற்குக் கொடுத்தார்கள். மிஸிஸ் காம்பெல்லின் யோச
னையின் பிரகாரம் அவளுக்காகச் சமையற்கட்டுத் தரையில்
ஒரு படுக்கை யமைத்துக் கொடுத்தார்கள். அடுப்பண்டை
மூலையில் படுக்கவைக்கப்பெற்று, ஒருமணி நேரத்திற்குள்
அந்த நோயாளி பலமான தூக்கத்திலாழ்ந்து விட்டாள்.

“அவளைப்பிடித்த நல்ல வேளைதான் நாம் கண்டுபிடிப்
பதற்குமுன் அவள் இம்மாதிரி தூக்கத்தில் விழுந்திராதது:
ஏனெனில், அப்படி இருந்திருந்தால் மறுபடியும் விழித்துக்
கொண்டிருக்கமாட்டாள்,” என்றுன் மார்ட்டின்.

“மாட்டவேமாட்டாள்! ” என்றுர் மிஸ்டர் காம்பெல்.
“மார்ட்டின்! அவள் எந்தச் சாதியாரைச்சேர்ந்தவள் என்று
உனக்கு ஏதேனும் தெரியவருகிறதா ?”

“ஆம், ஐயா ! அவள் சிப்பவே சாதியாரைச் சேர்ந்த
வள்; அவர்களுக்குள் அநேகம் பிரிவுகள் உண்டு. அவள்
விழித்துக் கொண்டதும் அவள் எதைச் சேர்ந்தவள் என்று
அறிந்து கொள்கிறேன்; முதல் முதல் நாங்களவளைக் கண்ட
போது மிகுதியாகப் பேசமுடியாதவளாயிருந்தாள்.”

“என்ன கொடிய ராக்ஷசர்கள் ! இப்படி அவளை நசிக்
கும்படி விட்டுப்போவதும் உண்டோ ! ” என்றுள் மிஸிஸ்

காம்பெல்.

"ஆம், அம்மணி; அவர்கள் அப்படிப்பட்டவர்கள்தாம்; ஆனால் ஆபத்து வந்துவிட்டால் வரம்பு ஏது, முறை ஏது? இந்த இந்தியர்களுக்கு மனதிருந்தாற்கூட உயர்ந்தால் நூறு மைல் தூரத்திற்குமேல் தூக்கிப்போக முடிந்திருக்காது. அப்படிச் செய்திருந்தால் இன்னும் அநேகர்கள் சாவதற்கு ஹேதுவாய் இருந்திருக்கும்:—ஏனெனில் இப்போது குளிர் அவ்வளவு கடுமையாதலின்; தீராப்பொறிக்கு என்றால் பெருந்தீயை மூட்டிக்கொண்டு வெளிப்பிரதேசங்களில்இரவில்தங்கி ஏதோ சமாளிப்பதுண்டாயினும், பல ராத்திரிகள்தோறும் அப்படிச் செய்து மீண்டு வருவது மிகவும் அரிது."

"தன்னைக்காப்பதே முதன்மையான தருமம் என்பதில் ஆட்சேபனையில்லை; ஆயினும் நான் தெரிந்து கொண்டிருப்பதுண்மையாயின், காட்டாள்களுக்கு ஒரு ஸ்திரீயின் உயிரென்றால் வெகு அலட்சியம்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"அது வாஸ்தவந்தான், ஐயா! உங்களுக்குப் பாரம் சுமக்கும் மிருகம் என்றால் எவ்வளவோ அதற்கும் கீழ்ப்பட்டதுதான்," என்றான் மார்ட்டின்.

"அது எப்பொழுதும் காட்டாள்களுக்கு வழக்கம்தான்," என்றார் மிஸ்டர் காம்பெல்; "நாகரீகத்திற்கு முதற்குறி என்னவென்றால் ஸ்திரீகளை நடத்தும் மாதிரியே. நாகரீகம் மேலோங்க ஓங்க ஸ்திரீகளை யாதரிப்பதும் காப்பதும் மேலாடுகிறது. இது போதும்; சாப்பாடு தயாராகிவிட்டது. என் குழந்தைகாள், உங்களுக்கு நேர்ந்த பட்டினிக்கும் களைப்புக்கும் அப்பால் அது உங்களுக்கு அவஸரமாகவே வேண்டியிருக்கும்."

"எனக்கு இருக்கிற களைப்பைப் பார்த்தால் சாப்பாடே வேண்டாம் போலும்," என்றான் ஆல்ப்ரெட்.

"கரடித்தோல்களைப் போர்த்துக்கொண்டு தூங்குவதை



விடச் சிலாக்கியமானது இப்போது எனக்கு வேறொன்றுமிராது. இருந்தாலும் உட்கார்ந்து பார்க்கிறேன்," என்று நகைத்துக்கொண்டு தன்னுடைய ஸ்தானத்தில் சாப்பிட உட்கார்ந்தான்.

ஆல்ப்ரெட் சொன்னது மாத்திரமேயல்லாமல், அன்றிரவு உட்கொண்ட சாப்பாடு ஒருநாளுமில்லை! எம்மாவும் அவன் முதலில் தனக்குப் பசியில்லையென்று மாமாலம் செய்துவிட்டுப் பிறகு அவ்வளவு சாப்பிட்டதைப்பற்றி மிகுதியாகப் பரிகாஸம் செய்தாள்.

பிறகு ஆல்ப்ரெடுக்கும் எம்மாவுக்கும் நடந்துகொண்டிருந்த விளையாட்டுப் பேச்சுகளைப்பற்றி சொல்லவும் வேண்டுமா? இப்படிப் போஜனம் நடக்கையில், ஜானைப் பற்றிய பேச்சு வந்தது. அவன் போய் வாரங்கள் இரண்டாகியும் திரும்பி வரவில்லை. "நாளைக்காவது வருவான் என்று நினைக்கிறேன்," என்றாள் தாயார்.

"ஆம், அம்மணி," என்றான் மார்ட்டின். "கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு இறைச்சி ஏராளமாக வேண்டுமென்று மலாச்சிக்குத் தெரியும். ஆதலால் அவ்விருவரும் வேட்டையில் முனையாக இருந்திருப்பார்கள். மலாச்சி கூடவே வருவான்."

"மலாச்சிக்கு மதவிஷயமான உணர்ச்சி எதாயினும் உண்டோ என்னவோ? எனக்கு வெகு நாட்களாக அது ஒரு யோசனையாகவே தான் இருக்கிறது", என்றாள் மேரி. "மார்ட்டின், உனக்கு என்ன தோன்றுகிறது?"

"அம்மணி, உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதை வெளியில் காட்டுவதில்லை. நானும் அவனைப் போலவே தானே? எனக்கு இருப்பது போலவே தானே அவனுக்கும் இருக்கும்? அத்வான வெளிகளில் ஒண்டியாகக் கிடக்கும்போது ஆண்டவனைப் பற்றிய சிந்தை வராமல் எப்படி

இருக்கும்? மலாச்சிக்கு ஆண்டவனிடத்தில் ஊன்றின பக்தி உண்டென்பது எனக்குச் செம்மையாகத் தெரியும். ஆனால் நாள், கிழமை, விரதாதிகள், நோன்புகள், பண்டிகை, என்றால், அவைகள் பூஜ்யம்தான். மாதக்கணக்காகக் காட்டில் திரிபவர்கள் கிழமையைக் கண்டார்களா? திதியைக் கண்டார்களா? நாளையதினம் கிறிஸ்துமஸ் பண்டிகை என்று நீங்கள் அன்று சொன்னவுடன் மலாச்சி ஏதோ யோசனையாக நின்றான் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? குழந்தைப் பருவத்தில் அதைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பான். அது அப்போது ஞாபகம் வந்தது. ஆகையால் பண்டிகைக்கு வருகிறேன் என்று சொல்லிப் போனான். இப்போது இன்று பண்டிகைதினம் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டதல்லவா? அவன் வந்துசேரத் தவறமாட்டான்."

போஜனம் முடிந்த உடனே எல்லோரும் தூங்கப்போய் விட்டார்கள். மிஸ்டர் காம்பெல் மட்டும் கால் நோயாளிக்கு வேண்டிய சிகிச்சைகளை அப்போதைக்கப்போது செய்வதற்காக இரவில் வெகுநேரம் விழித்துக்கொண்டு உட்கார்ந்தார்.

## அத்தியாயம்—25.

எம்மா சொன்னதுபோலவே இந்தக் கிறிஸ்த்மஸ் தினத்துக்கும், சென்ற கிறிஸ்த்மஸ் தினத்திற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்யாஸமிருந்தது; மூடுபனியானது எப்போதையும்விடக் கடுமையாயிருந்தது; பனித்துண்டுகள் ஆகாயமெங்கும் அடர்ந்திருந்தன; வடகிழக்குக் காற்றானது தழைகளற்று முண்டமாக நின்ற மரங்களினிடையே ஊளையிட்டுக்கொண்டு கிளைகளையொன்றோடொன்று மோதும்படியடித்தது; ஏரியும் கனமாக உறைந்த ஒரு பனித் திடலாகிவிட்டது; அதன்மேல் பனியானது காற்றால் மலை மலையாகச் சிலவிடங்களில் குவிக்கப்பட்டிருந்தது; இப்படியிருந்தும் அவர்கள் தலைக்குமேல் நல்ல கூறையும், அண்டையில் அடுப்



பில் நல்ல தீயுமிருந்தது. அதுவுமல்லாமல், அவர்களுடைய
குடும்பத்தில் பொறாமை சச்சரவே ஒன்றும் கிடையாது. அ
வை என்றால் எதிர்க்க ஒருவருக்குமாகாது. அவைதான் துக்
கங்களுக்குள் பரம துக்கமாகும். அவையொன்றுமில்லாது,
அவர்களுக்குள் இருந்த ஒர்மையும் பரஸ்பரமான அன்பும்
விசுவாசமும் தேவாதிகளுக்கே ஒத்த காட்சியாகும்; அவர
வரிடத்தில் இருக்கும் பிழைகளையும் குறைபாடுகளையும் ஒரு
வருக்கொருவர் நினைப்பார்களோ? ஆஹா! என்ன ஒற்று
மை! என்ன பொறுமை! ஆஹா! அவர்கள் ஒருவருக்கொரு
வர் செய்த உபசாரமென்ன! ஒருகால், இக்குடும்பத்தினது
வைபவத்தைக் கண்டுதானோ ஔவை

"ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்;
முப்பழமோடு பாலன்னம் முகங் கடுத் திடுவாராயின்
கப்பிய பசியினோடு கடும் பசியாகும் தானே."

என்று சொன்னது!

அன்று காலை எல்லோருக்கும் உள்ளம் ஆண்டவனது
திருவடியை நாடி இருந்து, ஒருவர் மற்றொருவருடைய நன்
மையையும் சுகத்தையும் கருதிய மனதுடன் இருந்தார்கள்.

விடிந்த தினம் திருநாள். மிஸ்டர் காம்பெல் எழுந்தவுட
னே நோயாளியைப் பார்வையிட்டு, கட்டை ஒழுங்கு படு
த்திவந்தார். அவளுடைய பாதக்கணு சற்றுக் குணப்பட்
டிருந்தும் வீக்கம்மட்டும் மிகுதியாகவே இருந்தது. அந்த
எளிய பிராணி கொஞ்சமேனும் கடிந்து கொள்ளவேயில்லை.
தனக்கு இட்ட நன்மைகளுக்கும், செய்த உபகாரங்களுக்கும்
தனது நன்றியறிவை மிகவும் காட்டினாள்.

அவர்களனைவரும் தங்களுடைய திருநாளாடைகளைத்
தரித்திருந்தார்கள். தொழுதான பிறகு, வருஷத்துக் கொரு
நாளாகிய அத்திருநாளில் ஏற்றனவாயுள்ள பரஸ்பர உபசார

ங்களையும் நன்கு வாழ்த்துதல்களையும் செய்துகொண்டிருந்தனர். அப்போது, மலாச்சியும், அவனுடைய சிறிய ஸ்திரீ ஸ்ட்ராபேர்ரியும், ஜானும் காட்டில் வேட்டையாடிச் சேகரம் செய்த இறைச்சிச் சுமையுடன் வந்து நுழைந்து, அச்சுமையை சமையலறையின் ஒரு மூலையில் இறக்கி, கூடிக் களிப்புடனிருக்கும் அந்த ஜமாவுக்கு நற்சொல்லளித்தனர்.

உடனே எம்மா ஸ்ட்ரா பேர்ரியின் கையைப் பிடித்துக் கொண்டு, 'கிறிஸ்துமஸ் தினமாகிய இன்றையதினம் நாம் எல்லோரும் சேர்ந்திருப்போம்,'' என்றாள்.

அந்த இந்தியப்பெண் நகைத்துச்சிரக்கம்பம்செய்தாள்.

"ஜான்! நீ நமக்காக மூன்று காட்டுக் கோழிகளைக்கொண்டு வந்திருக்கிறாய். நீ ஒரு நல்ல பையன், ஜான்!'' என்று எம்மா சொன்னாள்.

இதனிடையில் மேரியும் எம்மாவின் பக்கத்தில் நின்றுகொண்டு ஸ்ட்ராபேர்ரியின் கையைப்பிடித்துக் குலுக்கினாள். அப்போது மார்ட்டின், "காப்ட்டின் ஸிங்க்ளேர் மாத்திரம் இப்போது இங்கே இல்லையே!'' என்றான்.

உடனே மேரியின் முகம் கொஞ்சம் சிவந்தது. எம்மாவும், "ஆம், மார்ட்டின்! அவரில்லாதது குறை தான்; எனக்கு என்னவோ அவர் நம்முடைய குடும்பத்தில் ஒருவரென்றே தோன்றிக்கொண்டிருக்கிறது."

"அதற்கு என்ன செய்கிறது? அம்மா! முடிந்திருந்தால் அவர் வராமலிருக்கமாட்டார்,'' என்றான் மார்ட்டின்; "இவ்விடம் விட்டு அவர் போய்ச்சுமார் ஆறுவாரம் போலாகிறது; கர்னல் மட்டும் அனுமதிகொடுக்கும் பட்சத்தில் நிச்சயமாகக் காப்ட்டின்ஸிங்க்ளேர்—''

"இன்று இங்கே வந்து விடுவார்,'' என்று வாக்கியத்தை முடித்துக்கொண்டு காப்ட்டின் ஸிங்க்ளேரே நேரில் வந்து சேர்ந்தார். ஏற்கனவே முன்தடவை அவருடன் வந்த



மிஸ்டர் க்வைனும் காப்ட்டின் ஸிங்க்ளேரும் வீட்டுவாசலில் நுழைந்ததை ஒருவரும் கவனிக்கவில்லை. ஏனென்றால் அந்த ஜமாவில் மற்றவர்கள் மலாச்சியோனுடனும் ஜானுடனும் ஸல்லாபம் செய்துகொண்டிருந்தனர்.

"ஓ! உங்களைக்காண எனக்கு என்ன சந்தோஷம்!'' என்றாள் எம்மா. "எங்களுடைய கிறிஸ்துமஸ் பண்டிகைக் கோஷ்டிக்கு நீங்கள் இல்லாத குறை ஒன்றுதானிருந்தது; மிஸ்டர் க்வைன், உங்களைக்காண எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது,'' என்றுசொல்லிக்கொண்டு எம்மா ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கையை நீட்டினாள்.

"நாங்கள் வருவதற்குக் கர்னல் லேசில் சம்மதிக்க மாட்டேனென்றார்,'' என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர் மேரியை நோக்கி; "ஆயினும் இந்தியர்களைப் பற்றிப் பிறகு ஒன்றும் கேள்விப் படாததால் அவர் சம்மதித்தார்.''

"இந்தியர்களிடத்திலிருந்து இந்தப்பனிக்காலருதுவில் நீங்கள் பயப்படவேண்டியதொன்றுமில்லை என்று நான் சொன்னதாக உங்களுடைய கர்னலிடம் சொல்லுங்கள், காப்ட்டின்!'' என்றான் மலாச்சி. நேற்றுத் தான் நான் அவர்களுடைய வேட்டை ஸ்தலத்திற்குப் போயிருந்தேன். அவர்கள் கலைந்து விட்டு மேற்றிசைக்குப் போய்விட்டார்கள்—அதாவது ஆங்க்ரிஸ்நேக்கும் அவன் கூட்டத்தாரும் போய்விட்டார்கள்; அது நிச்சயம்தானா வென்று பார்ப்பதற்குப் பனியில் அவர்கள் சென்ற பாதையைத் தொடர்ந்து சென்றேன்; எல்லாவற்றையும் கொண்டுபோய்விட்டார்கள்—ஆனால் என்ன காரணமோ நானறியேன்,— அவர்களுடைய ஸ்திரீயை மட்டும் அவர்களுடன் காணோம். ஒருத்தி அவர்களுடன் இருந்தாள். அவர்கள் தோல் சுமைகளைத் தூக்கிக் கொண்டு போயுமிருக்கவேண்டும்—நான் ஸத்தியம் வேண்டுமானாலும் செய்கிறேன்—அச்சுமைகள் பலவிடங்களில் தரை

யிலும் போடப்பட்டிருந்தன.—ஆண் பிள்ளைகள் தூக்கிக் கொண்டு போயிராவிடில் இம்மாதிரி நடந்திருக்காது. உங்களுக்குத் தெரியுமோ இது?—ஓர் இந்தியன் என்றால் மூட்டையைப் பொறுத்துத் தூக்கமாட்டான்—ஸ்திரீயென்றால் ஒரு நாள் முழுவதுமென்றாலும் கொஞ்சமேனும் சலியாமல் தூக்கிப்போவாள். இச்சாதியர்கள் போய்விட்டதால் வேறொருவரும் சுற்றுவட்டம் ஐம்பது மைல்களுக்குள்ளாக இல்லை என்பதற்கு நான் ஜாமீன்.”

“நீ இப்படிச்சொல்லுவதைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது,” என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்.

“அப்போது, ஒருகால், ஆல்ப்ரெட், நீ பிழைக்கவைத்த இந்த எளிய ஸ்திரீதான் அந்த இந்தியர் கூட்டத்தைச் சேர்ந்தவளோ, என்னவோ?” என்றார் மிஸ்டர் காம்பெல்.

பிறகு மிஸ்டர் காம்பெல் முந்தின தினத்தில் ஸம்பவித்ததையெல்லாம் மலாச்சியிடம் விவரித்துச் சொன்னார். விருந்தாளிகளால் குறிக்கப் படாமல் ஒரு மூலையில் கிடந்த, அந்தஸ்திரீயைச் சுட்டிக்காட்டினார்.

மலாச்சியும் ஸ்ட்ரா பெர்ரியும் அவளண்டை சென்றார்கள். இந்திய பாஷையில் ஸ்ட்ரா பெர்ரி கேட்ட கேள்விகட்கு அவளும் தாழ்ந்த குரலில் பதில் சொல்லிக்கொண்டிருக்க, மலாச்சி குனிந்து கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தான்.

“நீங்கள் நினைத்தது சரியே! ஐயா! அவள் ஆங்க்ரி ஸ்நேக்கைச் சேர்ந்தவள்தான். அவள் சொல்லுவதில் இவ்விடத்தில் நீர்நாய் அரிதானபடியால் அவன் மேற்றிசையை நோக்கிச் சென்றுவிட்டானாம். நான் முந்தியே அவனுக்குச் சொல்லியிருப்பேனே! அவளும் நான் சொன்னதையே ஊர்ஜிதப்படுத்துகிறாள்—இந்தியரனைவரும் போய்விட்டார்கள்; ஆனால் இளவேனிற்காலம் திரும்பியதும் இதே இடத்தில்



வந்து ஆலோசிக்கப்போகிறார்களாம்.”

“இவளும் ஸ்ட்ராபெர்ரி ஜாதியைச் சேர்ந்தவள் தானோ?” என்றான் ஹென்றி.

“அப்படியுமிருக்கலாம்; ஸ்ட்ராபெர்ரி எந்த ஜாதியைச் சேர்ந்தவள் என்று எனக்கே தெரியாது,” என்றான் மலாச்சி.

“ஆனால் இரண்டு பேர்களும் ஒரே பாஷை பேசுகிறார்களே?”

“ஆம்; ஆனால் ஸ்ட்ராபெர்ரிக்கு அந்தப் பாஷையைக் கற்பித்தது நானே,” என்றான் மலாச்சி.

“நீயா?” என்றாள் மிஸிஸ் காம்பெல்; “அஃது எப்படி நேரிட்டது?”

“அம்மா; அதுவா? சொல்லுகிறேன்; சுமார் பதின்மூன்று பதினான்கு வருஷங்களுக்கு முந்தி ஒரு சிறிய ஏரி கரையில், இப்பக்கத்திலிருந்த வகுப்புக்காரர்கட்கும் சண்டைக்கென்றே அலைந்துகொண்டிருந்த ஹூரான் என்னும் கூட்டத்தாருக்கும் ஒரு யுத்தம் நடந்துகொண்டிருக்கையில் நானும் போய்ச்சேர்ந்தேன். இவர்கள் அஜாக்கிரதையினால் ஹூரான் கூட்டத்தாரால் அடிக்கப்பட்டு, நானறிந்தவரையில் ஒருவர் கூடத் தப்பாமல் கைதியாக்கப்பட்டாவது அல்லது மண்டைத் தோலுரிக்கப் பட்டாவது ஒழிந்தார்கள். நான் போய்ச் சேரும்போது ஹூரான்கள் போய்ஓரிரண்டு மணி நேரம் இருக்கும். யுத்தகளத்திற்கு நான் வந்து சேர்ந்து, சவங்களையெல்லாம் பார்த்தபோது எனக்குள்ளாகவே சிந்தித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். ஆஹா! ஜீவாத்மாக்கள் இருந்த சரீரங்களை இம்மாதிரி வதை செய்தவர்கள் என்ன ராக்ஷதர்களாக இருக்கவேண்டும்! இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஒரு செடியின் கீழிருந்து இரண்டுகண்கள் கூர்மையுடன் என்னைப்பார்த்துக்கொண்டிருந்தன. முதலில் அது ஒரு மிருகம்—காட்டுப்பூனை யென்கிறார்களே அதாக இருக்க

லாம்—என்றெண்ணித் துப்பாக்கியால் குறி வைத்தேன். ஆனால் தரிப்பை இழுப்பதற்குமுன் நானே ஒருவேளை தப்பாக நினைக்கலாம், என்று எண்ணிச் செடிக்கருகில் போய்ப்பார்க்கவும் அது ஒரு இந்தியக் குழந்தை என்று தெரிந்துகொண்டேன். செடி மறைவில் ஒளிந்துகொண்டதால் உயிர் தப்பியிருந்தது. அதை வெளியில் இழுத்தேன்—அது ஒருபெண் குழந்தை: சுமார் இரண்டு வயதிருக்கும்; நன்றாய்ப் பேசக் கூடத் தெரியவில்லை. அவளை என் குடிசைக்கு அழைத்துப் போனேன்; அதுமுதல் என்னிடத்தில் தான் இருக்கிறாள்; ஆதலால் அவள் எச்சாதியாள் என்று எனக்குச் செம்மையாய்த் தெரியாது. ஏனெனில் அவர்களெல்லோரும் ஒரே பாஷை பேசுகிறார்கள். ஸ்ட்ராபெர்ரியென்று அவளை நான் அழைப்பதற்குக் காரணம் என்னவென்றால்— அவளை நான் கண்டெடுத்தது ஒரு ஸ்ட்ரா பெர்ரிச் செடியின் கீழிருந்துதான்; அங்கேசுற்றிலும் அச்செடிகள் தான் முளைத்திருந்தன."

"பிறகு அவளை மணம் புரிந்தாய் போலும்?" என்றான் குழந்தை பார்ஸிவல்.

"அவளை மணம்புரிந்தேனா? இல்லையடா, குழந்தாய்! அவளை நான் மணம் புரியவேயில்லை. ஏறக் குறைய வயது எழுபதாகிவிட்ட கிழவனுக்குக் கலியாணமும் வேண்டுமோ? அவளை என் மனைவி என்றழைக்கிறார்கள்; ஏனெனில் அவளும் ஒரு மனைவியைப்போல் எனக்கு ஊழியம் செய்துவருகிறாள்; ஆயினும் அவளை என்னுடைய பெண்ணென்றழைப்பது நிஜத்தை ஒட்டி இருக்கும்; யாதெனில் நான் அவளுக்குத் தந்தையார் ஸ்தானத்தில் இருந்து வருகிறேன்."

"நல்லது, மலாச்சி, உனது மனைவியாக இருப்பதற்கு அவள் அதி பால்யமாச்சுதே என்று நிஜமாக நானும் கருதினேன்," என்றாள் எம்மா.

"நல்லது, அம்மணி! நீ நினைத்தது அவ்வளவு பிசகல்ல,"



என்றான் மலாச்சி; அவளது ஜாதிக்காரர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதுதான் எனது விருப்பமும்; ஆனால் முடியவில்லையே; விஷயம் யாதென்றால் நான் கேள்விப்படுகிறவரையில் தோல்வியடைந்த அக்கூட்டத்தார் வெகு தூரத்திற்கப்பாலிருந்து வந்திருக்க வேண்டும்: ஆனால் பேசுகிறபாஷை மட்டும் இதுதான்; இனிமேலும் சாத்தியப்படாதென்றே தோன்றுகிறது: ஏனெனில் சென்ற இருபது ஆண்டுகளாய் நடந்துவரும் மின்னற் சண்டைகளையும் சங்காரங்களையும் பார்த்தால் என்ன தேடினாலும் கூடப் பயன் படாது."

"ஆனால் அவள் ஜாதியாரைக் கண்டு பிடிக்க நீ யேன் முயல்கிறாய்?" என்றாள் மேரி.

"ஏனெனில் எனக்கு வரவரக் கிழத்தனம் மேலாடுகிறதல்லவா, அம்மணி? என் பிதாமகர்களைப்போய்ச் சேருங்காலம் நெருங்குகிறதல்லவா? நான் போய்ச் சேர்வதற்குள் இவளுக்குக் கலியாணத்தை நடத்தி வைக்காவிடின் இவ்வெளிய பேதை நிர்க்கதியாய் விடுவாளே! ஆனால் அவளைக்கட்டிக் கொடுத்துவிட்டால் நான் சகாயமற்றவனாக ஆய்விடுவேன்: அதற்காக என்ன செய்கிறது? என்னைப்போல ஒரு கிழவன் அதையெல்லாம் பார்த்துக்கொள்ளக்கட்டுமா?"

"அதைத்தான் பார்க்கவேண்டும்," என்றார் மிஸ்டர் காம்பெல்; "நீயும் எங்களுடன் வசித்துக் கொண்டிருந்தால் எனக்கு எவ்வளவோ திருப்தியாக இருக்கும்; உனக்கு உதவி வேண்டிய சமயத்தில் உதவி ஏற்படுத்துவதோடுகூட நிர்மானுஷ்யமான காட்டில் நீ செத்துக் கிடக்கும்படி வராது."

"ஸ்ட்ராபெர்ரிக்கும், மலாச்சி, எங்களுக்கு இயல்பு இருக்கும் வரையில் தங்குதற்கு இடத்தைப் பற்றியாவது ஆதரிப்போர்களைப் பற்றியாவது குறைவே இராது," என்றாள் மிஸிஸ் காம்பெல்; "உனக்கு ஏதாவது சம்பவித்தாலும் அவள் இங்கேயே இருந்து, வேண்டுமானால் அவளது

வாணுளை முழுவதும் இங்கேயே கழிப்பதில் எல்லோருக்கும்
திருப்தியாகவே யிருக்கும்''.

மலாச்சி அதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல் ஏதோ
மனதில் தியானம் செய்துகொண்டு இருந்தாற் போல் அமர்
ந்திருந்தான்.

மிஸிஸ் காம்பெல் விருந்துணவுப் பதார்த்தங்களைத்
தயாரிக்கச் சமயலறைக்குள் சென்றுள். பெண்கள் மார்ட்டி
னுடன் சுற்றுக் காரியங்களில் அமர்ந்திருந்தனர்.

ஸ்ட்ரா பெர்ரி மலாச்சியின் மனைவிஅன்று என்று வெ
ளிப்பட்டது முதல் மார்ட்டின் உள்ளம் பூரித்து ஆநந்தம்
தலைமட்டங்கொண்டிருந்தான். கைவேலையில் புத்திசெல்ல
வில்லை." அம்மணி, அச்சிறுமி அக்கிழவனது மனைவி என்று
நானும் நினைத்திருந்தமையால், இதுவரையில் எனது உள்
ளம்சங்கடப் பட்டுக்கொண்டிருந்தது. அவளது வயதையும்
ரூபத்தையும் பார்த்தால் யாருக்குத்தான் அது சம்மதமாக
இருக்கும் ?''

" மார்ட்டின், அவளைப்பார்த்த யாருக்குத்தான் அவள்
மேல் நேசம் உண்டாகாது ? '' என்றுள் மேரி; " அவளது
முகவடிவைப் பார். அந்த ஆழ்ந்த புன்சிரிப்பு ஒன்றே போ
துமே? சரி, மார்ட்டின், காரியமாகட்டும்: என்னமோ பிரமை
கொண்டவன் போல் நிற்கிருயே ? '' என்று நகைத்தாள்.

சற்று நேரத்திற்குள் சமயல் முடிந்தது. விருந்தருந்
தும் தருணத்தில், வீட்டிலிருப்பவர் எல்லோரும் சேர்ந்து
இருக்க மிஸ்டர் காம்பெல் பிரார்த்தனு கண்டத்திலிருந்து
அச்சமயத்திற்கேற்ற கட்டத்தைக்கொஞ்சம் வாசித்துவிட்டு
பிறகு ஆண்டவனது கருணையைப்பற்றிக் கொஞ்சம் பேசி
முடித்தார்.

மலாச்சி போன் இன்னும் தியான பாவசமாகவே இரு
ந்தமையால், எல்லோருக்கும் அது ஒரு விசித்திரமாகவே



இருந்தது.

" இதை எல்லாம் பார்த்தவுடன் எனக்குப் பழையகால
நினைப்பு வருகிறது. குழந்தையாயிருக்கும்போது சகோதரர்
சகோதரிகள் மத்தியில் நானும் வளர்ந்தவனல்லவா? எனது
தந்தையார் வெகு கடுமைக்காரர். தம் குழந்தைகள் சன்
மார்க்கத்தில் தயாராக வேண்டுமென்று மிகவும் முயன்றவர்.
அவருக்கு வீடுவாசல் பங்கு மனைகள் உண்டு. தமது நிலை
மைக்கேற்ற கடமைகளைச் செலுத்திக்கொண்டு தர்ம காரிய
ங்களை விட்டுக் கொடுக்காமல் குடித்தனம் நடத்தி வந்தார்.
ஆண்டவனது மேன்மை ஓங்கிக் காட்டும்படியாக இதே மாதி
ரிதான் பண்டிகைகளும் விருந்துகளும் நடைபெறும். அதை
எல்லாம் இப்போது எனதுள்ளம் நினைக்கலாயிற்று."

இதைக் கேட்டவுடன் யாவருக்கும் வியப்பு உண்டா
யிற்று. " மலாச்சி, அப்படியிருக்க நீ வேடனுக ஆய்விட்ட
தெப்படி ?"

" அம்மா, எனக்கும் பிறவிமுதல் காட்டில்தான் மனம்
நாடி இருந்தது. தந்தையருக்குச்சம்மதமில்லாமையால் அவ
ருள்ளவரையில் பல்லைக்கடித்துக்கொண்டு வீட்டிலிருந்தேன்.
அவரது காலம் முடிந்தவுடன்காட்டுக்கு வந்த நான் அன்று
முதல் இன்றுவரையில் வேட்டையாடிக் காலம்தள்ளுபவன்.
மத்தியில் மத்தியில் இங்கிலீஷ்க்காரருக்கும் இந்தியருக்கும்
நடந்துகொண்டிருந்த சண்டைகளில் நானும் போய்ச் சேரு
வேன். ஆனுல் தனிமையில் காட்டில் காலத்தைக் கழிப்பதில்
நான் ருசி கொண்டவன். சில சமயங்களில் மட்டும் தனிமை
வாழ்க்கை நல்லதா ? சேர்க்கை வாழ்க்கை நல்லதா ? என்று
எனக்குச் சந்தேகம்தோன்றுவதுண்டு.இந்தப்பையன்(ஜான்)
வந்து சேர்ந்தது முதல் என் மனது கொஞ்சம்கலங்க ஆரம்
பித்தது.இன்று நான் இந்தவிடத்தில் உங்களுடைய நடத்தை
யை எல்லாம் பார்க்கும்போது எனதுள்ளம்மிகவும் இளகிக்

கலங்கி இருக்கிறது.''

'' ஆனால் நீ தனிமையில் காட்டிலிருக்கும் போது ஆண்டவனைத் தொழுவதே கிடையாதோ ?''

'' அம்மணி, உண்டு. ஆனால் அது ஒரு தனி வழியாக இருக்கும். மிருகங்களைப் பிடிக்கப் பொறி வைத்துக் காட்டில். ஒரு மரத்தின்கிளைகளுக்குள் ஒளிந்து படுத்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்கையில், யதிருச்சையாக ஒரு இலையைக் கையிலெடுத்துப் பார்ப்பேன். அப்போது, ஆஹா ! இதை இவ்விசித்திரமாகப் படைத்தவர் ஆண்டவரல்லவா ! இம்மாதிரி ஒரே மாதிரியாக மனிதனால் சிருஷ்டிக்க முடியுமா?-என்று தோன்றும். வளரும் புல்லைப் பார்ப்பேன்.இதைச் சிருஷ்டி செய்தவருடைய காருண்யமல்லவோ காருண்யம் ! இதில்லாவிட்டால் காட்டு மிருகங்களுக்கு உணவு எப்படிக் கிடைக்கும் ? ஆண்டவனுக் கொப்பான கிருபாசமுத்திரமுமுண்டோ ? என்று தோன்றும். சந்திரனைப் பார்ப்பேன், சூரியனைப் பார்ப்பேன்: இவை சத்தியம் தவறாது புறப்பட்டு உலகத்தின் க்ஷேமத்திற்காக ஆகாயமார்க்கமாய்ச் சஞ்சரிப்பதைப் பார்க்கும்போது, பகவானுடைய ஞாபகம் வரும்.இருந்தபோதிலும், முறைப்படி தொழாமலிருப்பதை நினைத்தால் எனக்கு உள்ளத்தில் சில வேளையில் ஏதோ ஒரு குறை இருப்பதாகவே தோன்றும். என் தந்தையின் வீட்டில் நானிருந்த வயையில், நாயிற்றுக்கிழமை அன்றும், மற்றுமுள்ள விடுமுறை நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் நடந்த வைபவங்களில் நானும் கலந்துகொண்டாடினதுண்டு. அதை விட்டுவந்தது முதல் இது வரையில், அவையெல்லாம் கனவு கண்டாற் போலிருக்கின்றன. இப்போது இங்கு நடக்கும் திருநாள்களையும், பண்டிகைகளையும் பார்த்ததும் என் மனத்தின் குறை மிகுதிப்படுகிறது.''

''ஒவ்வொரு நாயறு தோறும் இங்கேயே ஸ்ட்ராபேர்ரியுடன் நீ வந்திருக்கலாமே. அப்படிச் செய்தால் ஜானும் வாரத்திற்கொரு நாளாகிலும் எங்களுடனிருப்பான்.எல்லாவற்றிற்கும் சவுகரியமாக இருக்குமே,'' என்றாள் மிஸிஸ்காம்பெல்.

''ஆண்டவன் அருளை·முன்னிட்டு அப்படியே செய்கிறேன், அம்மணி,'' என்றான் மலாச்சி.



இதற்குள் விருந்துண்ண எல்லாரும் உட்கார்ந்தார்கள். என்ன களிப்பு, என்ன ஆனந்தம்! நடுக்காட்டிலிருந்தாலும் அவர்களுக் கிருந்த உள்ளத்தின் மகிழ்ச்சி அரண்மனையில் விருந்துண்ணும் சுகவாசிகளுக்குக் கூட இருந்திருக்காது.

## அத்தியாயம்—26.

மறுநாட்காலையில் மலாச்சிபோன், ஸ்ட்ரா பேர்ரி, ஜான் இம்மூவரும் புறப்பட்டுத் தங்களுடைய வாசஸ்தலத்தை நோக்கி மேற்றிசையிற் சென்றார்கள். காப்டின் லிங்க்ளேரும் தோழனுமாகக் கோட்டைக்குத் திரும்பிப்போய் விட்டார்கள். இந்திய ஸ்திரீயின் கால் சிறிது குணப்பட்டிருந்தது. குடித்தனக்காரர்களும் அவரவருடைய அலுவலைச்செய்யத் தொடங்கினர். இந்த நீண்ட பனிக்கால ருதுவின் எஞ்சிய நாளில் நடந்த சில சம்பவங்களை நாம் இப்போது சொல்வோம்.

ஏறக்குறைய ஒவ்வொரு ஆதிவாரமும் மலாச்சியும் ஜானும் ஸ்ட்ரா பேர்ரியுடன் கூட வந்து போகத் தொடங்கினார்கள். அந்தக் கிழ வேட்டைக்காரனுக்கு வாவா மனிதர்களிடத்தில் ஒரு பற்று உண்டாய் விட்டது போலும். சில ஆதிவாரங்களில் வந்தபோது இன்னும் இரண்டு நாள் அதிகம் தங்கிப்போவதும் வழக்கமாயிருந்தது. மூன்று வாரங்களுக்குள் அந்த இந்தியஸ்திரீ முற்றிலும் குணமடைந்து ஸ்ட்ராபேர்ரி மூலமாய்த் தான் புறப்பட்டுப் போய் தன் கூட்டத்தாரைச் சேர விரும்பியிருப்பதாகச் சொன்னாள். இதற்குத் தடையொன்றுமிராததால் விடை கொடுக்கப்பட்டு அவளுக்கு

வழியிலருந்துவதற்கு வேண்டிய கட்டுச்சோறுடன் ஜனவரி மாதக் கடைசியில் பிரயாணம் புறப்பட்டாள்.

பிப்ரவரி மாதம் சென்று மார்ச்சுமாதமும் வந்தது. குளிர் இன்னுமிருந்தாலும் சூரியவெப்பம் வரவர மிகுதியாகவே காலஸ்திதி யவ்வளவு கடுமையாக இல்லை. ஏப்ரில் மாதம் நடுவில்தான் ஏரியிலுறைந்திருந்த பனி நிவர்த்தியாகிப்பொதுவாகப் பனி எங்கும் இளக ஆரம்பித்தது. ஆனால் ஆரம்பித்தவுடன் மிகவும் விரைவாக இருந்தமையால் வாய்க்காலும் பொங்கிப்போய், புல்தரை யெங்கும் ஜலம் எதிர்த்திருந்தது. ஆயினும் சில நாள்களுக்குள் எல்லாம் மாறிவிட்டன. இத்துணை மாதங்களாய்ப் பூமி யெங்கும் மூடிக்கொண்டிருந்த உறை பனி இப்போது முற்றிலும் காணமற் போய்விட்டது. பனி நாள் முழுவதும் ஓடிப்போயோ, அல்லது பாடாமலேயோ இருந்த பட்சிகள் இப்போது மறுபடியும் வீட்டைச் சுற்றிப் பறந்து பாடிக் கூத்தாட வாரம்பித்தன. கண்களுக்குக் குளிர்ச்சியைத்தரும் பசும்புல் தரையும் மறுபடியும் அவர்கள் பார்வைக்குத் தென்பட்டது. அது எங்குப் பார்த்தாலும் பூமி புன்னகையுடன் கொஞ்சி விளையாட ஆரம்பித்தது போலும். மேலும் பத்துத் தினம் சென்றவுடன் மரங்கள் தளிர்த்து, ஓரிரண்டு பெருங்காற்றடித்ததும் பெருமழை பெய்ய, வசந்த காலமும் வந்துதித்தது.

இம்மாறுதல்களைப் பார்க்கவே அக்குடித்தனக் காரர்களுக்கு மிகவும் ஆனந்த முண்டாயிற்று. பசுக்கள் மேய்ச்சலுக்குச் செல்லவாரம்பித்தன. எம்மாவும் மேரியும் முன் போலவே மாடு கறக்கப் போக வாரம்பித்தனர்—ஓநாய்களின் பயமும் நிவர்த்தியாயிற்று. படகை வாய்க்கால்களிற்றள்ளிக் கொண்டு போய்ப் பர்ஸிவலும் ஜானும் முன்போலவே மீன் பிடிக்கப்போனார்கள். முதல் போகம் விதைப்பதற்காக ஹென்



றியும், ஆல்பிரடும், ஜானும் பூமியைக் கொத்திநிரவிக்கொண்டிருந்தார்கள். மிஸ்டர் காம்பெல்லும் நாள்முழுவதும் தோட்டத்தில் வேலையாக விருந்தார். கோழிகள் அங்குமிங்கும் தத்திப்பறந்தோடுவதும் கொக்கரிப்பதுமாக விருந்து சீக்கிரம் யதேஷ்டமாக முட்டைகளை யிட்டுத்தந்தன. இப்போது வேட்டைக்குக் கொஞ்சம் ஒழிவுக்காலமாதலால் மலாச்சியும் ஸ்ட்ராபெர்ரியும் விடாது வந்து போய்க்கொண்டிருந்தனர்.

"ஓ அப்பா? இதெவ்வளவு ஆனந்தகரமாயிருக்கிறது!" என்று எம்மா மரப்பாலத்தின்மேல் நின்றுகொண்டு நீலவர்ணம் பூண்டு விசாலமாக எதிரில் பரவிக்கிடந்த ஏரியைப்பார்த்தபடியே சொன்னாள்; "இல்லையா, மேரி? இவ்வளவுமாதங்களாகக் கைகால் முடங்கினாற்போல நாம் கிடந்தோமே!"

"ஆமாம், எம்மா! உனக்கிப்போதிருக்கும் உற்சாகத்தைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை. நானே வேறு மனுஷியாக ஆய்விட்டதுபோல உணர்கிறேனே. போகட்டும்; பனிக்காலம் எவ்வளவுக் கெவ்வளவு நீண்டும் தொலையாமலிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு வசந்த காலத்தின் அருமையை இரட்டித்துப் பெருக்குகிறது."

"காப்டின் விங்க்ளேர் நம்மை வந்து இன்னும் பார்க்காதது எனக்கு அதிசயமாகத் தோன்றுகிறது; உனக்கும் அப்படித் தோன்றவில்லையா, மேரி?"

"முந்தியே வந்திருப்பாரென்று நானுமெதிர் பார்த்ததுண்டு," என்றாள் மேரி; "அவருக்கு அநுவ விடங்கொடுக்காததால் தான் என்று நான் நினைக்கிறேன்."

"அப்படியா? இப்போதுதான் மழை நின்றுவிட்டதே? விடை கிடைக்காதா என்ன? பனி மூடிக்கொண்டிருந்த காலத்தில் அவர் வாராமலிருந்ததற்குக் காரணமிருக்கிறது. அவருக்கு உடம்பு ஒன்று மில்லாமலிருக்க வேண்டுமே!"

"நானு மப்படியேதான் மனப்பூர்ணமாய் வேண்டு

கிறேன்," என்றாள் மேரி; "வா அம்மா, தங்கை, நாம் தாமதப் படுத்தக்கூடாது; கன்றுகள் பால் குடிக்கும் நேரமாய்விட்டபடியால் கத்துவது காதில் விழவில்லையா ? இன்னும் கொஞ்ச காலத்திற்குள் விசேஷமாகக் கன்றுகள் வரப் போகின்றன. ஆம்; பாலும் ஏராளமாகக் கிடைக்கும்; கடையவும் யதேஷ்டமாயிருக்கும். வெக்காளித்திருக்கையில் வேலை செய்ய எனக்குப்பிடிக்கும்".

காலையுண வருந்தியதும் எம்மா ஆல்ப்ரெட்டிடம் காப்டின்ஸிங்க்ளேர் இன்னும் வந்து சேராததைப் பற்றித் தனக்குள்ளகவலையையும், அவருக்குத்தேகசவுக்கியக்குறைவு ஏதேனும் நேர்ந்திருக்குமோ என்று தனக்கிருந்த பயத்தையும் தெரிவித்தனள். அவளது கோரிக்கையின்பேரில் ஆல்ப்ரெட் அன்று தினம் அந்தியில் கோட்டைக்கு ஒரு நடை போய்ச் சமாசாரங்களைப் பார்த்து வருவதாகச் சொன்னான்.

ஜான் மலாச்சி சொன்ன வார்த்தையைக் கெட்டியாகக் கைக்கொண்டு ஏறக்குறைய பிரதிதினமும் வாய்க்காலுக்குப் போய் ஒரு கூடை மீன் பிடித்துக்கொண்டு வந்து சேர்ந்தான். மாட்டிறைச்சி இருந்ததெல்லாம் தின்று ஒழிந்துவிட்டபடியால், இந்த மீனும் முட்டைகளும் மிகுதியாக உபயோகப்பட்டன; இல்லாவிடில் உப்பிட்ட கறிவாடல்தான் இவர்களுக்குக் கிடைத்திருக்கும்.

ஆல்ப்ரெட் மார்ட்டினையும் அழைத்துக்கொண்டு கோட்டையை நோக்கிப் புறப்பட்டான். அவன் மறுநாட்காலையில் திரும்பி வந்தபோது நிரம்பவும் சமாசாரங்களைக்கொண்டுவந்தான். எம்மா எண்ணினாற்போலவே காப்டின் ஸிங்க்ளேர் குதிரையிலிருந்து விழுந்து முழங்காலில் அடிபட்டுச் சிலநாள் படுக்கையோடு படுக்கையாய்க்கிடந்தமையால் வர முடியவில்லை. ஆயினும் இப்போது அவருக்கு நோவு தெளிந்து மனதில் உற்சாகம் மேலாடி இருந்ததுடன் ஒரு



பக்ஷத்துக்குள் முற்றிலும் செம்மையாய் விடுவாரென்று
வைத்தியரே வாக்குக்கொடுத்துவிட்டார்; அவர் இக்குடித்
தனத்தாரனைவரையும் விசாரித்ததாகச்சொல்லியனுப்பினார்.
கோட்டைத்தலைவரும் குசலப்பிரச்நங்களைக் கேட்டனுப்பிய
துடன், ஒரு வாரம் பத்துத்தினங்களுக்குள் தாம் மாண்ட்
ரீலுக்கு ஒருபடகையனுப்புவதாகவும், மிஸ்டர்காம்பெலுக்கு
அவ்விடத்தில் வாங்கவேண்டிய சாமான்கள் ஏதாவதிருந்
தால் அல்லது மனுஷியாளை யாராவது அனுப்பவேண்டியிரு
ந்தால் அப்படிச்செய்யலாமென்றும், படகுதிரும்பி வருகை
யில் வேண்டிய சாமான்களைக்கொண்டுவந்து விடுமென்றும்
சொல்லியனுப்பினார். க்யூபெக்கிலிருந்து சமாசாரம் தெரிய
வில்லையென்றும் ஆனால் இங்கிலாந்திலிருந்து வந்த கடிதங்க
ளையும் சமாசாரப்பத்திரிகைகளையும் எடுத்துக்கொண்டு ஒரு
தனித்தூதன் வருவானென்று ஒவ்வொரு தினமும் எதிர்
பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்றும், தாமே சீக்கிரத்தில்
வந்து விஜயம் செய்யப்போவதாயும் சொல்லியனுப்பினார்.

ஆல்ப்ரெடால் கொண்டுவரப்பட்ட சமாசாரம் இம்மா
திரியானதாகவிருந்தது; மேரி பக்கத்தில் நிற்கையில்எம்மா
காப்டின் ஸிங்கிளேரைப்பற்றி அனேக கேள்விகள் கேட்
டாள். ஆல்ப்ரெடும் இப்படி ஆவலுடன் கேள்விகேட்டுக்
குடைவதைப்பார்த்து நகைத்தான்.
கோட்டைத் தலைவரால் சொல்லியனுப்பப்பட்ட மாண்ட்ரீல்
பயண விஷயமாய்த் தர்க்கம் செய்தனர். மலாச்சிக் கிழ
வனிடம் விற்பனைசெய்யவேண்டிய தோல்மூட்டைகள் அநே
கம் இருந்தன; மார்ட்டினிடத்தில் ஐந்தும், ஆல்ப்ரெடினிடத்
தில் மூன்றும், ஹென்றியிடத்தில் இரண்டும் இருந்தன;
ஏனெனில், இதுவரையில் சொல்லப்படாவிடினும், யார் எந்த
மிருகங்களை வேட்டையாடிக்கொன்றார்களோ, அவைகளின்
தோல் அவரவர்களைச் சேர்ந்தவை. மலாச்சியின் சரக்குமூட்

டைகள் விலையுயர்ந்தவை; ஏனெனில் அவைகளில் அநேகமாக நீர்நாய் முதலியவற்றின் தோல்களிருந்தன. யாரை அவையுடன் அனுப்புவது என்பது அடுத்த கேள்வி. மலாச்சிக்குப் போவதில் இஷ்டமில்லை; மார்ட்டினையனுப்ப முடியவில்லை— மேலும் அவன் மாண்ட்ரீலுக்குப்போனால் ஏதாவது தண்டாவில் மாட்டிக்கொள்வான்: ஹென்றியும் ஆல்ப்ரெடுமோ வென்றால் தோல்களின் நோட்டம் ஒன்றுமறியாதவர்கள்; ஆனால் மலாச்சிக்கிழவனால் இதிலிருந்த சங்கடம் தீர்த்து வைக்கப்பட்டது. மலாச்சி தன்னுடைய தோல்களுக்கு மதிப்புத் திட்டத்தைப் போட்டு விட்டான். மற்றவர்களுடையவைகளுக்கும் மூட்டைகட்டுவதற்கு முன் அப்படியே ஒருவிலை மதிப்புப்போடுவதாகவும் சொன்னான்; ஆதலால் அந்த மதிப்புப்பிரகாரமாவது அல்லது சற்றேறக்குறையவாவது அவைகள் விலை போகாமற்போனால் அவைகளைத் திருப்பிக்கொண்டுவந்து விடலாம். மிஸ்டர் காம்பெல்லுக்கும் இந்தயோசனை திருப்தியாக இருந்தபடியால், இந்தப்பயணம் போய்வர ஹென்றி ஏவப்பட்டான். மிஸ்டர் காம்பெல் பண்ணைக்கு வேண்டிய சாமான்களின் ஜாப்தாவொன்று போட்டார்; மிஸிஸ் காம்பெல்லும் வீட்டிற்குவேண்டிய தனது ஜாப்தாவையும் சேர்த்தாள். இந்தப் பயணத்திற்காகத்தன்னை வரிக்காததைப்பற்றி மார்ட்டினுக்குக் கொஞ்சங்கூட மனத்தாங்கலே இல்லை. அவர்களெல்லாரும் எண்ணியதுபோல இல்லாமல் ஸ்ட்ராபேர்ரி மலாச்சியின் மனையாளல்லளென்று மலாசியேசொல்லத்தெரியவந்ததுமுதல், மார்ட்டின் ஸதாகாலமும் அவளைச் சுற்றிக் கொண்டே இருந்தான். அவளுக்குச் சில இங்கிலீஷ்ச்சொற்கள் பேசவும்வந்து, அவள்பேரில் எல்லாரும்பிராணனாக இருந்தார்கள்.

மிஸ்டர் காம்பெல் இனி மலாச்சியவ்விடம் விட்டுப் போவதில் அவ்வளவு ஆவல் கொண்டவனாக இல்லையென்று



அறிந்துகொண்டவுடன், அவனதுநிலங்களை அவனுக்கே
திருப்பிக்கொடுத்து விடுவதுதான் தர்மம் என்றுகருதி அப்
படியே சொன்னார். ஆனால்மலாச்சி திருப்பி எடுத்துக்கொள்
வதில் சம்மதப்படவில்லை. இன்னும்சற்று நெருங்கி வந்து
அருகாமையில் தன்குடிசையை ஒருகால் கட்டிக்கொள்ளுவ
தில் ஆட்சேபம்இல்லை. ஆனால் நிலங்கள் தனக்கவசியமில்லை;
இப்போது அதுஅது இருந்தாற்போலவே இருக்கட்டுமென்று
சொன்னான்; இப்படிச்சொல்லும்போது மிஸ்டர் காம்பெல்
லுக்கு மறுபடியும் இதுவிஷயமாகப்பேசுவதில் பிரியமில்லை.
இப்படி இருக்கையில் தன்குடிசையைப்பெயர்த்து அரு
காமையில் கட்டிக்கொள்வேனென்று சொன்னபடி சிலதினங்
கட்குள்ளாகவே மலாச்சி, ஸ்ட்ராபேர்ரி, ஜான், இம்மூவர்
களும் அவன் வீட்டுச்சாமான்களைக் கட்டிக்கொணர்ந்து,
மிஸ்டர் காம்பெல்லின் புல்தரையின் மேற்குஎல்லையோரமாக
வீட்டிற்குத் தெரியும்படியாகவே ஒரு குச்சுங்கட்டப்பெற்
றது. இதுமிஸிஸ் காம்பெல்லுக்கு மிகவும்திருப்திகரமாகவே
யிருந்தது. ஏனெனில் ஜான் இனிஎப்போதும் அவர்கட்கரு
கிலேஇருப்பான். உள்ளபடியே அவன் தூங்குவதற்குக்
குடிசையைவிட்டுத் தனதுவீட்டிற்குவந்து சகோதரர்களு
டன்தூங்கினான். பகலில் பெரும்பாலும் அவன்குடிசையிலா
வது அல்லது கிழவேட்டைக்காரனுடனாவது காலத்தைக்
கழித்துவந்தான். ஆனாலிந்தப்புதியஏற்பாட்டால் அவர்களும்
குடித்தனக்காரருடைய குடும்பத்தோடுகுடும்பமாகச் சேர்ந்
தவர்கள் ஆய்விட்டார்கள்போலும். ஒருநாள்கூடத்தப்பாமல்
ஸ்ட்ராபேர்ரி வீட்டிற்குவந்து—தன்னாலியன்ற காரியத்தைச்
செய்துவிட்டு, புதியபுதியவிஷயங்களையும் கற்றுக்கொண்டு
போவது வழக்கமாயிற்று.

கோட்டையிலிருந்து சமாசாரம்வந்தபிறகு ஓரிரண்டு
நாள்களுக்கெல்லாம் ஓர் அந்தியில் மிஸிஸ் காம்பெல் நீர்

நாயின் அறிவைப்பற்றி விசேஷமாகச்சொல்லக்கேட்டிருந்தமையால் அதன்வளமையைப்பற்றிச் சிலகேள்விகள் மலாச்சியைக்கேட்டாள்.

"நல்லது! அம்மா!' என்றான்மலாச்சி; "உள்ளபடியே அதுவெகு புத்திகூர்மையுள்ள பிராணிதான்; அவற்றைச்சளையில்லாமல் உற்றுப்பார்த்துக்கொண்டே இருப்பேனென்று நானே ஒப்புக்கொள்ளுகிறேன். வேனிற்காலத்தில் அவைகளின் விசித்திரமான செய்கைகளைக்கண்டு மலைத்துப்போய் நானேவந்தகாரியம் யாதென்பதைமறந்து விடுவேன். ஒரு பெரியவாய்க்காலைக்குறுக்கேஅடைத்துஒருஏரியாகத்தேக்குவதற்காக அவை அணைக்கரையைக்கட்டும் விதத்தைப்பார்த்தால் தேர்ந்தஎஞ்சினீர்களே வெட்கித்தலைகுனியவேண்டும்.

"அது உண்மைதான்" என்றான் மார்ட்டின். "நான் ஒருதடவை ஒரு வாய்க்காற் கரையில் ஒரு செடி மறைவில் படுத்துக்கொண்டிருந்தபோது அவை ஒரு பெரிய ஆலோசனைச் சபையைக் கூட்டி, அவற்றின் யோக்கியதைக்குத் தகுந்த பிரகாரம் வெகு ஊக்கத்துடன் விவாதம் செய்துகொண்டிருந்ததைக் கண்டேன். நமக்குள் இருக்கிறது போலவே அவ்வளவு திறமான பாஷை யவைகளுக்கு மிருக்குமென்று நான் உண்மையில் எண்ணுகிறேன். அச் சபையில் வயது சென்ற கிழங்களே பேசின, சிறியவைகளோ வென்றால் செவிகொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தன".

"அது உண்மையே," என்றான் மலாச்சி, "நானும் ஒரு சமயம் அவை மந்திராலோசனைச் சபையாகக்கூடி யிருந்ததைக் கண்டேன். முடிந்த பிறகு அவையெல்லாம் வேலைத்தலத்திற்குப் போய்விட்டன. அப்போது அவைகள் ஒரு வாய்க்காலுக்கு அணை போட்டுத் தங்களுக்கு வாசம் செய்யக் குடிசைகளைக் கட்டிக்கொண்டிருந்தன,"

"அவைகள் என்ன செய்தன?" என்றாள் மிஸிஸ்காம்பெல்.



"ஏனம்மா! கிறிஸ்தவர்கள் என்னசெய்திருப்பார்களோ
அவை யெல்லாம் செய்தன. தங்களைப்போலவே நீர் நாய்க
ளுக்கும் ஆத்மா உண்டென்று இந்தியர்கள் நம்புகிறார்கள்.
அறிவென்பது ஆத்மாவுண்டென்பதற்கு ஸூசகமானால்
இந்தியர்கள் சொல்லுவதும் சரிதான். முதல்முதல் அவை
யென்ன செய்தனவென்றால் திடீரென்று ஏதாவது அபாயம்
நெருங்கும்பட்சத்தில் உடனே அறிக்கை செய்வதற்காகக்
காவல்களை நியமித்தன; ஏனெனில் யாராவது அவைகட்கரு
கில் நெருங்கிச்சென்றால் இக்காவலாளிகள் உடனேசமிக்கை
செய்துவிடும்; உடனே அவைகள் தண்ணீருக்குள் மூழ்கி
விடும்; அபாயம் நிவர்த்தியாகும் வரையில் வெளியில் தலை
காட்டா."

"இப்படிச்செய்யும் அநேக மிருகங்களும் பறவைகளும்
கூட விருக்கின்றன," என்றார் மிஸ்டர் காம்பெல்; "பெரும்
பாலும் கூட்டங்களாயும் மந்தை, மந்தையாகவும் திரியும்
வகைகள் அப்படிப்பட்டவை."

"அது உண்மைதான், ஐயா!" என்றான் மார்ட்டின்.

"நல்லது, அம்மா! மேலே போவோம்; தங்களின் அனு
வனுக் குரித்தான ஒருஸ்தலத்தை அமர்த்திக்கொள்கின்றன;
அவைகட்கு வேண்டியதென்ன வென்றால் ஒரு மேட்டுத்
தரையில் ஓடும் வாய்க்கால்: அணையைப்போட்டவுடன் தண்
ணீர் தேக்கங்கண்டு மேலெதிர்ப்பு எதிர்த்து வாய்க்கால்
இருபுறமும் கரைபுரண்டு, அநேகஅடிகள் விஸ்தீர்ணம்பரவி
விடவேண்டும்; இப்படிப்பட்ட ஒரு ஸ்தலத்தைக் கண்ட
வுடன் வேலை செய்ய ஆரம்பிக்கின்றன."

"ஒருகால் இதைக்கண்டு பிடிப்பதுதான் அவைகளின்
அலுவல்களுக்குள் யுத்திமிகுதியாக வேண்டிய அலுவலோ
என்னவோ; ஏனெனில் இதைக்கண்டுபிடிக்க நீர் நாய்களு
க்குச் சாமர்த்தியம் கொஞ்சம் வேண்டியிருக்கும். அவை

களுக்கு வேண்டிய குட்டையில் தேவையான விசாலமும் ஆழமும் உள்ள ஜலத்தைத் நிர்ணயிப்பதற்கு லெவ லெடுத்தாற்போல் வெகு நுட்பமான கண்ணோட்ட மிருக்கவேண்டும். அவைகளுக்கமைந்துள்ள பகுத்தறியும் சக்தியுள் இதுதான் வெகு சிறந்ததாக விருக்கலாமோ?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"அதுதான், ஐயா! நானும் அநேகந்தடவை அப்படியேதான் எண்ணினதுண்டு," என்றான் மலாச்சி; "அதுவும் அவைகள் ஆயுதங்களைக் கொண்டுபோகும் வழியை யல்லவோ பார்க்கவேண்டும்: ஒரு தச்சனுடைய ஆயுதப்பெட்டியிற்கூட அவ்வளவு இரா. மரங்களை வெட்டித்தள்ள அவைகளின் முன்னங்கால்களே நம் கைகளைப் போலுதவுகின்றன. அவைகளின் வால்கள் சிறிய கை வண்டிகளாகவும் உதவுகின்றன.

"மலாச்சி, தயவு செய்து மேலே சொல்லு," என்றாள் மேரி; "எனக்குக் கேட்க மிகவும், ஆசையாயிருக்கிறது."

"நல்லது அம்மணி! இவைகள் சிறிய பிராணிகளாக விருந்தாலும் நானூறு ஐந்நூறு தப்படிகள் நீளமுள்ளதும், எழெட்டடி அகலமும், சில விடங்களில் இருபதடி உயரமுமுள்ள கரையைப்போடுவதை நான் நேரிற் பார்த்திருக்கிறேன்; இவைகளை ஒரே ருதுவில் செய்திருக்கின்றன—ஒருகால் ஐந்தாறு மாதங்களின் வேலையாக இருக்கலாம்."

"நீ கணக்கிட்டவரை அவைகளில் எத்தனை வேலையிலமர்ந்திருக்கும்?" என்றான் ஹென்றி.

"ஒருகால் நூறிருக்கலாம்; அதைவிட ஜாஸ்தியிருக்காது என்று தான் சொல்லவேண்டும்."

"நல்லது, மலாச்சி! ஆனால் அவை இந்தக்கரை கட்டும் விதம் யாது?" என்றாள் எம்மா.

"ஆ! அதில் தான், அம்மணி! அவை தங்களுக்கு



அறிவு எவ்வளவு இருக்கிறது என்பதைக் காட்டுகின்றன. அவை தங்களின் பெரிய முன் பற்களோடு பெரிய மரங்களை அறுத்துத் தள்ளுவதைப் பார்த்திருக்கிறேன். அவை யெல்லாம் சேர்ந்து முனைந்தாற்கூட அந்த மரங்களைத் தூக்கமுடியாது. ஆதலின் வாய்க்காலோரத்திலுள்ள மரங்களையே பொறுக்குகின்றன. மேலும் மரங்கள் சாய்ந்திருக்கும் திசையைக்கொண்டு, அறுத்துத்தள்ளினால் எவைகள் வாய்க்காலுக்குக் குறுக்காக விழும் என்பதையும் முன்பாகவே யோசித்துக் கொள்ளுகின்றன. அப்படியில்லாவிட்டால் அவற்றை யறுத்துத் தள்ளா. அவைகளை வெட்டிக்கொண்டிருக்கும்போது, விழும் தருணத்தில், காற்று மாறி விழுவதற்குப் பிரதிகூலமாக அடித்தால், காற்றுத் திரும்பி தங்களுக்கு உதவியாக அடிக்கும்வரையில் வெட்டுவதை நிறுத்திவிடும். மரங்கள் விழுந்தானவுடன் கிளைகளை அறுத்துத்தள்ளிவிட்டு மரங்களை வாய்க்காலில் தெப்பம்போட்டு அணைபோட வேண்டிய இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. அவைகளை ஒன்றின்மேலொன்றாகக் குறுக்கே வைத்தவுடன் ஜலம் வரவர மேலே கிளம்பிவிடுகிறபடியால் மரங்களொன்றின்மேலொன்றாக அடுக்கி வைக்கப்படுகின்றன. ஆனால் அதற்குமுன்னால் கீழடுக்கு மரங்களை வைத்தானவுடன் அந்தப்பிராணிகள் நீண்ட புல்லையும் களிமண்ணையும் தங்களின் தட்டையான வால்களின்மீ தேற்றி அணைக்கரைக்கு எடுத்து வந்து, அடுக்கியிருக்கும் மரங்களினிடையிடையே திணித்து ஒரு பலமான சுவற்றைப்போலாக்கிவிடுகின்றன. பிறகு ஒரு துளி ஜலமும் வெளியே பொசியாது."

"ஆம்," என்றான் மார்ட்டின்; "இரவு நேரத்தில் அவைகள் வேலை செய்யும்போது வால்களை அடித்துக்கொண்டும் வீசிக்கொண்டும் உண்டாக்கும்சப்தம் என் காதில் விழும்போது, அவைகளில் நூறு வேலை செய்யும்போது மனிதர்க

ளில் ஐம்பதுபேர்கள் வேலை செய்வதுபோல் தோன்றும். ஆனால், அஹோராத்ரம் வேலைசெய்தும் அணைக் கரைப் போட்டு முடிந்து வேலை செம்மைப்படும் வரையில் அவை களைத்து ஓய்வதில்லை."

"ஆனாலந்த அணைக் கரை கட்டுவது வீடுகள் கட்டுவதற்குப் பூர்வாங்கம்தானே, அல்லவா?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"வேறொன்றுமில்லை, அம்மா! வேலையின் எஞ்சியபாகமும் இதைப்போலவேதான் வியக்கத்தக்கதாயிருக்கும்."

"சரி, படுக்கப்போகுங்காலம் வந்துவிட்டது; மலாச்சியின் மிச்சக்கதையை மற்றொரு அந்திவரையில் விட்டுவைப்போம்," என்று மிஸ்டர் காம்பெல் சொல்லவே, எல்லோரும் படுக்கப்போனார்கள்.

## அத்தியாயம். 27.

இரண்டு மூன்று நாள்கள் வரையில் தமக்கு வேண்டிய சாமான்களைக் குறித்து மிஸ்டர் காம்பெல் ஜாப்தா செய்து கொண்டிருந்தார்.

ஒரு சிறிய ஆட்டுமந்தையையும், ஓரிரண்டு காலவே மட்டங்களையும், அந்நாட்டில் உபயோகிக்கப்படும் வண்டிகளைப்போல இரண்டொரு சிறுவண்டிகளையும் செய்வதாகத் தீர்மானித்தார். இதனிடையில் ஆல்ப்ரெடும் மார்ட்டினும் ஹென்றியும் சேர்ந்து, மரவேர்க் கட்டைகளுக் கிடையிடையே மண்ணைக்கொத்திகிளறி விதைவிதைத்தனர். சுமார் பன்னிரண்டு ஏகர் நிலம் திருத்தப் பட்டிருந்தது. அதில் ஒருபாதியில் சில்லரைதானியங்களும், மற்றொருபாதியில் கோதுமையும் விதைக்கப்பட்டன; வாய்க்காலுக் கக்கரையில் மலாச்சியினால் திருத்தப்பெற்று வேலியடைக்கப் பெற்றிருந்த துண்டு நிலத்தில் இந்தியன்கார்ன் என்று சொல்லப்படுகிற சோளம் விதைக்கப்பட்டது. விதை விதைத்தானவுடன் சுமார் அரை



மைல் தூரத்திற்கப்பால் ஒரு சதுப்புநிலத்தில் முளைத்திருந்த வெள்ளைத் தேவதாருவை ஏற்கனவே படைவீரர்கள் கொணர்ந்து சேர்த்திருந்தமையால் அம்மலாருகளைக்கிழித்து அதன்பிளாச்சைக்கொண்டு திருத்தியிருந்த நிலத்தைச்சுற்றி வேலிகட்டுவதில் எல்லோரும் முயன்றார்கள். வாய்க்காலுக்கு வீட்டுப்புறக்கடையிலிருந்த புல்தரையானது சீக்கிரபோகம் புல்லறுவடை செய்வதற்காக ஒதுக்கிவைக்கப்பட்டது. தங்களுக்கு வேலை கொஞ்சம் ஒழிவு கொடுத்தவுடன், மாடுகளை மேய்ப்பதற்காகக்காட்டில் ஓட்டிவிட்டு, வாய்க்காலுக்கு அக்கரையில் மலாச்சிக்கு சொந்தமாயிருந்த நிலத்திலிருந்தும் புல்லறுவடை செய்யலாமென்று உத்தேசித்திருந்தார்கள்; ஆனாலந்தப் புல்தரைக்கு வேலியடைப்பது அவசியமாயிருந்தமையால் விதை தெளித்தானவுடன் இந்த அலுவலில் எல்லோரும் அமர்ந்தார்கள்.

மார்ட்டின் ஆல்ப்ரெடைப் பார்த்து, "கர்னல் துரையவர்கள் இங்கு வரும்போது வரும் வேனிற் காலத்தில் சில போர்வீரர்களை அனுப்பும்படி நாம்வேண்டிக்கொள்ள வேண்டும்: ஏனெனில் வேலியடைப்பதற்கும் புல்லறுவடை செய்வதற்கும் அவர்கள் அவசியம் நமக்குத்தேவையாயிருப்பார்கள். நமது வேனிற்காலம் நீண்டதாக இல்லாததுடன் நமக்குச் செய்ய வேண்டியவையும் மிகுதியாகவே இருக்கின்றன," என்றான்.

"என்னுடைய தந்தையார் அந்த வேண்டுகோளைச் செய்யப்போவதாகத்தான் நான் எண்ணுகிறேன்," என்றான் ஆல்ப்ரெட்.

"ஆம்; ஐயா! அவரே வந்து ஒரு குடித்தனக்காரருக்கு இந்தப் புல்தரைத் துண்டு எவ்வளவு உதவியாக விருக்கின்றது என்று நேரில் தெரிந்து கொள்வார்; கோட்டையில் இப்போது காய்ந்த புல்லைத் தேடிவைக்க வேண்டியதுபோ

விராமல், நமக்கு இங்கே காய்ந்தபுல் மிகுதியாய் இருப்பதுடன், யதேஷ்டமாக மேய்ச்சலும் அகப்படுகிறது. சரி; இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால் நமக்கு ஆடுகள் வந்து சேரப்போவதாகத் தெரிகிறது.''

"உண்மை தான்; அவைகளுக்காகக் குளிர் நாளுக்குக் கொட்டகை போடவேண்டும்.''

"சந்தேகமென்ன? ஓநாய்களுக்கு ஆட்டிறைச்சி யென்றால் வெகு ஆசையாயிற்றே; ஆயினும் எல்லாவற்றையும் பார்த்தால் அவைகளுக்குப் பன்றியின்மேல் தான் மிகவும் பிடிமானம். புல்தரை வெளியைச்சுற்றி வேலியடைத்து விட்டால் நலமாயிருக்குமே. ஆனால் கோட்டையிலிருந்து ஆள் உதவி வாராவிட்டால் இது இந்த வருஷத்திற்குள் சாத்தியப்படமாட்டாது.''

பசுக்களைபோவென்றால் வேனிற்காலத்தில்காட்டிற்குள் மேயும்படி யதேச்சையாக அடித்து விடலாம். அப்போது அபாயம் ஒன்றும் நேரிடாது. அப்போது மாடுகள் செனையாக விருந்தமையால், காலத்தில் கன்றுகள் ஈன்றவுடன் ஒரு சிறிய மந்தை சேர்ந்துவிடும். எட்டுப் பசுக்கள், எட்டுக் கன்றுகள்! அஹா, பேஷ்! இதை எண்ண மார்ட்டினுக்கு உண்டான சந்தோஷத்தை என்ன வென்கிறது! ஆனால், ஆல்ப்ரெடுக்கோ, உள்ளமெல்லாம் தன் கப்பலையும் அதில் உத்தியோகத்தைப் பற்றியுமே.

இந்தச் சம்பாஷணை நடந்து ஓயவே சென்ற இரவில் செய்துவிட்ட நீர்நாய்களைப்பற்றிய வரலாற்றைத்தொடர்ந்து சொல்லும்படி மலாச்சி வேண்டப்பட்டான்.

"நல்லது, அம்மா! நான்அன்றிரவு சொல்லிய பிரகாரம், அவைகள் ஆற்றை யணைபோட்டுத் தேக்கி ஏரியை யுண்டாக்



கிக் கொண்டவுடன் வீடுகட்ட ஆரம்பிக்கின்றன; அவைகள் ஜலத்துக் குள்ளாக எப்படி வேலைசெய்து கால்களை நாட்டுகின்றன என்பது எனக்கு விளங்கவேயில்லை; அதெப்படியோ ஆறு கால்களை பூமியில் நாட்டி. அதுவும் ஊர்ஜிதமாகவன்றி பிறகு வீட்டைக் கட்டுகின்றன—ஆச்சரியமாகத் தானிருக்கிறது. அது ஒரு பெரிய அடுப்பைப்போலமைக்கப்படுகிறது. களி மண்ணையும் வண்டல் மண்ணையும் சேர்த்து, தூசி, துரும்பு, சிறு கிளைகள், செடிகள் பூண்டுகள் இவையோடு கலந்து பிசைந்து கட்டப்படுகிறது. ஒன்றின் மேலொன்றாய் மூன்று அடுக்கு அறைகளிருக்கின்றன. ஆதலால் திடீரென்று வெள்ளம் பெருகியாவது, அல்லது பனி உருகியாவது ஜலம் ஏறிவிட்டால் மேலறைகளில் போய் வசித்துக்கொண்டு நனையாமல் பார்த்துக் கொள்கின்றன. ஒவ்வொரு நாய்க்கும் ஒரு சிறிய அறை இருக்கிறது. அதற்குள் நுழையும் வழி ஜலத்திற்குக்கீழே யிருப்பதால் நுழைவதற்காக அவை கீழே முழுகிவிட்டால் அவைகளுக்குப் பிறகு ஒரு தீங்கும் செய்ய முடியாது.''

"என்ன ஆச்சரியம்! அவைகளுக்கு ஜீவாதாரம்யாது?''

"அம்மா! நாம் ஆஸ்புவுட் (Asp·wood) என்று சொல்லுகிற மரத்தின் பட்டைதான். அதோர்வகைப் பசலையாம். பனிக்காலத்தில் எங்கும் மாதக் கணக்காக உறைந்துபோய்க் கிடக்குமென்று, இலை உதிர் காலத்திலேயே முந்தி அந்த மிகுதியாகச் சேகரம் செய்து வைத்துக் கொள்கின்றன.''

"சரி, மலாச்சி! பனிக்காலத்தில் நீர் நாயை வேட்டையாடப் போகும்போது நீ என்ன செய்வாய் என்பதை மட்டும் சொல்லு.''

"நாங்களொரு நாளும் நீர் நாயை மட்டும் வேட்டையாடுவதென்று போவதில்லை, நாங்கள் நீர் நாய் ஏரிகளுக்குப் போய், நீர்நாய்கள், ஆட்டர்கள், மார்ட்டின்கள், மிங்க்ஸ்கள்,

காட்டுப் பூனைகள், குள்ளநரிகள்—இவைகள் எவ்வகைப்பட்டாலும் பிடிப்பதற்காகப் பெரிய பிறைகளில் சிலவும்; சிறிய பிறைகளில் சிலவும் வைக்கின்றோம். நாங்களும் மத்தியில் குடிசை கட்டிக்கொண்டு, சுவற்றில் எங்கும் பிறைகளை வைத்து விட்டு ஒவ்வொரு நாளும் அவற்றைச் சோதித்து வருவோம்; நன்றாய் இருக்கும் இறைச்சியை நாங்கள் ஆகாரம் செய்து கொண்டு, பிடிக்கப்பட்ட பிராணிகளின் தோல்களை உரித்துக் கொண்டு காலம் கழிக்கிறோம்."

இதின் இடையில் வேட்டைக் காரனுடைய வாழ்வு சுகமா, அல்லது குடித்தனக் காரனுடைய வாழ்வு சுகமா, வென்று தர்க்கம் உண்டாகவே, கடைசியாக வீடுவாசல் பெண்டாட்டி முதலியவைகளில் மனம் செல்லாதவனுக்கு, யதேச்சையான வாழ்வாகிய வேட்டைக் காரனுடைய வாழ்வே மேலாகக் கருதப்பட்டது.

"ஆனால் வேனிற்கால முழுவதும் நீஎன்னசெய்கிறாய்?"

"ஏன், அம்மா! எங்கள் துப்பாக்கிகளை யெடுத்துக் கொள்கிறோம்; மான்கள், காட்டுப் பூனைகள், அணில், காடி இன்னும் அநேக பிராணிகள் இல்லையோ? அவைகளைப் பார்க்கிறோம்; சிலவேளை தேன் எடுப்பதற்காகத் தேனீக்களைத் தொடர்ந்து செல்கிறோம்."

"மலாச்சி! தேன் எப்படி எடுக்கிறாய்? தயை செய்து சொல்லு"

"ஏன், அம்மா! தேன் ஈக்கள் கிழ மரங்களில் பொந்துகளில் இருக்குமே. காட்டில் அவைகளைக் கண்டுபிடிப்பது சிரமம் தான்—ஏனெனில் அவைகள் புகும் ஓட்டையானது மிகச் சிறியதாயும், சில இடங்களிலெட்டாத உயரத்திலும் இருக்கும்; ஆயினும் கண்ணுக்குத் தென்பட்டு விட்டால் எப்படியோ சமாளித்து விடுகிறோம்".

"மலாச்சி! இன்னும் சற்று விவரித்துச் சொல்."



"தேனைக் குடிப்பதற்காக புஷ்பங்களின்மேல் அவைகள் அமர்ந்ததும் பிடிக்கின்றோம்; உடனே விட்டுவிடுகின்றோம்; கையை விட்டுத் தப்பிப்பறந்து போனதும் தேன்ஈ நேராகத் தன்னுடைய அடையிருக்கும் இடத்தைநோக்கிப்பறக்கிறது. அது கண்ணுக்கு மறையும் வரையில் பார்த்திருந்து, பிறகு மற்றொரு ஈயைப் பிடித்து விட்டு, இம்மாதிரி அவை ஒரு மரத்தில் போய் அமருகிறவரையில் செய்கிறோம். இப்போது அடையும் தேனும் இருக்கும் மரமும் தெரிந்துபோய் விடுகிறபடியால், அம்மரத்தை வெட்டித் தள்ளுகிறோம்."

"என்ன யுக்தி!" என்றான் பர்சிவல்.

"ஆனால் ஒரு ஈ வெகுதூரம் போகும் வரையில் பார்த்திருப்பதற்குக் கண் வெகு கூர்மையானதாக இருக்க வேண்டும். சில வேடர்கள் ஈக்களைப் பிடித்து அவைகளுக்குச் சாராயத்தில் சக்கரையைக் கலந்து தருகிறார்கள். இதனால் போதையேறி, அவைகள் வேகமாய்ப் பறக்க முடியாததால், அவைகளுடன் கூட ஓடித் தேனடையை மிகவும் எளிதாய்க் கண்டு பிடிக்கிறார்கள்.

"ஸபாஷ்!" என்று பர்ஸிவல் கூவினான்; "ஆனால், மார்ட்டின், நீ எவ்விதம் காடிகளைக் கொல்லுகிறாய்?"

"ஏன், மாஸ்டர் பர்ஸிவல்! நம்முடைய துப்பாக்கியைக் கொண்டுதான்; அதிலென்ன சந்தேகம்? அவைகளை வெகு இலகுவாகக் கொல்லும் வழி யாதெனில் அவைகள் தங்களின் பொந்துக்களில் இருக்கும் போது தான்."

"அவைகளை வெளியில் வரவழைக்கும் வழி என்ன?"

"ஏன், நமது கோடரிகளால் மரங்களை மொத்துகிறோம். அவ்வளவுதான்; உடனே அவைகள் என்ன விசேஷமென்று பார்க்க வெளியில் வந்துவிடும்; அவைகளின் தலைகளை வெளியே நீட்டினவுடன் நாங்களவைகளைச் சுடுகிறோம்."

"நீ சொல்வது உண்மை தானா?"

"ஆம், அம்மா! முற்றிலும் உண்மை," என்றான் வேட்டைக்காரன். "இப்பக்கத்தில் இருக்கும் கரடிகள் அவ்வளவு கொடியவையல்ல. மேன் என்னும் இடத்தில் மிகவும் கொடியவைகளைப் பார்த்திருக்கிறோம். இந்தியர்கள் ஓர் ஆற்றில் படகிலேறிக்கொண்டு கரடிகள் குறுக்கில் நீந்திப்போகும் போது இலக்குப் பார்த்துக்கொண்டிருந்து ஒரே நாளில் ஆறுஏழுகரடிகளைக்கொல்வதை நான் நேரில் பார்த்ததுண்டு.'

"ஆயினும் கரடிகளைக் கோபமூட்டிவிட்டால் அவை அப்போது ஒரு கை பார்த்தே விடும்," என்றான் மார்ட்டின்; "இலையுதிர் காலத்தில் அவை யிங்கேயே வரலாமாதலால், அவைகளைப் பற்றி நிரம்ப அசட்டை செய்யாமலிருப்பதே மேல்."

"அந்த விஷயத்தை பற்றிப் பயப்பட வேண்டாம்," என்றாள் எம்மா; "ஏனெனில் மலாச்சி அவைகளைப் பற்றி யவ்வளவு பயங்கரமாகவே சொல்லவில்லை. ஆயினும், மார்ட்டின், நாமவைகளை யெதிர் பார்க்கலாமென்று சொல்லுகிறாயே—ஏன் அப்படி?"

"ஏனென்றால், அம்மணி! சோளமென்றால் அவைகளுக்குப்பிராணன் போலும். நாமும் ஒரு பட்டத்திலதைவிதைத்திருப்பதால் அதன்ருசி கண்டு அவை இங்கே வரலாம்"

"சரி! அவை அப்படியே வந்தாலும் என்னிடம் துப்பாக்கி இருக்கிறது—பார்த்துக் கொள்வோம்," என்று எம்மா நகைப்புடன் சொன்னாள்; "அதெப்படி யிருந்தாலும் நான் இங்கே வந்த புதிதில் அவையிடம் கிலி கொண்டிருந்தாற்போல் இப்போது அவ்வளவு இல்லை."

"அம்மணி! அவைகளைக்கொன்று விடலாமென்று நிச்சயமிருந்தாலொழியச் சுடாதே!" என்றான் மலாச்சி "அரைகுறையாக அடிபட்டால் அப்போது அப்பிராணிகள் மிகவும் வெறி கொண்டு விடும்."



"அந்தப் பயம் வேண்டாம், மலாச்சி. என்னை அது எதிர்க்க வந்தாலொழிய நான் சுடவில்லை—அதுவும் தப்ப வழி இல்லை என்றால் தான். போகட்டும், ஏன் பலாச்சி, நீ எப்போதாகிலும் கரடியின் கட்டில் அகப்பட்டுக் கொண்டது உண்டோ?"

"அதுவா? கட்டப்பட்டதே இல்லை. ஆயினும் ஒரு தடவை வகையாக ஒன்றினிடம் மாட்டிக் கொண்டு விட்டேன். போதும், அம்மா! இனி அதுபோல் எனக்கு நேரிட வேண்டாம்."

"ஓ! அதெப்போ? எங்களுக்குச் சொல்லத்தான் வேண்டும்; நிரம்பக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்."

"நான் என் இளம் பருவத்தில் ஒருநாள் காட்டில் ஒரு மரத்தைக் கோடரியால் தட்டிப் பார்த்தேன். அதற்குள் ஒரு கரடி நிச்சயமாக இருக்க வேண்டுமென்று தோன்றிற்று; ஆனால் அந்தப்பிராணி வெளியில் கிளம்பி வராததால் உச்சியில் ஏறிப் பொந்தின் வழியாகக் கீழே பார்த்துக் கரடி ஆஜசில் இருக்கிறதா என்று சோதிப்பதற்காக ஏறினேன். அப்படி இருந்தால் அதை வெளியில் வரவழைப்பதாகத்தீர்மானம் செய்து விட்டேன். நல்லது, அம்மணி! அந்தப் பொந்து மரத்தின்மேலேறினேன்; உச்சியிலிருந்து தலையைப் பொந்திற்குள் நுழைத்துக் கீழே பார்த்தேனோ! நான் முட்டி போட்டு உட்கார்ந்திருந்த மரவிளிப்பு பொரபொரத்து இருந்தமையால் மட மடவென்று பொடியாகி நானும் கீழே விழுந்தேன்; நல்ல வேளையாகத் தலைகீழாக விழவில்லை—இல்லாவிட்டால் இந்த நிமிஷம் வரையில் அங்கேயேதான் நான் இருந்திருக்கவேண்டும்—ஏனெனில் நான் பார்த்த வரையில் நடுமரத்தில் துவாரம் குறுகி இருந்தமையால் நான் திரும்ப முடியாதிருந்து அங்கேயே சிக்கிக்கொண்டிருக்கவேண்டும். அப்படிக்கெல்லாம் இராமல், எற்றிலும் சாம்பலும் மக்கலும்

எனது மூக்கு வாய் எங்கும் அடைத்துத்திணறும்படி செய்து விட்டாலும், கீழேபோய்க் கடைசியாகக் காடியின் தலையின் மேல் நேராக வந்து விழுந்தேன்:—காடி அடியில் படுத்துக் கிடந்தது: நான் வந்து விழுந்த வேகம் தாங்காமல் அதன் தலை கீழே மடங்கிப்போய் விட்டது: இல்லாவிடில் அதன் பற்களால் என்னைக் கவ்விக் கொண்டிருக்கும்—அப்போது வேறு வினை வேண்டாம்; உண்மையென்னவென்றால் அது என்னைக் காட்டிலும் அதிகப் பிரமை கொண்டு விட்டது; ஆகலின் நான் அசைந்து திருப்பிக் கொடுக்கும் வரை அது அப்படியே கிழித்த நார்போற் கிடந்தது. கேட்க வேண்டுமோ? உடனே விரைவில் வெளிக்கிளம்பி ஏறிவர முயன்றேன். தெய்விகமாய் மரத்தின் துவாரம் அவ்வளவு அகலமாக இல்லாததால் முதுகைப் பின்புறத்திலும் முழங்கால் சில்லை முன்புறமுமாக உதைந்து கொண்டு மேலே மெதுவாகக் கிளம்பலானேன். இந்த விதமாகக் கொஞ்சம் கொஞ்சமாகத் தத்திக் கொண்டு நான் விழுந்த பொந்து முகத்துவாரத்திற்கு வந்து சேர்ந்து, மூச்சு விடுவதற்காக மேலே தொத்திக் கொண்டு உட்கார்ந்தேன். இப்படி ஒரு கால் நிமிஷம் தானிருக்கும்; இன்னும் கொஞ்ச நேரம் அப்படியே இருக்க விரும்பினேன்: ஆனால் உடனே காடியின் தலையை ஓரடி தூரத்திற்குள் கண்டேன்! அதுவும் என்னுடனே ஏறி வந்திருக்கவேண்டும்; அதன் முகத்தைப் பார்த்ததும் அது வெகு கோபம் கொண்டிருந்ததென்று தெரியவந்தது; ஆதலின் ஒரு க்ஷணத்திற்குள் எனது ஆஸனத்தை விட்டுக் கீழே குதித்து மரத்தடியில் கிடந்தேன். விழுந்த உயரம் இருபதடி சுமார் இருக்கும்—தெய்வானுகூலத்தால் எலும்பு ஒன்றும் ஒடியவில்லை; உண்மையில் வலியை விடக் கிலிதான் ஜாஸ்தியாக விருந்தது; கொஞ்சமேனும் அசையாமல் சற்று நேரம் கிடந்தேன்; அப்போது காடியின் உறுமலால்



அதைப்பற்றி ஞாபகம் வந்தது; உடனே கிளம்பி நின்று பார்த்தபோது அதுவும் எனக்குப் பின்னாடியே கீழேவந்து தரையினின்றும் ஆறடி உயரத்திலிருந்தது. தாமதிக்க இடமில்லை; உடனே துப்பாக்கியைக் கையிலெடுத்து அதின் காதில் காட்டிக் குறிவைத்துச் சுடத்தான் அவகாசம் இருந்தது. அதுவும் அப்போதுதான் முன்னங்காலைப் பூமியில் வைத்ததும் வைக்காமலும் இருக்க, குண்டடிபட்டு மாண்டு தரையில் விழுந்துருண்டது."

"என்ன! நீ ஒரு ஆசை தப்பினாய்!"

"ஆமாம், அம்மணி! கடைசிவரையில் எந்தக் கை மிஞ்சும் என்று சொல்ல முடியாமலிருந்தது."

## அத்தியாயம் 28.

பனிக்காலம் முடிவடைந்து வஸந்த காலமாரம்பித்தது.

ஒரு நாள் பகலில் உணவருந்துவதாயிருக்கும் தருணத்தில் காப்ட்டின் லிங்க்ளேர் ஒரு படகில் வந்திறங்கி திடீரெனத் தோன்றினார். அந் நண்பரைக் காணவும் அங்கு எல்லோருக்கும் இருந்த குதூகலம் இவ்வளவுதான் என்று சொல்ல முடியாது. அவருக்கு முழங்கால் நேராகிவிட்டது. அடுத்த நாள் காலையில் மாண்ட்ரீலுக்குப் படகுபோவதால், அதன்மூலம் இப்பண்ணையிலிருந்து கியூபெக்குக்கு விற்பனைக் கனுப்பவேண்டிய பொருள்கள் எவையேனும் உண்டானால் ஏற்றி அனுப்பலாம் என்று அறிவித்தனர்.

இந்நாள் ஒரு பொழுது வரும் என்றே பண்ணையில் ஏற்றியனுப்ப வேண்டியவையெல்லாம் ஏற்கனவே தயாரிக்கப் பெற்றிருந்தது. கூடப் போவதற்கு நியமிக்கப்பெற்ற ஹென்றியும் தயாராக இருந்தான். அன்று பொழுது சாயும்முன்னமே படகு கோட்டைக்குத்திரும்பவேண்டியிருந்தமையால், சாப்பாடு முடிந்ததும் புறப்படத் தீர்மானிக்கப்பட்டது.

சாப்பாட்டிலிருக்கும்போது அவர்கள் நடுவில் இடி விழுந்தாற்போன்ற சமாசாரமொன்றைக்காப்டின் சொன்னார்: அதாவது, அடுத்த நாள் காலையில் அதே படகில் அவரும் புறப்பட்டு க்யூபெக்குக்குப் போய், அங்கிருந்து கப்பலேறி இங்கிலாந்து போக உத்தேசம்.

இதைக் கேட்டவுடன் எல்லோருடைய முகமும் தொங்கிப் போய்விட்டது. உள்ளத்தில் அடைபட்டிருந்த துக்கத்தை மறைக்க எண்ண முயன்றும் பலிக்கவில்லை.

"படைத் தலைவர் உத்தியோக மானாற்கூட, உங்களைப் போன்றவர்கள் சீர்மையை விட்டுத் தூரதேசம் வந்து வெகு நாள் இருப்பது என்றால் அலுத்துத்தான் போகும்," என்றாள் எம்மா. "எங்கள் ஞாபகமாவது இனி உங்களுக்கு இருக்கட்டும்."

"அப்படி ஒன்றுமில்லை, எம்மா; நான் போகிற அலுவல் இரண்டு மூன்று மாதங்களில் முடிந்து விடும். உடனே திருப்பி இவ்விடமே வந்து விடுவேன்," என்றார் ஸிங்க்ளேர். "எனது இளம் பிராயத்திலேயே எனது தந்தை இறந்தார். அப்போது தமக்கு இருந்த ஸொத்தை தம் நண்பர் ஒருவரிடம் ஒப்புவித்து, எனக்கு வயது 25 ஆனவுடன் என்னிடம் கொடுத்து விடும்படி ஒரு உயில் எழுதிவைத்திருந்தார். இப்போது அந்த கெடுக் கடந்து விட்டபடியால், அந்நண்பர் என் ஸொத்தை வந்து ஏற்றுக் கொண்டு தன்னை விடுதலை செய்யும்படி என்னை வற்புறுத்துகின்றார். ஆதலால் நான் அங்கே போனதும் எனது ஸொத்தைக்கைப்பற்றிக்கொண்டு உடனே திரும்ப வேண்டியது தான்."

இப்படிப் பேச்சு நடந்து கொண்டிருக்கையில் மேரி எங்கேயோ போய்விட்டாள் என்பதை ஒருவரும் அறியவில்லை. சாப்பாடு பேருக்கு ஒரு வழியாய் முடிந்தது. படகு புறப்பட நேரம் ஆய்விட்டபடியால் காப்டின் ஸிங்க்ளேர்



எல்லோரிடத்தும் விடைபெற்றுக்கொண்டிருக்கையில் மேரியும் வந்து தோன்றினாள்: அவள் உள்ளத்தில் உள்ளது பகவானுக்கே தெரியும். வெளிக்கு மட்டும் புன்னகையுடன், "சரி, போய் வாருங்கள்" என்று சொன்னாள்.

மூட்டைகள் ஏற்கனவே படகேற்றப் பெற்றிருந்தமையால், காப்டின் ஸிங்க்ளேரும் ஹென்றியும் ஏறினவுடன் படகும் புறப்பட்டுவிட்டது. காப்டின் ஸிங்க்ளேரை விட்டுப் பிரிந்ததும் நடுப்பகலில் திடீரென்று அஸ்தமனம் வந்து விட்டதுபோல் அங்கு எல்லோருக்கும் தோன்றிற்று.

காப்டின் ஸிங்க்ளேர் புறப்பட்டுப்போய் இரண்டு வாரங்களுக்கெல்லாம் கோட்டையிலிருந்து கர்னல் துரை வந்து சேர்ந்தார். அவர் வந்த அலுவலென்னவென்றால், பரஸ்பரம் லாபகரமான ஏற்பாடுகள் சிலவைகளைச் செய்யலாமா வென்று பார்த்துப் போவதற்காகவே.

கோட்டைப் படைகளுக்கு மாட்டிறைச்சிக்காகக்கோட்டையிலேயே மாடுகளை வைத்து வளர்க்கிறதென்பது இனி அசாத்தியமாக இருந்தது. இதுவரையில் அம்மாடுகள் மேய்வதற்கும், அவைகளுக்குக் கட்டித் தீனி போடுவதற்கு வேண்டிய புல்லுச் சேகரம் செய்வதற்கும் ஏராளமாக இருந்த காட்டை இப்பண்ணையார்க்கு ஒப்படைத்து விட்டபடியால், இனி அவைகளுக்குத் தீனி சம்பாதிப்பதில் செலவு மிக்கவாயிற்று. ஆகையால் அம்மாடுகளை ஒரு விலை வைத்து மிஸ்டர் காம்பெல் தம் பண்ணைக்கு ஓட்டிக் கொணர்ந்து விட்டால், அது இருவருக்கும் சாதகமாகும். கோட்டைக்கு வேண்டிய இறைச்சியை மிஸ்டர் காம்பெல் சப்ளைசெய்து கிரயம் பெற்று லாபமடையலாம். மாடுகளை வைத்து வளர்ப்பதில் பண்ணைக்கு அதிகக் கைப்பொறுப்புமில்லை, ஏனெனில் மேய்ச்சலுக்கும் புல்லுக்கும் குறைவே இல்லை.

இரண்டாவது, இதுவரையில் கோட்டைக்கு வேண்டிய மாவு கியூபெக்கிலிருந்து வாங்கி வரப்பெற்றிருந்தமையால், செலவு மிகுதியா யிருந்தது. இனி, பண்ணையில் விளையும் தான்யத்தை பண்ணையிலேயே அரைத்துச் சப்ளை செய்வாரா கில், பண்ணைக்கும் எளிதில் தான்ய விற்பனையில் காசாகும், கோட்டைக்கும் மலிவாகவும், காலடியிலேயும் மாவு நல்லதாக வேண்டியபோது வேண்டிய அளவு வாங்கிக் கொள்ளலாம். ஆனால் பண்ணையில் மாவு அரைப்பதற்கு ஏற்ற சாதனங்கள் உண்டோ? அவ்விஷயமாகப் பேசத்தான் கர்னல் துரை முக்கியமாக வந்தது.

பண்ணைக்கண்டையில் ஓடிக்கொண்டிருந்த ஆறு, என்றும் வற்றாமலிருப்பதுடன், ஓடும் விசை மிகப் பெற்றது. கரை ஓரமாக ஒரு நீர் இயந்திரம் இயற்றப் பட்டால் சொற்பச் செலவில் ஏராளமாக மாவு அரை பெறலாம். ஆனால் அதற்குக் கொஞ்சம் முதல் தனம் போடவேண்டி வரும். மிஸ்ட்டர் காம்பெல்லுடைய நிலைமை எப்படி இருக்குமோ? இந்த வார்த்தையைக் கர்னல் துரை மையமாக விட்டார்.

மிஸ்ட்டர் காம்பெல் தம்மால் இயலுமென்று சொன்னதும் கர்னல் துரைக்கு வெகு சந்தோஷம். மிஸ்ட்டர் காம்பெல்லுக்கு இருந்த தேவை ஆட்களே. அதற்கும் வேண்டியவர்களை அனுப்புவதாகக் கர்னல் துரை சொன்னதும், மிஸ்ட்டர் காம்பெல் தமது மனமார்ந்த நன்றியறிவை இவ்வளவு சகாயம் செய்யும் நண்பருக்கு அளித்தார்.

இந்த ஏற்பாடுகளை முடித்துக் கொண்டு கர்னல் துரை பண்ணையை ஒருவாறு சுற்றிப் பார்த்து விட்டு விடைபெற்றுப் பட்டேகேறிக் கோட்டைக்குச் சென்றார்.

## அத்தியாயம் 29.

ஹென்றிமாண்ட்ரீலுக்குப்போய்த் திருப்பி வருவதற்குள் ஏறக்குறைய ஐந்துவாரங்களாய் விட்டன. இதற்குள்



கர்னல் துரை வந்து மிஸ்டர் காம்பெல்லுடன் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டுப் போனார். இருபது போர் வீரர் சேர்த்து அனுப்பப் பெற்று, மரம் வெட்டும் வேலையும் பிளாச்சுப் பிளக்கும் வேலையும் விரைவாக நடந்து, ஆடுகளுக் காகப்பனிக் கொட்டகையும் பிளாச்சு வேலியும் கட்டி வேலை முடிந்திருந்தது. ஜலயந்திரம் ஸ்தாபிப்பதற்காக ஏரிகரையி லிருந்து அரை மைல் தூரத்திற்குள் ஆற்றங்கரையில் ஒரு தாவும் பொறுக்கி எடுக்கப்பட்டிருந்தது. அவ்விடத்தில் ஆறு திடீரென்று விழுந்தமையால் நீரோட்டம் விரைவாக விருந்தது. ஆயினும் வரும் வருஷம் வரையில் யந்திரம் ஸ்தாபிப்பதற்கு ஹேது இல்லை. ஏனெனில் யந்திர வேலைக்காரன் ஒருவன் வரவேண்டி யிருந்ததுடன் யந்திரங்களெல்லாம் மாண்ட்ரீல்அல்லது கியூபெக்கிலிருந்துவரவேண்டியிருந்தன.

ஹென்றி வீடுவந்து சேர்ந்தது ஒரு திங்கட்கிழமை காலையில். அவன் வந்தவுடன்—கேட்க வேண்டுமோ?—எல்லோருமவனை வெகு சந்தோஷத்துடன் அழைத்தனர்; முதல் க்ஷேம விசாரணை முடிந்தவுடன் தன்னுடைய தந்தையினிடம் தான் போய்ச் செய்து வந்த வற்றை எல்லாம் சொன்னான். அவன் ஒரு கனேடியன் குடியானவனிடமிருந்து நாற்பது செம்மறியாடுகளை வாங்கிவந்தான். அவை இங்கிலீஷ் ஜாதியைப் போலவே இராமற் போனாலும் கூடிய வரையில் சிலாக்கியமாகவே இருந்தன; ஆயினும் ஏஜெண்டானவர் வெகு சிரத்தை யெடுத்துக் கொண்டு தேடிப் பிடித்து இருபது இங்கிலீஷ் ஆடுகளையும், ஜாதியைத் திறப் படுத்தும் வண்ணம் இரண்டு முதற்றரமான ஆட்டுக்கடாக் களையும் சேகரம் செய்து கொடுத்தார். இவ்வாடுகளைப் பொறுக்கி வாங்குவதில் தனக்கொன்றும் தெரியாதிருந்தமை யால் ஹென்றி ஏஜெண்டையும் தரகுக்காரர்களையும் தான் நம்பவேண்டியிருந்தாலும், தனது அறிவைக் கொண்டே

இரண்டு கனேடியக் குதிரைகள் வாங்கினான்; ஏனெனில் ஆக்ஸ்போர்டில் அவன் கழித்திருந்த நாட்கள் அவனுக்குக் குதிரைப்பரிக்ஷை கற்பிக்கப் போதுமானவைகளாயிருந்தன. அவன் செய்து வந்ததும் நல்ல வியாபாரமாகவேயிருந்தது. உயர்ந்த ஜாதிப் பெண் பன்றிகளையும் ஆண் பன்றிகளையும் வாங்கி வந்ததுடன் மற்ற வியாபாரங்களையும் சரிவர நடத்தி முடித்து வந்தான். தோல் மூட்டைகளுக்கும் போடப்பட்ட கிரயம் கிடைத்து விட்டது. தனது அத்தை பெண்களுக்காகச் சமீபத்தில் பிரசுரம் செய்யப்பட்ட சில இங்கிலீஷ்ப் புஸ்தகங்களையும், அதிக டம்பமில்லாமல் தற்காலத்து நிலைமைக் கேற்பவிருந்த சில துணிமணி யாடைகளையும் நினைவாக வாங்கிவந்தான். அவன் பேச்சு இன்னும் முடியவில்லை. ஒரு சமயம் மணிக் கணக்காகப் பேசிக்கொண்டே யிருந்தாலும் இருந்திருப்பன்: ஆனால் மார்ட்டின் வந்து சாமான்களையும் கால் நடைகளையும் ஏற்றிக் கொண்டு படகுகள் வந்து சேர்ந்து விட்டன, என்று தெரிவித்து விட்டபடியால், எல்லோரும் உடனே துறைக்குப் போய் அவைகளை இறக்கி அங்கு வேலை செய்து கொண்டிருந்த போர் வீரர்கள் தூக்கிக் கொண்டு வரும் வேடிக்கையைப் பார்க்கலானார்கள். சாமான்கள் பண்டகசாலைக்குக் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டு, ஆடுகளும் குதிரைகளும் புற்காட்டிற்குள் பசுக்களோடு மேய்வதற்காகக் கொண்டுபோய் விடப்பட்டன. போர் வீரர்களுக்கும் ஒரு வாரத்திற்குக் காணும்படியான சமையற் பண்டங்களும் கொண்டுவரப்பட்டிருந்தன. அவற்றை அந்த ஆள்கள் பிரித்து எடுத்துக் கொண்டு, மிஸ்டர் காம்பெல்லுக்காகத் தாங்கள் வேலை செய்யும் வரையில் தங்கியிருப்பதற்காகக் கிளைகளாலமைக்கப்பெற்ற குச்சுக்களுக்குள் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். பொழுது சாயுமுன் எல்லாம் ஒழுங்காகிவிட்டன. மறுபடியும் குடும்பத்தினர்களால் ஹென்றி



சூழப்பட்டு மிச்சமுள்ள கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

மாண்ட்ரீலில் கவர்னர் துரை ஹென்றியின்மீது வெகு விசுவாஸம் பாராட்டினாராம். அங்குள்ள மற்றும் எல்லோரும் அவனை மிகவும் கொண்டாடினதோடு கூட, வருகிற குளிர் காலத்திற்குப் பண்ணையிலுள்ள எல்லாச் சீமாட்டிகளையும் மாண்ட்ரீலுக்கு வந்து தங்கும்படி மிகவும் வருந்தினார்களாம்.

பேச்சுக் கொஞ்சம் நிற்கவும் மலாச்சி மிஸ்டர் காம்பெல்லை நோக்கி, "ஐயா! மார்ட்டின் தங்களிடம் ஒரு வார்த்தை சொல்லும்படி என்னை வேண்டுகிறான்." என்றான்.

"மார்ட்டின்!" என்று சொல்லிக்கொண்டு மிஸ்டர் காம்பெல் சுற்றுமெங்கும் பார்த்தும் அவனைக் காணாது. "என்ன? அவன் வெளியில் போய்விட்டதாகத் தெரிகிறதே, அவன் தானாகவே சொல்லிக் கொள்ளக் கூடாதது என்ன இருக்கக்கூடும்?" என்றார்.

"நானும் அவனிடம் அப்படியே தான் சொன்னேன்," என்றான் மலாச்சி; "ஆனால் என் மூலமாக வந்தால் நலமென்று அவன் எண்ணினான்; சங்கதி என்னவென்றால், ஐயா! ஸ்ட்ராபெர்ரியின்மேல் அவனுக்கு விருப்பம் விழுந்து விட்டது; அவளை அவன் மணம் புரியக் கருதுகிறான்."

"நிஜம் தானா?"

"ஆம், ஐயா! அதற்குள்ளாக அவசரப்பட்டுக்கொண்டு அப்பேச்சை விட்டிருப்பானென்று எனக்குத்தோன்றவில்லை; ஆனால், பாருங்கள்! இங்கே இப்போது அநேகம் போர் வீரர்கள் இருக்கின்றார்களல்லவா? அவருள் இரண்டு மூன்று பேர்கள் மார்ட்டினைப் போலவே கருத்துள்ளவர்களாய் இருப்பதால், இந்த விஷயம் தீர்மானமாக முடிகிற வரையில் அவனுக்குத் தரிப்புக்கொள்ளாது; தங்களுடைய ஊழியத்தி

விருக்கும்போது தங்களுடைய அனுமதியின்றி மணம் செய்வது அவ்வளவு சரியாக இராததால், தங்களிடம் இது விஷயமாகப் பேசும்படி என்னை ஏவியிருக்கிறான்."

"ஆனால் ஸ்ட்ராபெர்ரி உனக்கல்லவோ சொந்தம், மலாச்சி! எனக்கல்லவே."

"ஆம், ஐயா! இந்தியரின் வளமைப்படி நான்தான் அவளுக்குத்தந்தை; ஆனால் எனக்கு ஒருதடையுமில்லை—அவளுக்காகப் பரிசம் யாதையும் கேட்கப் போவதுமில்லை."

"அவளுக்காகப் பரிசமா! அதென்ன? எங்களுக்குள் பெண்ணுடன் ஆஸ்தியையாவது பணத்தையாவது கொடுப்பதல்லவோ வழக்கம்."

"ஆம்; நீங்களப்படிச் செய்வது எனக்குத் தெரியும்; ஆனால் இங்கிலீஷ் மனையாளென்றால் இந்திய மனையாளாவாளோ? இங்கிலீஷ் மனையாளென்றால் அவளுக்கு ஏவலாளர்கள் வேண்டியதுடன் அவளை வைத்து நிர்வாகிப்பது மிகவும் செலவு பிடிக்கும்; ஆனால் இந்திய மனைவியோ தனக்காகவும் தனது கணவனுக்காகவும் சேர்த்து வேலைசெய்து சம்பாதிப்பதால், அவளுக்காக விலை ஏற்படுத்திக் கிரயம் கொடுத்துத்தான் தகப்பனிடமிருந்து வாங்கவேண்டும்; நான் கணக்கிட்டுப் பார்த்தவரையில் ஓர் இங்கிலீஷ் மனைவியைப் பணத்துடன் பெறுவதைவிட ஓர் இந்திய மனைவியைப் பணங்கொடுத்து வாங்குவது மலிவாக முடிகிறது; ஆனால் அது ஒருகால் தப்பாக இருந்தாலும் இருக்கலாம்,"

"மலாச்சி! கொஞ்சம் அக்கம் பக்கம்பார்த்து மரியாதை வைத்துப் பேசக் கூடாதா?" என்றாள் மிஸிஸ் காம்பெல்

"அப்படி இருக்கலாம், அம்மா! ஆயினும் உண்மைக்கு ஒத்ததில்லை என்று சொல்ல முடியாது. போகட்டும்; மார்ட்டினுக்கு ஸ்ட்ராபெர்ரியை மணஞ் செய்து கொடுப்பதில் எனக்கு இஷ்டந்தான்; ஏனெனில் அவன் ஒரு கைக்காரனான



வேட்டைக்காரனாக இருப்பதுடன், அவளை நன்றாகவைத்து ஆதரிப்பானென்று எனக்கு நன்றாய்த் தெரியும்; ஏதோ எனது மனத்தில் அவன் அவளை மணம்செய்தால் எனக்குக் கொஞ்சம் சுகம் கிடைக்குமென்று தோன்றுகிறது; நான் அவர்களுடன் இங்கேயே சமீபத்தில் வசிப்பேன்; மார்ட்டினும் உங்களுக்கு ஊழியம் செய்து வருவதுடன், ஒரு மனைவி ஏற்பட்டு விட்டால் உங்கள் வேலையை விட்டு விட்டுக் காட்டில் திரிவதற்குப் போகமாட்டான்."

"மலாச்சி! இஃதொரு சிலாக்கியமான ஏற்பாடு என்று நானெண்ணுகிறேன்; நீங்களனைவரும் எங்களுடன் கூடவே இருக்க முடியுமாதலால் எனக்கு இது மிகவும் திருப்திகரமாயிருக்கிறது," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"ஆம், அம்மா! அப்படியே இருக்கலாம்; ஜானைப் பார்த்துக் கொள்ள நானும் கிட்டவே இருப்பதுடன், உங்களுக்கும் நாங்களிருக்குமிடம் எப்போதும் தெரிந்திருக்குமாதலால் நீங்கள் பயமற்றிருப்பீர்கள்."

"நிரம்பவும் சரி, மலாச்சி!" என்றார் மிஸ்டர் காம்பெல்; "எனக்கு அது நல்ல ஏற்பாடாகவே தோன்றுகிறது; நீங்கள் வசிப்பதற்காக இப்போது இருப்பதைவிட நல்ல ஒரு வீடு கட்டவேண்டும்."

"வேண்டாம் ஐயா! இதைவிடத் திறமானது வேண்டாம்; ஏனெனில் ஒருவனுக்குத் தேவையானவையெல்லாமிருந்து விட்டால், மேலே வேலைக்கு இடம் கொடுக்காது. அவ்வீடே போதுமான அளவு பெருத்திருக்கிறது. ஆயினும் இன்னும் சமீபத்தில் வேண்டுமானால் இருக்கலாம். நான் செய்கிற யோசனை யென்னவென்றால் ஆட்டுப் பட்டி கட்டி முடிந்தவுடன் எங்கள் வீட்டைப் பிளாச்சு வேலிக் குட்புறம் கட்டிக் கொண்டு விடலாம்—அப்போ தப்பிராணிகளுக்கு ஒருவிதமான காவலும் ஏற்பட்டுவிடும்."

"மலாச்சி! நிரம்பவும் சிலாக்கியமான யோசனை தான். நல்லது, அப்போது என்னைப் பற்றினவரை மார்ட்டினுக்குட பூர்ணமான அனுமதியை யளிக்கிறேன். அவனிஷ்டப்பட்ட போது கல்யாணம் செய்து கொள்ளட்டும்."

"எனக்கும் பூர்ணசம்மதம்—கேட்பதற்கு அவசியம் இருக்குமாயின்," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

பிறகு கல்யாணம் நடத்துவது எச் சம்பிரதாயப்படி, என்று சற்று வாதம் நடைபெற்றது. இந்தியர்களுக்குள் நிகழ்ந்த வழக்கம் யாதெனில், கல்யாணப் பெண் குடிசைக்குப் புருஷன் வருவதும், பெண்ணைக் கைப்பற்றுவதும், உடனே திரும்பி விடுவதுமே தான். பெண் ஒரு இந்தியளாகையால் இம்மாதிரியே நடக்கட்டுமே என்று மலாச்சி கருதினான். ஆனால் அதற்கு மிஸிஸ் காம்பெல் சம்மதிக்க இல்லை.

"இம்மட்டும் தான் என்றால் பெண்ணுக்கு கல்யாணம் முடிவு பெற்றது என்ற உணர்ச்சியே இராது. கிருஸ்துவ ஸம்பிரதாயப்படி தான் நடத்தல் வேண்டும்," என்று சொன்னாள்.

"அம்மணி, தங்களிஷ்டம்," என்றான் மலாச்சி; "ஆனால் பெண் ஒரு கிருஸ்தியால்லவே?"

"இப்பொழுது இல்லை தான்," என்றாள் மிஸிஸ்காம்பெல், "ஆனால், எங்களுடைய சகவாஸம் முக்த முக்த, ஆண்டவனருளால் அவளுக்கும் புதிய எண்ணங்கள் தோன்றி, கிருஸ்துவர் மதத்தைச் சேர வேண்டுமென அவா உண்டாகி, அவள் உபதேசத்தையும் பெற்றாளே யாகில், அப்போது மறுபடியும் கிருஸ்துவர் சம்பிரதாயப்படி விவாகம்செய்பலாமா?"

"சரி, அம்மணி, தங்களுடைய சித்தம்."

"அப்படியானால், கிருஸ்துவ ஆசாரியர் வேண்டியதற்கு. யாது செய்வது? கோட்டையிலிருந்தவர்கூட காயலாக்கண்டு சீர்மை போனவர் இன்னும் திரும்பி வரவில்லையே?" என்



றாள் மேரி.

"அதைப்பற்றின வரையில் கவலைப்பட வேண்டிய இல்லை. ராணுவத் தலைவரான கர்னல் துரைக்கும் அந்த ஆசாரியத்துவம் வகிக்க உரிமையுண்டு. அவரை யழைத்துக் கல்யாணத்தை சீக்கிரமாகவே நிறைவேற்றிக் கொள்ள லாம்," என்றார் மிஸ்டர் காம்பெல்.

"எவ்விதமாகிலும், சீக்கிரமாக நிறைவேறினாலொழிய ஸ்ட்ராபெர்ரியின் உபத்திரவம் தீராது: ஏனெனில்கோட்டையிலிருந்து வந்திருக்கும் படையாட்கள் ஒவ்வொருவனும் அவள்மேல் மோகங் கொண்டிருப்பதால், அவர்கள் எல்லோரும் அலுவலில்லாத போதெல்லாம் என் குடிசைக்கு வந்து சூழ்ந்துகொண்டு விடுகிறார்கள். ஸ்ட்ராபெர்ரிக்கு வெளியில் தலையைக்கூட காட்ட முடியவில்லை," என்றான் மலாச்சி.

படகானது இடைவிடாமல் கோட்டைக்கும் பண்ணைக்கும் போய்வந்து கொண்டிருந்தமையால், மிஸ்டர் காம்பெல் கர்னல் துரைக்கு இன்னது செய்ய வேண்டுமென்று எழுதிக் கொண்டதின்பேரில், கர்னல் துரையும் அன்று எட்டாவது நாளைக் குறித்து அன்று தினம் வந்து சடங்கைப்பூர்த்தி செய்து போவதாய்ச் சொல்லியனுப்பினார். பண்ணையில் அன்று ஒரு உத்ஸவமாகவே கொண்டாடப்பட்டது. மிஸிஸ் காம்பெல்லும் பர்ஸிவல் சிறுமிகளும் தங்களுக்கிருந்த தளுக்கான ஆடைகளை தரித்தனர்; அப்படியேதான் அந்தப்பண்ணையைச் சேர்ந்த ஆண்பிள்ளைகளும்; எப்போதையும்விடத் திறமான சாப்பாடும் தயாரிக்கப்பெற்றிருந்தது— ஏனெனில் கர்னல் துரையும் மற்றும் சில உத்தியோகஸ்தர்களும் விருந்துண்ண வந்திருந்தனர். மார்ட்டின் அன்று வெகு ஆடம்பரமான உடுப்புகளைத்தரித்துக்கொண்டு உத்ஸாஹங் கொண்டிருந்தான். ஸ்ட்ராபெர்ரிக்கு மான்குட்டித்தோலாற் செய்யப்பட்ட ஒரு புதிய ஆடை கட்டப்பட்டு, அவளது கறுத்த

நீண்ட கூந்தலில் இரண்டொரு மலரும் சூட்டப்பட்டிருந்தது. அவள் உண்மையில் எப்படியோ அப்படியேதான் தோற்றத்திலும் இருந்தாள்— அதாவது வெகு அழகானவளாயும், வெகு நாணமுள்ளவளாயும், ஆயினும் கொஞ்சம் கூச்சமற்றவளாயும் இருந்தாள். கல்யாணச்சடங்கு அவளுக்கு விளங்கும்படி மலாச்சியால் சொல்லப்பட்டவுடன் அவள் பூர்ணமனதுடன் சம்மதித்தாள். உச்சிப்போதிற்குமுந்திக் கல்யாணம் நடந்து, ஓரிரண்டு மணி நேரத்திற்கெல்லாம் சம்ப்ரமத்துடன் சாப்பாட்டிற்கு உட்கார்ந்து அந்தக்கோஷ்டியார் எல்லோரும் வெகு களிப்புடன் தமாஷாகவிருந்தனர். அதிலும்கர்னல்துரை வழக்கத்தைக்காட்டிலும் வெகு வேடிக்கையாக விருந்து, ஸ்டராபெர்ரியும் இதுவரை வழக்கமில்லாதவளாக இருந்தாலும் கூடவே உட்கார்ந்து விருந்துண்ண வேண்டுமென்று எல்லோரும் வருந்தினபடியால் அவளும் உட்கார்ந்துகொள்ளவே, எல்லாருக்கும் மிகவும் கொண்டாட்டமாகஇருந்தது. ஆயினும் அவள் கூச்சமொன்றுமில்லாமலே நடந்துகொண்டாள். அவர்களுடைய பாஷையை யறியாதவளாயினும், அவர்கள் சிரித்தால் அவளும் வெகு அழகுடன் நகைப்பாள்— ஆஹா! வெள்ளிவெண்மூரல்தோன்ற புன்னகைகொள்ளல் ஆரமுதினின்பத்தைக் கொடுக்கிறது. குறையுடனிருந்தவர்கள் ஸ்ட்ராபெர்ரியை மணம் செய்துகொள்ள ஆவல்கொண்டிருந்த மூன்று நான்கு போர்வீரர்களே. ஆனபோதிலும் தங்கள் கர்ணல்துரை யங்கிருந்தபடியால் அவர்களுக்குவிஷமம் ஒன்றும் செய்ய இடங்கொடுக்கவில்லை. சூரியன் அஸ்தமனமானதும் கர்ணலும் உத்தியோகஸ்தர்களும் கோட்டைக்குப் புறப்பட்டுவிட்டார்கள்; வீட்டுக்காரர்கள் படுப்பதற்குப் பத்துமணிக்குமேலாய்விட்டது— அதற்குள்ளாகப் போர்வீரர்களும் தூங்கப்போய்விட்டார்கள்

கடைசியில் மிஸ்டர் காம்பெல்லும் ஆண்டவனது



ஸ்துதிபாடகட்டத்தை வாசித்துவிட்டு நூதநதம்பதிகளுக்கு வாழ்த்தும் சொல்லளித்தார். பிறகு, மார்ட்டின் தனது மனையாளின் கையைப்பிடித்துக்கொண்டு தனது குடிசைக்குச்செல்ல, ஆல்ப்ரெட், ஹென்றி, மலாச்சி, பர்ஸிவல்,ஜான் இவர்கள் எல்லோருமாகத் தொணைபுரியக் கூடவே சென்றார்கள்.

## அத்தியாயம் 30.

திருமணத்திருநாள் நடந்த சில நாள்களுக்கெல்லாம் ஒருநாள் காலையில் எம்மா மேரியைப் பார்த்து "சுற்றி எங்கும் பார்த்தால் எவ்வளவு சிறப்பாகவும் ஆநந்தகரமாகவும் இருக்கிறது!" என்றாள். "சுற்று எங்கு பார்த்தாலும் மங்களவிலாஸமுற்றிருக்கிறது. புல்லின் பசுமையும் தழைந்த விருட்க்ஷங்களும், பட்சிகளின் இனிய கானங்களும்! ஆகா! என்ன சொல்வேன். பனியடைந்து அத்வானமாகி ஓநாய்களின் ஊளையும் பனிச்சாரலின் சீறலும் தவிர வேறொன்றும் புலப்படாமற் போய்விடுமென்பதை நம்பக்கூடமுடியவில்லை"

"எனக்குத் தோன்றியதும் இதுவே," என்றாள் மேரி.

சுற்றுக்காட்சி உண்மையில்நேத்திராநந்தத்தையும் ஆத்மாநந்தத்தையும் தருவதாயிருந்தது. ஆற்றுக்கு ஒரு கரையில் புற்காட்டில் உயர்ந்த புற்கள் மாருதத்தாலசைந்துகொண்டு சமுத்திரத்தின் அலைபோல தலை சாய்ந்துகொண்டும், நிமிர்ந்துகொண்டுமிருந்தன. ஆற்றின் அக்கரையில் பசுக்களும், குதிரைகளும், ஆடுகளும் நாலாபக்கங்களிலும் மேய்ந்துகொண்டிருந்தன. தூரத்தில் ஏரியானது கலக்கமற்று அமரிக்கையாகவிருந்தது. வனாந்தரங்களில் பறவைகள் உல்லாசத்துடன் பாடிக்கொண்டும் கலகலசப்தம் செய்துகொண்டும் இருந்தன. வீட்டிற்கருகாமையில் பச்சைப்பூண்டின் மத்தியில் வெள்ளையுடுப்பு தரித்துக்கொண்டு பற்பல இடங்

களில் பற்பல வேலைகளில் அயர்ந்திருந்த போர்வீரர்கள் பசிய சோலையில் வெள்ளை மலர் மலர்ந்தாற்போல் தோன்றினர். காடழித்த புலன்களில் கருமரங்களிற்கிடையே தானியக் கதிர்கள் பொன்மயமான அலைபோல் அசைந்துகொண்டிருந்தன. வீட்டின் புகைபோக்கியிலிருந்து புகை ஸ்தூபிபோல் செங்குத்தாய் ஆகாயத்திலேறிக் கொண்டிருந்தது. இந்த விசித்திரக்காட்சியில் ஜீவவர்க்கங்களுக்குக் குறையில்லை யென்பதை நிரூபணம் செய்வதுபோல் பன்றிகள் உறுமிக்கொண்டும், கோழிகள் கொக்கரித்துக்கொண்டும், இளங்கன்றுகள் கத்திக்கொண்டும், அதற்கெதிரிடையாகப் பசுக்கள் முழங்கிக்கொண்டும் இருந்தன. கரையிலிருந்து சிறிது தூரத்தில் மீன்பிடிக்கும் தெப்பமானது அசைவற்று ஜலத்தின்மேல் மிதந்துகொண்டிருந்தது. ஜானும் மலாச்சியும் வெகு ஊக்கத்துடன் மீன்பிடித்துக்கொண்டிருந்தனர்; நாய்கள் பிளாச்சுவேலியின் பக்கத்திற் படுத்துக்கொண்டிருந்தன. ஆஸ்கார்மட்டும் வழக்கம்போல் தனது சிறிய எஜமானிகளுக்கு காவலாகப் போயிருந்தது. வீட்டிற்குக் கொஞ்சதூரத்தில் ஒரு பெரிய மரத்தின் நிழலில் மிஸ்டர் காம்பெல்லும் பர்ஸிவலும் வீற்றிருந்தனர்—முற்சொன்னவர் படித்தனர்; மற்றொருவன் பாடம் நெட்டுருச் செய்தான்.

"மேரி! இப்போதுபார்த்தால் இது ஒரு காட்டைப்போலவே சிறிதும் தோன்றவில்லை, அல்லவா?" என்றாள் எம்மா.

"இல்லையடி, அம்மா! நாம் வந்தவுடன் இருந்ததற்கும் இப்போதிருப்பதற்கும் எத்துணையோ வித்தியாசம் இருக்கிறது; ஆயினுமண்டையசலிருந்தாலெனக்குத் திருப்தியாகவிருக்கும்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் ஆல்ப்ரெட் அவர்களிடம் வந்து சேர்ந்தான். முகம் அவ்வளவு ப்ரஸன்னமாக இல்லை.



"அருமைப் பெண்களே, எனக்குத் தந்தையார் புதிய உத்தியோகம் அளித்திருக்கிறார் தெரியுமா?"

"ரொட்டிக்கிடங்கு வைப்பதோ?" என்று எம்மா விஷமமாகக் கேட்டாள்.

"நீ சொல்லுவதிலும் உண்மையிருக்கிறது. இயற்றப் போகிற மாவு யந்திரம் எனக்காகவாம். அதற்காக இப்போது போடும் முதல் என்கணக்கில் வைக்கப்பெற்று, எனக்குவரும் ராணுவ அரைச்சம்பளத்திலிருந்து சிறுகச் சிறுக ஈடுசெய்து கொள்கிறது, என்றார் தந்தை", என்று ஆல்ப்ரெட் சொன்னான்.

தனது கப்பலுத்தியோகத்திலேயே மனதைச்செலுத்தியிருந்த ஆல்ப்ரெட்டுக்கு இதுஎவ்வளவு உள்ளூறத்துக்கத்தை உண்டுபண்ணி இருக்கவேண்டும் என்பது அவ்விரு சிறுமிகளுக்கும் தெரியும்.

சற்றுப் பொறுத்துவிட்டு, "தந்தையாது மனம் கோணாமலிருக்கக் கருதி, சரியென்று சொல்லிவிட்டேன்," என்று ஆல்ப்ரெட் முடித்தான்.

"நீ செய்தது மெத்தச் சரி", என்றாள் மேரி.

ஆல்ப்ரெட்டுடைய உள்ளத்தை நன்கறிந்த எம்மாவும் உள்ளூற ஆல்ப்ரெடின் கதியைப்பற்றி வேதனையுற்றவளானாலும், வெளிக்குப் புன்சிரிப்புடன், "பேஷ்! மில்லர் என்றால் மாவரைப்போன். மில்லரே? வாரும்," என்று இடக்காய்ப் பேசினாள். "உமக்கு இனி ஐவேஜி சேர்ந்துவிடும்."

ஆல்ப்ரெட்டும் பின் வாங்காமல், "இருக்கட்டும், சிறுக்கி, நீ காதல் கொண்டிருக்கிற இந்தியரை நீ மணம்புரியும்போது அந்த ஐவேஜியை உனக்கு மஞ்சட்காணியாகக் கொடுத்து விடுகிறேன்".

"நன்றாக வேண்டும், எம்மா," என்று மேரி சொல்லவே, எல்லோரும் குல் என்று சிரித்தார்கள்.

போர்வீரர்கள் வந்து இரண்டு மாதங்களுக்கு மேல் வேலை செய்து வந்தபடியால் காடு அநேகமாய் அழிபட்டுத் திருந்திப்போய்விட்டது. ஏற்கனவே ஆல்ப்ரெட்டும் ஹென்றியும் மார்ட்டினும் சேர்ந்து திருத்தியதோடு எல்லாம் சேர்ந்து முப்பது நாற்பது ஏக்கர் நிலத்துக்குமேல் தானியச் சாகுபடிக்குத் தகுதியாய்விட்டது; வேலிக்கு வேண்டிய பிளாச்சும் தயாராகிப் புற்காட்டு வெளிக்கும் நன்செய் நிலத்திற்கும் சுற்றி வேலிகட்டும் வேலையும் நெருங்கிவிட்டது. இதுவும் முடிந்ததோ வில்லையோ, தானியமும் அறுவடைக்குத் தயாராக இருந்தமையால் அறுவடையாகி, ஆட்டுப்பட்டியினருகில் அமைக்கப் பட்டிருந்த ஒரு களஞ்சியத்தில் கெட்டிபண்ணியுமாய்விட்டது; அதனருகில் ஒரு குச்சைக் கட்டி மலாச்சியையும், மார்ட்டினையும், அவன் மனைவியையும் குடிவைத்துமாய்விட்டது. ஆறுவாரம் வரையில் குடுகுடென்று போவதும் வருவதுமாம் வேலை கடுமையாக நடந்துகொண்டிருந்தது. ஆனால் காலஸ்திதி மிக நேர்த்தியாக இருந்தமையால் எல்லாம் சாவதானமாய்க் கொணர்ந்து சேர்க்கப்பட்டன. இனிப் போர்வீரரின் ஊழியம் தேவையில்லாததால், மிஸ்டர் காம்பெல் அவர்களின் கணக்கைப் பார்த்துத் தீர்த்துவிட அவர்களும் கோட்டைக்குத் திரும்பிப் போய்விட்டனர்.

ஹென்றி கட்டிடங்களையும், தான்ய அரிப்போர்களையும் புல் போர்களையும், புற்காட்டு வெளியில் நிரம்பக்கால்நடை மேய்வதையும் உற்றுப்பார்த்துவிட்டு ஆல்ப்ரெடை நோக்கி, "நாம் இங்கே வந்து கொஞ்சநாள்கள்தான் ஆகின்றன என்று யாவர்தான் சொல்லுவார்கள்?" என்றான்.

"பல துளி பெரு வெள்ளம் அல்லவா?" என்றான் ஆல்ப்ரெட்; "நாம் மட்டும் செய்தால் ஆறுவருஷங்கள் பிடிக்கும். வேலையைக் கோட்டையிலிருந்து கிடைத்த உதவியைக் கொண்டு செய்து முடித்திருக்கிறோம்; நமது தந்தையரின்



பணம் நன்றாக விநியோகம் பெற்றிருக்கிறது—நல்ல பலனைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை."

"கோட்டையிலிருக்கும் கால்நடைகளைப்பற்றிக் கர்னல் பார்ஸ்டர் சொல்லிய ஏற்பாட்டைக் கேட்டாயோ?"

"நம் தகப்பனருக்கு அவர் நேற்றுக் கடிதம் எழுதியிருப்பது என்னவென்றால்—கோட்டையின் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய பசுக்களுக்குமாத்திரம் தீனி போட வழிவகை இருப்பதால், இப்போது கோட்டையிலிருக்கும் எருதுகளை மிகவும் தணிந்த விலை போட்டுத் தள்ளிவிடப்போகிறாராம்".

"குளிர்ந்த காலத்தில் அவைகளுக்குப் போதுமானதீனி நம்மிடத்திலிருக்கிறது என்றே வைத்துக்கொள்வோம். அவைகளை வைத்துக்கொண்டு நாம் யாது செய்கிறது?"

"மறுபடியும் கோட்டைக்கு ராணுவத்தின் ஆகாரத்திற்காக அவைகளை விற்று நல்ல லாபத்தையடைகிறது," என்றான் ஹென்றி. "கோட்டைத் தலைவர் சொல்லுவதில் அவைகளுக்குக் கைச்செலவில் தீனி போட்டு வைத்திருப்பதை விட உடனே விற்றுவிட்டு வேண்டியபோது வாங்கிக் கொள்வதில் மிகுந்த லாபம் சர்க்காருக்கு ஏற்படுமாம்."

"அப்படித்தான் என்பதில் சந்தேகமில்லை, ஏனெனில் அவைகளுக்குப்போடத் தீனி இப்போது ஒன்றும் அவர்கள் கைவசமில்லை. இதுவரை அவர்களுக்குத் தேவையாயிருந்த புல்லுக்கு நம்முடைய புல்காட்டு வெளியைத்தான் நம்பியிருந்தனர்; இவ்வளவு புல்ராசி அவர்களது கைவசம் இல்லாவிடின் சென்ற குளிர்காலத்தில் அவைகளுக்குத் தீனி போட்டிருக்கமுடியாது".

"நமது தந்தையரும் சம்மதிப்பாரென்று எனக்குத் தெரியும்; உண்மையாகவே அவர் அப்படிச் செய்யாவிட்டால் மிகவும் கண்மூடித் தனமாயிருக்கும்—ஏனெனில் பனி நாள் ஆரம்பிக்கும்போது அதற்குள் அநேகமாய் அடிக்கப்

பட்டுவிடும்; நமக்கும் மேய்ச்சல் செலவோடும் சரி."

"நமக்கு இப்படிப்பட்ட நண்பர்கள் அமைந்திருக்கிறதே நல்லகாலம்," என்றான் ஆல்ப்ரெட். "இவ்வளவு உதவிமற்ற குடித்தனக்காரர் ஒருவருக்கும் கிடைத்திருக்கமாட்டாது".

"மாட்டாது. சந்தேகமென்ன? ஆனால், பார் ஆல்ப்ரெட், இவ்வளவு நலங்களுக்கும் காப்டின் லம்லியிடம் உனக்கிருக்கும் சலுகைதான் காரணம்—அஃதென்னவோ அப்படித்தான் நமது அம்மாவும் அப்பாவும் சொல்லுகிறார்கள். நானும் அதை ஒத்துக் கொள்கிறேன். காப்டின் லம்லிக்கு கவர்னரிடமிருக்கும் சலுகையால் நமக்கு இவ்வளவு சிபார்சு கிடைத்திருக்கிறது."

"நமதுகுடும்பத்தின் விசித்திரமான நிலைமைதான் இதற்கெல்லாம் முக்கியமான காரணம்" என்றான், ஆல்பரெட்.

இம்மாதிரி பேச்சு நடந்துகொண்டிருக்கையில், சாப்பாட்டுச் சமயம் வந்துவிட்டபடியால் எல்லாம் தயாராகப் பரிமாரப்பட்டு மிஸிஸ் காம்பெல் காத்துக்கொண்டிருந்தாள். அவள்பக்கத்தில் மலர்ந்தமுகத்துடன்சற்றுநாணிக்கொண்டு நின்றுகொண்டிருந்த இந்தியப்பெண்ணைப் பார்க்க எல்லோருக்கும் சந்தோஷமாக இருந்தது.

"இவ்வினிய பெண் மலரையாதென்று வர்ணிப்பது! இவளை இப்போது நம்மவளான ஒரு சிறுமிஎன்றே சொல்லலாமே! மார்ட்டினுக்கும் இவள் கண்ணுக்குக் கண்ணாக ஆய்விட்டாளே!"

"ஏன் ஆகக்கூடாது? இடைவிடாப் புன்னகைகொண்டமுக மலர் அணிந்த இம்மாதிரிப் பெண் வாய்த்தது ஒருபெரும் பாக்கியமல்லவா? நாம்போவோம் வா, நமக்குச் சாப்பாடு இருக்கவே இருக்கு," என்று நகைத்துக்கொண்டு ஹென்றி சொல்லவே எல்லோரும் வெகு குஷியாக உள்ளே சென்றார்கள்.

பிறகு இரண்டு வாரங்கள் கழிந்தவுடன் ஒரு சம்பவம்



நேரிட்டு மனதிற்குக்கலக்கத்தையுண்டாக்கிற்று. ஆல்ப்ரெட்டையும் மார்ட்டினையும் வைத்துக்கொண்டு மிஸ்டர்காம்பெல் பண்டகசாலையை ஒழித்துச் சாமான்களை ஒழுங்காக வைத்துக்கொண்டிருந்தார். பெட்டிகளையும் மூட்டைகளையும் அநேகமாய்த் திறந்து காற்றோட்டம் கொடுப்பதில் முனைந்திருக்கும்போது, மிஸ்டர் காம்பெல் திரும்பிப்பார்க்கவே தமக்குச் சமீபத்தில் ஒரு இந்தியன் நிற்பதைக் கண்டு திகைத்தார். அவன் சுற்றிலும் திறந்துகிடந்த அநேக கம்பளிமூட்டை முதலியவற்றையும், வெடிமருந்து, குண்டு, மற்ற சாமான்களுமுள்ள பீப்பாய்களையும் கண்கொட்டாமல் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான்.

"இஃதென்ன! யார் இவன்?" என்று மிஸ்டர் காம்பெல் திடுக்கிட்டாற்போல் கத்தினார்.

மிஸ்டர் காம்பெல் கத்தும்போது அவனுக்குத் தங்கள் முதுகைக் காட்டிக்கொண்டு நின்றிருந்த மார்ட்டினும் ஆல்ப்ரெட்டும் திரும்பியதும் அந்த இந்தியனைக் கண்டார்கள். அவன் சதைப்பற்றுள்ள புஜபலமுடையவன். வயதில் முதிர்ந்தவன். காலுக்குத் தோலுறையும் உடம்பில் மான்றோல் சட்டையும், தலையில் கச்சுக்கட்டப்பட்ட போர்க் கழுகு இறகும், கழுத்தில் செம்புக்காசு, பித்தளைக்காசு, நாய்க்காசு இவைகளால் கட்டப்பட்ட காசுமாலைகளும்— ஆகிய இவையுடன் விளங்காநின்றான். அவனது முகத்தில் பச்சைக்குத்தில்லை— ஆனால் கண்களைச் சுற்றி இரண்டு கருங்கோடுகள் வளைத்திழுக்கப்பட்டிருந்தன. அவன் தலை மொட்டையடிக்கப்பெற்று ஒரு உச்சிக்குடுமி மட்டும் நீளமாய்ப் பின்னால் தொங்கிற்று. இடைக்கச்சில் ஒருகோடாரியையும், கத்தியையும் புஜத்தில் ஒரு துப்பாக்கியையும் தரித்திருந்தான். மார்ட்டின் அவ்விந்தியனுக்கருகிற்சென்று அவனையுற்றுப்பார்த்தான்.

"அவனது குலம் எனக்குத் தெரியும்," என்றான்

மார்ட்டின்; "ஆனால் பெயர் தெரியாது; ஆனால் அவனொரு தலைவன். ஒரு போர்வீரன்."

மார்ட்டின் பிறகு அவனுடன் இந்திய பாஷையில் பேசினான். இந்தியன் மட்டும் பதிலுக்கு "இக்" என்று கனைத்தான்— அவ்வளவுதான்.

"அவனுக்குப் பெயரைச்சொல்ல இஷ்டமில்லை," என்றான் மார்ட்டின்; "ஆதலால் நல்லஎண்ணத்துடன் அவனிங்கு வரவில்லை. மிஸ்டர் ஆல்பரெட்! மலாச்சியை உடனே இங்கே அழைத்து வா. அவன் இவனை யறிந்திருப்பான் நிச்சயம்".

ஆல்ப்ரெட் மலாச்சியை அழைத்துவர வீட்டுப்பக்கம் சென்றான். அதனிடையில் இந்தியன் அசையாமல் நின்றுகொண்டு கண்ணுக்குத் தெரிந்த எல்லாச் சாமான்களையும் உற்றுப் பார்த்துக்கொண்டே நின்றான்.

"இவனிங்கே எப்படி வந்திருக்கக்கூடுமென்பது மிகவும் ஆச்சரியம்," என்றான் மார்ட்டின். "ஆனால் வாஸ்தவத்தில் சிலநாள்களாக நானாவது மலாச்சியாவது வெளியிற் போகவேயில்லை."

பேசிமுடித்தானோ இல்லையோ ஆல்ப்ரெட் மலாச்சியுடன் திரும்பி வந்துவிட்டான். மலாச்சி இந்தியனைப் பார்த்துவிட்டுப் பேசினான்.

இந்தியன் இப்போது இந்திய பாஷையிற் பதில் சொன்னான்.

"அவனது முதுகைப் பார்த்தவுடன் அவன் இன்னானென்று அறிந்துகொண்டுவிட்டேன்," என்றான் மலாச்சி; "அவன் நல்லத்திற்கு வரவில்லை; ஐயோ! பாவமே! அவன் இப்போதுதானா வந்து பார்க்கவேண்டும்? இது ஒரு பெரிய மயக்கம்."

"அதென்ன? இவன் யார்?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"ஐயா! இவன்தான் ஆங்க்ரீஸ்நேக் என்பவன்," என்



றான் மலாச்சி. "இந்திய ஆலோசனைச்சபைக் கூடுமுன் இவனிங்கு வருவானென்று நான் எதிர்பார்க்கவில்லையே. அது நடக்க இன்னுமொருமாதமிருப்பதால் அப்போதல்லவோ இவனைப் பற்றி உஷாராக இருக்கக் கருதியிருந்தேன்."

"ஆனால்அவனிடமிருந்துநாம்பயப்படவேண்டியதென்ன?"

"அதுவா? இனித்தான் ருஜுவாகும்; ஆனால் இதை நான் நிச்சயமாகச் சொல்லுவேன்— அவனது கண்களில் இன்று அகப்பட்ட பொருள்கள் இவ்வுலகிலகப்படக்கூடிய தங்கக்குவியல் எல்லாவற்றைக் காட்டிலும் அவனுக்கு மேலானவை. அதோடு, அவனிடம் அயோக்கியத்தனத்தைத் தவிர வேறொன்றும் கிடையாது."

"ஆனால் ஓர் ஆளைக்கண்டு நாம் பயப்படுவது ஏன்?" என்றான் ஆல்ப்ரெட்.

"அவனது கூட்டத்தினர் எட்ட இல்லை, ஐயா!" என்றான் மலாச்சி; "அவனுக்கு அனுசாரிகள் பலரில்லாவிடினும் சிலர் இருக்கின்றனர். அவனோடு சேர்ந்தவர்களும் அவனையொத்த கெட்டவர்கள்தாம். நாம் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும்."

மலாச்சி இந்தியனைச் சில கேள்விகள் கேட்டதற்குக் கிடைத்த பதில் "இக்" என்ற கனைப்பு ஒன்றுதான்.

"இங்கே இருக்கும் மருந்தும் குண்டும் நமது துப்பாக்கிகளுக்குத்தான் என்றும், அவைகள் அவனது இனத்தாரனைவரிடமும் இருப்பதைவிட மிகுதியாகவே இருக்கின்றனவென்றும் சொன்னேன். அதனாலொன்றும் பயன்படாவிடினும், நாம் நன்றாய்த் தயாராக இருக்கிறோம் என்றாவது தெரிந்திருப்பது நலம். இவ்வளவு வெடிமருந்து சாமான்களிருப்பதைப் பார்த்து இவன் திகைத்துப் போய்விட்டானென்பதிற்சந்தேகமில்லை. ஆனால்இவற்றையெல்லாமிவன்பார்த்தது மட்டும் போதாத காலந்தான்."

"அவனுக்கும் கொஞ்சம் கொடுக்கலாமா?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"ஐயா! கூடவே கூடாது! கொடுத்தால் அதைக்கொண்டு மற்றதையும் கைப்பற்றுவதற்கே முயலுவான். ஆயினும், இவனது கூட்டத்திற்குள் இவனொருவனுக்குத்தான் துப்பாக்கி இருக்கிறதென்று நான் நினைக்கிறேன். இப்பொழுது செய்யவேண்டியதென்னவென்றால் கதவைச் சாத்திவிடவேண்டும்—அப்போதவன் போய்விடுவான்."

மலாச்சி சொன்னபடி அவர்கள் செய்யவே, இந்தியனும் கொஞ்சம் தாமதித்துவிட்டுக் குதிகாலில் சக்கரித்துத் திரும்பிப் போய்விட்டான்.

"அவன் ஒரு பெரிய ராக்ஷஸப்பபலாச்சுதே," என்றான் மலாச்சி. "இந்த அறையிலிருக்கும் சாமான்களை அவன் கண்ணுற்றது பெரிய ஆபத்துக்கே ஏதுவாகுமே! அவனுக்கு ஆங்க்ரீஸ்நேக்கு என்ற பெயர்வீணானதல்ல".

"தற்சமயம் பயத்திற்கு இடமுண்டோ?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"ஐயா, என்னத்தைச் சொல்லுகிறது? இந்தியர்களுக்கு எல்லாவற்றுள்ளும் அருமையான பொருள் என்னவென்றால் துப்பாக்கிகளும் வெடிமருந்துமே. அவைகளை அகப்பட்டவிடத்தில் கைப்பற்றிக்கொள்ள யாதும் செய்யத்துணிவார்கள். இவனுடைய இனத்தார்கள் சமீபமாக இருந்தால் அவர்களையும் அழைத்துவந்து தாக்குவான் என்பது நிச்சயம்."

"இருக்கட்டும். இந்த விஷயங்கள் நம்மோடு இருக்கட்டும். பெண்களுக்குத் தெரியவேண்டாம்."

"அப்படியே. ஆயினும், ஸ்டராபெர்ரிக்குச் சொல்லவேண்டியதவசியம். ஏனெனில் அவளும் ஒரு இந்தியாளாகையால், எதிரிகளுடைய போக்குவரத்தைப்பற்றி உஷாராக இருந்து நமக்குத் துப்புச் சொல்லுவாள். நானும் உஷாராக



இருந்து, மேலே என்ன செய்யப் போகிறார்கள், அவன் இனத்தார்கள் எத்தனைபேர்கள், இந்தப் பிரதேசத்திற்கு இப்போது வந்ததின் கருத்தென்ன, என்பவைகளைப்பற்றித் துப்பறிய முயலுகிறேன்.

கோட்டைத் தலைவரால் சொல்லப்பட்ட ஏற்பாட்டிற்கிணங்கி மிஸ்டர் காம்பெல் அவரிடமிருந்து பதினெட்டு எருதுகளை வாங்கினார். பசுக்கள் நீங்கலாகக் கோட்டையிலிருந்த கோதனத்தில் மிஞ்சினவை இவ்வளவுதான். ஊட்டு மறுத்த கன்றுகளில் ஆறையும் வளர்ப்பதற்காக ஓட்டிக்கொண்டார். ஏற்கனவே மேய்ந்துகொண்டிருந்த புற்காட்டுவெளியில் இனி முளைக்கும் புல்லை இரண்டாவது போகம் அறுவடை செய்யலாமென்று அதை விட்டுக் கால்நடைகளை காட்டிற்குள் அடித்து விட்டார்கள். வேனிற்காலம் விரைவாகச் சென்றுவிட்டது போலும்—ஏனெனில் அலுவல்கள் அவ்வளவு ஒழிவற்றிருந்தன. ஒவ்வொருநாளும் ஏரியில் மீன்பிடித்து அன்றன்று தின்று மிச்சமானதை உப்பிட்டுக் குளிர்காலத்திற்காகச் சேர்த்துவைத்தனர். மார்ட்டின் இப்போது விசேஷமாகக் காட்டுவெளியில் இருந்துகொண்டு கால்நடைகளுக்குக் காவலாக இருந்துவந்தான். மலாச்சியும் இவனுடன் சில சமயங்களிற் போனாலும், பெரும்பாலும் ஜானுடன் வேட்டைக்குப் போய்க்கொண்டிருந்து தவறாமல் எதையாவது கொண்டுவந்துகொண்டேயிருந்தான். பல காடித்தோல்களைக் கொண்டுவந்து சேர்த்தனர்; சில சமயம் அதனிறைச்சியும் கொண்டுவருவார்கள்—ஆனால் இது மலாச்சிக்கும் மார்ட்டினுக்கும் பிடித்திருந்தாலும் மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை. இரண்டாவது போகம் புல் வெட்டிக் கொண்டுவந்து சேர்த்தானவுடன் அலுவல் அவ்வளவு ஜாஸ்தியாகவில்லை. ஹென்றியும் மிஸ்டர் காம்பெல்லும் பார்லிவலை வைத்துக்கொண்டு கோதனங்களைப் பார்த்துக்கொள்வதற்கு மு

ந்தது. தழைகள் மாறுவதற்கு ஆரம்பித்துவிட்டபடியால் கால்நடைகளைக் காட்டைவிட்டுப் புற்காட்டுவெளிக்கு ஓட்டி வந்துவிட்டனர். எல்லாம் ஒழுங்காய் நடந்துவந்தன. ஒரு நாளைப்போல் மற்றொரு நாளும் இருந்தது. போர் வீரர்களால் ஆட்டுப்பட்டிக்குள் அமைக்கப் பெற்ற களஞ்சியத் தடியில் ஆல்ப்ரெடும் ஹென்றியும் போர்வைத்திருந்த அரியை மோதி, வைக்கோலைக் கால்நடைகளுக்குப் பனிக்கால உணவுக்காக ஒரு பக்கமாகப் போர்போட்டார்கள். ஓட்டுத் தானியமும் கோதுமையும் பண்டகசாலைக்குள் கொண்டுபோய்ச்சேர்க்கப்பட்டன. அவருடைய பன்றிகளும் விசேஷமாய் விருத்தியாகிப், பல கொழுக்கடிக்கப்பெற்று அடித்து வற்றல் போடத் தயாராகவிருந்தன. இந்த வேலைசெய்யும் தருணம் வந்துவிட்டபடியால் எல்லாரும் இறைச்சியை வற்றல்போடுவதில் முனைந்திருந்தார்கள். உப்பிட்ட பன்றியிறைச்சி வற்றல்களைப் புகையேற்றுவதற்காக ஒரு சிறிய கொட்டகையும் போட்டிருந்தனர். அவர்களுக்கு இப்போது எல்லாம் நிறைந்திருந்தபடியால், இப்படித் தங்களுக்கு நல்லகாலம் வாய்த்ததற்காகக் கடவுளை வாழ்த்தினர்.

இலையுதிர் காலம் இப்போது முதிர்ந்துபோய் விட்டது; விக்கினமின்றி அன்றன்றுவேலை நடந்து கொண்டேவந்தது. அடிக்கடி கோட்டையிலிருந்து ஓர் உத்தியோகஸ்தர், இல்லாவிடில் மற்றொருவர், அல்லது கோட்டைத்தலைவர் வந்து போனார்கள். இந்தியர்கள் தங்கள் ஆலோசனைச் சபையொன்று கூட்டினார்கள்—ஆனால் இங்கிலீஷ் ஏஜண்டு வந்திருந்தமையாலும், இந்தியத் தலைவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்படி கம்பளிகளும் மற்றைப் பொருள்களும் குறைவில்லாமல் அனுப்பப்பட்டிருந்தமையாலும், எதிர்பார்த்தாற்போலவே ஏற்கனவேயிருந்த விரோதமெல்லாம் பறந்துபோய் விட்டன. ஆங்க்ரீஸ்நேக்கும் மற்றும் ஓரிரண்டு பேரும் காரத்



துடன் பேசினார்களென்பது உண்மையாயினும், அவர்கள் துடுக்கடக்கப்பட்டார்கள். ஸ்நேஹ உடம்படிக்கைக்கு அடையாளமாகப் புகைக்குழாயைக் கொடுத்தும் அங்கீகரிக்கப்பட்டு மாய்விட்டபடியால் இவர்களைப் பற்றியவரை இனி அபாயம் ஒழிந்தது போலும். மலாச்சியும் ஆலோசனைச் சபைக்குப்போயிருந்து மரியாதையுடன் நடத்தப்பெற்றான். அவனொரு இங்கிலீஷ் ஏஜண்டு ஸ்தானத்திற்குப் பேசுவதற்கு அனுமதி பெற்றிருந்து அவன் பேசினதும் பயன்பட்டது. இப்படி யெங்குப்பார்த்தாலும் சண்டை சச்சரவு நீங்கி க்ஷேமம் வந்துவிட்டாற்போல் தோன்றவே, ஒரு சம்பவம் நேர்ந்தது—அதை இப்போது சொல்லுவோம்.

இந்திய வேனிற் காலமென்று சொல்லும் ருதுவானது ஆரம்பிக்கவே ஆகாயமெங்கும் ஒருவிதக் கம்மல் ஏற்பட்டுப் போய் விட்டது. ஒருநாட் காலையில் வெளிச்சமாவதற்குக் கொஞ்சம் முன்பு மேரியும் எம்மாவும் விழித்துக் கொண்டுவிட்டபடியால் மாடு கறக்க வெளியிற் புறப்பட்டுப் போகும்போது, கம்மல் எப்போதைக் காட்டிலும் கனத்திருப்பதைக் கண்டார்கள். விசுவமண்டலத்திற்குரிய பெருங்காற்று ஏற்கனவே யடித்திருக்க வேண்டும், அடிக்கவில்லை: ஆதலால் அஃதெப்போதடிக்குமென்று எதிர்பார்த்திருந்த சமயம்; அன்று ஆகாயமெங்கும் காற்றடிக்கும்போல் தோற்றமிருந்தபடியால் அது அப்போது வந்து கொண்டிருந்ததென்று மேரிக்குத் தோன்றிற்று. ஆயினும் காற்று மிகவும் ஒய்ச்சலாக விருந்தமையால் அப்போதடித்ததாகவே தெரியவில்லை. வாளியை யெடுத்துக்கொண்டு வெளியிற் புறப்பட்ட வுடனே ஸ்ட்ராபெர்ரி தனது குடிசையிலிருந்து வந்து சேரவே, ஆகாயத்தில் கம்மிக் கொண்டு மூடியிருந்ததை யவளுக்குக் காட்டினாள். காற்றைப் பிடிப்பதற்குப்போல அவள் சக்கிரித்துக் கொண்டு திரும்பிக் காற்றை உறிஞ்சினாள். கடை

சியில் "காட்டில் பெரியதீ" என்றுரைத்தாள். ஆல்ப்ரெடும் மற்றவர்களும் சீக்கிரம் வந்து சேர்ந்தனர்; அவ்வளவு நாழி சென்று எழுந்து வந்ததற்காக எம்மா அவர்களைப் பரிஹாஸம் செய்த பிறகு, அவர்களும் ஆகாயத்தில் புதிய தோற்றத்தைக் கவனித்துப் பார்த்தனர். காட்டில் தீப்பற்றி எரிந்த தென்று ஸ்ட்ராபெர்ரி சொன்னதை மார்ட்டினும் ஒப்பம் வைத்தான். சென்ற இரவில் மலாச்சியும் ஜானும் கோட்டையிலிருந்து திரும்பி வரவில்லை—ஆயினும் விடிந்து வெளிச்சமானவுடன் அவர்களும் வந்து சேர்ந்தனர். அவர்களும் தூரத்திலிருந்து அத்தீயைப் பார்த்ததனால் அது வடகிழக்கிலிருந்த தென்றும், அநேக மைல்களுக்குப் பரவியிருந்த தென்றும் சொன்னார்கள்; அதனால் தான் வேட்டையைப் பாதியில் விட்டுவிட்டு வரவேண்டியிருந்தது. அன்று பாக்கிப் பொழுதிற் காற்று இல்லையென்றே சொல்ல வேண்டும்—ஆயினும் தீயின் மணமும் மங்கலும் மட்டும் அதிகரித்துக்கொண்டே வந்தன. இரவில் காற்று உண்டாகி வர வர தீ காணப்பட்ட வட கிழக்குத் திசையிலிருந்து ஓங்கியடிக்க வாரம்பித்தது. இரவில் மலாச்சியும் மார்டினும் அடிக்கடியெழுந்து பார்த்தனர்—ஏனெனில் அந்தத் திசையிலிருந்து காற்றும் விடாமலடித்து மழையுமில்லாமற் போனால் அபாயமுண்டென்று அவர்களுக்குத் தெரியும்; இன்னும் தீ தூரத்திலேதானிருந்தது; ஆனால் மறுநாட் காலையில் காற்றுப் புயலாக அடிக்க ஆரம்பித்தது. பகல் பன்னிரண்டு மணிக்குள் புகை அவர்கள் மேல் மோத திரள் திரளாக எரியின்மேலோடிற்று

"மார்ட்டின்! இந்தத் தீயினால் அபாயம் நேரிடுமென்று நீ நினைக்கின்றாயோ?" என்றான் ஆல்ப்ரெட்.

"ஐயா! அவை யெல்லாம் இனிமேல் பார்த்துத்தான் சொல்லவேண்டும்; இப்போதடிக்கும் திசையிலிருந்து காற்று



இதே வேகத்துடன் இன்னும் இருபத்துநான்கு மணி நேரம் அடித்தால் தீ நேராக இங்கேயே வந்து விடும்."

"ஆயினும் நமக்கும் காட்டிற்கும் மத்தியில் அவ்வளவு பொட்டல் வெளியிருப்பதால் நமது வீட்டிற்கு அபாயமொன்றும் நேரிடாதென்று தோன்றுகிறது."

"ஐயா! அதை நான் சொல்லமாட்டேன்; மைல் கணக்காகக் காட்டில் தீப்பற்றி யெரிவதை நீங்கள் பார்த்திருக்கவில்லை: அப்படியிருந்தால் அது எப்படிப் பட்டதென்று நீங்கள் அறிவீர்கள். நமக்குத் தப்பித்துக் கொள்ள இரண்டு வழி இருக்கின்றன: ஒன்று காற்றுடன் மழையும் தாரை தாரையாகச் சொரிய வேண்டும்: இல்லாவிட்டால் காற்றுக் கொஞ்சம் திசை மாறி யடிக்க வேண்டும். அப்போது அபாயத்திற்கு ஹேது இன்னும் குறையும்."

ஆனால் காற்றும் மாறவில்லை, மழையும் வரவில்லை; சூரியன் சாயுமுன் தீ அவர்களுக்கு இரண்டு மைல் தூரத்திற்குள் நெருங்கிவிட்டது; தூரத்தில் கர்ஜனையானது காற்றைக் கிழித்துக்கொண்டு வந்ததுபோலும்; உஷ்ணமும் புகையும் மிகுதியாகவே அவர்கள் மூச்சுவிடுவதற்கும் திணறிப்போய், கிலியால் நடுக்கமுற்றிருந்தனர்.

சூரியன் அஸ்தமிக்கவும் காற்று இன்னும் ஓங்கிவீசி, ஜ்வாலைகளும் கண்ணுக்குத் தெளிவாகத் தெரிந்து ஆகாயமெங்கும் கோடிக்கணக்காக நெருப்புப் பொறிகள் பறந்துகொண்டிருந்தன. தீயும் வர வர ஆக்ரகத்துடன் அவர்கள் மேல் மோதியடித்துச் சீக்கிரத்தில் மூச்சுவிடுவதற்கே திணறிப் போனார்கள். கால்நடைகளும் கிலிபிடித்து வாலைக் குழைத்து முக்காரம்போட்டுக் கதறிக்கொண்டு எரிக்கு நாலு காற்பாய்ச்சலில் ஓடிவந்துவிட்டன. அங்கேவந்து முழங்கால் மட்டுமுள்ள ஜலத்தில் ஒன்றோடொன்று இணைந்துகொண்டு பிரமம் பிடித்து நின்றன.

"நல்லது, மலாச்சி!" என்றார் மிஸ்டர் காம்பெல். "இது மிகவும் பயங்கரமானது. நாம் என்ன செய்யவேண்டியது?"

"ஆண்டவனை வேண்டிக்கொள்ள வேண்டியதுதான்; வேறுயாதும் நாம் செய்யக்கூடியதில்லை," என்றான் மலாச்சி.

ஜ்வாலைகள் காட்டின் முனைக்குக் கிட்டின தூரத்தில் வந்துவிட்டன; ஆகாயத்தில் நெடுங்கம்பங்கள் போல் கிளம்பி எரிந்தன; பிறகு காற்றால் கீழே மோதப்பட்டு, காட்டில் கிளைகளுக்குள்ளாகப் படீர் படீரென்று வெடித்துக்கொண்டு, வழியில் நின்ற பெருமரங்களின் உடல்களைக் கருக்கிக்கொண்டும் சீறிக்கொண்டும் வந்தன; இப்படி இருக்கப் புற்றரையின் மேல் தாரை தாரையாக வந்து விழுந்த நெருப்புக்களும், பந்து பந்துக்களாய் வந்து விழுந்த நெருப்புத் துண்டுக்களும், ஏற்கனவே திணறச்செய்யும் புகையுடன் சேர்ந்து, அங்கு இனி இருப்பது அசாத்தியமான காரியம் என்று எண்ணச் செய்தன.

"நீங்களெல்லோரும் தெப்பத்திற்போய் ஏறிக்கொண்டுவிடவேண்டியது," என்றான் மலாச்சி. "ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்கக் கூடாது; இங்கு இனி நீங்கள் இருந்தால் திணறிவிக்கிப்போவீர்கள். மிஸ்டர் ஆல்ப்ரெட், நீங்களும் மார்ட்டினும் தெப்பத்தை விட்டுக்கொண்டு எவ்வளவு தூரத்திற்கப்பால் போனால் புகையினுபத்திரவம் இல்லாமல் தாராளமாக மூச்சு விடமுடியுமோ அவ்வளவுதூரம் ஏரிக்குள் போய்விடுங்கள். ஜல்தி! க்ஷணமேனும் தாமதம் கூடாது! காற்று வர வர வலுக்கிறது."

உண்மையாகவே ஒரு க்ஷணங்கூடத் தாமதிப்பதற்கிடமில்லை. மிஸ்டர் காம்பெல் தமது மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டார்; ஹென்றி இரண்டு சிறுமிகளையும் கையைப்பிடித்துக்கொண்டு சென்றான்—ஏனெனில் புகையடர்ந்திருந்தமையால் கண்ணுக்கு வழிதெரியவில்லை. பர்ஸி



வலும் ஸ்ட்ராபெர்ரியும் பின்றொடர்ந்து சென்றனர். ஆல்ப்ரெடும் மார்ட்டினும் தெப்பத்தைத் தயார்செய்ய முந்தியே போய்விட்டனர். சில நிமிஷங்களுக்குள் படகிலேறி கரையைவிட்டுத் தள்ளிக்கொண்டு போய்விட்டார்கள். தெப்பத்திற்கூட்டம் மிகுதியேயாயினும் அடிப்பக்கம் விசாலமாக இருந்தமையால் பாரத்தை நன்றாய்ச் சுமந்தது. கரையைவிட்டு உள்ளே அரைமைல் தூரம் தள்ளிப்போனபிறகுதான் மூச்சுவிடக் கொஞ்சம் சாத்தியப்பட்டது. மார்ட்டினும் ஆல்ப்ரெடும் தள்ளுவதை நிறுத்தும்வரையில் ஒரு வார்த்தைகூட ஒருவரும் பேசவில்லை.

"மலாச்சியும், ஜானும்—அவரிருவரும் எங்கே?" என்றாள் மிஸிஸ் காம்பெல். இப்பொழுதுதான் புகையைவிட்டு நீங்கி அவளும் இவர்கள் படகில் இல்லையென்று தெரிந்துகொண்டாள்.

"ஓ அம்மா! அவர்களைப்பற்றி அஞ்சவேண்டாம்," என்றான் மார்ட்டின்; "மலாச்சி ஏதாவது முடியுமானால் உதவிசெய்வதற்காகப் பின்னாலே தங்கிவிட்டான்; தன்னையும் ஜானையும் பத்திரமாகப் பார்த்துக்கொள்ள அவனுக்குத்தெரியும்."

கொஞ்சநேரம் கழித்து மிஸிஸ்காம்பெல் "இது ஒரு பிரமாதமான ஆபத்து. பாருங்கள்! பொட்டல்வெளிவரையில் காடு முழுவதும் தீப்பற்றி எரிகிறதே! வீடும் எரிந்துபோகுமே! நமக்கொன்றும் மிஞ்சாதே!" என்றாள்.

"என்னன்பிற்குரியாளே! இது பகவானுடைய சங்கற்பம்! நமக்கிருக்கும் இந்தச் சிறியசெல்வம்கூட நமக்கு ஒட்டக்கூடாதென்றிருந்தால் நாம் முணுமுணுக்காமல் மனதொழிந்து கீழ்ப்படியவேண்டும். நம்முயிர்தப்பிற்றே என்று நாம் பகவானைத் துதிப்போம்."

சற்றுநேரம் ஒருவரும் வாயைத்திறவாமலிருந்தார்கள்;

கடைசியில் எம்மா வாயைத்திறந்து, "மாட்டுக்கொட்டகை தீப்பிடித்தெரிகிறது—கூரை கிழித்துக்கொண்டு ஜ்வாலையெழும்புவதைக் காண்கிறேன்," என்றாள்.

தன்னுடைய பர்த்தாவினுடைய கையைப்பிடித்துக்கொண்டிருந்த மிஸிஸ்காம்பெல் பேசாமல் கையைப்பிசைந்தாள். அப்போதுதான் அவர்கள் ஆஸ்திமுழுவதும் பற்றி எரிந்துபோக ஆரம்பித்தன—ஐயோ! பாவம்! அவர்கள் அத்தனைநாளாக உழைத்த உழைப்பும் செய்த பிரயத்தனமும் எல்லாம் வீணாகப் போகின்றனவே! பனிநாள் நெருங்கிவிட்டது— வீடெல்லாம்போய், கதியற்றவராவார்களே! அவர்களென்ன செய்வார்கள்!

இவையெல்லாம் அவள் மனதில் தோன்றின—ஆயினும் அவள் வாயைத் திறக்கவில்லை.

இந்த க்ஷணத்தில் அக்கினியின் ஜ்வாலைகள் கொழுந்துவிட்டுச் செங்குத்தாக ஆகாயத்தி லெழும்பிக்கொண்டிருந்தன. மார்ட்டின் அதைக் காணவே உயரக் கிளம்பிக் குதித்தான்.

"காற்றுக் கொஞ்சம் ஓய்ந்திருக்கிறது" என்றான் ஆல்ப்ரெட்.

"ஆம்," என்று கையை உயரத் தூக்கிக்கொண்டு மார்ட்டின் சொன்னான். "மழைத்துளி ஒன்று விழுந்தது. ஆம்! ஆம்! இதோ வந்துவிட்டது! கால்மணி பாருங்கள்—நமக்கு வந்த அபாயம் நிவர்த்தியாய் விடலாம்"

மார்ட்டின் சொன்னது சரி. காற்றும் சற்று ஓய்ந்திருந்தது, மழைத்துளிகளும் சில விழுந்தன. மூன்று நான்கு நிமிஷங்கள் ஓய்ந்திருந்தது, அப்போது மாட்டுக்கொட்டகை மும்முரமாக எரிந்து கொண்டிருந்தாலும் நெருப்புப் பொறிகளும் துண்டுகளும் முன்போலப் புற்காட்டுவெளியின்மீது அடிக்கப்பட்டு விழவில்லை; இப்படியிருக்கத் திடீரென்று



தலையைக் காற்றுக்கு எதிராகத் திருப்பவே கவிழுமோ என்ற பயம் நிவர்த்தியாய்விட்டது. இப்போது காற்றானது வலுவாய்க் கரையை நோக்கி யடித்தமையால் ஏரியும் கொந்தளித்து வெண்ணுரையால் மூடப்பட்டுவிட்டது. சில நிமிஷங்களுக்குள் தெப்பம் கரைக்கு வந்துவிட்டது—ஆனால் அது வந்துசேருவதற்குமுன், இருபுறமும் நீர் கிளம்பி அடித்தமையால் மூழ்கிவிடும் போலிருந்தது. ஆல்ப்ரெட் அவர்களை அசையாமலிருக்கும்படி எச்சரிக்கை செய்துவிட்டு, துடுப்புகளைச் செங்குத்தில் வைத்துக்கொண்டு தானும் அசையாமல் இருக்கவே, தெப்பமானது அம்பு வேகத்துடன் அலைகளுக்குள்ளாகக் கிழித்துக்கொண்டு தரைக்குவந்து தட்டிநின்றது.

மார்ட்டினும் ஆல்ப்ரெடும் கிளம்பி ஜலத்தில் குதித்து மற்றவர்கள் இறங்குவதற்காகத் தெப்பத்தை இன்னும்கரைக்குள் இழுத்தார்கள்; மழை இன்னும் தாரை தாரையாகச் சொரிந்துகொண்டிருந்தது. அவர்களெல்லோரும் சொட்டச் சொட்ட நனைந்துவிட்டார்கள். அவர்கள் இறங்கியதும் மலாச்சியும் ஜானும் வந்துசேர்ந்தனர்.

"எல்லாம் நின்றுவிட்டன, ஒன்றுக்கும் சேதமில்லை," என்றான் மலாச்சி; "தொட்டதும் விட்டதும் வாஸ்தவமே! ஆயினும் எல்லாம் பத்திரமாக இருக்கின்றன. மாட்டுக்கொட்டிலுக்கு மட்டும் சேதம் வந்திருக்கிறது. ஆனால் அதைச் சரிப்படுத்துவது வெகு சுலபம். எல்லாம் இருக்கட்டும்—நீங்கள் சீக்கிரமாக வீட்டுக்குப்போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்."

"மலாச்சி! ஒன்றுக்கும் சேதமில்லை என்று நீ நினைக்கிறாயா?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"ஆம், ஐயா! இப்போது பயமேயில்லை; நெருப்பு ஆற்றைத் தாண்டவேயில்லை; அப்படி இருந்தாற்கூட இந்த மழையில் அவிந்துபோயிருக்கும்; ஏனெனில் இப்போதுதான் ஆர

ப்பித்தது; ஆனால் தப்பித்ததுமட்டும் தெய்வீகம்தான், அது நிச்சயம்."

அந்தக்கோஷ்டி வீட்டைநோக்கி நடந்தார்கள்; வந்து சேர்ந்தவுடன் மிஸ்டர் காம்பெல் தங்களை ரட்சித்ததற்காகக் கடவுளுக்கு மண்டிபோட்டுத் துதிசெய்தார். இதில் எல்லோரும் பூர்ணமனதுடன் சேர்ந்தார்கள். இன்னும் சற்று நேரம் பார்த்துவிட்டு, நெருப்பு விரைவாக அவிந்துகொண்டு வந்தமையால் இனிப்பயத்துக்கு ஹேது இல்லை என்று தெரிந்துகொண்டதின் பேரில் படுக்கப்போயினர்.

மறுநாள் காலையில் எழுந்தவுடன் பண்ணைக்குத் தீயினால் சம்பவித்துள்ள சேதம் எவ்வளவென்று அறிய எல்லோரும் கவலை கொண்டிருந்தார்கள். வெளியிற்போய் அவர்கள் கண்ட காட்சி மிகவும் கண்ணாராவியாக இருந்தது. ஆற்றுக்கு அக்கரையில் இயற்றப் பெற்றிருந்த மாட்டுக் கொட்டிலில் பாக்கி நின்றவை சுவர்களே. புற்காட்டுவெளியில் புற்களெல்லாம் கருகிப்போய்க் கிடந்தன. காட்டுப் பிராந்தத்தில் நெடு மரங்கள் சில பாக்கி நின்றன. ஆனால் அவைகள் கருகிய முண்டங்களே அன்றி இனி தளிர் தழைத்து உயிர் எடுக்கும் மரங்களாக இல்லை. ஆற்றிற்கு இக்கரையில் அதிகமாகச் சேதம் ஏற்பட இல்லை என்றாலும் சுற்று வேலிகளும் வீட்டிலேயே சில பாகங்களும் சற்றுக்கருகி இருந்தன. தைவானுகூலத்தால் காற்றும் மாறி மழையும் வாராமற்போயிருந்தால் வீடும் அடியோடு நிர்மூலமாகப்போயிருக்கும்.

மார்ட்டின் எங்கும் போய்ச் சுற்றிப்பார்த்து வந்து கொண்டுவந்த செய்தி க்ஷேமமாகவே இருந்தது. கால்நடைகளுக்கு யாதும் கெடுதி நேரிட இல்லை. அத்துடன்கூட, காட்டுப் பிராந்தத்தில் மரங்கள் ஒழிந்துபோனது இப்பண்ணையார்க்கு மிகவும் லாபகரமானதே.

இனிச் சாகுபடிக்கு லாயக்கான பூமி ஏராளமாகவே



கிடைக்கும். இதை ஆள்களைக்கொண்டழிப்பதென்றால் ஒரு ராணுவப்படை முழுதும் மாதக்கணக்காக வேலை செய்தாற் கூடச்சாத்தியப்பட்டிருக்காது. புற்காட்டுவெளிகளிலும்மண் டி இருந்தகழுதைப்புல்லும்குச்சிப்புல்லும்ஒழிந்துபோனதின் மூலமாய் கால்நடைக்கினிய புல்இனி அளவில்லாமல் வளரும். ஆதியில் தாம் தப்ப வழியில்லாமல் பெரிய அபாயம் நேர்ந்து விட்டது என்று நடுங்கி இருந்தவர்கள் இம்மாதிரி ஆபத்தை விளைவிக்காமல் லாபத்தை விளைவித்ததைக்கண்டு அப்பண்ணையோரனைவரும் பேரருள் பெருங்கடலான பெருமானைப் போற்றி நன்றி பாராட்டினார்கள்.

தீப்பிடித்தெரிந்த மறுநாள் கோட்டையிலிருந்து இவர்களுடைய க்ஷேமத்தை யறிந்து போகும்பொருட்டு ஆள் வந்தான். அவ்வளவு இலகுவாக இவர்கள் தப்பித்ததைக் கேட்ட கர்னல் துரையும் மற்ற உத்தியோகஸ்தர்களும் நிரம்பச் சந்தோஷப்பட்டார்கள்—ஏனெனில் இந்தக் குடித்தனக்காரர்கள் வீடுவாசலெல்லாம் எரிந்துசாம்பலாகிநிர்க்கதியாய்த் தவிக்கிறார்கள் என்கிற செய்தி எப்போது வருமோ என்று பயந்து, அவர்கள் கோட்டையில் வந்து தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்திருந்தனர்.

வரவர, காலஸ்திதியில் குளிர்மேலாடி கணப்புக்கள் மூட்டப்பட்டன; நாம் மேலே சொல்லிய தீங்குநேர்ந்த ஒரு மாதத்திற்கெல்லாம் பனிநாள் வந்துவிட்டது.

## அத்தியாயம் 31

மறுபடியும் ஒருகஜ உயரத்துக்குத் தரையில் உறைபனி மூடிக்கொண்டது. கால்நடைகளைப் பிளாச்சுவேலிக்குட்புறமாக மாட்டுக்கொட்டகையின் சுற்றுப்பக்கங்களில் தாம்பில்கட்டி, ஆடுகளைப் பட்டிக்குள்ளாக அடைத்துவிட்டு, குதிரைகளையும் தானியப்போர் வைத்திருந்த அடைப்புக்குள்ளாக விட்டார்கள். எல்லாவற்றையும் கெட்டிசெய்துவிட்டு

நீண்ட குளிர்காலம் வரப்போகிறதே என்று வேண்டிய பண்
டங்களையெல்லாம் சேகரம் செய்து வைத்தனர். பனி கொஞ்
சம் பெய்துகொண்டிருந்தாலும், கொடிய மூடுபனி இன்னும்
வரவில்லை. ஆயினும் இரண்டுவாரங்கள் சென்றவுடன் வந்
தேவிட்டது. அப்போது கர்னல்துரையின் வேண்டுகோளின்
படி கோட்டையில் சாப்பாட்டுக்காக ஆறு எருதுகள் அடிக்
கப்பட்டுச் சறுக்குவண்டியில் ஏற்றிக் கோட்டைக்குக் கொண்
டுபோகப்பட்டது. அவர்கள் செய்யவேண்டியிருந்த ஊழி
யங்களில் இதே கடைசியானது. உடனே ஆல்ப்ரெட் கோட்
டை உத்தியோகஸ்தர்களிடம் விடைபெற்று வந்துவிட்
டான். இனி அவர்களொருவரை யொருவர் சந்திப்பது
பனிக்காலம் முடிந்தபிறகுதானே.

சென்றபனிக்காலத்தைப்போல்இவ்விரண்டாம்பனிக்கா
லத்தைத் தள்ளுவதில் இப்பண்ணையோர்க்கு அவ்வாறு தொ
ல்லையில்லை. முந்தி போது எப்படித்தொலையுமென்றிருந்தது.
இப்போதோவென்றால்காலைக்கட்டிக்கொண்டு முடங்கிக்கொ
ண்டிருக்கவேண்டி வரவில்லை. எல்லோருக்கும் பூர்த்தியாக
அநுபவிருந்தத்துடன் படிப்பதற்கும் ஹென்றி வாங்கிவந்த
புஸ்தகங்கள் உபயோகப்பட்டபடியால் நாட்கள் சென்றதே
தெரியாமல் கிருஸ்துமஸ் பண்டிகையும் நெருங்கிவிட்டது.

வேட்டையாடுவதற்காக வெளியிற் போனசமயம் தவிர
பாக்கிநேரமெல்லாம் குழந்தை ஜான் தன்னுடன் கூடவே
இருந்தானென்பது மிஸிஸ் காம்பெல்லுக்கு மிகவும் திருப்தி
யாகவே இருந்தது. அப்படி வேட்டைக்காக வெளியிற்
போயிருந்த போதுகூடக் கவலைப்படுவதை நிறுத்தி வெகு
நாளாகிவிட்டது. ஏனெனில் அவளுக்கு மலாச்சியினிடம்
பூர்ணமான நம்பிக்கை வந்துவிட்டது; ஆனால் மலாச்சியும்
ஜானும் சமீபத்திற் சில நாளாக வெளியிற் போகும்போது
தனிமையில் போவதில்லை; உண்மையாகவே அந்தக்கிழவனு



க்கு மனுஷாளைக்கண்டால் இருந்த அருவருப்புப் போய்,
நாலுபேர்களோடு சேர்ந்திருப்பதில் அவாவிருத்தியாய்க்
கொண்டிருந்தது. இப்போது அவன் நாள்தப்பாமல் அந்தி
யில் வந்து குடித்தனக்காரர்களுடன் சம்பாஷணை செய்து
கொண்டு குளிர் காய்ந்துகொண்டிருந்தான். அவனுக்குத்
தான் பேசுவதில் ஆசை ஜாஸ்தியாய்க்கொண்டே வந்தது.
ஆனால் ஜானுக்கு மாத்திரம் இய்யாதிரியான அந்திச் சம்பா
ஷணை கோஷ்டிகளில்அதிகப்பிடித்தமில்லை.புஸ்தகங்களையோ,
புதியவையானாலும் பழையவையானாலும், அவன் லட்சியமே
செய்யவில்லை. அவன் ஸ்ட்ராபெர்ரியுடன் ஒரு மூலையில்
உட்கார்ந்துகொண்டு தோற்பை தைத்துக்கொண்டோ முள்
ளம்பன்றிகளின் முட்களை இறகுகளாகக் கட்டிக்கொண்டோ
விளையாட்டாகக் காலம் கழித்து வந்தான். சிற்சில சமயங்க
ளில் அவனுக்கு ஏதாவது படிப்புச் சொல்லிக் கொடுக்கலா
மென்று அவனது தந்தையார் முயன்றார்—ஆனால் அவனுக்
குமட்டும் ஒன்றும் இறங்கவேயில்லை. அவன் மணிக்கணக்கா
கப் புஸ்தகத்தைத் திறந்து எதிரில் வைத்திருப்பான்—ஆனால்
அவனது நினைவுமட்டும் வெளியிலெங்கேயோ! ஆதலால்
அந்த விஷயத்தை மிஸ்டர் காம்பெல் தற்காலம் சாத்தியமில்
லையென்று கைவிட்டு, பிறகு அவனும் வயதுசென்று படிப்
பினால் விளையும் நன்மைகளை யுணர ஆரம்பிப்பானேயானால்
கவனிக்கமாட்டானா என்றெண்ணிக்கொண்டு அக்காலம் எப்
போது வரப்போகிறதென்று எதிர்பார்த்திருந்தார். தற்சமயத்
தில் அந்தப்பையனுக்கு உபத்திரவத்தைத்தவிர, பயனொன்று
மில்லை: ஆனால் ஜான் எப்போதும் சமையலறையில் குளிர்
காய்ந்துகொண்டிருந்தான் என்று நினையாதேயுங்கள். பிளா
ச்சுவேலிக்குள் அடைபட்டிருந்த ஆட்டின் வாசனையால் இழு
க்கப்பட்டு, சென்ற குளிர்காலத்தைவிட இப்போது ஓநாய்
களின் உபத்திரவம் மிகுதியாக விருந்தது. ஒவ்வொரு இர

விலும் ஊளையிடுதலுக்கு ஓய்வே இல்லை. ஓநாயின் ஊளைச் சப்தம் காதில் விழுந்தாற் போதும். ஜான் உடனே துப்பாக்கியைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியே வந்துவிடுவான்; மணிக்கணக்காக வெளியிற்கொட்டும் பனியிற் காத்திருந்து ஒன்று அருகில் வந்தவுடன் குறிவைத்துச் சுட்டுவிடுவான்; இம்மாதிரி அநேகம் சுட்டாய்விட்டன. ஒருநாள் இப்படி இருக்கையில் மனதுக்குக் கலக்கத்தை உண்டுபண்ணிய ஒரு சம்பவம் நேர்ந்தது.

வழக்கம்போல் ஒருநாள் சாயங்காலம் ஜான் வெளியிற் போய் ஓநாய் வருவதைக் குறிவைத்துப் பார்த்துக்கொண்டு பிளாச்சுவேலிக்குள் பதுங்கியிருந்தான். இரவு, நக்ஷத்திர வெளிச்சத்தால் பிரகாசமாயிருந்தது—ஆனால் நிலா இல்லை. அப்போது ஒருபிராணி வயிற்றினால் ஓசைப்படாமல் ஊர்ந்துகொண்டு, வீட்டைச் சுற்றியிருந்த பிளாச்சு வேலியின் கதவண்டை வந்துகொண்டிருந்ததை ஜான் கண்டான். ஆனால் இது அவனுக்கு விளங்கவில்லை—ஏனெனில் இதுவரையில ஓநாய்கள் பொதுவாக ஆட்டுப் பட்டிக்குச் சுற்றிலுமிருந்த வேலியோரமாகவாவது, அல்லது வாசலுக்கெதிரிலிருந்த பன்றிக்கடைக்கருகிலாவது திருட்டுத்தனமாகத் திரிவது வழக்கம். ஜான் துப்பாக்கியைச் சாய்த்துக் குறிவைத்துச் சுட்டான். அப்போதே அனுக்குத் திகைப்புண்டாகும்படி அந்த ஓநாயானது பின்னங்கால்களிற் கிளம்பி ஆகாயத்திலெழும்பி மறுபடியும் கீழேவிழுந்து உருண்டுவிட்டதாய்க் காணப்பட்டது. பிளாச்சு வேலியின் திறவுகோலை எப்பொழுதும் உள்ளேவைத்திருப்பது வழக்கம். ஆதலால் உள்ளே ஓடிப்போய் அதைக்கொண்டுவந்து அப்பிராணி இறந்துவிட்டதா இல்லையாவென்று பார்க்கவேண்டுமென்று தீர்மானம் செய்தனர்—அவன் உள்ளே நுழைந்ததும்," என்னப்பா ! நீ அதைக்கொன்றுவிட்டாயோ?" என்றான் மலாச்சி.



“தெரியவில்லை, போய்ப் பார்க்கத் திறவுகோலுக்காக வந்தேன்,” என்றான் ஜான்.

“ஜான் ! இரவில் கதவைத் திறக்க எனக்குச் சம்மதமில்லை ;எப்போதும் நீ செய்யும்வழக்கம்போல் நாளைக்காலைவரையில்ஏன் விட்டுவைக்கக்கூடாது?” “அப்போதுசெய்தால் போதுமென்றுதோன்றுகிறதே” என்றார் மிஸ்டர்காம்பெல்.

அது ஒரு ஓநாய்தான் என்பது எனக்கு நிச்சயமில்லை என்றான் ஜான்

“இல்லாவிடில் வேறென்ன. பையா?சொல்லு,” என்றான் மலாச்சி

“சரி, எனக்கு அது ஓர் இந்தியனென்று தோன்றுகிறது,” என்று ஜான் நடந்ததையெல்லாம் விவரித்துச் சொன்னான்.

“சரி, அதுவும் இருக்கலாம்,” என்றான் மலாச்சி. “அஃதெப்படியானாலும் இரவில் கதவைத் திறக்கக்கூடாது; ஏனெனில், நீ சுட்டது இந்தியனையானால் அவன்மட்டும் தனியாக வந்திரான். இப்போதெல்லாவற்றையும் கெட்டிசெய்துவிட்டு, காலையிற் பார்த்துக்கொள்வோம்,” என்றான் மலாச்சி.

இதனால் மிஸிஸ்காம்பெல்லும் சிறுமிகளும் மிகவும் கிலிகொண்டிருந்தமையால், அவர்களைச் சமாதானம் செய்து படுக்கப் போகச்செய்யப்பட்டபாடு பெரும்பாடாயிற்று.

பெண்பிள்ளைகள் அப்புறம் சென்றதும், “என்ன இருந்தாலும் இன்றுஇரவு முழுதும் நாம் விழித்துக்காத்தே தீரவேண்டும். பையன் சொல்லியது சரியென்பதில் சந்தேகமே இல்லை ஆங்க்ரிஸ்னேக்கும் அவன் கூட்டத்தாரும் அண்டையில் திரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் பையன் விட்ட குண்டு இந்தியனை அடித்திருக்கும்பக்ஷத்தில் அவர்கள் ஓட்டமெடுத்திருப்பார்கள். இருந்தாலும் நாம் உஷாராக இருப்பது நலமே. மார்ட்டின் இங்கிருந்து காக்கட்

டும், நான்கொட்டிலுக்குச்செல்லுகிறேன்," என்றான்மலாச்சி.

"நானே இங்கு இருந்து காக்கிறேன். மார்ட்டின் மனைவியுடன் உன்னோடு வீட்டுக்குச் செல்லட்டும்," என்றான் ஆல்ப்ரெட்.

"உன்னுடன் நானும் நிற்பேன்," என்றான் ஜான்.

"சரி, அதுவும் நல்லதுதான். ஒருத்தருக்கு இரண்டு பேரென்றால் நல்லதுதான். மேலும், அபாயம் நேர்ந்து உதவிக்குச் சொல்லி அனுப்பவேண்டி வந்தால், ஒரு விடுதி அசாமி இருப்பது நலமே," என்றான் மலாச்சி.

"அவர்கள் என்ன செய்வார்களென்று நினைக்கிறாய்?" என்றார் மிஸ்டர் காம்பெல். "கிராதியில் ஏறிக்குதிப்பது அவ்வளவு இலகு வல்லவே."

"அல்லதான். அவர்களுடன் போதிய ஆட்களுமில்லை என்பது எனக்குத் தெரியும். அதைவிட வீட்டிற்குத் தீ வைக்க முயன்றாலும் முயலுவார்கள். ஒன்று மட்டும் நிச்சயம். தங்களுடைய பண்டகசாலையில் அவன் கண்ணுற்ற பொருள்களைக் கைப்பற்றத் தன்னால் இயன்றமட்டில் பார்ப்பான்," என்றான் மலாச்சி.

"பார்ப்பான் என்பதில் தடையில்லை. ஆனால் அது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்று அவன் தெரிந்துகொள்வான்," என்றான் ஆல்ப்ரெட்.

"ஐயா, விஷயமென்னவென்றால், உளவறிவதற்கென்றே அந்தப் பயல்கள் இங்குச்சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஜான் விட்ட குண்டு அவர்களின் ஒருவன் மேல் பாய்ந்திருக்குமானால், அந்தப் பயல்களுக்குக் கொஞ்சம் புத்தி வந்திருக்கலாம்," என்றான் மலாச்சி.

பிறகு சில நிமிஷங்கள் எல்லோரும்பேசிக்கொண்டிருந்துவிட்டு மிஸ்டர் காம்பெல், ஹென்றி, பார்ஸிவல் இம்மூவரும் படுக்கப்போனார்கள். மற்றவர்கள் விழித்திருந்தது கா



வல்காத்தனர்-மலாச்சியும் அவனைச் சேர்ந்தவர்களுடன் ஆட்டுப்பட்டியிலெல்லாம் பத்திரமாக இருக்கின்றனவா என்று பார்ப்பதற்காகத் தனதுவீட்டிற்குப் போனான். ஆல்ப்ரெடும் கூடப்போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்தான்.

வேறொரு விசேஷமுமின்றி அன்றிரவு கழிந்தது; ஓநாய்கள் மட்டும் ஊளையிட்டுக் கொண்டிருந்தன: ஆனால் அது இவர்களுக்கு வழக்கமாகப் போய் விட்டது.

அடுத்த நாட் காலையில் மலாச்சியும் மார்ட்டினும் வீட்டிற்கு வந்து, ஜானையும் ஆல்ப்ரெடையும் அழைத்துக்கொண்டு, பிளாச்சுவேலிக்கதவைத்திறந்து வெளியேசென்று ஜான் சுட்ட இடத்தைப் பரிசோதிக்கப் போனார்கள்.

"ஆம், ஐயா!" என்றான் மலாச்சி; "அவனொரு இந்தியன் தான், சந்தேகமே இல்லை; அவன் ஊர்ந்து வந்தபோது முழங்கால்களால் உண்டான சுவடுகள் இதோ இருக்கின்றன; ஜான் சுட்டதால் அவன் அடிபட்டிருக்கின்றான்—ஏனெனில் இதோ தெரிகிறது ரத்தம்: இந்தச் சுவட்டைத் தொடர்ந்து செல்வோம். இதோ பாருங்கள்—அவனுக்குக் கடுமையாக அடி விழுந்திருக்கிறது; இந்தவழியாக நாம் போகப்போக மிகுதியாக ரத்தமிருக்கிறது. ஹா!" என்று மலாச்சி ஒரு உறைபனிக் குவியலண்டை சென்று சொன்னான்; "அவன் மேலே போர்த்திருந்த ஓநாயின் தோல் இதோ கிடக்கின்றது. அப்போது அவன் செத்தோ அல்லது குற்றுயிராக இருக்கையிலோ அவனைத் தூக்கிச்சென்றிருக்கவேண்டும்—இல்லாவிடில் அவன் உயிருடன் தோற்போர்வையை விட்டுப் பிரிந்திருக்க மாட்டான்."

"ஆம்," என்றான் மார்ட்டின்; "அவனுடைய காயம் அவனுடைய உயிருக்கு ஹானியைச் செய்திருக்கவேண்டும்; அது நிச்சயம்."

காடுவந்து சேரும்வரை சுவட்டைத் தொடர்ந்து சென்

றனர்; அங்கே வந்து சேர்ந்ததும் உறைபனியில் செய்யப்பட்டிருந்த அடையாளங்களால் அவனைக் கொண்டுபோயிருக்க வேண்டுமென்று நிச்சயம் செய்துகொண்டு அவர்கள் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் வீட்டிலிருந்த மற்றவர்கள் ஆடைகளைத் தரித்துக்கொண்டு சமையல் கட்டிவிருப்பதைக் கண்டார்கள். ஆல்ப்ரெட் அவர்களுக்கு ஓநாய்த் தோலைக்காட்டிவிட்டுத் தாங்கள் கண்டுபிடித்தவற்றையெல்லாம் சொன்னான்.

"ரத்தக்களரி நேர்ந்துவிட்டதே என்று நான் மிகவும் துக்கிக்கிறேன்." என்றாள் மிஸிஸ்காம்பெல்; "அது சம்பவிக்காமலிருந்தால் எனக்கு அவ்வளவு வருத்தமிருக்காது. இம்மாதிரிச் சம்பவங்களை இந்தியர்கள் மறவார்கள் என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன்."

"ஏன், அம்மணி! இந்தியர்கள் மிகவும் வன்மமுள்ளவர்களென்பது உண்மைதான்; ஆயினும் அவர்களுக்கு எவ்வளவு தூரம் வரை போகலாமென்று தெரியும். இது அவர்களுக்குப் புத்தியைத் தந்திருக்கும். எனக்கு இருக்கிற கவலையெல்லாம் இப்படி மாண்டிருப்பது ஆங்க்ரீஸ்நேக்காக இருந்தால் நலமாகுமே என்பதுதான்; ஏனெனில் அப்போது அவர்களைப் பற்றினவரை இனித் தொந்தரவாவது கவலையாவது இராது," என்றான் மலாச்சி.

"ஒருகால்அப்படியும்இருக்கலாம்," என்றான் ஆல்ப்ரெட்.

"அன்று, ஐயா! அப்படி இராது; வந்தவன் அவனைச் சேர்ந்த வாலிபர்களில் ஒருவன். எனக்குத் தெரியாதா இந்தியரின் வளமைகள்."

இந்தச் சம்பவம் நடந்து சில நாட்கள் வரையில் பண்ணையில் உள்ள பெண் பேதைகளுக்கு உள்ளூற பீதியிருந்து கொண்டே இருந்தது. ஆகிலும் நாளடைவில் இந்தியரின் சின்னம் யாதொன்றும் காணாமல் காலம் கழியவே வர வர பயம்தெளிந்தது.



வேட்டைக்கு அன்றன்று வெளியே போய்வந்துகொண்டிருந்தார்கள். இல்லாவிட்டால் அக்குளிர் காலத்தில் தீனிக் குக் குறைவு நேர்ந்து விடும். ஜானும் தவறாமல் மலாச்சியுடன் துப்பாக்கியும் கையுமாக வேட்டையாடுவதற்குப் போவதைக் கண்ட பார்ஸிவலுக்கும் தானும் ஏன் அப்படிச் செய்யக் கூடாதென்ற அவா தீவ்ரமாக ஏற்பட்டது. ஆனால் அப்படிச் செய்ய தாயாவது தந்தையாவது சம்மதிக்கவில்லை. ஆல்ப்ரெடும் அவன் கக்ஷியை எடுத்துப் பேசிப் பார்த்தான். அவர்கள் இணங்க இல்லை. தனக்கு இளையவனான ஜான் மட்டும் துப்பாக்கியுடன் வேட்டைக்குச் செல்லும்போது, தனக்கு மாத்திரம் தடை ஏற்பட்டதை உணர உணர பார்ஸிவலுக்குப் பொறாமை மேலாடிக் கொண்டே வந்தது.

"ஜான் போகச் சம்மதிக்கையில், பார்ஸிவலுக்கு மட்டும் ஏன் தடை, அத்தை?" என்றாள் மேரி.

"ஜான் போவது வாஸ்தவம் தான், அம்மா, ஆனால் பார்ஸிவல் விஷயத்தில் எனக்குத் தைரியம் வரமாட்டேன் என்கிறது," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"ஏன், அத்தை? ஜானுக்குப் பார்ஸிவல் முதிர்ந்தவனில்லையா? மேலும் இங்குக் கானடாவிற்கு வந்தபிறகு பார்ஸிவல் ஒரு ஆளாக ஆய்விடவில்லையா? அப்படி இருந்தும் அவனை வீட்டிற்குள்ளேயே முடக்கி வைத்துக் கொண்டு வீடுவாசல் பெருக்குவதிலும், பாத்திரம் பண்டங்கள் கழுவிச் சுத்தம் செய்வதிலும் அவனை வேலை வாங்குவது தர்மமா?"

"அம்மா, என்கண்ணே! நீ சொல்லுவதெல்லாம் உண்மைதான். ஆனாலும் உள்ளூற என் மனதில் என்னவோ தட்டுகிறதே, நான் என்ன செய்வேன்?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

இருந்தாலும் பார்ஸிவலுக்கு வர வர முகம் வாடி வந்ததைக் கண்டே ஆல்ப்ரெடும் மேரியும் வற்புறுத்தலானார்

கள். கடைசியில் அம்மையாரும் இணங்கவே மிஸ்டர் காம்பெல்லும் இணங்கி விட்டார். ஆயினும் மிஸிஸ் காம்பெல்லுக்கு மட்டும் மனதில் தடை இருந்து கொண்டே வந்தது.

அடுத்தநாள் வேட்டையாடும் கோஷ்டி வெளியேறிச் சென்றது. பர்ஸிவலும் அவனுக்கு மிகவும் களிப்புண்டாக, கூடப்போகும்படி அனுமதி கொடுக்கப்பட்டான். அவர்கள் ஏற்கனவே குறிவைத்திருந்த வேட்டையாடுமிடம் வெகுதூரத்திற்கப்பால் இருந்தமையாலும், மிஸ்டர் காம்பெல் அவர்களை நேரத்தில் திரும்பிவரும்படி கண்டித்துச் சொல்லியிருந்தமையாலும், அவர்கள் வெளிச்சமாவதற்கு முன் அதிகாலையிலேயே புறப்பட்டார்கள்.

அவர்கள் முக்கியமாகக் குறிவைத்துச்சென்றது மானிறைச்சியானதால் மான்கள் அகப்படக்கூடியன வென்று மலாச்சிக்குத் தோன்றிய இடத்திற்குப்போய்ச் சேர்வதற்கு அநேகமைல் தூரம் நடக்க வேண்டி இருந்தது. வேட்டையாடுவதற்குக் குறிக்கப்பட்ட இடத்தில் போய்ச் சேர்வதற்குள் மணி கிட்டத்தட்டப் பத்தாய்விட்டது. அது நடுக்காட்டில் ஒரு பொட்டல்வெளி; உறைபனி திட்டுத்திட்டாகக் குவிந்து கிடந்தது; ஆயினும் மலையடிவாரங்களில் இங்குமங்கும் புல்லானது மொட்டை மொட்டையாக நீட்டிக்கொண்டிருந்தது. மான்கள் வந்து கால்களால் தோண்டித் தோண்டி அகப்பட்ட ஆகாரத்தைத் தின்றுகொண்டிருந்தன. இவர்கள் வந்து சேரும்போது அவைகள் ஒன்றுகூடியே நின்றுகொண்டிருந்தன. பர்ஸிவலும் ஹென்றியும்மட்டும் கால்மைல் பின்னாலேயே வந்தார்கள்—ஏனெனில் பர்ஸிவலுக்கு உறைபனிக் கால்கட்டைகள் புதியனவாக இருந்தமையால் மற்றவர்களைப் போல் அவ்வளவு நன்றாக நடக்கமுடியவில்லை. ஹென்றியும் பர்ஸிவலும் வந்து சேரட்டுமென்று மலாச்சி நிற்கவே மற்றவர்களும் நிற்க, அவர்களும் வந்துசேர்ந்து திணறலு மடங்



கினவுடன், மலாச்சி “மாஸ்டர் பர்ஸிவல்! அதோபார்—என்ன நேர்த்தியான மான்மந்தை நிற்கிறது! ஆனால் உனக்குக் காட்டுவித்தையொன்றும் தெரியாதாகையால் எங்களுக்கெல்லாம் இடைஞ்சலாக நடந்துகொள்ளாமல், நான்சொல்லப் போவதைச் செம்மையாகக் கவனி. அப்பிராணிகளுக்குக் கண்களும் காதுகளும் மட்டுமல்ல கூர்மை; மோப்பம் அவற்றினும் அதிக கூர்மையானது. மனிதன் ஒருமைல் தூரத்திற்கப்பால் இருந்தாற்கூடக் காற்றுவாடையால் அறிந்துகொண்டுவிடும். ஆகையால் சத்தம்பண்ணாமல் கண்ணுக்குந்தெரியாமல் காற்றொதுக்கமான பக்கத்திலிருந்து அவைகளின் கிட்ட நெருங்க முயன்றாலொழிய பயன்படாதென்று நீ யறியவேண்டும். இப்பொழுது கவனி; காற்றுக் கிழக்கிலிருந்து வீசுகிறது. நாம் இருப்பது தெற்கானபடியால் பொட்டல் வெளிக்குப் போவதற்கு முன் காட்டு வழியால் மேற்குத்திசைக்குப் போகவேண்டும். பிறகு நீ நாங்கள் என்னசெய்கிறோமென்பதைக் கவனித்துப்பார்த்துக்கொண்டு எங்கள் பின்னாலே இருக்க வேண்டும். நாம் ஒரு மேட்டுப் பிரதேசத்திற்கு வந்தால் நீ மடமட வென்று உச்சிக்கு ஓடிப்போகக் கூடாது—நடந்து கூடப். போகக்கூடாது—இல்லாவிட்டால் உன்னை யவைகள் கண்டுவிடும்; மான்கள் ஒருகால் அதற்குப்பக்கத்தில் கீழே இருந்தாலும் இருக்கும்—உனக்கு இருபது கஜ தூரத்திலேயே இருக்கலாம்; ஆகையால் நீயும்எங்களைப் பார்த்துக்கொண்டு ஒளிந்துகொண்டுவிடவேண்டும்; அவைகள் இருக்குமிடம் எங்களுக்கு நன்றாய்த்தெரிந்தவுடன் எங்களைப் போலவே நீயும் சுடும்படியான தாவில் உன்னை வைக்கின்றேன். மாஸ்டர் பர்ஸிவல், மனதில் வாங்கிக்கொண்டாயா?”

“ஆம், தெரியவந்தது; நான் பின்னாலேயே யிருந்துகொண்டு, நீ சொல்லிய பிரகாரம் செய்கிறேன்.”

“நல்லதப்பா, நாம் மறுபடியும் அடர்ந்த காட்டிற்குள்

புகுந்து காற்றிருதுக்குப் பக்கத்துக்குப்போய் நீயும் ஒரு வேட்டைக்காரனுவாயா வென்று பார்ப்போம்."

அவர்கள் அனைவரும் மலாச்சி கூறிய பிரகாரமே செய்து அப்பிராணிகள் கண்ணுக்கெட்டாமலிருக்கும் வண்ணம் ஒரு மணி நேரத்திற்குமேல் காட்டிற்குள் மரம் அடர்ந்திருந்த வழியாக நடந்துவந்தார்கள். கடைசியாக மலாச்சி குறித்த இடத்திற்குவந்து, பிறகு திரும்பிக் கீழ்த்திசை நோக்கிப் பொட்டல்வெளியைக்குறித்துஅங்கு மான்களிருக்குமென்று எதிர்பார்த்துச் சென்றனர்.

பொட்டல்வெளியில் பிரவேசித்ததும் தரையில் கவிழ்ந்து மலாச்சியையும் மார்ட்டினையும் முன்னே விட்டுக்கொண்டு நகர்ந்து சென்றார்கள். பள்ளத்தாக்கில் வந்து எல்லோரும் ஒன்று சேருவார்கள்; ஆனல் ஒரு மேட்டுப்பாங்கை ஏறிச் செல்லும்போது மலாச்சியாவது மார்ட்டினவது ஊர்ந்து கொண்டு முந்திப்போய் உச்சியின்மேலெட்டிப் பார்த்தபிறகு மற்றவர்களுக்கும் முந்திவரும்படி ஜாடை செய்வான். இதே மாதிரி திரும்பித்திரும்பி மூன்று நான்கு மைல்கள் செல்லும் வரையில் நடந்தது. அப்பால் மார்ட்டின் தலையைத் தூக்கி ஒரு மேட்டுப்பாங்குக்கு மேலெட்டிப் பார்த்து, கீழே இருந்தவர்களுக்கு மான்கள் கண்ணுக்கு எட்டிவிட்டன என்று சமிக்கை காட்டினன். ஓரிரண்டு நிமிஷங்கள் வரையில் வேவு பார்த்து, கீழே வந்து அவர்களிடம் சென்று பன்னிரண்டு பதின்மூன்று மான்கள் அவர்கள் நின்ற இடத்திலிருந்து சுமார் நூறு கஜதூரத்தில் ஒரு மேட்டுப்பாங்கில் பனியைத் தோண்டிக்கொண்டிருந்ததாயும், ஆனல் ஏதோ ஒருஅபாயம் கிட்டிவிட்டதென்பதை உணர்ந்தாற்போல்அவைகள் பிரமித்துத் தவிப்பவைபோலத் தோன்றியதாயும் சொன்னன்.

அதைக் கேட்டவுடன் மலாச்சி ஊர்ந்து மேலே ஏறிச் சென்று தானும் பார்த்துவிட்டுத் திரும்பிவந்தான்.



"அவைகளெனதயோ மோப்பங்கண்டு வெருண்டு நிற்கின்றன என்பது நிச்சயம்," என்றான் மலாச்சி; "அவை இப்போதுதான் வேட்டையில் வெருட்டப்பட்டவைபோல் தோன்றுகின்றன. ஆனல் அதற்குஇடமிருப்பதாகவும்தெரியவில்லை. நாம் சற்றுப் பொறுத்தாலவைகளும் மருட்சி தெளியும்; பிறகு அவற்றை வேறு யாராவது வேட்டையாடிக் கொண்டு வந்திருக்கிறார்களா வென்று பார்ப்போம்."

அப்படியே அவர்கள் பத்து நிமிஷம் காத்திருந்தனர். அவைகளுக்கும் கொஞ்சம் தெளிவு உண்டானதாகத் தோன்றிற்று. பிறகு அந்த மேட்டுக்குப் பின்பக்கமாகவே தாங்களிருந்த இடங்களை மாற்றியதால் ஸ்டியார் இருபது கஜம் நெருங்கக் கிட்டினார்கள். மலாச்சி ஒவ்வொருவருக்கும் அவரவர் சுடவேண்டிய பிராணியை யமர்த்திவிட்டானபிறகு, எல்லாரும் சேர்ந்தாற்போலவே சுட்டார்கள். அம்மிருகங்கள் மூன்று செத்தும், இரண்டு அடிபட்டும், மற்றவை காற்றைப்போல் பறந்தும் போய்விட்டன. உடனே அவர்களெல்லோரும் மேட்டிலிருந்து இறங்கித் தாம் தாம் குறிவைத்த மிருகத்தை நோக்கி ஓடினர். ஆல்ப்ரெட் குறிவைத்தடித்தது மற்றவைகளைவிட்டு விலகி தூரத்தில் நின்ற ஒரு நேர்த்தியான ஆண்மானை. அந்தப் பிராணி வலுவாய் அடிபட்டுவிட்டதென்பதில் சந்தேகமேயில்லை. அது தடுமாறிக்கொண்டுபோய் நுழைந்துகொண்ட புதரையும் ஆல்ப்ரெட் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனல் மற்றொருமானுக்கு அடி யவ்வளவு வலுவாக விழாமல் மற்றவைகளோடு அதுவும் பறந்துவிட்டபடியால் அதைப் பிடிப்பதென்பது முடியாதவிஷயம். செத்துக்கிடந்த மிருகங்களண்டை எல்லோரும் போய்ச்சேர்ந்து, துப்பாக்கிகளை மறுபடியும் கெட்டித்தானபிறகு, ஆல்ப்ரெடும் மார்ட்டினும் அடிபட்ட மான் போன சுவட்டைத் தொடர்ந்து அதைத் தேடப்போனர்

கள். அப்படி இவர்கள் ஐம்பது கஜதூரம் போயிருப்பார்களோ என்னவோ; ஏதோ ஒரு மிருகத்தின் உரத்த உறுமலைக் கேட்டுத் திடுக்கிட்டுப் பின்வாங்கினார்கள். முந்திச் சென்ற ஆல்ப்ரெட் கண்டதென்னவென்றால் ஒரு பெரிய வேங்கைப்புலி அந்த மானைக் கைப்பற்றிக்கொண்டு, அதன் சவத்தின்மேல் கவிழ்ந்துகொண்டிருந்தது. அவன் துப்பாக்கியைச் சாய்த்துச் சுட்டான்; அந்த மிருகம் வலுவாய் அடிக்கப்பட்டாலும், திடீரென்று அவன் மேற்பாய்ந்து அவனுடைய தோள்பட்டையைக் கவ்விக்கொண்டது. அந்த மிருகத்தின் பாரத்தைத் தாங்கமுடியாமலும், வலி பொறுக்க முடியாமலும் ஆல்ப்ரெட் தரையிற் சாய்ந்துவிட்டான்—அப்போது மார்ட்டின் அவனைக் காப்பாற்ற ஓடிவந்து தனது துப்பாக்கியால் சுட்டு, குண்டைஅந்த மிருகத்தின் மூளையில் பாய்ச்சினான். உடனே மாண்டுபோய் அது கீழேவிழுந்தது.

"ஐயா! உங்களுக்கு நோவு மிகுதியாயிருக்கிறதோ?" என்றான் மார்ட்டின்.

"அவ்வளவு ஜாஸ்தியில்லை," என்றான் ஆல்ப்ரெட்; அது என்னவோ, எனக்குத் தோன்றுகிறதப்படித்தான்; ஆனால் எனது தோள்பட்டையில் சதை பிடுங்கப்பட்டு ரத்தம் பெருகிக்கொண்டிருக்கிறது."

மலாச்சியும் மற்றவர்களும் அதற்குள்ளாக வந்துசேர்ந்து, நேர்ந்த சம்பவத்தையெல்லாம் அறிந்துகொண்டனர். ஆல்ப்ரெட் கீழே விழுந்து செத்துக்கிடந்த மிருகங்களுக்கருகில் உட்கார்ந்திருந்தான்.

"இதென்ன, வேங்கையல்லவோ!" என்றான் மலாச்சி; "இவ்வளவுதூரம் மேற்கில் அது இருக்குமென்று நான் நினைத்தவனே யல்லன். மிஸ்டர் ஆல்ப்ரெட்! உங்களுக்கு நோவு அதிகமாக இருக்கிறதோ?"

"ஆம், ஏதோ கொஞ்சம்," என்று ஆல்ப்ரெட் சோர



வான குரலுடன் சொன்னான்.

மலாச்சியும் மார்ட்டினும் வேறொரு பேச்சுக் கூடப் பேசாமல் ஆல்ப்ரெடின் மேற் சட்டையைக் கழற்றிப் பார்க்கவே, அம்மிருகத்தின் தந்தங்களால் அவனது தோள்பட்டையில் ஒரு கொடிய காயம் செய்யப் பட்டிருப்பதையும், அதன் நகங்களால் அவனது விலாவில் கிழிக்கப்பட்டிருந்ததையும் கண்டார்கள்.

"ஜான்! ஓடிப்போய் கொஞ்சம் ஜலங்கொண்டுவா—பள்ளத்தில் நிச்சயமாகத் தேங்கிக்கிடக்கும்," என்றான் மலாச்சி.

ஜானும் பர்ஸிவலும் இரண்டுபேர்களுமாக ஜலத்தைத் தேடிப்போனார்கள்; மலாச்சி மார்ட்டின் ஹென்றி—இம் மூவரும் ஆல்ப்ரெடினது ஷர்ட்டைப் பட்டை பட்டையாகக் கிழித்து, ஆல்ப்ரெடினது காயத்தைக்கட்டிப் பெரும்பாலும் ரத்தம் பெருகி ஓடினதை நிறுத்தினார்கள். இதுவும் செய்தாகி, ஜான் தொப்பியில் கொண்டுவந்து கொடுத்த ஜலத்தையும் குடித்தானவுடன் ஆல்ப்ரெடுக்குக் கொஞ்சம் ஆசுவாசம் உண்டாயிற்று.

"நான் இன்னும் கொஞ்சநேரம் இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன்," என்றான் ஆல்ப்ரெட்; "பிறகு நாம் கூடிய மட்டும் வேகத்துடன் வீடுசெல்வோம். மார்ட்டின்! அடித்துக் கிடக்கின்ற மிருகங்களை அதற்குள்ளாக ஜாக்கிரதை செய்; நீ தயாரானவுடன் நானும் கிளம்புகிறேன். ஓ அப்பா! அது எவ்வளவு கொடிய பளுவுள்ள மிருகம்! அதற்கு மேல் ஒரு நிமிஷங்கூட என்னால் அதைத் தாங்கியிருக்க முடிந்திருக்காது; என்னிடத்திலோ வேட்டைக் கத்தியுமில்லை."

"இதோர் பயங்கரமான மிருகம், ஐயா!" என்றான் மலாச்சி. "இதைவிடப் பெரியது நான் எவ்விடத்திலாயினும் கண்டிருப்பேனோ என்பது சந்தேகந்தான்; அதனிடத்

தில் ஒரு மனிதனுடைய ஆட்டம் பலியாது. ஐயா! அதைத் தனியாகவும் எதிர்ப்பது தப்பு, ஏனெனில் அதைக்கொல்லுவதென்றால் அவ்வளவு கஷ்டம்.”

“எனது குண்டு அதை எங்கே அடித்தது?” என்றான் ஆல்ப்ரெட். “இதோ, ஐயா, தோள்பட்டைக்குக் கீழோடே; குறிவைத்ததுமட்டும் சரிதான்; அது அதனுடைய ரத்தாசயத்தின் பக்கமாகத்தான் பாய்ந்திருக்கவேண்டும்; ஆனால் குண்டு மூளைக்குள்ளா. து ரத்தாசயத்திற்குள்ளாவது பாய்ந்தாலொழிய, சாவதற்கு முந்தி அது தவறாமல் பாயும். உங்கள் தோள்பட்டையில் பட்டிருக்கும் காயம் லகுவானதன்று. எனக்குத் தெரிந்த வரையில் ஐந்து, ஆறு வாரங்கள் கழியும் வரையில் நீங்கள் வேட்டைக்குப் போகும் ஆசையை விட்டுவிடவேண்டும். அதெப்படியானாலும் இருக்கட்டும்—இதோடு விட்டதே. அதே நல்லது.”

“இப்போதெனக்குப் பலம் வந்துவிட்டது,” என்றான் ஆல்ப்ரெட்.

“இன்னொரு பத்து நிமிஷம் கழியட்டும், ஐயா! ஜானும் நானும் அதற்குள் தோலுரிக்கின்றோம்; அது எல்லாரிடமும் காட்டுவதற்குவேண்டும்—இறைச்சி கெட்டாலும் கெடட்டும். மிஸ்டர் ஹென்றி! மார்ட்டினிடம் போய் முக்கியமான இறைச்சியைமட்டும் எடுத்துக்கொண்டு, தோல்களை எறிந்துவிடும்படி சொல்லுங்கள்—ஏனெனில் நாம் ஜாஸ்தியாகச் சுமந்து-கொண்டுபோக முடியாது. மிஸ்டர் ஹென்றி! அவனைத் துரிதப்படுத்தச் சொல்லுங்கள், ஏனெனில் மிகுதியாகத் தாமதித்தால் மிஸ்டர் ஆல்ப்ரெடின் புஜம் விறைத்துப்போய் விடும். நாம் வீடுபோய்ச் சேர்வதற்கு இன்னும் அநேக மைல்களிருக்கின்றன.

பத்து நிமிஷங்களுக்குள், மலாச்சியும் ஜானும் வேங்கைத் தோலையுரித்தாக மார்ட்டினும் இரண்டு மான்களின்



சப்பையைக் கொண்டுவந்து, இவ்வளவுக்குமேல் நம்மால் தூக்கமுடியாதென்று சொன்னான்.

உடனே அவர்களெல்லாரும் வீட்டைநோக்கிப் புறப்பட்டனர்.

ஆல்ப்ரெட் கொஞ்சதூரம் நடப்பதற்குமுன் இசிவு பொறுக்கமுடியாமல்மிகவும் வருத்தப்பட்டான். உறைபனிக் காற்கட்டையில் நடந்தது உடம்பைக்குலுக்கி ஆட்டிவைத்தபடியால் கட்டுத் தளர்ந்து, காயம் மறுபடியும் வாய்பிளந்து ரத்தம்பெருகிற்று; ஆனால்மலாச்சியின் உதவியைக்கொண்டும் இடைஇடையே ஜலத்தைக் குடித்துக் கொண்டும் ஆல்ப்ரெடு களைப்பாறிக்கொண்டபடியே நடக்கத்தொடங்கினான்.

வரவரக் குத்துவலி மிகுதியாகி, ஆல்ப்ரெட் இசுவின் உபத்திரவத்தால் மிகவும் துயரமடைந்தான்; ஆயினும் அவர்களால் கூடிய மட்டில் விரைவுடன் சென்று இரவுக்கருக்கலுக்குமுன் வீட்டண்டை நெருங்கிவிட்டார்கள். ஆனால் ஆல்ப்ரெடுக்கு மெல்லமெல்லத்தான் நடக்கமுடிந்தது. அசதியாலும், ரத்தம் மிகுதியாகக் கொட்டினமையாலும் ஆல்ப்ரெட் மிகவும் களைப்புற்று நகர்வதற்கே அசக்தனாக விருந்தான். ஆகையால் இதைக்கண்டு பயந்து மார்ட்டின் ஜானை மானிறைச்சியைக் கீழெறிந்துவிட்டு வீட்டிற்கு ஓரே ஓட்டமாய் ஓடி மிஸ்டர் காம்பெல்லைக் கேட்டுக் கொஞ்சம் பிராந்தியாவது அல்லது களையைத் தீர்க்கும் வேறு எவ்விதச் சரக்கையாவது வாங்கிவரும்படி கேட்டுக்கொண்டான். வீட்டிற்கு ஒருமைல் சமீபத்திற்குள் வந்துவிட்டபடியால், ஜான் சீக்கிரமாய்ப் போய்ச்சேர்ந்து வீட்டிற்குள் சரேலென்று நுழைந்து மிஸிஸ் காம்பெல்லும் தனத்தை மக்களும் இருக்கும்போது செய்தியையெல்லாம்சொன்னான். அவர்களிதைக் கேட்டவுடன் மிகவும் துக்கமடைந்தார்கள். மிஸ்டர் காம்பெல் உடனே உள்ளேபோய்ச் சாராயத்தைக்கொண்டு

வந்து கொடுத்தவுடன் எம்மா தனது தலைக்குல்லாயை ஒரே எட்டில் எடுத்துக்கொண்டு ஜானுடன் நானும்போய் வருவேனென்று சொன்னாள்.

மிஸ்டர் காம்பெல்லும் மிஸிஸ் காம்பெல்லும் வேண்டுமென்றாற்கூட அவளைத் தடுக்கச் சக்தியற்றவர்களாய் இருந்தனர்—ஏனெனில் ஒரு க்ஷணத்திற்குள் ஜானுக்கு முந்தியே அவள் ஒரு பாய்ச்சலில் வெளிவந்து ஓட்டமெடுத்துவிட்டாள். ஆனால் எம்மாவுக்கவஸரத்தில் தனக்கு உறைபனிக் கட்டை இல்லையென்றுகூட ஞாபகமில்லை. ஆதலால் பாதி வழி போய்ச் சேருமுன்னமே மைல் கணக்காக ஓடினவள் போல அவ்வளவு களைத்துப்போய்விட்டாள். ஒவ்வொரு நிமிஷமும் அவள் நடக்க நடக்க இன்னுமவளுடைய கால்கள் ஆழத்திற் பதிந்தன. கடைசியில் அவர்கள் அந்தக்கோஷ்டியிருந்த விடத்தில் சேர்ந்தனர். ஆல்ப்ரெட் தரையில் உறைபனியின்மீது மூர்ச்சையுற்றுக்கிடந்தான், மற்றவர்கள் அவனை வீடுகொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகக் கிளைகளாலொரு தொளியைச் செய்துகொண்டிருந்தனர்.

ஆல்ப்ரெடின் வாயில் கொஞ்சம் பிராந்தியை விட்டதும் அவனுக்கு ஸ்மரணை திரும்பிவந்தது; அவன் கண்ணைத் திறந்தவுடன் எம்மா அவனுக்குமேல் குனிந்துகொண்டு பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டான்.

“எனதரிய எம்மா! உனக்கென்பேரில் எவ்வளவு விசுவாசம்!” என்று சொல்லிக்கொண்டே ஆல்ப்ரெட் எழுந்திருக்க முயன்றான்.

“ஆல்ப்ரெட்! நீ நகரக்கூடாது; தோளி சீக்கிரமாகத் தயாராகிவிடும். உடனே உன்னை அவர்கள் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டுபோவார்கள்; தூரமதிகமில்லை.”

“எம்மா! எனக்கிப்போது பலம் வந்துவிட்டது,” என்றான் ஆல்ப்ரெட்; “ஆனால் நீ இங்கே குளிரிலிருக்கக்கூடாது



பார்! பனி கொட்ட வாரம்பித்துவிட்டது.”

“ஆல்ரெட்! உன்னைத் தூக்கிக்கொண்டுபோகத் தயாராகும் வரையில் உன்பக்கத்தில் தான் நானிருக்கவேண்டும்; ஏனெனில் தனியாக வீட்டிற்குத் திரும்பிப்போக எனக்குத் துணியவில்லை.”

இதற்குள்ளாகத் தோளியும் தயாராகி, ஆல்ப்ரெடைய தன் மேலேற்றிக்கொண்டு மலாச்சி, ஹென்றி, மார்ட்டின், ஜான் இந்நால்வரும் அதைத் தூக்கிக்கொண்டார்கள்.

“பர்ஸிவல் எங்கே?” என்றாள் எம்மா.

“அவன் கொஞ்சம் பின் தங்கிவிட்டான்,” என்றான் ஜான்; “காற்கட்டைகள் அவன் கால்களைக் கடித்துவிட்டபடியால், அவனாலவ்வளவு வேகமாக நடக்கமுடியவில்லை, அவனிங்கு ஒரு நிமிஷத்திற்குள் வந்துவிடுவான்.”

ஆல்ப்ரெடை வீட்டிற்கு அவர்கள் கொண்டுபோய்ச் சேர்க்கும்போது, மிஸ்டரும் மிஸிஸ் காம்பெல்லும், மேரியும் தெருவாயிற்படியில் மிகவும்கவலையுடன் காத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் வந்து சேர்வதற்குள் எம்மாவுக்குத் தேகம் மிகவும் ஆட்டம் கண்டுபோய்விட்டபடியால், வந்தவுடன் தனது அறைக்குள் அவள் போய்விட்டாள்.

ஆல்ப்ரெடைப் படுக்க வைத்து, அவன் தந்தையார், காயங்களைப் பரிசோதித்துப் பார்த்து, அவை மிகவுமபாயமானவை யென்று அபிப்பிராயம் கொண்டார்—சதையவ்வளவு பிடுங்கப்பட்டிருந்தது. மிஸ்டர் காம்பெல் அவைகளைச் சுத்தம் செய்து கட்டியானவுடன், அவனுக்கு மிகவும் களையாக விருந்தமையால் அவன் தூங்கட்டுமென்று விட்டுவிட்டுப் போனார்கள். பிறகு ஒருமணிநேரம் வரையில் ஆல்ப்ரெடின் நிலைமையைப் பற்றியே எல்லோரும் கவலைகொண்டு அதே சிந்தையாக விருந்தமையால், வேறு எதைப்பற்றியாவது, நினைக்கவே இல்லை. எம்மாவுக்கும் வந்து சேர்ந்த

வுடன் உடம்பு ஜாட்டியம் அடைந்திருந்ததால் மிஸிஸ் காம்பெல்லுக்கும் மேரிக்கும் அவளது காரியமே சரியாக விருந்தது. அவர்கள் இரவுணவுக்குப் போனபோது தான் மிஸ்டர் காம்பெல், "இஃதென்ன! பர்ஸிவலெங்கே?" என்றார்.

"பர்ஸிவலா! அவனிங்கே யில்லையோ?" என்று வேட்டைக்குப் போய்வந்த அனைவரும் வினவினர்.

"பர்ஸிவலிங்கே இல்லையா?" என்று கதறினாள் மிஸிஸ் காம்பெல். அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டுவிட்டது. "எங்கே—என் குழந்தை யெங்கே?"

"அவன் எங்களுக்குக் கொஞ்சம் பிந்தி வந்தான்," என்றான் ஜான்; "காற்கட்டையைச் சரிப்படுத்துவதற்காக அவன் கீழே உட்கார்ந்தான், அவைகளின் வார்கள் கடித்தன."

மலாச்சியும் மார்ட்டினும் மிகவும் துயரத்துடன் வெளியே ஓடிவந்து பார்த்தனர். முழு அபாய நிலைமையுமவர்களுக்குத் தெரியும். பனி பெரிய பெரிய சில்லுகளாய்ச் சொரிந்து கொண்டிருந்தமையால் கண்ணுக்கு வழி திசை ஒன்றும் தெரியவில்லை.

"இனிப் பையனைக்காணுவது கிடையவே கிடையாது," என்று மார்ட்டினிடம் மலாச்சி சொன்னான். இந்தக் கொட்டும்பனியில் வெளியிலேயே அவன் திரிவானாயின், வழியொன்றும் தெரியாமல் அங்குமிங்கும் கூத்தாடிவிட்டு அலைந்துவிட்டுக் கடைசியாக மாண்டு போகவேண்டியது தான்."

"உள்ளது தான்," என்றான் மார்ட்டினும்; "அவன்பிழைத்திருந்தால் மறுபிறப்புத்தான்; தெரிந்திருந்தால் இதைத் தடுப்பதற்கு என்னவேண்டியிருந்தாலும் செய்திருப்பேன்."

"பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும் என்பது சரியாய்விட்டதே," என்றான் மலாச்சி; "ஐயோ! நாமென்ன செய்வோம்! மிஸிஸ் காம்பெல்லுக்கும் பைத்தியம் பிடித்து



விடுமே! அவளந்தப் பையன்மேலே தன் பிராணன் முழுவதும் வைத்திருக்கிறாளே!"

"நாமிப்போது வெளியிற் போய்த் தேடுவது பயனற்ற காரியமே," என்றான் மார்ட்டின்; "அவனோ அகப்படப்போவதில்லை—நாம் வழிதப்பித் திண்டாடுவதுதான் மிச்சமாகும்; இருந்தாலும் நாம் திரும்பிப்போய் நம்மாலியன்றதைப் பார்ப்போம் என்று சொல்லத்தான் வேண்டும். எல்லாவற்றுக்கும் நாம் காட்டோரம் வரையிற் போவோம்? அடிக்கொருமுறை கத்துவோம். பையன் இன்னும் உயிருடனிருந்து திரிந்துகொண்டிருந்தால் சத்தத்தைக் கேட்டு நாமிருக்குமிடம் வந்து சேரமாட்டானா? பார்ப்போம்."

"சரி," என்றான் மலாச்சி, "நாமும் ஒரு சுளுந்துப் பந்தம் கட்டிக்கொள்வோம்; அது நமக்குதவியாக விருக்கும். சரி. அப்படியானால் வா; உள்ளே சென்று பையனைத் தேடப் போய் வருகின்றோமென்று அவர்களிடம்சொல்லிவருவோம். அவனைத் தேடிக்கொண்டிருக்கிறோமென்று அம்மாவுக்குத் தெரிகிறவரையில் அவள் தைரியமாகவே இருப்பாள். இப்போது தைரியத்துடனிருந்தாற்றான் கடைசியாகப் பையனை இழந்துவிட்டதாகத் தெரிந்தவுடன் அவள் தாங்கும் சக்தியுள்ளவள் ஆவாள்."

மேலே சொல்லப்பட்ட மலாச்சியின் வார்த்தைகள் அவனது மேலான புத்தியையும், மாந்தர்களின் மனோவிருத்தியை யவன் நன்குணர்ந்தவனென்பதையும் தெரிவித்தன. இனிப் பையனைத் தேடுவதிற் பயனில்லை யென்றவன் நன்குணர்ந்தவனானாலும், ஏற்கனவே உள்ளம் நொந்து துயரமடைந்த தாயாரின் மனதிலிருந்த நம்பிக்கையைத் திடீரென்று நாசம் செய்ய அவன் கருதவில்லை.

அவர்கள் உள்ளே நுழைந்ததும் மிஸிஸ்காம்பெல் ஆக்கிரகத்துடன் கதறிக்கொண்டிருப்பதையும், அவள் கணவரும்

மேரியும் அவளை யணைத்துக்கொண்டு ஆசுவாசம் செய்துகொண்டிருந்ததையும் கண்டார்கள். அவர்கள் பையனைப் போய்த்தேடி அகப்பட்டால் வீட்டிற்குக் கொண்டுவருவதாய்ச் சொல்லிவிட்டு, மூன்று நான்கு பந்தங்களை எடுத்துக்கொண்டு, அவற்றிலொன்றைக்கொளுத்திக்கொண்டும், புறப்பட்டுப் போகும்போதே சத்தம்போட்டுக்கொண்டும் காட்டினெல்லைக்குப் போனார்கள். பனி அவ்வளவு மிகுதியாகக் கொட்டினமையாலும், வடக்குக் காற்று ஓங்கி வீசினபடியால் குளிரவ்வளவு கடுமையாக இருந்தமையாலும், அவர்கள் வெளியே அதிகமாகத் தங்கமுடியவில்லை. ஆயினும் திரும்பியவர்கள் வீட்டிற்கு வராமல் தங்கள் குடிசையிற்போய்த் தங்களைக் கொஞ்சம் தேற்றிக்கொண்டு, இரவில் தங்கியிருப்பதாக அவ்விடம் போனார்கள். பகல் வெளிச்சமானதும் அவர்கள் மறுபடியும் வெளிக்கிளம்பினார்கள். பனிப்புயல் நின்றுபோய் வானமும் வெளிவாங்கி இருந்தது. முதல்நாளந்தியில் வீட்டிற்குத் திரும்பிவரும்போது நடுவிலிருந்த காட்டிற்குள் மறுபடியும் நுழைந்து, மூன்று நான்கு மைல் தூரம் சென்றார்கள். ஆனாலிடையில் விழுந்த பனியால் தங்களுடைய சுவடெல்லாம் மறைபட்டுப் போயிருந்தன. சிலவிடங்களிற் பனியானது அநேக அடிகள் ஆழமாக உறைந்து கிடந்தது. ஜான் எற்கனவே பர்ஸிவலைக் கடைசியிற் கண்டவிடத்தைப்பற்றி வெகு நெட்டாக விவரித்திருந்தமையால், அந்தவிடத்திற்குப் போய்ப் பார்த்தார்கள். குறுக்கும்,நெடுக்கும் சுற்றிலும் போய் அவனது துப்பாக்கி நுனியாவது பனிக்குள்ளிருந்து நீட்டிக்கொண்டிருக்கிறதோ வென்று பார்த்தனர். ஆனாலங்கே காணக்கூடியதொன்றுமில்லை. இப்படி நாலைந்து மணிநேரம் தேடிப் பார்த்துவிட்டு, வீடுவந்து சேர்ந்தனர். மிஸ்டர் காம்பெல்லும் ஹென்றியும்மட்டும் சமயலறையிலிருந்தனர்—ஏனெனில் மிஸிஸ் காம்பெல்லின்



மனநிலைமை அலங்கோலமாய்விட்டபடியால் மேரியால் அவர் தம் அறைக்குள் கொண்டுபோகப்பட்டுவிட்டார். தேடித் திரும்பியவர்கள் முகத்திலிருந்து எல்லாம் பயனற்றவாயினவென்று மிஸ்டர் காம்பெலுக்குத்தெரியவந்தது. மலாச்சியும் நீண்டமூஞ்சியுடன் தலையை அசக்கிவிட்டு உட்கார்ந்தான்.

"என் கண்மணி போய்விட்டானென்றே நீர் உணர்கிறீரா?" என்று மிஸ்டர் காம்பெல் மலாச்சியைக் கேட்டார்.

"ஆம் என்று தோன்றுகிறதையா! அவன் அப்படியே களைப்பாறுவதற்கு உட்கார்ந்திருந்திருப்பான். அப்போது அவன் பனிப்புசலால் தாக்கப்பட்டு மூடப்பட்டிருக்கவேண்டும். ஐயா! அவன் இனி எழுந்திருப்பது இவ்வுலகிலல்ல."

மிஸ்டர் காம்பெல் கண்களைக் கரங்களால் மூடிக்கொண்டு பிரமித்தவர்போல் சற்றிருந்துவிட்டு, "ஐயோ! அவன் தாயார் எவ்விதம் சகிப்பாள்?" என்று கதறினார்.

சற்றுநேரம் கழித்ததும் அவர் தம் மனையாளிருந்த அறைக்குள் புகவே, "ஐயோ! என் குழந்தை எங்கே? என் கண்மணிக்கு என்னவாயிற்று?" என்று அம்மை கதறினாள்.

"பகவான் கொடுத்தார், பகவானழைத்துக்கொண்டுவிட்டார். உன் குழந்தை இப்போது பரமபதம் அடைந்துவிட்டான்."

உலகவாழ்க்கை அநித்தியம் என்பதற்கு வேறு உதாரணமும்வேண்டுமோ? திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் வாழ்ந்துகொண்டிருந்த இக்குடும்பத்தின்நடுவில் வானத்திலிருந்து ஒருஇடிவிழுந்தாற்போல, ஒருநொடியில் இக்கொடிய சம்பவம் நடந்து, இக்குடித்தனத்தைத் துக்கசாகரத்தில் அழுத்திவிட்டதுபோலும்! "பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்" என்னும் முதுரைக்கொத்ததாய் இன்னும் மனச்சஞ்சலத்துக்கு ஏதுவாய்ப் பல துன்பங்கள் நேர்ந்தன.

எம்மாவுக்குப் பனிச்சர்ரலில் வெளிப்பிரதேசத்தில் அலைந்தோடியதால் குளிர் காய்ச்சல் வந்து வெகுமும்மரப்பட்டு அச்சிறுமியுடைய உயிருக்கே சேதம்வரும்போல் பயங்கரமாயிருந்தது. ஆல்ப்ரெடுடைய காயமானது ஆறிவராமல் உள்ளூறப் புரையோடிக்கொண்டிருந்தது. அக்குடித்தனக்காரர்கள் பர்ஸிவல் கை தவறிப்போனதைக் கூட அவ்வளவு பாராட்டவில்லை. ஆல்ப்ரெடும் எம்மாவும் அக்குடித்தனத்தாருக்கு உயிருக்குயிராக இருந்து வந்தபடியால் இவர்களுக்கு ஏதேனும் விபரீதம் சம்பவித்தால், அக்குடித்தனத்துக்குச் சூரியாஸ்தமனம் நேர்ந்து விடும். ஆகையால் காம்பெல்லர்கள் தவறிப்போன குழந்தை பர்ஸிவலையும் மறக்க நேர்ந்து, இச் சிறுவர் சிறுமிகள் எப்படியாவது மிஞ்சினாற் போதுமென்று ஆண்டவனைப்பிரார்த்தித்தனர். நோயாளிகள் கடைத்தேறவேண்டும் என்ற கவலையிலும், அவர்களைக் காப்பதிலும் இரவும் பகலும் கண்களைக் கொட்டாமல் காம்பெல்லர்கள் நாட்கள் நாட்களாய்த் தள்ளினது பகவானுக்கே தெரியும். கடைசியில் பனிக்காலம் முடிவுக்கு வரும் தருணத்தில், எம்மாவுக்குச்சற்று நோய்தெளிந்து வரவர அனுகூலத்திற்கு வந்துகொண்டிருந்தது. ஆல்ப்ரெடுக்கும் காயம் ஆறிவர ஆரம்பித்தது. காம்பெல்லர்களின் பிரார்த்தனைக்குப் பகவான் கடைக்கண் திறந்தார்போலும். அக்குடித்தனத்தைச் சூழ்ந்திருந்தஇருள் சற்றுப்பிரிந்து மறுபடியும் சூரியன் உதயமாயிற்றுப்போலும்.

## அத்தியாயம் 32

இளவேனிற்காலம் மறுபடியும் வந்தது. பனி விழுவது படிப்படியாய்க் குறைந்தது. ஏரியினின்றும் பனிப்பாறை உடைபட்டு ஆற்றின் ஜலத்தோடு ஓடி நீங்கிவிட்டது. முந்தின வருஷத்தில் புல் தரையில் மிச்சமிருந்த புல்லை மேய்வதற்காகக் கால்நடைகள் அவிழ்த்துவிடப்பட்டன. ஆண்



பிள்ளைகளனைவரும் விதை தெளிப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகளில் ஊக்கமாயிருந்தனர். பனியெல்லாம் போனவுடன் மலாச்சியும் மார்ட்டினும் ஆல்ப்ரெடும், மிஸிஸ் காம்பெல்லின் காதில் ஒரு வார்த்தைகூடப் போடாமல் காட்டிற்குள் போய் எளிய பர்ஸிவலின் கட்டையாவது கிடைக்குமோவென்று தேடிப்பார்த்தும் பயன்படவில்லை. ஆகையால் அவன் தங்களுக்குத் தெரியாதவிடத்திற் போய் மாண்டிருக்கவாவது வேண்டும், அல்லதவனுடைய கட்டையை ஓநாய்கள்தோண்டித் தின்றுவதிருக்கவேண்டுமென்ற முடிவுக்கு அவர்கள் வந்தார்கள். எங்கே தேடினாலும் அவனைப்பற்றித் துப்பு ஒன்றும் துலங்க வில்லையே! ஆகையாற் சில நாட்களுக்கெல்லாம் தேடுவதையும் விட்டுவிட்டார்கள். இளவேனிற்காலம் அந்தக் குடித்தனக்காரர்களுக்கு வேறொரு வழியிலும் உதவி செய்தது. அது வந்ததும் எல்லோருக்கும் வேலை பூர்த்தியாகவிருந்தமையால், வேறு எவ்விதமான சிந்தைக்கும் இடம் கொடுக்கவில்லை. அவர்களுக்கு இப்போது தானியச் சாகுபடி செய்வதற்கு நிலம் அநேக ஏகராக்கள் இருந்தமையால் அவசியமான வேலைகளைச் செய்வதற்கே வேண்டிய போது கிடைக்கவில்லை. ஆல்ப்ரெடுக்கு உடம்பு தேறி அவர்களுடன் வந்து வேலை செய்ய முடிந்ததே பெரும்பாக்கியமாக இருந்தது. மலாச்சியும் ஜானும் மிஸ்டர் காம்பெல்லும் கூட உதவி செய்தனர். கடைசியில் வேலையும் முடிந்தது. பிறகு கோட்டையிலிருந்து ஆள்வந்தான். கியூபெக், மாண்ட்ரீல், இங்கிலாந்து, இவ்விடங்களிலிருந்து கடிதங்கள் வந்தன. இங்கிலாந்திலிருந்து வந்த கடிதங்களில் விசேஷ சமாசாரமொன்றுமில்லை. ஆனால் மாண்ட்ரீலிலிருந்து வந்ததில் ஏற்கனவே செய்திருந்த ஒப்பந்தப்படி யந்திரங்களை ஒரு படகிலேற்றிக்கொண்டு யந்திர வேலைக்காரர்கள் ஒரு வாரத்திற்குள் வந்துவிடுவார்களென்றும், கூடிய சீக்கிரத்தில்

ஜலயந்திரம் ஸ்தாபித்தாய்விடப்படுமென்றும், எழுதப்பட்டிருந்தது. இங்கிலாந்திற்குப் போயிருந்த காப்ட்டின் இங்க்ளேர் தம் காரியங்களெல்லாம் தம்முடைய கார்டியனோடு ஒழுங்கு படுத்தப்பட்டுவிட்டனவென்றும், கொஞ்ச நாட்களுக்குள்ளாகக் கோட்டைக்குத் திரும்பி வந்துவிடலாமென்றும் ஆல்ப்ரெடுக்கு எழுதியிருந்தார். தாம் திரும்பிவந்தவுடன் எவ்வளவு ஆனந்தப்படுவாரென்றும், எம்மா சொன்ன ஜோஸ்யத்திற்கு விரோதமாகவே தாம் இங்கிலாந்திலொருவரையும் கல்யாணம் செய்துகொள்ளவில்லையென்று எம்மாவுக்குச் சொல்லச் சொல்லியும் ஆல்ப்ரெடுக்கு எழுதியிருந்தார். இதற்கடுத்தாற்போலவே கர்னல்பார்ஸ்டர்துரையும் மற்றும் சில உத்தியோகஸ்தர்களும் விஜயம் செய்தனர். யந்திரத்தை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய உதவியைச் செய்வதற்காகக் கர்னல் துரை சில போர்வீரர்களை அனுப்பலாமோவென்று கேட்டதும் மிஸ்டர் காம்பெல்லும் அப்படியே சம்மதித்தார்.

தீயினால் காடழிபட்ட புலங்களிலெல்லாம் தானியம் விதைக்கப்பட்டுப் பயிரேற்றியாய் விட்டது.

"உம்மிடம் பணமின்னுமிருக்கும் பக்ஷத்தில் இன்னும் மிகுதியாகத் தானியம் பயிரிடப்பட்டிருக்குமல்லவா" என்றார் கர்னல்துரை.

"அப்படி அல்ல, ஐயா, என்னிடத்தில் நூறு பவுன் போல் இன்னும் ரொக்கம் இருக்கிறது. எனக்கு அடைக்கப்பட்ட நிலங்கள் இவ்வளவுதான். அதற்கு மேலிருந்தாலும் பண்படுத்திப் பயிர்எழுப்ப ஆள்களும் அவ்வளவுதான்" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"ஐயா, அப்படி ஆனால் நான் ஒரு உபாயம் சொல்கிறேன். ஆற்றிற்கக்கரையில் சர்க்காருக்குச் சொந்தமாயுள்ள காட்டில் இன்னும் கொஞ்சம் தாம் மனுச் செய்து சேர்த்துக் கொள்ளலாம். அதைத் திருத்திப் பயிர் செய்ய ஆள்களைச் சேர்ப்பதற்கும் ஒருவழி தோன்றுகிறது. கப்பலேறி வந்திறங்கி வேலைக்காகத் தேடிக் கொண்டிருக்கும் ஐரோப்பியர்களுள் நாணயமாயுள்ளவர்களைப் பொறுக்கி எடுத்து, ஒவ்வொருவருக்கும் புதிதாகப் பெறப்போகிற காட்டில் ஒரு பாகத்தை ஒப்படைத்தால், அதை அவரவரே சீர்திருத்தி ஒழுங்கு படுத்தி விடுவார். பிறகு அவர்களுக்கு விதைமட்டும் நீங்கள் கொடுக்கும் பக்ஷத்தில், தந்தம் பொறுப்பிலேயே அவர்கள் சாகுபடி செய்து தங்களுக்கு வாரங்கொடுக்கும்படி ஏற்பாடு செய்து கொள்ளலாம். அதனால் நிலமும் சீர்பட்டுச் சேரும்; வரும்படியும் வந்துகொண்டிருக்கும்; உங்களுக்குத் துணைக்கு வேறு குடித்தனக்காரர்களும் ஏற்பட்டு விடுவார்கள்" என்று கர்னல் துரை சொன்ன யோஜனை நல்லதாகத் தோன்றினபடியால், அப்படியே செய்யத் தீர்மானிக்கப் பெற்றது.



சுமார் மூன்றுவாரங்கள் சென்றதும் மாவரைக்கவும் மரம் அறுக்கவும் வேண்டிய யந்திரங்களைப் படகுகளிலேற்றிக் கொண்டு யந்திரவேலைக்காரர்கள் வந்துசேர்ந்தனர். கோட்டையிலிருந்தனுப்பப்பட்ட போர் வீரர்களும் வந்துசேரவே, முந்தியிருந்தாற்போல் மறுபடியும் பண்ணையைப்பார்த்தால் எவ்விடத்திலும் ஜே ஜே என்று முழக்கமாய் இருந்தது. யந்திர வேலைக்காரனும் ஒரு சிரித்தமுகத்தையுடைய சிறிய இங்கிலீஷ்க்காரன். அவன் கானடாவில் வந்து தொழில் நடத்திக்கொண்டு அத்தேசத்திலுள்ள நல்ல வேலைக்காரரில் ஒருவனென்று பெயர் வாங்கிவிட்டான். யந்திரம் ஸ்தாபிக்க ஓர் இடம் அமர்த்தப்பட்டுச் சீக்கிரத்தில் காட்டில் கோடரிச் சத்தம் கேட்க ஆரம்பித்தது. அவன் மேற்பார்வையில் மரங்கள் வெட்டிச் சதுரிக்கப்பட்டன. ஆல்ப்ரெட் விடாமல் யந்திர வேலைக்காரன் பக்கத்திலேயே இருந்து ஆள்களிடம்

வேலை வாங்கிக்கொண்டுவந்ததில், அவனுக்கும் யந்திரவேலைக் காரனுக்கும் அதிக அன்னியோன்னிய ஸ்நேக முண்டாயிற்று. அவன் பெயர் எமர்சன். அவனும் படிப்பிலும் விவேகத்திலும் ஒழுக்கத்திலும்குறைந்தவனல்ல. அவனுக்குக்குடித்தனக்காரர்கள் காரியத்தில் ஒருபற்றுதல் சீக்கிரத்தில் ஏற்பட்டுவிட்டது. மிஸ்டர் எமர்ஸனுக்குக் கானடாவில் வந்து குடியேறினவர்கள் எல்லோரையும்பற்றிய எல்லாத் தகவல்களும் தெரிந்திருந்தனவென்று மிஸ்டர் காம்பெல் அறிந்துகொண்டார். அவன் தொழில்முறையில் அந்நாட்டைச்சுற்றி அடிக்கடி யாத்திரை செய்துவருகையில்அவனுக்கு அவர்களுடனடிக்கடி சம்பந்தமேற்பட்டு மிகுதியானபழக்கமும் ஏற்பட்டிருந்தது.

“உங்களுக்கு இந்தநிலம் கிடைத்ததைப்பெரியபாக்கியமென்றே சொல்லவேண்டும்,” என்று மிஸ்டர் காம்பெல்லிடம் அவன் சொன்னான். “நிலமோ முதற்றரம். ஆற்றின் வேகத்திலிருந்து யந்திரங்களை ஓட்ட ஏராளமான விசை அகப்படுகிறது; போக்கு வரவுக்கு எளிதாக ஏரியுமமைந்துள்ளது. ஐம்பது வருஷத்தில் இந்த ஆஸ்திக்கு அளவற்ற மதிப்பு ஏற்பட்டுவிடும்.”

“இந்தப் பூமியில் இன்னும் அநேக குடிகள் வந்து தரித்தால் எனக்கு மிகவும் திருப்தியாகவிருக்கும்,” என்றார் மிஸ்டர் காம்பெல். “அதனாலெங்களுக்குக் காவலும் மிகுதியாகித் தேக சுகமும் விருத்தியாகும்; சென்ற இலையுதிர்காலத்தில் தீப்பிடித்தெரிந்ததால் பொட்டலாகப் போன புலங்களைச்சாகுபடி செய்வதற்கு வேண்டிய ஆள்களும் இல்லையே. சீக்கிரத்தில் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டாலொழிய, மறுபடியும் எல்லாம் காடுமண்டிப் போய்விடுமே!”

“இப்போது அவற்றிலெல்லாம் காரைச்செடிகள் மண்டி இருக்கின்றன. மிஸ்டர் எமர்ஸன்! காரைப்பழங்கள் சுவை



யுள்ளவையல்லவா?” என்றாள் எம்மா.

“ஆம், மிஸ்! நிரம்பவும் மேலானவை,” என்றான். “ஆனால் இப்பிராந்தியங்களில் மரங்களை வெட்டியானவுடன் விதைப்பதற்காகக் கொத்தி வெட்டாவிட்டால் காரைச்செடிகள் உடனே மண்டிவிடுகின்றனவென்றுதெரியாதா?”

“உண்மையாகவே நானதையறியேன்.”

“அதெப்படியோ, உள்ளது அதுதான். காரைச்செடிகள் பின்னோடே கல் மரங்களின் செடிகள் முளைக்க வாரம்பித்துச் சீக்கிரத்தில் மறுபடியும் காடாக வளர்ந்து விடுகின்றன.” என்று சொல்லிவிட்டு, மிஸ்டர் காம்பெல்லைப்பார்த்து, “கப்பலேறி வரும் ஆள்களை இவ்விடம் கொண்டுவந்து சேர்ப்பது அவ்வளவு கஷ்டமாக இராது; ஆனாலவர்களை இவ்விடம் தரிக்கும்படி செய்வதுதான் கஷ்டம். இந்நாட்டிற்கவர்கள் வருவதின் கருத்தென்னவென்றால் சொந்தமாக நிலத்தைச் சம்பாதித்துக்கொண்டு பராதீனமின்றி இருப்பதென்பதுதான். அவர்களனைவருக்கும் பொருளிராது. தற்காலத்திற்காகவெளியிற் சம்பளத்திற்கு வேலைசெய்ய அமர்வார்கள்; ஆனால் கையில் வேண்டிய பணம் சேர்ந்தவுடன் உங்களைவிட்டுப் போய்விடுவார்களே.”

“அது மிகவும் சகஜந்தானே; ஆனால் நான் செய்கிற யோசனையாதென்றால், இன்னும் கொஞ்சம் நிலம் சேர்த்துக்கொண்டு, குடியெழும்பி வருவோர்களுடன் ஏதாயினுமொரு ஏற்பாடு செய்துகொள்வதென்பது. அவர்களுக்கு விதையைக் கொடுத்துத் திரும்பவும் பகுதிக்குப் பதிலாக தானியத்தை வாங்கிக் கொள்ளலாமென்று கர்னல் துரை சொல்லுகிறார்.”

“அது ஒரு நிலையான ஏற்பாடாக ஆகமாட்டாதே!” என்றான் மிஸ்டர் எமர்ஸன். “நீங்களெவ்வளவு நிலத்திற்காக மனுப் போடுவதாக உத்தேசம்?”

"ஆறு நூறுஏகராக்கள்."

"நல்லது, ஐயா! நான் பிந்திச் சொல்லப்போகிற நிபந்தனைகளை யனுசரித்தால் இருதிறத்தாருக்கும் சம்மதமாக இருக்கலாம். அஃதாவது நிலத்தை நூறு நூறு ஏகர்களாக ஆறுதுண்டுகள் பிரித்து, ஒவ்வொரு துண்டிலேயும் உங்களது நிலத்தை அடுத்திருக்கிற ஐம்பதுஏகராவை அவர்கள் முதல் முதல் சாகுபடி செய்து அவர்களின் கையிற் போதுமான தொகை ஊறினவுடன் மற்ற ஐம்பது ஏகராவை அவர்கள் கிரயத்திற்கு வாங்கிக்கொள்ளட்டும். அப்படிச் செய்வதால் உங்களுக்கிப்போதிருக்கும் நிலத்தோடு முந்நூறு ஏகரா அசலானநிலம் சேருவதுடன், உங்களிடத்தில் மற்ற ஐம்பது ஏகராவை வாங்கப் போதுமான பணம் சேர்ந்தாற்கூட உங்கள் சமீபத்தில் வசிப்பதைவிட்டு ஓடிவிடாமலுங்கள் பக்கத்திலேயே நிலையான குடித்தனக்காரர்களாகத் தரித்திருப்பார்கள்."

"மிஸ்டர் எமர்ஸன்! இஃதோர் மிகவும் நல்ல ஏற்பாடென்று நினைக்கின்றேன். இப்படிச் செய்ய எனக்கு மிகவும் சம்மதம்."

"நல்லதையா! இந்த வேனிற்காலத்தில் வந்திறங்கும் புதுக் குடிகளிடம் இந்த ஏற்பாட்டைப்பற்றிப் பேசுவதற்குச் சமயம் வெகுவாக நேரிடும். அப்போதுங்களுக்கு அயற்குடித்தனக்காரர்களாக ஆவதற்கு ஏற்றவர் யாரையாயினும் நான் பார்த்தால் உங்களுக்குடனே தெரிவிக்கிறேன்."

"பின்னரிப்படி ஆகுமென்பதற்கு நல்ல சூசகமிருப்பதால், மேலும் வேண்டிய நிலத்திற்குஇப்போதே மனுக்கொடுக்கின்றேன்", என்றார் மிஸ்டர் காம்பெல்; "ஏனெனில், இந்த நிர்மானுஷ்யமான காட்டுவெளியில் துணையாயிருக்கச் சம்மதித்து வருபவர்களுக்கு நிலத்தை இனாமாகக்கூடக் கொடுக்க எனக்குச் சம்மதமே."



"இம்மாதிரி உபாயமில்லாமலேயே சில வருஷங்களுக்குள் உங்களுக்கு வேண்டிய அயல் துணைக்குப் போதுமானவர்கள் கிடைத்து விடுவார்களென்றே நான் கருதுகிறேன்," என்றான் மிஸ்டர் எமர்ஸன்; "ஆனால் நீங்களிப்போது சொல்லுகிறபடி என்றால் மனிதர்களை நாம்பொறுக்கி எடுக்கலாம். அதோடுகூடப் பிறகு தொல்லை ஒன்றும் வராது. நிலைத்து இருக்கும்படி அவர்களிடமிருந்து உடன்படிக்கைகளையும் வாங்கிக் கொள்ளலாம்."

யந்திர ஸ்தாபன வேலை வெகு விரைவாக நடந்து புல்லறுவடைநாளுக்கு முந்தியே வேலை தீர்ந்து முடிந்து விட்டது. யந்திரத்தின் விதிகளை விவரமாகக் கற்றுக்கொள்ளும் வண்ணம் ஆல்ப்ரெட் இவற்றையெல்லாம் வெகு நுட்பமாகக் கவனித்து வந்தான்; மார்ட்டினுமப்படியே செய்து வந்தான். யந்திரவிதி அவ்வளவு சிக்கலானதாயில்லை. மிஸ்டர் எமர்ஸன் சோதனைக்கு ஓட்டிப் பார்த்ததில் அது திருப்திகரமாகவே முடிந்தது. அவன் ஆல்ப்ரெடுக்கு எல்லாவற்றையும் விளக்கமாய் விவரித்து, யந்திரத்தையும் ஓட்டிக்காட்டி அவனை அதில் தேர்ந்தவனாகச் செய்தான். யந்திரத்தைப்பூட்டி ஓட்டிய பிறகும் இரண்டு வாரம் வரையில் மிஸ்டர் எமர்ஸன் மாண்ட்ரீலுக்குத் திரும்பிப் போவதற்குப் படகு அகப்படாமல் அங்கேயே இருக்கவேண்டியிருந்தது. அப்போது, 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றபடி ஆல்ப்ரெடும் மார்ட்டினும் இரண்டுயந்திரங்களையும் ஓட்டிவிட்டுப்பார்த்து, தங்களும்இனி அவைகளைத் தனிமையிலேயே ஓட்டலாம் என்கிற தைரியம் வந்துவிட்டதென்று திர்ப்தி அடைந்தார்கள். மிஸ்டர் காம்பெல்லின் வேண்டுகோளின் பிரகாரம் போர் வீரர்களெல்லாரும் புல்லறுவடையாய் முடியும் வரை அங்கேயே இருக்கும்படி அனுமதி கொடுக்கப்பட்டு, புல் கொணர்ந்து சேர்த்தானவுடன் கூலியைக் கணக்குப் பார்த்து

வாங்கிகொண்டு மறுபடி கோட்டைக்குத் திரும்பிப்போய்ச் சேர்ந்தனர். காப்ட்டின் ஸிங்க்ளேர் எழுதிய கடிதத்திலிருந்து இதற்கு முந்தியே வந்து சேர்ந்து விடுவாரென்று எதிர்பார்த்திருந்தும், போர் வீரர் புறப்பட்டுப் போன பிறகு தான் வந்து சேர்ந்தார். அவர் வரும்போது மிகவும் ஆநந்தத்துடனும் அன்புடனும் அழைக்கப்பட்டாரென்று கூறவும் வேண்டுமோ? அவர் சொல்ல வேண்டிய சமாசாரங்களனேகமிருந்தன. அவரும் ஒவ்வொருவருக்கும் கொடுப்பதற்கென்று நேர்த்தியான அநேக நன்கொடைகள் கொண்டு வந்திருந்தார். சொல்லவேண்டுமோ?—எளிய பர்ஸிவலுக்காகக்கொண்டுவந்திருந்தவைகளைக் கண்ணிற் காட்டவே இல்லை. அவரோடு கூட உலாவித்திரிந்து சம்பாஷணை செய்து அவரைத்தோழனுகக் கொண்டாடும்படி மறுபடியும் எம்மாவுக்கும் மேரிக்கும் வாய்த்தது மிகவும் கொண்டாட்டமாக இருந்தது. இப்படி நாள் போவது தெரியாமல் இரண்டு வாரங்கள் கழிந்தவுடன், இவருக்கு விடுமுறை நாள் கழிந்துவிட்டபடியால் இவர் கோட்டைக்குத் திரும்பிப் போகும்படி நேரிட்டது. ஆயினும் புறப்பட்டுப் போவதற்கு முன், மிஸ்டர் காம்பெல்லையும் மிஸிஸ் காம்பெல்லையும் தனியாகக் கண்டு, தமது ஆஸ்தியைப் பற்றியும் அந்தஸ்த்தைப்பற்றியும் உண்மையை அவர்கட்கு விவரமாகக்கூறி, மேரியைப் பத்நியாக வரிப்பதற்கு அவர்களதனுமதியை வேண்டினர். அவர்கள் ஏற்கனவே அவருக்கு மேரியின்மீதுள்ள கருத்தை அறிந்தவர்களாகையால், அவருடைய மநோரதத்துக்குத் தடை ஒன்றும் சொல்லாமல் அது எப்படியாயினும் நிறைவேறவேண்டுமென்று ஆசீர்வாதம் செய்தனர். ஆனல் மேரியினதுசம்மதத்தைப்பெறும் விஷயமானது அவருடைய பொறுப்பிலேயே விடப்பட்டபடியால், அவர் அன்று சாயங்காலமே பிரயத்தினம் செய்து காரியத்தை முடித்துக்கொண்டார், மேரியோ



மகாபரமார்த்தியான பெண்; சூது, கபடம், வேஷம்,
ஒன்றும் தெரியாதவள்; ஆதலின் உண்டு இல்லையென்று
சொல்லுவதில் ஜாலமொன்றும் செய்யாள். காப்ட்டின்ஸிங்
க்ளேரின்மேல் அவள் நெடுநாளாய்க் காதல்கொண்டிருந்த
வளாதலால், அப்படியே தன்மனதிலிருந்ததையுள்ளபடியே
கூறிவிட்டாள். உடனே காப்ட்டின் ஸிங்க்ளேர் பரமாநந்த
ஸாகரத்தில் மூழ்கினர்போலும்.

"காப்ட்டின்ஸிங்க்ளேர்! தங்களிடம் எனதந்தரங்கத்
தைச் சொல்லிவிட்டேன்" என்றாள் மேரி; "எனக்கு உங்கள்
மேல் மிகு காதல் இருக்கிறதென்பதை நான் ஒளிக்கவில்லை;
ஆதலால் தாங்கள் வருங்காலத்தைப்பற்றிச் செய்திருக்கும்
ஏற்பாடுகளைத் தயைசெய்து எனக்குச் சொல்லுங்கள்."

"நீ என்னை என்னசெய்யும்படி விரும்புகிறாயோ
அதேதான்."

"உங்களுக்குப் புத்திசொல்ல எனக்குப் பாத்தியமில்லை.
உங்களை என்னுடைய எண்ணங்கட்கிணங்கச்செய்ய இஷ்ட
மூமில்லை. என்னைப்பற்றினவரையில், நான் செய்யவேண்டிய
கடமையாயுள்ளதொன்றிருக்கிறது; அதினின்றும் யான் தவ
றேன்."

"அது யாதோ?"

"அதாவது, இப்போதிருக்கும் நிலைமையில், எனது
அம்மானையும் அம்மாமியையும் நான் விட்டுப் போகக்கூடா
தென்பது. என்னை வளர்த்ததும் அவர்களே; படிப்பித்த
தும் அவர்களே; தாய் தந்தையர்களை இழந்த நான் அவர்கள்
நல்ல ஸ்திதியில் இருக்கையில் கூடி வளர்ந்தவள். அப்படி
யிருக்க, அவர்களிப்போது பரதேசிகளாக இருக்கும்போது
அவர்களை விட்டுவிட்டு, உங்களுடைய சம்பந்தத்தினலெனக்
குக் கிடைக்கக்கூடிய சுகானுபவங்களில் ருசிகொண்டு, உங்க
ளுடன் இங்கிலாந்துக்கு நான் வந்துவிட்டால் என்னைவிட

நன்றிகொன்ற துரோகி யாருமிருப்பாரோ? இனி ஏதேனும் விசேஷமாக ஸம்பவித்தால் என் எண்ணம் மாறலாம். ஆனாலிப்போதுள்ளது அதுதான்."

"ஆனாலிந்த நிலைமையிலே உங்களுக்கேற்படும் கஷ்டமோ சுகமோ அதை நானும் அனுபவித்துக்கொண்டு இங்கே காலத்தைக் கழிக்க விரும்பினால் அது உனக்குச் சம்மதமாக இருக்குமோ?"

"இருக்கவே இருக்காது; ஏனெனில் என்னை உத்தேசித்து உங்களுக்குத் துரோகம் நீங்களே செய்கிறதென்றால் அதற்குக் காரணம் நானல்லவோ ஆய்விடுவேன். உங்களுக்கு உத்தியோகத்தை விடுவதாக உத்தேசமில்லையென்று நான் நம்புகிறேன்."

"எனக்கிதுவரையிலந்த உத்தேசமில்லை. ஆயினும் உத்தியோகம் பெரிதா? நீ பெரிதா? என்பது வந்துவிட்டால் அப்போது நான் செய்யும் தீர்மானம் இன்னதென்று சந்தேகமேயில்லை."

"காப்ட்டின்ஸிங்க்ளேர்! உங்களுக்குச்சந்தேகமிராதென நான் நம்புகிறேன். தற்காலத்துக்கு நீங்கள் உத்தியோகத்தை வைத்துக்கொள்ளும்படியாகவே தீர்மானிக்கவேண்டும். என்று புன்னகையுடன், "என்னைப்போலொத்த ஸ்திரீயை வேண்டி இதுவரையிலுழைத்ததை யெல்லாம் பயனற்றதாகச் செய்துகொண்டு, இனி உங்களுக்குக் கிடைக்கக்கூடிய மேலான பதவியையெல்லாம் இழப்பது சரியன்று. என்னைப் போன்ற முகம்வெளுத்த ஒரு பெண்ணையுத்தேசித்து நீங்களொரு காட்டாளாதல் வேண்டாம்."

"நீயும் உன்னுடைய அம்மானையும் அம்மாமியையும் விடமாட்டாய். நானுமென்னுடைய உத்தியோகத்தைவிடக்கூடாதென்றால் அப்போது நான் என்ன செய்கிறது?"

"காத்திருங்கள்; தற்காலத்திற்கு எனது பிராணன்



உங்கள் மேலிருக்கிறதென்பது உங்களுக்குப் போதும். நல்ல காலமும் வந்து, இப்போதைய நிலைமையும் மாறி, நான் அவ்வளவு மிகுதியாக நன்றிக்கடன்பட்டவர்களிடமிருந்து துரோகியாகாமல் விலகமுடிந்து, உங்களிடம் வந்துசேரும் வரையிற் பொறுமையைக் கைப்பற்றியிருங்கள். இதற்குச் சம்மதமானால் நானுங்களுக்கு மனைவியாகும் பாக்கியத்தைப் பெற்றவளாவேன். அப்போதெனக்கொரு குறையுமிராது. ஆனால்நீங்களும் உங்களுக்குத் துரோகியாகக்கூடாது;நானும் என் அம்மானுக்கும் அம்மாமிக்கும் த்ரோகியாகக்கூடாது."

"மேரி, நீ சொல்லுவது நியாயமென்றே எனக்குத் தோன்றுகிறது," என்றார் மிஸ்டர் காப்ட்டின்ஸிங்க்ளேர். "ஆனால் நாமிருவரும் மணம் புரிவதற்குக் காலம் மட்டும் நிர்ணயமாகவில்லை. எனதுள்ளம் குளிரும்படி ஏதாவது தைரியம் சொல்லமுடியுமா?"

"காப்ட்டின் ஸிங்க்ளேர்! நாமிருவரும் இன்றும் சிறுவர்கள் தாம்," என்றாள் மேரி; "இன்னுமோரிரண்டு வருஷங்களில் என் மாமனுக்கும் மாமிக்கும் மனோதைரியம் வந்துவிடும். அவர்களுக்குச் சவுக்கியமும் மிகுதியாக ஏற்பட்டுவிடலாம். ஓரிரண்டு வருஷங்களில் சண்டையும் நின்றுவிடலாம். நீங்களுமபவாதத்திற்கிடமின்றி அரைச் சம்பளத்தில் உபகாரச்சம்பளம் வாங்கிக்கொண்டு விடலாம்; பார்க்கப்போனால் நமக்கிப்போது தெரியாமலிருந்து இரண்டு வருஷங்களுக்குள் நேரக்கூடிய சம்பவங்கள் அனேகமிருக்கின்றன. அவைகளின்னவையென்று முந்தி எதிர்பார்க்க முடியாது. இப்படிப் பொறுமையுடன் காத்திருந்தும் ஒன்றும் நேரிடாமற்போனால், அப்போதுங்களுக்கு அனுகூலமாகக் கூடியது வேறொன்றும் இருக்கிறது."

"அஃதென்ன, மேரி!"

மேரி புன்னகையுடன் "எனக்கே காத்திருப்பதில் களை

ப்புண்டாகிவிடலாம்," என்றாள்.

"அப்படியாவது எனக்கு அனுகூலமாகாதாவென்று நானுயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன்," என்றார் காப்ட்டின்லிங்க்லேர். "எனது மாறாத விசுவாசத்தையும் விடா முயற்சியையும் பார்த்துனக்கு மனமிரங்கி என்னை நீ பாக்கியவானாகச் செய்வாயானால், ஜேகப் என்பவன் ரேஷல் என்பவளை வேண்டி எவ்வளவு நாள் காத்திருந்தானோ, அவ்வளவுநாள் நானும் காத்திருப்பேன்."

"நீங்களப்படிச்செய்தால் அவரைப்போல் தவம் பயனற்றுப்போகாது. உங்களுடைய மனோரதம் சித்திபெறும்" என்றாள் மேரி; "ஆனால் நாமிப்போது வீடு போவோம்."

மேரியின் தீர்மானத்தால் மனச் சமாதானமடைந்து காப்ட்டின்லிங்க்லேரும் மறுநாள் புறப்பட்டுப் போனார்.

## அத்தியாயம் 33.

ஹென்றி ஏற்கனவே சொல்லியதுபோலவே, இலையுதிர் காலத்திலெல்லாம் அக்குடும்பத்தினரனைவருக்கும் அலுவல் பூர்த்தியாகவிருந்தது. கோதனம் மிகுதியாய் விருத்தியாய் விட்டது. காளைக்கன்றுகளும் கிடாரிக்கன்றுகளும் விசேஷமாய் உண்டாகி, ஆட்டுக்குட்டிகளும் கணக்கில்லாமலிருந்தன. புற்காட்டு வெளியின் புல்லிற் கொஞ்சம் மீதி வைத்துக் கொள்வதற்காகக் கால்நடைகள் அநேகமாகப் புதர்களிலேயே மேய விடப்பட்டன. ஈன்ற ஆடுகளும் குட்டிகளும் கறவை மாடுகளும் இளங்கன்றுகளும் மாத்திரமே கட்டித் தீனி போடப்பட்டன.

இப்படிச்செய்ததால் கொஞ்சம் ஒழிவு ஏற்பட்டபோதிலும், தானியம் எல்லாம் அறுவடை ஆகவேண்டியிருந்ததால் பூராவாக அலுவல்இருந்துகொண்டே வந்தது. தானியப்போர்களை அடித்துத் தானியத்தை உடனுக்குடன் மாவாக அரைத்துக் கோட்டைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட



பிரகாரம் மாவுமூட்டைகளை அனுப்பி ஆகவேண்டியிருந்தது. ஆதலால் ஒழிவுஎன்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆகிலும் இடைஇடையே காப்ட்டின் லிங்க்லேரும், மற்றுமுள்ள பழகிய கோட்டை உத்தியோகஸ்தர்களும் விருந்தாடவருவதும் களிப்பதும் போவதுமாய் இருந்தனர்.

பனிநாள் வருவதற்குமுன் மாவெல்லாம் அரைத்து முடிந்து,மூட்டைகளாகக் கட்டப்பட்டு கர்னல்துரை வேண்டுமென்று சொல்லியனுப்பிய கால்நடைகளுடன் கோட்டைக் கனுப்பப்படலாயின. இம்மாதிரியான ஏற்பாடு இருதிறத்தாருக்கும் லாபகரமாயிருக்குமென்று கர்னல் துரை ஏற்கனவே சொன்னது சரிதானென்று இப்பொழுதுதான் நன்கு விளங்கிற்று. இதுவரையில் ஒவ்வொரு தடவையும் கணக்குப் பார்த்ததில் மிஸ்டர் காம்பெல் சர்க்காருக்குப் பணங் கொடுப்பது வழக்கமாய் இருந்தது. ஆனாலிப்போது கோட்டைக்குத் துருப்புகளின் உணவுக்காக மா மூட்டைகளையும் கால் நடைகளையும் மிஸ்டர் காம்பெல் அனுப்பியிருந்தமையால், மிஸ்டர் காம்பெல்லுக்குச் சர்க்கார் கொடுக்கவேண்டிய தொகை மிகுதியாகவே இருந்தது. அதற்காக ஒரு பில்லு மனுப்பப்பட்டது. தவிரவும் மிஸிஸ் காம்பெல் கோட்டைக் கனுப்பின சேவல்கள் பன்றியினிறைச்சி முதலியவைகளுக் கும்வரவேண்டியதொகை சொல்பமாக இல்லை. இப்படியாகப் பிறரின் விசுவாசத்தினாலும், தம்முடைய முயற்சிகளாலும் தமக்கிருந்த சிறிய மூலதனத்தை யுக்தி யோசனையுடன் நிதானித்து உபயோகப்படுத்தினதாலும், சில வருஷங்களில் அவரது செல்வமும் செல்வாக்கும் பெருகி அவர்உயர்ந்த நிலைமைக்கு வந்து விடுவாரென்று நிச்சயமாகத் தோன்றிற்று. தானியமறுவடையானதும் அதையடித்தெடுப்பதில் மலாக்சியும் ஜானும் உதவியற்றவர்களாதலால், வேட்டைக்குப் போக ஆரம்பித்து, ஒரு நாளாவது இறைச்சியின்றி வீட்டி

ற்குத் திரும்பி வருவதில்லை. வெளியில் திரியும்போது இந்தியர்கள் மலாச்சியின் கண்ணிற்படவேயில்லை. அவர்கள் சுற்றுவட்டத்தில் வந்துபோனதாக ஒருசுவடும் தெரியவில்லை. ஆகையால் இந்தவிஷயமாக இருந்த பீதியெல்லாம் நிவர்த்தியாகிச் சென்றகுளிர்காலத்தில் நடந்த சம்பவங்களால் புத்தி வந்து வருங்குளிர்காலத்தை உத்தேசித்து வேண்டிய ஜாக்கிரதையெல்லாமெடுத்துக்கொண்டார்கள். இந்திய வேனிற்காலத்தில் இங்கிலாந்திலிருந்து கடிதங்கள் வந்தன. அவைகளில், வழக்கம்போலவே இங்கிலாந்தில் இவர்களுடைய பழய சிநேகிதர்களைப் பற்றின வரலாறுகள் விவரிக்கப்பட்டிருந்தன. கியூபெக்கிலிருந்துமொருகடிதம் வந்திருந்தது. அதில் மிஸ்டர் காம்பெல் நிலம் மேலாகவேண்டுமென்று கொடுத்திருந்த மனுவின்மேல் சாதகமாக உத்தரவுசெய்யப்பட்டதென்ற செய்தியிருந்தது; மாண்ட்ரீலிலிருந்து மிஸ்டர் எமர்ஸனிடமிருந்து ஒரு கடிதமும் வந்தது. அதிலவன் நல்ல யோக்கியர்களான இரண்டு குடித்தனக்காரருடன் பேசி முடித்திருப்பதாயும் வருகிற இளவேனிற்காலத்தின் ஆரம்பத்திலேயே அவர்கள் வந்துசேர்ந்துவிடுவார்களென்று சமாசாரம் எழுதப்பட்டிருந்தது.

மிஸ்டர் காம்பெல் எதிர்பார்த்ததும் இம்மாதிரியான ஏற்பாடே ஆதலால், இது அவருக்கு மிகவும் திருப்திகரமாக இருந்தது. அதுடன்கூட, இன்னும் ஒரு லாபகரமான செய்தியும் வந்திருந்தது. கோட்டைக்குள் ரிபேர்கள் விசேஷமாகச் செய்யவேண்டி இருந்தனவென்றும், அதற்குப் பலகைகள் ஏராளமாகத் தேவையாயிருந்தனவென்றும், அவைகளைச் சப்ளைசெய்ய மிஸ்டர் காம்பெல் ஏற்றுக்கொள்வாரா என்றும், கர்னல்துரை கேட்டனுப்பிஇருந்ததால், பண்ணையில் புதிதாகத் தாபிக்கப்பெற்ற மரமறுக்கும் இயந்திரத்திற்கும் வரும் பனிக்காலத்தில் பூராவாக அலுவல் கிடைத்தது,



மேல்வரும்படிக்கும் இடம்இருந்தது. இதற்கெல்லாம் காரணம் கர்னல் துரையின் உபகாரசிந்தனைதான் என்று யார் தான் உணரவில்லை.

கடைசியில் குளிர்காலமும் முடிவடைந்தது; வழக்கம் போல் பனி விழுவதற்காரம்பித்தது. காப்டின் ஸிங்க்ளேர் இனி வெகுநாள்களுக்கு வரமுடியாதென்று சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றார். அவர் போனதினால் அக்குடும்பத்திலெல்லாரும் துயரமுற்றிருந்தனர். அவரிடத்திலெல்லோருக்கும் அவ்வளவு விசுவாசம் ஏற்பட்டிருந்தது. ஹென்றிக்குத் தானியச்சேரடியில் வேலை மிகுதியாக இருந்தமையால் மலாச்சியும் ஜானும்மட்டும்தான் வேட்டைக்குப் போவது என்று தீர்மானம் செய்யப்பட்டது. மார்ட்டினுக்கும் ஆல்ப்ரெடுக்கும் மரங்களை வெட்டி அடித்துண்டுகளை வாள்பட்டறைக்குக் கொண்டுவந்து சேர்ப்பதிலும் யந்திரங்களைக் கவனிப்பதிலும் வேலை சரியாகவிருந்தது. வெளிவேலைக்கு இம்மாதிரி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வீட்டுவேலைக்கோவென்றால், எளியபர்ஸிவலும் போய்விட்டபடியாலும், உள்வேலையும் வரவர மிகுதியாய் விட்டபடியாலும், மிஸிஸ்காம்பெலுக்கும் பெண்களுக்கும் கண்டு மிஞ்சி, மிஸ்டர் காம்பெல் அப்போதைக்கப்போது அழைத்துக் கொள்ளப்பட்டார். மிஸ்டர் காம்பெல்லுக்கிப்போது தோட்டத்துவேலை வழக்கமாய் ஏற்பட்டுப் போய்விட்டது—ஆயினும் ஒழிந்தபோதெல்லாம் அவர் வந்துதவி செய்தார். இம்மாதிரி யாதொரு விசேஷமுமின்றியும், யாதொரு தீங்கும் நேரிடாமலும், மூன்றாவது பனிக்காலம், வந்தது தெரியாமற் கழிந்தது; ஒவ்வொருவருக்கும் அலுவல் பூர்த்தியாக இருந்தமையாலும், செய்யவேண்டிய காரியங்களும் கவனிக்க வேண்டிய விஷயங்களும் மிகுதியாக இருந்தமையாலும்,

நாள் சென்றது தெரியாமல் ஓடிவிட்டதுபோலும்.

பிப்ரவரிமாதம் வந்தது; உறைபனி தரையெங்கும் மிகுதியாயிருந்தது. அப்படியிருக்கையி லொருநாள் மலாச்சி வாள்பட்டறைக்கு ஆல்ப்ரெட்டைக்கண்டு பேசச்சென்றான். அப்போது ஆல்ப்ரெட் தனியாயிருந்துகொண்டு மிக ஊக்கமாக வேலைசெய்துகொண்டிருந்த ஆள்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். ஏனெனில் மார்ட்டின் சுமார் நூறுகஜ தூரத்திற்கப்பால் வாள்வேலைக்குத் தயாராக வெட்டினமரங்களைச் சதுரித்துக்கொண்டிருந்தான்.

"ஐயா! நீங்கள் தனியாக இருக்கும்போது வந்து சேர்ந்தேனே யென்று நான் சந்தோஷப்படுகிறேன்," என்றான் மலாச்சி; "ஏனெனில் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசவந்திருக்கிறேன். தற்காலமதை வேறொருவருக்கும் சொல்லஎனக்குப் பிரியமில்லை."

"அஃதென்ன, மலாச்சி?" என்றான் ஆல்ப்ரெட்.

"அதுவா? ஐயா! சென்றவாரத்திலிரண்டுமான்றோலைக் காட்டிலொருபக்கத்தில் வைத்துவிட்டு வந்து, அவைகளை வீட்டிற்குக் கொண்டுவரலாமென்று அங்கு நேற்றுத்தினம் சென்றேன். அப்போது அவையொன்றில் இரண்டுமுட்களாற்றைக்கப்பட்ட ஒரு கடிதத்தைக் கண்டேன்."

"கடிதமா, மலாச்சி!"

"ஆம். ஐயா! ஓர் இந்தியரின் கடிதம், அது இதோ இருக்கிறது." என்று சொல்லிக்கொண்டு பர்சுமரப் பட்டையினொரு சிறியதுண்டைக் காட்டினான். அதில் பக்கத்தில் எழுதியிருப்பதுபோலொரு படம் வரையப்பட்டிருந்தது.

"நல்லது! இதொரு கடிதமாக இருக்கலாம்; ஆனாலெனக்கது பிரும்மன் தலையெழுத்தைப் போலிருக்கிறது; அதை நீ ஏன் அவ்வளவு ரகசியமாக வைத்துக்கொள்ள விரும்புகிறாய் என்பதெனக்குத் தெரியவில்லை, எனக்குச்சொல்,'



[266-ம் பக்கம் பார்க்க.]

"நல்லதையா! எனக்கோ என்றால் உங்களுடைய கடி
தங்களிலொன்றை இதைப்போற் பாதி திறமையோடுகூட
வாசிக்கவன்மையில்லை. இதிலெழுதியிருக்கும் செய்தியும்
அத்யந்தம் முக்கியமானது. இஃது இந்தியர்களெழுதும்
வழியாகும். அதை எழுதியிருக்கிறது யாரென்றுமெனக்குத்
தெரியும்.

"நன்றி யொருவருக்குச் செய்தக்காலந்நன்றி
என்று தருங்கொலெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்"—என்பது பொய்யாகுமா?
ஓர் இந்தியரிடத்திலிவ்வளவு நன்றியறிவு இருக்கிற
தென்று நான் சந்தோஷப் படுகிறேன்."

"மலாச்சி! நீ பேசப்பேச அஃதென்னவென்று தெரிந்
துகொள்ள எனக்கு ஆவல் மிகுதியாகிறது. நீ ஊகிக்கின்ற
வரையில் யாரிடமிருந்து அக்கடிதம் வந்திருக்கிறதென்பதை
சொல்."

"ஏன், ஐயா? நீங்களிந்தக் குறியைப் பார்வையிட்டீர்
களா?" என்று மலாச்சி சொல்லிக்கொண்டு, மரப்பட்டை
யின் வலதுபக்கத்திற் கீழ்க மூலையிலிருந்த குறியைக்காட்
டினான்.

"ஆம், பார்த்தேன்; அஃதொருபாதம் அன்றா?"

"நிரம்பவும் சரி, ஐயா! இப்போது சொல்லுங்கள்,
அது யாரிடமிருந்து வருகிறது?"

"எனக்குச் சொல்லமுடியவில்லை."

"சென்ற மாரிக்காலத்திற்கு முந்தின மாரிக்காலத்தில்
நாம் கணுக்காற் சுளுக்குடன்கிடந்த வொரு இந்தியஸ்திரீ
யைக் கண்டெடுத்து வீட்டுக்குக் கொண்டுபோனதும், உங்க
ளுடைய தந்தை அவளுடைய பாதத்தைச் சிகிச்சைசெய்து
சரிப்படுத்தினதும் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?"

"நிச்சயமாக இருக்கின்றது. இஃது அவளிடமிருந்தா?"

"ஆம், ஐயா! அவள் ஆங்க்ரீஸ்நேக்கின் கூட்டத்தைச் சேர்ந்தவளென்று சொன்னதும் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?"

"எனக்கு அது வெகு நன்றாக ஞாபகமிருக்கின்றது; சரி மலர்ச்சி; இப்போது உடனே இக்கடிதத்தின் பொருளைச் சொல்லு. இனி இதைத் தெரிந்துகொள்ளாமல் நான் பொறுத்திரேன். அவள் எழுதித்தெரிவிக்கக் கூடியது யாதிருக்கும்?"

"மிஸ்டர் ஆல்ப்ரெட்! இதோ படித்துக்காட்டுகிறேன். ஐயா! பாருங்கள்! அதோபாருங்கள். அர்த்தசூரியனுக்கு மேல் வெளியிலிருக்கின்றது. இதன்பொருள் இந்திய்ருக்குள் யாதென்றால் அஸ்தமிக்கிற சூரியனே யல்லாது கிளம்பும் சூரியனன்று. அஸ்தமிக்கிற சூரியனின் பொருள் மேற்றிசையாம்."

"நிரம்பவும் சரி; அஃதெல்லாருக்கும்தெரிந்தவிஷயமே."

"பன்னிரண்டு குடிசைகளிருக்கின்றனவே; அவற்றின் பொருள் ஒரு போர்வீரனுக்குப் பன்னிரண்டுநாட் பிரயாணம் என்பது. ஒருநாட் பிரயாணமென்றால் பதினைந்துமைல் தூரம். ஐயா! பதினைந்துபன்னிரண்டு எத்துணையாகிறது?"

"நூற்றெண்பது."

"சரி; அப்பொழுது அஃது ஏறக்குறைய நூற்றெண்பதுமைல் தூரத்திற் கப்பாலென்று பொருள். பிறகு பாருங்கள்; இதோ முதலிலிருக்கும் உருவம் ஒருதலைவரைக் குறிக்கின்றது-ஏனெனில் தலையிலொரு கழுகிறகு இருக்கின்றது. அதற்கு முன்னிருக்கும் பாம்புக்கோடானது அவன்*போட

* இதன் பொருளுக்கு 62ஆம் பக்கத்தில் பாதக்குறியைப் பார்க்கவும்.



மாகும்—அதாவது அவன்தான் ஆங்கரீஸ்நேக் என்பவன்; மற்ற ஆறு உருவங்களுமவனது கூட்டத்தாரின் ஸங்கியையைக் காட்டுகின்றது; உற்றுப்பார்த்தால் தலைவன் கையிலும் ஆறுபேர்களுக்கு முதலாகவிருப்பவன் கையிலும் துப்பாக்கி இருப்பது தெரியும்; அஃது அவர்களிடமிருப்பது இரண்டே துப்பாக்கிகள் என்று நமக்குத் தெரியப்படுத்துவதற்காகத் தான்".

"நிரம்பவும் சரி; ஆனால் தலைவனுக்குப் பின்னால் கைகள் கட்டப்பட்ட ஒரு உருவம் இருக்கின்றதே—அதென்ன?"

"அதில்தான், ஐயா! இக்கடிதத்தின் ரகசியம் முழுவதுமிருப்பது. அதில்லாமலிருந்தாலிக்கடிதம் பயனற்றதாக முடியும். அச்சிறிய உருவத்தின் மேற்புறமாக இரண்டு காற்கட்டைகளிருக்கின்றனவே, பார்த்தீர்களா?"

"பார்த்தேன்".

"அச்சிறிய உருவமானது செத்துப்போய்விட்டதாக நாம் எண்ணியிருக்கின்ற உங்கள் சிறியதம்பியான பர்ஸிவல் தான்."

"கருணைக்கடலான கடவுளே! அதுவும் சாத்தியமா!" என்று கதறினான் ஆல்ப்ரெட்; அப்படியானாலவன் உயிருடன்தானிருக்கவேண்டும்."

"அதில் சந்தேகமேயில்லை, ஐயா!" என்றான் மலர்ச்சி. "இப்போது நான் அக்கடிதத்தின் பொருள் முழுவதும் சொல்லுகின்றேன். உங்களுடைய தம்பி பர்ஸிவலை ஆங்க்ரீஸ்நேக்கும் அவன் கூட்டத்தாரும் சேர்ந்து தூக்கிக்கொண்டு மேற்றிசையில் சுமார் நூற்றெண்பதுமைல் தூரத்திற்கப்பால் போய் ஓரிடத்தில் வைத்திருக்கிறார்கள். இந்தச் சமாசாரமானது நீங்கள் கருணையுடன் பிழைப்புமூட்டின ஓர் இந்தியஸ்திரீயிடமிருந்து வருகின்றது. அவளும் அந்தக்

கூட்டத்தாரைச் சேர்ந்தவள். மிஸ்டர் ஆல்ப்ரெட்! ஒரு வெள்ளைக்காரன் விஷயங்களை விடாமலும், தெளிவாயும், இதைவிடத் திறமான கடிதமொன்று எழுதுவானென்று நான் நினைக்கவில்லை.''

"மலாச்சி! நான் நினைப்பதுமப்படியேதான். ஆனாலிச்சமாசாரத்தைக் கேட்டதும் நான் பரவசமாய்விட்டேன்; ஒருபக்கத்தில் சந்தோஷத்தாலும், ஒருபக்கத்தில் விசனத்தாலும், எனது மனம் கலங்கிப் போய்விட்டது. நானிப்போதென்ன பேசுகின்றேனென்றுகூட எனக்குத் தெரியவில்லை. பர்ஸிவலாவது உயிருடனிருக்கவாவது! அப்படியானால் ஓராயிரம் மைல்தூரம் போகவேண்டியிருந்தாலும் ஈராயிரம் இந்தியர்களை வெல்லவேண்டியிருந்தாலும் நான் லக்ஷியம் செய்யேன். ஓ! மலாச்சி! சரி; இனி நாம் செய்யவேண்டியதென்ன? நான் கெஞ்சிக்கேட்கிறேன். அப்பா! சொல்லு''.

"நாமொன்றும் செய்யக்கூடாது, ஐயா!"

"மலாச்சி! ஒன்றுமா செய்யக்கூடாது?" என்று வியப்புடன் ஆல்ப்ரெட் கேட்டான்.

"கூடாது, ஐயா! அஃதெப்படியானாலும் தற்காலத்திலொன்றும் செய்யக்கூடாது. அந்தப்பையன் உயிருடனிருக்கிறானென்று நமக்குச்செய்தி கிடைத்திருக்கின்றது— அப்படி என்றாவது வைத்துக்கொள்வோம். ஆனால் நமக்கிது கிடைத்திருக்கிறதென்று இந்தியர்கட்குத் தெரியாது. தெரிந்திருந்தால் அப்போதே அந்த ஸ்திரீயைக் கொன்றிருப்பார்கள். நல்லது, ஐயா! முதலில் நாம் யோசித்துப் பார்க்கவேண்டியதென்னவென்றால் அந்தப்பையனை எதற்காக அவர்கள் கொண்டுபோயிருக்கவேண்டும் என்பது. ஏனெனிலொரு சிறிய பையனை அம்மாதிரி கொண்டுபோவதற்குக் காரணமேதாவதிருக்கவேண்டுமல்லவா?"



"இதே கேள்வியைத்தான் நானும் உன்னைக் கேட்பதாயிருந்தேன், மலாச்சி!"

"ஐயா அப்படியானால் எனக்குத் தெரிகிறவரையிலும் தோன்றுகிறவரையிலும் விடை சொல்லுகிறேன். ஆங்கிரீஸ்நேக் நமது பண்ணை ஸ்தலத்திற்கு வந்து குவியல் குவியல்களாகக் குண்டுகளையும், மிகுந்த வெடிமருந்தையும், இன்னுமனேக பண்டக் குவியல்களையும் கண்ணுற்றான். சென்ற பனி நாளிலேயே சாத்தியப்படுமென்று தோன்றினால் இடமும் அகப்பட்டபோது அவன் நம்மை எதிர்த்திருப்பான். ஆனாலவனுடைய கூட்டத்தாரொருவனை நாம் சுட்டுவிட்டபடியால் நாம் ஜாக்கிரதையாக இருக்கிறோமென்பதை யவன் கண்டுகொண்டு, அப்போது விட்டுவிட்டான். ஆயினும் நீங்கள் புலியாற்கடிபட்டுக் கிடக்கும்போது, நமது பையன் சற்றுப் பிந்திவரவே அவனை மட்டும் எப்படியோ பிடித்துக் கொண்டுபோய்விட்டான். அவனைக் கைவசம் வைத்துக் கொண்டிருந்து நம்மிடம் கிடைத்தவரையில் கைப்பற்றிக் கொள்ளலாமென்பதுதான் அவனெண்ணம். இதை நான் நிச்சயமாகச் சொல்வேன்."

"மலாச்சி! நீ சொல்வது சரியென்றே எனக்கும் தோன்றுகிறது," என்று ஆல்ப்ரெட் சற்று யோசித்துப் பார்த்துவிட்டுச் சொன்னான். "அவன் கேட்பதைத் தடைசெய்யாமல் நாம் கொடுக்கத்தான் வேண்டும்."

"அது கூடாது, ஐயா! நாம் அப்படிச்செய்தால் அது அவனை மறுபடியும் திருடும்படி தூண்டும்".

"இல்லாவிட்டால் நாம் செய்வதென்ன?"

"முடியுமானாலவனைச் சிக்ஷைசெய்கிறது; எல்லாவற்றிற்கும் நாமிப்பொழுது செய்வதொன்றுமில்லை. சற்றுப் பொறுத்திருக்க வேண்டியதுதான். பையன் அவர்கள் வசம் இருக்கிறானென்றும் சில உடன்படிக்கைகட்கு நாம் சம்மதித்

தாலவனை நம்மிடம் திருப்பிக்கொடுத்து விடுவார்களென்றும் அவர்களிடமிருந்து அவன் வழியாகச் செய்திவருமென்றும் நிச்சயமாக நம்பி இருங்கள். இந்த இளவேனிற் காலத்திலேயே வந்தாலும் வரலாம். நாமினிச் செய்யவேண்டியதைப்பற்றி அப்போது யோசித்துக் கொள்வோம்."

"நல்லது! மலாச்சி! ஆனாலிதை யாருக்காவது நாம் தெரிவிக்கலாமா? அல்லது இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டுமா?"

"நல்லது, ஐயா! அதைப்பற்றி நான் ஆலோசித்துப் பார்த்தேன். நம் மார்ட்டினுக்கும் ஸ்ட்ராபெர்ரிக்கும்மட்டுமே இந்த ரகசியத்தைத் தெரிவிப்போம்; அவர்களுக்குத் தெரிந்திருப்பது நலம், ஏனெனில் அவர்களும் இந்தியர்களென்றே பாவிக்கத் தக்கவர்களல்லவா? யாராவதவர்களிடம் வந்து சேரலாம்; அவர்கள் ரகசியத்தை வெளியிடவும் மாட்டார்கள். மார்ட்டினிந்த விஷயத்தில் மிகவும் ஆழ்ந்த ஆள். ஸ்ட்ராபெர்ரியோ வென்றால் அவனை இரண்டாக வெட்டினாலும் சமாசாரம் வெளியில் வராது."

"நீ சொல்வது சரி என்றே நான் நினைக்கிறேன்; ஆயினும் என் தந்தைக்கும் தாய்க்கும் தெரிந்தாலெவ்வளவு சந்தோஷப்படுவார்கள்!"

"உள்ளதுதான் ஐயா! ஏன்? அவர்கள் மட்டுந்தானா? குடும்பத்தில் மற்றவர்கட்கும் அப்படியே இராதோ? ஆனால் பிறகு மாதக்கணக்காக அவர்கள் சிந்தையில் வியாகூலப் பட்டுக்கொண்டிருப்பார்களே அதையும் பார்க்கவேண்டாமா? வரும் வருமென்றெண்ணியிருந்து கடைசியில் வராமற்போனால் உள்ளம் வெந்துபோகுமே! இதைப் பைபிளில் இருந்து என்னுடைய தந்தையார் அடிக்கடி படித்துக் காட்டுவார்; எனது அனுபவத்திலும் அஃது உண்மையே. உங்கள் தந்தையாரும், முக்கியமாக உங்கள் தாயாரும் 'இன்னும் வர



வில்லையே, இன்னும் வரவில்லையே' யென்று உள்ளம்பதறிக் கொண்டு உண்ணவும் மாட்டார்கள், உறங்கவும் மாட்டார்களே! கூடவே கூடாது, ஐயா! அவர்கட்கிதைத் தெரிவிப்பது பெரிதும் பாவமாகும். அது கூடவே கூடாது; இளவேனிற் காலம் வரையில், எஃதெப்படியானாலும் நாம் செய்யக்கூடிய தொன்றுமில்லை; தூதன் வரும் வரையில் நாம் காத்திருக்கவேண்டும்".

"ஆங்கிரீஸ்நேக்கை நான் கண்டுவிட்டால் ஒரு கை பார்த்தே விடுவேன். நானோ, அவனோ கொலையுண்டு விழுவது நிச்சயம்" என்று கர்ஜித்தான் ஆல்ப்ரெட்.

"அதெல்லாம் இருக்கலாம் ஐயா," என்றான் மலாச்சி; "ஆனால் இவ்விதம் ரத்தக்களரி நேரிடாமல், நயவஞ்சகமாக நம்முடைய குழந்தையை மீட்டுக்கொள்வது நலமில்லையா? ஒரு மனிதன் நல்லவனாக இருந்தாலும் கெட்டவனாக இருந்தாலும் அவனுடைய ஜீவன் ஆண்டவனால் கொடுக்கப்பெற்றதல்லவா? போய்விட்டால் மீண்டும்வருமா? ஆதலால் அதிக அவசியமின்றி ஒருமனிதன் மற்றொரு மனிதனைக் கொலை செய்யலாமா? கூடியவரையில் நான் முயன்று உயிர்ச்சேதமொன்றுமில்லாமல் நமது பையனைக் கைப்பற்றப் பார்க்கிறேன்."

"சரி, மலாச்சி, ஆனால் வேறு வழி ஒன்றும் கிடைக்காவிட்டால் நூற்றுக்கணக்காக இந்தியர்களைக் கொலைசெய்ய வேண்டி வந்தாலும் என் குழந்தையை நான் கைப்பற்றியே தீருவேன்," என்றான் ஆல்ப்ரெட்.

இதோடு பேச்சு முடிந்தது. ஆல்ப்ரெடாவது இந்த ரகசியத்தையறிந்த மற்றவர்களாவது இதைத் தெரிந்திருப்பதாக எள்ளளவேனும் காட்டிக்கொள்ளவேயில்லை. வேறொரு விசேஷமுமின்றிப் பனிநாளும் கழிந்தது. பனி போவதற்கு

முந்தியே விதைப்பதற்குத் தயாராக விதை சரிபண்ணி வைக்கப்பட்டது. பலகைகளும் அறுத்தாய்விட்டன. விதைக்குக் கண்டுமிஞ்சின தானியம் முழுவதும் மாவாக்கப்பட்டு, பீப்பாயிற்போட்டுக் கெட்டிபண்ணப்பட்டது. இனிக் கோட்டையிலிருந்து அவைகளை யனுப்பும்படி உத்தரவு வரவேண்டியதுதான் பாக்கி.

## அத்தியாயம். 34.

இப்போது ஏப்ரில்மாதம் வந்துவிட்டது. சிலநாளாக மலாச்சியும் ஜானும் வெகு மும்மரமாக வேலைசெய்துகொண்டிருந்தனர்; ஸ்ட்ராபெர்ரியும் உதவிசெய்துகொண்டிருந்தாள்; எதற்காகவென்றால் மேபில்மரங்களிலிருந்து பாலிறக்குங்காலம் வந்துவிட்டது—அதிலிருந்து • சர்க்கரை செய்யமுடியும். பெரும்பாலும் உபயோகத்திற்கு வேண்டிய இந்த வஸ்துவானது அங்கு மிகவுமரிதாகவிருந்தது. மாண்ட்ரீலுக்குப் போனாற்றான் கிடைக்கும். ஒவ்வொருநாளும் அந்தியில் மலாச்சியும் ஜானும் ஜாதிக்காய் மரத்திலிருந்து சிறிய தொட்டிகளைக் குடைந்துகொண்டிருப்பார்கள். இப்படியவர்களநேகம் தொட்டிகளைச் சேர்த்துவிட்டார்கள். இப்படியிருக்கையில் ஒருநாளந்தியில் மிஸிஸ்காம்பெல் வந்துசேர்ந்து சர்க்கரை செய்யும் விதமெப்படி என்று கேட்டாள்.

"மிகவும் சுலபம், அம்மா! மரங்களிலிருந்து பால் இறக்குகின்றோம்," என்றான் மலாச்சி.

"சரி, இதைத்தான் ஏற்கனவே சொல்லியிருக்கின்றாயே; ஆனாலதைச் செய்யும் விதமெப்படி? விஷயத்தைப் பூராவாகச்சொல்லு."

"அதற்கென்ன. அம்மா! கேளுங்கள். முதலில் மேபில் மரங்களில் கீழே ஓரடிச்சுற்றளவிருக்கும் மரங்களைப் பொறுக்கிக்கொள்கிறோம்—அவைகளில்தான் சர்க்கரை மிகுதியாகக்கிடைக்கும், பிறகு தரைக்குமேலோரடி உயரத்தில் ஒரு



துளைபோட்டு அதிலொரு நாணற்குழாயை நுழைத்துவிடுகிறோம். அதிலிருந்து பெருகும் ரஸத்தை நாங்கள் குடைந்துகொண்டிருந்த தொட்டிகளில் ஒன்றிலேந்துகிறோம்.

"சரி, நீ பிறகு என்னசெய்கின்றாய்?"

"ஒவ்வொருநாளும் காலையிற்போய் ரஸத்தையெல்லாம் சேர்த்துக்கொண்டுவந்து கொப்பறைகளில் நிரப்புகிறோம்; பிறகு அடுப்பில்வைத்துக் காய்ச்சுகின்றோம்."

"அப்பொழுது வேண்டிய கொப்பறைக் கென்னசெய்வாய்?"

"தாயே, பண்டகசாலையிலிரண்டு கொப்பறைகளிருக்கின்றன. அவைகளை இன்னும் வெளியிலெடுக்கவில்லை. அவை நமக்குயதேஷ்டம்; ஒவ்வொன்றும் ஒவ்வொருபீப்பாய் பிடிக்கும். அவைகளைக்காட்டிற்குள் கொண்டுபோய் ரஸத்தையெல்லாமவற்றில் கொட்டி நிரம்பினது மடுப்பில் வைத்து காய்ச்சுவோம். நாங்கள் காய்ச்சுகிறதினத்தில் நீங்களும் வந்து பாருங்களேன்——அன்றையதினம் வனபோஜனம் செய்து தமாஷ்செய்வோம்."

"பேஷாச் செய்வோம்; அப்படியே செய்வோம்," என்றாள் மிஸிஸ் காம்பெல். "ஒரு மரத்திலிருந்தெவ்வளவு ரஸம் இறங்கும்?"

"சுமார் முக்காலாட்டம்," என்றான் மலாச்சி; சில வேளை குறையலாம், சிலவேளை ஜாஸ்தியாகலாம்—அவையெல்லாம் மரத்தைப் பொருத்தன. மரங்களைத் துளைபோட்டுத் தொட்டிகளை வைத்தவுடன் இரண்டு வாரங்களுக்கு நமக்கு வேறு வேலையில்லை. ஸ்ட்ராபெர்ரி அதுவரையில் பார்த்துக்கொண்டிருந்து, சமயம் வந்தவுடன் எங்களுக்குத் தெரிவிப்பாள்."

"மரங்களை ஒவ்வொரு வருஷமும் கட்டுவதுண்டோ?"

"உண்டு, அம்மா! மரம் நல்லதாகயிருந்தால் பதினைந்து அல்லது இருபது வருஷங்கள்கூடத் தாங்கும். ஆனால்

முடிவில் அம்மரங்களெல்லாம் பட்டுத்தான் போய்விடும்."

"நான் நினைத்ததும் அப்படித்தான்—ஏனெனில் மரத்திலிருந்து ஸாரத்தையெல்லாம் எடுத்துவிடுகிறாயே."

"அதுதான், அம்மா! ஆனாலிந்தக் காடுகளில் சர்க்கரை மேபில் மரங்களுக்குக் குறைவே கிடையாது."

"மலாச்சி! நீ எங்களுக்குக் கொஞ்சம் தேன் கொண்டு வந்து கொடுப்பதாகச் சொன்னாயே," என்றாள் எம்மா; "அதை இன்னும் நாங்கள் காணவில்லையே. நீ கொஞ்சம் சம்பாதித்தெங்களுக்குக் கொடுக்க முடியுமா?"

"அம்மணி! சென்ற இலையுதிர்காலத்தில் சேகரம்செய்ய எங்களுக்கு அவகாசம் இல்லை. ஆனால் வருகிற இலையுதிர் காலத்தில் முடியுமாவென்று பார்ப்போம். ஜானும் நானும் காட்டிற்குப் போனால், வெகுதூரம் போகாமலேயே ஒரு தேன் மரத்தைக் கண்டுவிடலாம். நீ சொல்லாமற்போனால் கூட நான் தேடிப் பார்ப்பதாகத்தான் உத்தேசித்திருந்தேன்."

"ஒன்று இருக்கிறவிடம் எனக்குத்தெரியும்," என்றான் மார்ட்டின்; "இரண்டு வாரங்களுக்குமுந்தியே குறித்துவைத்தேன். ஆனால் பிறகு அதைப்பற்றியெல்லாம் எனக்கு மறந்துபோய் விட்டன. யந்திர வேலையைத் தொட்டுக் கொண்டதுமுதல் வேறொன்றும் செய்யமுடியவில்லை. விஷயமென்னவென்றால் இப்போது நாமெல்லோருக்கும் வேலை பூர்த்தியாகவிருக்கிறது."

"அஃதிருக்கிறதுண்மையே," என்று ஹென்றி நகைத்துக்கொண்டு சொன்னான். "தானியம் அடித்தெப்போது முடியப்போகிறதென்று எனக்குத் தோன்றுகிறது. வருகிற பனிக்காலத்திலே துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வெளியிற் போகமுடியுமோவென்று எனக்குச் சந்தேகமாகத்தானிருக்கிறது."



"கூடாது, ஐயா! காடு எனக்கும் ஜானுக்கும்தான்," என்றான் மலாச்சி; "உங்களுக்கேன் கவலை? மானிறைச்சிக்கு உலோபம் இருந்தால் பார்த்துக்கொள்ளுங்கள். மிஸ்டர் ஆல்ப்ரெட்! உங்களுக்குச் சறுக்குவண்டி நாளைக்கு வேண்டுமோ?"

இஃதென்னவென்றால் பனிக்காலத்திலவர்கள் ஏற்கனவே செய்திருந்த ஒரு சிறிய சறுக்குவண்டி. அதிப்போது மிகவுபயோகமாய் இருந்தது. அதிற் சாமான்களை ஏற்றிக் கொண்டு ஒரு குதிரையைப் பூட்டி, ஒரிடமிருந்து மற்றொரிடம் கொண்டுபோவதற்கு வெகு சுலபமாய் இருந்தது. ஆல்ப்ரெட் அதைக்கொண்டுதான் மாவுமூட்டைகளை யந்திரத்தில் அரைத்தானவுடனே பண்டக சாலைக்குக் கொண்டு வந்து சேர்த்துக்கொண்டிருந்தான்.

"நான் ஒரு நாளைக்கு அஃதில்லாமற் பார்த்துக்கொள்ள முடியும். ஏன்? அதைக்கொண்டு நீயென்ன செய்யப் போகின்றாய்?"

எம்மா, சிரித்துக்கொண்டு, "தேன் முழுவதும்கொண்டு வருவதற்காகவிருக்கும்," என்றாள்.

"இல்லை, அம்மணி! கொப்பறைகளை ஏற்றிக்கொண்டு காட்டுக்குக் கொண்டுபோவதற்காக," என்றான் மலாச்சி. "சர்க்கரைச்சாறு வந்தவுடன் கொட்டத் தயாராக இருக்க வேண்டுமல்லவா? மரங்களைத் துளைபோட்டானதும் தேனுக்குப்போவோம்."

"உங்களுடைய தோல்களைப் படகிலேற்றி மாண்ட்ரீலுக்கனுப்பியாய்விட்டதோ?" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"ஆய்விட்டது, அப்பா!" என்றான் ஆல்ப்ரெட்; "மிஸ்டர் எமர்ஸன் அவைகளை ஒப்புக்கொண்டு நமது ஏஜெண்டினிடம் கொண்டுபோய் ஒப்புவித்துவிடுவதாகச் சொன்னான். ஆனால் சென்ற வருஷத்தைப் போலவ்வளவு

இந்தவ்ருஷம் நம்மிடமில்லை. எங்களுக்குள் ஜானுடைய மூட்டைதான் பெரிது.”

“உண்மைதான்; இந்த வருஷம் அவனென்னையும் மிஞ்சி விட்டான்,” என்றான் மலாச்சி. “எதைக் கண்டாலும் முதலிலவனே யடிக்கிறான். அந்தப்பையனை ஒரு வேட்டைக்காரனாய் ஆக்கிவிடுவேனென்று அப்போதே நானறிந்துகொண்டேன். இனி அவனே தனியாகப்போய் நான் செய்யக்கூடியவையெல்லாம் செய்யலாம்.”

மறுநாட் காலையில் கொப்பறைகளையும், மரத்தொட்டிகளெல்லாவற்றையும் சறுக்கு வண்டியிலேற்றிக்கொண்டு காட்டிற்குள் போய்ச் சேர்ந்தான். அன்று பகல் முழுவதும் மரங்களைத் துளைபோடுவதும் நாணற் குழாய்களைத் துவாரங்களில் விட்டு இறுக்குவதுமாக விருந்தான். அவனுடன் ஸ்ட்ராபெர்ரியும் ஜானும் வந்திருந்தபடியால் சூரியன் சாய்வதற்குள் வேலை முடிந்துவிட்டது.

அடுத்த நாட்காலையில் அவர்கள் வெளியில் புறப்பட்டபோது மலாச்சியும் ஜானும்மட்டும் தங்களுடைய கோடரிகளை எடுத்துககொண்டு போனார்கள். ஜான் சிறியவனாகவே இருந்தாலும் கோடரி வேலையில் மிகவும் கெட்டிக்காரனாய் விட்டான். அவர்கள் முதலில் மார்ட்டின் கண்டுபிடித்திருந்த மரத்திற்குப் போனார்கள். மார்ட்டினும் அதிருக்குமிடத்தை விவரமாகச் சொல்லியிருந்தான். அவர்களதை வெட்டித் தள்ளினார்கள். ஆனால் இரவு வரையில் தேனை எடுக்க முயலவேயில்லை. இரவு வந்தவுடன் ஈக்களை ஓட்டுவதற்காக நெருப்பை மூட்டி அதன்மேல் தழைகளைப்போட்டு பெரியபுகை யுண்டாக்கினார்கள். பிறகு அவர்கள் மரத்தைப் பிளந்து இரண்டு வாளிகள்நிறைய தேனை எடுத்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தனர். அப்போதுதான் வீட்டிலெல்லோரும் படுக்கப்போகும் சமயமாயிருந்தது. அடுத்த நாட்



காலையில் அவர்கள் வெளியிற் புறப்பட்டுப்போகும்போது மிச்சம் கிடந்த தேனடையை ஒரு கரடி வெகு ஊக்கமாகத் தின்று கொண்டிருந்ததைக் கண்டனர். ஆனாலவர்களதைச் சுடப்போவதற்குள் அஃது ஓட்டம் பிடித்தது.

ஒவ்வொரு நாளும் காலையில் ஸ்ட்ராபெர்ரி மரங்களிலிருந்து வடிந்திருந்த பாலையெல்லாம் ஒன்று சேர்த்துக் கொப்பறைகளில் கொண்டுபோய்க் கொட்டிக்கொண்டிருந்தாள்; நிரம்பினவுடன் காய்ச்சுவதற்காக அக்கொப்பறைகளடுப்பின்மேல் வைக்கப்பெற்றிருந்தன.

தேன் இன்னும் தேவையாயிருந்தால் கைவசமிருக்கவேண்டுமே என்றெண்ணி அதைத் தேடிக்கொண்டு வரப் போனார்கள். அப்போது இரண்டு மூன்று தேனடைகளைக் கண்டு இன்னுங்கொஞ்சநாள் பொறுத்துவந்து சாவகாசமாக எடுத்துப்போகலாமென்றெண்ணி, அந்த இடத்திலடையாளம் போட்டுவிட்டுச் சென்றனர்.

இரண்டு வாரங்களுக்குள் மரங்களிலிருந்து கொட்டின சர்க்கரைச் சாறானது இரண்டு கொப்பறைகளிலும் விளிம்புவரையில் நிரம்பி, அநேக வாளிகளிலும் கொட்டி வைக்கப்பட்டது. ஆதலால் கொப்பறைகளின்கீழ் அடுப்புகளை மூட்டிவிட்டு மறுநாட் காலையில் அவர்கள் காட்டிற்கு வந்து வேலையைப் பார்க்கலாமென்று மிஸிஸ் காம்பெல்லுக்கும் பெண்களுக்கும் அறிக்கை செய்தார்கள். நன்றாகச் சுத்தம் செய்து வைக்கப்பட்டிருந்த குளிக்கும் தொட்டிகளில் ஆறுவதற்காகக் காய்ச்சப்பட்ட சாறு அன்று பின்பகலிலேயே சாய்த்தாய்விடும்.

இன்றைத் தினம் கர்ட்டில் வனபோஜனமானதால் கட்டுச்சோற்றைத் தயார்செய்து ஒருபெரிய கூடையில் வைத்து ஹென்றியின் வசத்தில் கொடுத்துவிட்டார்கள். மிஸ்டர் காம்பெல்லு மர்தக்கோஷ்டியிலொருவராகச் சேர்ந்து, எல்லோரு

மிரண்டு மைல் தூரத்திற்கப்பாலிருந்து அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். உடனே மரங்களையும் அவைகளிலிருந்து ரஸம் வடிந்துகொண்டிருந்த தொட்டிகளையும், அப்போது சிறு கொப்புளங்களாய்க் கொதித்துக்கொண்டிருந்த கொப்பறைகளையும் கவனித்துப் பார்த்துவிட்டு மலாச்சியைக் கேள்விகளுங்கேட்டனர்; ஏனெனில் அவசியமிருந்தால் தனிமையிலே தங்களுக்குச் சர்க்கரையைச் செய்யும் மாதிரியைக் கற்றுக் கொள்ளவேண்டுமென்பது அவர்களின் கருத்து. பிறகு, சாறு ஆறினவுடன் இறுகி, கட்டிச்சர்க்கரை யாவதை அவர்களே நேரில் பார்த்துக்கொள்ளும்படி, கொதிக்கும் சாறு முதல் தொட்டியில் ஆறுவதற்காக நிரப்பப்பெற்றது. இது முடிந்ததும் போஜனம் செய்யும் பொருட்டு எல்லாரும் சேர்ந்து ஒரு பெரிய மரத்தடியிலுட்கார்ந்தனர். சர்க்கரை காய்ச்சுமிடத்தில் மரமொன்று மில்லாததால், அவர்கள் உட்கார்ந்த மரத்தடியானது சற்றுத் தூரத்திலிருந்தது. மலாச்சியும் மார்ட்டினும் காட்டில் தத்தம் அனுபவங்களை விசித்திரமான கதைகளாகச் சொல்லிக்கொண்டிருந்து அந்திப்பொழுது வெகு குஷியாகக் கழிக்கப்பெற்றது. எல்லோரும் போஜனம் செய்து கொண்டிருக்கும்போது, கூட வந்திருந்த ஆஸ்காரும் மற்ற நாய்களும் சற்றுத் தூரத்திற்குப்போய் விளையாடிக்கொண்டிருக்கும்போது, ஒரு பெரிய பொந்தின் துவாரத்தில் வெகு ஊக்கமாகத் தரையைச்சுரண்டிக்கொண்டு அடிக்கடி குரைத்தன.

"நாய்களென்ன வேலை செய்கின்றன?" என்றான் ஆல்ப்ரெட்.

"ஸ்ட்ராபெர்ரி என்ன வேண்டுமென்று என்னிடம் சொன்னாளோ அந்த விஷயமாகத்தான்," என்றான் மலாச்சி; "அதை நாளைக்குப் பொந்திலிருந்து வெளிப்படுத்துவோம்."

"அதென்ன, ஸ்ட்ராபெர்ரி?" என்றாள் மேரி.



ஸ்ட்ராபெர்ரி தனது காலில் தரித்திருந்த தோலுறையைக்காட்டி, அதனைச் சுற்றி அலங்காரமாகத் தைத்துக் கட்டியிருந்த பன்றி முட்களைத் தொட்டுக் காட்டிக்கொண்டு,

"இதன் பெயர் இங்கிலீஷில் எனக்குத்தெரியாது," என்று மெதுவான குரலுடன் சொன்னாள்.

"நீ சொல்லுவது முள்ளம் பன்றியா?" என்றாள் மேரி; "முட்களிருக்கும் பிராணிதானே?"

"ஆம்," என்றாள் ஸ்ட்ராபெர்ரி.

"மலாச்சி! அங்கேஒரு முள்ளம்பன்றி இருக்கிறதோ"? என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"இருக்கிறது, அம்மா! அது நிச்சயம்தான். நாய்களுக்கு அது அவ்வளவுதூரம் தெரியாதா என்ன? இல்லாவிட்டால் அவைகளவ்வளவு ஆடம்பரம் செய்யமாட்டா. நீங்கள் இஷ்டப்பட்டால் மண்வெட்டி கொண்டுவந்து இப்போதே வெட்டி அதை வெளிப்படுத்துவோம்."

"எங்கே! கொஞ்சம் தயவுசெய் பார்ப்போம்,"என்றாள் எம்மா; "அதைப் பிடிப்பதை நான் பார்க்க விரும்புகிறேன். இந்த வேடிக்கையில் நமது அந்திப்பொழுது கழியட்டும்."

மார்ட்டின் எழுந்து மண்வெட்டிகளைக் கொண்டுவரச் சென்றான்; அவன் போயிருக்கும்போது உண்டவிடம் சுத்தம் செய்யப்பெற்றுச் சாமான்கள் கூடையில் வைக்கப்பட்டன. இது முடிந்தவுடன் எல்லோருமாகச் சேர்ந்து நாய்கள் இன்னும் தரையைத் தோண்டிக்கொண்டும் குரைத்துக்கொண்டும் நின்றவிடத்திற்குச் சென்றனர்.

பொந்தைவெட்டி அந்தப் பிராணியை வெளிப்படுத்துவதற்கு ஒரு மணிக்குமேல் சென்றுவிட்டது. கடைசியாக அது குபீரென்று வெளியில் வந்தவுடன் ஓரிரண்டு நாய்கள் அதன் முட்களால் குத்தப்பட்டு ஏமாந்து நின்றதைப் பார்த்து அவர்கள் சிரிக்காமலிருக்கமுடியவில்லை. அப்பிரா

[illegible]

ணிக்கு ரக்ஷை அம்முட்களே. நாய்கள் கொஞ்சம் பின்வாங்கி மூக்கை முன்னங்கால் நகத்தால் தடவிக்கொண்டு, பிறகு மறுபடியும் எதிர்க்கவோடின. ஆனால் ஆஸ்கார் மட்டும் அப்படித் தெரியாமல் ஏமாந்துபோகவில்லை. அதன் வயிற்றுப்பக்கத்தை அடைவதற்காக மல்லாத்தப் பார்த்தது. அப்போது அதை எளிதிற் கொன்றுவிடலாம். ஆனால் அதற்குள் மார்ட்டின் அதன் மூக்கைக் குறிவைத்து ஓரடி கொடுக்கவே அந்த எளிய பிராணியானது மல்லாந்து விழுந்தது. உடனே நாய்கள் அதன்மேற் பாய்ந்தன. ஸ்ட்ராபெர்ரிக்காக அதன் முட்களில் நல்லவற்றைவெகு ஊக்கமாகப் பொறுக்கி எடுத்தார்கள். பிறகு சர்க்கரை எப்படியாயிருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக ஆற வைக்கப்பட்டிருந்த தொட்டிகளைப் போய்ப் பார்த்தனர்.

அவர்கள் அந்த இடத்தண்டை நெருங்கிக்கொண்டிருக்கையில் எம்மா "தொட்டியண்டை ஒரு கரடி இருக்கின்றது, பாருங்கள்!" என்று கத்தினாள்.

மலர்ச்சியும் ஜானும் உடனே துப்பாக்கியைத் தயார் செய்துகொண்டார்கள். அந்த மிருகம் நூறு கஜத்திற்கு உள்ளாகவே இருந்தமையால் மிஸிஸ் காம்பெல்லுக்கும் மேரிக்கும் நடுக்கங்கண்டு விட்டது.

"பயப்படாதேயுங்கள், அம்மா!" என்றான் மலாச்சி; "சர்க்கரைக்காகத்தான் அந்தபிராணி இங்கே வந்திருக்கிறது. அதற்குத் தேனைக்கண்டாலெவ்வளவு ஆசையிருக்குமோ அவ்வளவு ஆசை சர்க்கரையைக் கண்டாலுமிருக்கும்."

"நீ அன்று தேனடையை நக்கிக்கொண்டிருந்ததைக் கண்டதாகச் சொன்ன பிராணி இதேதான் சந்தேகமில்லை," என்றான் மார்ட்டின்.

"நாம் இருக்கிறவிடத்திலிருந்தே பார்ப்போம். நமக்கு கொஞ்சம் சர்க்கரை நஷ்டமானாலும், அது நீங்கள் சிரிக்கும்



படியான செய்கைகளையெல்லாம் செய்யும்."

"இந்தப் பயங்கரமான மிருகத்தினிடத்தில் சிரிக்கக்கூடிய சங்கதியா இருக்கின்றது?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"அம்மா! நீங்கள் எதற்காகப் பயப்படுகின்றீர்கள்?" என்றான் மார்ட்டின். "மலாச்சி, ஜான், இரண்டு பேரிடமும் துப்பாக்கிகளிருக்கின்றன."

"சரி; அவர்கள் விட்டுவிடமாட்டார்கள்," என்றாள் மிஸிஸ் காம்பெல்; "என்னவிருந்தாலும் வீட்டைவிட்டு ஏண்டா அப்பா வந்தோமென்று தோன்றுகிறது. அதென்ன பிரும்மாண்ட மிருகமாயிருக்கிறதே!"

"ஆம், அம்மா; அஃதொரு பெரிய பிராணி என்பது நிச்சயமே; ஆனாலிந்த நாளில் அவை அவ்வளவு திமிர் ஏறி இருக்கமாட்டா. சர்க்கரை ரஸத்தை மேலோடு நாக்கால் நக்கிக்கொண்டு எட்படிப்பல்லை இளிக்கின்றது, பாருங்கள்! இப்போது கொஞ்சம் ருசி கண்டுகொண்டதல்லவா? அது இனி விடாது. அப்போதே நான் சொல்லவில்லையா?"

அதுபோலவே இன்னும் தாராளமாகவே வேலைசெய்ய அப்பிராணியாரம்பித்தது. தனது முன்னங்காலைத் தொட்டிக்குள் விட்டது. ஆனால் சர்க்கரைப் பாகின் மேற்புறம்மட்டும் ஆறியிருந்ததேயன்றி, கீழ்ப்புறமெல்லாம் கொதித்துக்கொண்டிருந்தமையால், அதன் முன்னங்காலை உள்ளே விட்டதோ இல்லையோ, உடனே பெரிதாக ஊளையிட்டுக்கொண்டு அதை வெளியில் இழுத்துவிட்டு, பின்னங்கால்மேல் உட்கார்ந்துகொண்டு சுட்ட பாதத்தைக் காற்றில் வீசிக்கொண்டிருந்தது.

"அப்போதே சொன்னேனே," என்று கலுக்கென்று சிரித்துக்கொண்டு மலாச்சி சொன்னான். "வேண்டும்! வேண்டும்; நன்றாகச் சுட்டதா!"

அந்த காட்சியைக் கண்டவுடன் ஜான், ஆல்ப்ரெட்,

மார்ட்டின் இம்மூவரும் கொல்லென்று சிரித்தார்கள். மிஸிஸ் காம்பெல்லுக்கும், இரண்டு பெண்களுக்குங்கூட அது கொஞ்சம் விநோதமாகவிருந்தது போலும்.

"அது விடாது; மறுபடியும் ஒரு கை பார்க்கும்," என்றான் மார்ட்டின்.

"ஆம்; அதிலென்ன சந்தேகம்?" என்றான் மலாச்சி. "ஜான்! துப்பாக்கியைத் தயாராக வைத்துக்கொள்; அந்த மிருகம் நம்மைக் கண்டுவிட்டது."

"அதென்ன? இந்தப்பக்கம் வருமோ?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"வரும், அம்மா; அதற்குக்கோபம் வந்தால் அப்படியே செய்யும்; ஆனால் நீங்கள் பயப்படவே வேண்டாம்."

"ஆனால் எனக்குப்பயமாக இருக்கின்றதே, மலாச்சி!" என்றாள் மேரி.

"அப்படியானால் மிஸ்டர் காம்பெல்லை அழைத்துக் கொண்டு ஐம்பது கஜதூரம் பின்னால் செல்லலாம்; அங்கிருந்தெல்லாவற்றையும் ஸாவதானமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கலாம். மறுபடியும் அது அவ்விடம் போகிறது பார். எனக்கு அப்போதே தெரியும்."

நாய்கள் கரடியைக் கண்டவுடன் மார்ட்டின் அவைகளை எல்லாம் ஒரு மான்றோலைக்கொண்டு சேர்த்து இறுக்கிக் கட்டிவிட்டான். மிஸ்டர் காம்பெல், மிஸிஸ் காம்பெல், இரண்டு பெண்கள் இவர்கள் பின்வாங்கிச் செல்லும்போது மார்ட்டினும் கூடச்சென்று, "அம்மா! பயப்படாதேயுங்கள்; துப்பாக்கிகளுக்கு அது தப்பாது. அப்படித் தப்பினாலும் இதோ இருக்கின்றது நமது நாய்கள்; அவைகளை அதன் மேல் பாய விட்டுவிடுகிறேன். ஆஸ்கார், மற்ற நாய்களின் உதவியைக்கொண்டு அதை மல்லாத்தி விடுவது நிச்சயம். படு! ஆஸ்கார்! வாய்மூடு! படுங்கள், நாய்களே! அம்மா!



ஸ்ட்ராபெர்ரியைப் பாருங்கள்! அவள் கொஞ்சமாவது பயப்படுகிறாளா? அவள் வெள்ளிச் சலங்கையின் தொனிபோன்ற குரலுடன் நகைப்பதைப் பாருங்கள்."

இதனிடையில் கரடி மறுபடியும் தொட்டியில் காலை விட்டுச்சுட்டுக்கொண்டு, முன்போலவே, ஆனால் ஜாஸ்தியான கோபத்துடன் கர்ஜித்தது. தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அந்த ஜனங்கள் தன்னை இப்படி உபத்திரவம் செய்துகொண்டு அவமானமும் செய்தார்கள் என்றெண்ணினாற்போல, அவர்களிருக்குமிடத்திற்கு ஓட்டமாய் ஓடி வந்தது.

"ஜான்! உஷார்!" என்றான் மலாச்சி; "உன்னுடைய குண்டு இரண்டு கண்களுக்கு மத்தியில் பாயவேண்டும்."

மலாச்சி கையிலும் துப்பாக்கி தயாராக இருந்தது. மலாச்சிக்கெதிரில் ஜான் முட்டியிட்டுக்கொண்டு உட்கார்ந்தான். இருபது கஜத்துக்குச் சமீபத்தில் வருகிறவரையில் ஜான் அசையவேயில்லை! அடித்துக்கொள்கிறாள் மிஸிஸ் காம்பெல்! ஜான் உடனே சுட்டான். அந்தப்பிராணி உடனே செத்துக் கீழேவிழுந்தது.

"பேஷ்! நல்ல அடி!" என்றான் மலாச்சி; கரடியண்டை சென்று பார்த்தான். "மார்ட்டின், நாய்களை அவிழ்த்து விடு. சவத்தைப் பிடுங்கி உதறட்டும். அப்படிச் செய்வதில் அவைகளுக்கு மிகவும் திருப்தி.

மார்ட்டின் அப்படியே செய்தான். சில நிமிஷ காலம் அவை அதைப் பிடுங்கி இழுத்து உதறின பிறகு, அவைகளை ஓட்டி விட்டான். இதனிடையில் மிஸ்டர் காம்பெல்லும் ஸ்திரீகளும் அந்தப் பிராணிகிடந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

"நல்லது, அம்மணி! ஜான் சுடுவதில் கைதேர்ந்தவனல்லவா? ஆயுசு முழுவதும் வேட்டையாடின ஜாம்பவான்

கள் கூட இவ்வாறு வேலைசெய்ய மாட்டார்கள்."

"என் கண்மணி! ஜான்! எனது வயிற்றைக் கலக்கி விட்டாயே, அப்பா!" என்றாள் மிஸிஸ் காம்பெல்; அந்த மிருகம் அவ்வளவு கிட்ட நெருங்கும் வரையில் ஏன் பார்த்துக்கொண்டிருந்தாய்?"

"ஏனெனில் அப்படி இல்லாவிட்டால் அது சாகாது; வீணே காயம்மட்டும் பட்டால் போதாது," என்றான் ஜான்.

"அது சரியே! ஒரு கரடியைக் குறையாக அடித்துவிடுவதைவிட அதைச் சேஷ்டை செய்யாமலிருப்பதே நலம்," என்றான் மலாச்சி.

"நல்லது, மலாச்சி! ஜானை ஒரு கைதேர்ந்த வேட்டைக் காரனாகவே ஆக்கிவிட்டாய்," என்றார் மிஸ்டர் காம்பெல். "இவ்வளவு சிறுவயதில் ஒருவனுக்கு இவ்வளவு நிதானமும் தைரியமும் இருக்குமென்று நானொருபொழுதும் நினைத்தவன் அல்லன்."

ஜானை எல்லோரும் மிகவும் மெச்சிக்கொண்டார்கள். அதுவும் அவனுக்குச்செம்மையாகத்தகும்; பிறகு மலாச்சி "தோல் ஜானைச்சேர்ந்தது; சொல்லவேண்டியதில்லை," என்றான்.

"கரடியை இப்பொழுது தின்றால் நன்றாகவிருக்குமோ?" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"அவ்வளவாக இருக்காது" என்றான் மலாச்சி, "ஏனெனில் அதன் கொழுப்புமுழுவதும் பனிக்காலத்தில் கரைந்து போயிருக்கும். ஆனால் சப்பைகளையறுத்து உப்புப்போட்டு வற்றல்செய்து வைத்தால், அது வற்றல் இறைச்சியோடு கலந்து தின்பதற்கு நன்றாக இருக்கும். அது எல்லோரும் ஒத்துக்கொள்ளத்தக்க விஷயமே. வாடா, அப்பா, ஜான்! உன் கத்தியெங்கே? மார்ட்டின், ஸ்திரீகள் மிஸ்டர்காம்பெல்லுடன் வீடு போகட்டும். நீ இங்கே இருந்து சற்று உதவி செய்.



## அத்தியாயம் 35.

ஜூன் மாதம் முதல்வாரம் மலாச்சி காட்டிலிருக்கும்போது ஓர் இந்தியன் அவனிடம் வந்து சேர்ந்தான். அவன் உருவி விட்டாற்போல் உயர்ந்து மெலிந்து, இருபது இருபத்தொரு வயதுள்ள ஒரு வாலிபன். அவன் வழக்கம்போல் ஒரு வில், அம்புகள், ஒரு கோடரி இவைகளைக் கையில் வைத்திருந்தான்; ஆனால் துப்பாக்கி மட்டும் இல்லை. மலாச்சி அப்போது கீழேவிழுந்திருந்த ஒரு மரத் துண்டத்தின்மேல் உட்கார்ந்திருந்தான். அந்த விடம் வீட்டிலிருந்து இரண்டு மைல் தூரமிருக்கும். கையில் துப்பாக்கியுடன் வெளியில் வந்திருந்தாலும் அப்படி ஒன்றும் விசேஷமான காரியத்திற்காக வந்தவனாகத் தோன்றவில்லை. இந்தியரிடமிருந்து ஏதாவது சமாசாரம் வருமென்று எதிர்பார்த்திருந்தமையால் அவர்கள் யாராவது வந்தால் தான் தனிமையிலிருப்பது நலமென்றெண்ணி அவன் ஒருகால் அங்கு உட்கார்ந்திருந்தானோ என்னவோ? இந்தியன் மலாச்சி இருக்குமிடம் வந்து வாயைத் திறவாமல் அவன் சமீபத்திலுட்கார்ந்தான்.

"என் மகன் மேற்றிசையிலிருந்தோ?" என்று மலாச்சி சற்று நேரம் கழித்தவுடன் இந்தியபாஷையிற் கேட்டான்.

"சிறிய நீர்ப்பூனை மேற்றிசையிலிருந்து வந்திருக்கின்றது," என்றான் இந்தியன். "ஒரு பாம்பைப்போல் தனது வாழ்நாளைக் கழித்த கருங்கரடியைப்பற்றிப் பெரியவர்கள் சொல்ல அவன் கேட்டிருக்கிறான். அவர் இப்போது இருப்பவரின் பிதாமகர்களோடு வேட்டையாடி இருக்கிறாராம். பெரியவர் வெள்ளைக்காரரோடு இருக்கிறவரோ?"

"அவர் வெள்ளைக்காரரோடு இருக்கிறார்," என்றான் மலாச்சி; "அவருக்கும் இந்தியருக்கும் சம்பந்தமில்லை".

"வெள்ளைக்காரனோடு வீட்டிலிருப்பவர் அநேகர் உண்டோ?" என்றான் இந்தியன்.

"உண்டு, சிறுவர்களுமநேகருண்டு, துப்பாக்கிகளும் அநேகமுண்டு," என்றான் மலாச்சி.

இந்தப்பேச்சு இதோடு நின்றது சில நிமிஷம் ஒருவரோடொருவர் பேசவில்லை. பர்ஸிவல் உயிரோடிருக்கிறானென்பதையும், ஆனால் காவலில் இருக்கிறானென்பதையும் தெரியப்படுத்துவதற்காக அச்சிறிய இந்தியன் அனுப்பப்பட்டானென்று மலாச்சிக்கு நன்கு விளங்கிற்று; ஆனால் அவ்விந்தியச்சிறுவன் அதைப்பற்றிப் பேச்சு ஆரம்பிக்கும் வரையில் தான் ஒன்றும் பிரஸ்தாபம் செய்வதில்லையென்று மலாச்சி தீர்மானம் செய்திருந்தான்.

கடைசியாக இந்தியன், "இந்தக்குளிர் வெள்ளைக்காரனைக் கொன்றுவிடவில்லையா?" என்றான்.

"இல்லை; இந்தியரைப்போலவே வெள்ளைக்காரனும் பனிக்கு ஒறுத்து இருக்கிறான். அவர்களைப்போலவே வேட்டையும்ஆடி வீட்டிற்குஇறைச்சியும் கொண்டுவருகின்றான்."

"வெள்ளைக்காரனோடு வந்தவர்களெல்லாரும் இப்போது அவனோடு இருக்கிறார்களா?"

"இல்லை; கிடையவேகிடையாது; ஒரு வெள்ளைக்காரக் குழந்தை பனியில் தூங்கிப்போய், இப்போது பிதிர் லோகத்திலிருக்கிறது."

இங்கே சில நிமிஷம் பேச்சு நின்றது. கடைசியாக இந்தியன், "ஒரு சிறிய பறவை எனது காதிற்சொன்னதென்னவென்றால் வெள்ளைக்காரக்குழந்தை சாகவில்லை; அது காட்டில் திரிந்துகொண்டிருக்கும்போது வழி தப்பிப்போயிற்று; அப்போது இந்தியன் அதைப் பிடித்துக்கொண்டு தன்னோடுகூட வெகுதூரம் மேற்கிலிருக்கும் தனது குடிசைக்குக்கொண்டுபோய் விட்டான் என்பது."

"சிறிய பறவை சிறிய நீர்ப்பூனையின் காதில் சொன்னது பொய்யன்றோ?"



"அன்று, சிறியபறவையின் பாட்டு மெய்யே," என்றான் இந்தியன். "வெள்ளைப்பையன் உயிருடன் இந்தியனுடைய குடிசையில் இருக்கின்றான்."

"இத்தேசத்தில் குழந்தைகளையுடைய வெள்ளைக்காரர் அநேகர் இருக்கின்றார்," என்றான் மலாச்சி; "குழந்தைகளும் அடிக்கடி காணமற் போவதுகண்டு சிறியபறவை பாடியது வேறொரு வெள்ளைக்காரனது குழந்தையைப்பற்றி இருக்கலாம்."

"அந்தச் சிறியபையன்கையில் துப்பாக்கியும் காலில் பனிக்கட்டையும் இருந்தன."

"பனிக்காலத்தில் வேட்டைக்குப் போகின்றவர்கள் எல்லோருக்கும் அவை உண்டே," என்றான் மலாச்சி.

"ஆனால் அந்த வெள்ளைப்பையன் அகப்பட்டது இந்த வெள்ளைக்காரரின் வீட்டினண்டைதான்."

"அப்படியானால் அந்தப்பையனைக்கண்ட இந்தியர்கள் அவனை அவ் வெள்ளைக்காரனிடம் ஏன் கொண்டுபோய் விடவில்லை?"

"அவர்கள் தங்கள் ஊரைநோக்கிச் சென்றுகொண்டிருந்தமையால் திரும்பிவரமுடியவில்லை. மேலும் அஸ்தமன மானபிறகு வெள்ளைக்காரனது வீட்டிற்குவர அவர்களஞ்சினார்கள்: அவனிடத்தில் அநேக சிறுவர்களும் அநேக துப்பாக்கிகளும் இருப்பதைப்பற்றி என் தகப்பனே சொல்லவில்லையா?"

"ஆனால் இந்தவெள்ளைக்காரன் இந்தியன் இரவில் வந்தாலும் சரி, பகலில் வந்தாலும் சரி, அவனையடிக்கத் துப்பாக்கியை எடுக்கமாட்டானே," என்றான் மலாச்சி; "ஓநாய் இரவில் திருட்டுத்தனமாக வீட்டிற்கருகில் வந்தால்மட்டும் கொல்லுவான்."

இந்தியன் மறுபடியும் சற்றுநேரம் பேச்சை நிறுத்தி

னான். மலாச்சியின் பேச்சிலிருந்து, முந்தி வீட்டின் பக்கத்தில் பிளாச்சுவேலியினண்டையில் இந்தியப்பையன் திருட்டுத்தனமாக இரவில் வந்தபோது போர்த்துக்கொண்டு வந்த ஓநாயின் தோல் விஷயமாக இவர்களுக்கெல்லாம் தெரிந்து போய்விட்டதென்று இந்தியன் அறிந்துகொண்டான். சற்று நேரம் கழித்ததும் மலாச்சி மறுபடியும் பேச்சை எடுத்துக் கொண்டான்.

"சிறிய நீர்ப்பூனையின் கூட்டத்தார் இருப்பது சமீபந் தானே?"

"எங்களது கூட்டத்தாரின் குடிசைகளிருப்பது பன்னிரண்டுநாள் பிரயாணம் மேற்கே," என்றான் இந்தியன்.

"சிறிய நீர்ப்பூனையின் கூட்டத்தாரின் தலைவன் ஒரு பெரிய போர்வீரன்தானே?"

"அவர் அப்பேர்ப்பட்டவர்தான்," என்றான் இந்தியன்.

"உண்மைதான்," என்றான் மலாச்சி; "ஆங்க்ரீஸ்நேக் ஒரு பெரிய போர்வீரனே. அவன் சிறிய நீர்ப்பூனையை என்னிடம் அனுப்பியது வெள்ளைக்காரப்பையன் உயிருடன் தனது குடிசையில் இருக்கிறானென்று தெரிவிப்பதற்குத் தானே?"

இந்தியன் மறுபடியும் சற்று யோசித்தான். தான் எங்கேயிருந்து வந்தானென்பதும் யாரிடத்திலிருந்து வந்தானென்பதும் மலாச்சிக்குத் தெரிந்தவிஷயங்களென்று இந்தியன் கண்டுகொண்டான். கடைசியாக அவன், "வெள்ளைப் பையனை ஆங்க்ரீஸ்நேக் அநேகம் பிறைகளாகத் தமதுவசம் வைத்துக்கொண்டு தீனிபோட்டு வளர்த்துவருகின்றார். அவனுக்கு இறைச்சியாகாரம் கொடுப்பதற்காக எத்தனையோ பிறைகள் வேட்டையாடினார்; வெள்ளைப்பையனுக்கும் ஆங்க்ரீஸ்நேக்குக்கும் ஒருவருக்கொருவர் தகப்பன் பிள்ளை போன்ற விசுவாசமுண்டாகிவிட்டது. அவர் அவனைமகனாக



ஸ்வீகாரம் செய்துகொள்ளப்போகிறார்; அந்த வெள்ளைப் பையன் அந்தக் கூட்டத்தாருக்குத் தலைவனாய்விடுவான். அவன் வெள்ளைக்காரனை மறந்துவிட்டு, இந்தியனைப் போலே சிவப்பாய்விடுவான்."

"அந்தப் பையனை வெள்ளைக்காரனும் வெகுநாளாக மறந்துவிட்டானே; அவன் இறந்துவிட்டதாகவே பாவிக்கப் படுகின்றான்," என்றான் மலாச்சி.

"அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிடுவதென்றால் அந்த வெள்ளைக்காரன் அறிவற்றவனாகவே இருக்கவேண்டும்; ஆனால் அது அப்படியன்று," என்றான் இந்தியன். "அந்தப் பையனைத் திரும்பக் கொண்டுவந்து கொடுப்போருக்கு அவன் விசேஷமான பரிசுகள் கொடுப்பான்."

"அவனால் கொடுக்கக்கூடிய பரிசுகள் எவையிருக்கின்றன?" என்றான் மலாச்சி; "வெள்ளைக்காரனோ மிகவும் ஏழை, தன் சிறுவருடன் அவனும் வேட்டைக்குத்தான் போகின்றான். இந்தியர்கள் ஆசைவைக்கக்கூடிய பண்டம் அவன் கொடுக்கும்படியானதென்னவிருக்கின்றது? அவனிடம் சாராயம் இல்லையே."

"வெள்ளைக்காரனிடம் துப்பாக்கிகளிருக்கின்றன. குண்டும் மருந்தும் யதேஷ்டமாக இருக்கின்றன," என்றான் இந்தியன்; "அவற்றையும் பண்டகசாலையிற் பூட்டித்தானே வைத்திருக்கிறான்? அவனுக்கவ்வளவு எதற்காக?"

"வெள்ளைக்காரன் துப்பாக்கிகளையும், மருந்தையும், குண்டுகளையும் வேண்டியவாறு கொடுத்தால் ஆங்க்ரீஸ்நேக் வெள்ளைப் பையனைக் கொண்டுவந்து விடுவானோ?" என்றான் மலாச்சி.

"அவன் வெகுதூரம் பயணப்பட்டு வெள்ளைப்பையனை கொண்டுவருவான்," என்றான் இந்தியன்; "ஆனால் இன்ன பரிசுகள் கொடுப்பேனென்று வெள்ளைக்காரன் முதலிற்

சொல்லவேண்டும்”

“போய்க்கேட்டுவந்து பதில் சொல்லுகிறேன்,” என்றான் மலாச்சி; “ஆனால் சிறிய நீர்ப்பூனை வெள்ளைக்காரனுடைய வீட்டுப்பக்கத்தில்கூட வரக்கூடாது. சிறுவர்களின் துப்பாக்கிகள் ஒரு சிவப்பு மனிதனைக் கண்டால் சும்மா விடமாட்டா. சூரியன் மறைந்து சந்திரன் கிளம்பினதும், நீண்ட புற்காட்டின் கீழக்கோடி முனையில் சிறிய நீர்ப்பூனையைச் சந்திக்கிறேன். அது சரிதானா?”

“சரி,” என்று சொல்லிவிட்டு இந்தியனெழுந்து குதிகாலில் சக்கரமிட்டு, காட்டிற்குள் புகுந்து போய்விட்டான்.

மலாச்சி வீட்டிற்குத் திரும்பி வந்ததும் சமயம் ஒத்திருந்தமையால் ஆல்ப்ரெடிடம் நடந்தவற்றை எல்லாம் தனியாகச் சொன்னான். காப்ட்டின் லிங்க்ளேரும் அன்று காலையிற்றான் வந்திருந்தார். ஆதலால் அவரிடத்திலும் அந்த ரகசியத்தைச் சொல்லிவிட்டு, அவரோடும் கலந்து யோசித்துக்கொண்டு மேற் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றித் தீர்மானம் செய்வதாக ஒத்துக்கொண்டார்கள். பர்ஸிவல் இன்னும் உயிருடன் இருக்கிறான் என்பதைக் கேட்டவுடன் காப்ட்டின் ஸிங்க்ளேருக்குண்டான ஒரு பக்கம் ஆச்சரியத்துக்கும், ஒருபக்கம் சந்தோஷத்துக்கும் கணக்கிட முடியவில்லை. அவரும் உடனே இவர்களுடன் கலந்து ஆலோசனை செய்தார்.

“முதல் விஷயம் யோசிக்கவேண்டியதென்னவென்றால் இந்தப் பரம துஷ்டனாகிய இந்தியத் தலைவனோடு சமாதானம் செய்து கொள்வது மேலல்லவா? என்பது” என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர். “சில ராத்தல்கள் வெடி மருந்தும் இரண்டொரு துப்பாக்கிகளும் பெரியவையா? போனாற்போகட்டுமே; வெகுநாளாகப் பர்ஸிவல் இறந்துவிட்டானென்று துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அவனுடைய தாய் தந்தையருக்கு



அவன் திரும்பி வந்தவுடன் உண்டாகும் ஆனந்தம் எவ்வளவிருக்கும்!”

“சங்கதி அஃதன்று, ஐயா!” என்றான் மலாச்சி; “பைய னைத்திரும்பவுமடைவதற்காக பண்டகசாலையிலுள்ள எல்லாச் சாமான்களையுங்கூட மிஸ்டர் காம்பெல் கொடுத்துவிடுவா ரென்று எனக்குத் தெரியும். ஆனால் நாம் யோசிக்க வேண் டியது யாதென்றால், அப்படிச் செய்வதால் யாது விளையும் என்பது தான். ஒரு விஷயத்தைப்பற்றி நிச்சயம் செய்து கொள்ளுங்கள்—ஆங்க்ரீஸ்நேக் அற்பமான பரிசைக்கொண்டு திருப்தியடையமாட்டான்; அவன் கேட்கும் துப்பாக்கிகள் கொஞ்சமாக இரா. அவ்வளவு நமது பண்டகசாலையிலிருக் குமோ என்பதே சந்தேகம். அதற்குத் தகுந்தாற்போலவே மருந்தையும் குண்டையும் கேட்பான்; ஏனெனில் ப்ரெஞ்சுக் காரர்களிங்கிருந்தபோதும், மற்றச் சமயங்களிலும் அவன் வெள்ளைக்காரர்களோடு விசேஷமாகப் பழகியிருக்கிறான்; நமக்குப் பிள்ளைகள் எல்லாவற்றையும்விட உயர்வு என்றும், பொருள்கள் லக்ஷியமன்றென்றும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலப்படிச் செய்வதனாலுண்டாகும் தீமைகளைப் பாருங்கள். முதலாவது, நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளும் போர்ப் பொருள்களை நமக்கு விரோதமாகவே அவனும் அவன் கூட்டத்தாரும் உபயோகப்படுத்துவதுடன் அவன் பலாட்டியனாய்விடுவான்; இரண்டாவது இவைகளை வாங்கி ருசி கண்டு விட்டால், இதைப் போலவே மறுபடியும் நம்மி டம் தண்டல் செய்வதற்காக இன்னும் வேலை செய்ய ஆரம் பிப்பான். அவன் சும்மா இருப்பானென்று மட்டும் நினையா தேயுங்கள். அவனுடைய கூட்டத்தானொருவன் முந்தி ஓநாயின் தோலைப் போர்த்துக் கொண்டு சோதனை செய்ய வந்தபோது அவனை நாம் கொன்றே இருக்கலாமென்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அதையவன் மறப்

பானா? கூடிய சீக்கிரத்தில் பழிக்குப் பழிவாங்காமற் போக மாட்டான் இப்படியிருக்க, அவனுக்குப் போதாததற்குத் துப்பாக்கிகளையும் மருந்தையும் குண்டுகளையும் கொடுத்தால், அப்படிப் பழிவாங்குவதற்கு வேண்டிய சாதனங்களை அவனது கையிற் கொடுப்பதேயாகும். ஒருநாளில்லாமற்போனால் மற்றொரு நாள் அவனும் அவனுடைய கூட்டத்தாருமாக வந்து நம்மைத் திடீரென்று எதிர்ப்பது மல்லாமல், நீங்கள் கொடுப்பதாகச் சொன்ன துப்பாக்கிகளைக் கொண்டே நம்மையும் மிஞ்சிவிடுவார்கள். இது நடக்கக்கூடியதே.”

“மலாச்சி! நீசொல்வது உண்மையாகவும் புத்திசாலித்தனமாகவுமிருக்கிறது; உள்ளபடியே நீ சொல்வதைக்கொண்டே தீர்மானம் செய்துவிடலாம்—அஃதாவது அவனது தண்டலுக்கு நாம் இணங்கக்கூடாது. அப்படியென்றால் பையனைத் திரும்பியடைய நாம் என்னசெய்யவேண்டும்?”

“அதுதான் எனக்கும் விளங்காத கேள்வியாக இருக்கிறது,” என்றான் ஆல்ப்ரெட்; “ஏனெனில் மலாச்சி சொல்வது போலவே நாமும் அவனுக்குத் துப்பாக்கியும் மருந்தும் கொடுக்கக்கூடாது. அவனும் வேறொன்றையும் ஒத்துக்கொள்ளமாட்டான்.”

“மாட்டான்,ஐயா! அவன் மாட்டவேமாட்டான்,நீங்கள் நிச்சயமாக இருக்கலாம்,” என்றான் மலாச்சி,“நமக்குள்ளவழி எனக்குத் தோன்றுகிறவரையிலொன்றுதானிருக்கிறது.”

“அப்படியானால் உன்னுடைய யோசனை என்ன,மலாச்சி?”

“ஆங்க்ரீஸ்நேக் தனது கூட்டத்தாருடன் நம்மைத் தொடர்ந்துவந்தவன்தான்; நமக்குத் துப்பாக்கியுள்ள ஆள்கட்டு அவ்வளவுபலமாக இல்லாவிடில், அவன் அன்றே நம்மையெதிர்த்துக் கொன்றிருப்பான்; அதைப்பற்றிச் சந்தேகமில்லை. அவ்வாறு செய்யத்துணிவில்லாமல், பர்ஸிவலை மட்டும் திருட்டுத்தனமாகப் பிடித்துப்போய், அதைத்தருகின்றாயா, இந்தத்தருகின்றாயா என்று கேட்கின்றான். சிறிய நீர்ப்பூனை ஒருதடவை வந்தான்; இன்னும் ஒருதடவை வருவதாகச் சொல்லிப்போயிருக்கிறான். அவனைத் தொடாமலிருக்கும்படி நாமொருவழியிலும் கட்டுப்பட்டவர்களல்ல: அப்படியாக ஒருவிதமான உறுதிமொழியும் நாம் கொடுக்கவில்லை; ஆதலால் அவன் மறுபடியும் வரும்போது நாமொளிந்திருந்து அவனைச் சிறைப்படுத்தவேண்டும்; ஆனாலப்போது கர்னல் துரையின் உதவி வேண்டியிருக்கும்—ஏனெனில் அவனை நாம் கோட்டையிலடைத்துவைக்கவேண்டிவரும். அவனை இப்பண்ணையில் வைத்திருப்பதென்பது முடியாதவிஷயம் ஏனெனில் அப்படிச்செய்தால் ரகசியம் முழுவதும் மிஸ்டர் காம்பெல்லுக்கும் தெரிந்துபோய்விடும். மேலும், அவனை விடுவிப்பதற்காக எப்போது நம்மை எதிர்ப்பார்களோவென்று ஒவ்வொருராத்திரியும் நாம் விழித்திருக்கவேண்டிவரும். ஆனால் கர்னல்துரைக்கு எல்லாச்சமாசாரத்தையும் தெரிவித்து, அவரும் நமக்கு வேண்டிய உதவியைச் செய்வாராகில், இந்த இந்தியச்சிறுவனை நாம் பிடித்துப் பர்ஸிவலுக்குப்பதிலாக பிணையாகவைத்துக்கொள்வதுடன், கடைசியாக ஆங்க்ரீஸ்நேக்கும் ஒருவழிக்கு வருவான்.”



“மலாச்சி! உன்னுடைய யோசனை எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது,” என்றார் காப்ட்டின்ஸிங்க்ளேர். “ஆல்ப்ரெட், நீயும் சம்மதிக்கும்பக்ஷத்தில், நான் இன்றிரவு கோட்டைக்குத் திரும்பிப்போய்ச் சேர்ந்தவுடன், கர்னல்துரையிடம் எல்லாச்சங்கதிகளையும் சொல்லி, அவரும் இப்படிச் செய்யும்படி அனுமதி கொடுப்பாராவென்று பார்க்கிறேன். மலாச்சி! நீ எப்போது மறுபடியும் இந்தியனைச் சந்திப்பது?”

“மூன்றுநாட்களில்—அவாவது சனிக்கிழமையன்று; அப்போது சந்திரிகை பூர்ணமாய்விடும்; அப்போது இரவில் புற்காட்டுவெளியின் கீழ்க்கோடியில், அதாவது கோட்டைக்

குச்சமீபமான இடத்தில் சந்திப்பது; ஆகையால் மிஸ்டர் காம்பெல்லுக்கும் மிஸிஸ் காம்பெல்லுக்கும் தெரியாமலே நாம் யோசித்திருப்பதை எல்லாம் நிறைவேற்றுவதில் சிரமமே இருக்காது."

"நீ சொல்லுகிறதைவிட நல்லயோசனை இருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை," என்றான் ஆல்ப்ரெட்.

"அப்படியேயாகட்டும்," என்றார் காப்ட்டின்ஸிங்க்ளேர். "நான் மறுபடியும் நாளைக்கிங்கே வருகிறேன்—இல்லை, நாளைக்குவேண்டாம்—அதற்கும் மறுநாளென்றால் நலமாகவிருக்கும். அப்போது கர்னல்துரையிடமிருந்து பதிலைத்தெரிந்துகொண்டு வருவதோடுகூட வேண்டியிருக்கும் ஏற்பாடுகளையும் செய்கிறேன்."

"சரி, ஐயா," என்றான் மலாச்சி. "நீங்கள் உள்ளே சென்று சிறுமிகளுடன் கலந்து கொள்ளுங்கள். தாமதமானால் அவர்கள் சந்தேகப்பட இடமுண்டாகும்."

"இதோ, அதற்கு என்ன தடை?" என்று நகைப்புடன் சொல்லிக்கொண்டே ஆல்ப்ரெடு காப்ட்டின் ஸிங்க்ளேருடன் உள்ளே சென்றான்.

இரண்டாவது நாள் காலையில் காப்ட்டின் ஸிங்க்ளேர் கோட்டைக்குப்போய் திரும்பி வந்து விட்டார். கர்னல் துரையிடம் சமாச்சாரம் எல்லாம் தெரியப்படுத்தி, அந்த இந்தியச் சிறுவனைப் பிடிக்கவும் கோட்டைக்குக் கொண்டுவர ஆள்களுக்கும் ஏற்பாடு செய்து விட்டு வந்தார்.

மலாச்சியையும் ஆல்ப்ரெடையும் தனியாக அழைத்துச் சென்று காட்டு வெளிக்குள் புகுந்து இந்தியச் சிறுவனைச் சந்திப்பதாகச் சொல்லியிருந்த இடத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றார். கோட்டையில் செய்து வந்த ஏற்பாடுகளைக்கேட்டதும் மலாச்சி, "ஐயா! அவனைப் பிடிப்பதற்கு இன்னும் ஒருவன் தெரிந்தவனாக வேண்டும்," என்றான்.



"அந்த ஒருவனைப் பிடிப்பதற்கு,நீ,ஆல்ப்ரெட், நான்—இம்மூவரும் போதாதா?" என்றார் ஸிங்க்ளேர்.

"ஐயா! இந்த விஷயத்தில் தேகவலு இருந்தால் மட்டும் போதாது. பிடிபட்டாற்கூட அந்தப் பயல் பாம்புக்குட்டிபோல் நெளிந்து பிடியிலிருந்து நழுவித்தப்பித்துக்கொண்டு ஓடிவிடுவான். அவனை ஓட்டத்தில் ஜயிக்க இங்கு ஒருவராலும் இயலாது," என்றான் மலாச்சி.

"சரி, அப்படியானால் மார்ட்டினையும் கூட வைத்துக் கொள்வோமே?" என்றான் ஆல்ப்ரெட்.

அப்படியே சம்மதிக்கப் பெற்றது. இன்னும், இந்தியச் சிறுவனைப் பிடிக்கும்போது அநுசரிக்க வேண்டிய சில சங்கேதங்களையும் ஒத்துப் பேசிக் கொண்டு எல்லோரும் வீட்டிற்குச் சாதாரணம்போல் திரும்பி வந்தார்கள்.

அடுத்தநாளும் சென்றது. ஏரிக்குப் பின்புறத்தில் சூரியன் மறையவும், மலாச்சி புல்வெளியின் கோடிக்கு நடந்துபோனான். போய்ச்சேர்ந்த பத்துநிமிஷங்களுக்கெல்லாம் அச்சிறிய இந்தியன் மலாச்சியினெதிரில் வந்து நின்றான். முன்போலவே அவனிடமிருந்த ஆயுதங்கள் கோடரியும் வில்லும் அம்புகளுமே; ஆனால் மலாச்சி வேண்டுமென்றே தன் துப்பாக்கியில்லாமல் வந்திருந்தான்.

மலாச்சி இந்தியனைப்பார்த்ததும் உட்கார்ந்தான். இந்தியர் ஏதாவது பேசவேண்டுமானால் அப்படிச் செய்வது வழக்கம். சிறிய இந்தியனும் உட்கார்ந்தான்.

சற்றுநேர மொருவரும் பேசவில்லை. கடைசியாக, "என் தகப்பன் வெள்ளைக்காரனுடன் பேசினானோ?" என்று இளைய இந்தியன் கேட்டான்.

"வெள்ளைக்காரன் தன் பையனை இழந்துவிட்டதற்காகத் துக்கப்படுகின்றான். அவனது மனைவியும் அழுகின்றாள்," என்றான் மலாச்சி. "ஆங்கிலீஸ்நேக் பையனை வெள்ளைக்கார

னுடைய இருப்பிடத்திற் கொண்டுவந்து விட்டு, பரிசுகளை வாங்கிக்கொள்ளவேண்டியது."

"வெள்ளைக்காரன் தாராளமாகக் கொடுப்பானோ?" என்றான் இந்தியன்.

அவனிடம் துப்பாக்கிகளும், மருந்தும், குண்டும் இருக்கின்றன; இந்தப் பரிசைக்கொண்டு ஆங்க்ரீஸ்நேக் திருப்தியடைவானோ?"

"ஆங்க்ரீஸ்நேக் ஒரு கனாக்கண்டான்" என்றான் இந்தியன்; "அதை என்னிடத்தில் சொல்லியுமிருக்கிறான். வெள்ளைப்பையன் அவன் தாயின்கையில் கொண்டுபோய்க் கொடுக்கப்பட்டதாயும், அவளப்போது கண்ணீரை ஆனந்த மேலீட்டால் விட்டதாயும், வெள்ளைக்காரன் தனது பண்டகசாலையைத் திறந்து, பத்துத் துப்பாக்கிகளையும், இரண்டு பீப்பாய் மருந்தையும், நாலுஆள் தூக்கும்படியான குண்டுகளையும் கொடுத்ததாயும் அவன் கனாக்கண்டான்.

"அது சரியான கனா," என்றான் மலாச்சி; "வெள்ளைப்பையன் அவனது தாயாரிடம் வந்துசேர்ந்ததும் அது நிறைவேறும்."

"ஆங்க்ரீஸ்நேக் வேறொரு கனாவும் கண்டான். வெள்ளைக்காரன் பையனைப் பெற்றுக்கொண்டு, ஆங்க்ரீஸ்நேக்கைப் பிடித்து வாயிலில் தள்ளிவிட்டதாகவும் ஒரு ஸ்வப்பனம் கண்டான்."

"அது சரியன்று," என்றான் மலாச்சி, "என்மகனே! என்னைப்பார்த்துப்பேசு," என்று சொல்லிக்கொண்டு அவனது கையைப்பிடித்து, "கருங்காடி பொய்சொன்னானென்று எப்போதாகிலும் கேள்விப்பட்டதுண்டா?" என்றான்.

இதுதான் மலாச்சியும் ஒளிந்துகொண்டிருந்த அவனுடைய கக்ஷிக்காரர்களும் ஒத்துப்பேசிக்கொண்டிருந்த சங்



கேதம். அவர்கள் உடனே ஒரு பாய்ச்சலாக ஓடிவந்து இந்தியனைப் பிடித்துக்கொண்டார்கள். அவர்களெல்லாரும் எவ்வளவு கெட்டியாகப் பிடித்துக்கொண்டாலும், சிறிய நீர்ப்பூனை திமிறிக்கொண்டு உயரக்கிளம்பி, தனது கோடாரியைத் தனது தலையின்மேல் சுற்றிக்கொண்டு தப்பி ஓட ஆரம்பித்தான். ஓடிப்போயுமிருப்பான்—ஆனால் நல்லவேளையாக மார்ட்டின் உடனே அவனது பாதத்தின் கணுவில் ஒருமான் தோல் வடத்தைச் சுருக்குப்போட்டுக் கட்டிவிட்டபடியால் இந்தியன் மறுபடியும் கீழேவிழுந்தான். அவனது கைகளையும் பின்புறம் கட்டி, கால்வடத்தை ஆல்ப்ரெட் கையிற் கொடுத்தான்.

"நீ சொன்னதே சரி, மலாச்சி!" என்றார் காப்ட்டின் லிங்க்ளோர்; "நாம் பிடித்த பிடியிலிருந்து எவ்விதமாக அவன் தப்பிக்கொள்ளப் பார்த்தான் என்பதுமட்டுமெனக்குத் தெரியவில்லை; ஆனாலவன் தப்பிக்கொண்டு ஓடியேயிருப்பான்.—ஒருகால் நமது மண்டைகளை உடைத்துமிருப்பான்."

"இந்த இந்தியர்களின் சுபாவம் எனக்குத் தெரியாதா, ஐயா?" என்றான் மலாச்சி; "கட்டுப்பட்டால்கூட நிச்சயமில்லை; கட்டு இறுகி அவனது சதையைக் கடித்துக் கொண்டாற்றான் நாம் பிழைப்போம். ஆனாலிப்போது நன்றாயவனை இறுக்கியாய்விட்டது. இருந்தாலும் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாய் நீங்கள் கோட்டைக்குப் போய்ச் சேருகின்றீர்களோ அவ்வளவுக்கவ்வளவு நலம். உங்களுடைய துப்பாக்கிகள் செடிமறைவிலிருக்கின்றன."

"ஆம்," என்றான் மார்ட்டின். "பெரிய ஓக் மரத்தின் பின்னால் அவைகளிருக்கின்றன."

"இவனை விடுவித்துக் கொண்டுபோக யாரேனும் வருவார்கள் என்கிற பயமில்லை; ஆயினும் நான்போயவைகளைக் கொண்டுவருகிறேன்."

"நாமவனை வெகுதூரம் கொண்டுபோக வேண்டியிராது," என்றார் காப்ட்டின்ஸிங்க்ளேர்; "அதையுத்தேசித்தே அரை மைல் தூரத்திற்குள்ளாக ஒரு கார்ப்போரலையும் சில போர் வீரர்களையும் மறைத்து வைத்திருக்கின்றேன். அதுவரை போனால் மட்டும் போதும். இல்லாவிட்டால் நீயும் ஆல்ப்ரெடும் வெகுநாழி வீடு திரும்பிப் போகாமற்போனால் சந்தேகத்திற் கிடமாகி, கேள்விகள் கேட்பார்கள். பதில் சொல்வது கஷ்டமாக இருக்கும். சரி, மலாச்சி! நமது பையனுக்காக மாத்திரமவனைப் பிடித்து வைத்திருக்கிறோமே அல்லாது, பையன் திருப்பி அனுப்பப்பட்டவுடன் அவனையும் திருப்பிக் கொடுத்துவிடுவோமென்று நீ அவனுக்குத் தெரியப்படுத்துவது நலம்."

மலாச்சி இந்தியனைப்பார்த்து அவனது பாஷையிலேயே பேசி, காப்ட்டின் ஸிங்க்ளேர் கேட்டுக் கொண்டவாறு சொன்னான்.

"ஆங்க்ரீஸ்நேக்குக்குச் சொல்லியனுப்ப வேண்டிய சமாசாரம் ஏதாவதிருந்தால் அதைக் கொண்டுபோக அநேக இந்திய ஸ்திரீகள் கோட்டையைச் சுற்றியிருக்கிறார்களென்று அவனுக்குச் சொல்லு."

சிறிய நீர்ப்பூனை மலாச்சி கேட்டதற்கு ஒன்றும் பதில் சொல்லாமலேயே வெகு ஆவலுடன் சுற்று முற்றும் பார்த்தான்.

"நீங்கள் வெகு சீக்கிரமாகப் போகவேண்டும்," என்றான் மலாச்சி, "ஏனெனில் இவன் என்னுடன் பேசி முடிந்ததும் ஆங்க்ரீஸ்நேக் வருவதாகச்சங்கேதமென்பது நிச்சயம்; இவனது கண்கள் அலைவதிலிருந்தும், ஒத்தாசையை விரும்பி இவன் சுற்றி விழிப்பதிலிருந்தும் நானதைத் தெரிந்துகொள்கிறேன். என்னிடம் துப்பாக்கி இல்லாமையால் உங்களோடு வந்து விட்டு, ஆல்ப்ரெடும் மார்ட்டினும் திரும்பிவரும்போது

V72
N31



நானும் வருகிறேன்."

"மலாச்சி! போர்வீரர்களிருக்குமிடம் நாம்போய்ச் சேர்ந்ததும், என் துப்பாக்கியை நீ எடுத்துக் கொள்ளலாம்."

"இது சில நிமிஷங்களுக்குள் செய்தாய்விட்டது. காப்ட்டின்ஸிங்க்ளேர் இந்தியனைக் கூட்டிக்கொண்டு, தனது கூட்டத்துடன் கோட்டைக்குச் சென்றார். மலாச்சியும் ஆல்ப்ரெடும் மார்ட்டினும் வீட்டுக்குவரத் திரும்பினார்கள். வழியில் புல்வெளிக்காட்டில் நுழைவதற்கு முன், மரங்களின் நிழலில் கிட்டின தூரத்தில் ஒரு இந்தியனுடைய உயர்ந்த உருவத்தை மார்ட்டின் கண்டான்.

"சரி; அப்போதே எனக்கு அதைப்பற்றி நிச்சயம் தெரியும்," என்றான் மலாச்சி. "உங்களை விட்டுத் தனிமையில் நான் திரும்பிவராதது நல்லதாயிற்று. என்ன சொன்னானும் காட்டு வெளிகளில் துப்பாக்கியில்லாத ஆள் ஆளல்ல."

மார்ட்டின் பார்த்ததாகச் சொன்ன இந்தியன் ஆங்க்ரீஸ்நேக்கைத் தவிர வேறில்லை. இந்தியச்சிறுவன் பிடிபட்டதை மரங்களின் மறைவிலிருந்து கண்ணுற்றிருந்த இத்தலைவன் பிடித்துக் கோட்டைக்குக்கொண்டுபோவதையும் கூடவே மறைவில் சென்றறிந்துகொண்டான்.

மலாச்சி, மார்ட்டின், ஆல்ப்ரெட் இம்மூவரும் எப்போதும்போல் சாதாரணமாகச் சந்தேகத்திற்கு இடமே கொடுக்காமல் வீட்டிற்குள் வந்து நுழைந்தார்கள்.

மறுநாள்காலையில் மலாச்சியும் ஆல்ப்ரெடும் வெளியில் வேலைசெய்துகொண்டிருக்கையில், "மலாச்சி, இனி அடுத்தபடி ஆங்க்ரீஸ்நேக்கு என்னவேலை செய்வானென்று தோன்றுகின்றது?" என்றான் ஆல்ப்ரெட்.

"அது இன்னதென்று ஊகிப்பது மிகவும் கஷ்டம். அவன் பெயரைப்போலவே ஒரு சர்ப்பத்துக்குத் தந்திரம் எவ்வளவு நுட்பமோ அவ்வளவு அவனுடைய புத்தியும். ஆனால் உட

121261

னே நம்மை எதிர்ப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை, " என்றான் மலாச்சி.

"நான் எண்ணுவதும் அப்படியே; ஏனெனில் உனக்கு வந்திருக்கும் கடிதத்தில் கண்டிருப்பதுபோல், அவன்வசத்தில் இருப்பது இரண்டே துப்பாக்கிகள் அல்லவா?" என்றான் ஆல்ப்ரெட். "ஜான் எங்கே காணோமே?"

"ஆற்றில் தெப்பத்தைச் செலுத்திக்கொண்டு மீன் பிடிக்கப்போவதாகக்காலையில்சொன்னான்," என்றான்மலாச்சி.

"அதென்ன? இந்தப் பேய்க்காற்றிலா?" என்றான் ஆல்ப்ரெட்.

"அதனால்தான் அவன் நிச்சயமாகப் போயிருப்பான். ஒரு அலுவலில் எவ்வளவுக் கெவ்வளவு அபாயத்திற்கு ஏதுவுண்டோ அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு அது பிடிக்கும், கவலைப்படவேண்டாம். அவன் எப்படியும் சமாளித்துக் கொள்வான், " என்றான் மலாச்சி. "அதிருக்கட்டும், புதிதாகப் பண்ணைக்குக் குடித்தனக்காரர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களாமே, உண்மைதானோ?"

"ஆம், அவர்களும் வந்தால் நமக்கு நிலச்சாகுபடி மிகுதிப்படுவதுடன் பந்தோபஸ்தும் மிகுதியாகுமென்ற கருத்துடன் என் தந்தை அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கின்றார். ஏன்? அதில் உனக்கு ஏதாவது திருப்திக்குறைவுண்டோ?" என்றான் ஆல்ப்ரெட்.

"அடடா! குசாலாகச் செய்யட்டும். மூன்றுவருஷங்களுக்கு முந்தி என்றால் அது எனக்கு வெறுப்பைத்தந்திருக்கும். இப்போது நான் முற்றிலும் மாறிவிட்டேன் என்பதை நீங்கள் காணவில்லையா? உங்களுடைய நல்லதன்மையும் உங்களுடைய பரதேவதைகளுக்கொப்பானசீமாட்டிகளுமே முக்கியகாரணம். அதிலும் அவ்விரு சிறுமிகளுடன் பழகிவிட்டு அடங்காத காட்டுமிராண்டிகளுமுண்டோ?" என்று



உருக்கத்துடன் மலாச்சி சொன்னான்.

இம்மாதிரி சம்பாஷித்துக்கொண்டு நான்கு மணி நேரம் வேலை செய்தான பிற்பாடும் ஜான் திரும்பிவந்து சேராததாலும், காற்று வர வர வலுத்ததாலும் அவர்களுக்குக் கொஞ்சம் சந்தேகமுண்டாயிற்று. அதற்குள் எம்மாவும் இவர்களைச் சாப்பிட அழைக்க வந்துவிட்டபடியால், ஆல்ப்ரெட் ஆற்றங்கரைக்குச் சென்று தெப்பமெங்கே என்று பார்த்தான். அடிவயிற்றில் பகீர்! என்றது. காற்றின் வேகத்தில் அகப்பட்டுக்கொண்டு இரண்டு மைல் தூரத்திற்கப்பால் ஜான் தெப்பத்தைத் தள்ளுவதற்குத் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். கோட்டைக்கு அதற்கப்பால் இரண்டு மைல் தூரமிருந்தது. அதற்குமப்பால் ஒரு பயங்கரமான நீர் வீழ்ச்சி இருந்தமையால், அதில் அகப்பட்டால் மீளுவது அசாத்தியமென்று கண்டுகொண்டு, உடனே கோட்டைக்கு அதற்கு முந்தி தகவல் தெரியப்படுத்த வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டான். இந்தச் சமாச்சாரம் வீட்டில் இருப்பவர்களுக்குத் தெரிந்தால் பெரிய அமளிக்கு ஏதுவாகுமென்று பயந்து, இருந்தாலும் சாப்பாட்டுக்குச் செல்லாமற்போனால் சந்தேகத்திற்கிடமுண்டாகுமாதலால் ஆல்ப்ரெடும் எம்மாவும்வீடு சென்று,எப்போதும்போல் தமாஷாய்ச்சாப்பிடுவன்போல் நடித்துவிட்டு அவன் விரைவில் ஏதோ சால்ஜாப்புடன் வெளியில் வந்து விட்டான். எம்மாவும் சங்கேதமாய்த் தகவல் ஒன்றையும் தெரியப்படுத்தவில்லை. ஜானும் மலாச்சியும்எங்கே என்றுண்டான கேள்விகளுக்கு அவ்விருவரும் எங்கேயோ சென்றிருக்கிறார்கள் என்று மட்டும் பதில்சொல்லப்பட்டது. மலாச்சியும் ஜானுடன் இருப்பதாகச் சொன்னதால் ஒருவருக்கும் ஐயம் உண்டாகவில்லை.

இதற்குள் மலாச்சியால் ஒரு குதிரை ஜேணம் போடப்பட்டுத்தயாராயிருந்ததால் ஆல்ப்ரெட் ஒரு தாவலாய் அதன்

மேலேறிக் கொண்டான். கோட்டையை நோக்கிப்பாய்ச்சலில்
விட்டான். சம்பவத்தை எவ்வளவு மறைக்கப் பார்த்தாலும்
தாய் நெஞ்சமானதால், அதுவும் ஒருதடவை ஏற்கனவே
பறி கொடுத்தவளானதால், மிஸிஸ் காம்பெல்லுக்கு ஏதோ
சந்தேகம் தோன்றி வெளியே வந்து ஜானும் மலாச்சியும்
வருகிறார்களோ என்று பார்த்தாள். அப்போதுதான் ஆல்ப்
ரெட் குதிரையில் ஏறி விரைவுடன் பறந்து செல்ல ஆரம்
பித்து மலாச்சி அதைப் பார்த்துக் கொண்டே தனிமையில்
நின்று கொண்டிருந்ததையும் பார்க்கவே, அவ்வம்மையார்
"ஐயோ" என்று அலறிக்கொண்டு, "என் ஜானுக்கு என்
னவோ நேரிட்டு விட்டதே" என்று புலம்பிக்கொண்டு நாற்
காலியில் அமிழ்ந்து விட்டாள்.

"அந்தப்பீதி உனக்கு ஏன் உண்டாகவேண்டும்?" என்று
ஒன்றுமறியாத மிஸ்டர் காம்பெல் கேட்டார்.

"அதில் என்ன சந்தேகம், பாருங்களேன்! ஆல்ப்ரெட்
கோட்டையை நோக்கிப் பறக்கிறானே! மலாச்சி தனியாகக்
கல்லுச் சிலைபோல் நிற்கிறானே!"

உடனே மிஸ்டர்காம்பெல் வெளியில் வந்து நோக்கினார்.
மேரி மட்டும் தன் மாமியண்டை சென்று கைகளைப் பிடித்
துக் கொண்டிருந்தாள். உடனே எம்மாவைத்தனியாக இட்டுக்
கொண்டுபோய் மிஸ்டர் காம்பெல் அவளிடமிருந்து நிகழ்ச்சி
முழுவதையும் தெரிந்து கொண்டு, உண்மையைத் தெரியப்
படுத்துவதே நலம் என்று கருதி மனையாளிடம் அனைத்தை
யும் சொன்னார். ஆல்ப்ரெட் கோட்டைக்குப்போய்ப் படகை
விட்டுக் கொண்டு ஜானிருக்கும் தெப்பத்தைப் பிடித்து
விடுவான் என்று பலவிதமாகத் தைரியம் சொல்லியும்
அம்மையாரின் உள்ளம் சமாதானப்படாமலே பதறிக்
கொண்டே இருந்தது. சற்று நாள் முந்தித்தான் பார்ஸிவலைக்
பறி கொடுத்த வயிறல்லவா!



இதனிடையில் ஜானுக்கு நேர்ந்ததென்னவென்றுபார்ப்
போம். கோட்டையில் ஆபீஸர்கள் மதிலுக்கு வெளியில்
தமாஷாக உலாவிக்கொண்டிருக்கும்போது, அகஸ்மாத்தாய்
காப்டின் ஸிங்க்ளேர் ஆற்றைப் பார்த்தார். அப்போது ஜா
னிருந்த தெப்பம் காற்றால் மோதியடிக்கப்பட்டு, கோட்
டையையும் கடந்து சென்றுகொண்டிருந்தது. சற்றுக்கப்
பால் நீர்வீழ்ச்சியுள்ளதை அறிந்தமையால் ஸிங்க்ளேர் உட
னே ஒருபடகை விட்டுக்கொண்டு நட்டாற்றுக்குச்செல்லவே
அதற்குள் தெப்பம் எட்டாமல் போய்விட்டது. ஆதலால்
படகிலிருந்து ஒரு நீண்ட மாலைக்கயிற்றை தெப்பத்தைப்
போய்த் தொடும்படி எறிந்தார். ஜான் உஷாராகக் கயிற்று
நுனியைப் பிடித்துக்கொண்டுவிட்டான்.

இவை எல்லாவற்றையும் தூரத்திலிருந்தே ஆல்ப்ரெட்
கண்டுவிட்டபடியால், சரி, இனி ஜானுக்கு அபாயமில்லை,
என்று தன்னைத் தேற்றிக்கொண்டு, உடனே குதிரையைத்
திருப்பி விரைவாகப் பண்ணைக்கு வந்து சேர்ந்தான். அங்கே
எல்லோரும் இவன்வரவைத்தூரத்திலிருந்தே உற்றுநோக்கிய
வண்ணமிருந்தமையால், தன் தொப்பியைக் கையில்எடுத்து
வீசினான். அதிலிருந்து எல்லாம் க்ஷேமமென்று அவர்களுக்
குத் தெரியவந்து, மிஸிஸ் காம்பெல்லுக்கும் உயிர்வந்தது.

உடனே அரைமணி நேரத்திற்குள் ஜானைக் குதிரையில்
ஏற்றிக்கொண்டு காப்டின் ஸிங்க்ளேரும் வந்து சேர்ந்தார்.
அந்தப்பையன் முகத்தில் கொஞ்சமாவது கலக்கமுண்டோ?

"எங்களுடைய மனமார்ந்த வந்தனங்களைத் தருகிறோ
மையா!" என்று மிஸிஸ் காம்பெல்லும் மிஸ்டர் காம்பெல்
லும் உருக்கத்துடன் சொன்னார்கள். மேரியும் உற்சாகத்து
டன் இதில் சேர்ந்துகொண்டாள்.

"குழந்தை! என்னை என்னை இப்படி நடுங்கச் செய்தா
யே?" என்றாள் அம்மையார்.

சிரித்துக்கொண்டே, "நாளைக்காலையில் மாண்ட்ரீலி லிருந்திருப்பேன்," என்றான் ஜான்.

"அதெங்கே? நடுவில் வீழ்ச்சியில் மாண்டிருப்பாயடா, அப்பா!"

"அம்மா, எனக்கு நீந்தத்தெரியாதோ?"

"துஷ்டப்பையா! பயமென்பது கொஞ்சமேனும் வேண்டாமா?"

அதற்குள் மலாச்சி, "நல்லது, அம்மா! நெஞ்சுத் துணிச்சலிருப்பது அவ்வளவு பெரியகுற்றமல்ல. ஆகை யால் அதை நிரம்பவும் கண்டிக்கவேண்டாம்," என்றான்.

"மிகவும் சரி, மலாச்சி," என்றான் ஆல்ப்ரெட்; "போகட்டும்; அவன் நல்லபடியாய்த் திரும்பிக் கிடைத்து விட்டதால் அவனை நாம் இனி கண்டிக்கவேண்டாம். இம்மா திரி முரட்டுத்தனமாக இனிச் செய்யமாட்டான்."

"அண்ணா, வேண்டுமென்று இதைப்போல் இனிச் செய்யேன்."

"போகிறது, அவ்வளவையாவது கேட்க எனக்குச் சந்தோஷம்," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

## அத்தியாயம் 36.

கோடைக்காலம் ஆரம்பித்துச் சென்றுகொண்டிருக்கை யில் பண்ணையில் ஆகவேண்டி இருந்த பற்பல வேலைகளும் வி ரைவாகவே நடந்துகொண்டிருந்தன. காப்டின் ஸிங்க்ளேரும் அதிகாரியின் அனுமதியைக் கோடைக்காலமானதால் எளி தில் பெறமுடிந்து, அடிக்கடி பண்ணைக்கு வந்து சற்றுத் தங்கி இருந்துவிட்டு, மறுபடி போவதும் வருவதுமாய் இருந்தார். சீர்குப்படி ஏராளமாக ஆகவேண்டி இருந்தமையாலும், பனிக் காலத்திற்குக் கால்நடைகளுக்குத் தேவையான புல்லை அறுத் துக் காயவைத்துக் கட்டிக்கொண்டுவந்து சேர்த்துப் பண் ணையில் போர்போட வேண்டிஇருந்தமையாலும் அதிகஆள்



தேவையாக இருந்தபடியால், கோட்டை அதிகாரியின் ஒத் தாசையின்பேரில் தேவையான ஆட்படைகள் கூலிக்குக் கோட்டையிலிருந்து தருவிக்கப்பெற்று பண்ணைவேலை யா தொரு குதாவடையின்றி நடந்துகொண்டிருந்தது.

ஒருநாள் இங்கிலாந்திலிருந்தும், மாண்ட்ரீல் நகரத்தி லிருந்தும் வந்த தபாற்பையில் அநேகம் பேர்களுக்கும் அநே கம் தபால்கள் இருந்தன. முக்கியமாக, இங்கிலாந்திலிருந்து வந்த ஒருசமாசாரப் பத்திரிகையில் வரையப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் வெக்ஸ்டன் ஹாலின் அப்போதுள்ள யஜமான ரான மிஸ்டர் டக்ளஸ் காம்பெல் வேட்டையாடுகையில் குதி ரையிலிருந்து விழுந்ததாயும், ஆனால் அவருடைய உயிருக்கு அபாயகரமான காயம் ஒன்றும் படவில்லையென்றும் இருந் தது. மாண்ட்ரீலிலிருந்து மிஸ்டர் காம்பெல்லுக்கு வந்தி ருந்த லெட்டரில் அவர் இஷ்டப்பட்ட பிரகாரமே அவரு டைய பண்ணையுடன் சேர்ப்பதற்காகக் கருதப்பட்ட புதிய நிலத்தைச் சர்க்கார் கொடுப்பதாகச் சம்மதித்து விட்டதாக வும், அவர் பண்ணைக்கு அபேக்ஷித்த பிரகாரமே புதிய குடித்தனக்காரர்கள் நான்கு குடும்பத்தார்கள் யோக்கியர் களாக அகப்பட்டு உடன்படிக்கை முதலியவைகள் வேண் டியபடி அவர்களுடன் செய்து முடித்தாய் விட்டன என்றும் மிஸ்டர் எம்மர்ஸனிடமிருந்து கடிதமும் வந்திருந்தது.

இக்குடித்தனக்காரர்களைப் பற்றிய விவரங்களைச் சுருக் கமாய்க் கவனிப்போம். முதலாவதாக ஹார்வி என்று பெய ருள்ளவர்கள். இங்கிலாந்தில் பாரம்பரையாக ஒரே சிறிய பண்ணையைச் சாகுபடி செய்துகொண்டு மானமாக ஜீவனம் செய்துகொண்டிருந்தவர்கள். ஹார்விக்குப் பிறந்த குழந்தை களில் மூத்த குமாரன் இருபதுவயது வந்தவுடன் கெட்டுப் போய் குடி, சூதாட்டம், துர்மார்க்கம் முதலிய தீச்செயல் களில் அமர்ந்து, காளவடையில் கன்னக்களவுகேஸில் அகப்

பட்டுத்தண்டனைக்குள்ளாகி தண்ணீர்மேல் ஏற்றப்பட்டான். அதுமுதல் மானிகளான இக்குடும்பத்தாருக்குத் தலைகுனிவு நேர்ந்து, எங்கேயாவது கண்காணாத சீமைக்குச் சென்று பிழைப்பது நலமென்று கருதி, வீடு வாசல் எல்லாவற்றையும் வந்தவிலைக்கு விற்று அகப்பட்டதை எடுத்துக்கொண்டு கப்பலேறி மாண்ட்ரீலுக்கு வந்து சேர்ந்தவர்கள். மனையாள், வயதுவந்த இரு குமாரர்கள், ஒரு குமாரி இவர்களுள்பட ஐவரடங்கிய குடும்பம். இவர்கள் எல்லோரும் நல்ல உழைப்பாளிகள்.

இரண்டாவதாக க்ரேவ்ஸ் என்ற குடும்பத்தார். இவருடைய மனைவி, அவளின் இரு சகோதரிகள், ஒரு வயது வந்த மகன் இந்த ஐவரடங்கிய குடும்பத்தாரும் நல்ல உழைப்பாளிகள். இவர்கள் தொழிலில் இடையர்கள்.

மூன்றாவதான ஜாக்ஸன் என்ற குடும்பத்தார்கள் சங்கியையில் மிகுந்தவர்கள். அவர்களுக்கு ஏழு குழந்தைகள். மூத்தது பெண்—வயது பதினெட்டு. பின்பு வரிசை வரிசையாகப் பார்த்துக்கொள்ளலாம். கையிலிருந்தது ஒரு ஆண் குழந்தை. லண்டன்மாநகருக்கு அருகாமையில் கறிகாய்த் தோட்டம் போட்டு ஜீவித்திருந்தவர்கள். ஸம்ஸாரம் பெருகப் பெருகப் பால ஸம்ஸாரத்தைப் போஷிப்பதற்குப் போதுமான வரும்படிக்கு இங்கிலாந்தில் இடம் இல்லாததால், கப்பலேறிக் கானடாவிற்குப் பிழைக்க வந்தவர்கள். ஜாக்ஸன் கையில் ஒரு பண்ணைவாங்கப் போதுமான ரொக்கம் இருந்தது. ஆனாலும் வரக்கூடிய வரும்படி போதுமானதா என்று நிச்சயமாகத் தெரிகிறவரையில் கையிலிருக்கும் முதலைப்போட்டு நிலம் வாங்கிவிட்டால் ஒரு சமயம் குழந்தைகளின் பாடு பெரும்பாடாகப்போய்விடுமோ என்ற பயத்தால் தற்காலம் பண்ணைவேலையில் அமரச் சம்மதித்தவர்கள்.



கடைசியாக மெரிடித்து என்ற ஒரு சிறு குடும்பம். அப் கணவன், மனைவி, அடங்கிய இரு சிறுவர்கள்தான். போதுதான் மணம் புரிந்து, பிழைப்பதற்காகக் கப்பலேறிக் கானடாவுக்கு வந்தவர்கள். குடும்பச் சச்சு இன்னும் ஏற் படவில்லை. அவன் ஒரு நேர்மையான சிறுவன். மனையா ளும் அதைப்போலவே ரூபத்திலும், படிப்பிலும், நல்லொ ழுக்கத்திலும் சிறந்தவள்.

இவ்விதம் நேர்மையுள்ள நான்கு குடும்பத்தார்கள் அமைந்தது ஒரு பெரும்பாக்கியமென்றே காம்பெல்லர்கள் கருதினார்கள். புதுக் குடிகளுக்குத் தகுந்த வீடுவாசல் வசதிகளைத் தாமதமின்றிக் கோட்டையாட்களுடைய உதவியைக்கொண்டு ஏற்படுத்தி, அவர் அவர்கள் அவரவருடைய இடத்தில் அமர்ந்தார்கள். காம்பெல்லின் பண்ணை நடுவிலும், சுற்று வட்டத்தில் அரைமைல் தூரத்தில் புதுக்குடிகளின் வீடுகளும் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு நாளும் இவர்களுடைய வீட்டிற்கு வந்து ஸ்நேகம் செய்வதிலும் காம்பெல்லர்கள் முயன்றிருந்தார்கள். புதிதாய் வந்திருந்த குழந்தைகளுக்குப் படிப்பதற்காக ஒரு ஆதிவாரப் பள்ளி ஏற்படுத்தப்பட்டு மேரியும், எம்மாவும் அதில் போதகர்களாக அமர்ந்து, குழந்தைகள் நல்வழியில் பயின்று வந்தன. தொழுவதற்காக ஒவ்வொரு ஆதிவாரத்திலும், பெரிய பண்ணை வீட்டில் அமைத்துள்ள கோயிலில் அனைவரும் கூட்டப் பட்டு மிஸ்டர் காம்பெல்லால் ஸத்காலட்சேபம் நடைபெற்று வந்தது.

ஒவ்வொரு குடித்தனக்காரருக்கும் புதியநிலத்தில் நூறு ஏக்கர் கொடுக்கப்படும்; அதில் முதலில் ஐம்பது ஏக்கராக்கள் சீர்திருத்தப்பெற்று காம்பெல் பண்ணையுடன்சேர்க் கப்பட்டு, மீதி ஐம்பது ஏக்கராவும் குடித்தனக்காரருக்குச் சொந்தமாய்விடவேண்டும், என்று ஒப்பந்தமாகையால்

எல்லோரும் ஆசையுடனும், ஊக்கத்துடனும், திருப்தியுடனும் வேலையில் அமர்ந்து சுகமாகக் காலம் கழிய ஆரம்பித்தது.

இப்படி இருக்கையில் அவர்களுள் மனதில் தாங்களுள்ளவர்கள் நால்வரே: அஃதாவது, ஆல்ப்ரெட், மலாச்சி, மார்ட்டின்,ஸ்ட்ராபெர்ரி. மலாச்சி கோட்டையில் அந்த இந்தியச் சிறுவனைப்பிடித்து அடைத்துவிட்டாய்விட்டது என்ற சமாசாரம் ஆங்கிரீஸ்நேக்கிற்குத் தெரிந்திருந்தும், அவனை ஆளுச்காளாகமீட்டுக்கொள்ளப்பர்ஸிவலைவிடுதலை செய்துவிடத்தயாராக இருப்பதாக ஏன் சமாச்சாரம் அவ்விந்தியத் தலைவனிடமிருந்து இன்னும் வரவில்லை? சிலகாலத்திற்கு முந்தி ஜானல் சுடப்பட்ட ஓநாய் வேஷம்பூண்டுவந்த இந்தியன் மாண்டுவிட்டானென்று சமாச்சாரம் வந்துவிட்டது. இந்தியருடைய சுபாவம் உயிருக்கு உயிர்பழிவாங்குவதேயாம் ஆதலால் பர்ஸிவலையும் வேலை தீர்த்துவிட்டார்களோ! இந்தச் சங்கடகரமான சந்தேகம் எவ்வாறு நிவர்த்தியாகும்? என்று இவர்கள் இடைவிடாது மனதில் குழம்பிக்கொண்டிருக்கும் பொழுது, சந்தேகத்தை ஒருவாறுகத் தீர்ப்பதற்குப் போலப் பின் கூறப்படும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

ஒருநாள்காலையில் மேரிபர்ஸிவல், ஸீடர்ஸ்வாம்பு என்ற ஒரு சதுப்புநிலத்திற்கு ஊறுகாய் போடுவதற்காகக் களாக்காய் பறித்துவரப்போனாள். அந்தவிடம் வீட்டிற்கு மேற்கில் அரைமைல் தூரத்தில் ஏரிகரைக்குச்சமீபத்திலிருந்தது. மார்தா ஜாக்ஸனென்றழைக்கப்பட்ட புதுக்குடித்தனக்காரப் பெண்ணொருவளும் கூடப்போயிருந்தாள். ஒருகூடைநிறைந்தவுடன் வீட்டுக்குக் கொண்டுபோய்க் கொட்டிவிட்டு மறுபடியும் சீக்கிரமாகவே திரும்பிவாவென்று சொல்லி அவளை மேரி வீட்டிற்கனுப்பினாள். அப்பெண்ணும் அவ்வாறே செய்தனள். ஆனாலவள் ஸீடர்ஸ்வாம்புக்குத் திரும்பிவந்து



பார்க்கவே மேரி அவ்விடத்திலில்லை. மேரி தன்னுடன் வைத்திருந்த பழக்கூடை பக்கத்திலிருந்த ஒரு சிறு மண்குன்றின் மேல் கவிழ்ந்துகிடந்து, பழங்களும் சிதறிக்கிடந்தன. மிஸ் பர்ஸிவலின் பெயரையடிக்கடி கூப்பிட்டுக்கொண்டு அந்தப் பெண்ணாங்கேயே கால்மணிநேரம் கழித்தனள். ஆனால் பதிலொன்றும் கிடைக்காமையால், ஏதோ ஒரு காட்டுமிருகம் அவளைக் கொண்டுபோய்விட்டதென்று நினைத்து, அந்தப் பெண் திகில்கொண்டு வீட்டிற்கு ஒருபாய்ச்சலில் ஓடிவந்து மிஸ்டர் காம்பெல்லிடமும் மிஸிஸ் காம்பெல்லிடமும் நடந்ததைச் சொன்னாள். மார்ட்டினும் ஆல்ப்ரெடும் யந்திரத்தண்டை அலுவலாகவிருந்தார்கள். நல்லவேளையாக மலாச்சி தனது குடிசையிலேயே இருந்தான். ஆகையால் ஸ்ட்ராபெர்ரி அவனிடம் ஓடி, அந்தப்பெண் சொன்னதை யவனிடம் சொல்லி, மலாச்சியைப்பார்த்து 'ஆங்க்ரீஸ்நேக்' என்றுசொன்னாள்."

"ஆம், ஆம், ஸ்ட்ராபெர்ரி! அதுதான் விஷயம், சந்தேகமில்லை," என்றான் மலாச்சி. "ஆனால் இப்போது அதைப் பற்றி ஒரு பிரஸ்தாபமும் வேண்டாம். அவன் ஏதாயினும் விஷமம் செய்வானென்றுமட்டும் எனக்குத்தெரியும்—ஆனால் இதைச் செய்யத்துணிவானென்று நான் நினைக்கவில்லை. சரி, இருக்கட்டும். பார்த்துக்கொள்வோம் வீட்டிற்குத் திரும்பிப் போய், யஜமானனிடத்திலும் யஜமானியிடத்திலும் நான் ஸீடர்ஸ்வாம்புக்குப் போயிருக்கிறேனென்று சொல்லிவிட்டு, நீயும் ஒரு ஓட்டமாய் என்னை வந்துபிடி: ஏனெனில் அங்கே இடத்தை நன்றாய்ச்சோதித்துப் பார்க்கவேண்டும். என்னுடைய கண்களைவிடப் பாலியமான உன்னுடைய கண்கள் தேவையாயிருக்கும். வேறொருவரையும் அனுப்பவேண்டாமென்று அவர்களிடம் சொல்லு: ஏனெனில் அதனால் இடையூறுகளேயுண்டாகுமல்லாது நன்மையொன்றும் ஏற்படாது.

யாராவனா வந்தால் சுவடுகள் மிதிக்கப்பட்டு நமது கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோய்விடும்.

மலாச்சி உடனே துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சரியாகக் கெட்டித்திருக்கிறதாவென்று பரிசோதித்துவிட்டு ஸ்வாம்பு இருக்குமிடத்தை நோக்கிச்சென்றான். ஸ்ட்ராபெர்ரியும் சமாசாரத்தைச்சொல்வதற்காக வீட்டிற்குச்சென்றாள். அதற்குள்ளாக மார்ட்டினையும் ஆல்பிரெடையும் அழைத்துவரும்படி மிஸ்டர் காம்பெல்லும் மிஸிஸ் காம்பெல்லும் மார்தா ஜாக்ஸனை அனுப்பியிருந்தார்கள். ஜானும் ஹென்றியும் காட்டிற்போய்க் கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருந்தனர். இப்படியிருக்கையில் மலாச்சி சொன்ன சமாசாரத்தை மிஸ்டர் காம்பெல்லுக்கும் மிஸிஸ்காம்பெல்லுக்கும் சொல்லிவிட்டு மலாச்சியோடு போய்ச் சேருவதற்காக ஸ்ட்ராபெர்ரி ஸீடார்ஸ்வாம்புக்குச் சென்றாள். அவன் அப்போது துப்பாக்கியின்மேல் சாய்ந்துகொண்டு பழம் வைத்திருந்த கூடையின் பக்கத்தில் அசையாமல் நின்றுகொண்டிருந்தான்.

"சரி, ஸ்ட்ராபெர்ரி! இப்போது நாம் கண்டுபிடிக்க வேண்டியதென்னவென்றால், அவர்கள் வந்தது எவ்வளவு பேர்கள்? போனது எந்த வழி? என்பது" என்று மலாச்சி இந்திய பாஷையில் சொன்னான்.

"இதோ" என்று ஸ்ட்ராபெர்ரி சொல்லிக்கொண்டு குட்டைப் புல்லின்மேற் செய்யப்பட்டிருந்த ஓர் அடையாளத்தைக் காட்டினாள். அந்தக் குறியானது இந்தியர்களைப் போல் வாணாளைக் கழிப்பவர்களுடைய கண்களுக்கே அல்லாது வேறொருவருக்கும் தெரியாது.

"தெரிகிறது, குழந்தாய்! அதுவும், அதைத் தவிர இன்னுமிரண்டும் எனக்குத் தெரிகின்றன. ஆனால் இதிலிருந்து நாம் யாதும் சொல்வதற்கில்லை. இச்சுவட்டைத் தொடர்ந்துகொண்டே அடிகள் நன்றாய் விளங்கும்வரையில்



போவோம். அதுதான் அவளுடைய காலடி," என்று இரண்டு மூன்று கஜதூரம் சென்றதும் சொன்னான். "தோலுறையைவிட ஒரு ஜோட்டின் உள்ளங்காலடியானது வெட்டிப் பதிந்திருக்கும். கண்டுபிடிப்பது சுலபமான வேலையன்று; வேறு யாரும் வந்தால் கண்டுபிடிக்க முடியாமல் இடையூறு தான் செய்வார்."

"இதோ இன்னும்," என்று ஸ்ட்ராபெர்ரி குனிந்துகொண்டு காய்ந்த குட்டைப் புல்லைப் பார்த்துச் சொன்னாள்.

"சரி, நீ சொல்வது சரிதான், குழந்தாய்!" என்றான் மலாச்சி. "இச்சிறு குன்றின் அடிப்பக்கம் வரையில் நமக்குச் சுவடு அகப்பட்டால் போதுமானது. அதற்குப் பிறகு சுலபமாகவே இருக்கும்"

இம்மாதிரியாக ஊன்றிப் பார்த்துக்கொண்டும், நுட்பமாகத் தேடிக்கொண்டும், கண்ணுக்குத் தெரியாததென்றே சொல்லவேண்டிய சுவட்டைப் பார்த்துக்கொண்டும், கிளம்பின இடமிருந்து சுமார் நூறுகஜதூரம் வந்து, அக்குன்றின் அடிப்பக்கம் சென்றடைந்தார்கள். வரவரச் சுவட்டைக் கண்டுபிடிப்பது கஷ்டமாய்ப் போய்விட்டது. மற்றக்காலடிகளைவிடத் தெளிவாகத் தெரிந்த மேரியின் பாதத்தின் பதிவானது சில கஜதூரம் வரையில் உதவி செய்தது. அதற்குப் பிறகு அது தெரியவே இல்லை. அவளைத் தூக்கிக்கொண்டு போயிருக்கவேண்டுமென்பது நன்றாகத் தெரிந்தது. குன்றின் அடிப்பக்கத்தில் வந்து சேர்ந்தவுடன் கால்களின் தோலுறைகளுடைய பதிவு அடையாளங்கள் தெளிவாகத் தெரிந்தன. அவற்றின் நீளம், அகலம், இவைகளைக் கணக்காக அளந்து பார்த்ததில், அவை வெவ்வேறான இரண்டு மனிதர்களுடையன என்று தீர்மானம் செய்யப்பட்டன. இவற்றைத் தொடர்ந்துகொண்டு காட்டிற்கு வந்து சேர்ந்ததும், ஆல்பிரெடும் மார்ட்டினும் போட்ட கூப்பாடு இவன்

காதில் விழுந்து, இவனும் பதில் கூப்பாடு போட்டுச் சீக்கிரம் எல்லோரும் சேர்ந்து கொண்டார்கள்.

"என்ன, மலாச்சி?" என்றார்கள்.

"அவளை ஸ்னேக் தூக்கிக்கொண்டு போய்விட்டானப்பா, சந்தேகமில்லை," என்றான் மலாச்சி. அந்த அயோக்கியப் பயல் நமது சிண்டைத் தன்னுடைய கையில் வைத்துக் கொள்ளத் தீர்மானம் செய்து விட்டான். நாம் சிறைப்படுத்தினது ஓர் ஆள்; அவனோ இரண்டு பேர்களைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டான்."

மலாச்சி பிறகு, அவளைக் கொண்டுபோயிருக்க வேண்டுமென்று அவன் எதைக்கொண்டு தீர்மானம் செய்தானென்பதை விவரமாகச்சொன்னான். அதைக்கேட்ட ஆல்ப்ரெட் "சரி, இனி நாம் வேலை செய்ய ஆரம்பிக்குமுன், பின்னாலே செய்ய வேண்டியதைப்பற்றிக் கலந்து யோசிப்போம்," என்றான்.

"நல்லதப்பா!" என்றான் மலாச்சி. "உடனே செய்ய வேண்டியதென்னவென்றால் நானும் ஸ்ட்ராபெர்ரியும் சுவட்டோடு போய் இன்னும் தெரியக்கூடிய சமாசாரத்தைத் தெரிந்துகொள்கிறோம். நம்மாலானதை அறிந்துகொண்டவுடன் ஒரு ஜமாவைச் சேர்த்துக்கொண்டு அவர்களைத் தொடர்ந்து செல்வோம். சுவட்டை மட்டும் நன்றாகக் கண்டுகொண்டால் பிறகு தப்பமாட்டோம்; ஸ்ட்ராபெர்ரி மட்டும் கூட இருக்கவேண்டும்—ஏனெனில் எனக்குத் தெரிந்தவரையில் அவளுக்கிருக்கும் கண் கூர்மை வேறொரு இந்தியருக்கும், பெண்ணாகட்டும் ஆணாகட்டும், இருந்ததில்லை."

"சரி, நீ சொல்வதே சரி; மலாச்சி! ஆனால் நீங்களிருவரும் சுவட்டைத்தேடிப் போயிருக்கையில் நாங்களென்ன செய்வது?"

"நீங்களா, ஐயா? என்? ஜமாவைச் சேருங்கள்; நாங்கள் திரும்பிவந்தவுடன் கிளம்பத்தயாராக விருங்கள். முடியுமா



னால், மூன்றுமணி நேரத்திற்குள்ளேயே கிளம்பவேண்டும்."

"காப்டின் ஸிங்க்ளேரும் நம்முடன் வந்தால் நலம். அவர் வராவிட்டால் வெறி கொண்டுவிடுவார்," என்றான் ஆல்ப்ரெட்.

மலாச்சி அரைமனதுடன், "வேண்டுமானால் வரட்டும்; ஆனால் என்னைக்கேட்டால் வேண்டாமென்றே சொல்வேன். போகிறபேர்கள் பொறுத்தும் நிதானித்தும் வேலை செய்கிறவர்களாக இருக்கவேண்டும். அந்த விஷயத்திலவரை நம்பலாமா?

"பயப்படவேண்டாம்; ஆனாலிப்போது என்னுடைய தாய் தந்தையரிடம்போய் நடந்ததை முழுவதும் சொல்ல வேண்டும். பர்ஸிவல் உயிருடன் இருக்கிறான் என்றும் சொல்லவேண்டும்."

"என் ஐயா அப்படிச்செய்வது?" என்றான் மலாச்சி. "அது அவர்களின் மனத்தை இன்னும் புண்தானே செய்யும். அந்தப் பையனைப்பற்றி மறுபடியும் நினைவு மூட்டி, ஆறிப்போன புண்ணை மறுபடியும் கிளறவேண்டுமா? நான் சொல்வதென்னவென்றால், யாரோ மிஸ் பர்ஸிவலைக் கொண்டுபோய்விட்டார் என்று மட்டில் சொல்லிவிட்டு, சிறிய நீர்ப்பூனையை நாம் பிடித்து வைத்திருப்பதைப்பற்றியும், அதன் காரணத்தைப்பற்றியும் ஒன்றும் சொல்லாது விட்டுவிட வேண்டும்."

"ஒருகால் அப்படிச் செய்வதும் சரியாயிருக்கலாம்," என்றான் ஆல்ப்ரெட்; "அப்படியானால் மார்ட்டினை இவ்விடத்திலே விட்டுவிட்டு, காப்டின் ஸிங்க்ளேரைப் பார்க்கக் கோட்டைக்கு ஓடுகிறேன். போர்வீரர் சிலரை அனுப்பும்படி கேட்கலாமா?"

"செய்யலாம், ஐயா! அவர்களுள் காட்டு வெளியில் திரிந்து பழக்கமுள்ளவர்கள் யாராகிலுமிருந்தால், அவர்களில்

இரண்டு பேர்கள் வந்தால் நமக்கு உதவியாகவிருக்கும். இந்தியர்களைவிட நமக்கு ஆள்கட்டு வேண்டும். அவர்கள் தலைவனைச்சேர்த்து ஆறுபேர்களிருக்கிறார்களென்று உங்களுக்கு ஞாபகம் இருக்கலாமே. இப்போது நாம் கணக்குப் பார்ப்போம். நீங்கள் ஒன்று, மார்ட்டின் இரண்டு, நான் மூன்று; காப்ட்டின்ஸிங்க்ளேரும் போர்வீரரும் சேர்ந்து ஆறாகும்; இதோடு சிறிய கிரேவ்ஸையும் மெரிடித்தையும் சேர்த்தால் மொத்தம் எட்டாகின்றது. இதுபோதும், ஐயா! அளவுக்கு மிஞ்சினாலும் இடையூறுகளேற்படும். மிஸ்டர் ஹென்றி இங்கேயேதானிருக்கவேண்டும். அப்படியேதான் ஜானும், ஏனெனில் நாம் புறப்படுவதற்குள் அவன் வீடுவந்து சேரமாட்டான். அதுமட்டில் நான் வருத்தப்படுகிறேன்—ஏனெனில் அவன் என்னுடன் இருந்தால் எனக்கு மிகவும் திருப்தியாயிருக்கும்."

"அதற்கு நாமென்ன செய்கிறது?" என்றான் ஆல்ப்ரெட். "சரி, மார்ட்டினும் நானும் உடனே திரும்பிப்போகின்றோம்; இரண்டுமணி நேரத்திற்குள் முடிந்தால் காப்ட்டின் ஸிங்க்ளேருடன் திரும்பி வந்துவிடுகிறோம்."

"எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச்செய்யுங்கள். அதற்குள் மார்ட்டினும் பயணத்துக்கு வேண்டிய சாமான்களை எல்லாம் சேகரம் செய்யட்டும். துப்பாக்கிகளைச் சுடுவதற்கு அதிகமாக இடம் அகப்படாததால், உணவுக்கு வேண்டிய ஜாக்கிரதை எல்லாம் நாம் செய்துகொள்ளவேண்டும்."

ஆல்ப்ரெட் புறப்பட்டு விரைவாகச் சென்றுவிட்டான். மலாச்சி மார்ட்டினுக்குச் சில திட்டங்களைச் சொல்லியனுப்பினான். பிறகு மலாச்சியும் ஸ்ட்ராபெர்ரியும் சுவட்டைத் தேடக்கிளம்பி, அதைத் தொடர்ந்து அடர்ந்த காட்டின் வழியாக ஒருமணிநேரம் சென்று கடைசியில் நெருப்பு மூட்-



டியிருந்த ஓர் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே
காலடிகள் மிதிபட்டிருந்தபடியால் அந்தக் கூட்டம் அங்கே
தங்கியிருந்திருக்கவேண்டுமென்று தெரியவந்தது.

"பட்டாளம் முழுவதும் அடைந்திருந்த இடம் இது
தான்," என்றுமலாச்சி சுற்றிப் பார்த்துக்கொண்டு
சொன்னான்.

ஸ்தலத்தை நன்றாக உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த
ஸ்ட்ராபெர்ரி, "இதோ அவளது காலடி," என்றாள்.

"சரி, சரி; இப்போதெல்லாம் தெளிவாகத் தெரிகின்
றது. மற்றவர்கள் இங்கேயே காத்திருக்க, இரண்டு பேர்கள்
அவளைத் தூக்கிக்கொண்டு இவ்விடம் வந்து சேர்ந்ததும்,
எல்லாருமாகச் சேர்ந்து இவ்விடமிருந்து புறப்பட்டுப்போயி
ருக்கவேண்டும். இனி நாம் புதுச் சுவட்டைக் கண்டுபிடிக்க
வேண்டும்; அதைத் தடுக்க அவர்கள் எல்லாப் பிரயத்தினங்
களையுமெடுத்துக் கொண்டிருப்பார்களென்பதில் சந்தேக
மில்லை."

நெருப்புமூட்டி இருந்த இடத்திற்குச் சமீபத்தில் ஒரு
அடையாளத்தைக்காட்டி ஸ்ட்ராபெர்ரி, "ஓர் இந்தியப்பெண்
ணின் காலுறை," என்றாள்.

"ரொம்ப உத்தமம்; அவளும் அப்போது அவர்களு
டனே இருக்கிறாள்—அவ்வளவும் நல்லதே," என்றான்
மலாச்சி; "ஏனெனில் அவள் கடிதத்தை எனக்கனுப்பியபடி
யால், அவளுக்கின்னமும் மனமிருந்தால் நமக்கு உபகாரம்
செய்யலாம்."

## அத்தியாயம் 37.

ஆல்ப்ரெட் கோட்டைக்குப் புறப்பட்டுப் போவதற்கு
முன் தன்னுடைய தாய்தந்தையருடன் நடந்ததைச் சங்கிர
கமாகச் சொல்லி, மேரியை யாரோ கொண்டுபோய் விட்டா

னென்றும், ஆங்கிரீஸ்நேக்கின்மேல் மலாச்சியும் மார்ட்டினும் சந்தேகப்பட்டார்களென்றும் தெரியப்படுத்தினான்.

உடனே எம்மா அழுதுகொண்டு, “என்ன காரணத்தைக்கொண்டு அவன் செய்திருப்பான்?” என்றாள்.

“அவளைத்திரும்பக் கொண்டுவந்துவிட்டால் வெடிமருந்தும் குண்டும் கொடுப்பீர்களா என்று தண்டல்செய்வதற்குத்தான்,” என்றான் ஆல்ப்ரெட். “ஆகையால் அவளுக்குத் தீங்கு செய்வதற்காகவென்று பயப்பட யாதொரு காரணமுமில்லை. ஓர் இந்தியன் எந்தப் பெண்பிள்ளையாயிருந்தாலுங்கூட மரியாதை தப்பி நடக்க மாட்டானென்பது நன்கு தெரிந்த விஷயமே. சரி; குதிரை வந்துவிட்டது. ஏறி நான் கோட்டைக்குச் செல்லவேண்டும்.”

மிகவும் மனம் பதறிக்கொண்டிருந்த மிஸிஸ் காம்பெல் “எல்லாம் சரி, நீ என்ன செய்யப்போகிறாய்?” என்றாள்.

“அம்மா! குதிரையின் மீதேறிக்கொண்டு கோட்டைக்குச் செல்லுகிறது. காப்ட்டின் ஸிங்க்ளேரை அழைத்து வந்து, உடனே அவர்களைத் தொடர்ந்து சென்று பிடிக்கப் பார்க்கிறது. நான் திரும்பி வருவதற்குள் மார்ட்டின் எல்லாவற்றையும் தயார் செய்திருப்பான். மலாச்சியும் ஸ்ட்ராபெர்ரியுமாகச் சுவடு தேடிப் பார்க்கப்போயிருக்கின்றார்கள். இனி நான் தாமதிக்கக்கூடாது; நான் சீக்கிரத்தில் திரும்பி வருகிறேன்.”

ஆல்ப்ரெட் உடனே குதிரையின்மேல் ஏறிக்கொண்டு கோட்டையை நோக்கி ஒரே பாய்ச்சலாகச் சென்றான்.

இடையில் பண்ணையில் இருந்தவர்கள் மனங்கலங்கித் துயரமுற்றிருந்தனர். ஆயினும் பிரயாணத்திற்கு வேண்டுமென்று மார்ட்டின் சொன்ன சாமான்களை எல்லாம் பரபரப்புடன் சேகரம் செய்தனர். உப்புப்போட்ட பன்றி இறைச்சியும், துப்பாக்கிகளும், அவைகளுக்குவேண்டியகுண்டுகளும் மருந்தும் தனித்தனிமூட்டைகளாகக் கட்டப்பட்டன.



“மார்ட்டின், நீயும் மலாச்சியும் சொல்வது போலவே நடந்திருக்கிறது, என்று வைத்துக்கொள்வோம். எனது எளிய மேரியை எவ்விடம் கொண்டு போவார்கள்?” என்றார் மிஸ்டர் காம்பெல்.

“நேராகத்தமது குடிசைகளுக்கே, ஐயா,” என்றான் மார்ட்டின்.

“அவை எவ்வளவு தூரத்திலிருக்கும் என்று சொல்ல முடியுமோ?” என்றாள் மிஸிஸ் காம்பெல்.

“பன்னிரண்டுநாள் பயணம்,” என்றான் மார்ட்டின்.

“ஆண்பிள்ளைத் தடியர்களுடன் நடைகொண்டு என் எளியகுழந்தைநடக்கமுடியுமோ?” என்றாள்மிஸிஸ்காம்பெல்.

“இருபது நாள்கள் பிடிக்கும் என்று நாம் வைத்துக் கொள்ளலாம்,” என்றான் மார்ட்டின்.

“மார்ட்டின், என் அக்காளை அவர்கள் ஏதேனும் தொந்தரவு செய்வார்களோ?” என்றாள் எம்மா.

“அம்மணி, அப்படியாதொன்றும் செய்வார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் அவள் நடக்கவேண்டி வரும். இரவில் அவளைக் கட்டிப்போடுவார்கள்,” என்றான் மார்ட்டின்.

“நீங்கள் போய்க் கேட்டதும் அவர்கள் ஸல்லிஸாகக் கொடுத்துவிடுவார்களோ?” என்றாள் எம்மா.

“அவர்களைக் கேட்கப் போகிறோமோ? அவளைப் பலவந்தமாய் மீட்டு வரப்போகிறோம்,” என்றான் மார்ட்டின்.

“ஐயோ! அப்போ ரணகளமாகுமே!” என்றாள் மிஸிஸ் காம்பெல்.

“அதற்கென்னசெய்வது? நாங்களாவது, அல்லது அவர்களாவதுமிஞ்சவேண்டும். ஒருகைபார்த்துவிடவேண்டாமா?”

“ஓ! தைவமே! காப்பாற்றவேண்டும். நான் இச்

சீமைக்கு வரும்போது எவ்வளவோ துன்பங்கள் வரலாமென்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால் இவ்விதமான சோதனைகள் ஏற்படும் என்று நினைத்ததே இல்லை! ஈசுவரா!" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"அம்மா! அவளை எப்படியாவது திருப்பிக்கொண்டு வந்துவிடுகிறோம். பயப்படாதேயுங்கள். நமது மலாச்சி இருக்கும்போது ஏன் கவலைப்படவேண்டும்? அவன் ஒரு சாதாரணமான இந்தியன் அல்லவே," என்றான் மார்ட்டின்.

இப்படிப் பேச்சு நடந்துகொண்டிருக்கையில் காப்ட்டின் சிங்களேரும் மற்றும் இரண்டு போர்வீரர்களும் ஆல்ப்ரெடுடன் குதிரைகளின் மேலேறிக்கொண்டு ஓரே பாய்ச்சலாகத்திரும்பிவருவதைக் கண்டார்கள்.

"ஐயோ! பாவம்! காப்ட்டின் ஸிங்க்ளேர்! அவருடைய உள்ளம் எவ்விதம் பதைக்கின்றதோ!" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"அவர் நிதானம் தவறாமல் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் காரியத்திற்கு இடைஞ்சல் நேரிடும்," என்றான் மார்ட்டின்.

ஆல்ப்ரெடும் காப்ட்டின் ஸிங்க்ளேரும் வந்திறங்கினார்கள். காட்டில் திரிந்து வழக்கமுள்ள இரண்டு போர்வீரர்களும் கூடவந்தார்கள். துப்பாக்கியைக் குறிவைத்தடிப்பதில் அவர்கள் வெகு சமர்த்தர்கள். உடனே அவ்வெழுவரும்புறப்பட்டு மலாச்சியையும் ஸ்ட்ராபெர்ரியையும் போய்ச் சேருவதற்காகச் சென்றனர்.

மலாச்சியும் ஸ்ட்ராபெர்ரியும் வீண்காலங் கழிக்கவில்லை. இடையில் அவள்மட்டும் குடிசைக்கு வந்து மலாச்சியின் வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு திரும்பிவந்து, அவ்விருவருமாகச் சென்றவுடன் ஒரு சிற்றாறு குறுக்கே ஓடுவதைக் கண்டார்கள். இங்கே சுவடு அழிந்துவிட்டது.



அக்கரையிலெங்கேபார்த்தாலும் ஒன்றுமகப்படவில்லை. சுவட்டைமறைப்பதற்காகவே இந்தியர்கள் ஆற்றோடுமேலேயோ அல்லது கீழேயோ, கொஞ்சதூரம் நடந்துசென்று பிறகு கரையில் ஏறி இருக்கவேண்டுமென்று ஊகிக்கக்கூடியதாயிருந்தது. ஆனால் ஆல்ப்ரெடும் மற்றவர்களும் வந்து சேரவேண்டியகாலம் கிட்டிவிட்டது, என்று தோன்றினபடியால் மலாச்சி ஆல்ப்ரெடையும் மார்ட்டினையும் விட்டுப் பிரிந்தவிடத்திற்குச் சென்றான். ஸ்ட்ராபெர்ரிமட்டும் சிற்றாற்றங்கரையோடு மேலுங்கீழுமாகச் சென்று மறைந்துபோன சுவட்டை மறுபடியும் கண்டுபிடிப்பதற்காகத் தேடிக்கொண்டிருந்தாள். மலாச்சியோடு அவர்கள் வந்துசேர்ந்தவுடன், எல்லாருமாக அந்தச் சிற்றாற்றங்கரைக்கு வந்து சேர்ந்தனர்.

ஸ்ட்ராபெர்ரியை அவ்விடம் காணாததால் கொஞ்சம் தாமதம் நேரிட்டது. அப்போது ஆகாரங்களையும்ஆயுதங்கள் முதலியவற்றையும் அவர்கள் பங்குபோட்டுக் கொண்டார்கள். காப்ட்டின் ஸிங்க்ளேரின் உள்ளம் எப்படிக் கொதித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று எளிதில் ஊகித்துக்கொள்ளலாம். உள்ளம் நொந்திருந்தாலும் மூளை தெளிவாகவேயிருந்தது. மேலே செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி வெகு கூர்மையான புத்தியுடன் கட்டளைசெய்தார். மலாச்சியுடன் கலந்துகொண்டு, எல்லாம் ஏற்பாடுசெய்யப் பெற்று, இந்தியப்பெண் எப்போது திரும்பிவருவாளென்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவள் கடைசியில் வந்துசேர்ந்து, சுவட்டை ஆற்றுக்குமேலே மூன்றுமைல் தூரத்தில் கண்டுபிடித்ததாகச் சொன்னாள். அதன்பேரில் உடனே எல்லாரும் கிளம்பினார்கள். முந்தியே பேசிக்கொண்டபடி ஒருவரும் சப்தம்செய்யாமல் அதற்குமேலொரு மைல் தூரம் சென்றார்கள். அப்போது காட்டின் நடுவிருந்த ஒரு காடழித்தவிடம் வந்துசேரவே, அங்கே புல்குட்டையாக

வும் காய்ந்துமிருந்தபடியால் மறுபடியும் வழிதப்பிப் போய் விட்டது. அந்தப்புல்வெளிக்கப்புறம் சென்று சுவடு தெரிகி றதாவென்று பார்க்கப் போனார்கள். ஆயினும் அரை மணி நேரம் தேடியும் அகப்படவில்லை. அப்பொழுது ஸ்ட்ராபெர்ரி யின் சீழ்க்கைச்சத்தம் காதில் விழுந்தது.

“அவர்கள் மறுபடியும் திரும்பிவிட்டார்கள்,” என்றாள் ஸ்ட்ராபெர்ரி; “பாருங்கள், காலுறையின் பதிவுகள் இரண்டு முகமாகவும் தெரிகின்றன,” என்றாள்.

இந்தியர்கள் இவர்களை ஏமாற்றும் வண்ணம் பொய்யா கப் போக்குக்காட்டி மறுபடியும் திரும்பிப்போன காலடிச் சுவடுகளைக் கண்டுபிடிக்க அரைமணிநேரமாய்விட்டது. பிறகு அவர்கள் புறப்பட்டுக் கிளம்பி, ஸ்ட்ராபெர்ரியால் வழிகாட் டப்பட்டு, ஓசைப்படாமல் நடந்து சென்றார்கள். அப்போது அவள் திடீரென்று நின்று மலாச்சியிடம் இந்தியபாஷையில் பேசிக்கொண்டு, ஒரு குத்துச்செடியில் ஒரு சிறிய கிளை முறிக்கப்பட்டிருந்ததைக் காட்டினாள்.

“சரி, இதேமாதிரி இனி கண்ணுக்குப் புலப்படுகிறதா என்று பார்ப்போம்,” என்றான் மலாச்சி.

சில நிமிஷத்திற்குள் ஸ்ட்ராபெர்ரி இன்னுமொன்றைக் காட்டினாள்.

“ரொம்பவும் சரி,” என்றான் மலாச்சி. “அவளுக்கிஷ் டமிருந்தால் நமக்குதவி செய்வாளென்று நான்தான் அப் பொழுதே சொன்னேனல்லவா? அவள் அப்படியே செய்தி ருக்கிறாள்,” என்று சொல்லிவிட்டு, காப்டின் கேம்பெல்லை யும் ஆல்ப்ரெடையும் பார்த்து, “அந்தக்கடிதத்தை எடு த்த இந்தியஸ்திரீ இன்னும் நமக்கு அனுகூலமாகவே இரு கின்றாள். பாருங்கள், ஐயா; இந்தியர்களுக்குத் தெரியாம இடம் கிடைத்த போதெல்லாம் நமக்கு வழி காட்டுவத காகச்சிறு கிளைகளை முறித்துப் போட்டுக்கொண்டுபோயிரு



கிறாள். இப்போது, இதேமாதிரி தொடர்ச்சியாகச் செய்து கொண்டுபோயிருந்தால் நமக்கு அதிகமாகச் சிரமமிராது.”

இம்மாதிரியாகச் சென்று பண்ணையிலிருந்து ஒன்பது மைல் தூரம் போய்ச்சேர்ந்தார்கள். அப்போது சூரியன் அஸ்தமித்து இருட்டிப்போய்விட்டது. இரவைக்கழிப்ப தற்காக அவர்கள் ஒரு பெரிய மரத்தடியில் படுத்தார்கள். காலஸ்திதி உஷ்ணமாக இருந்தது. ஏற்கனவே சமைக்கப் பட்ட பண்டங்களைக் கொண்டுவந்திருந்தனர். ஆதலால் நெருப்பு மூட்டவில்லை.

மறுநாட் காலை வெளிச்சமானதும் எழுந்து மிகவும் விரைவாகக் கொஞ்சம் ஆகாரத்தைச் சாப்பிட்டுவிட்டு, மறு படியும் புறப்பட்டார்கள். சுவடு இப்போது தெளிவாகத் தெரிந்ததோடுங்கூட ஆங்காங்கு ஒடிந்த கிளைகளும் ருஜுக் கொடுத்தன. இன்றையதினம் அவர்கள் நடந்தது பதினாறு மைல் தூரம். அதன் முடிவில் சுமார் பத்துமைல் நீளமும் ஒன்றரை மைல் அகலமும் உள்ள ஏரிகரைக்கு வந்து சேர்ந் தனர், காலடிச்சுவடு ஏரி ஓரம் வரையிற் போய்ப் பிறகு மறைந்துவிட்டது.

“இவ்விடத்தில் அவர்கள் ஜலத்தைக் கடந்திருக்க வேண்டும். ஆனால் இதைத் தாண்டுவதற்கு யாது சாதனம் இருந்திருக்கக் கூடும்?” என்றான் ஆல்ப்ரெட்.

“அதைத்தான் நாம் எவ்விதத்திலாவது கண்டுபிடிக்க வேண்டும்,” என்றான் மலாச்சி. “இல்லாவிட்டால் சுவட் டை நாம் மறுபடியும் கண்டுபிடிப்பது அசாத்தியமாய்விடும். ஒரு சமயம் நாளைக்குப் பார்த்துக்கொள்வோமே. இப்போது மிகவும் இருட்டாகஇருப்பதுமன்றி, இப்போது கரையோடு நாம் சுவட்டைத் தேடிச்சென்றால் இருக்கிறதும் கெட்டுப் போய்விடும். இரவில் நாம் சும்மாவிருப்போம். இன்னும் கொஞ்சம் மேலே சென்றால் அங்கே ஒரு கெட்டியான

கற்பாறை இருக்கின்றது. அதன் மறைவில் நெருப்பு மூட்டினால் இந்தியர்கள் அக்கரையிலிருந்தாற்கூட நாமிருப்பது தெரியாது. இன்றிரவே முடிந்தால் நம்முடைய ஆகாரங்களை எல்லாம் சமைத்துவிடவேண்டும்; ஏனெனில் இன்றைத்தினம் அவர்கள் அச்சிறுபெருமாட்டியுடன் நடந்திருக்கக்கூடியதைவிட அதிகமாக நாம் நடந்திருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் மறுபடியும் நமக்குச் சுவடுமட்டும் செம்மையாக அகப்பட்டுவிட்டால் சீக்கிரமாகவே அவர்களைப் போய்ப் பிடித்துவிடுவோம்."

"அவ்விதமே ஆண்டவன் அருள் செய்வாராக!" என்றார் காப்ட்டின் லிங்க்ளோர்; "என் எளியமேரி என்ன அவஸ்தைக்குள்ளாயிருப்பாளோ என்ற கவலை என்னைப் பித்தனாக்கிவிடுகிறது."

"ஐயா! இவளுடைய பாதங்கள் நொந்திருக்கும், சந்தேகமில்லை, ஆனால் அவளைச் சேஷ்டை யாதும் செய்யமாட்டார்கள், நீர் நிச்சயமாக இருக்கலாம்," என்றான் மலாச்சி.

காப்ட்டின் லிங்க்ளோர் பெருமூச்செறிந்தார். பதில் ஒன்றும் பேசவில்லை.

மலாச்சி காட்டின கற்பாறைக்கு வந்ததும் எல்லோரும் விறகு பொறுக்கிக் கொண்டுவந்து கொடுக்க ஸ்ட்ராபெர்ரியும் வேலைக்குவேண்டிய அளவு நெருப்பை மூட்டிவிட்டாள். அவர்களிடம் சமையல் செய்யப் பாத்திரங்கள் யாவையுமில்லாமற் போனாலும், பன்றி இறைச்சியைச் சில்லுச்சில்லாக நறுக்கிச் சிறு குச்சிகளின் நுனியிற் கோத்து நெருப்பில்வாட்டி, நன்றாக வேகவைத்து அன்றிரவு போஜனத்திற்குவேண்டியதைமட்டும் வெளியில் வைத்துக்கொண்டு எஞ்சியதைச் சிறுமூட்டைகளாகக் கட்டிவிட்டார்கள். சாப்பாடுமுடிந்து சம்பாஷணை செய்துகொண்டு நெருப்பைச்சுற்றிச் சுற்றி உட்கார்ந்துகொண்டு இந்தியர்களை எப்போது போய்ப்



பிடிக்கலாமென்பதைப் பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருந்தனர்; அப்போது மார்ட்டின் சரேலென்று கிளம்பி, துப்பாக்கியைச் சுடுவதற்குத் தயாராக வைத்துக்கொண்டு நின்றான்.

மார்ட்டின் சப்தம் செய்யக்கூடாதென்பதற்கு ஜாடையாக வாயில் விரலை வைத்துக்கொண்டு நின்றபடியால், ஆல்ப்ரெட் மெதுவான குரலுடன், "அஃதென்ன?" என்றான்.

"யாரோ இந்தியன் இந்தவழியாக வருகிறான்—அவன் அந்தப் பெரியமரத்தின் பின்னால் இருக்கின்றான்," என்றான் மார்ட்டின்; "இப்போது அவனது தலை எனக்கு நன்றாகத் தெரிகின்றது—ஆனால் இருட்டில் யாரென்று சொல்ல முடியவில்லை."

மார்ட்டின் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு தாழ்ந்த சீழ்க்கைச் சப்தம் கேட்டது. அது பற்களின் துவாரங்களால் அடிக்கப்பட்டுக் காதிற்கு விசித்திரமாகவே இருந்தது. உடனே ஸ்ட்ராபெர்ரி மார்ட்டினது துப்பாக்கியைத் தணித்துவிட்டு,

"அது ஜான்," என்று சொன்னாள்.

"ஜானா? இருக்கமுடியாது," என்றான் ஆல்ப்ரெட்.

"அவன்தான்," என்றாள் ஸ்ட்ராபெர்ரி. "அந்தச்சீழ்க்கையை நான் நன்றாக அறிவேன், அவனை அழைத்துவர நான் போகின்றேன். பயப்படாதேயுங்கள்."

ஸ்ட்ராபெர்ரி கிளம்பி மரத்தண்டை போய் ஜானுடைய பெயரை மெதுவான குரலுடன் அழைத்து, ஒரு க்ஷணத்திற்குள் ஜானைக் கையைப் பிடித்தழைத்துக் கொண்டு வந்தனள். அவனும் ஒருவார்த்தை கூடப் பேசாமல் நெருப்பண்டைவந்து ஓசைப்படாமல் உட்கார்ந்தான்.

"நல்லது, ஜான்! நீ எவ்விதம் இவ்விடம் வந்துசேர்ந்தாய்?" என்றான் ஆல்ப்ரெட்.

"சுவட்டைப் பார்த்துக்கொண்டு," என்றான் ஜான்.

"எப்போது வீட்டைவிட்டுக் கிளம்பினாய்?"

"நேற்றையதினம்; வீட்டுக்குத் திரும்பிவந்ததும்."

"ஆனால் உன்னுடைய தாய் தந்தையருக்கு நீ வந்தது தெரியுமோ?" என்றார் காப்டின் வில்க்ளேர்.

"கிரேவ்ஸ் கிழவனைக் கண்டேன். அவனுடன் சொல்லச் சொன்னேன்." என்றான் ஜான். "தின்பதற்கேதாயினும் இருக்கின்றதா?"

உடனே ஸ்டராபெர்ரி அவனுக்குக் கொஞ்சம் இறைச்சியைக் கொடுத்துக்கொண்டிருக்கையில், மார்ட்டின் "குழந்தை புறப்பட்டதுமுதல் ஒன்றையும் தொடாமலே வந்திருக்கிறான் என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன்," என்று சொல்லிவிட்டு, அவனைப்பார்த்து, "ஜான்! அப்படியல்லவோ?" என்றான்.

ஜான் வாயில் நிரம்ப அடைத்துக்கொண்டு "ஆம்," என்றான்.

"அவன் உண்ணட்டுமே," என்றாள் மலாச்சி; "ஒரு குழந்தை இரண்டு நாள் பட்டினி கிடப்பதென்றால் அது தகாது. நாம்போய்விட்டோமென்று தெரிந்துகொண்டவுடன் சாப்பாட்டைப் பற்றியே ஒன்றும் யோசியாமல் அவன் கிளம்பி வந்திருப்பானென்று நான் நிச்சயம் சொல்லுவேன். அவனப்படியே நேற்றையதினமே கிளம்பி வந்திராமற் போனால் நம்மை வந்து பிடித்திருக்கமுடியாது. ஆதலால் அவன் போஜனம் செய்யட்டும்; தொந்தரவு செய்யவேண்டாம்."

"மலாச்சி! வெகு ஆச்சரியமல்லவா இது?" என்றான் ஆல்ப்ரெட். "அவன் எவ்விதமாக வழி தேடிவந்து நம்மைக் கண்டுபிடித்தான்?"

"ஐயா! எனக்கே வெகு ஆச்சரியமாகத்தானிருக்கிறது. நான் மிகவும் சந்தோஷமடைகின்றேன்," என்றான் மலாச்சி. "ஒரு குழந்தைப்பிள்ளை தனக்குத்தானாகவே இவ்வ



ளவுதூரம் சமாளித்துக்கொண்டானென்பது ஒரு பெரிய வித்தையென்றே சொல்லவேண்டும். அவனிதைச் செய்தது எனக் கெவ்வளவு பெருமையாக விருக்கின்றது! ஆனால் முதல் முதலிலேயே அவன் ஒரு கைக்காரவனசராகிவிடு வானென்று நான் கண்டுகொண்டேன். நான் போட்ட புள்ளி தவறாமல் அவனும் நடந்துகொண்டுவிட்டான்."

"அதிலென்ன தடை? இவ்வளவுதூரம் செய்யக்கூடிய வர்கள் வெகுபேரிருக்க மாட்டார்கள்," என்றான் மார்ட்டின். மிஸ்டர் ஆல்ப்ரெட்! இந்தவேலையை இவன் எவ்வாறு செய்ய வல்லவன் ஆனான் என்று தங்களைப்போலவே நானும் அவ் வளவு ஆச்சரியப்படுகிறேன்—ஆனால் அவனுக்கந்தச் சக்தி பிறப்பிலேயே அமைந்துள்ளது போலும்."

"இருக்கட்டும்; நம்மைச் சந்திக்காதுபோனாலிந்த வனாந் தரங்களில் அவன் எவ்வாறு ஜீவித்திருப்பான்? ஏதோ ஆண் டவனதருளால் அவன் நம்மைக் கண்டுபிடித்தான்," என் றார் காப்டின் வில்க்ளேர்.

ஜான் தனது துப்பாக்கியின் குழாயைத் தட்டிக்காட்டி னான். அது அவனது பக்கத்திற் கிடந்ததைக் காப்டின் வில்க்ளேர் பார்க்கவில்லை.

"ஐயா! ஜான் தனதுதுப்பாக்கியில்லாமல் காட்டிற்குள்வரு வானென்று நீங்களெண்ணிவிட்டீர்களோ?" என்றான் மலாச்சி.

"அஃது அவனிடமிருந்ததை நான் கவனிக்கவில்லை," என்றார் காப்டின் வில்க்ளேர். "ஜான் இன்னானென்பதை யோசிக்காமல்தான் நான் பேசிவிட்டேன்."

ஜான் உணவருந்தி முடிந்ததும், அவர்களெல்லாரும் படுத்துத் தூங்கினார்கள். திடீரென்று யாரும் வந்து எதிர்க் காமலிருக்கும் வண்ணம் ஒருவனெப்பொழுதும் விழித்துக் கொண்டிருந்தான்.

பகல் வெளிச்சமானதும் அவர்கள் கொஞ்சம் தீனி

நின்றுவிட்டு, ஏரியின் ஓரத்தில் சுவடுமறைந்துபோனவிடத்திற்குச் சென்றார்கள். வெகுநாழி சோதித்துப்பார்த்துவிட்டு மலாச்சி ஸ்ட்ராபெர்ரியைக் கூப்பிட்டு ஜலத்தின் கோடியைக்காட்டிக்கொண்டு அவளையங்குப் பார்க்கும்படி சொன்னான். ஸ்ட்ராபெர்ரியும் அப்படியே பார்த்து, அங்கே கரையில் இழுத்துவைத்திருந்த ஒரு படகினடிப்பாகத்தினடையாளம் இருந்ததென்று தீர்மானித்தாள்.

"சரி, நானும் அப்படித்தான் நினைத்தேன்," என்றான் மலாச்சி.

"அவர்களோடு படகைக்கொண்டு வந்திருந்து, அதிலேறித் தாண்டிப்போயிருக்கிறார்கள். இப்போது நாம் ஏரியைச் சுற்றி நடந்துசென்று அவர்கள் இறங்கிப்போன சுவட்டைக் கண்டுபிடிக்க வேண்டும். அதனால் நாம் அரை நாள் பிந்தித்தான் போவோம்."

அவர்கள் உடனே ஏரிகரையோடு சுற்றி வழியைச் செம்மையாகச் சோதித்துக்கொண்டு அக்கரை போய்ச் சேர்ந்தார்கள். இது அவர்களுக்கு உச்சிப்போதுவரையில் பிடித்தது. அப்போதவர்கள் வந்துசேர்ந்தவிடம் முதல் நாளிரவில் நெருப்பு மூட்டின கற்பாறைக்கு நேரே எதிரில் இருந்தும், அடிச்சுவடு ஒன்றுமகப்படவில்லை.

"அவர்கள் நேராகக் குறுக்கே தாண்டினதாகத் தெரியவில்லை," என்றார் காப்டின்லிங்க்ளேர். "அது நன்கு விளங்குகின்றது. நாம் இன்னுங்கொஞ்சம் வடக்கேபோய்த் தேடவேண்டும்."

அப்படியே செய்ததில் அவர்கள் படகானது வடக்கு முனையில் கரை தாண்டினதாகக் கண்டுபிடித்தார்கள். அதை ஏரியின் கிழ்கரையோடு தள்ளிக்கொண்டு போயிருக்கவேண்டும். இறங்கின இடம் நன்றாகத் தெரிந்தது. படகு இழுத்துக் கரையேற்றப்பட்டவிடமும் கண்டுபிடிக்க முடிந்தது.



இப்போது சூரியன் சாய்ந்து விட்டபடியால் சுவட்டைத் தொடர்ந்து மேற்கேசெல்லுகிறதா அல்லது படகை ஒளித்து வைத்திருந்த இடமெங்கேயென்று தேடிச் செல்வதா என்ற சந்தேகம் வந்து விட்டது—ஏனெனில் திரும்பி வருகையில் அது தெரிந்திருப்பது பயன்படும். முதலில் படகைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது; அது இரண்டு மணி நேரம் பிடித்தது—கடைசியில் ஏரிகரையிலிருந்து ஒருமைல் தூரத்தில் ஒரு நாணல் புதரில் படகு ஒளித்துவைக்கப்பட்டிருந்தது. அவர்கள் மேலே இரண்டு மைல் தூரம் வரையில் சுவட்டைத் தொடர்ந்து சென்றனர். முன்போலவே சிறு கிளைகளை முறித்துப் போட்டிருந்தமையால், அவர்களுக்கு அது மிகவும் உதவியாய் இருந்தது. ஆயினும் இரவுக் கருக்கல் வரவர மூடிக்கொண்டது. ஒரு மேட்டுவெளிக்கு வந்து சேர்ந்து மரங்களின் கீழாகப் படுத்துறங்கினார்கள்.

பொழுது புலர்ந்ததும் அவர்கள் மறுபடியும் கிளம்பினார்கள்; இரண்டுமணி நேரம் நடந்தவுடன் ஒரு புற்காட்டின் வழியாகச் சுவட்டைத் தொடர்ந்து செல்லவேண்டியிருந்தமையால் அவர்கள் கொஞ்சம் சிரமப்பட்டார்கள். ஆனால் கடைசியில் காட்டிற்கு வந்ததும் இலகுவாக வழி கண்டுபிடித்துச் சென்றார்கள். முந்தியதைவிடச் சிறு கிளைகள் கிட்டக் கிட்ட முறிபட்டிருந்தமையால் அவர்களுக்கு விரைவாகச் செல்ல முடிந்தது. இன்று தினம் ஸ்ட்ராபெர்ரியால் கொண்டுவரப்பட்ட வில்லையும் அம்புகளையும் வைத்துக்கொண்டு மார்ட்டின் இரண்டு காட்டுக் கோழிகளைப் பிடித்தான். இது அவர்களுக்குப் பெரிய உதவியாகவிருந்தது. ஏனெனில் அவர்களிடமிருந்த ஆகாரம் எழெட்டு நாள்களுக்குமேல் காணாது. அதோடுகூட அவர்கள் இனி எவ்வளவு தினங்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருக்குமோ என்ப

தும் சொல்வதற்கு முடியவில்லை. இரவு நெருங்கிவிட்டது. அப்போது ஸ்ட்ராபெர்ரியின் பாம்புச் செவிபோல் கூரிய செவிகளில் யாரோ ஒருவர் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாற்போன்ற சப்தம் விழுந்தது. அவள் கடைசியில் தனது விரலால் ஒரு செடியைச் சுட்டிக்காட்டினாள்; அவர்களுடனே காலடிச் சப்தம் கேட்காமல் அவ்விடம் சென்று பார்த்தபோது செடியின் பின்புறத்தில் ஓர் இந்திய ஸ்திரீ ரத்தவளாறாய்க் கிடந்தாள். அவளைக் கிளப்பிப் பார்க்கையில் அவள் காற்சுளுக்குச்சிகித்ஸை செய்யப்பட்ட இந்தியஸ்திரீயென்று கண்டுகொண்டார்கள். அவள் இவர்களுக்காக வழி தெரிய வேண்டுமென்று சிறிய கிளைகளை முறித்துப்போட்டுக்கொண்டிருந்ததை இந்தியர்கள் கண்டுபிடித்திருக்கவேண்டும்; இல்லாவிட்டால் அவள் மண்டை அடிபட்டுப்பிளந்து கிடப்பதற்கு வேறு யாது காரணமுமில்லை. அது கோடரியின் கொண்டையடியால் செய்யப்பட்ட காயம். நல்லவேளையாக மண்டையோட்டின் வெளிப்பக்கமாகச் சீத்துக் கொண்டுபோய் மூளையிற் பாயவில்லை. ரத்தம் விசேஷமாகக் கொட்டியிருந்தமையால் அவர்கள் அவளைக் கண்டெடுத்தபோது அவளுக்கு ஸ்மரணையில்லாமலிருந்தது. உடனே தங்களுடைய துணிகளைக் கிழித்து கட்டுக் கட்டி, ரத்தப் பெருக்கை நிறுத்திவிட்டு, அவளது வாயில் கொஞ்சம் ஜலம் விட்டார்கள். அப்போது நன்றாக இருட்டிவிட்டபடியால் அன்றிரவு மேலே செல்ல முடியவில்லை. ஸ்ட்ராபெர்ரி காட்டிற்குள் சென்று சில மூலிகைகளைக் கொணர்ந்து காயத்தில் வைத்துக்கட்டி இன்னும் கிடைத்தவரையில் அவ்வெளிய இந்திய ஸ்திரீக்குச் சௌகரியம் செய்தாள். பிறகு எல்லோரும் படுக்கப்போனார்கள். அப்போது மலாச்சி ஆல்ப்ரெட்டை நோக்கி,

“ஐயா! இந்த இந்திய ஸ்திரீ நமக்கு வழி காட்டுவதற்காக அடையாளங்களைச் செய்து வந்தாளென்பதை இந்தியர்



கள் கையுங்களவுமாகக் கண்டுபிடித்து, அப்படிச் செய்ததற்காக அவளது மண்டையைக் கோடரியால் அடித்து, அவள்மாண்டுபோய்விட்டாளென்றெண்ணி அவளைப்போட்டுவிட்டுப் போய்விட்டார்களென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. காயம் பலமானதாக இருந்தாலும் பிராணனுக்கபாயமில்லையென்று எனக்குத் தோன்றுகிறது. ஸ்ட்ராபெர்ரியும் அப்படியேதான் சொல்லுகிறாள். ஆனால் நாளைத்தினம் எல்லாம் தெரிந்துபோம். அப்போதும் அவளுக்கு நினைவு வராமலிருந்தால் நாம் மேலே விரைவாகச் செல்லவேண்டியதுதான்—இங்கேயே தாமதித்து இருப்பதில் யாதொரு பயனுமில்லை,” என்றான்.

அவர்கள் மறுநாள் விழித்துக்கொண்டு பார்க்கையில் ஸ்ட்ராபெர்ரி ஏற்கனவே எழுந்து, அந்த இந்திய ஸ்திரீயின் பக்கத்தில் உட்கார்ந்திருந்ததைக் கண்டார்கள். அவளுக்கு நினைவு திரும்பிவந்து புத்தி தெளிந்திருந்தாலும், அவள் மிகவும் களைப்புற்றவளாயும், பலஹீனையாயும் இருந்தாள். மலாச்சியும் மார்ட்டினும் அவளிடம் சென்று இடையிடையில் அவளுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். மலாச்சி யெண்ணினது சரியே; ஆங்க்ரீஸ்நேக் அவளொரு கிளையை முறித்துக் கொண்டிருக்கையில் நேரில் கண்டுவிட்டான். உடனே அவளை மண்டையில் கோடரியாலடித்துக் கீழே தள்ளிவிட்டான். அவள் பேசினதிலிருந்து பின்வரும் சமாசாரத்தைத் தெரிந்துகொண்டார்கள். சிறிய நீர்ப்பூனையைப் பிடித்து வைத்துக்கொண்டார்களென்று கோபங்கொண்டு, அவனுக்குப் பதிலாக இன்னொருவரைப் பிடித்துவைத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து மேரி பார்ஸிவலைக் கொண்டு போய்விட்டார்கள். அவனுடன் ஆறு இந்தியர்களிருந்தார்கள். அவர்கள்தான் அவனுடனிருந்த முதிர்ந்த போர்வீரர்கள். அவர்கள் இப்போது ஒருநாள் பயணந்தான் முந்தியிருக்

தார்கள். மிஸ் பார்ஸிவலின் கால்கள் மிகவும் புண்ணாயிருந்தமையால் அவளை விரைவாகக் கொண்டுபோக முடியவில்லை. இதைத்தவிர மற்ற விஷயங்களில் அவள் ஒருவிதமாகவும் தொந்தரவு செய்யப்படவில்லை. இந்தியர்கள் தங்களுடைய வீட்டிற்கு நேர்வழியாகச் செல்லவில்லை. ஐந்தாறுநாள் பயணம் சுற்றுவழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள். ஏன் இப்படிச் செய்தனரென்றால், நடுவழியில் வேறு சில ஜாதியர்களிருந்தபடியால், அவர்கள் தப்புச் சொல்லிவிடுவார்களென்று பயந்தேதான். சென்ற இலையுதிர்காலத்தில் அந்த இந்தியக் காகிதம் எழுதினவள் அவள்தான். அவள் ஏன் அப்படிச் செய்யவேண்டும்? காட்டிற் காலொடிந்து கிடக்கும்போது மிஸ்டர் காம்பெல்லும் மிஸிஸ் காம்பெல்லும் அவளுக்கு உயிரைக்கொடுத்து, அவ்வளவு அன்புடன் அவளை ஆதரித்து அவளுக்குப் பூர்ண ஸுகம் உண்டாக்கி அனுப்பியதற்காக அவள் என்னசெய்தால்தான் தகாது? அவர்கள் வீட்டை விட்டுப் புறப்படும்போது பர்ஸிவல் ஸௌக்கியமாகத்தான் இருந்தான். ஆங்க்ரீஸ்நேக்குக்குத் திருப்தியுண்டாகும் வரையில் துப்பாக்கிகளும் குண்டும் மருந்தும் கிடைக்காமற் போனால் பர்ஸிவலை அவனே சுவீகாரம் செய்துகொள்வதாக உத்தேசம்—ஆங்க்ரீஸ்நேக் அவன்பேரில் அவ்வளவு ஆசை கொண்டிருக்கிறான். பையன் கவலையற்றுச் சுகமாகவிருந்தானா? என்று கேட்டதற்கு அவன் முதலில் அப்படியில்லாமற் போனாலும், வரவர அவனது புத்தி மாறிப்போய் இப்போது அவன் ஒரு இந்தியனாகவே ஆய்விட்டான் என்றாள். அவனை வீட்டை விட்டு வெளியிற் செல்லவிடுகிறது மிகவும் அரிது. அப்படிப் போனாலும், ஆங்க்ரீஸ்நேக் ஒருவனோடு கூடத்தான் போகலாம். குடிசைகள் எத்துணைத் தூரத்தில், எத்திசையிலிருந்தனவென்ற கேள்விக்கு அவைகள் குறுக்குவழியாற் சென்றால் இன்னும் ஏழுநாட் பயணதூரத்திலிருக்



கின்றனவென்று சொன்னாள். மிஸ் பார்ஸிவலைக் கூட்டிக்கொண்டு அவர்கள் இன்னும் பதினைந்து நாட்களில் வீடு போய்ச் சேருகின்றார்களோ என்னவோ—அதுவும் சந்தேகந்தான். நாளுக்குநாள் மிஸ் பார்ஸிவல் நகரக்கூடச் சக்தியற்றவளாய் இருந்தாள்.

இந்தச் சமாசாரமெல்லாம் தெரிந்தவுடன் எல்லோரும் கூடி ஆலோசனை செய்யவாரம்பித்தபோது, மலாச்சியைக் கேட்டுக் கொண்டதின்பேரில் அவன் சொன்னதாவது—

"எனது அபிப்பிராயம் யாதென்றால், இந்த ஸ்திரீக்கு உடம்பு சௌக்கியப்பட்டு, நடக்கமுடிந்து, குடிசைகளிருக்குமிடம்போக நமக்கு வழிகாட்டிச் செல்லத்தேகத்தில் பலம் வரும் வரையில் நாமிங்கேயே தங்கியிருத்தல் பொருத்தமாகும். இரண்டு மூன்று நாளில் அவள் நம்முன் நடந்துவரத் தயாராகிவிடுவாள்; அப்போது நாம்குறுக்கு வழியே சென்று அவர்களுக்கு முன்பேயே நாம் அவ்விடம்சென்று சேரலாம். அவ்விடம் போய்ச் சேர்ந்து அங்கிருக்கும் சந்து பொந்தெல்லாம் பரிசோதித்துப் பார்த்தால், அங்கே நாம் மறைந்திருப்பதற்கு நல்ல இடமகப்படாமற் போகாது. அப்படி நாம் மறைந்திருந்து அவர்கள் வீடுவந்து சேரும்போது நாம் அவர்களைச் சூழ்ந்து கொள்வோமானால் நமக்குச் சேதம் வாராமல் அவர்களை அடித்துவிட்டு மிஸ் பார்ஸிவலை நாம் விடுவித்துவிடலாம். நாம் மறைந்திருப்போமென்று ஸ்வப்நத்திலும் அவர்கள் நினைத்திரார்; ஏனெனில் இந்த இந்திய ஸ்திரீ உயிருடனிருப்பாளென்று அவர்களெப்படி நினைக்கக்கூடும்? கைக்கோடரியும் குறி தப்பினதுண்டோ?"

## அத்தியாயம் 38.

பலபேர்கள் பலவிதமாகச் சொன்னாலும், மலாச்சியின் யோஜனைதான் எல்லாவற்றிலும் யுக்தம் என்று கருதப்பட்டது. இந்தியப் பெண் சொன்னதும் அதற்கு ஒத்திருந்தது.

ஆகையால் இந்தியர்கள் தங்களைக் கண்டு விடுவார்களோ என்ற அச்சம் கொஞ்சமுமின்றி, இரை தேடப்போய் ஒரு மானைச் சுட்டுக் கொண்டுவந்து எல்லோரும் திருப்தியாகச் சாப்பிட்டார்கள். மரக்கிளைகளையும் தழைகளையும் கொண்டு ஒரு பர்ணசாலை விசாலமுள்ளதாய் இயற்றப் பெற்று, எல்லோரும் அவற்றுள் இரவைக் கழித்தார்கள். இந்தியப் பெண்ணும் விரைவாகத் தெளிவு அடைந்து கொண்டு வந்தாள்.

இம்மாதிரி காத்திருப்பதால் காப்ட்டின் லிங்க்ளேருக்கு மிகவும் அருவருப்பு உண்டாயிற்று. ஆனால் அதற்கு யாரென்ன செய்யக்கூடும்? அது தான் மிகவும் உசிதமான வழியென்று அவர் நன்குணர்ந்தமையால் அவர் அதற்குத் தடையொன்றும் சொல்லவில்லை. ஆதலால் ஆறுவது நாள் மறுபடியும் புறப்படுகிறதென்று எல்லோரும் ஒத்துக்கொண்டிருந்து அப்படியே செய்யப்பட்டது. வழியில் தாமதம் நேரிடக் கூடாதென்றும், ஆகாரம் சம்பாதிப்பதற்காகத் துப்பாக்கிகளை உபயோகப்படுத்தக் கூடாதென்றும், உப்பிட்ட இறைச்சி வற்றலையே மீத்துக் கைவசம் வைத்துக் கொண்டிருந்தபடியால் அதை எடுத்துக் கொண்டார்கள். முந்தின நாள் சாயங்காலம் கெட்டுப் போகாமல் வைத்து உபயோகிக்கக் கூடிய பன்றிஇறைச்சியைநெருப்பில் வாட்டிவைத்திருந்தமையால் அதையும்எடுத்துக்கொண்டு,இந்தியஸ்திரீயால் வழிகாட்டப் பட்டு,ஆங்க்ரீஸ்நேக்கின் ஆளுகைக் குட்பட்டிருந்த இந்தியர்களின் குடிசைகள் இருந்த திசையை நோக்கிக் குறுக்கு வழியாகச் சென்றார்கள். இனி இந்திய ஸ்திரீயின் உதவி இருந்தமையால் சுவட்டைத் தேடிப்போகும் கஷ்டம் நிவிர்த்தியாய் விட்டது.

இப்போது இவர்கள் ஒரு நாளைக்கு நடக்கக் கூடிய தூரம் இந்திய ஸ்திரீயின் நடையைப் பொறுத்திருந்தது. அவள்



உலைக்கட்டு இன்னும் அவிழ்த்தாகவில்லை. அவள் இன்னும் பலமற்றவளாகவே இருந்தாள். ஆனபோதிலும் ஒரு நாளுக்குள்ள நடையை நடந்து விட்டுத்தான் இராவிற்றங்கிப் படுத்தார்கள். இவ்வாறு ஆறு நாள் பிரயாணம் முடிந்த பிறகு, இரவில் தங்குவதற்காக ஏற்பாடு செய்து கொண்டிருக்கையில் இந்திய ஸ்திரீ அங்கிருந்து மூன்று மைல் தூரத்திற்குள்தான் அவர்கள் தேடிவந்த இந்தியக் குடிசைகளிருந்தனவென்று சொன்னாள். அதன் பேரில் மேலே செய்யவேண்டியதைப் பற்றி ஆலோசனை செய்வதற்காகக் கூடி அவர்கள் தீர்மானித்ததென்னவென்றால், "இந்திய ஸ்திரீயை வழிகாட்டச் சொல்லி இந்தியர்களின் குடிசைகளுக்குச் சமீபத்தில் நன்றாய் மறைந்திருக்கக் கூடிய ஓர் இடத்தில் எல்லோரும் மறைந்து கொள்ளவேண்டும். அங்கே வந்து சேர்ந்தவுடன் மலாச்சியும் அந்த ஸ்திரீயுமாகத் துப்புப் பார்க்கச் சென்று ஆங்க்ரீஸ்கேக்கும் அவனைச் சேர்ந்தவர்களும் மிஸ் பர்ஸிவலுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார்களா என்று அறிந்து வரவேண்டியது." இரவில் எல்லோரும் பகல் எப்போது விடியும் என்று விழித்துக் கொண்டிருந்தார்கள். விடிய வெகுநாழிகைக்கு முன்னேயே அவர்கள் புறப்பட்டு வெகு ஜாக்கிரதையுடன் சென்று, கடைசியாகக் குடிசைகளுக்குச் சமீபத்தில் ஓர் அடர்ந்த காசாஞ்செடிப் புதரில் இந்திய ஸ்திரீயால் வழிகாட்டப் பட்டுவந்து சேர்ந்தார்கள். அதில் மறைந்து இருந்தால் கண்டுபிடிப்பது அசாத்தியம். அதற்கும் குடிசைகளுக்கும் தூரம் நூற்றைம்பது கஜங்களே.

பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் மலாச்சியும் அந்த இந்திய ஸ்திரீயுமாகத் தவழ்ந்து கொண்டே செவிகொடுத்துக் கவனித்துக் கொண்டு மேலாக விஷயங்களைத் தெரிந்து கொண்டு வருவதற்காகச் சென்றார்கள். அப்போது மற்ற

வர்கள் குடிசைகளிலேயே கண்ணாக இருந்து, சூரியன் கிளம்பினவுடன் யார் வெளிக்கிளம்பி வருவார்களென்று உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தனர்; ஏனெனில் அவர்கள் ஒளியும் இடத்திற்கு வந்து சேரும் பொழுது இன்னும் பொழுது விடியவில்லை. அவர்கள் வந்து சேர்ந்து அரை மணியானதும் ஓர் இந்தியன் ஒரு குடிசையிலிருந்து வெளியில் வந்திருந்ததைக் கண்டார்கள். இந்தியரின் வழக்கம் போல் அவன் தோலாற் செய்யப்பட்ட காற்சராயும், ஷர்ட்டும் போட்டுக் கொண்டிருந்ததோடு கைகளில் வில்லும் அம்புகளும் உடையவனாயிருந்தான். இடது காதிற்கு மேல் தலைமயிரில் ஒரு கழுகிறகைச் செருகிக் கொண்டிருந்தான். அது ஒரு தலைவனுடைய புத்ரன் என்பதைக் காட்டு மடையாளம்.

அவனைப் பார்த்தவுடன் ஜான், "அவன் எனது சகோதரன் பர்ஸிவல்" என்று மெதுவாகச் சொன்னான்.

"பர்ஸிவலா!" என்றான் ஆல்ப்ரெட்; "அப்படியிருக்க முடியுமா?"

"ஆம்," என்றாள் ஸ்ட்ராபெர்ரி; "அவன் பர்ஸிவல்தான்; ஆனால் நீங்களவ்வளவு உரக்கப் பேசக்கூடாது"

"இஃதென்ன ஆச்சரியம்! அவனையொரு சரியான இந்தியனாகவே மாற்றி விட்டார்களே!" என்றான் ஆல்ப்ரெட். "நாம் இனிமேல் அவனை ஒரு வெள்ளைக்காரனாக மாற்றியாகவேண்டுமே" ?

அவன் உள்ளபடி பர்ஸிவல் தான். சற்றுநேரம் அங்குமிங்கும் பார்த்து விட்டு, கடைசியாகத் தலைக்கு மேலே ஒரு காகம் பறப்பதைக் கண்டு, அவன் வில்லை நாணேற்றவே, அப்பறவை அடிபட்டு அவனது காலின் கீழ் விழுந்தது.

"முதற்றரமான அடி," என்றார் காப்டின் ஸிங்க்ளேர்; "எதெப்படிப் போனாலும் அந்தப்பையன் ஏதோகொஞ்சம் கற்றுக்கொண்டான். ஜான்? உன்னாலே அது முடியாதே?"



"முடியாது தான்," என்றான் ஜான். "ஆனால் அவனுக்கின்னும் துப்பாக்கி வேலை கற்றுக் கொடுக்கவில்லையே?"

இன்னும் கொஞ்ச நேரம் கழித்து, ஓர் இந்திய ஸ்திரீயும் பிறகு ஒரு கிழ இந்தியனும் வெளியில் வந்தார்கள்; இன்னும் கால் மணி நேரத்திற்கெல்லாம் மூன்று ஸ்திரீகளும் இருபது வயதுள்ள ஒரு இந்தியச் சிறுவனும் வந்தார்கள்.

"இங்கே இருக்கும் ஆள்கள் இவ்வளவு தானென்று தோன்றுகிறது," என்றான் மார்ட்டின்.

"ஆம், எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது," என்றார் காப்டின் ஸிங்க்ளேர்; "மலாச்சி திரும்பி வந்துவிடுவது நலம்; ஏனெனில் நமக்குத் தெரிந்ததை விட ஜாஸ்தியான சமாசாரம் அவனறிந்து வரப்போகிறான் என்று நான் நம்பவில்லை."

பிறகு அரை மணிநேரத்திற்கெல்லாம் மலாச்சியும் இந்திய ஸ்திரீயும் திரும்பி வந்தார்கள்.

குடிசைகளைச் சுற்றியிருந்த புறக் காட்டில் மார்பால் நகர்ந்துகொண்டு அவைகளுக்கு ஐம்பது கஜ தூரத்திற்குள் சென்றிருந்தார்கள். ஆனால் அதையும் விடச் சமீபத்தில் நெருங்கவில்லை. ஏனெனில் இந்திய ஸ்திரீ சொன்னதில் இரண்டு நாய்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தமையால், அவைகளுக்குத் தெரிந்துவிட்டால் அவைகள் காட்டிக் கொடுத்துவிடலாம். அந்த ஸ்திரீ இந்தியர்களின்னும் வரவில்லை என்பது நிச்சயம் என்று சொன்னமையால், மேலே செய்யவேண்டியதைப்பற்றி யோசனை செய்யப்பட்டது. குடிசைகளில் ஆள்கட்டு ஒன்றுமில்லையென்றே சொல்ல வேண்டும்—ஒரு கிழவன், இருபது வயதுள்ள ஒரு சிறுவன், நான்கு ஸ்திரீகள் இவர்களே. இவர்களைச் சுலபமாகப்பிடித்துக் கட்டிப்போட்டு விடலாம்; ஆனாலப்படிச்செய்வதால் இடையூறுகள்ஏற்படுமே. ஒருவர் தப்பித்தோடி விட்டாற்கூட வீடு வரும் இந்தியர்

களுக்குச் சமாசாரத்தைத் தெரியப்படுத்தி, அதனாலவர்கள் வீடு வந்து சேராமல் மிஸ் பர்ஸிவலோடு வேறு எங்கேயாவது ஓடிப்போய் விடமாட்டார்களா?

இவ்வாறு மலாச்சியும், காப்ட்டின் லிங்க்ளேரும், ஆல்ப்ரெடுமாகத் தர்க்கம் செய்து கொண்டிருக்கையில், நடுவில் குறுக்கிட்டு ஜான், "அவர்கள் வேட்டைக்காகக் வெளிக் கிளம்புகிறார்கள்—பர்ஸிவலும் இந்தியக் கிழவனும் சிறுவனும் அவர்கள் எல்லாருடைய கைகளிலும் அம்பும் வில்லும் இருக்கின்றன," என்றான்.

"ஆம், ஐயா! பையன் சொல்வது சரி, ஐயா!" என்றான் மலாச்சி. "இப்போது எனக்குத் தீர்மானமாகிவிட்டது. பெண் பிள்ளைகளுக்குத் தெரியாமல் ஆண் பிள்ளைகளைக் கைப்பற்றி விட இதுதான் சமயம். இவர்கள் அந்திக்குள் திரும்பி வீடு வராமல் இருப்பது சகஜமானதால், குடிசையிலிருக்கும் ஸ்திரீகளுக்குச் சந்தேகத்தை உண்டாக்காமலே நாம் இவர்களைச் சிறையாக்கி வைத்துக் கொள்ளலாம். பிற்பாடு பெண் பிள்ளைகளை என்ன செய்வதென்பதைப் பற்றித் தீர்மானித்துக் கொள்வோம்."

இது சரியான யோஜனை என்று, எல்லாரும் ஆமோதித்தார்கள்.

அவர்கள் இன்னும் கால்மணி நேரம் வரையில் மறைந்திருந்தார்கள். அப்போது அந்த இரண்டு இந்தியர்களும் பர்ஸிவலுமாகக் குடிசைகளுக்கெதிரிலிருந்த காலி இடத்தை விட்டுப் பக்கத்திலிருந்த காட்டிற்குள் நுழைந்துவிட்டார்கள். ஒளிந்திருந்தவர்களும்உடனேகிளம்பி அவர்களைத்தொடர்ந்து சமதூரத்தில் சென்றார்கள். மலாச்சியும் ஜானும் முந்திச் சென்றனர். அவர்கள் கண்ணில் படும்படியான தூரத்தில் ஆல்ப்ரெடும் மார்ட்டினும் பின் சென்றார்கள். மற்றவர்கள் மார்ட்டினுக்கும் ஆல்ப்ரெடுக்கும் பின்னால் அதே தூரத்திற்



சென்றார்கள். இம்மாதிரியாகக் காட்டில் ஒருமணி நேரம்
நடந்திருந்தபோது ஒரு மந்தை மான்கள் மலாச்சிக்கும்
ஜானுக்கும் பக்கத்தில் அம்புபோல் பாய்ந்தோடின. தங்களை
மறைத்துக்கொள்வதற்காக அவர்கள் உடனே கீழே படுத்து
விட்டார்கள். இதைப் பார்த்திருந்த மார்ட்டினும் ஆல்ப்
ரெடும் அப்படியே செய்தனர். மற்றவர்களும் ஸ்ட்ராபெர்ரி
ஜாடை செய்ததைக் கண்டு விட்டு அப்படியே செய்தனர்.
இஃதானவுடன் ஒருமான் அம்பால் தைக்கப்பட்டு மற்றவை
யோடின திசையில் ஓடிற்று. ஆனால் இரண்டு மூன்று தடவை
கிளம்பிக்கிளம்பிக்குதித்துவிட்டுத்தரையில்விழுந்துவிட்டது.
இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் வேட்டைக்காரர்களும் வந்து
சேர்ந்து, துடித்துக்கொண்டு தரையிற் கிடந்த மிருகத்
தண்டை ஓரிரண்டு நிமிஷம் பேசிக்கொண்டு நின்றுவிட்டு,
பிறகு அதைத் தோலுரித்துத் துண்டு போடுவதற்காகத்
தங்களுடைய கத்திகளை எடுத்தார்கள். அவர்களவ்வாறு
செய்துகொண்டிருக்கையில்,ஒருபக்கத்திலிருந்து மலாச்சியும்
ஜானும், மற்றொருபக்கத்திலிருந்து ஆல்ப்ரெடும்மார்ட்டினும்,
மூன்றாம் பக்கத்திலிருந்து மற்றவர்களுமாக அந்த இடத்தை
நோக்கி ஊர்ந்துகொண்டு நெருங்கி வந்தார்கள். ஆனாலவ்
வேடர்களை முழுவதும் வளைத்துக்கொள்வதென்றால், சில
மனிதர் பிரிந்து கிழக்கில் கொஞ்ச தூரத்திற் போயிருக்க
வேண்டியதவசியம். காப்ட்டின் லிங்க்ளேர் க்ரேவ்ஸையும்
போர்வீரரொருவனையும் ஓர் இடத்தைக்காட்டியங்கே ஊர்ந்து
கொண்டுபோய் மறைந்துகொண்டு, அவர் பிறகு ஒரு சங்கே
தம் செய்யப்போவதை எதிர்பார்க்கும்படி கட்டளையிட்டார்.
மூன்று பிரிவினர்களும் வர வரக் கிட்ட நெருங்கவே,
* ஓல்ட் ரேவன் ஏதோ கொஞ்சம் சஞ்சலப்பட்டவன்போலி
ருந்தான். சுற்றிலும் அங்குமிங்கும் பார்த்து, காதைத்
தரையில் வைத்துக் கவனித்தான்; அவனிவ்வாறு செய்த

* கிழ இந்தியன் பெயர்.

போதெல்லாம் அவர்களெல்லாரும் அசையாம விருந்து கொண்டு, மூச்சு விடுவதைக்கூட நிறுத்திவிட்டார்கள்.

காப்டின் ஸிங்க்ளேரைப்பார்த்து ஸ்ட்ராபெர்ரி, "ஒல்ட்ரேவன் சந்தேகம் கொண்டிருக்கிறானென்று இந்திய ஸ்திரீ சொல்லுகிறாள்; காட்டில் தனக்கருகில் யாரோ வேற்று மனிதர் வந்திருக்கிறாரென்று அவன் நிச்சயப் படுத்திக் கொண்டு விட்டான்; அவனுக்கெதிரில் அவள் போய் நிற்பது நலமென்று அவள் சொல்லுகிறாள்," என்றாள்.

"அவள் போகட்டும்," என்றார் காப்டின் ஸிங்க்ளேர்.

இந்தியஸ்திரீ உடனே எழுந்து இந்தியர்களிருந்த விடத்திற்குச் சென்றாள். அவர்களும் உடனே அவளை நோக்கித் திரும்பிக் கொண்டார்கள். அவள் அவர்களுடன் பேசினதைப்பார்த்தால், அவள் திரும்பிவந்ததெப்படி யென்பதைச் சொல்லிக்கொண்டிருந்தாற்போல் தோன்றிற்று. அதெப்படியாவது போகட்டும். தன் சேத்தியார்கள் நன்றாய் நெருங்கி வரும்வரையில் அவள் ஒல்ட்ரேவனோடு பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தமையால், மலாச்சி எழுந்தான்; உடனே மற்றவர்களுமப்படியே செய்து, அவர்கள் மேல் ஓடிவந்து பாய்ந்தனர். அவர்கள் திமிரப்பார்த்தும் பயன்படவில்லை. கடைசியாகக் கட்டுப்பட்டுப் போய்விட்டார்கள். ஆனாலதற்குள் போர் வீரனொருவனுக்கு இந்தியச் சிறுவனுடைய கத்தியால் பலமான காயம் விழுந்து விட்டது. இந்தியர்களுடைய கால்களையும் கைகளையும் நன்றாய் வட்டம்போட்டிறுக்கிக் கட்டியாய் விட்டது. பர்ஸிவல் மட்டும் இது வரையில் கட்டுப்படாம விருந்தபடியால் அவன் மறுபடியும் திமிறிக் கொண்டோடப் பார்த்தான். ஆதலால் மலாச்சியின் சொல்லைக் கேட்டு அவனையும் மற்றவர்களைப் போலவே கட்டிவிட்டார்கள்.

கைதிகளைக் கட்டியானவுடன் மார்ட்டினும் க்ரேவ்ஸனும் போர்வீரர்களும் மானிறைச்சியை யறுத்து வேக வைப்பதற்



குத் தயாராக்கினார்கள். ஸ்ட்ராபெர்ரியும் இந்திய ஸ்திரீயும் நெருப்பு மூட்டுவதற்காக விறகு கொண்டுவரப் போனார்கள். இதனிடையில் காப்டின் ஸிங்க்ளேர், ஆல்ப்ரெட், மலாச்சி, ஜான் இவர்கள் கைதிகளுக்குப் பக்கத்தில் காவலாக உட்கார்ந்திருந்தார்கள். ஐயோ, பாவம்! பர்ஸிவலும் கைகால்கள் கட்டப்பட்டிருந்தான். இல்லாவிட்டால் பறந்தோடி விடுவான் போலும். ஏறக்குறைய இரண்டு வருஷகாலமாகக் காட்டில் இந்தியரோடு இந்தியனாக இவன் வசித்து வந்துவிட்டான்; இடையில் ஒரு வெள்ளைக்காரன் முகத்தைக் கூடப் பார்த்தவனல்லன். ஆதலால் தனது பழைய வழக்கங்களும், ஞாபகங்களும் முற்றிலும் அழிபட்டுப்போய், தானும் ஓர் இந்திய வனவாஸி என்றுண்மையாகவே எண்ணும் படியாய் விட்டான். என்ன சொல்வது! மனிதன் தனது நாகரீகத்தை விட்டுச் சிலகாலம் விலகி இருந்தால், தனது பிறப்பு இயற்கை வாசனை எல்லாம் போய் மறுபடியும் காட்டாளாய்விடுவது எவ்வளவு சீக்கிரம்!

ஆல்ப்ரெட் கேட்ட கேள்விகட்கு ஒரு பதில்கூட அவன் சொல்லவில்லை. கேள்விகளின் பொருளைக்கூட அறியாதவன் போலப் பிரமித்து விழித்துக் கொண்டிருந்தான்.

"நான் பார்க்கிறேன், ஐயா!" என்றான் மலாச்சி; "நானவனோடுஇந்தியபாஷையிற் பேசுகிறேன்; அவனுக்கொருசமயம் சுய பாஷை மறந்திருக்கலாம். காட்டில் மட்டும் நாம் கொஞ்ச நாள் தனிமையாக வசித்துவிட்டால், எவ்வளவு சீக்கிரத்தில் மாறிக் காட்டாளாக ஆய் விடுகின்றோம்! என்ன ஆச்சரியம்!"

மலாச்சி பிறகு அவனோடு இந்தியபாஷையிற் பேசினான்; பர்ஸிவல் கொஞ்சநேரம் கவனித்துவிட்டுக் கடைசியில் அதே பாஷையில் பதில் சொன்னான்.

"அவனென்ன சொல்லுகிறான், மலாச்சி?" என்றான் ஆல்ப்ரெட்.

“அவன் தனது சரம சுலோகத்தைப் பாடுவதாகச் சொல்கின்றான். கடவுளைத் துதிக்கப் போகின்றான்; அவன் ஒரு போர்வீரனுடைய குமாரனும்—ஆதலாலொரு வீரன் சாவதைப்போல் சாகப் போகின்றானும்.”

“இஃதென்ன! பையன் முற்றிலும் மாறிவிட்டானே!” என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்; “இவ்வளவு சீக்கிரத்தில் இம்மாதிரி ஆய்விடுவது சாத்தியமா?”

“ஆம்; இளம்பிராயத்தில் வெகு சீக்கிரத்தில் இம்மாதிரி புத்தி மாறிவிடும். ஆனால், வீடு சென்று அவன் தாயாருடன் சேர்ந்து கொஞ்சம் காலம் கழித்தால் அது எளிதில் மாறியும் விடும். இதைச் சாதிப்பதில் ஸ்திரீகள் தான் வலியவர்கள். அவன் ஸ்ட்ராபெர்ரியுடன் சம்பாஷணை செய்து கொண்டிருக்கட்டும். ஆனாலும், நமது வேலை பூர்த்தியாக முடிகிற வரையில் அவனைக் கட்டித்தான் வைக்கவேண்டும்,” என்றான் மலாச்சி.

மலாச்சி ஸ்ட்ராபெர்ரியைக் கூப்பிட்டு, பார்ஸிவலுடன் அவனது வீட்டைப்பற்றியும் தாயாரைப் பற்றியும், பண்ணையைச் சேர்ந்த மற்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசும்படி சொன்னான்.

ஸ்ட்ராபெர்ரி பார்ஸிவலின் பக்கத்தி லுட்கார்ந்துகொண்டு, குயில்போன்ற தனது இழைந்த குரலுடன் இந்திய பாஷையில், அவனுடைய தாய் சந்தையரைப் பற்றியும், அத்தை மகளிரைப் பற்றியும் பேசினதோடு, வேட்டைக்குப் போயிருக்கும்போது அவனை இந்தியர்கள் எப்படிப் பிடித்துவிட்டார்களென்பதைப் பற்றியும், அவனுக்காக அவனது தாயார் எப்படி அழுதுகொண்டிருந்தாளென்பதைப் பற்றியும், அவன் காணாமற் போனதைப் பற்றி மற்றுமுள்ள எல்லோரும் எப்படி விசனப் பட்டார்களென்பதைப் பற்றியும் சொன்னாள். இம்மாதிரி அவனது பூர்வ வாழ்வைப் பற்றி ஒன்றுக்குப் பின்னொன்றை ஸ்ட்ராபெர்ரி கொஞ்ச நேரம் சொல்



லிக் கொண்டிருந்த பிறகு, அவனும் ஏதோ உற்றுக் கேட்பவன்போல் தோன்றினான். இம்மாதிரி தொடர்ச்சியாக ஸ்ட்ராபெர்ரி அவனுடன் ஒரு மணிநேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு, ஆல்ப்ரெட் மறுபடியு மவனைநோக்கி, “பார்ஸிவல்! என்னை நீ அறியவில்லையா?” என்றான்.

“தெரிகின்றது,” என்று பார்ஸிவல் இங்கிலீஷ்ப் பாஷையில் பதிற்சொன்னான். “நீ எனது அண்ணன் ஆல்ப்ரெட்.”

“இப்போது எல்லாம் ஒழுங்காய்விட்டன, ஐயா!” என்றான் மலாச்சி; “குழந்தைக்கு வரவர நினைவு திரும்பி வந்துகொண்டிருக்கின்றது. ஆனால் கட்டைமட்டுமிப்போது அவிழ்த்துவிடக் கூடாது. சற்றுநேரம் சென்று ஸ்ட்ராபெர்ரி அவனுடன் பேசுவாள்.”

பிறகு அவர்களெல்லோரும் சாப்பாட்டிற்கு உட்கார்ந்தார்கள். அவ்விரண்டு இந்தியர்களையும் கொஞ்சதூரத்திற்கப்பால் கொண்டுபோய் வைத்து, ஒரு போர்வீரனைக் காவலாகப் போட்டார்கள். ஆனால் பார்ஸிவலைக் கூடவே வைத்துக்கொண்டார்கள். ஜான் பார்ஸிவலின் பக்கத்தி லுட்கார்ந்துகொண்டு, மானிறைச்சித் துண்டொன்றை அறுத்து அவனது வாயினருகில் பிடித்துக் கொண்டு, “பார்ஸிவல், நாம் வீட்டிற்குத் திரும்பிப் போகும்போது உன் கைகள் அவிழ்த்து விடப்படும்; அதோடு கூட, இப்போதிருக்கின்ற வில் அம்புகளுக்குப் பதிலாக உனக்கொரு துப்பாக்கியைக் கொடுப்பார்கள், வா அப்பா! இதைச் சாப்பிடு,” என்றான்.

இவ்வளவு தூரம் ஜான் பேசினதே ஜாஸ்தி; ஆனால் அது நன்றாகப் போய்ப் பிடித்தது. ஏனெனில் பார்ஸிவல், தனது வாயைத் திறந்து, நிரம்ப ஜான் ஊட்டினதைத் தின்றான். போஜனம் செய்து முடிந்ததும், பிறகு செய்யவேண்டியதைப் பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. குடிசைகளில் தங்கியிருந்த ஸ்திரீகளையும் அப்போதே போய் பிடித்துக்

கட்டிப்போட்டு விடுவதா? அல்லது ஆங்க்ரீஸ்நேக்கும் அவனுடைய கூட்டத்தாரும் வந்து சேரும்வரையில் சும்மா இருப்பதா?

மலாச்சியின் அபிப்பிராயம் யாதென்றால், மறு நாள் வரையில் ஒன்றும் செய்யவேண்டாம். மேரிபர்ஸிவலைக் கொண்டுவரும் ஆங்க்ரீஸ்நேக்குக் கூட்டத்தார் எந்த க்ஷணத்திலும் திரும்பி வரலாம்; ஒருகால் இதற்குள்ளாகவே வந்து விட்டார்களோ, என்னவோ; அதை முன்னிட்டு இன்னும் கைதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டால்? உபத்திரவம் மிகுதியாகுமே? என்பது.

இது எல்லாருக்கும் உசிதம் என்று தோன்றிய படியால், திரும்பி வந்து தங்களால் இயற்றப் பட்டிருந்த பர்ண சாலையில் மறுபடியும் வந்து மறைந்தனர். அப்போது இருள் வரும் தருணம். கைது செய்யப்பட்ட இரு இந்தியர் களையும் சத்தம் போடா வண்ணம் வாயைக் கட்டி விட்டு எல்லோரும் உஷாராக இருந்தார்கள். பர்ஸிவல் வர வரக் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கி வருவதைப் பார்த்தமையால் அவனிடத்தில் இருந்த பயம் போய்விட்டது.

ஐந்து நிமிஷங்களுக் கெல்லாம் குடிசைகளுக்கு அப்புறத்திலிருந்து ஒரு பெரிய கூப்பாடு கேட்டது.

"அவர்கள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள்; அது அவர்களது ஸங்கேதக் கூச்சல்," என்றான் மார்ட்டின்.

காப்ட்டின் ஸிங்க்ளேர் திடீரென்று கிளம்பினார்.

"ஐயா, காப்ட்டின் ஸிங்க்ளேர்! தயவு செய்து பதறாதேயுங்கள். பொறுக்காவிட்டால் எல்லாவற்றையும், கெடுத்து விடுவார்கள்" என்றான் மலாச்சி.

"ஐயோ, ஆல்ப்ரெட்! அவள் இவ்வளவு சமீபத்தில் இருக்கிறாளே!" என்றார் ஸிங்க்ளேர்.

"ஆமடா, அப்பா! ஆனால் அவள் இன்னும் நெருங்க



உமக்குக் கிட்டவேண்டுமென்றால் நீர் அமரிக்கையாக இருத்தல் அவசியம்," என்றான் ஆல்ப்ரெட்.

"உள்ளதுதான்! நிரம்பவும் யுக்தம்," என்று பெருமூச்செறிந்துகொண்டு காப்ட்டின் ஸிங்க்ளேர் தம்மிடத்தில் அமர்ந்தார்.

பிறகு அரைமணி நேரத்தில் ஆங்க்ரீஸ்நேக்கும் அவன் கூட்டத்தாரும் காட்டுவழியாக வந்தார்கள். அவர்களில் நால்வர் கிளைகளாலமைக்கப் பெற்ற ஒரு தோளியைத் தூக்கி வருவதாகக் காணப்பட்டனர்.

மலாச்சி காப்ட்டின் ஸிங்க்ளேரைப் பார்த்து, "அவளுக்கு நடக்கமுடியவில்லை, ஐயா; ஆதலால் அவளை அவர்கள் தூக்கிக்கொண்டு வருகின்றனர். அவளுக்கு யாதொரு இடையூறும் அவர்களால் நேரிடாதென்று நான் சொல்லவில்லையா?" என்றான்.

"அவள் தோளியை விட்டிறங்கி வந்தவுடன் அவளை நான் ஒருதடவையாவது பார்த்தாற்றான் எனக்குத் திருப்தி உண்டாகும்," என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்.

இந்தியர்கள் சீக்கிரமாகவே திறந்த வெளியைக் கடந்து சென்று ஒரு குடிசையின் முன் போய் நின்றனர். மேரிபர்ஸிவல் இறக்கிவிடப்பட்டு, வெகு சிரமத்துடன் நடந்து கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள். அவளோடு இரண்டு இந்திய ஸ்திரீகளும் நுழைந்தனர்.

பிறகு ஆங்க்ரீஸ்நேக் மற்ற இரண்டு இந்திய ஸ்திரீகளோடு கொஞ்சம் பேசிவிட்டு, தனது கூட்டத்தாருடன் வேறொரு குடிசைக்குள் நுழைந்தான்.

"இது வரையில் எல்லாம் சரிதான்," என்றான் மலாச்சி; "அவளை இரண்டு பெண்பிள்ளைகளைக் காவல் போட்டு ஒரு தனிக் குடிசையில் வைத்துவிட்டான். ஆதலால் நாம் எதிர்க்கும்போது அவளைப் பற்றி நாம் பயப்பட வேண்டியதில்லை,

நாம் சீக்கிரத்தில் எதிர்க்கவேண்டியதும் அவசியம்; ஏனெனில் இருட்டு மூடிக்கொண்டால் அவர்களுள் யாராவது தப்பி ஓடிப்போய், நமக்குப் பிறகு ஓயாமல் இடையூறுகளைச் செய்துகொண்டே இருப்பார்கள்."

"நாம் உடனே செய்வோமே," என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர்.

"இல்லை, இல்லை, ஐயா! கூடாது; இன்னும் ஒன்றரை மணி பகல் வெளிச்சமிருக்கும்: ஒருமணிநேரம் நாம் பொறுத்திருக்க வேண்டும்; ஏனெனில் அவர்களுக்குத் தீனி யாதும் கைவசமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. அதோடு கூட மிஸ் பர்ஸிவலைத் தூக்கிக்கொண்டு வந்த சிரமத்தால் களைப்புற்றிருப்பார்கள்; ஆனதுபற்றி, இந்தியர்களின் வழக்கம்போல அவர்கள் படுத்துத் தூங்கிவிடலாம். ஆகையால் இன்னும் ஒருமணிநேரம் சென்றால்தான் நாமவர்களைஎதிர்த்து எளிதில் வேலையை முடித்துக் கொள்ளலாம்."

"மலாச்சி! நீ சொல்வதுதான் சரி," என்றான் ஆல்ப்ரெட். "ஸிங்க்ளேர்! உமது ஆத்திரத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும்."

"தணிக்கவேண்டு மென்றுதான் தோன்றுகிறது," என்றார் காப்ட்டின் ஸிங்க்ளேர். "ஆயினும் இந்த ஒரு மணி போவது ஒரு யுகமாயிருக்கும். காரியம் ஏதாவது செய்து கொண்டிருந்தாலும் கொஞ்சம் ஆறுதலாயிருக்கும். எங்கே, பார்ப்போம் நமக்குக் கணக்கு ஆறுபேர் தானே?"

"துப்பாக்கிகளும் இரண்டுதான்," என்றான் ஆல்ப்ரெட்; "ஆதலால் நமக்கு ஜயத்தைப் பற்றி அதிகச் சந்தேகம் வேண்டாம்."

"முதலில் அவர்களெல்லோரும் சேர்ந்து ஒரே குடிசையில் இருக்கின்றார்களா என்று நாம் பார்க்கவேண்டும்," என்றான் மார்ட்டின்; "ஏனெனில் அவர்கள் தனித் தனியாக இருந்தால் நாமும் தனித் தனியாகப் பிரிந்து போக வேண்டியிருக்கும். கைதிகளுக்குக் காவல் யாரிருக்கிறது?"



"நான் மாட்டேன்," என்று ஜான் கண்டித்துச் சொன்னான்.

"ஜான்! நீதானிருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டால் நீதானிருக்க வேண்டும்," என்றான் ஆல்ப்ரெட்.

"ஐயா! அவனை விட்டுவிடுவது நலம்," என்றான் மலாச்சி. "ஏனெனில் துப்பாக்கிச் சப்தம் காதில் விழுந்தவுடன், அவன் கைதிகளை விட்டுவிட்டு ஓடிவந்து நம்முடன் சேர்ந்து விடுவான்; அதை நான் நிச்சயமாகச் சொல்வேன். வேண்டாம், ஐயா! ஸ்ட்ராபெர்ரியைக் கைதிகளுக்குக் காவலாகப் போடுவோம். எனது வேட்டைக் கத்தியை அவள் கையிற் கொடுக்கிறேன்; அது போதும்."

பின்னும் அரை மணி நேரம் வரையில் குடிசைகளிலேயே கண்ணுகைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் எங்கும் நிச்சப்தமாக இருந்தது. ஒருவர் கூட வெளியில் வரவில்லை. துப்பாக்கிகள் சரியாக இருக்கின்றனவா வென்று மறுபடியும் சோதித்துப் பார்த்துக்கொண்டு ஒவ்வொருவரும் தத்தமக்குக் குறிக்கப்பட்ட இடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர்—அதாவது குடிசைகளை வளைத்துக் கொண்டதோடு கூட, ஒருவருக்கொருவர் வேண்டியிருந்தால் தாங்கிக் கொள்ளும்படியான இடங்களிலும் நின்றார்கள். மேரி பர்ஸிவலுக்கு உதவி புரிவதற்காகவும், பெண் பிள்ளைகளைக் காவல் காப்பதற்காகவும், ஜான் நியமிக்கப் பெற்றான். ஆண் கைதிகளைக் காக்க ஸ்ட்ராபெர்ரி உருவிய கத்தியுடன் கண் கொட்டாமல் நின்று கொண்டிருந்தாள். மற்றவர்கள் மலாச்சியும் இந்திய ஸ்திரீயும் சென்ற பாதையாகவே மெல்ல ஊர்ந்து கொண்டு குடிசைகளிருக்குமிடத்தைக் குறிவைத்துச் சென்றனர். அவர்கள் வளைத்துக் கொண்டு நின்ற குடிசைக்குள்தான்

ஆங்க்ரீஸ்நேக்கும் அவன் கூட்டத்தாரும் இருந்தார்கள். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது—எனெனில் அங்கு நிச்சப்தமாக இருந்தது.

"நாம் முதலில் மிஸ் பர்ஸிவலை ஒரு சாவதானமுள்ள இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்போம்," என்று காப்ட்டின் ஸிங்க்ளேர் காதிற்குள் ரகசியமாகச் சொன்னார்.

"சரி, அப்போது அதைச் செய்ய நீரே போம்," என்றான் ஆல்ப்ரெட். "உம்மைச் சேர்க்காமலே நாங்கள் பெருந்தொகையினராயிருக்கின்றோம்."

காப்ட்டின் ஸிங்க்ளேர் மிஸ் பர்ஸிவலை வைத்திருந்த குடிசைக்குள் நுழைந்து கதவைத் திறந்தார். காப்ட்டின் ஸிங்க்ளேரைப் பார்த்தவுடன் ஒரு பெரிய ஆநந்த கோஷத்தைச் செய்துகொண்டு மேரி பர்ஸிவல் தன்னை விட்டிருந்த தோல் படுக்கையை விட்டு, ஒரே பாய்ச்சலில் ஓடி அவரது கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டாள். காப்ட்டின் ஸிங்க்ளேர் அவளைத் தமது கைகளில் ஏந்திக் கொண்டு குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்தார். அப்போது இந்திய ஸ்திரீகளில் ஒருத்தி அவரது சட்டையைப் பிடித்திழுத்தாள். ஆனால் இடையில் ஜானும் நுழைந்து விட்டபடியால், அவன் தனது துப்பாக்கியை அவ்விரண்டு இந்திய ஸ்திரீகளின் மண்டையை நோக்கிக் காட்டவே, அவர்கள் விட்டுவிட்டுப் பின்வாங்கி விட்டார்கள், காப்ட்டின் ஸிங்க்ளேர் மேரியைத் தூக்கிக் கொண்டு ஸ்ட்ராபெர்ரி இருக்குமிடம் கொண்டு போய்ச் சேர்த்தார். மேரி போட்ட கூச்சலால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த இந்தியர்கள் விழித்துக் கொண்டும், குடிசைக்குள் சப்தம் யாதும் கேட்காததால், மலாச்சிக்கும் ஆல்ப்ரெடுக்கும் அவர்கள் குடிசைக்குள் நுழைகின்றதா இல்லையா என்ற வாதம் நடந்து கொண்டிருக்கையிலே, குடிசைக் குள்ளிருந்து துப்பாக்கி வெடிகேட்டு, ஆல்ப்ரெடின்



பக்கத்தில் நின்றுகொண்டிருந்த போர்வீரன் கீழே சுருண்டு விழுந்து விட்டான். இன்னும் ஒரு வெடி சப்தம் கேட்டது. மார்ட்டினது மார்பிலும் ஒரு குண்டு பாய்ந்தது. உடனே ஆங்க்ரீஸ்நேக் வெளியில் வரவே, அவனது கூட்டத்தார்களும் பின்னே வந்தார்கள். தலைவன் கோடரியைச் சுற்றிக் கொண்டு மலாச்சியின் மேல் பாய்ந்தான். மற்றவர்கள் வாயிலினருகில் நின்றுகொண்டிருந்த ஆல்ப்ரெடையும் மார்ட்டினையும் எதிர்த்தார்கள். மலாச்சியினது துப்பாக்கியால் அடிபட்டு ஆங்க்ரீஸ்நேக் கீழே மடிந்து விழுந்தான். மற்ற இந்தியர்கள் உயிரைப் பாராட்டாமல் தைரியத்துடன் சண்டைபோட்டும், எதிர்ப்பவரெல்லோரும் ஒன்று சேர்ந்து வளைத்துக் கொண்டமையால் அவர்களின் ஆட்டம் பலிக்கவில்லை. ஆனால் அவர்களுள் உயிருடன் பிடிபட்டவர் இருவரே— அவர்களுக்கும் காயம் பலமாகவே இருந்தது. அவர்களை வடத்தைப் போட்டுக் கட்டிக் கீழே கிடத்தினார்கள்.

மலாச்சி ஆங்க்ரீஸ்நேக் உடலின் மீது நின்றுகொண்டு "ஐயா! இவன் வெகு கெட்டபயல்; ஆனால் இவன். காலம் இதோடு முடிந்தது." என்றான்,

"மார்ட்டின்! உனது காயம் வலுவோ?" என்றான் ஆல்ப்ரெட்,

"இல்லை, ஐயா; அவ்வளவாக இல்லை; குண்டு புகுந்து நேராக வெளியே போய்விட்டது. ஒரு எலும்பிலும் படவில்லை. அது எனது நற்காலந்தான். நான் ஸ்ட்ராபெர்ரியிடம் போய் இதைக் கட்டச்சொல்லுகிறேன்."

"அவன் முற்றிலும் மாண்டுவிட்டான், ஐயா" என்று க்ரேவ்ஸ் அடிபட்டு விழுந்த போர்வீரனைப் பார்த்துச் சொன்னான்.

"ஐயோ, பாவம்!" என்றான் ஆல்ப்ரெட். "அவர்களே முதலில் நம்மை வந்தெதிர்த்தது நல்லதாகப் போய்விட்டது.

"அப்படி அவர்கள் செய்திராவிட்டால் நான் எனது துப்பாக்கியை உபயோகித்திருப்பேனோஎன்னவோ."

"அவர்கள் நம்மிடத்தில் இரக்கத்தை எதிர்பார்க்கவே இல்லை," என்றான் மலாச்சி.

"அப்படியே இருக்கலாம்; போகட்டும்; ஸ்திரீகளை நாமென்ன செய்கின்றது? அவர்கள் ஒரு தீங்கும் செய்யமாட்டார்களே?"

"அதிகமாகச் செய்யமாட்டார்கள், ஐயா! ஆயினும் தீங்கு செய்வதற்கு அவர்களுக் கிடமில்லாமல் நாம் செய்துவிடவேண்டும். குடிசைகளில் அகப்படும் ஆயுதங்களை எல்லாம் நாம் கைவசம் செய்துகொள்ள வேண்டும். அவர்களது இரண்டு துப்பாக்கிகளும் நமது கைக்கு வந்துவிட்டன; ஆனால் அவர்களுடைய வில்லும் அம்பும் வேட்டைக் கத்திகளும் இருக்கின்றனவே. அவற்றை நாம் முறித்தாவது விடவேண்டும். ஜான்! அதை நீ பார்த்துக் கொள்ளுகிறாயா? க்ரேவ்ஸையும் அழைத்துக்கொண்டு போ."

"சரி," என்று ஜான் சொல்லிவிட்டு, க்ரேவ்ஸை அழைத்துக்கொண்டு குடிசைகளுள் சோதனை போட நுழைந்தான்.

போர் முடிந்தவுடன் புதரில் கைதிகளாக இருந்த இந்தியர்கள் ஒரு எச்சரிக்கையுடன் விடுதலை செய்யப்பட்டு, அவர்களும் காட்டிற்குள் புகுந்துகொண்டார்கள்.

மேரி பார்ஸிவலைக் கண்டவுடன் காப்ட்டின் ஸிங்க்ளேருக்கு உண்டான மனஉல்லாசத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? இறந்தவன் திரும்பி வந்தாற்போல் கிடைத்த குழந்தை பார்ஸிவலைத் தழுவி ஆநந்தபாஷ்பம் சொரியாத பேரும் அவருள் இருந்தார்களோ?

## அத்தியாயம் 39.

வந்தவர்களிலொருவராவது இரவில் நன்றாகத் தூங்க



வில்லை. செய்யவேண்டிய காரியங்களும் கவனிக்கவேண்டிய விஷயங்களும் மிகுதியாக இருந்தன. சொல்லாமலே தெரியலாம்—காப்ட்டின் ஸிங்க்ளேர் மேரி பார்ஸிவல் காரியமாகவே இருந்தார். அவர்கள் தங்குவதற்காகக் குடிசைகளுக்கு வந்து,மேரி இருப்பதற்காக ஓர் இடத்தைத் தயாரித்தபிறகு, ஸ்ட்ரா பெர்ரியைக் கைதிகளைக் காக்கும் பொறுப்பிலிருந்து விடுவித்தனர்.கைதிகளையும் குடிசைகளுக்கு அழைத்துவந்து தங்களுக்குச் சமீபத்தில் உட்காரவைத்துக் கொண்டார்கள். பார்ஸிவல் இதுவரையில் கட்டிலிருந்து, இப்பொழுது அவிழ்த்துவிடப்பட்டு, அங்குமிங்கும் போக ஆரம்பித்தான். ஆயினும் ஓர் ஆள் எப்போதும் அவன்மீது கண்ணாக இருந்துகொண்டு அவனோடு கூடவே போய்க் கொண்டிருந்தான். முதல் முதலில் அவனுடைய கண்ணில் விழுந்த வஸ்து யாதெனில் ஆங்க்ரீஸ்நேக்கின் சவம்.பார்ஸிவல் அதைக் கொஞ்சநேரம் பார்த்துவிட்டுப் பிறகு அதன் பக்கத்திலுட்கார்ந்தான். அங்கேயே பேசாமல் இரண்டுமணி நேரம் உட்கார்ந்திருந்தான். பிறகு அச்சவம் குழியிற் போட்டு மூடப்பட்டது. பார்ஸிவல் சவக்குழியின் பக்கத்தில் கொஞ்சநேரம் இருந்துவிட்டு, கடைசியில் காயப்பட்டுக் கிடந்த இரண்டு இந்தியர்களையும் திரும்பிப் பார்த்தான், அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்து, அவர்களுடன் இந்திய பாஷையில் பேசினான். இப்படி இருக்கையில் மேரி இன்னும் இவனைப் பார்க்காததால், அவனையழைத்து வரும்படி சொன்னாள். மேரியைக் கண்டதும் அவனுக்கு ஏதோ சொல்லத் தெரியாமல் வந்துவிட்டது. அவள் இவனைத் தழுவிக்கொண்டு தடவிக் கொடுத்து ஆற்றலாகப் பேசிக் கொண்டிருந்தபோது, பலவாறான உணர்ச்சிகளால் அவன் உள்ளங்கலங்கினவன் போல்கீழே படுத்துஅழுதுகொண்டே தூங்கிப் போய்விட்டான்.

ஆங்க்ரீஸ்நேக்கால் கொல்லப்பட்ட போர்வீரனை அவனைப் புதைப்பதற்கு முன்னால் புதைத்து விட்டார்கள். மார்ட்டினுடைய காயங்களையும் அவனுடைய மனைவியாகிய ஸ்டராபெர்ரி மருந்துபோட்டுக் கட்டினாள்; ஸ்ட்ராபெர்ரி இந்திய ரணசிகிச்சையில் கை தேர்ந்தவள்.

ரணத்தை ஆற்றக்கூடிய பச்சிலைகள் ஸ்ட்ராபெர்ரிக்குப் பல தெரிந்திருந்தமையால், மார்ட்டினின் காயம் மட்டு மல்லாமல் ரணங்கண்டிருந்த மேரியின் பாதங்களும் சீக்கிரமாகவே சொஸ்தமாக்கப் பட்டன. மறுநாள் காலையில் புறப்படுவதாக முன்னிரவு தீர்மானிக்கப் பட்டிருந்த போதிலும், மேரிக்குக் கால்நடை என்பது தற்சமயம் அசாத்தியமாக இருந்ததுடன் மார்ட்டினும் உதவிபுரிவதற்கியலாதவனாக இருந்தான்.

இப்போது வேலைக்கு லாயக்காக இருந்தவர் ஆறே பேர்கள். ஏனெனில் தூக்கும் வேலைக்கு ஜான் உதவியற்றவனாக இருந்தான். மேலும் பர்ஸிவலைப் பார்த்துக்கொள்ள ஒரு ஆள் வேண்டியிருந்தமையால் ஜானுக்கு அந்த அலுவல் இடப்பட்டிருந்தது. அதோடுகூட இரண்டு கைதிகளையும் பார்த்துக்கொள்ள ஆள் வேண்டியிருந்தது. ஆகையால் ஆள் சுருக்கத்தால் கொஞ்சம் கலக்கமுண்டாயிற்று. ஆயினும் மலாச்சி கிளைகளை இறுகக்கட்டி ஒரு தோளியை அமைத்து, அதை ஒரு கோலில் தொங்கவிட்டு, இரண்டு ஆள்கள் தூக்கிப் போகலாமென்று யோஜனை சொன்னான். மேலும் மேரிபர்ஸிவல் அவ்வளவு பெரிய பளுவான சுமையல்லள்; ஆதலால் அவளுக்கு மறுபடியும் நடக்கும் சக்தி வரும் வரையில் மாற்றி மாற்றித் தூக்கிக் கொண்டு போய், ஒவ்வொரு நாளும் கொஞ்சங் கொஞ்சமாகச் செல்லலாம்.

ஆல்ப்ரெட் இதற்கெல்லாம் சம்மதித்தமையால், விடியும் முன் காட்டிற்குட்புகுந்து மலாச்சிக் குதவியாகக் கிளைகளை



வெட்டிச் சேர்த்தான். அவர்கள் திரும்பி வருமுன் மற்றவர்களும் எழுந்துவிட்டார்கள். மேரிக்கு வலியெல்லாம் சொஸ்தமாய்விட்டதென்றே சொல்ல வேண்டும். எஞ்சியிருந்த உப்பிட்ட இறைச்சியைத் தின்றுவிட்டு, மேரியைத் தோளியில் போட்டுக்கொண்டு அந்த இரண்டு இந்தியக் கைதிகளுடன் முதல்நாள் அவர்களுக்குக் கொஞ்சதூரம் தான் போகமுடிந்தது. ஏனெனில் ஆகாரத்தைச் சம்பாதிப்பதற்காக அவர்கள் நடுவில் நிற்கவேண்டியிருந்தது. தூரத்திலிருந்து பார்த்தாற்கூட நன்கு தெரியக்கூடிய ஒரு பெரிய மரத்தடியில் மற்றவர்களை நிறுத்திவிட்டு, மலாச்சியும் ஆல்ப்ரெடும் மிருகவேட்டைக்குச் சென்றனர். ஒரு மானைக் கொன்று தூக்கிக்கொண்டு பொழுது முடிவில் வந்து சேர்ந்தனர். இரண்டுமைல் தூரத்திற்குத் தெற்கே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்ததென்றும், அது ஏரியிற் போய் விழுந்ததென்றும், இந்தியக் கூட்டத்தாருக்குச் சொந்தமாயுள்ள இரண்டு படகுகள் கரையோரத்தில் நாணற்புதரில் கட்டிவைக்கப் பட்டிருந்தன வென்றும் இந்தியஸ்திரீ தன்னிடம் சொன்னதாக ஸ்ட்ராபெர்ரி சொன்னாள். அஃது அகலமும் வேகமும் பொருந்திய ஆறானதால் அவர்கள் சீக்கிரமாகவே ஏரிக்குப் போய்ச் சேர்ந்து, அதன் கரையோரமாகவே படகைத் துடுப்புப் போட்டுத் தள்ளிக்கொண்டு பண்ணைக்குப் போய் விடலாம். இது நல்ல யோசனையாகத் தோன்றினது. ஏனெனில் இதனால் சீக்கிரமாகவே போய்ச் சேரலாம். அதெப்படியானாலும் மேரி முற்றிலும் சொஸ்தமாய் விடுவாள். ஆற்றிற்குச் சென்று படகு வழியாகப் போகவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

மறுநாட் காலையில் இந்தியஸ்திரீயின் உதவியைக் கொண்டு படகுகளைத் தேடிக் கண்டுபிடித்தார்கள். பிரயாணத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேடிச்சென்றவர்கள் ஏரா

ளமான மான் இறைச்சியைக் கொணர்ந்தார்கள். மற்றும் தே
வையாயிருந்த பொருள்களை எல்லாம் சேகரித்துக் கொண்டு
மறுநாள் காலையில் ஆற்றின்மேல் படகேறிச் சென்றார்கள்.

பர்ஸிவலுக்கும் வர வர, பழைய ஞாபகங்கள் திரும்பி
வந்துகொண்டிருந்தன.

அவர்கள் சென்று படகேறின ஆறு அப்போது ஐரோப்
பியர்களுக்கு இருக்கிறதென்றே தெரியாது. பிறகு தான்
அதற்குத் தேம்ஸ் என்று பெயரிடப் பெற்று, அதன் கரை
யிற் கட்டப்பட்ட நகரத்திற்கு லண்டன் என்ற பெயரும்
இடப்பட்டது. அது மிகுந்த வேகமுள்ள நேர்த்தியான ஒரு
சிற்றாறு. ஈரி என்று சொல்லப்பட்ட ஏரியின் மேற்பாகத்
தில் அது வந்து சேருகிறது. பகல் நேரத்தில் படகு தள்
ளிக்கொண்டும், சமைத்துப் போஜனம்செய்து தூங்குவதற்
காக இரவில் இறங்கிக்கொண்டும், இம்மாதிரியாக மூன்று
நாள் பிரயாணம் செய்துவிட்டு, நான்காவது நாளில் இன்னுங்
கொஞ்சம்இறைச்சி சம்பாதிப்பதற்காகத் தங்கி நிற்க வேண்
டியிருந்தது. இப்போது பண்ணைக்கு மேற்கில் இருநூறு
மைல் தூரத்திலிருந்தார்கள். இறைச்சியைக் கொஞ்சம் சேக
ரம் செய்துகொண்டு மறுநாள் ஏரியின் மேற்குமூலையில் பட
கேறினார்கள். மேரி பர்ஸிவலுக்கு உடம்பு இப்போது நன்
றாய்த் தெளிந்து,ஜலயாத்திரையும் வெகு ஆநந்தமாயிருந்தது.
அந்தப் பிரதேசத்தில் பச்சையும் பசுமையும் செழித்திருந்து
மிகவும் மனோகரமாயிருந்தது. ஏரிகரையோரமாக மரங்
கள் தழைந்து வளைந்து ஆனந்தமான நிழலைக் கொடுத்தன.
கரையோரத்தில் இந்தியர்களாவது, அவர்கள் குடிசைகளா
வது கண்ணிற்படவில்லை. சிலவிடங்களில் தண்ணீர் குடிக்க
வந்த மான்கள் படகைக் கண்டவுடன் திடுக்கிட்டுப் பிரமித்து
நாலுபக்கத்திலும் பறந்தோடின. ஒருபக்கத்தில் ஒரு பெரிய
மான் மந்தை குறுக்கே நீந்திக்கொண்டிருந்தது. அதன்



நடுவில் படகைச் செலுத்தி, வேண்டியவற்றை அடித்துக்
கொன்று, வீடுபோய்ச் சேரும்வரையில் போதுமான இறைச்
சியைக் கிரகித்துவைத்துக்கொண்டனர்.

ஏரி மேல் படகுபாத்திரையில் ஆறு நாட்கள் கடத்
தப்பட்டன. சீதோஷ்ணஸ்திதி மிதமாக இருந்ததுடன்
காற்றும் அமைதியுற்றிருந்தமையால், பிரயாணம் விரைவாக
வே நடந்துகொண்டு வந்தது. இரவில் கரையில் இறங்கித்
தங்குமிடங்களில் கொசுக்களின் உபத்திரவம் மிகுதியாக
விருந்தும், புகைபோடுவது முதலிய உபாயங்களால் அது
தணிக்கப்பெற்று, மொத்தத்தில் சுகமாகவே எல்லாமிருந்து
வந்தன.

ஆறுவதுநாள் ஸாயங்காலம் தூரத்தில் ப்ராண்டினுக்
கோட்டையைக் கண்டவுடன் அவர்களுக்கு உண்டான
சந்தோஷம் சொல்லிமுடியாது. நடுவிலிருந்த காட்டினால்
அவர்களது பண்ணை வீடு மறைபட்டிருந்தாலும், இன்னும்
நாலைந்து மைலுக்கு மேலில்லை என்று அவர்கள் நன்கறிந்
தார்கள். இன்னும் ஒருமணிக்குள்ளாகவே அவர்கள் தங்க
ளுடைய புற்காட்டு வெளிக்கு நேராக வந்துசேர்ந்து, அவர்
களுடைய தெப்பம் கட்டியிருந்த இடத்திற்கு வந்து கரை
யேறினார்கள். மிஸ்டர் காம்பெல்லும் மிஸிஸ் காம்பெல்லும்
படகுகள் வருவதைக் காணவில்லை; ஏனெனில் போனவர்கள்
எப்போது திரும்பி வருவார்களென்று கவலையுடன் ஒவ்வொரு
நாளும் அவர்கள் மேற்றிசையையே பார்த்துக்கொண்டிருந்
தாலும், அவர்களுடைய கவனம் தரைவழியிற் சென்றதே
யல்லாமல் ஜலத்தின் வழியாகத் திரும்பி வருவார்களென்று
சொப்பனத்திலும் எண்ணவில்லை.

“எனதரிய ஆல்ப்ரெட்!” என்றாள்மேரி, “எனது அத்தை
பர்ஸிவலைத் திடீரென்று பார்ப்பது உசிதமல்லவென்று எனக்
குத் தோன்றுகிறது. அவன் நேரில் வருவதற்கு முன்னே

அவளைக் கொஞ்சம் பதப்படுத்தி வைக்கவேண்டும். அவ
னிறந்துவிட்டானென்றுஅவள் வெகுகாலமாக எண்ணியிருக்
கிறபடியால், திடீரென்று பார்த்தால் இடிவிழுந்தாற்போல்
பிரமாதம் நேரிடலாம்.”

“எனதரிய மேரி! நீ சொல்வது சரியே. நாம் காப்ட்டின்
ஸிங்க்ளேர், மலாச்சி, ஜான், இவர்களோடு முன்னே செல்
வோம். மற்றவர்கள் தம் நடுவில் பர்ஸிவலை வைத்துச் சிறிது
பிந்தி வந்துகொண்டு மலாச்சியின் குடிசைக்குப் போகட்டும்.
நாம் மறுபடி போய் அழைத்துவரும் வரையில் அவன்
ஸ்ட்ராபெர்ரியோடு இருக்கட்டும்.”

வெகு சிரமப்பட்டுப் பர்ஸிவல் அதற்குச் சம்மதிக்க
மற்றவர்கள் மட்டும் வீட்டைநோக்கிச் சென்றார்கள். மிஸ்டர்
காம்பெல்லும் போனவர்கள் இன்னும் வரக்காணோமே என்ற
ஆவலுடன் காட்டுப்பக்கமாகவே உற்றுப் பார்த்துக்கொண்
டிருந்தமையால், யாத்திரிகர்களை முதல்முதல் கண்டு கூச்ச
லுடன் ஓடிவந்தது அவர்கள் வீட்டுநாய் ஆஸ்கரே. உடனே
காம்பெல்லர்கள் திரும்பிப் பார்க்கவே அவர்கள் மேரியுடன்
திரும்பி வருவதைக் கண்டவுடன், இவர்களும் பறந்து
கொண்டு சந்திக்கப்போகையில் மேரி ஒரு பாய்ச்சலில் ஓடி
தன் மாமன் மாமியின் கைகளில் வந்து விழுந்து மூழ்கிவிட்
டாள்.

எம்மா மட்டும் பிந்தி வந்துகொண்டிருந்தவர்களை உற்
றுப்பார்த்துக்கொண்டே இருந்தபடியால், பர்ஸிவலின் உரு
வத்தைக் கண்டவுடன், “மாமி!—” என்று அலற ஆரம்பிக்கு
முன் காப்ட்டின் ஸிங்க்ளேர் முகஜாடை செய்து அவளை
அடக்கி விட்டார்.

வீடுவந்து சேர்ந்ததும், ஆல்ப்ரெட் தாங்கள் போய்
காரியத்தை முடித்துக்கொண்டு வந்ததையும், இனி இந்தியர்
களிடமிருந்து பயத்திற்குக் காரணமில்லை என்பதையும்



சுருக்கமாகச் சொன்னான்.

“எனது வயிற்றில் பாலை வார்த்தாய் அப்பா!”என்றாள்
மிஸிஸ் காம்பெல். “கருணாகரக் கடவுளே வந்தனம்! எனது
கண்மணி மேரி! எனது குழந்தை போனாற்போல் நீயும்
போய்விட்டாயோ என்று துடித்துக் கொண்டிருந்தேன்
அம்மா! அவன் போயே போய்விட்டான்! என்ன செய்
கிறது? எல்லாம் தெய்வச்செயல்.”

“அம்மா! ஒரு ஆச்சரியமான செய்தியைச் சொல்லட்
டுமா?” என்றான் ஆல்ப்ரெட். “இந்தியர்களின் கையில் ஒரு
வெள்ளைக்காரப் பையன் அகப்பட்டிருக்கிறான் என்ற செய்தி
வழியிலெங்கள் செவியில் விழுந்தது.”

“ஐயோ! எனது குழந்தை யல்லவே.”

“நமது பர்ஸிவலாக இருக்கலாமென்பதற்கு அநேக
காரணங்களிருக்கின்றன; அவன் இன்னும் உயிருடனிருக்
கிறான் என்றே நான் நம்புகிறேன்.”

“எனதரிய ஆல்ப்ரெட்! நல்ல காரணங்களிருந்தா
லொழிய அப்படிச் சொல்லாதே; தாயின் மனமானது எப்
படிப் பட்டதென்று உனக்குத் தெரியாது. நீ சந்தேகமாகச்
சொன்ன சமாசாரத்திலிருந்தே எனதுள்ளம் எவ்வளவு
பதறிக் கொண்டிருக்கின்றதென்பதை நீ அறிவது கஷ்டம்;
ஏதோ தெய்வசங்கல்பம் என்றெனது மனதைத் திடப்படுத்
கொண்டேன். அதுமறுபடியும் கலங்கித்துடிக்கவேண்டாம்.”

“எனதரிய தாயே! சாத்தியமில்லாத விஷயத்தைப்
பற்றி உனக்கு ஆசைவார்த்தை சொல்லுவேனோ? அம்மா!
என்னை அப்படிக் கொடும் பாவியென்று நினையாதே.”

உடனே மிஸிஸ் காம்பெல் உடம்பெல்லாம் நடுங்கிக்
கொண்டு, ஆல்ப்ரெடின் புஜத்தை இறுகக் கட்டிக்கொண்டு,
“அப்படியானால் பர்ஸிவல் உயிரோடிருப்பது உனக்கு நேரில்
தெரிந்த விஷயமே!” என்று கதறினாள்.

"எனதரிய தாயே! சாந்தப் படுத்திக்கொள்—அவன் உயிரோடிருக்கிறானென்றும், இந்தியர்களிடம் அகப்பட்டிருப்பவன் அவன் தானென்றும் எனக்கு நிச்சயமாகத் தெரியும்; அவனை மறுபடியும் கொண்டுவந்து விடலாமென்று எனக்கு விசேஷமான தைரியமுமிருக்கின்றது."

"ஆண்டவனப்படியே அருள் செய்வாராக! ஆண்டவனது அருட்கடலுக்களவுண்டோ!" என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"ஆனந்தப் பூரிப்பால் எனது நெஞ்சம் வெடிக்கின்றது போலும்! பகவான் எனக்குத் தைரியத்தைக் கொடுப்பாராக! எனதரிய ஆல்ப்ரெட்! எங்கே பர்ஸிவல் இருக்கிறான்?" என்றாள். ஆல்ப்ரெட் ஒன்றும் பதில் பேசாமல் நின்றான். ஆயினும் அவளது உள்ளத்திற்கு ஆற்றல் வரும்படி கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் சொரிந்தது.

"எனது அன்புள்ள அம்மா! உனது பதைப்பு இன்னுங் கொஞ்சம் அடங்கினவுடன் எல்லாவற்றையும் விரிவாகச் சொல்லுகிறேன். எம்மா! நீ ஏன் என்னுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை?"

எம்மா தனது கையை ஆல்ப்ரெட்டிடம் நீட்டிக்கொண்டு "ஆல்ப்ரெட்! எனக்கிருந்த ஆனந்தப் பூரிப்பால் பேசமுடியவில்லை. ஆயினும் உன்னைத் திரும்ப அழைப்பதில் என்னைக் காட்டிலும் வேறொருவருக்கும் ஜாஸ்தியான சந்தோஷமிராதென்று நான் உறுதியாகச் சொல்லுகிறேன். மேரியை மீட்டுக்கொண்டு வந்ததற்காக யாரையும் விட நான் உன்னிடம் அதிக நன்றி பாராட்டுகிறவளாக இருக்கின்றேன்," என்றாள்.

"அப்பா, ஆல்ப்ரெட்! இப்போது சாந்தமாய்விட்டேன்," என்றாள் மிஸிஸ் காம்பெல். "ஆகலானுனக்குத் தெரிந்தவை முழுவதுமெனக்குச் சொல்லு."

"எனதரிய தாயே! நீ இப்பொழுது சாந்தமாயிருக்கிறாய் என்று நானே அறிகிறபடியால், பர்ஸிவல் கிட்டத்திலேயே



இருக்கிறானென்று சொல்லுகிறேன்."

"ஆல்ப்ரெட்! அவனிங்கேயே இருக்கின்றான். நான் நிச்சயமாகச் சொல்லுவேன்."

"அவன் மலாச்சியின் குடிசையில் ஸ்ட்ராபெர்ரியோடு இருக்கின்றான். ஒரு நொடியில் அவனைப்போய்க் கொண்டு வருகிறேன்."

ஆல்ப்ரெட் போய்விட்டான். இந்தச் சமாசாரத்தைக் கேட்டவுடன் மிஸிஸ் காம்பெல்லுக்குத் தாங்கமுடியாத மனவெறி உண்டாய்விட்டது. மேரியும் எம்மாவும் ஓடிப்போய் அவளைப் பிடித்துத் தாங்கிக் கொண்டார்கள். ஒரு நிமிஷத்திற்குள் பர்ஸிவலை அழைத்துக்கொண்டு ஆல்ப்ரெட் திரும்ப வந்ததும், தாயார் மகனைக் கட்டித் தழுவிக்கொண்டு கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருகவிட்டுக்கொண்டழுதாள். பிறகு குழந்தை தகப்பன் கையிற் கொடுக்கப்பட்டான்.

"இதெப்படி சம்பவித்ததென்றும், பகவான் எப்படிக் கருணையைக் காட்டிக் குழந்தையைக் காப்பாற்றி நமது கையில் மறுபடியும் கொண்டுவந்து கொடுத்தாரென்றும் இன்னும் நமக்குத் தெரியவில்லை," என்று மிஸ்டர் காம்பெல் உள்ளம் சாந்தமானவுடன் சொன்னார். "ஆயினும் இப்போது நமக்கு நிச்சயமாகத் தெரிந்திருப்பது யாதெனில் இதற்கெல்லாம் காரணம் பகவானுடைய கிருபைதான். நமதுள்ளம் குன்றுவதற்கு முன்னாலேயே நாம் மனமாரப் பகவானுக்கு வந்தனை செய்வோம். அவரும் கிருபை கூர்ந்து அதை அங்கீகரிப்பாராக."

இப்படிப் பேசிக்கொண்டே, மிஸ்டர் காம்பெல் தரையில் முட்டி போட்டுக்கொண்டு ஆண்டவனைத் தொழுவாரம்பித்துப் பிரார்த்தித்ததாவது—"கருணாநிதியே! எங்களுக்கு வந்த விபத்துகள் அவ்வளவு பெரிதல்ல. அவைகள் நிவிர்த்தியான விதங்களையும், நாங்கள் இழந்த இரண்டு கண்களையும் திரும்பி

அடைந்தவழிகளையும் நினைக்க நினைக்க எங்களது உள்ளங்கள் உருகுகின்றன. உனது அரிய அருளில்லாது எங்களுக்கு அவை கிட்டி இரா. இன்னும் ஒன்றை எங்களுக்குத் தந்து அருள் செய்வாயாக—இச்சம்பவங்களுக் கெல்லாம் மூல காரணம் நீயே என்ற நன்றி அறிவு எங்களது உள்ளத்தை எப்போதும் பூரிக்கச் செய்யுமாக!"

மார்ட்டின் ரணமுற்றிருந்து அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தான் என்பதைக் கேட்டவுடன் மிஸ்டர் காம்பெல் உடனே மலாச்சியின் குடிசைக்குச் சென்று ஸ்ட்ராபெர்ரியால் சிகிச்சை செய்யப் பெற்று வந்த மார்ட்டினண்டை நெருங்கிச் சென்று அவனது கைகளை இறுகப் பிடித்துக் குலுக்கித் தனது மனமார்ந்த வந்தனங்களைச் சொல்லி, அவனது ரண அவஸ்தையைக் கண்டு ஆற்றலைத் தரும்படியான வார்த்தைகளைச் சொல்லிவிட்டுத் திரும்பி வந்து தன் மனையாளுடன் இருந்த கூட்டத்தாரைச் சேர்ந்து கொண்டார். கோட்டையிலிருந்து வந்த போராள் ஒருவன் உயிர் மாண்டதைப் பற்றிக் காப்ட்டின் ஸிங்க்ளேருடன் துக்கப் பிரச்னம் செய்துவிட்டு, அம் மாண்ட வீரனுடைய மனைவி, குழந்தை இவர்களுடைய க்ஷேமத்தைக் கருதிக் காப்ட்டின் ஸிங்க்ளேர் ஏற்கனவே உத்தேசித்து வைத்திருந்த யோகக்ஷேம ஏற்பாட்டை அறிந்து மெச்சிக்கொண்டு, மேரியின் கதையைக் கேட்க உள்ள ஆவலைத் தெரிவித்தார். உடனே அக் கூட்டத்தார் எல்லோரும் கவனத்துடன் திரும்பிக் கொள்ளவே, மேரி தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

"ஸீடர் ஸ்வாம்பு என்னும் இடத்தில் களாக்காய் பறிக்கப்போயிருந்தேன் என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அப்போது திடீரென்று யாரோ இறுகப் பிடித்துக்கொண்டு என் வாயில் துணியை அடைத்துவிட்டு என் தலைமேல் கம்பளியை மடிப்பு மடிப்பாகப் போட்டு மூஞ்சியை



மூடிவிட்டார்கள். மூச்சுக்கூட விட முடியாமல் திணறிப் போய் மயக்கமாய்க்கீழே விழுந்து விடுவேன்போல் இருக்கும் தருணத்தில் இரண்டு மூன்று பேர்கள் என்னைத் தூக்கிக் கொண்டுபோவதாகத் தோன்றிற்று. அவ்வளவுதான் நான் அறிவேன். பிறகு ஓர் அடர்ந்த காட்டின் மத்தியில் விழித்துக் கொண்டேன். சுற்றும் ஐந்து அல்லது ஆறு இந்தியர்கள் உட்கார்ந்திருந்தார்கள். எனக்கு நினைவு வந்தவுடன் ஓர் இந்திய ஸ்திரீ குடிக்க ஜலம் கொணர்ந்து தந்தாள். அவள் இன்னாரென்று இப்போது உங்களுக்குத் தெரியும். எனக்குக் கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று. ஆனால் என்னைத் தெரிந்தவள் போல் அவள் கொஞ்சமேனும் காண்பித்துக் கொள்ளவே இல்லை. உடனே நான் எழுந்து நடக்க வேண்டுமென்று இந்தியர்கள் ஜாடை செய்தார்கள். வேறு என்னவழி எனக்கு இருந்தது? உடனே அவர்களுடன் பின்பற்றிச் சென்றேன். இரவு வந்தவுடன் ஒருஇடத்தில் தங்கினோம். என்னை இந்திய ஸ்திரீயின் வசம் ஒப்பித்து விட்டு, அவர்கள் சற்று விலகிப் போய்ப் படுத்துக் கொண்டார்கள். நானும் மனத்தில் தாங்கவிருந்தாலும், தேகத்தின் அசதியால் படுத்தவுடன் தூங்கிப் போய் விட்டேன்.

மறுநாள் காலையில் விடியுமுன் எல்லோரும் எழுந்து விட்டோம். கை நிறையச் சோளப்பொரியைக் கொணர்ந்து எனக்குக் கொடுத்துத் தாங்களும் தின்றார்கள். அவ்வளவுதான். என்ன செய்வது? நானும் அதைத் தின்றேன். விடிந்தவுடன் பிரயாணம் துவக்கப்பெற்றது. நடுப் பகல் வரையில் எனக்குச் சாதாரணமாக நடக்க முடிந்தது. இடையில் ஏரி ஒன்றிருந்தது. கரையில் அவர்கள் ஒளித்து வைத்திருந்த படகில் நாங்கள் எல்லோரும் ஏறிக்கொண்டு ஒரு யாமப் பொழுது சென்றோம். பிறகு இறங்கித் தரை மார்க்கமாக நடந்தோம். எனக்கு வரவர, கால் நோவெடுத்து காலடி.

எடுத்து வைக்கவே முடியவில்லை. இருந்தாலும் அவர்கள் என்னைச் சிலசமயம் இழுத்துக்கொண்டும் சிலசமயம் தள்ளிக் கொண்டும் செல்ல ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்கள் கொடுமையை நிரம்பக் காட்டவில்லை. ஆதலின் எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. நான் கைதி என்றாலும் வேறு விதமாக உபத்திரவத்திற்கு என்னை அவர்கள் உள்ளாக்க மாட்டார்கள் என்று தோன்றிற்று. என் நடை கொண்டு நடந்து சென்று இரவு தங்குமிடம் வந்து சேர்ந்தோம். என் பாதங்கள் நொந்துபோய், குழவியைப்போல் முழங்கால்வரை வீங்கி இசிவெடுத்திருந்தது. இந்திய ஸ்திரீ ஏதோ ஒரு பச்சிலையைக் கொணர்ந்து கசக்கி ரணத்தில் வைத்துக் கட்டவே வலி தணிந்து எனக்குத் தூக்கமும் வந்தது. காலையில் பார்த்தால் வீக்கம் வடிந்திருந்தது. முன் போலவே சோளப் பொரியைத் தின்றுவிட்டுப் பிரயாணம் துவக்கப்பெற்று நான் சற்று முந்தியே நடந்துசெல்ல முடிந்தது. பின்னால் வந்து கொண்டிருந்தவருள் கொஞ்சம் ஓசை கேட்டது. நான் திரும்பிப் பார்க்கையில் அவர்களுள் தலைவனான ஆங்க்ரீஸ் நேக்கு, தன் கோடரிக் கொண்டையால் இந்திய ஸ்திரீயின் மண்டையைக் கட்டி அடிப்பதைக் கண்டேன். உடனே அவள் மண்டை திறந்து கீழே விழுந்துவிட்டாள். ஐயோ! என்று அலறிக்கொண்டு நான் பின்னோக்கி அவளண்டை ஓடிப் போய்ப் பார்க்கவே அவள் மாண்டவள் போல் கிடந்தாள். அதற்குள்ளாக அவன் என்னைக் கரகரவென்று இழுத்துக் கொண்டு மேலே சென்றான். இப்போதுதான் எனக்குத் தோன்றாததெல்லாம் தோன்றிற்று. ஆயினும் ஆண்டவனை மனதிற்குள்ளாகவே தியானம் செய்துகொண்டு, என்னை ரட்சிக்கும்படி பிரார்த்தித்துக்கொண்டே சென்றேன். ஆனால் முன்போலவே எனக்குப் பாதங்கள் நோக ஆரம்பித்தபடியால் என் நடை மெதுப்பட்டது. முதலில் அவன் என்னை



அதட்டி வேகமாய் நடக்கும்படி ஜாடை செய்தான். அந்த ஸ்திரீக்கு நடந்தது எனக்கும் நடக்குமோ என்ற பயத்தால் வலியைக்கூடக் கவனியாமல் சற்று வேகமாக நடந்தேன். ஆயினும் என் தேகத்திற்கே தாளாமல் நான் மூர்ச்சையாய்க் கீழே விழுந்துவிட்டேன். எனக்கு ஸ்மரணை திரும்பியவுடன் நான் கவனிக்கும்போது இரண்டாட்கள் கிளைகளால் அமைக்கப்பட்ட ஒரு தூளியில் என்னைச் சுமந்து சென்று கொண்டிருந்தனர்.

அவ்விரவில், ஒரு சிற்றாற்றங்கரையில் நாங்கள் தங்கி இருந்தோம். மறுநாளும் என்னைச்சுமந்து சென்றார்கள். ஆனால் அடுத்த இரண்டு நாட்கள் தோறும் என்னை நடக்கச்செய்தனர். மறுபடி பாதங்கள் நோவு கண்டிருந்தபடியால் அது முதல் அவர்களின் குடிசைகள் இருக்கும் இடம் நெருங்கும் வரையில் என்னைச் சுமந்தே வந்தார்கள். அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் ஆல்ப்ரெடுக்கும் மற்றவர்களுக்கும் தெரியும்.'

* * *

மறுநாள் காலையில் காப்ட்டின் லிங்க்ளேர் அரை மனதுள்ளவராக இருந்தாலும் கடமையானபடியால், காம்பெல்லர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு கோட்டைக்குத் திரும்பிச் சென்றார்.

பிறகு அக்காள் தங்கை இருவருமாக ஆற்றங்கரையோடு உல்லாசமாக நடந்துகொண்டிருந்தார்கள்.

“மேரி, இப்போது நமக்குள்ள ஆனந்தத்தை எவரால் கணக்கிட முடியும்?” என்றாள் எம்மா.

“ஆமடி என் கண்ணே!” என்றாள் மேரி. “நாம் எல்லேருக்கும் நேர்ந்த விபத்துகளையும், அவை நிவர்த்தியான வழிகளையும் நினைத்துப் பார்த்தோமேயானால் ஆண்டவனிடத்தில் பக்தி எவருக்குத்தான் உண்டாகாது. இந்தியர்களிடமிருந்து இனி நாம் பயப்படவேண்டியதில்லை. நான் இனி இங்கே

அச்சமற்றவளாய்க் காலத்தைக் கழிப்பேன்"

"காப்ட்டின் ஸிங்க்ளேரை விடாமற்றானே?" என்று எம்மா இடக்காகப் புன்னகையுடன் சொன்னாள்.

"எப்போதும் அவரில்லாமலா? ஆனால் அது எப்போது என்பது நமது மாமனும் மாமியும் தான் திட்டம் செய்ய வேண்டும்," என்றாள் மேரி. "பர்ஸிவல் எங்கே? காணோமே?"

"மலாச்சியுடன் காட்டிற்குச் சென்றிருக்கிறான்," என்றாள் எம்மா. "தோளின் மேல் ஒரு துப்பாக்கியைச் சாற்றிக்கொண்டு அவன் நடக்கையில் அவனுடைய பெருமையைப் பார்த்தால் அல்லவோ தெரியும்.!"

"இந்தியர்களுடன் அவன் இருந்ததின் பயனாக அவன் ஒரு புதிய ஆளாகவே மாறிவிட்டான் போலவும்! இல்லையா?" என்றாள் மேரி.

"ஆம். முதல் அடையாளம், பேச்சுக் கட்டாகிவிட்டது. இரண்டாவது அவனது யோசனா சக்தி ஆழ்ந்திருக்கிறது."

## அத்தியாயம் 40.

காப்ட்டின் ஸிங்க்ளேர் கோட்டைக்குத் திரும்பிச்சென்றவுடன் மேற்கே போய்க் காரியத்தை முடித்துக்கொண்டு வந்ததைத் தெரியப்படுத்தினதும், எல்லோரும் அவருடன் உபசார வார்த்தைகளைப் பேசிக்கொண்டு க்ஷேமம் விசாரித்தார்கள். ஸிங்க்ளேருக்கும் மேரிக்கும் விவாகம் நிச்சயமாயிருந்தது கர்னல் துரைக்கு ஏற்கனவே தெரியும். காப்ட்டின் ஸிங்க்ளேர் மேற்கே சென்றிருக்கையில் சிறையில் வைக்கப்பட்டிருந்த சிறிய நீர்ப்பூனை இப்போது விடுதலை செய்யப்பட்டான். பண்ணையில் இம்மாதிரி விசேஷங்கள் சம்பவித்தமையால் காப்ட்டின் ஸிங்க்ளேர் இப்போது அங்கே சிலநாள் இருக்க ஆசைப்படுவாரென்று கர்னல் துரை அறிந்தவராதலால், அவருக்கு வேண்டுமானால் சிலநாள் விடு முறை கொடுப்பதா



கச் சொன்னார். காப்ட்டின் ஸிங்க்ளேர் மிகு சந்தோஷத்துடன் பண்ணைக்குப் போகச் சித்தமானார்.

காப்ட்டின் ஸிங்க்ளேர் பண்ணைக்குப் புறப்பட இரண்டு மூன்று தினங்களாய்விட்டன. ஏனெனில் இடையில் அவருக்குக் கடிதங்களநேகம் வந்திருந்தபடியால், அவைகளுக்குப் பதில் எழுதவேண்டியிருந்தது. கடைசியில் அவர் பண்ணைக்கு வந்து சேர்ந்தபோது அங்கே எல்லோரும் க்ஷேமமாகவும் சுகமாகவுமிருந்தனர். மேரிக்குண்டான சிரமங்களெல்லாம் ஆறி அவளும் சுகமாக இருந்தாள். முன் போலவே காரியங்களெல்லாம் ஒழுங்காயும் இடையூறின்றியும் நடந்து வந்தன. கொஞ்ச நாள்களுக்கு முன்பு இங்கேதான் அவ்வளவு அமளி நடந்ததோ என்று சொல்லும் படியாக அவைகளின் அடையாளங்கள் சிறிதேனும் இல்லாமலிருந்தன. உண்மையாகவே அக்குடும்பத்தினரெல்லோரும் ஒரு குறையுமின்றி வாழ்ந்துகொண்டிருந்தனர். அவர்கள் ஆரம்பித்த காரியங்களெல்லாம் பலிதமாய்க்கொண்டு வந்தன. புதிதாக வந்துசேர்ந்த குடித்தனக்காரர்கள் உழைப்பாளிகளாகவும், வேலையில் திறமையுள்ளவர்களாகவும், மட்டுமரியாதை தெரிந்தவர்களாகவும், பெரிய உபகாரிகளாகவும் வாய்த்தனர். அவர்கள் மிஸ்டர் காம்பெல்லிடத்திலும், மிஸிஸ் காம்பெல்லிடத்திலும் பயபக்தியுள்ளவர்களாயிருந்தனர். அவர்களும் இக்குடித்தனக்காரரிடம் வெகு தாராளமாய் உபகாரம் செய்துகொண்டு அன்பு பாராட்டி வந்ததுடன், வேண்டியவற்றையெல்லாம் கொடுத்து உதவி செய்துகொண்டிருந்தார்கள். பண்ணை பெரிதாகப்பெருகி இருந்தாலும், ஆண்களும் மிகுதியாயிருந்தமையால் வேலையின் கொடுமை அவ்வளவாகத் தோன்றவில்லை. கால் நடைகளும் விரைவிற் பெருகிவிட்டன. ஆல்ப்ரெட்டும் மார்ட்டினும் வெளியில் சென்றிருந்தபோது கிழக்ரெவ்ஸ் யந்திரத்தைப் பார்த்துக்கொண்டான்.

இப்போதும் அவனுக்கந்த அலுவலில் இஷ்டமிருந்தபடியால்
ஆல்ப்ரெட் சந்தோஷத்துடன் அதையவனிடமேயொப்புவித்து
விட்டான். வளர்த்திக் கூறுவதிலென்ன பயன்? பண்ணை
விருத்தியாகி சுகவாழ்விலும் செல்வத்திலும் பெருக்கடைந்து
ஆதியில் ஆல்ப்ரெட் தன் தந்தையரைக் கானடாவிற்குப்
போகும்படி சிபார்சுசெய்யும்போது அவன் சொன்ன வார்த்
தை பூர்த்தியாகும் போலிருந்தது——அஃதாவது பராதீன
வாழ்வில்லாமல் சுயேச்சையாக, தனக்குத்தானே யஜமான
னாக, தானும் வாணாளைக் கழிப்பதுடன், தன் குழந்தை
களையும் அதே நல்ல ஸ்திதியில் வைத்துவிட்டுப் போக
முடியும்—என்பது. இரண்டு நாளுக்கெல்லாம் காப்டின்லிங்
க்ளேர் வந்துசேர்ந்தார். அவர் வரவை எல்லோரும்கொண்
டாட்டத்துடன் அழைத்தார்களென்று சொல்லவும் வேண்
டுமோ? விருந்துண்டானபிறகு, மிஸ்டர் காம்பெல் குடும்
பத்தினரனைவரையும் பார்த்துப் பின் வருமாறு கூறினார்.

"என் அரிய குழந்தைகளே! உங்கள் தாயாரும் நானு
மாகக் கலந்துயோசித்ததில் செய்யப்பட்ட தீர்மானம் என்ன
வென்றால் ஆண்டவன் கடைக்கணித்தருள நாங்களிவ்வளவு
அனுக்கிரகங்களுக்குப் பாத்திரர்களாக ஆயிருப்பதால் இனி,
பிறர்களைச் சந்தோஷப்படுத்துவது எங்கள்கடமை என்பது.
இப்பொழுது பிறர் கையை எதிர்பாராத ஸ்திதியிலிருப்ப
தோடுகூட, இனியும் வரவர நமதுநிலைமை மேலாய் உயர்ந்து
கொண்டு வரலாமென்று தோன்றுகிறது. முன்போலவே
நாம் தனியாயிராமல் நம்மைச்சுற்றி நமக்கு இதரர்களான
அனேகம் பேர்கள் ஏற்பட்டு விட்டார்கள்; இனி ஏதாவது
அபாயம் நேரிடும் போலிருந்தால்கூட நம்மை அவர்கள்
காப்பாற்றுவார்களென்பது நிச்சயம். இப்போது நமக்குச்
சௌக்கியமும் சாவதானமும் பூர்ணமாயிருக்கின்றன-இனி
யும் இவைகளில் குறைவு வராதென்று ஆண்டவனிடத்தில்



பூரணமான நம்பிக்கை வைத்திருக்கிறோம்.
எனதரிய ஆல்ப்ரெட்! உனக்குஉத்தியோகத்தி லெவ்வளவு
பற்றுதல் இருந்ததென்று எல்லோருக்கும்தெரியும். ஆயினும்
அதை முழுவதும் உதறித் தள்ளிவிட்டு இந்த அத்துவான
வெளியில் உன்னுடைய தாய்தந்தையரைக்காப்பாற்றவேண்
டுமென்று நீ எங்களுடன் கூடவே வருவதாகச் சொன்னாய்.
நீ கூடவிருப்பது எங்களுக்கு எவ்வளவு பலமென்பதை
நாங்கள் நன்கறிந்திருந்தமையால் நாங்களும் அதற்குடன்
பட்டோம். ஆயினும், நீ உள்ளத்துக்குள்ளே எவ்வளவு
கிலேசப்பட்டுக் கொண்டிருக்கவேண்டுமென்று எங்களுக்கு
நன்றாகத் தெரியும். ஆனால் இனி இது அத்துவானமன்று.
ஆகையால் உனது யானையின் துதிக்கைபோன்ற புஜத்தின்
பலமும், சிங்கத்தைப்போன்ற உனது அளவற்ற பேராண்
மையும் இனிமேல் இங்குத் தேவையில்லை. இனிமேல்
உனது உத்யோகத்தை மறுபடியும் போய் உன்னை ஒப்புக்
கொள்ளச் சொல்லவேண்டியது எங்களது கடமை என்று
நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். பகவானுடைய அனுக்
கிரகத்தால் நீ மேன்மேல் நற்பதவியை அடைதல்வேண்டும்.
பேரும் புகழும் பெற்று நீ உத்தியோகத்திற்கே ஒரு பெரிய
அலங்காரமாவாயாக! என் குழந்தாய்! உனக்கு எங்கள்
மேலிருக்கும் அன்புக்கும் விசுவாசத்திற்கும் எங்களது நன்
றியை நாங்கள் எவ்விதம் காட்டுவோம்? இனி நீ விரும்பிய
போது இங்கிலாந்திற்குச்சென்று, மறுபடியும் உத்தியோகத்
திற் சேரலாம்.

"மேரி! உனக்கு நான் சொல்லவேண்டிய வார்த்தை
ஓரிரண்டுளது. எனது கண்மணியே! நீயும் உனது
சகோதரியுமாக எங்களோடு கூடவே வந்து, எங்களுக்கு
அப்போது இருந்த கஷ்டங்களையும் வந்த ஆபத்துகளையும்
கொஞ்சமேனும் மனத்தாங்கல் இல்லாமல் நீங்களும் பாகித்

துக் கொண்டு, உங்களுக்கிருந்த வருத்தங்களைக் கொஞ்சமேனும் வெளியிற் காட்டாமல் எப்போதும் சிரித்தமுகமாக இருந்துகொண்டு, எங்களுக்கு அன்புடன் பணிவிடை செய்துகொண்டு, எங்களைத் தாங்கிக்கொண்டு வந்திருக்கின்றீர்கள். எனதரிய மேரி! ஓர் உத்தம புருஷன் உனது உள்ளத்தைக் கவர்ந்திருந்தும், நீ எங்களை விட்டுப் பிரிந்து போவதில் சிறிதும் மனம் வைக்கவில்லை. உண்மையாகவே உனது உள்ளத்தின் உறுதி எங்களுக்குத்தெரியும். ஆயினும் உனது அம்மாமியும் யானுமாகச் செய்திருக்கும் தீர்மானம் யாதென்றால், எங்களது உயிருக்குயிரான உன்னைவிட்டுப் பிரிவது எவ்வளவு துயரத்திற்குக் காரணமானாலும், உன்னை இனியும் எங்களுக்காகத் தியாகம் செய்யும்படி பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் தகாதகாரியம் என்பதே. ஆதலால் இனிக் கொஞ்சமேனும் தாமதியாமல், உன்னிடத்தில் பிராணனை வைத்திருக்கும் அந்த உத்தமரது மனோபீஷ்டத்தை நிறைவேற்றவேண்டியது. நீ இனியும் இங்கே இருப்பதென்பது யோசிக்கத்தகாத விஷயம். உன்னுடைய கணவரின் ஆஸ்திகளும் சரி, அவருடைய உற்றார் உறவினரும் சரி; இங்கிலாந்தில் அல்லவோ இருக்கின்றன. ஆதலால் கானடாவில் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு காலத்தைக் கழிக்கத்தகுந்தவர் அவரல்லர். அவரது போகபூமி இங்கிலாந்தே. ஆதலால் இனி அவரோடு மணம்புரிவதைத் தாமதிக்காமல், கூடிய சீக்கிரத்தில் உனது பர்த்தாவுடன் நீ இங்கிலாந்திற்குச் செல்லவேண்டியது அவசியம். அப்படிச் செய்தால்தான் எங்களுக்குத்திருப்தியாகும். என் கண்ணே! நீ எங்கே இருந்தாலும் உன்னை நாங்கள் எப்போதும் வாழ்த்திக்கொண்டும், உங்களை நன்றாக வைக்கவேண்டுமென பகவானைப் பிரார்த்தித்துக்கொண்டும் இருப்போம். இத்தனை நாளாக எங்களது உள்ளத்திலுள்ளதை இப்போது உனக்கு



சொல்லுகின்றோமடி கண்ணே! எங்கள் வயிற்றில்
பிறந்த பெண்ணாக இருந்தாற்கூட எங்களிடத்தில் இவ்வளவு
தூரம் அன்பு பாராட்டி எங்களைத் தாங்கியிருக்க மாட்டாள்.
ஆதலால் உன்னிடத்தில் எங்களுக்கு இருக்கும் பிரீதியும்
விசுவாசமும் பெற்ற தாய் தந்தையரிலும் அதிகமே என்ப
தில் சந்தேகமில்லை,'' என்று சொல்லிவிட்டுப் பிறகு காப்ட்
டின் லிங்க்ளேரைப் பார்த்து, ''காப்டின் லிங்க்ளேர்! இனி
இவளது பொறுப்பை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டியது.
இவளுடன் எங்களது ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்
ளுங்கள். இவ்வுலகில் கிடைக்கக்கூடிய இல்லற வாழ்க்கை
யெல்லாம் உங்களுடையனவாகவே இருக்குமாக. உத்தமி
யான மகள் உத்தமியான மனைவியுமாவாள். ஆண்டவன்
அருள் செய்வாராக!'' என்று முடித்தார்.

மிஸிஸ் காம்பெல்லுக்கும் காப்டின் லிங்க்ளேருக்கும்
இடையில் உட்கார்ந்திருந்த மேரி இதைக் கேட்டவுடன்
உள்ள முருகிக் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு தனது அம்
மாமியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதனள். காப்ட்
டின் லிங்க்ளேரும் மிஸ்டர் காம்பெல்லின் கையைத் தனது
கைகளால் இறுகப் பிடித்துக்கொண்டு தமது நன்றி விசு
வாசத்தைத் தெரிவித்தார். ஆல்ப்ரெட் ஒன்றும் பேசாமல்
தாயைப் போய் முத்தமிட்டான்.

''ஆல்ப்ரெட்! நீ மறுபடியும் போய் உனது உத்தி
யோகத்தில் சேர்ந்தாற்றான் எனக்குத் திருப்தியாயிருக்கும்.
நீ அதற்கு மிகவும் ஏற்றவன். உன்னை விட்டுப் பிரிவது
எனக்குத் துக்கத்தைத் தருமானாலும், நீ போகாமற்போனால்
எனக்கு அதிக துக்கமாக விருக்கும்,'' என்றாள் மிஸிஸ்
காம்பெல்.

''என்னுடைய குமாரனே! போய் வா,'' என்றார்
மிஸ்டர் காம்பெல்; ''நான் சாவதற்கு முன் நீ ஒரு யோர்க்

கப்பலுக்குக் காப்டினாக ஆய்விட்டாய் என்கிற செய்தி
ஊன் காதில் விழட்டும்!"

மேரியைத் தெளிவிப்பதற்காக அவளை அழைத்துக்
கொண்டு மிஸிஸ் காம்பெல் அடுத்த அறைக்குள் சென்றாள்.
காப்டின் ஸிங்க்ளேரும் கூடவே போனார். மிஸ்டர் காம்பெல்
லின் பேச்சைக் கேட்டவர் அனைவரும் சந்தோஷப்பட்டார்
கள். எம்மாவின் முகத்தில் மட்டும் ஈயாடவே இல்லை.
அவள் இப்படி இருக்கவே மாட்டாள். ஆல்ப்ரெட் இவளை
நோக்கி, இவளது கருத்தை அறியும் பொருட்டு விஷமமாக
ஒரு வார்த்தை சொன்னான்—"எம்மா! மேரியை விட்டுப்
பிரியலாயிற்றே என்று நீ விசனப்படுகிறாய்—அது ஏற்றது
தான்; ஆனால் இந்தத் துக்கத்தை ஆற்றும்படியான சமாச்
சாரம் ஒன்றிருக்கிறதே. அதை நீ மறந்தாய் போலும்!
நானும் இவ்விடத்தை விட்டுத் தொலையப் போகிறேன்
அல்லவா! ஆகையால் நீ அடிக்கடி சொல்லி வெறுத்துக்
கொண்டதுபோல் உன்னைத் தொந்தரவு செய்ய நானில்லாது
நீ இனிச் சுகமாக இருக்கலாம்."

எம்மாவுக்கு முகம் சிவந்து கோபம் வந்துவிட்டது.
"அதை நான் மறந்தே விட்டேன்," என்றாள் எம்மா; "உன்
மையில் நீ இருந்தால் எனக்குச் சுசப்பாகவே தானிருக்கும்.
நீ எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரத்தில் போகின்றாயோ......"
முடிக்க முடியாமல் அறையைவிட்டு ஓடித் தனது சகோதரி
யைச் சேர்ந்து கொண்டாள்.

பண்ணையில், கொஞ்ச நாள் மேரி, ஸிங்க்ளேர் இவர்
களின் கல்யாணத்தைப் பற்றியும், ஆல்ப்ரெட் உத்தியோகத்
திற்குப் போவதைப் பற்றியும் தான் பேச்சு நடந்தது.
இப்போது ஆகஸ்டு மாதம். இன்னும் ஒரு மாதத்திற்குள்
கோட்டைக் கோவிலில் கல்யாணத்தை நடத்திக்கொண்டு
செப்டம்பர் மாதக் கடைசியில் இவ்விருவரும் ஆல்ப்ரெட்டு



மாகச் சேர்ந்து கப்பலேறி இங்கிலாந்திற்குப் பிரயாணம்
செல்வதாகத் தீர்மானம் செய்யப்பட்டது. காப்டின்
ஸிங்க்ளேருக்கு விடுமுறை அனுமதி கிடைக்குமோவென்றால்
கவர்னர் துரையின் தயவு இவர்களுக்கிருக்கும் வரை அந்த
விஷயமாகப் பயம் யாதுமில்லை. இங்கிலாந்திற்குப் போய்ச்
சேர்ந்த பிறகு காப்டின் ஸிங்க்ளேர் வேலையை ராஜீநாமா
வாகக் கொடுத்து விடுகிறதோ, அல்லது இங்கிலாந்திலேயே
உள்நாட்டு ராணுவத்திற்கு மாற்றிக்கொண்டுவிடுகிறதோ,
என்று தீர்மானம் செய்கின்றதாக இப்போது எண்ணம்.

ஒரு வாரத்திற்கெல்லாம் ஏற்கனவே சொல்லியிருந்த
படி கர்னல் துரையும் காப்டின் ஸிங்க்ளேரும் இங்கிலாந்தி
லிருந்து வந்த தபால்களையும் கடிதங்களையும் எடுத்துக்
கொண்டு படகில் வந்து இறங்கினார்கள். கர்னல் துரையும்
காம்பெல் தம்பதியாரும் பரஸ்பரம் உபசார வார்த்தைகள்
சொல்லி முடிந்தவுடன் கர்னல் துரையின் அனுமதியைப்
பெற்றுக்கொண்டு தத்தம் கடிதங்களை உடைத்து வாசிக்கப்
போனார்கள்.

மிஸ்டர் காம்பெல் முதற் கடிதத்தை உடைத்துப்
பார்த்தவுடன் அவரது முகத்தில் ஒருவிதமான மாறுபாடு
உண்டாயிற்று. அவர் அதை இரண்டாம் தடவை படித்து
விட்டுக் கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்பவர்போல்
அசையாமலிருந்தார்.

"காம்பெல்! கெட்ட செய்தி யாதுமில்லையென்று
நம்புகிறேன்," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

"எனதரிய எமிலி! கெட்டசெய்தி யாதுமில்லை; ஆனால்
கொஞ்சங்கூட எதிர் பார்க்காத செய்தி. ஏற்கனவே ஒரு
சமயம் நமக்குக் கிடைத்ததைப் போன்றது. அனேக
வருஷங்களுக்கு முன் நாம் இங்கிலாந்திலிருக்கும் பொழுது
ஒரு நாள் சாயந்தரம் பேசிக்கொண்டிருக்கையில் நமக்கு

ஒரு கடிதம் வந்ததே? அது உனக்கு ஞாபகத்தில் இருக்கிறதா?"

"வெக்ஸ்டன் ஹால் சொத்தை உங்களுக்குக் கொடுத்ததே, அதுதானே?"

"ஆம். அதேதான். அதைப் பூர்த்தி செய்யும் கடிதந்தான் இதுவும்," என்று சொல்லிவிட்டு மிஸ்டர் காம்பெல் கடிதத்தை வாசித்தார்:—

18. —மேமீ—7

"ஐயா,

"மறுபடியும் தங்களுக்குச் சந்தோஷமான செய்தியைத் தெரிவிக்கலானோம். தாங்கள் திரும்பி விஜயம் செய்து வெகஸ்டன் ஹால் சொத்தைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டியது.

"சில நாட்களுக்கு முந்தி டக்ளஸ்காம்பெல் குதிரையிலிருந்து விழுந்து அடிபட்டுக் கிடந்தார். முதலில் உயிருக்கு அபாயத்திற்கிடமில்லையென்று எண்ணப்பட்டாலும், கடைசியில் சென்ற ஏப்ரல் மாதம் ஒன்பதாந்தேதி அவர் இறந்துவிட்டார். அவருக்கு ஆண் சந்ததி யாருமில்லாமையால் தாங்களே தான் அடுத்த வார்சு. ஆதலால், சில வருஷங்களுக்கு முன் தாங்கள் கம்பீரமான மனதுடன் இழந்துவிட்டுப் போன சொத்தை மறுபடியும் வந்து கைப்பற்றிக் கொள்ளுங்கள்.

"மிஸ்டர் காம்பெல் இறந்ததுமுதல் நானே மேற்பார்வையாகப் பார்த்து வருகிறேன். அவருடைய மனைவிக்குக் கொஞ்சம் ஜீவனாம்சம் கொடுக்க வேண்டி வரும்.

"தங்களுடைய மறு உத்தரவை எதிர் பார்க்கின்ற,

தங்கள் விதேயன்,

ஜே. ஹார்வி."

இதைக் கேட்டவுடன் கர்னல் துரை எழுந்து மிஸ்டர்



காம்பெல்லின் எதிரில் போய் அவரது கையைக் குலுக்கிக் கொண்டு, "மிஸ்டர் காம்பெல்! இந்தச் சுப சமாசாரத்தைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கின்றது. உங்கள் மங்கள குணங்களுக்கு இஃது ஏற்றதே. மிஸிஸ் காம்பெல், உங்களுக்கும் சோபனம்!"

கொஞ்ச நேரம் வரையில் மிஸிஸ் காம்பெல்லுக்கு வார்த்தை ஒன்றும் வரவில்லை.

"நாம் ஆண்டவனது கைகளிலிருக்கின்றோம். அவரது சங்கற்பம் ஏதோ அதைத்தான் நிறைவேற்றுகின்றோம். எனதரிய காம்பெல்லே! நமக்கு வந்திருக்கும் பாக்கியத்திற்கு நாம் ஒருகால் சந்தோஷப்பட வேண்டியதுதான். ஆயினும் அது எனக்கு அவ்வளவு நிச்சயமாகத் தெரியவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் போன குழந்தைகள் ஆண்டவனருளால் திரும்பக் கிடைத்தமையால் இங்கேயே இருப்பதில்தான் எனக்குத் திருப்தி. எனக்கு ஒரு குறையும் இப்போது தெரியவில்லை. வெக்ஸ்டன் ஹாலிற்குத் திரும்பிப் போவதால் நமக்குச் சந்தோஷம் எப்படி மிகுதிப் படும்? இந்த இடத்தை விட்டுப் போவதென்றால் என்னைப் பற்றிய வரை மனத்தாங்கலாகத் தானிருக்கும். நாமிருவரும் மணம் புரிந்த பிற்பாடு நமக்குச் சம்பவத்திருக்கும் சுகங்களையும் துக்கங்களையும் ஆலோசித்துப் பார்த்தால் செல்வத்தைக் காட்டிலும் மனக்குறையற்ற வாழ்வே நமக்கு ஜாஸ்தியான சுகத்தைத் தரக்கூடியதென்று நாம் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறோம்," என்று அவள் சொன்னாள்.

"உன்னைப்போலவே தான் நானும் எண்ணுகிறேன்," என்றார் மிஸ்டர் காம்பெல்; "ஆனால் நமக்கு வயதாகிவிட்டபடியாலும், நமக்கு நேரிட்ட சம்பவங்களாலும் இப்படித் தோன்றுகிறது. ஆனால் நமது குழந்தைகளுக்கும் அப்படியே தோன்றுமோ? பார்த்தால் அப்படித் தெரியவில்லை. அது

வும் ஆச்சரியமன்று."

"நான் போகப் போவதில்லை!" என்றான் ஜான். "போனால் என்னைப் பள்ளிக்குத் தான் அனுப்புவார்கள். இனி ஒரு உபாத்தியாயரிடம் அடிபடுவேனோ? நான் ஒரு ஆளாகிவிட வில்லையா?"

"நான் மட்டும்?" என்று பர்ஸிவல் கதறினான்.

இவ்விரண்டு பையன்களின் பேச்சையும்கேட்டு அங்கு இருந்தோரெல்லாரும் நகைத்தனர்.

"நீயாவது அவனாவது பள்ளிக்குப் போகவேண்டியது இல்லை. ஆயினும், உங்களுக்குக் கிடைத்திருக்கும் பதவிக் கேற்ப நீங்கள் படிப்பையும் ஞானத்தையும் சம்பாதித்துக் கொள்வதற்காக யாராவது ஒருவரிடம் கவனமாகப்படித்துத் தான் ஆகவேண்டும்."

பிறகு தாயாரும் தந்தையரும் தனிமையாக இருக்கை யில், மிஸ்டர் காம்பெல், "ஜானைத் தான் என்ன செய்கிற தென்று எனக்குப் பெரும் யோசனையாக இருக்கிறது. நாம் புறப்படும்போது அவன் எங்கேயாவது சென்று மறைந்து விடுவானோ என்றுகூட நான் சங்கிக்கிறேன்," என்றார்.

"தீர்மானிப்பது கஷ்டமாகத் தான் இருக்கிறது," என்றாள் மனையாள். "இங்கிலாந்திலிருக்கும் நமது ஆஸ்திக்கு நமது மூத்த குமாரனாகிய ஹென்றி தான் வார்சு. இங்கே நாம் சம்பாதித்திருக்கும் ஐவேஜி நமது விநியோகத்திலிருப் பதால் அதை ஜானுக்கு வைத்து விடுவோம்."

"எனக்கும் அது சரியென்றே தோன்றுகிறது. மார்ட் டின், மலாச்சி இருவர் பொறுப்பிலும் நாம் அவனைவிட்டு வைக்கலாம். இது அவனுக்குப் பரம சந்தோஷத்தைத் தரும். அவனும் தனவானாக ஆய்விடுவான். இங்கிலாந் திற்கு வந்தால்கூட அவனுக்கு இதைக்காட்டிலும் சவுகரியங் கள் கிடைக்குமோ? ஆனாலும் எமிலி, தீர்மானமாகச்சொல்ல



வேண்டியது நீ தான்" என்றார் மிஸ்டர் காம்பெல்.

"என் அரியவரே, நான்தான் உடனே சொல்லிவிடுவது உசிதமாகுமா. முதலாவதாக ஜானுடன் கலந்துபேசி, பிறகு ஆல்ப்ரெட்டையும், ஹென்றியையும் கலந்துகொண்டு சொல் கிறேன்," என்றாள் மிஸிஸ் காம்பெல்.

பிறகு எல்லோருமாக யோசனை செய்து பின்வருமாறு தீர்மானம் செய்யப் பட்டது. ஜான் கானடாவிலேயே மலாச்சி, மார்ட்டின் இவர்களின் ஆதீனத்திலிருப்பது. மார்ட் டின் பண்ணைவேலையை மேற்பார்வை பார்த்துக்கொள்கிறது. மலாச்சி ஜானுக்குத் துணையாகக் காட்டைச் சுற்றுவது. கிழ க்ரேவ்ஸ் யந்திரத்தைப்பார்த்துக்கொண்டு அப்போதைக் கப்போது அங்கு மிங்கும் நடக்கும் விசேஷங்களுக்குக் கடிதம் எழுதுகின்றது.

இதைக் கேட்டதும் ஜான் இரண்டங்குலம் உயர்ந்து விட்டவன் போலானான். "அம்மா! உனக்கு நானே நேரில் எழுதுகின்றேன்," என்றான்.

* * *

கடிதம்வந்து ஒரு மாதத்திற்கெல்லாம் ஜானைத்தவிர்த்து மற்றவர் எல்லோரும் இரண்டு படகுகளில் ஏறி மாண்ட்ரீ லுக்கு வந்திறங்கி அங்கே இரண்டு நாள் தங்கி விட்டுக் கியூபெக்கை அடைந்தனர்.

கியூபெக்கில் அவர்களுக்காக ஏற்கனவே இடம்தயாராக வைக்கப் பட்டிருந்தமையால், கப்பலேறி லிவர்பூல் வந்து சேர்ந்து, உடனே தபால் வண்டியில் ஏறி, வெக்ஸ்டன் ஹாலில் வந்திறங்கினார்கள்.

கதை முடிந்துவிட்டது. இனி, காம்பெல்லர்கள் எப் படி வாழ்ந்தனரென்பதைச் சுருக்கமாகச் சொல்வோம்.

ஹென்றி வீட்டோடு இருந்துகொண்டு காரியங்களை

மேற்பார்வை பார்த்து வந்தான்.

காப்ட்டின் லம்லியிருந்த கப்பலிலேயே ஆல்ப்ரெட் போய்ச்சேர்ந்து கொண்டான். அவன் விரைவில் மேன் மேலுயர்ந்து, சமர்த்தான உத்தியோகஸ்தர் என்று பெயர் பெற்றுநான்கு வருஷங்களுக்குள் எம்மாவை மணஞ்செய்து கொண்டான். இதை ஏற்கனவே ஊகித்திருக்கலாம்.

காப்ட்டின் லிங்க்லேர் உத்தியோகத்தை விட்டு விட்டு ஸ்காட்லாந்திற்குப் போய்த் தமது நிலங்களைப் பார்த்துக் கொண்டு, மேரியோடு வெகு காலம் சுகமாக வாழ்ந்தார்.

பர்ஸிவல் காலேஜிற் படித்துக் கடைசியில் ஒரு பெரிய வக்கிலாய் விட்டான்.

மார்ட்டினுக்கும் ஸ்ட்ராபெர்ரிக்கும் மூன்று குழந்தை கள் பிறந்து, அவர்கள் சுகமாக வாழ்ந்தார்கள். மலாச்சிக்கு வயதாகி விட்டபடியால் வீட்டோடிருந்து சுகமாக வாழ்ந்து விட்டுக் கடைசியில் மனக்குறையொன்றுமில்லாமல் பர லோகம் சென்றான்.

ஜான் இருபது வயதானவுடன் இங்கிலாந்திற்குத் தன் தாய் தந்தையரைப் பார்க்க வந்தான். அங்கே கொஞ்ச காள் இருந்து விட்டுத் திரும்பிக் கானடாவிற்குப் போகை யில் மிஸ்டர் காம்பெல் கானடாவில் தமக்குச் சொந்தமான சொத்தை எல்லாம் அவன் பேரால் எழுதிச் சாஸனத்தை அவன் கையில் கொடுத்தார். ஜான் கானடாவிற்குத் திரும்பி வந்து, கியூபெக்கில் தனக்குப் பிடித்த மனைவியை மணம் செய்துகொண்டு வெகுகாலம் சுகமாக வாழ்ந்தான்.

மிஸ்டர் காம்பெல்லும் அவருடைய மனைவியும் தொண்டு கிழவர்களாகும் வரையில் சுகமாக வாழ்ந்து வந் தார்கள். ஏழைகளிடத்திலும், வாயில்லாப் பிராணிகளிடத் திலும் அவர்களெப்போதும் இரங்கி, தங்களால் இயன்ற மட்டில் உதவி புரிந்து வந்தார்கள் என்பதைச் சொல்லவு



வேண்டுமோ ? அவர்கள் படாத கஷ்டமுமில்லை, அனுபவிக் காத சுகங்களுமில்லை. கஷ்டம் வந்தபோது வீழ்ந்தழவும் இல்லை; சுகம் வந்தபோது தலைகால் தெரியாமல் தாங்கி மயங்கவுமில்லை. இந்த உலகில் சுகம் என்பது குறைவென் றும், கஷ்டமே அதிகமென்றும் அவர்கள் நன்குணர்ந்தவர் கள். ஆதலால் எந்த நிலைமையிலும் ஆண்டவனிடத்தே பாரத்தைப் போட்டு, ஆண்டவனிடம் பட்ட கடன்களை யும் அயலாருக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் சரிவர நிறைவேற்றிக் கொண்டு எல்லோரும் புகழும்படியாக வாழ் நாளைக் கழித்தனர்.

V72
N31

முற்றிற்று.

12/12/61